# கலைமகள்

## தீபாவளி மலர் .... 1968



ரூ. 5/-

SIMPSON & COMPANY LIMITED (Estd. 1840), MADRAS-2.

ADDISON & COMPANY LIMITED (Estd. 1873), MADRAS-2.

ADDISONS PAINTS & CHEMICALS LIMITED, MADRAS-11.

AMCO BATTERIES LIMITED. BANGALORE-26.

BIMETAL BEARINGS LIMITED. MADRAS-11.

GEORGE OAKES LIMITED, MADRAS-2.

GEORGE OAKES LIMITED, (BOMBAY OPERATIONS) BOMBAY-1.

INDIA PISTONS LIMITED, MADRAS-11.

INDIAPISTONS-REPCO LIMITED, MADRAS-11.

REICHHOLD CHEMICALS INDIA LIMITED. MADRAS-51

SHARDLOW INDIA LIMITED, SEMBIAM, MADRAS-11.

SRI RAMA VILAS SERVICE LIMITED, MADRAS-2.

SRI RAMA VILAS SERVICE LIMITED, KUMBAKONAM.

STANES MOTORS (SOUTH INDIA) LTD., COIMBATORE.

STANES TYRE & RUBBER PRODUCTS LTD., COIMBATORE.

TRACTORS AND FARM EQUIPMENT LIMITED. MADRAS-34.

L. M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LIMITED, MADRAS-2.

THE WHEEL & RIM CO OF INDIA LIMITED, MADRAS-11.

Engineering Group

The **Amalgamations** Group is the largest Light Engineering Group in South India.

The Corporate strength of **Amalgamations** is due to a successful plan of acquiring or constructing a network of manufacturing units and progressively rationalising them to be complementary units of production in related fields of activity.

The Group Manufactures Automotive and Industrial Diesel Engines, Agricultural Tractors and farm implements, Castings, Stampings, forgings, Engineers Cutting Tools, spares and ancillaries such as pistons, piston rings, bimetal bearings, flywheel ring gear as original equipment or for use in the automobile and other industries, lead acid batteries for transport, telecommunication and industrial uses,

Builds coaches and bodies,

Fabricates mechanical light engineering specialities,

Formulates Synthetic resins, pigments, lacquers, paints, colours, varnishes, emulsions, enamels,

Operates transport and passenger services,

Produces tea and coffee,

Publishes an evening newspaper.

The Group's Industrial Estates cover over 150 acres and provide as many as 17 separate manufacturing units using latest equipment and modern techniques.

Its valuable experience of cost and quality considerations over many years in the domestic market enables the Group to export a wide range of first class products which have been accepted by discriminating buyers in over thirty countries in the world.

**Non-Engineering Group**

ASSOCIATED PRINTERS (MADRAS) PRIVATE LIMITED, MADRAS-2.

ASSOCIATED PUBLISHERS (MADRAS) PRIVATE LIMITED, 'THE MAIL,' MADRAS-2.

HIGGINBOTHAMS PRIVATE LIMITED, MADRAS-2.

SIMPSON & GENERAL FINANCE COMPANY LIMITED, MADRAS-2.

SPEED-A-WAY PRIVATE LIMITED, MADRAS-2.

T. STANES & COMPANY LIMITED, COIMBATORE.

THE UNITED COFFEE SUPPLY COMPANY LIMITED, COIMBATORE.

WALLACE CARTWRIGHT & CO. LIMITED,
55/56, St. James Street, LONDON S.W. 1.

Total Number of Employees: About 14,000

Bankers: The Central Bank of India Limited, Madras-2.

Advertising Consultants:
THE MADRAS ADVERTISING CO. PRIVATE LTD., MADRAS-2.

# Amalgamations

**PRIVATE LIMITED**

202, Mount Road, Madras-2.
and subsidiary Companies
*(Unit Companies of Simpson Group Industries)*

AMAL(S)-337


நவம்பர் வெளியீடு
ஏவி.எம். புரொடக்ஷன்ஸ்
உயர்ந்த மனிதன்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
AVM PRODUCTIONS
திரைக்கதை-வசனம்: ஜாவர் சீதாராமன்
பாடல்கள்: வாலி
இசை: M.S. விஸ்வநாதன்

# ஒப்பற்ற அன்பளிப்பு!





நீங்கள் இப்பண்டிகை நாட்களில் ஒப்பற்றதும், கொடுப்ப
வருக்கும் பெறுபவருக்கும் நிறைவை கொடுக்கவல்லதுமான
அன்பளிப்பு செய்ய வேண்டியிருக்கும்.

எங்கள் யூ-ஃபோம் தயாரிப்புகள் அத்தகையானவையே.
யூ-ஃபோம் தயாரிப்புகள் அழகியவை, ஆனந்தமூட்டுபவை,
அன்றாட வாழ்க்கைக்கும் அத்யாவசியமானவை.

எல்லாவித நிகழ்ச்சிகளுக்கும் உகந்த அன்பளிப்பு எமது
யூ-ஃபோம் தயாரிப்புகள்

## U-FOAM யூ-ஃபோம்

### வனப்பான வாழ்க்கைக்கு

யூ-ஃபோம் மெத்தைகள் ● தலையணைகள் ●
குழந்தைகளுக்கு பம்பிங் செட்டுகள் ●
லேட்டோ ● பிராயாணப்படுக்கைகள் ●
பொம்மைகள் ● திண்டுகள் ●
ஸ்பாஞ்சுகள் ● கார் ஆசனங்கள் ●
சிறு திண்டுகள் ● ரஜாய் (க்வில்ட்) ●
குளிக்கும் அறை சாதனங்கள் ●

தயாரிப்போர்: யூ-ஃபோம் பிரைவேட் லிமிடெட், ஸநத்நகர், ஹைதராபாத்-18
பூரணவிற்பனையாளர்கள்: அஸோஸியேடட் சேல்ஸ் அண்டு அட்வர்டைஸிங் கம்பெனி
126, சரோஜினி தேவி ரோட், செகந்திராபாத்

FDSUF1011TM

சென்னை மற்றும் கேரள ராஜ்யங்களுக்கு விநியோகஸ்தர்கள்:—சர்தன் வேர்ஹவுஸ் கம்பெனி, 38/3, மவுண்ட் ரோட், சென்னை-6. (போன்: 87441 & 81437).
ஷோரூம்: 163, லாயிட்ஸ் ரோடு, சென்னை-14 & 38/3, மவுண்ட் ரோடு, சென்னை-6.
கிளை: 10/213, ஜெயில் ரோடு, கோயமுத்தூர்-18.



ஆஹா...
என்னே
குளுமை

**டி.எஸ்.ஆர்**

**அரைக்கீரைவிதைத்
தைலம்
சந்தனாதித் தைலம்**

டி. எஸ். ஆர். & கோ.,
கும்பகோணம்,
மதராஸ்




Criterion TSR 2058



தீபாவளி வாழ்த்துக்கள்
GEM
1/6, 4/8 Amps
Push button
Starter
5/15, 15/25
Manually operated
Star-delta Starter
15 to 400 Amps 500V
Triple Pole
Iron clad SWitchfuses
15 to 60 Amps 500V
Triple Pole
Distribution
fuse boards
முழுவிவரங்களுக்கு
கணபதி என்ஜினியரிங் மானுபாக்சரர்ஸ் பிரைவேட் லிமிடெட்
தபால் பெட்டி எண்: 881, கணபதி, கோயமுத்தூர்-6
VSK-C-6




விவசாயமும்
சிறு தொழிலும்
நாட்டின் முக்ய இரு பிரச்சினைகள்.
விவசாயம்: உணவு உற்பத்தி
பெருக, நவீன முறையில் சாகுபடி
செய்ய டிராக்டரும் பம்பு செட்டும்
வாங்க குறைந்த வட்டியில் கடன்
வழங்குகிறோம்.
சிறு தொழில்: சிறு தொழில் பெருக
இயந்திரங்கள் வாங்கவும், மூலப்
பொருள் வாங்கவும் குறைந்த வட்டியில்
கடன் வழங்குகிறோம்.
THE TANJORE PERMANENT BANK LTD.
சேவிங்ஸ் டிபாசிட்டுகளுக்கு 5%
பிக்சட் டிபாசிட் 8% வரை
ரெக்கரிங் டிபாசிட் 8½% வரை
வட்டி அளிக்கப்படுகிறது.
தஞ்சாவூர் பர்மனேண்ட் பாங்க் லிட்.
பதிவு அலுவலகம்: 1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்
K. V. சச்சிதானந்த மூப்பனார்-சேர்மன்
B. K. மாதவன்-செக்ரட்டரி
அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்.


TPB/DM/KL


Vale's
MADRAS-2

அசோகா சுகந்த பாக்கு

# யாவரும் விரும்புவது

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
No. 1506

சுகந்த பாக்குத்தூள்




# கலைமகள்

## தீபாவளி மலர் - 1968



















### உள்ளே

**கண்ணுக்கு:**

* ஸ்வாமியே சரணம் ஐயப்பா!
* கண்ணன் விளையாட்டுக்கள்
* குறிஞ்சிப் பாட்டு
* ஆற்றங்கரையில்
* பரமனை மணந்த பக்தைகள்
* 9-மூவண்ண ஓவியங்கள்
* நான்கு நாயன்மார்
* அஷ்ட காளிகள்

**கருத்துக்கு**

* பிடிக்கும் பிடிக்காது
* 21-கதைகள்
* 6 பிறமொழிச் சித்திரங்கள்
* 4 கட்டுரைகள்
* 7 கவிதைகள்
* சிறுவர் பகுதி


வருங்காலத்தை
உருவாக்கு-
வதற்காக
சேமிக்கக்
கற்றுக்கொடுங்கள்
அவர்களுக்கு !
அவர்களுக்குக் கவலையில்லாத
வாழ்வு.
வருங்கால உணர்வை அவர்கள்
உள்ளத்தில் புகட்டுங்கள்.
சேமிக்கக் கற்றுக் கொடுங்கள்.
ஆம். ஸ்டேட் பாங்கிலே.
சேவை புரிவதற்கே
ஸ்டேட் பாங்க்





# அன்னையின் திருவடியில்

இந்த அழகிய வண்ணமலரைத் தமிழன்னையின் திருவடிகளில் வைதது வணங்குகிறோம். இந்த மலரை வெளியிடும் முயற்சிகளில் ஈடுபடும் போது - இது நன்றாக வர வேண்டுமே என்று பிரசவ வேதனைப் படவேண்டி யிருக்கிறது. மலர் வெளிவந்த பிறகு பார்த்தால் குழந்தையைப் பெற்ற தாய் அதைக் கண்டு முகமலர்வதுபோன்ற இன்பம் உண்டாகிறது. புதிய புதிய துறையில் ஓவியங்களையும் சித்திரக் கோவைகளையும் வெளியிட விரும்பினோம். போட்டோக் கலைஞர்களும் ஓவியர்களும் எங்களுக்குத் துணை செய்தார்கள். இனிய கதைகளையும் கட்டுரைகளையும் தமிழ் நாட்டு மக்கள் நன்கு அறிந்த புகழ் பெற்ற எழுத்தாளர்கள் உதவி இந்த மலருக்கு மணத்தை ஊட்டியிருக்கிறார்கள்.

நடமாடும் தெய்வமாக விளங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளுடைய அழகிய முகப்புப் படம் நாம் கைகுவித்துப் போற்றும் வகையில் அமைந்திருக்கிறது. அவர்கள் திருமஞ்சனமாடும் நிலையில் மூன்று வேறு காட்சிகளைத் தனியே வெளியிட்டிருக்கிறோம். அதுவும் பேணிப் பாதுகாப்பதற்குரியது. வண்ணமும் வடிவும் அமைந்து அழகியரும் காதலரும் தொழிலாளரும் உயிரோவியங்களாகக் காட்சிதரும் படங்களையும் காணலாம்.

“ஸ்வாமியே சரணம் ஐயப்பா!” என்ற இனிய முழக்கம் இப்போது தமிழ்நாடு முழுவதும் கேட்கிறது. நாளாக ஆக விரதமிருந்து சபரி மலைக்குப் புனித யாத்திரை செய்யும் அன்பர்கள் அதிகமாகி வருகிறார்கள். அந்த யாத்திரையைப் பற்றிய படக் கோவை யொன்று இந்த மலரின் ஒளியை மிகுதிப் படுத்துகிறது. காட்டிலும் ஆற்றிலும் சிரமத்தைப் பாராமல் நடந்து சென்று பயபக்தியுடன் மகர விளக்குத் தரிசனத்துக்குச் செல்லும் பக்தர்களின் உணர்ச்சிகளையும் கட்டுப்பாடாக விரதம் காக்கும் நிலையையும் காட்டும் ஜீவனுள்ள படங்களை இந்தக் கோவையில் காணலாம். ஒரு முறை இந்தப் படங்களின்மேற் கண்ணோட்டினால் நாமும் சபரி மலை யாத்திரை செய்துவிட்டு வந்ததுபோன்ற நிறைவு உண்டாகும்.

‘‘ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்’’ என்பது ஔவை வாக்கு. ஆற்றினால் அழகு மாத்திரமா உண்டாகிறது? நீராடவும் பயிர் செய்யவும் ஆறு உதவுகிறது; அதன் கரையில் புனிதமான வழிபாடுகள் நடைபெறுகின்றன. மக்களும் விலங்குகளும் ஆற்று வெள்ளத்தில் ஆடிக் களிக்கிறார்கள். மகிழ்ச்சிக்கும் புனித வழிபாட்டுக்கும் இடமாக இருக்கிறது ஆற்றங்கரை. அந்தக் கரையில் நிகழும் பலவகை நிகழ்ச்சிகளைப் படம் பிடித்து அமைத்த வண்ணப்படக் கோவை ஒன்றும் இம் மலரில் இடம் பெறுகிறது.

தமிழின் சிறப்புக்குக் காரணமாகிய சங்கப் பாடல்களில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டு ஆரிய அரசன் பிரகத்தன் மதுரைக்கு வந்திருந்தபோது, காதலின்பத்தைப் பற்றிய தமிழ் மரபை அவனுக்கு அறிவிக்கக் கபிலர் என்னும் புலவர் பெருமான் பாடியது. அந்தப் பாட்டிலுள்ள காட்சிகளைத் தொடர்ச்சியாகக் காட்டும் ஓவியக் கோவையை ஒரு புறம் காணலாம்.

நாயன்மார்களுடைய வரலாற்ஸ்றப் பெரிய புராணத்தில் காண்கிறோம். பல திருக்கோயில்களில் சிற்ப வடிவில் நாயன்மார்களின் உருவங்களைப் பொறித்திருக்கிறார்கள். இவ்வாறு சொற்கோயிலாகிய பெரிய புராணத்திலுள்ள நாயன்மார்களின் வரலாற்றைக் காட்டும் ஓவியங்களும் கற்கோயிற் சிற்பத்திலுள்ள உருவங்களும் இணைந்த சித்திரக் கோவை ஒன்று ஓரிடத்தில் விளங்குகிறது.

பாரதநாட்டில் வெவ்வேறிடங்களில் இறைவனையே காதலனாகக் கொண்டு தெய்விகக் காதலை வளர்த்துப் பேறுபெற்ற பெண் மணிகள் பலர் வாழ்ந்திருக்கின்றனர். அத்தகைய பக்தைகள் நால்வருடைய ஓவியங்களடங்கிய மாலை ஒருசார் அமைந்திருக்கிறது.

கண்ணனுடைய திருவிளையாடல்களை அற்புதமாகக் கற்பனை செய்து ஒவ்வொரு சுலோகத்திலும் ஒவ்வொரு காட்சியை அமைத்துக் ‘கிருஷ்ண கர்ணாமிர்தம்’ என்ற கிரந்தத்தைப் பாடியிருக்கிறார் லீலாசுகர். அந்த நூலிலிருந்து சில காட்சிகளை வண்ண ஓவியமாக்கிய எழிற் கோவையும் இந்த மலரை அணி செய்கிறது.

“எனக்கு மிகவும் பிடிக்கும்” என்று சிலவற்றையும், ‘‘எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவே பிடிக்காது’’ என்று சிலவற்றையும் நாம் சொல்கிறோம். விருப்பும் வெறுப்பும் மனிதனோடு பிறந்த குணங்கள். பலரும் அறிந்த பெருமக்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று தெரிந்து கொள்வதில் நமக்கு ஆர்வம் அதிகம். அரசியல், இலக்கியம், நாடகம், சினிமா, இசை முதலிய பல துறைகளில் பலரும் பாராட்டும் நிலையில் விளங்கும் பல பெரியவர்களை அணுகி, அவர்களுக்குப் பிடிப்பது எது, பிடிக்காதது எது என்று கேட்டோம். அவர்கள் கூறிய விடைகளைத் தொகுத்து அவர்களுடைய படங்களுடன் வெளியிட்டிருக்கிறோம். இந்தப் பகுதியை அன்பர்கள் சுவைத்துப் படிப்பார்கள் என்று எண்ணுகிறோம்.

கவிதை, கட்டுரை, கதைகள், சிறுவர் பகுதி என்று பலவாக விரிந்துள்ள இலக்கிய வகைகளை இந்த மலரில் காணலாம். கதைகளை அடுத்த தீபாவளி மலர் வரும் வரையில் படித்துக் கொண்டே இருக்கலாம். கன்னடம், தெலுங்கு, மராட்டி, டோக்ரி, ஹிந்தி, உருது என்ற மொழிகளிலுள்ள சொற்சித்திரங்கள் ஆறை வெளியிட்டிருக்கிறோம்.

இந்த மலரை இவ்வளவு அழகாகவும் பயனுள்ளதாகவும் உருவாக்க உதவிய எழுத்தாளர்களுக்கும் ஓவியர்களுக்கும் போட்டோக் கலைஞர்களுக்கும், இதற்குத் தங்கள் விளம்பரங்களை அளித்த அன்பர்களுக்கும் நிறுவனங்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கலைமகள் அன்பர்கள் ஆண்டுதோறும் காட்டிவரும் பேரார்வமும் ஆதரவுமே எங்களுக்கு ஊக்கம் உண்டாக்கி ஆண்டுக்கு ஆண்டு சிறப்பாக மலரை வெளியிட வேண்டுமென்ற எண்ணத்தை உண்டாக்குகின்றன, அவர்களுக்கெல்லாம் தீபாவளி நல் வாழ்த்துக்களைச் சொல்லி வாழ்த்துகிறோம். வாழ்க!

ஆசிரியர்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# REPUTED FOR RELIABLE SERVICE




(1) மானோ பிளாக் செட் ✳ (2) ஆயில் இன்ஜின் பம்பு ✳ (3) கரும்பு ஆலை ✳ (4) மின் சங்கு ✳
(5) மின்சார மோட்டார் ✳ (6) பெல்ட் பம்பு ✳ (7) மோட்டார் பம்பு ✳
(8) H. S. மல்டி ஸ்டேஜ் பம்பு ✳ (9) டொமெஸ்டிக் பம்பு ✳

*தயாரிப்பவர்கள்:*

| போன்: 22935 | **சுப்பையா பவுண்டரி**<br>அவனாசி ரோடு : : கோயமுத்தூர்-18 | தந்தி: 'பவுண்டரி' |
|---|---|---|

கிளைகள்: (1) அருணாசல ஆசாரி தெரு, சேலம்-1.
(2) திண்டிவனம் ரோடு, திருவண்ணாமலை.

ஏஜெண்டுகள்: (1) R. நாராயண் அண் கம்பெனி, லிங்கி செட்டி வீதி, மதருஸ்-1.
(2) R. நாராயண் அண் கம்பெனி, டவுன் ஹால் ரோடு, மதுரை.

# "எங்கே, பான் எடுத்துவா!"

## ஒரு நொடியில் நல்ல மணமும் சுவையுமுள்ள காபி பெறுவதற்குச் சுலபமான வழி!

இதோ வந்து விட்டார்கள்—எதிர் பாராத விருந்தினர். தொந்தரவு ஒன்றுமில்லை: மிக நல்ல கோப்பைகளும் பானும் எடுத்துவா. பானின் உற்சாகமளிக்கின்ற நல்ல சுவையுள்ள காபி மணத்தை அவர்கள் பெரிதும் விரும்புவார்கள்! எனக்கு பான் நிரம்பப் பிடித்திருக்கிறது. காரணம், அது ஒரு நொடியில் தயாராகி விடுகிறது! எனவே, பான் வழங்கிடுக-நம் விருந்தினர்களுக்கு மிகவும் ஏற்றது.




இன்னொரு
பான்
வாங்குங்கள்

ப்ருக் பாண்டினால் அதிகக் கவனத்துடன் தயாரிக்கப்பட்டது.

639A/4TAM

எங்கள் உளங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

தொலைபேசி எண்: 54 & 254 | தந்தி: காரனேஷன்

# தி காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ்

தபால் பெட்டி எண்: 2 :: சிவகாசி

பல கலர் லேபிள்கள், போஸ்டர்கள் மற்றும் எல்லா விதமான பிரிண்டிங்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்.

அழகிய காலண்டர்கள் 14×22 & 16×22 சைஸ்களில் கிடைக்கும்.
உங்கள் வியாபார விருத்திக்கு விளம்பரம் செய்ய எங்கள்
காரனேஷன் காலண்டர்களையே தேர்ந்தெடுங்கள்.

தொலைபேசி: 87818 | *கிளை அலுவலகம்* | தந்தி: "காரன்லித்"

"தஞ்சை இல்லம்"
No. 3, சுவாமி ரெட்டித் தெரு,
எழும்பூர், :: மதராஸ்-8.

# Drink & Enjoy SPENCER'S

Fruit Beverages:

**Orange, Mango, Grape or Pineapple**

Fruit Squashes:

**Orange, Lemon, Portello**

Or any of a large variety of AERATED WATERS

## SPENCER & CO., LTD.

**153, MOUNT ROAD, MADRAS-2**

*Branches throughout India*

SPENCERS, Suppliers of Goods for Better Living

# உங்கள் வீட்டுக்குப் போலிவூட்ட உகந்தது பாரிவேர்தான்

வனப்பும் மழுமழுப்பும் மிளிரும் வடிவங்கள், அருமையான வர்ணங்கள், சுகசௌகரியம் அளிக்கும் ஆற்றல் ஆகிய அனைத்தும் பாரிவேர் விட்ரியஸில் இணைந்துள்ளன— சிறப்பின் சிகரமான இந்த நவீன சுகாதாரச் சாதனம் உங்கள் வீட்டில் வசதியைக் கூட்டிப் புதிய பொலிவையும் ஊட்டுகிறது. பாரிவேர் விட்ரியஸில் நேர்த்திமிக்க தோற்றத்துடன் நீடித்த உழைப்பும் உறுதியும் சேர்ந்தமைந்துள்ளன—

முத்துப் போன்ற வெண்ணிறத்திலும், மற்றும் ப்ரிம்ரோஸ், டர்க்காயிஸ் நீலம், ஆகாய நீலம், பீஜ், இளம்பச்சை வர்ணங்களிலும் இது கிடைக்கிறது.

- வழவழப்புடன் கூடிய பளபளப்பு
- நீரை உறிஞ்சாது
- பூரண சுகாதாரமானது
- விரிசல் விழாதது

பாரிவேர் விட்ரியஸ்தான்
நவீன மோஸ்தர் வீட்டுக்கு முழுமை தருவது.

Parryware VITREOUS

(டி.ஜி.எஸ். அண்ட் டி.யினுல் அங்கீகரிக்கப்பட்டது)
விரிசல் விழாத விட்ரியஸ் வெண் களிமண்ணைக் கொண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த டௌல்டன் அண்ட் கம்பெனியின் தொழில் நுட்ப ஆலோசனையுடன் தயாரிப்பது:

ஈ.ஐ.டி—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
டேர் ஹவுஸ், சென்னை-1.





# எச்சரிக்கை!

நியூடரீனை அவனுக்கு
எட்டாத இடத்தில் வையுங்கள்.
எட்டும்படியாக இருந்தால்,
அதன் ஈடு இணையற்ற
ருசி அவன் அதை எடுத்துத்
தின்னும்படி தூண்டும்.

Nutrine
SWEETS & TOFFEES

## நியூட்ரீன்
## மிட்டாய்களும் டாபிகளும்

*தயாரிப்பவர்கள் :*
**நியூட்ரீன் கன்பெக்ஷனரி**
**கம்பெனி பிரைவேட் லிமிடெட்,**
**சித்தூர், ஆந்திரா**




ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்
படியாத கேசத்தையும் படியச் செய்கிறது—நாள் முழுவதும் மழமழப்பாய் வைக்கிறது
நேர்த்தியாக வாரிவிடப்பட்ட கவர்ச்சி மிக்க கேசம்... கண்ணைக் கவரும் பளபளப்புள்ள கரும் கேசம்—நாள் முழுவதும் மழமழப்புடன் திகழச் செய்வது ஸ்வஸ்திக் பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்.
SOM 24 Tam
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய

We lend

**COLOUR TO LIFE!**

and

**STAGE MANAGE ITS AMENITIES**

for,

Our Class Chemicals are there, behind-the-scenes, all the time, in the making of Beautility articles of every day use:-

Rayon fabrics, textiles, paints, varnish, petrol, glass, rubber, leather goods, sugar, depilatory perfumes, photographic materials etc., etc. the list is endlessly diverse...

RAYON GRADE CAUSTIC SODA, SODIUM SULPHIDE, SODIUM HYDROSULPHITE and now HYPO AND OTHER CHEMICALS.

The pioneers as well as pace-setters in the manufacture of Basic Chemicals of Class.

**The Travancore-Cochin Chemicals Ltd.**

**Registered Office: UDYOGAMANDAL P. O. (KERALA)**

*With Best Wishes for a Happy Deepavali*
*to our esteemed clients*

We offer quality paper-foreign and
Indian at attractive prices

# SANTHANAM BROTHERS

**47, BIG STREET, MADRAS 5**

Phone No. 87952

*STOCKISTS OF ;*

**The Orient Paper Mills Ltd.**
**The Titaghur Paper Mills Co. Ltd.**
**The West Coast Paper Mills Ltd.**
**The Arvind Board Paper Products Ltd.**
**The Sirpur Paper Mills Ltd.**
**The Bengal Paper Mills Co. (P) Ltd.**
**The Mysore Paper Mills Ltd.**
**The Hooghly Printing Inks**



## DIWALI GREETINGS

**TO OUR FRIENDS**
**AND**
**CUSTOMERS**

UNITED COMMERCIAL BANK

**HEAD OFFICE : CALCUTTA.**

ASP/UCO-34/67




# SATHE

**keeps it up throughout the year**

SATHE BISCUIT & CHOCOLATE CO. LTD.
POONA-2.




everest/340a/PP TM r

இமயம் முதல் குமரிவரை நீண்டு படர்ந்துள்ள நமது பாரதநாட்டின் சரக்குப் போக்குவரத்துத் துறையில் ஏ. பி. டி. பார்சல் சர்வீஸார் தங்களது ப ணியை விரைந்து, நிறைவோடு செய்து வருகின்றூர்கள்.



குறைந்த கட்டணம் பாதுகாப்பு
துரிதப் பட்டுவாடா திருப்தியான சேவை

இவையே

ஏ. பி. டி. பார்சல் சர்வீஸாரின்

சிறப்பு அம்சங்கள்

தந்தி: 'சஞ்சீவி' தபால் பெட்டி: 1414

போன்: '23366 (3 லைன்கள்)' டெலக்ஸ்: 262

# இதுதான் டாடா-ஃபைஸன்-ராலீஸ் நிறைவு தரும் கற்பகத் தரு!

இதன் அடிமரம் டாடா-ஃபைஸன்-ராலீஸ் நிறுவனத்தை அறிவுறுத்துகிறது... பாரத மண்ணிலே ஆழ வேர் பாய்ச்சி நிற்கின்றது. பாரதநாட்டு விவசாயிகளுக்குப் பல மருளும் பாதுகாப்புக் கோட்டையாக விளங்கும் அடிமரம், துயருற்றபோதெல்லாம் துணைதந்து வழிகாட்டி வளமை எய்த உதவுகிறது

இதன் கிளைகள் பரவிப் பரந்துள்ள ராலீஸ் ஸ்டாக்கிஸ்டுகளையும் வியாபாரிகளையும் சுட்டுகின்றன. அன்னோர் மூலம் ராலீஸ் நம் நாட்டின் எங்கெந்த மூலையிலும் உள்ள எளிய உழவரையும் எட்டி, அவர் தம் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஓங்கித் தழைக்கும் உயரிய விளைச்சல்களுக்கான உரங்கள், பூச்சிக்காளான் கொல்லிகளை அவர் கைக்கெட்டவும் உதவுகின்றன.

இதன் கனிகள் வளமையின் சின்னம், டாடா-ஃபைஸன்-ராலீஸ் தயாரிப்புகள், பணிகள் ஆகியவற்றின் உதவியால் தம் விவசாயிகள் அடைந்திடும் செழிப்பான அறுவடையின் அறிகுறி.

ஆக மொத்தம்
அருட் பொழிவு...
நிறைவேற்றம்
கண்ட நற்பேறு...
இதன் உருவகமே
வரமருளும் இம்மரம்!

TATA FISON RALLIS
TREE BRAND
FERTILIZERS AND PESTICIDES




Stronachs X. 15TM

# R. K. INDUSTRIES

MAIN ROAD, VELACHERY, MADRAS-42

Grams: "Arthene", Madras-1

Offers:

**POLYTHENE LAY FLAT TUBES, BAGS, SHEETS, ETC.**

Proprietors:

# K. ORR & COMPANY

16, STRINGER'S STREET, MADRAS-1

Phone: 23019 & 235261 Grams: "PRESUNDRY"

*Agents and Stockists:*

Paper, "Lustracote" Art paper,
Printing Inks (Coates) and
Other Printers' Sundries,
Teleprinter and Telex Paper Rolls
and "Insta" Numbering Machines Etc.

*Indents booked for:*

Paper, Process Zinc and Copper Sheets,
Lithographic Zinc Sheets, Hardware,
Match Chemicals,
"KG" Zip Fasteners, Nylon Zip Fasteners,
Pratap Steel Rolling Mills—Special Steel,
Ravi Engineering Works—Bolts and Nuts Etc.

# இது போன்ற அழகான பன்னிரண்டு படங்களை எடுங்கள்



# க்ளிக்III
## ...வாங்கிய நாளன்றே



* இலக்கு நோக்கி 'கிளிக்' குங்கள். சரிபடுத்தும் தொல்லையில்லை—தவறுகள் நேரவும் வாய்ப்பில்லை.
* 12 பெரிய (6x6cm) படங்களை, அளிக்கிறது ஒவ்வொரு 120 ச்சுருளும்.
* எவர்-ரெடி உறை, போர்ட்ரெயிட் லென்ஸ் மற்றும் பிளாஷ் அமைப்பு தனி விலையில் கிடைக்கின்றன.

ஆக்பா கண்காணிப்பின் கீழ் தயாரிப்பவர்கள் தி நியூ இண்டியா இண்டஸ்ட்ரீஸ் லிட்., பரோடா.

AGI

ஏக போக விநியோகஸ்தர்கள்:
**ஆக்பா–கேவார்ட் இந்தியா லிமிடெட்**
பம்பாய் · புது டில்லி · கல்கத்தா · சென்னை.

CMAG-105-203 TM



"Bentex" STRAPS • BRACELETS




*அனைவருக்கும் எங்கள் தீபாவளி நல்வாழ்த்துக்கள்*

## 1969 - எங்கள் வைர விழா ஆண்டு

பொதுமக்களின் நம்பிக்கையையும், வியாபாரப் பெருமக்களின் ஆதரவையும் பெற்றுள்ள

எங்கள்

## ஆர். எஸ். பதி மருந்து

(REGD.)

தலைவலி, ஜலதோஷம், ஃப்ளூ, கைகால் வலி முதலிய வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

★ டிரக் லைசென்ஸ், சேல்ஸ் டாக்ஸ் லைசென்ஸ் உள்ள வணிகர்கள் மட்டும் எங்களுக்கு நேரிடையாகத் தங்கள் ஆர்டர்களை அனுப்பலாம்.

★ விலைப் பட்டியல் தேவையுள்ள வணிகர்கள் எங்களுக்கு எழுதினால், இலவசமாக அனுப்பி வைக்கிறோம்.

எங்கள் மற்றுமொரு தயாரிப்பு

*டின் 1க்கு விலை* **மேரிராம் பற்பொடி** *45 காசுகள்தான்*

தேவைக்கு எழுதுக:

## ஆர். எஸ். பதி அன் கோ.,

(ஸ்தாபிதம்: 1909)

*214 & 215, மேலமாசி வீதி — த. பெ. எண் 99 — மதுரை-1.*

# இண்டியனாயில்
## நம்முடையது!





இண்டியனாயில், மணிக்கணக்காக ஸ்டவ்வுடன் மாரடிக்க வேண்டிய தொல்லையிலிருந்து எனக்கு விடுதலையளித்தது; இப்பொழுது எனக்கு நகர வாழ்க்கையின் பொழுதுபோக்குகளை அனுபவித்து மகிழ்வதற்கு வேண்டிய நேரம் கிடைக்கிறது. இண்டியனாயில் அளிக்கும் பெட்ரோலியம் வாயுவான இண்டேன் இருப்பதனால் சமையல் வேலை கச்சிதமாகவும், சுலபமாகவும் வேகமாகவும் முடிந்து விடுகிறது; பாத்திரங்கள் கரி பிடிப்பதில்லை.

இண்டியனாயில் என்னுடைய வீட்டு வேலையையும், அம்மாவின் வீட்டுக் காரியங்களையும் சுலபமாக ஆக்கிவிட்டது. விளக்கேற்றவும், சமைக்கவும், இண்டியனாயில் தரும் ஜோதி மண்ணெண்ணெ மிகவும் வசதியாக இருக்கிறது. என் கிராமத்திற்கு, மண்ணெண்ணெ மாட்டு வண்டியில் வருகிறது. டாங்க் வாகன்கள், டாங்க் ட்ரக்குக்ள், 3 சக்கர வண்டிகள், ஒட்டகம் மற்றும் கழுதை வண்டிகள், கை வண்டிகள் போன்ற எல்லா விதமான போக்குவரத்துச் சாதனங்கள் மூலமாகவும் மண்ணெண்ணெ எல்லா கிராமங்களையும் தவறாமல் சென்றடைய இண்டியனாயில் வழி செய்துள்ளது

இண்டியனாயில் இவ்வளவும் செய்ய முடிவது ஏனென்றால் அது நம்மைச் சேர்ந்தது.

INDIANOIL —பொருளாதார வளமைக்கான தேசியப் பொறுப்புறவு

**இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்**

IOC-7218 D. TAM.




## டினோபால்

வெண்மை
பளிச்சிடச்
செய்வதில்
இணையற்றது

துவைத்த துணிகளை அலசு
வதற்கு முன் நீரில் சிறிதளவு
டினோபால் சேர்த்தால்,
சலவையின் வெண்மை
எப்படிப் பளிச்சிடுகிறது—
ஷர்ட்டுகள், புடவைகள்,
படுக்கை விரிப்புகள்,
டவல்கள் எல்லாம்!

இத்தனைக்கும் ஆகும்
செலவுதான் என்ன?
துணிக்கு ஒரு பைசாவுக்கும்
குறைவே! துணிகளைப்
பாழாக்காமல் சாஸ்திரீய
முறையில் வெண்மை
பளிச்சிடச் செய்வது
டினோபால்.

டினோபாலின் மற்ற பேக்குகள்:



ஒரு வாளித் துணிக்கு ஒரு பேக்கெட்




புதிய எகானமி பேக்

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், த. பெ. 965, பம்பாய் 1 பி.ஆர்.
®டினோபால் என்ற பெயர் ஜே. ஆர். கெய்கி எஸ். ஏ. பாஸல்
ஸ்விட்ஜர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்
ஆகும்.

Shilpi SG 1A/68 Tam.





# இதோ தெய்வம்

'ஜோதி'

சாந்த உருவங்கொள் மூர்த்தியினான்— யாரும்
சார்ந்து பணிந்திடும் கீர்த்தியினான்
காந்த மெனப்பலர் உள்ளங் களைத்தன்
கருணை மொழியினாற் கொள்ளைகொள்வான்.

அன்னையைப் போன்ற பெருங்கருணை—பெற்ற
அப்பனைப் போன்ற மனக்கவலை
மன்னனைப் போன்ற தவச்செங் கோல்இந்த
மாநிலம் போற்றப் பொருந்தியவன்.

கண்ணின் ஒளியைப் புகழுவதோ—அன்றிக்
கலையின் அறிவை வியப்பதுவோ
தண்ணென்ற சொல்லில் இரும்புங் குழைந்திடத்
தயைபுரி பாங்கினைப் போற்றுவதோ?

யாவர்வந் தாலும் அவர்க்கிதமாய்ப்—பேசி
இன்பம் பெறச்செய்யும் அண்ணலவன்
தேவர்கள் போற்றிய தெய்வம் இதோவந்து
தெரிசனம் காட்டுமென் றெண்ணுகின்றோம்!

தவத்தின் உருவிது தயையின்கடல்—இந்தத்
தாரணி உய்வதற் காகவந்து
சிவமெனும் அப்பொருள் சீரடி தோவத்
திசைதிசை தோறும் நடக்கின்றதே!

கண்ணிலே கண்டவர் பாக்கியத்தார்—மொழி
காதிலே கேட்டவர் பேறுபெற்றார்
நண்ணிய காஞ்சியில் காமகோ டிப்பீட
நாயகன் பேரருள் வாழியரோ!

போட்டோ: எஸ். ஹரிஹரன்

# மனத்திண்மை



மாண்புமிகு அமைச்சர் மு. கருணாநிதி

எண்ணம் சிந்தனை பெற்றெடுக்கும் குழந்தை; செயலுக்கு மூலவித்து. சிந்தனை சீரானதாக இருந்தால் சிறந்த எண்ணம் உதயமாகும். எண்ணம் சிறந்ததாக இருந்தால், செயல் செழுமையானதாகவும் நன்மை தருவதாகவும் அமையும். வாழ்க்கையின் உயிர்த்துடிப்புக்கும், முன்னேற்றங்களின் மலர்ச்சிக்கும் செயலே அடிப்படை. செயலற்ற மனிதனே நிறுவனமோ உலகில் சிறிதும் மதிக்கப்படுவது இல்லை. எனவே, விறுவிறுப்பான செயல் ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் இயக்குவதாக அமைய வேண்டும். அதே நேரத்தில் அந்தச் செயல் தனிப்பட்டவர்களின் நலனைக் காப்பதாகவும், சமுதாயத்தின் நலனைப் பேணுவதாகவும் அமைய வேண்டும். இல்லாவிட்டால் பொதுநலம் அதில் பூக்காது. தன்னலம் என்பது ஒன்றே கள்ளியாகப் படர்ந்திருக்கும். இந்த வகையில் ஒருவனிடம் எவ்வளவு அதிகமான செயலூக்கம் அமைந்திருந்தாலும் அதைக் கண்டு ஒரு கணமே வியப்பதுபோல் உலகம் காட்டிக் கொள்ளும். அடுத்த கணம் வெறுத்து ஒதுக்கி அதைக் கண்டிக்க உலகம் தவறுவது இல்லை.



இட்லரையும், முசோலினியையும், அண்மைக் காலங்களில் வரலாறு சந்தித்த பிற சர்வாதிகாரிகளையும், விஞ்ஞான விவேகத்தை அழிவு வழிகளில் பயன்படுத்தும் மாபெரும் அறிவாளிகளையும் செயலூக்கம் இல்லாதவர்கள் என்று யாராவது சொல்ல முடியுமா? இன்று கோடிக்கணக்கான மக்கள் வறுமையில் புழுக்களிலும் கேடாய் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் வேளையில், மேலும் மேலும் பணத்தைக் குவித்துக்கொண்டே போகும் தன்னலமே உருவான ஏகபோக முதலாளிகள் செயலூக்கம் அற்றவர்கள் என்று சொல்ல முடியுமா? இவர்கள் அனைவருமே ஒவ்வொரு விநாடியும் வாழத் தெரிந்த திறமைசாலிகள்; தேனீக்களைத் தோற்கடிக்கும் செயலூக்கம் நிறைந்தவர்கள். ஆனால் அவர்களது சுறுசுறுப்பின் கருதியாக இருப்பது சுயநலமே. அதனால் அவர்களுக்கு நன்மையே தவிர, சமூகம் முழுவதற்கும் அதனால் பொது நன்மை எதுவும் கடுகளவும் இல்லை.

''எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்''

என்று வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை வினைத்திட்பத்தின் சிறப்பைச் சுட்டிக் காட்டிச் சென்றுள்ளார். எண்ணம் கருக்கொண்டவுடனே அதன்பால் மனத்திண்மை வந்துவிடாது. அந்த எண்ணத்தில் நம்முடைய நம்பிக்கையும் பற்றும் ஈடுபாடும் அதிகமாக அதிகமாகத்தான் மனத்திண்மையும் உறுதிப்பாடும் உண்டாகும். இவை தோன்றிவிட்டால் நொடியில் செயல் பிறந்துவிடும். அந்தச் செயலால் உண்டாகும் பயனை நோக்கித்தான், அந்தச் செயலுக்கு வித்தாக அமையும் எண்ணத்தில் நமக்கு மனத்திண்மை ஏற்படும். இப்படி நியாயத்தின் அடிப்படையிலும் மனிதாபிமான உணர்விலும் இயற்கையாக எழும் மனத்திண்மையினல்தான் மக்கள் சமூகத்துக்கு நன்மை உண்டாக முடியும்.



பேரறிஞர் அண்ணு அவர்கள் சென்ற பொதுத் தேர்தலில் மக்களை அணுகி வாக்குக் கேட்ட நேரத்தில், விலை விக்கத்தால் மக்கள் அல்லலுறுவதை எடுத்துக் காட்டி, விலை குறையப் பாடுபடுவதே எல்லாவற்றுக்கும் முதன்மையான பணி என்பதை வலியுறுத்தினர்கள். வரிமேல் வரி போட்டு ஏழை மக்களை வாட்டிடும் போக்கையும் கண்டித்தார்கள். மக்கள் அவரது கையில் அரசை ஒப்படைத்த பொழுது, இந்த லட்சியங்களை அவர் எப்படி நடைமுறையில் நிறைவேற்றுகிறர் என்பதைப் பார்க்கும் ஆவல் நாட்டில் இயற்கையாகவே எழுந்தது. ஏழை எளிய மக்களின் வயிற்றில் பால் வார்க்கும் படியரிசித் திட்டத்தை அண்ணு நிறைவேற்றியதுடன் அவர்களைப் பாதிக்கும் வகையில் வரிகள் போடாமலும் பாதுகாப்பு அளித்தார். அத்துடன், வரிகளைப் போட்டும், ரூபாய் நோட்டுக்களைப் பெருக்கியும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க வேண்டாம் என்று மத்திய அரசையும் கேட்டுக் கொண்டார்.

மாநில அரசின் சுருங்கிய வருவாய்க்குள் படி அரிசித் திட்டத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கே பெரும் மனத்திண்மை வேண்டும். சொல்லப் போனல், இந்தத் திட்டம் இயலக்கூடியது அல்ல என்றுகூடப் பலர் எடுத்துச் சொன்னர்கள். உழைத்து ஓடாகும் மக்களின் வாடிய முகங்களும் ஒட்டிய வயிறுமே அண்ணுவுக்கு இந்த மனத்திண்மையை அளித்தன. அரசுப் பேருந்துகளில் கட்டணத்தைக் குறைத்துத் தனியார் துறைக்குக் கட்டணக் குறைப்பில் வழிகாட்டிற்று, தமிழக அரசு. ஏழை, நடுத்தர மக்களின் நன்மை என்ற கண்ணேட்டந்தான் இதற்கான மனத்திண்மையை அளித்தது. கட்டணக் குறைப்பால் வருமானம் குறையாமல் கூடிற்று. தனியார் துறையினருக்கும் இது ஒரு நல்ல முன்மாதிரியாய் அமைந்தது.

தமிழ்மீது அரசுக்குள்ள ஈடு இணையற்ற பற்றும், நாட்டின் எதிர்காலக் கண்மணிகளாம் மாணவர்களின் நலனில் உள்ள அக்கறையுமே இருமொழித் திட்டத்தைச் செயல்படுத்தும் மனத்திண்மையை அளித்தன. இல்லாவிட்டால் மொழிப் பிரச்னையில் அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டக் கூடிய பெருமை நமக்குக் கிட்டியிராது.

எந்தச் செயலுக்கும் பொது நன்மையை உரைகல்லாக வைத்துப் பார்த்தால்தான் அதன் தன்மையை உள்ளவாறு உணரமுடியும். அத்துடன் அந்தச் செயலைச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றலும் மனத்திண்மையும்கூட அப்பொழுதுதான் உள்ளத்தில் கிளர்ந்தெழும். ★

# அவ்வினைக்கு இவ்வினை

## திருமுருக கிருபானந்த வாரியார்

நாம் நுகர்கின்ற இன்ப துன்பங்கட்குக் காரணம் எது? துன்பமும் இன்பமும் பிறர்தர வாரா. கருணையங் கடலாகிய கடவுள் நமக்குத் துன்பம் தர மாட்டார். மற்றவர்கட்கும் ஆற்றல் இல்லை. ஆகவே, துன்ப இன்பங்கட்கு நாம் செய்த தீவினை நல் வினைகளே காரணமாகும்.

மண்ணில் என்ன விதைக்கின்றோமோ அது விளைந்து வரும். எள் விதைத்தால் எள் வரும். கொள் விதைத்தால் கொள் வரும், நெல் விதைத்தால் நெல் வரும். கொள்ளை விதைத்துவிட்டு எள்ளை எதிர்பார்க்கலாமா?

செய்வான், செய்வினை, வினைப்பயன், வினைப்பயனைச் சேர்ப்பான் என்ற நான்கையும் உணர்த்துகின்ற சமயம் நமது வைதிக சமயம்.

செய்த வினை அறிவற்றது, ஜடம். அது தானே செய்தவனை வந்து அணுகாது. செய்தவன் சிற்றறிவுடையவன். ஆதலால் வினைப்பயனைத் தானே நுகரும் அறிவாற்றல் இல்லாதவன். ஆதலால் முழுதொருங்குணர்ந்த இறைவன் அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்ப இன்பதுன்பங்களைக் காலமறிந்து இடமறிந்து ஊட்டுகின்றான்.

நோயாளியின் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்க்கச் செய்யும் மருத்துவன், நோய்க்கு ஏற்ற மருந்துகளை அளவறிந்து தருகின்றான். 'நான் அதிகம் படித்தவன்; பெரிய பதவியில் இருப்பவன். ஆதலால் நானே மருத்துவ மனையில் புகுந்து நானே மருந்தை எடுத்து உண்பேன்' என்றால் அது எத்தனை அபாயம்? சிந்தியுங்கள்.

இந்த அறத்தை விளக்க இரண்டு எடுத்துக் காட்டுக்களை இங்கு நினைவு படுத்துகிறேன்.

* * * *

குற்றம் புரியாத கோவலன் மதுரையில் கொலையுண்டு மாண்டான். இதற்குக் காரணம் பொற்கொல்லனும் அல்லன்; நெடுஞ்செழியன் என்ற பாண்டியனும் அல்லன்.

கலிங்க நாட்டில் சிங்கபுரம் கபிலபுரம் என்ற இரு தலை நகரங்கள் இருந்தன. அந்த இரு நகரங்களை இரு மன்னர்கள் அரசு புரிந்து வந்தார்கள். அவர்கள் தாயாதிகள். இருவருக்கும் பகையும் பூசலும் புகைந்திருந்தன. துரியோதனனுக்கும் பாண்டவர்கட்கும் பூசல் இருந்ததுபோல் அவர்களுக்குள் பகைமை ஏற்பட்டது. ஒருவனை மற்றொருவன் அழிக்கக் காலம் பார்த்துக்கொண்டிருந்தான்.

கபிலபுரத்திலிருந்து சங்கமன் என்ற வணிகன் சிங்கபுரம் போந்து நகை வாணிபம் புரிந்தான். சங்கமனுடைய வாணிபத்தில் அழுக்காறு காரணமாகப் பரதன் என்பவன் சங்கமனைப் பகைத்தான். 'இவனை ஒழித்துக் கட்ட என்ன வழி?' என்று சிந்தித்தான்.

பரதன் சிங்கபுரத்து வேந்தனிடம் போய், ''சங்கமன் என்பவன் நமது பகைவனாகிய கபிலபுர வேந்தனுடைய ஒற்றன். உளவறிய வந்து வாணிபம் புரிவான்போல் உலாவுகின்றான்'' என்று புனைந்துரை புகன்றான். சிங்கபுரத்தரசன் சங்கமனைக் கொன்றுவிட்டான்.

சங்கமன் மனைவி நீலி என்பவள் மிகுந்த கற்புடையவள். பதினான்கு நாட்கள் கணவனுடைய பிரிவினால் பெருந்துயர் அடைந்து மலைமீது ஏறி, ''இந்த இடர் புரிந்தோர் இத்துயர் அடைக!'' என்று கூறி வீழ்ந்து இறந்தாள். சங்கமனைக் கோள் மூட்டிக் கொல்வித்த பரதன் கோவலனாகப் பிறந்தான். சங்கமன் பொற்கொல்லனாகப் பிறந்து, கோவலனைக் கொல்வித்தான். அவ்வினைக்கு இவ்வினை யென ஊழ்வினை உருத்து வந்து கோவலனைப் பற்றியது.

சோலைகளும் அறச் சாலைகளும் சூழ்ந்து வளமை குன்றாத நகரம் தானையூர். அந்த ஊரின் வடதிசையில் சக்திமிகுந்த ஒரு காளியின் கோயில் மிகப் புகழ் பெற்று விளங்கியது. காளிதேவி கண்டார் கண்கவரும் கவினுடன் காட்சியளித்தாள். உயரமான திருவுருவம், அநேக பக்தர்கள் வந்து வழிபட்டுத் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறக் காணிக்கை போட்டு அன்பு செய்தனர்.



வரவர அன்பர்களுடைய கூட்டம் பெருகி வந்தது.

காளிகோயில் பூசாரிக்கு நல்ல கொண்டாட்டம். அவனுக்கு நல்ல வருவாய் வந்தது. காற்படிச் சர்க்கரைப் பொங்கல் தயாரித்து, பத்து அடியார்களிடம் இதுதான் உங்கள் சர்க்கரைப் பொங்கல் என்று காட்டிப் பத்துப் பேர்களிடமும் பணம் பறிப்பான். இனிய குரலில் பாடி, வந்தவர்களைப் பரவசப்படுத்துவான்.

மார்கழி மாதம் வந்தது. பூசாரி விடியற்காலையில் குளிர்ந்த நீரில் முழுகித் தயிரன்னம் தயாரித்துக் காளிக்கு நிவேதனம் புரிந்து வந்தான். அந்தத் தயிரன்னத்தை விலாப் புடைக்க உண்டு உறங்குவான். இவ்வண்ணம் நாள்தோறும் அதிகாலையில் நீராடித் தயிரன்னம் உண்ட அவனுக்கு உணவின் மாறுபாட்டினால் காய்ச்சல் நோய் ஏற்பட்டது. அதற்கு நல்ல மருத்துவலை நாடி மருந்துண்பதுதான் நியதி. அந்த மூடன், ''ஏ தேவி! பத்ரகாளி! என் காய்ச்சல் நீங்க அருள் செய்; உனக்கு இரண்டு ஆடுகள் பலியிடுவேன்'' என்று வேண்டிக்கொண்டான். அவன் மனைவி சுக்கு, திப்பிலி, மிளகு இடித்துப் பனை வெல்லம் இட்டுக் காய்ச்சி மூன்று வேளை கொடுத்தாள். காய்ச்சல் நீங்கிப் பூசாரி குணம் அடைந்தான்.

பூசாரி காளி தேவிக்கு அபிஷேகம் செய்து இரண்டு ஆட்டுக் குட்டிகளை வாங்கி வந்தான். காளிக்கு முன் 'அம்மா! அம்மா!' என்று ஆட்டுக் குட்டிகள் கதறிப் பதற, இரக்கம் இன்றி அரக்கனைப் போல் கூரிய வாளால் வெட்டிப் பலியிட்டான்.

தானையூரை ஆளுகின்ற அரசன் மகப்பேறு வேண்டிக் காளி தேவிக்கு வழிபாடு செய்தான். அம்பிகையின் அருளினால் மன்னவன் மனைவியின் மணிவயிறு வாய்த்தது.

ஒரு நன்னாளில் மன்னவனுக்கு ஆண் மைந்தன் பிறந்தான். அவ்வண்ணமே மந்திரிக்கும் ஒரு புதல்வன் பிறந்தான். மன்னவனுடைய மகனும் மந்திரியின் மகனும் வளர்மதி போல் வளர்ந்தார்கள்; கலை பல பயின்றார்கள்.

உரிய காலத்தில் மன்னவன் மகன் மகுடம் சூடி அரியணையில் அமர்ந்தான். மந்திரியின் மகன் மன்னவனுக்கு மதியமைச்சனாக விளங்கினான். இருவரும் இணைபிரியாத் தோழர்களாக இருந்தார்கள்; ஒருவரை ஒருவர் நேசித்து அன்பு பூண்டார்கள்.

அவர்கள் ஆட்சி புரியும் போது மழையின்றி மாநிலம் வருந்தியது. மக்கள் மட்டுமேயன்றி விலங்குகளும் பறவைகளுங் கூடப் பசியால் பரிதவித்தன. எங்கும் பசியின் கொடுமை தலைவிரித்துக் கோர நடனம் புரிந்தது. உண்ணீரும் தண்ணீரும் இன்றி உயிர்கள் பல மடிந்தன. மக்கள் பசி பசி என்று துடித்தனர். அந்தணர் வருணஜபம் செய்தனர். 'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை' என்ற வள்ளுவருடைய வாய் மொழியைச் சிந்தித்தார்கள். கடவுளை வந்தித்தார்கள். மறத்தை நிந்தித்தார்கள்.

பல மனிதர்கள் எலும்புக் கூடுகளாகக் காட்சி அளித்தார்கள். நிலம் புல் பூடு இன்றி ஆமை முதுகு போல்





காய்ந்து வறண்டது. ஆறு குளங்கள் கிணறுகள் வற்றிவிட்டன. அனல் காற்று வீசியது. மரங்கள் தீய்ந்துவிட்டன. பசி நோயினுல் ஜனங்கள் வாடினுர்கள். இங்கும் அங்கும் ஓடினுர்கள். உணவைத் தேடினுர்கள். ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டார்கள். ஆடுமாடுகள் தவித்தன; பறவைகள் ஆங்காங்கே மாண்டு கிடந்தன. எங்கும் துன்பம்; பெருந்தனவந்தர்களும் உணவின்றி வருந்தினுர்கள். வெறும் பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது?

மன்னவனும் மந்திரியும் மக்கள் படுந்துயரைக் கண்டு பெரிதும் வருந்தினுர்கள். 'இது தெய்வத்தின் சீற்றத்தால் விளைந்தது போலும். ஆறு ஆண்டுகளாக மழையில்லை. ஆறு குளங்களில் நீர் இல்லை. காளி தேவியை வழிபட்டு இத்துயரத்திலிருந்து விடுபடுவோம்' என்று கருதிய மன்னவனும் மந்திரியும் காளி கோயிலுக்கு வந்தார்கள்.

மந்திரியையும் மன்னவரையும் கண்ட பூசாரி நடுங்கினுன். 'நம்மீது ஏதோ கோபங் கொண்டுதான் வந்திருக்கிருர்கள் போலும்!' என்று கருதினுன். அஞ்சிய அந்த மூடன் ஓடிக் காளியின் திருவுருவத்துக்குப் பின் ஒளிந்து கொண்டான்.

மன்னவனும் மந்திரியும் மாகாளிக்கு முன் நின்று மலர்க் கண்ணீர் உகுத்து வணங்கினுர்கள்.

இழையின்றி நிகரொன் றில்லா
இடையுடை எம்பி ராட்டி!
மழையின்றி மக்கள் யாரும்
வருந்தியே வாடு கின்ருர்.
குழையொன்று செவியாய் ஞானக்
கோதையே! கொடியேன் செய்த
பிழையொன்று பொறுத்து மாரி
பெய்யவே செய்வாய் தேவி!

"தேவி! பராசக்தி! உலகன்னையே! கருணைக் கடலே! சிறியேனுக்குப் பட்டங் கட்டிய காலந்தொட்டு மழை இல்லையே! மகா காளியே! மலைமகளே! மழை பொழிய அருள் செய்!" என்று கூறித் துதி செய்து நின்றுன் மன்னவன்.

"ஏ மன்னவனே! நம்முடைய சந்நிதியில் ஒரு நர பலி யிட்டால் மழை பெய்யும்" என்று கணீர் என்று வானெலி எழுந்தது. இதனைக் கேட்ட மன்னன் ஆறுதல் அடைந்தான். அவன் கருணை நிறைந்தவன். ஏழையான ஒரு குடிமகனைக் கொணர்ந்து பலியிட விரும்பினுன் இல்லை.

"மந்திரி, இந்த மாநிலத்துக்கு நான் தந்தை. மைந்தர்களுடைய துயர் தீர்ப்பது தந்தையின் கடமை. என்னை நான் தியாகம் புரியத் துணிந்தேன். அம்பிகையின் சந்நிதியில் என்னைப் பலியிடு. இந்தா! இந்த வடிவாளை வாங்கு. எம்பிராட்டியை இறைஞ்சி நிற்பேன். இந்த வாளால் என்னை வெட்டிப் பலியிடு. மழை பொழிந்து மக்கள் சுகமடையட்டும்" என்ருன்.

அமைச்சன், "அரசே! தங்கள் தியாகம் மிகவும் போற்றுதற் குரியது. அடியேன் தங்கள் நண்பன். என்னைப் பலியிடுங்கள். அமைச்சர் பதவிக்குத்தானே பலர் பஞ்சுபடாத பாடு படுகின்ருர்கள்? தக்கான் ஒருவனை அமைச்சனுக் நியமித்து நெறி பிறழாது நீர் அரசு புரியும். ஆதலால் என்னைப் பலியிடும்" என்ருன்.

அரசன், "அமைச்சனே! உன் தியாக உணர்வு என் உள்ளத்தை உருக்குகின்றது. வேண்டாம் நான்தான் பலியாக வேண்டும். நீ எனக்குப் பின் அரசுகட்டிலேறி அரசு செய்" என்ருன்.

'என்னைப் பலியிடு, என்னைப் பலியிடு' என்று இருவரும் போட்டியிட்டார்கள். முடிவில் மன்னன், "மந்திரி, உனக்கும் எனக்கும் இந்த வாக்குவாதம் வேண்டாம். காளி தேவியையே கேட்போம். அவள் இட்ட கட்டளைப்படி செய்வோம்" என்று கூறினுன்.

"எம்பிராட்டி! உன் திரு முன் அடியேன் பலியாகத் திருவுளமோ? என் மந்திரி பலியாகத் திருவுளமோ? உன் திருவுளச் சம்மதப்படி செய்வோம். திருவுளம் இரங்கிப் பணித்தருள்" என்று பதமலர் பணிந்து நின்ருன் பார்த்திபன்.

"அறநெறி பிறழாத அரசனே! என் திருமுன் நீயும் பலியாகக் கூடாது. அமைச்சனும் பலியாகக் கூடாது. என் பின்னே ஒளிந்திருக்கின்ற பூசாரிதான் பலியிடத்தக்கவன்" என்று இடி முழக்கம்போல் காளியின் கட்டளை பிறந்தது. இதைக் கேட்ட பூசாரி நடுங்கியே போனுன்.

பூசாரி வெளிப்பட்டான். அவன் கண்களில் நீர் ஆருய்ப் பெருகியது. உடல் பதறியது. நாக் குழறியது.

"அடி படுபாவி! காளியாயி! உனக்குக் கருணையில்லையா? கண்ணில்லையா? எல்லா உயிர்கட்கும் நீ அன்னையல்லையோ? நான் மட்டுந்தான உனக்குப் பகைவன்? நாற்பது ஆண்டுகளாக உன்னைப் பூசித்தேனே! உன்னை நேசித்தேனே. என்னைப் பலியிடுமாறு கட்டளையிட்டனையே! இது நியாயமா? நெறியா? நீதியா?" என்று கூறிப் புலம்பினுன்.

காளிதேவி, "அப்பா பூசாரியே! என்னை நொந்து என்ன பயன்? 'பிறர்க்கின்னு முற்பகல் செய்யின் தமக்கின்ன, பிற்பகல் தாமே வரும்.' பொது மறையை நீ படித்ததில்லையா? எல்லாவுயிர்கட்கும் நான் தாய் என்பதை இன்றுதான் உணர்ந்தனையா? மார்கழி மாதத்தில் காலையில் தயிரன்னத்தை வயிறு புடைக்க உண்டு உனக்குக் காய்ச்சல் வந்தால், கோனுர் வீட்டில் கொழு கொழு என்று வளர்ந்த குழந்தை ஆடுகள் என்ன குற்றம் செய்தன? நீ பலியிட்ட ஆடுகள் உன்னைப் பலியிட அரசகுமாரனுகவும் அமைச்சன் குமாரனுகவும் வந்து பிறந்தன. வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினை யறுப்பான். செய்த வினை செய்தவனைச் சேரும். அதுதானே நியதி? நான் வினைகளைச் செய்தவன்பால் சேர்க்கின்றவள். என் மீது குற்றஞ் சாட்டலாமா? நெருப்பை உண்டவன் கரியைத்தானே கழிவான்? உன் வினையை நீ நுகர்தல் வேண்டும்" என்று அருள் புரிந்தாள்.

பூசாரி வாயடங்கி மனமடங்கித் தலைகுனிந்து நின்ருன். மன்னவன் வாளை வீசினுன். பூசாரி தலை தெறித்து வீழ்ந்தது. உடனே கலகல என மழை பொழிந்தது. அம்பிகையும் கருணை பொழிந்தாள்.

"அப்பனே! உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்" என்று அருள்புரிந்தாள்.

வேந்தன், "குற்றம் புரிந்த இந்தப் பூசாரியை மன்னித்து அவன் பிழைக்க அருள் செய். இதுதான் நான் கேட்கும் வரம்" என்று கூறினுன்.

அம்பிகை அருள் புரிந்தாள். பூசாரி எழுந்தான். அதுமுதல் கொலையும் புலையும் தவிர்ந்து அன்பு வழிபாடு செய்தான்.

'அவ்வினைக்கு இவ்வினை' என்ற திருஞான சம்பந்தருடைய அருள் திருவாக்கினை அன்பர்கள் கடைப்பிடித்தார்கள். அன்பு வழிபாடு செய்யத் தொடங்கினுர்கள். பலியிடும் கொடுமை நின்றது. எங்கும் அகிம்சை ஓங்கியது. கருணைவெள்ளம் தேங்கியது. கொலை நீங்கியது. ★

அனைவருக்கும் எமது
தீபாவளி வாழ்த்துக்கள்!

# ராசி

புதிய
ஸ்பெஷல் கலர்கள்

## ரூபி
## ஃபிளேம்

புதிய ஸ்பெஷல் டிசைன்கள்

## பாம்பீச்
## காண்டி
## ஸ்டிரைப்

அல்லது

## கட்டம்

பாம்பீச் அல்லது காண்டி ஸ்டிரைப்
அல்லது கட்டம் டிசைன் ராசி பட்டுப் புடவைகள்
ஒளி மிகுந்த ரூபி அல்லது ஃபிளேம்
நிறங்களில் கிடைக்கும்.

பனாரஸ் பட்டுப் புடவைகளும்
பல நூதன டிசைன்களில் கிடைக்கும்.

ஏர்கண்டிஷன்
வசதியுடன் கூடிய எங்கள் ஷோரூம்கள்.

ராதா சில்க் எம்போரியம்,
14, சன்னதித் தெரு, மைலாப்பூர், மதராஸ் 4.

ராதா சில்க்ஸ்,
தன் பில்டிங்ஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்-2.

ராதா சில்க் எம்போரியம்,
வெஸ்டர்ன் இந்தியா ஹவுஸ்,
ஸர் பிரோஸ்ஷா மேத்தா ரோடு, பம்பாய்-1.





# தீபாவளி வாழ்த்து!

## ஸ்டாண்டர்ட் ஹெரால்ட் மார்க்-III

*தயாரிப்பாளர்கள் :*
ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், சென்னை-2

STANDARD

*விநியோகஸ்தர்கள் :*
தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட, சென்னை-உதகை
யூனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்-1



FDSSM1036TM



# ராதே கோவிந்தா!

கி. வா. ஜகந்நாதன்

நாரதர் புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். தேவரிஷியாகிய நாரதரைச் சொல்லவில்லை. தமிழ்நாட்டு நாரதர் இவர். தாய் தகப்பனார் வைத்த பெயர் அனந்தராமன். இப்போது அது அடியோடு வழக்கொழிந்துவிட்டது. அவருக்கே நினைவு இருக்குமோ என்னவோ!

அவருக்கு நாரதர் என்ற பெயர் நிலைத்துப் போனதற்கு நாரதர் வேஷம் போட்டுப் பல ஆண்டுகள் நாடகங்களிலும் சினிமாவிலும் அவர் நடித்ததே காரணம். அவருடைய சாரீர வளமும் ஆஜானுபாகுவான வடிவமும் ஞாபகசக்தியும் முகமலர்ச்சியும் அந்த வேஷத்துக்கு அவரைவிடப் பொருத்தமானவர் யாரும் இல்லை என்று ஆக்கிவிட்டன. நாடகத்தில் நடித்துக்கொண்டிருந்த காலத்தில் ஆரம்பத்தில் நாரதர் அனந்தராமன் என்று அவரைக் குறிப்பிட்டார்கள். பிறகு அவ்வளவு நீளமான பெயர் வாயில் நுழையாமல் பொது மக்கள் நாரதர் என்று சுருக்கமாகவே அழைக்கலானார்கள். கலகம் பண்ணும் சில குண்டுணிகளை நாரதர் என்று கிராமங்களில் மக்கள் அழைப்பதுண்டு. அந்த மாதிரியாக அவருக்குப் பெயர் வரவில்லை. முழுக்க முழுக்க அவருடைய நடிப்பாற்றலைக் கண்டு தமிழுலகம் செல்லமாக எப்போதுமே அவரை அழைத்துப் பாராட்டும் பெயராக அது அமைந்துவிட்டது.

இப்போது அவர் படித்துக்கொண்டிருப்பது ஏதோ பழைய புராணக் கதையின் விளக்கம். இடையிலே அவர் தாமே சிரித்துக் கொண்டார். அவர் படித்த கதையில் அவர் சிரிப்பதற்கு என்ன இருந்தது? அக்கினி பகவானுக்குச் சப்தரிஷிகளுடைய மனைவிகளின் மேல் ஆசை உண்டாயிற்று. அந்த மோகத்தால் அவன் சோர்ந்து போனான். இதை அவனுடைய மனைவி சுவாகா தேவி அறிந்தாள். ''என்ன அக்கிரமம்?'' என்று முதலில் நினைத்தாலும் பதி பக்தியில் சிறந்தவளாதலால் அந்த எண்ணத்தை வளரவிடவில்லை. பக்தியோடு சாமர்த்தியமும் அவளுக்கு இருந்தது. தன் கணவனைப் பாபத்துக்கு ஆளாக்காமல் அவனுடைய ஆசையை நிறைவேற்ற வழி இருக்கிறதா என்று சிந்தித்தாள். கடைசியில் ஒரு வழி புலப்பட்டது. தானே ஒவ்வொரு ரிஷிபத்தினியின் வடிவத்தையும் எடுத்துக் கொண்டு தன் கணவனோடு அளவளாவி இன்பம் அடையச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தாள். அப்படியே செய்தாள். ஒவ்வொரு நாள் ஒவ்வொரு ரிஷிபத்தினியின் உருவத்தை எடுத்துக்கொண்டு அக்கினிக்கு இன்பம் அளித்தாள். ஏழாவது நாள் வசிஷ்ட மகா முனிவரின் பத்தினியாகிய அருந்ததியின் வடிவத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அவள் எவ்வளவோ முயன்றும் மந்திரங்களை ஜபித்தும் அவளால் அருந்ததியைப் போல மாற முடியவில்லை. அருந்ததியின் கற்பு நிலை அத்தகைய தென்று கதையை எழுதியவர் முடித்திருந்தார்.

அதைப் படித்தபோதுதான் நாரதர் சிரித்தார். இந்தக் கதையில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறதென்று கேட்கிறீர்கள்? அவருக்கு இந்தக் கதை பழையகால அநுபவத்தை எண்ணச் செய்தது. அதை நினைத்துச் சிரித்தார். அந்தக் காலத்தில்-அதாவது அவர் நாடகமேடை நடிகராக இருந்த காலத்தில் - அருந்ததி என்றே ஒரு நாடகம் போட்டார்கள். அதில் நாரதருக்கு வேலை இருந்தது. அவரே அந்த வேஷத்தைப் போட்டார். அருந்ததி வேஷம் போட்டவள் அந்தக் காலத்தில் மிகவும் பிரசித்தமாக விளங்கிய ரமணிபாய். ரமணிபாயின் தாய் ஒரு திருக்கோயிலில் தொண்டு புரிந்தவள். ரமணிபாய் பார்க்கச் செக்கச் செவேலென்று இருப்பாள். அழகியென்றால் சாமானிய அழகி அல்ல. அவளிடத்தில் பணக்காரர்கள் விட்டில் பூச்சிகளைப் போல வந்து விழுந்ததில் ஆச்சரியம் இல்லை. அவருக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சேலத்தில் அந்த நாடகக் குழுவை வருவித்து இரண்டு மாதங்கள் தொடர்ந்து நாடகம் நடத்தும்படி ஒரு ஜமீன்தார் ஏற்பாடு செய்தார். அவருக்கு நாடகக் கலையில் அத்தனை மோகம் என்பது அல்ல. ரமணிபாயின்மேல் அவருடைய திருக்கண்பார்வை சென்றது தான் காரணம். அந்த இரண்டு மாதங்களிலும் ரமணிபாய்க்குக் கிடைத்த ஆடைகளும் அணிகளும் இரண்டு தலைமுறைக்கு வரும். எல்லாம் அவளுக்கு அடிமையான ஜமீன்தார் அவள் திருவடிகளில் காணிக்கையாக வைத்தவை. இரண்டு மாதங்கள் நாடகக் கோஷ்டி சேலத்தில் தங்கியிருந்தாலும் நடு நடுவே சில நாட்கள் நாடகம் இராது. ஜமீன்தார் ரமணிபாயைத் தம் காரில் கூட்டிக்கொண்டு பங்களூருக்குப் போய்விடுவார். அந்த நாட்களில் மற்ற நடிகர்களுக் கெல்லாம் ஓய்வு.

இது சேலத்தில் நடந்தது. இப்படி வெவ்வேறு ஊர்களில் அவளுடைய கண் வலையில் வீழ்ந்தவர்கள் பலர். வியாபாரிகள், தொழில் முதலாளிகள், பேராசிரியர்கள், கோயில் தர்மகர்த்தாக்கள் இப்படிப் பல பேருடைய உள்ளத்தை அவள் கவர்ந்து தேனில் சிக்கிய ஈயைப் போல வந்து சரணடையும்படி செய்துவிட்டாள்.

அருந்ததி நாடகத்தில் அவள் தான் அருந்ததி. அக்கினியின் மனைவி, தூய்மையே வடிவானவள், எவ்வளவு முயன்றும் போட முடியாத வேஷத்தை ரமணிபாய் போட்டாள்! இதை நினைத்தபோதுதான் நாரதருக்குச் சிரிப்பு வந்தது.

நாரதர் பத்து ஆண்டுகளுக்கு மேல் நாடகத்தில் நடித்திருக்கிறார். பாலர்களே நடித்து வந்த மார்க்கண்டேய நாடக சபையில்தான் முதல் முதலாக அரிதாரத்தைத் தடவிக் கொண்டு அவர் மேடைமேல் ஏறினார். அந்த முகூர்த்தம் நல்ல முகூர்த்தமாக இருந்தது. சில சில்லறைப் பாத்திரங்களாக நடித்தார். அவருடைய சாரீரம் நன்றாக இருந்ததைக் கண்டு அதிகமாகப் பாட்டுப் பாடும் பாத்திரங்களை அவருக்குக் கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் நாடகத்தில் எல்லோருமே ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தடவை பாடுவார்கள் அல்லவா? வெவ்வேறு பாத்திரங்களாக நடித்துக் கடைசியில் நாரதர் வேஷத்தில் அவர் நிலைத்துவிட்டார். கையில் தம்புராவைப் பிடித்துக் கொண்டு ''நாராயண! நாராயண!'' என்று அவர் மேடைமேல் தோன்றிவிட்டாரானால் நாடகம் பார்க்க வந்த ஜனக் கூட்டத்தில் ஒரே ஆரவாரம் எழும். அவர் கையில் தம்புராத்தான் இருக்கும். புராணத்தில் வரும் நாரதர் மகதி என்னும் வீணையை ஏந்தி வருவார். நாடகத்து நாரதர் அந்தத் தொல்லைக்குப் போவதில்லை. நாரதர் பாட ஆரம்பித்தால் சபையினர் மூச்சுக்கூட விடமாட்டார்கள். அப்படிப் பாடுவார். நாளடைவில் அவர் நன்றாக ஆடவும் பழகிக் கொண்டார். காலில் சலங்கையைக் கட்டிக் கொண்டு பஜனை பண்ணியபடியே நடனமாடுவார். அந்த நடனத்திலும் அவருக்குப் பெயர் உண்டாயிற்று.

நாடக மேடையிலிருந்து அவர் சினிமா உலகத்துக்குத் தாவியபோது அவரை வரவேற்க ஆயிரங் கைகள நீண்டன. நாடக மேடையில் பெயர் வாங்கினவர்கள் எல்லாருமே சினிமாவில் புகழடைந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் நாரதர் நாடக மேடையைவிடச் சினிமாவில் அதிகமாக ஜொலித்தார். அவர் பாட்டும் நடனமும் எல்லாரையும் கவர்ந்தன. படப் பிடிப்பாளர்கள், அவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றே நாரதர் வராத கதைகளிலும் நாரதரை எப்படியாவது நுழைக்கும்படி சொன்னார்கள். கதாசிரியர்கள் மூலக் கதையை எப்படி எழுதினாலும், அதை மாற்றி அதன் படைப்பாளிக்கே இது நம் கதைதானா என்று சந்தேகிக்கும்படி செய்யும் சினிமாக் கதாசிரியர்கள் இருக்கிறார்களே! நாரதருக்கா இடம் கிடைக்காது?

நாரதருடைய கண்டமும் காலும் பலமாக இருக்கும் வரையில் அவருக்கு நீடித்து அதிர்ஷ்டம் அடித்துக் கொண்டே இருக்கும் என்பது உறுதியாயிற்று. சினிமாவில் அவர் ஓகோ என்று சம்பாதிக்காவிட்டாலும் இரண்டு வீடுகளும் பத்து ஏகராப் பூமியும் வாங்கும் அளவுக்கு அவருடைய பொருள் நிலை உயர்ந்தது.

புத்தகம் படித்துக்கொண்டிருந்தவர் மறுபடியும் புத்தகத்திலிருந்து முகத்தை அண்ணாந்து மோட்டு வளையைப் பார்த்தார். அவர் முகம் தீவிரமான சிந்தையில் ஆழ்ந்த குறிப்பைக் காட்டியது; அங்கே லேசாக ஒரு கருமைப் படலம் படர்ந்தது போல இருந்தது. எதையோ நினைத்து இரங்கும் பாவம் தோற்றியது.

ஆம்! இப்போது அவர் பச்சாத்தாப உணர்வில் மூழ்கித் தத்தளித்தார். அவர் போட்ட வேஷம் முனி புங்கவரும் மகா பக்தரும் புனிதமானவருமான நாரதருடைய வேஷம். அவர் போட்ட வேஷத்துக்கும் வாழ்க்கைக்கும் ஏதாவது சம்பந்தம் இருந்ததா? அருந்ததி வேஷம் போட்ட ரமணிப்பாயை எண்ணிச் சிரித்தாரே! அவர் நிலை என்ன?

நாடகத்தில் நடித்தபோது அவருக்குக் கொஞ்சம் குடிப் பழக்கம் இருந்தது. யாரோ ஒரு பணக்காரர் அவரிடம் மிகவும் அன்பு வைத்துப் பழக்கம் செய்து வைத்தார். ஆனால் அதில் அவர் அதிகமாக ஈடுபடவில்லை. நாடகமாடாத நாட்களில் சிறிதளவு அதை அநுபவிப்பார். சினிமா உலகத்துக்கு வந்த பிறகு தான் அவருக்குப் பெண்களின் பழக்கம் ஏற்பட்டது. சினிமா வில் நல்ல பெயரும் பணமும் பெறுகிறவர்களுக்கு வேண்டாமலே இந்தப் பழக்கம் தானே வந்து சேர்ந்துவிடும் என்பதை அவர் அநுபவத்தில் அறிந்தார். பலர் அவருடைய இனிய சாரீரத்தில் மயங்கி அடிமைப்பட்டார்கள்.

இப்போது அவர் உள்ளத்தில் ஓடிய நிகழ்ச்சி இதுதான். வைகுண்டத்தில் திருமாலும் திருமகளும் வீற்றிருக்கிறார்கள். நாரத முனிவர் அங்கே வருகிறார். நாராயணனுடைய நாம சங்கீர்த்தனம் செய்கிறார். திருமாலும் திருமகளும் அவரை அன்புடன் விசாரித்து ஒரு வேலை செய்ய வேண்டுமென்று ஆக்ஞாபிக்கிறார்கள். திருமகள் அவரை ஆசீர்வாதம் செய்கிறாள். ''வத்ஸ! இந்தக் காரியத்தினால் நீ பூலோகத்தில் சிதறிப்போன தர்மத்தை நிலை நாட்டப் போகிறாய். ஒரு பதிவிரதையின் கற்பைக் காப்பாற்றப் போகிறாய்'' என்கிறாள்.

நாரதர், ''தாயே! தங்கள் ஆசீர்வாத பலத்தால் இந்தக் கைங்கரியத்தை ஏற்றுக் கொள்கிறேன். மகா மாதாவாகிய தங்கள் அருள் இருக்கும் போது எனக்கு என்ன குறை?'' என்று சொல்லிப் புறப்படுகிறார். அப்போது அவர் பாடும் பாட்டும் ஆடும் நடனமும் பார்ப்பவர்கள் உள்ளத்தில் பக்தியையும் பரவசத்தையும் மூட்டுகின்றன.

இந்தக் காட்சியுள்ள சினிமா முதல் முதலில் அரங்கேறியபோது முதலாளி முக்கியமான பாத்திரங்களை அழைத்திருந்தார். நாரதரும் போயிருந்தார். மேலே சொன்ன காட்சி வரும் போது எல்லாரும் உருகிவிட்டனர். ''நாரதரே! உங்களுக்கு இதுவரையில் கிடைக்காத வெற்றி இது'' என்று சினிமா டைரெக்டர். முதலாளி எல்லாரும் ஒரு முகமாகப் பாராட்டினார்கள். திருமகளாக நடித்த மலர்மகள் - அவள் இயற் பெயர் என்னவோ தெரியாது - தன் கடைக்கண்ணால் தன் பாராட்டைத் தெரிவித்தாள். போகும்போது, ''காலைக்குக் காரை அனுப்புகிறேன். நாளை முழுவதும் என்னுடன் இருக்க வேண்டும்'' என்று இரகசியமாகக் காதோடு காதாகச் சொல்லி விட்டுப் போனாள். நாடக மேடையில் மகாமாதாவாக இருந்த அவளை மறுநாள் சந்தித்தார். சந்தித்தது மட்டுமா? அன்று அவர்கள் இருவரும் இருந்த நிலையை இப்போது நினைக்கிற போது உடம்பு குலுங்குகிறது. எதையோ மிதித்து விட்டது போன்ற அருவருப்பு உண்டாகிறது. மகாமாதாவுக்கும் வத்ஸனுக்கும் உள்ள தொடர்பா அது?

இப்போது அதை நினைக்கிறபோது தான் அவர் முகத்தில் அந்தக் கருமை படர்ந்தது. ''சே! இந்த நினைவெல்லாம் இப்போது எதற்கு?'' என்று கையை ஆட்டினார். அந்த நினைவு என்ன கொசுவா, கையை அசைத்து ஓட்டுவதற்கு?

இப்போது நாரதர் எந்த நிலையில் இருக்கிறார் என்று இன்னும் சொல்லவில்லையே!

இப்போது அவர் ஒண்டிக் கட்டை. அவர் ஒரு பெண்ணை மணம் புரிந்து கொண்டார். சினிமாப் பழக்கத்தால் வேறு ஒரு பெண்ணின் நீண்ட தொடர்பும் ஏற்பட்டது. இயற்கையான குடும்பமும் செயற்கையான குடும்பமும் ஆக இரண்டு குடும்பங்களுக்குத் தலைவரானார். பிற பெண்களின் தொடர்பு ஏற்பட்டாலும் அக்கினி சாட்சியாகக் கைப்பற்றிய சீதையிடம் அவருக்குத் தனியே ஓர் அன்பு இருந்தது. அதைப் பக்தியென்றே சொல்ல வேண்டும். அவளுடைய தூய்மையையும் பதி பக்தியையும் அவர் அநுபவத்தில் உணர்ந்தவர். சினிமா உலகத்தில் அவர் எத்தனையோ பெண்களைப் பார்த்தவர். வெளியுலகத்து நாகரிக நாரீமணிகளைப் பற்றிய இரகசியமும் அவருக்குத் தெரியும். அதனால்தான், தம்முடைய ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கட்டின கணவனே தெய்வம் என்று இருக்கும் சீதையை அவர் நன்றாக மதிப்பிட முடிந்தது. அவரும் அவளைத் தெய்வமாகவே மதித்தார். அந்தத் தெய்வம் கருணையினால் தம் பிழைகளைப் பொறுத்தருள்வதாக அவர் எண்ணவில்லை. அந்தத் தெய்வத்தின் கண்களில் தம் பிழை ஒரு சிறிதும் படுவதே இல்லை என்பதை நெருக்கத்தில் அறிந்த போது அவர் அந்த அதிசயத்தில் சிக்கித் திணறினார். தம்முடைய வாழ்க்கையில் ஏதாவது ஒன்று நல்லது, புண்ணியச் செயல் உண்டென்றால் சீதையைக் கைப்பிடித்ததுதான் என்று அவர் அந்தரங்க சுத்தியாக எண்ணினார்.

அந்தப் பத்தினித் தெய்வம் தனக்குப் பின் தன் சின்னமாக எதையும் நிறுத்தி வைக்காமல் மறைந்து விட்டது. அதற்கு முன்பே நிரந்தரமாகத் தொடர்புகொண்டிருந்தவளும் அவரை விட்டுப் பிரிந்து போய் விட்டாள். அவருக்கும் வயசு ஏறிவந்தது.

சினிமா உலகத்தில் முன்போலப் புராணக் கதைகளுக்குக் கிராக்கி இல்லை, ஆகவே நாரதருக்கும் பழைய கிராக்கி யில்லை. நல்ல பாட்டுப் பாடுவதற்கே அவசியமில்லாமற்போயிற்று. நாரதருடைய பட்சி உறங்கும் நிலைக்கு வந்துவிட்டது.

அவர் சாமர்த்தியசாலி. ஏதோ ஒரு வகையில் பணத்தைச் சேமித்து இரண்டு வீடும் சிறிது நிலமும் வாங்கி விட்டார். அவருக்கு வாழ்நாளைக் கடத்த இது போதும்.

எத்தனைதான் சினிமா உலகத்துப் பொய் வாழ்வில் அவர் நடையிட்டாலும் அவர் போட்ட வேஷமும், அதற்காக அவர் பாடம் பண்ணிய உரையாடல்களும், மனனம் பண்ணிய பக்திச் சுவை மிகுந்த கீர்த்தனங்களும் அவரை அறியாமலே அவர் உள்ளத்தில் படிந்தன. தம் கண்முன்னே உலகம் மாறி வருவதை அவர் கண்டார். தாம் பழகிய உலகத்தின் அவலங்களையும் தாம் போட்ட வேஷத்தினால் உணர்த்தப்படும் லட்சியங்களையும் எண்ணிப் பார்க்கும் சந்தர்ப்பங்கள் பல அவருக்கு வாய்த்தன. அவருடைய செயற்கைக் குடும்பத் தலைவி பிரிந்தபோது கொஞ்சம் ஆழமாகவே சிந்தித்தார். பிறகு அவருடைய தர்ம பத்தினி மறைந்த போது அவருடைய சிந்தனை திசை திரும்பியதென்றே சொல்ல வேண்டும். சீதை வாழ்ந்த போதே அவள் பெருமையை உணர்ந்திருந்த அவருக்கு அவள் மறைந்த பிறகு அவளிடம் இருந்த மதிப்புக் கோடி மடங்காகிவிட்டது. 'இனிமேல் நாம் செய்த பாபங்களுக் கெல்லாம் மிஞ்சி யிருக்கும் வாழ்வுக் காலத்தில் பரிகாரம் தேடவேண்டும்' என்ற உறுதியான தீர்மானத்துக்கு வந்தார்.

கடவுள் அவருக்கு எந்தப் பந்தத்தையும் விட்டு வைக்கவில்லை. வாழ்வதற்குப் போதுமான நிலமும் வீடும் இருக்கின்றன. அவருடைய வீடுகளில் ஒன்று புதியது; மற்றொன்று பழையது. பழையதைப் புதுப்பித்துச் 'சீதா பவனம்' என்று பெயர் வைத்தார். அவருக்குத் தமையனார் மகன் ஒருவன் இருந்தான்; ஏதோ ஒரு வேலையில் இருந்தான். அவனைக் குடும்பத்தோடு சீதா பவனத்தில் குடியேற்றித் தாமும் அவனுடன் வாழலானார்.

நல்ல புத்தகங்களைப் படிப்பது, சோலையில் குளங்களுக்குச் செல்வது, தமக்குத் தெரிந்த கீர்த்தனங்களைப் பாடுவது என்று பொழுது போக்கினார். அவருடைய பூர்வாசிரம வேஷப் பொருள்களில் ஒரு தம்புராவை மாத்திரம் பாதுகாத்து வைத்திருந்தார். காலையில் எழுந்து நீராடிக் கிருஷ்ணன் படத்தின் முன் உட்கார்ந்து ஒரு மணி பாடுவார். விசேஷ நாட்களில் இரவிலும் பாடுவார். சிலர் வந்து கேட்பார்கள்.

''நாரதர் எப்படி மாறிவிட்டார்!'' என்று யாவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

இப்போதெல்லாம் அவர் கிருஷ்ணனிடம் ஈடுபட்டு அஷ்டபதி, ராஸ கீதம் முதலியவற்றை மிகுதியாகப் பாடினார். புதிதாகப் பல பாடல்களைக் கற்றுக் கொண்டார், அவற்றைப்

பாடும்போது அவருக்கு உண்டான மன நிறைவை அவர் இதற்கு முன்பு என்றுமே அடைந்ததில்லை.

அவ்வப்போது தல யாத்திரையும் தீர்த்த யாத்திரையும் செய்து வந்தார். ஒரு முறை பிருந்தாவனம் போய் வந்தார். இப்போது எங்கே யாவது பஜனை நடந்தால் அங்கே போய் விடுகிறார். ஒரு வேளை உணவு மாத்திரம் உண்கிறார். ரஸவாதத்தினால் இரும்பு தங்கமாக மாறுவது போல அவர் மாறிக் கொண்டு வந்தார். பழைய காலத்து வேஷம் இந்தக் காலத்தில் பக்தி உணர்ச்சியாக மாறி வந்தது.

தலங்களுக்கு யாத்திரை செய்து கொண்டே மிச்சம் இருக்கும் தம்முடைய வாழ்நாளைக் கழித்துவிட வேண்டும் என்று எண்ணினார். போகும் இடங்களில் தமக்கு வேண்டிய சௌகரியங்கள் கிடைக்க வேண்டுமே என்ற கவலை. சென்னையிலே இருக்கவும் பிடிக்கவில்லை.

சென்னையில் அவர் திருவல்லிக்கேணியில் இருந்தார். மயிலாப்பூரில் பாகவத கோஷ்டிகளையெல்லாம் கூட்டி மகா பாகவத சம்மேளனம் என்று ஒரு பஜனைசபையினர் நடத்தினார்கள். அதற்கு வட நாட்டிலிருந்தும் பஜனைக் கோஷ்டிகள் வந்திருந்தன. பிருந்தாவனத்திலிருந்து ஸ்ரீபுருஷோத்தம கோஸ்வாமி மகராஜ் அவர்கள் வந்திருந்தார். அவருடன் பக்தி ரஸமான நாடகங்களை நடிக்கும் கோஷ்டியொன்றும் வந்தது. அந்தக் கோஷ்டி முழுவதும் இளஞ்சிறுவர்கள். ஒவ்வொரு நாளும் பஜனை, உபந்நியாசம் முற்பகலிலும் பிற்பகல்களிலும் நடந்தன. இரவு கிருஷ்ண சைதன்யர் நாடகம், கண்ணன் பால லீலைகள், ராஸ லீலை முதலிய நாடகங்கள் நடைபெற்றன. கூட்டமான கூட்டம். ஆண்களும் பெண்களும் பஜனை முதலியவற்றில் ஈடுபட்டு மகிழ்ந்தார்கள். நாடகத்துக்குத்தான் பிரம்மாண்டமான கூட்டம்: எள் போட இடம் இல்லை. கூட்டம் எங்கும் நிரம்பி வழிந்தது. எட்டு மணிக்கு நாடகம் ஆரம்பித்தால் முடிய இரவு இரண்டு மணியாகும். குழந்தைகள் எவ்வளவு உருக்கமாக நடித்தார்கள்! இத்தனைக்கும் எல்லாம் ஹிந்திப் பேச்சு. நடுநடுவிலே பாட்டு. நாடகக் கோஷ்டிக்குத் தலைவர் பின்பாட்டுப் பாடும்போது அவர் குரல் கேட்டவர்களை எங்கேயோ தூக்கிச் செல்லும். கண்ணனும் ராதையும் கோபிகளும் வந்து ராஸ லீலை நடத்தினார்கள். அது நாடகமா? இல்லை, இல்லை. சாட்சாத் கண்ணனே வந்தது போலத்தான் தோன்றியது. கல் நெஞ்சமும் உருகக் கூடிய காட்சி!

காட்சி முடிந்ததும் கோஸ்வாமி அவர்கள் தீபஹாரத்தி செய்வார். அமைதியாகக் கால்களை மெல்ல மிதித்துத் தென்றல் அசைவது போல் அசைந்து ஹாரத்தி எடுக்கிறதைப் பார்க்கும்போது பார்த்தவர் உள்ளம் அவருடைய திருவடியைப் பற்றிக்கொண்டு மெல்ல அசையும். பிறகு அவர் வீற்றிருக்கும் குழந்தைக் கண்ணனையும் ராதையையும் கீழே விழுந்து வணங்குவார். அவர்கள் கால் பட்ட இடங்களில் புரளுவார். அப்போது எல்லோருடைய உள்ளமும் புல்லரிக்கும். அதோடு நிற்பாரா? வணங்கி எழுந்து பணிந்து குனிந்து கண்ணனுடைய செந்தாமரையின் அகவிதழ் போன்ற திருவடிகளை மெல்ல எடுத்துத் தம் தலைமேல் வைத்துக் கொள்வார். அப்படியே ராதையின் திருவடிகளையும் தலைமேல் வைத்துக்கொள்வார். அதன்பின் அவர் முகத்தைப் பார்க்க வேண்டும். ஆனந்தம் துளும்பி வழியும்; கண்ணில் ஒரு மதமதப்பு ஒளிரும்; முகத்திலே சாந்தமும் பக்தியுணர்வின் மெல்லிய அலைகளும் தவழும்.

ஒரு நாள் பார்த்தவர்கள் என்ன வேலை இருந்தாலும் மற்ற நாட்களிலும் ஓடிவந்து விடுவார்கள். நாரதரும் இந்தக் கூட்டத்துக்கு வந்தார். பஜனையை அனுபவித்தார். சொல்ல மறந்து விட்டேனே! இப்போது அவர் தாடி வளர்த்துக் கொண்டு விட்டார். நாடக நாரதராக இருந்த போது மழுங்க முகக்ஷவரம் செய்து கொண்டிருந்தார். அவரே இப்போது தாடி வளர்க்கிறார்.

இந்த நாடகத்தைப் பார்த்த அவர் பிருந்தாவனவாசியாகவே ஆகிவிட்டார். ராஸ லீலை நடந்த அன்று நாரதரால் உணர்ச்சியை அடக்கவே முடியவில்லை. கோஸ்வாமி குழந்தைகளைப் பணிந்து எழுந்தவுடன் அவர் மேடைக்கு ஓடினார். அவரும் பணிந்தார். குழந்தைகளின் திருவடிகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார். கோஸ்வாமியின் காலில் விழுந்தார். மேடை முழுவதும் உருண்டு புரண்டார். கூட்டத்தில் இருந்தவர்கள், "நாரதர்! நாரதர்!" என்று பேசிக்கொண்டார்கள்.



எழுந்த நாரதர் அங்கே மூலையில் இருந்த தம்புராவை எடுத்துக் கொண்டார். "ராதே ராதே ராதே ராதே ராதே கோவிந்தா — பிருந்தாவன சந்த்ரா — அநாதநாதா தீன பந்தோ ராதே கோவிந்தா!" என்று பாடியபடியே நடனமாடினார். கூட்டம் முழுவதும் மின்சார அதிர்ச்சி பெற்றது போல எல்லாம் மறந்து பார்த்துக் கொண்டிருந்தது. 'சாந்தமும் புன் முறுவலும் தவழும் தம் முகத்தை நாரதர் பக்கம் திருப்பிய கோஸ்வாமி மகராஜ் கண்ணின் குளிர்ந்த பார்வையை அவர்மேல் ஓட விட்டுக் கையை அமைத்துக் காட்டினார். நாரதர் மறுபடியும் அவர் காலில் விழுந்து எழுந்தார். விம்மி விம்மி அழுதார். கோஸ்வாமி மகராஜ் நாரதரைத் தழுவிக் கொண்டு கண்ணன் நீட்டிய பூ மாலையைப் போட்டார். நாரதர் வைகுண்டத்தில் யாரும் பெருத பேரின்பத்தை அநுபவித்தவரைப் போலானார். அவர் முகத்தில் புதுத் தேசு பொலிந்தது. தம்முடைய பழைய மாசுகளையெல்லாம் புனித கங்கையில் கழுவி விட்ட உணர்வு ஏற்பட்டது. அவர் உண்மை நாரதராகவே — கண்ணனை உள்ளக் கோயிலில் பிரதிஷ்டை செய்து கொண்டவராகவே — ஆகிவிட்டார்.

இப்போது சிதா பவனத்தில் பஜனைக்காகவே ஒரு மண்டபத்தைக் கட்டிவிட்டார் நாரதர். வெளியூர்களுக்கு யாத்திரை செய்வதா, சென்னையில் இருப்பதா என்று தடுமாறிக்கொண்டிருந்த அவருக்கு அந்தச் சங்கடம் தீர வழி ஒன்று கிடைத்து விட்டது. நன்றாகப் பாடும் அழகிய இளஞ் சிறுவர் சிலருக்குப் பஜனை சொல்லி வைத்திருக்கிறார். கண்ணனுடைய கதைகளை நாடகமாக நடிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார். அவரே நாடகத்தை நடத்தும் டைரக்டர். தம்புராவுடன் ஓரத்தில் நின்றபடி பின்பாட்டுப் பாடுவார். அதைக் கேட்டவர்கள் அவருடைய குரலில் ஒரு புதிய நயம், தெய்விக உணர்ச்சி ஏறியிருப்பதை உணர்கிறார்கள். நாடகத்தின் பின் சாட்சாத் கண்ணனைத் தரிசிப்பது போலவே எண்ணிக் குழந்தைகளின் காலில் விழுந்து வணங்குவார். ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமை ஏதாவது ஒரு நாடகம் நடக்கும். அதில் உண்மை நாரதராக மாறிய அவருடைய கம்பீரமான குரல், "ராதே ராதே ராதே ராதே ராதே கோவிந்தா — பிருந்தாவன சந்த்ரா —அநாதநாதா தீன பந்தோ ராதே கோவிந்தா!" என்று கணீர் என்று தேனின் சிதறலைப் போல, தென்றலே இசை பாடுவது போல, எல்லாருடைய செவியிலும் புகுந்து உள்ளத்தைப் புனிதமாக்கும். ★

## PACKAGING OFFERS PROTECTION

Package your products in corrugated Boards and Boxes and ensure against damage of valuable goods in storage as well as in transit.

*COMMENCING PRODUCTION SHORTLY*

**BOARDS & BOXES**

**Works: F.A.I, Industrial Estate, Ambattur, Madras-58**

**Office Address: P. B. No. 604, Mylapore, Madras-4**

---

## Give a spurt to your sales

Every article today, ranging from capsules, and cosmetics to a large variety of consumer products have to be packed in Cartons for attractive shelf display and effective packaging. Attractively designed and printed cartons will improve your sales.

We design and manufacture Folding colour Cartons.

**Commencing Production Shortly**




# CARTONS & CONTAINERS

Works: F.B/1 INDUSTRIAL ESTATE - AMBATTUR - MADRAS-58

**Correspondence Address: 4 Warren Road, Madras-4**

# பிடிக்கும் —

**ஆண்டவன் ஒருவன்தான் விருப்பு வெறுப்பு இல்லாதவன்; திருவள்ளுவர் சொல்வதுபோல 'வேண்டுதல் வேண்டாமையிலான்'. மனிதர்கள் யாராயிருந்தாலும் அவர்களுக்குச் சில விஷயங்களில் ஆழ்ந்த வெறுப்பு இருக்கும்; சிலவற்றில் அபாரமான விருப்பம் இருக்கும்.**



**திருமுருக கிருபானந்தவாரியார்**

துன்பத்தால் துடிக்கும் மக்களுக்கு உதவி செய்வதுதான் பிடிக்கும். அவ்விதம் உதவுவதே சிறந்த வழிபாடென நான் கருதுகிறேன்.

உலோபத்தனமும் நேர்மையற்ற செயல்களும் பிடிப்பதில்லை. எண்ணற்ற நற்குணங்களை உலோபகுணம் ஒன்றே அழித்துவிடும்; பல பேர்கள் சேர்ந்து அழிக்கவேண்டிய வளமான வனத்தைத் தாடகை ஒருத்தியே அழித்து விட்டாள் என்று கம்பன் கூற வில்லையா?



**சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள்**

பெண் குழந்தைகளுக்கு நல்லறிவு புகட்டி, அவர்கள் நல்ல முறையில் வளர உதவும் ஆசிரியையாகப் பணி யாற்றுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

எனக்கு அறவே பிடிக்காதது திரைக்கானம். (முருகன் பாடல்கள் விலக்கு.)



**ஜி. டி. நாயுடு**

சித்த வைத்தியமும் மூலிகைகள் கலந்த உணவும் நான் விரும்புபவை. கடினமான உழைப்பை நான் மிகவும் விரும்புகிறேன்.

சினிமாவும் சிகரெட்டும் இளைஞர்களைப் பாழ்படுத்துகின்றன. வரிகள் (வருமான வரியும் விற்பனை வரியும்) தொழில்களின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. எனவே இவை எனக்குப் பிடிக்காதவை.



**டி. கே. சண்முகம்**

எனக்குப் பிடித்தமானது நாடகக் கலை. குறிப்பாக, நாடகங்களில் நடிப்பதும் நாடகங்கள் தயாரிப்பதுமே நான் மிகவும் விரும்புபவை.

எனக்குப் பிடிக்காதது: நம் தமிழ்ப் பெண்கள் வட இந்தியப் பெண்களைப் போல் உடை யணிவது. திரைப் படங்களில் நம் நடிகைகள் இறுகலான உடையணிந்து நடிப்பதும் எனக்கு அறவே பிடிக்காது.



**பெரியார் ஈ. வே. ராமசாமி**

பிடிக்கும்: சர்வாதிகாரம்.

பிடிக்காது: ஜனநாயகம்.



**திருமதி பத்மினி**

பிடிக்கும்: நாட்டியம்.

பிடிக்காது: பொறுமை;

# பிடிக்காது!

பல துறைகளில் புகழ்பெற்றவர்கள் சிலரை அணுகி அவர்களுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காதது என்று கேட்டோம். அவர்கள் சிறிதும் வெறுப்பு இல்லாமல் விருப்போடு பதில் கூறினர்கள். அவர்கள் கூறியவை இதோ!



டாக்டர் மு. வரதராசனர்

நான் மிகவும் விரும்புவது காந்தியடிகளின் நெறி. காரணம்: மக்கள் தொண்டில் தெய்வ ஒளி கண்டதனல்.

நான் வெறுப்பது: இக்காலத்துத் தேர்தல் முறை. காரணம்: நமது பண்பாட்டை அடியோடு அழித்துவிடுவதனல்.



'சோ' (எஸ். ராமஸ்வாமி)

நண்பர்களுடன் அரட்டையடிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். அரசியலிலிருந்து அவரவர் சொந்தப் பிரச்னைகள்வரை, நெருங்கிய நண்பர்களுடன் பேசித் தீர்ப்பதில் இருக்கும் இன்பம் எனக்கு வேறு எதிலும் கிடைப்பது இல்லை.

சதா நண்பர்களுடன் சேர்ந்து அரட்டை அடிப்பவர்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது.



குமாரி ஜயலலிதா

பிடிக்கும்: கல்வி.

பிடிக்காது: காக்காய் பிடிப்பவர்கள்.



எம். பக்தவத்சலம்

அரசியல் நேர்மையும் தேசிய உணர்வுமே நான் பெரிதும் விரும்பிப் போற்றுபவை.

பிடிக்காது: உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது.



செம்பை வைத்தியநாத பாகவதர்

குருவாயூரப்பனைத்தான் எனக்கு மிகவும் பிடிக்கும். பகவானை விடப் பிடித்தமானது என்று வேறு என்ன இருக்க முடியும்?

பகவானிடம் பக்தியில்லாதவர்களை எனக்குப் பிடிக்காது.



ம. பொ. சிவஞானம், எம் எல்.ஏ.

பயனுள்ள எதையாவது நாட்டுக்காகச் செய்துகொண்டே இருத்தல் வேண்டும். தொண்டு செய்வதன் மூலம் கடவுள் அருளைப் பெறுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன்.

நாத்திகம் எனக்குப் பிடிக்காது. நாத்திகம் பேசுகிறவர்களுடன் எந்த விதச் சமரசம் செய்து கொள்வதும் என்னல் முடியாது. ஒன்றும் செய்யாமல் வாய்ப்பேச்சுப் பேசுவது எனக்கு அறவே பிடிக்காது.

**பத்மஸ்ரீ சிவாஜி கணேசன்**

நம் தமிழ் மொழியில் ஒரு சிறந்த திரைப்படம் தயாரித்து அதன்மூலம் உலகமெல்லாம் என்னை அறிந்து கொள்ள வேண்டுமென்பதை நான் மிகவும் விரும்புகிறேன்.



கலைத்துறையில் இருந்து கொண்டு செய்யாததையும் செய்ய முடியாததையும், 'செய்தேன்', 'செய்ய முடியும்' என்றெல்லாம் சொல்வது எனக்குப் பிடிக்காது. ஒரு கலைஞன், 'மக்களுக்காகவும் கலைக்காகவுந்தான் நான் வாழ்கிறேன்' என்று விளம்பரத்துக்காகச் சொல்லுவதும் எனக்குப் பிடிக்காது.



**கலைஞர் மு. கருணாநிதி**

அரசியலில் இருந்துகொண்டு மாற்றாரை மதிக்கும் பண்பு எனக்கு மிகவும் பிடிக்கும்.

மாற்றாரை மதிக்கப் பழகிக் கொள்ளாத தன்மை நான் அறவே வெறுப்பது. 'எனக்கு எல்லாம் தெரியும்' என்று கூறிக் கொள்பவனைவிட, 'உனக்கு என்ன தெரியும்?' என்று கேட்பவன் மிகவும் வெறுக்கத்தக்கவன்.



**ராஜாஜி**

இக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது.



**எஸ். நாராயணஸ்வாமி, சென்னை ஷெரீப்**

பிரயாணம் செய்வதென்றால் எனக்கு மிகுந்த ஆசை. அங்கங்கேயுள்ள அரிய கலாசிருஷ்டிகளையெல்லாம் கண்டு ரசிக்கும் வாய்ப்புக் கிட்டுமல்லவா? உதாரணமாக, நம் நாட்டுக் கோயில்களின் இணையற்ற கலையழகைக் கண்டு இன்புறுவது ஒரு சிறந்த அநுபவம்.

அந்தக் காலத்தில் நாங்கள் அதைச் செய்தோம், இதைச் செய்தோம், இன்று எல்லாவற்றிலும் தரம் குறைந்து விட்டது என்றெல்லாம் சிலர் அங்கலாய்க்கிறார்களே - அது எனக்குப் பிடிக்கவில்லை. அப்படிக் குறை கூறுகிறவர்கள், இன்றுள்ள பிரத்தியட்ச நிலைமையை நன்கு உணரவில்லை; இன்றைய தலைமுறையினரின் தேவைகளையும் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் அறிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. ஆசார சீலர்களைப் போல வெளி வேஷம் போடுகிறவர்களிடம் எனக்கு நம்பிக்கையில்லை. இவர்களைவிட நாஸ்திகர்களே மேல் என்றே கூறுவேன்.

**டாக்டர் வே. ராகவன்**

உண்மையான அறிவும் அநுபவமும் ஏற்பட்டால் கடவுளை அறிகிறோம். அறிவும் அநுபவமும் வளர வளர அழகினை உணரும் சக்தி அதிகரிக்கிறது. அறிவும் அநுபவமும் முதிர்ந்த நிலையிலே எல்லாமே அழகாகத் தோன்றுகிறது. 'ததோ ந விஜுகுப்ஸதே'. அதற்குப் பிறகு, பிடிக்காததோ அருவருக்கத்தக்கதோ எதுவும் இல்லை. 'ஸர்வம் ப்ரியம் பவதி' என்ற உபநிஷத் வாக்கியத்துக் கேற்ப, எல்லாமே பிடித்ததாக ஆகிவிடுகிறது.



எது தவறோ, எது விகாரமானதோ அதெல்லாம் பிடிக்காது.



**சி. சுப்பிரமணியம்**

நான் மாணவனாக இருந்த காலத்திலேயே, காந்தியடிகள் காட்டிய வழி என்னை மிகவும் கவர்ந்தது. தன்னலம் இல்லாமல், பிறர் நலத்துக்காகத் தியாகம் செய்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன். என் அரசியல் வாழ்வில் மட்டுமல்ல, தனி வாழ்க்கையிலும் இதைக் கடைப்பிடிப்பதனால் மன அமைதியும் இன்பமும் பெறுகிறேன்.

எந்தத் துறையிலும் சுயநல அடிப்படையில் பணியாற்றுவது எனக்குப் பிடிக்காது. ★



# புகழும் விளம்பரமும்

அகிலன்

சென்னைக்கு வந்தவுடன் புகழ் பெற்ற மனிதர்களைச் சந்திக்க வேண்டுமென்று தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர் சுந்தரலிங்கத்துக்கு, பத்திரிகை நிருபர் பழனியப்பனின் செய்கையைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. நிருபர் தம்முடைய மோட்டார் சைக்கிளின் பின்னால் சுந்தரலிங்கத்தை ஏற்றி வைத்துக் கொண்டு, எங்கெல்லாமோ சந்து பொந்துகளைக் கடந்து போய்க் கொண்டிருந்தார். மிகவும் அழகான நகரம் என்ற பெயரைப் பெற்று வெளிச்சம் போட்டுக்கொண்டிருந்த சென்னை நகரத்தில் இப்படிப்பட்ட தெருக்களையும் காண வேண்டிய நெருக்கடி தமக்கு ஏற்படும் என்று இலங்கைத் தமிழர் எதிர்பார்க்கவில்லை.

‘‘பெரிய மனிதரைப் பார்க்கப் போவதாய்ச் சொல்லிவிட்டு, காலை வேளையில் நாற்றமடிக்கும் சந்துகள் வழியாய் இழுத்துக் கொண்டு போகிறீர்களே!’’ என்று மூக்கைத் தமது கைக்குட்டையால் மூடிக் கொண்டு கத்தினார் சுந்தரலிங்கம். மோட்டார் சைக்கிளின் சத்தத்தையும் மூழ்கடித்துக்கொண்டு கிளம்பியது அவருடைய குரல்.

எருமை மாடுகளின் கட்டுத் தொழுவங்களாக மாறியிருந்தன சில தெருக்கள். மாடுகள் செய்யும் அதே காரியங்களைத் தெருக் குழந்தைகளும் பெரியவர்களுங்கூடத் திறந்த வெளிகளில் செய்திருந்தார்கள். முதல் நாள் இரவு மழை வேறு பெய்திருந்ததனால் காற்றில் எங்கும் அந்தச் சுகந்தம் பரவியிருந்தது!

ஒரு வழியாக மோட்டார் சைக்கிள் ஒரு தெருக் கோடியிலிருந்த டீக்கடையின் அருகில் நின்றது. அதற்கும் மேலே மோட்டார் சைக்கிளில் போக முடியாது. ஒற்றையடிப்பாதை ஒன்று இருக்கத்தான் இருந்தது; என்றாலும் சேறும் சகதியுமாக அது சந்தனக் குழம்பு ஓடைபோல் தென்பட்டதனால், பத்திரிகை நிருபர் பழனியப்பன் அதனிடம் தம் திறமையைக் காட்டத் துணியவில்லை.

டீக்கடையில் ஆளுக்கொரு ‘சிங்கிள்’ ஆர்டர் செய்துவிட்டு, அந்த மோட்டார் சைக்கிளைச் சற்று நேரம் பார்த்துக் கொள்ளும்படி அந்தக் கடைக்காரரைக் கேட்டுக்கொண்டார் பழனியப்பன். டீயைக் குடித்துவிட்டு, வேட்டியை மடித்து மேலே தூக்கிக் கட்டிக்கொண்டு இருவரும் கிளம்பினார்கள்.

சேற்றுப் பாதையில் கால்கள் அழுத்தமாக ஊன்றி நடந்தபடியே, ‘‘ ‘சிங்கிள் சாயா’ கேட்டீர்களே, மோட்டார் சைக்கிளை விடுவதற்கு வாடகையா அது?’’ என்றார் இலங்கை நண்பர்.

‘‘அப்படியும் வைத்துக் கொள்ளலாம்; அதைவிட அந்தக் கடையில் நாம் டீக் குடிக்கத் தயங்காத சாதாரண மனிதர்கள்தாம் என்ற நினைவு அவனுக்கு வருவதற்காகவும் இருக்கலாம். காசைவிட இதுபோன்ற இடங்களில் மனிதனுக்கு மதிப்பு உண்டு’’ என்றார் பழனியப்பன்.

எதிரே ஒழுங்கில்லாமல் அமைந்த பல குடிசைகள் தென்பட்டன. கார்ப்பரேஷன் விவகாரங்களெல்லாம் எட்ட முடியாத குடிசைகள்; சுகாதார வசதி என்று சொல்லும் ஒன்று, பல தெருக்களுக்கு முன்பே சித்திரவதைப் பட்டுக்கொண்டிருந்தாலும், அந்த இடத்தில் அது கச்சிதமாக உயிரையே விட்டுவிட்டதென்று சத்தியங்கூடச் செய்யலாம்.

சுந்தரலிங்கத்துக்கு அது சோதனையாக இருந்தது. அதிகாலை நேரத்தில் இப்படித் தம்மைப் போட்டு நண்பர் வாட்டி எடுக்கிறாரே என்று வேதனைப் பட்டுக் கொண்டார். இருந்தாலும் அதை வெளியில் காட்டிக்கொள்வது நாகரிகமாகாது என்பதனால் அவர் மூச்சு விடவில்லை. அவருடைய விலையுயர்ந்த காமிரா தோளில் தொங்கியது; கையெழுத்து வாங்கும் ‘ஆட்டோகிராப்’ நோட்டு, சட்டைப் பைக்குள் இருந்தது; குளித்து முழுகித் தலைவாரிக்கொண்டு பௌடரும் ஸென்டுமாய்க் கிளம்பியவர் அவர்.

செடி கொடிகளும் சிங்கார முகப்புக்களும் கொண்ட பெரிய பெரிய பங்களாக்களுக்குள் நண்பர் தம்மை அழைத்துச் செல்வார் என்றும், அவற்றுக்குள் உள்ள பெரிய மனிதர்களைப் படம் பிடித்துக்கொண்டு அவர்களுடைய கையெழுத்துக்களான பொன்னெழுத்துக்களைத் தமது நோட்டில் பதிப்பித்துக் கொண்டு போக முடியும் என்றும் நம்பி வந்தவர் சுந்தரலிங்கம். வந்தவுடனேயே தாம் பார்க்க விரும்பிய ‘புகழ் பெற்ற பெரிய மனிதர்’களின் பட்டியலைப் பழனியப்பனிடம் கொடுத்து விட்டார். பழனியப்பனே பட்டியலைப் பார்த்துச் சுருட்டி வைத்துக் கொண்டார்.

‘‘முதலில் இந்த ஆண்டில் புகழ் பெற்ற ஒரு பெரிய மனிதரைப் பார்ப்போம். அவர் யார் என்று இப்போது என்னிடம் கேட்காதீர்கள். பார்த்துவிட்டு வந்த பிறகு அவரைப் பற்றிய விவரங்களை உங்களிடம் சொல்கிறேன்’’ என்றார் பழனியப்பன்.

‘புகழ்பெற்ற’ அந்த மனிதரைத் தேடித்தான் அவர்கள் இப்போது சில குடிசைகளைக் கடந்து மெல்ல முன்னேறிக்கொண்டிருந்தார்கள். குடலைப் புரட்டிக் கொண்டு வந்தது இலங்கை நண்பருக்கு. மழை பெய்யாத நாளாக இருந்திருக்கக் கூடாதா? எப்படித்தான் இங்கே மனிதர்கள் வாழ்கிறார்களோ?

ஒரு சின்னஞ்சிறு கூரையின் முன்னே போய் நின்று உள்ளே பார்த்தார் பழனியப்பன். வெளிப்புறம் ஓரடி உயரத்தில் கையகலத் திண்ணைகள் இரண்டு; உள்ளே பத்தடிக்குப் பத்தடி ஒரு சதுரக் கூடம்; அதுதான் வீடு. திண்ணையில் ஒரு வட்டக் கூடையும் அதற்குள் மரப்பிடி போட்ட இரும்புக் கரண்டியும் இருந்தன. உள்ளே மூன்று குழந்தைகள் அலுமினியம் கிண்ணங்களிலிருந்து பழைய சோற்றை வாரி அப்பிக்கொண்டிருந்தார்கள். தொட்டுக் கொள்ளப் பச்சை வெங்காயங்கள் தென்பட்டன.

‘‘அட, சுருக்கத் துன்னுட்டு ஓடுங்க; நான் வேலைக்குப் போக நாளியாச்சு!’’ என்று ஒரு பெண்ணின் குரல் உள்ளேயிருந்து கேட்டது.

‘‘அம்மா!’’ என்று குரல் கொடுத்தார் பழனியப்பன்.

‘‘ஐயா வந்திட்டாங்க; ஐயா வந்திட்டாங்க!’’ என்று குதித்துக் கொண்டே இரண்டு குழந்தைகள் சாப்பாட்டை மறந்து வெளியே ஓடி வந்தன. ஒன்று பெண்; மற்றொன்று ஆண்.

தயாராகத் தாம் மடியில் கட்டிக் கொண்டு வந்த ரொட்டிப் பொட்டலம் ஒன்றைப் பையனிடம் நீட்டி, ‘‘இதிலே பன்னிரண்டு இருக்கு; ஆளுக்கு நாலா எடுத்துக்குங்க’’ என்றார் பழனியப்பன்.

‘‘வாங்கய்யா, உக்காருங்க!’’ என்று கிழிசல் பாய் ஒன்றை அந்த ஓட்டுத்

திண்ணையில் மடித்துப் போட்டு, ''இப்பத்தான் அது வேலைக்குப் போச்சு; நானும் கிளம்பிக்கிட்டிருக்கேன்; மழை பேஞ்சதாலே இன்னிக்கு வேலை இருக்கோ என்னமோ தெரியலை'' என்றாள் அந்த வீட்டுப் பெண்மணி.

''நல்ல வேளை! நாங்களும் சீக்கிரமா வந்திட்டோம். நாழி கழிச்சு வந்தா உங்களைப் பார்த்திருக்க முடியாது'' என்று சொல்லி விட்டு, இலங்கை நண்பரிடம் திரும்பி, ''நான் சொன்னேன் பாருங்க; இந்த அம்மா தான் அது!'' என்றார் பத்திரிகை நிருபர்.

''உங்களுக்கு ஏன் ஐயா இந்தக் கஷ்டம்? இவ்வளவு தூரம் தேடிக்கிட்டு வந்து பார்க்கறது உங்களுக்கே நல்லாயிருக்கா?'' என்றாள் அவள் வெட்கத்தோடு.

'புகழ் பெற்ற பெரிய மனிதர் என்றாரே; இந்தப் பரட்டைத் தலை எலும்புக் கூட்டுச் சிற்றாள்தானா அது?' திடுக்கிட்டார் சுந்தரலிங்கம். நன்றாக அந்தப் பெண்மணியை உற்றுப் பார்த்தார்.

இருபத்தைந்து முப்பது வயது இருக்கும்; எண்ணெய்ப் பசை காணாத பரட்டைத் தலை; கந்தற் சேலையை ஒட்டுப் போட்டுக் கட்டிக் கொண்டிருந்தாள். முழங்கையளவுக்கு நீண்ட ரவிக்கை. ஒல்லியாகவும் சற்று உயரமாகவும் இருந்தாள். முகத்தில் நல்ல களை தெரிந்தது. சாப்பாட்டுக்குப் போதிய வசதி இருந்தால் உடற்கட்டு இன்னும் வாளிப்பாக இருந்திருக்கும்.

இலங்கை நண்பருக்கோ தாங்க முடியாத ஏமாற்றம். காமிராவைக் கையில் எடுக்க வேண்டுமென்ற நினைவே அவருக்கு ஏற்படவில்லை. அந்த ஒட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பதே தமக்குத் தண்டனை என்று நினைத்தார்.

''சரி அம்மா, நாங்கள் வருகிறோம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார் பத்திரிகை நிருபர்; ''இவர் என்னோட சிநேகிதர்; இலங்கையிலிருந்து வந்திருக்கிறார்; உங்களைப் பார்க்க வேண்டுமென்றார்'' என்று கைகூப்பி விடை பெற்றுக்கொண்டார். சுந்தரலிங்கமும் அங்கிருந்து கிளம்பினால் போதுமென்று ஒப்புக்கு ஒரு கும்பிடு போட்டு வைத்தார்.

''டீ வாங்கிட்டு வரச் சொல்றேன்; குடிச்சிட்டுப் போங்க.''

''இப்பத்தான் குடிச்சிட்டு வந்தோம்.''

இருவரும் வந்த வழியே திரும்பி நடந்தார்கள். மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். பழனியப்பனின் வீட்டுக்கு வந்தவுடன் அவர்களுக்குக் கை கால்களைச் சுத்தம் செய்து கொள்வதற்கே கால்மணி நேரம் ஆயிற்று.

''விசித்திரமான பேர்வழி நீங்கள்'' என்றார் சுந்தரலிங்கம்.

''பத்திரிகை நிருபராக இருக்கும் எனக்குப் பல பெரிய மனிதர்களிடம் பழகும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பலரைப் பற்றியும் நான் வாங்கும் சம்பளத்துக்காக என் பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். ஆனால், நான் எழுதி வைத்திருக்கும் ஒரு கதையை உங்களிடம் இப்போது கொடுக்கப் போகிறேன். படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்.''

இலங்கைத் தமிழர்களுக்குக் கதை படிப்பதில் ஆர்வம் அதிகம் என்று சொல்லத் தேவையில்லை. பழனியப்பன் கொடுத்த கையெழுத்துப் பிரதியைச் சுந்தரலிங்கம் ஆவலோடு வாங்கிப் படிக்கலானார்.

அந்தக் கதையை நான் இங்கே அப்படியே உங்களுக்குத் தருகிறேன்:—

**செ**ன்னை நகரத்துக்குக் காலை ஒன்பது மணியிலிருந்து பத்து மணிவரையில் பரபரப்பும் பதற்றமும் நிறைந்த நேரம். தெருக்களில் ஓடும் டவுன் பஸ்கள், கார்கள், டாக்ஸிகள், ரிக்ஷாக்கள், ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள் முதலியவற்றுக்கு வெறிபிடித்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றும். அவரவர் அவரவர் வேலையாக அவரவருக்குக் கிடைத்த வாகனங்களில் பறந்து போகும் பொழுது அது. நடந்து போகும் பாதசாரிகளும் ஓட்டமும் நடையுமாகத்தான் போவார்கள். 'டென்ஷன்' என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்களே, அது உச்ச கட்டத்தை அடைந்து, வேகத்தின் வழியாக 'ரிலீசாகி'க் கொண்டிருக்கும் நேரம்.

பரபரப்பு நிறைந்த அந்த நேரத்தில், வெறிபிடித்தது போல் விரைந்து வந்துகொண்டிருந்த ஒரு கார், பாதையோரமாகப் போய்க்கொண்டிருந்த ஒருவனை மோதிக் கீழே தள்ளி விட்டது. தள்ளி விடப்பட்டவன் போட்ட கூச்சல் சகிக்கக் கூடியதாக இல்லை. மண்டையிலோ, தோளிலோ பலத்த அடி. கீழே இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால், அவனை அடித்துத் தள்ளிய காரோ அதற்குள் சிட்டாகப் பறந்து எங்கோ மறைந்து விட்டது.

பின்னால் வந்துகொண்டிருந்த கார்களும் மற்ற வாகனங்களும் தங்கள் போக்கில் போய்க்கொண்டிருந்தனவே தவிர, ஒன்றேனும் நின்ற பாடில்லை. இதுவோ யந்திர யுகம்; யந்திரங்களை முடுக்கி விட்டு அவற்றுடன் ஐக்கியமாகிவிட்ட மனித யந்திரங்களுக்கும் இதற்கெல்லாம் நேரம் இல்லை.

இரத்த வெள்ளத்தில் கிடந்த மனிதன் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தான்; ஓலமிட்டுக்கொண்டிருந்தான்; செத்துக்கொண்டிருந்தான்.

பாதசாரிகளில் சிலர் மட்டும் அங்கே நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். அடிபட்டுக் கிடந்தவன் அவர்களுடைய சாதியை — காலால் நடக்கும் சாதியை — சேர்ந்தவன். அந்த அபிமானம் ஒரு புறம்; இயல்பாக உள்ள இரக்க உணர்ச்சியும் வேடிக்கை பார்க்கும் உணர்ச்சியும் மறுபுறம்.

''த்ஸௌ ... த்ஸௌ ...'' என்று உச்சுக் கொட்டி விட்டு, பிறகு ஆபீஸ் நினைவு வந்தவுடன் வேகமாய் நடந்தார் ஒருவர். ''யாராவது போய்ப் போலீசுக்குச் சொல்லக் கூடாதோ?'' என்றார் மற்றொருவர்; 'யாராவது' என்றால் அவரைத் தவிர வேறு யாராவது என்று பொருள். ''போலீசுக்குப் போவானேன்? முதலில் ஆஸ்பத்திரிக்குச் சொன்னால் ஆம்புலன்ஸ் வருமே'' என்றார் மூன்றாவது மனிதர். ''போய்ச் சொல்ல வேண்டுமென்பதில்லை: போன் செய்தாலே போதும்'' என்றார் அடுத்தவர்.

''ஆமாம், ஆபத்து என்று ஆம்புலன்ஸ் கேட்டால், அது உயிர் போன பிறகு வந்து நிற்கும்!'' என்று நகைச்சுவை முத்தை ஒரு புத்திசாலி அந்த வேளை பார்த்து உதிர்த்து வைத்தார். ஆனால் பேச்சில் ஆலோசனைகளும் அநுதாபங்களும் பிறந்தனவே தவிர, செயலில் எதுவுமே நடக்கவில்லை.

தெருவில் கிடந்த மனிதனின் இரத்தப் பெருக்கு நின்றபாடில்லை; அவனுடைய கூக்குரல் மட்டும் ஓய்ந்து கொண்டு வந்தது; அவன் அங்கே செத்துப் போய்க்கொண்டிருந்தான்.

கூட்டத்தில் நின்றவர்களில் படித்தவர்கள் சிலர் இருந்தார்கள். கோட்டும் சூட்டுமாக, ஜிப்பாவும் வேஷ்டியுமாக, வெள்ளையும் சள்ளையுமாக அவர்கள் காணப்பட்டனர். பக்தர்களுக்கும் குறைச்சல் இல்லை. அவரவர்களின் நம்பிக்கைக்கான வெளிச் சின்னங்கள் அவரவர்களிடம் வெளிப்படையாகத் தெரிந்தன.

நேரம் ஆகிக்கொண்டிருந்தது. அடிபட்ட மனிதன் அங்கே நடுத் தெருவில் செத்துக்கொண்டிருந்தான். கூட்டமும் கலையத் தொடங்கியது.

இந்த வேளை பார்த்து எதிரே கட்டிட வேலை நடந்துகொண்டிருந்த இடத்திலிருந்து ஒரு சிற்றாள் அங்கே கூட்டத்தைக் கண்டுவிட்டு ஓடி வந்தாள். அவளும் வேடிக்கை பார்க்க வந்தவள்தான். ஆனால் அங்கே தான் கண்டது வேடிக்கைக்குரிய காட்சியாக அவளுக்குத் தோன்றவில்லை.

''ஒரு டாக்ஸியைப் பிடிச்சு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகலாமே!'' என்று யாரோ கூட்டத்தில் பேசியது அவள் காதில் விழுந்தது. அதையடுத்து யாரோ வேறொருவர் வழியில் போன டாக்ஸியைக் கூவிக் கொண்டே அதன் பின்னால் ஓடினார். நம்பிக்கையோடு அவரைத் திரும்பிப் பார்த்தாள், அந்தச் சிற்றாள். டாக்ஸியைத் திருப்பிக்கொண்டு வருவதற்காகத்தான் அவர் அப்படி வேகமாய் ஓடுகிறார் என்று நினைத்தாள்.

டாக்ஸியும் நின்றது. அவரும் அதில் ஏறிக் கொண்டார். ஆனால் அது திரும்பி வருவதற்குப் பதிலாக நேரே விரைந்தது. தம்முடைய ஆபீஸுக்குப் போகத்தான் அவர் அப்படித் தலை தெறிக்கப் போய் டாக்ஸியை நிறுத்தினார் போலும்!

ஆத்திரத்தோடு நடுத் தெருவில் காறித் துப்பினாள் அந்தப் பெண்மணி. ஆவேசம் கொண்டு விட்டவள் போல் தெருவின் குறுக்கே ஓடி அங்கேபோய்க் கொண்டிருந்த 'பெரிய மனிதர்'களின் கார்களைக் கூவி நிறுத்த முனைந்தாள். காரில் போகும் பெரிய மனிதர்களுக்கு எவ்வளவோ அவசர வேலைகள். பரட்டைத் தலைப் பெண்பிள்ளை

யின் கூக்குரலைக் கேட்க அவர்களுக்கு நேரம் ஏது? தெருவில் செத்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டு சென்றுர்கள் அவர்கள்.

நாடறிந்த பிரமுகர் ஒருவரின் கார் தொலைவில் வந்துகொண் டிருந்தது. வள்ளுவர் விழாவுக்கு அவர் அப்போது தலைமை தாங்கப் போய்க்கொண் டிருந்ததனுல், குறளைப் புரட்டி அதன் இன்பத்தில் மூழ்கியபடி காரில் சாய்ந்திருந்தார் அவர். **"புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யம், யாக்கை அகத்து உறுப்பு அன்பிலவர்க்கு?....''** அற்புதமான கருத்து! வெளியில் தெரியும் உறுப்பெல்லாம் உறுப்பல்ல; அகத்துக்குள்ளே அன்பு என்னும் உறுப்புள்ளவனே மனிதன் என்று எப்படி அடித்துச் சொல்லுகிறுர் வள்ளுவர்! அடுத்த குறளில், 'அன்பு இல்லாதவன் செத்துப் போன சவம்; வெறும் எலும்பு தோல் போர்த்த உடம்புடையவன்' என்று எப்படி வெளுத்துக் கட்டுகிறுர்!

அவருடைய காரோட்டிக்கு வழக்கமாக அவர் ஓர் உத்தரவு போட்டிருந்தார். தெருவோரங்களில் கூட்டங்கள் நின்றுல் வண்டியை அவன் மெதுவாக விட வேண்டும். கூட்டத்தினர் அவரைப் பார்த்து ஆரவாரம் செய்வதற்கு வசதியாக இருக்க வேண்டுமென்று அவர் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார். அதற்கேற்றபடி வேகத்தைக் குறைத்துக் கொண்டு வந்தான் டிரைவர்.

''ஐயா, உங்களுக்குப்புண்ணியமாப் போகும்; அடிபட்டுக் கிடக்கிற ஆளைக் கொஞ்சம் ஆஸ்பத்திரியிலே கொண்டு போட்டுட்டுப் போங்கையா! ஐயா!......ஐயா!''

தெருவில் இரத்த வெள்ளத்தில் கிடந்தவனைப் பார்த்து முகத்தைச் சுளித்துவிட்டு, ''டேய்! கூட்டத்துக்கு நேரமாச்சு; வேகமாய்ப் போ!'' என்று



கத்தினர் பிரமுகர். தெருக் கூட்டம் பிரமித்து நின்றது.

அடுத்தாற்போல், கப்பலைப் போல் தெருவையே அடைத்துக்கொண்டு மற்றொரு கார் வந்தது. வழக்கமான பல்லவியைப் பாடிக் கொண்டு அதன் குறுக்கேயும் விழுந்து பார்த்தாள் அந்தச் சிற்றாள். அதன் சொந்தக்காரர், கதாநாயகிகள் படப் பிடிப்பின்போது நடிப்புக்கான விபத்தில் அகப்பட்டுக் கொண்டால் மட்டிலுமே ஓடிச்சென்று காப்பாற்றக் கூடியவர். சுற்றிலும் பத்திரிகை நிருபர்களும் காமிராக்களும் இருந்தாலே அவரால் ஆபத்துக்கு உதவ முடியும். அப்படி அவர் செய்வதற்காகக் கறுப்பிலும் வெள்ளையிலுமாக அவருக்கு லட்சக் கணக்கில் பணம் கொடுக்க வேண்டும். — அவர் தம் கதாநாயகியை விபத்திலிருந்து காப்பாற்ற இப்போது விரைந்து சென்றார்.

இப்படியே சில பெரிய மனிதர்களின் கார்களை நிறுத்த முயற்சி செய்து தோல்வி கண்டு, எங்கேயோ விரைந்து ஓடினாள் அந்தச் சிற்றாள். நகை நட்டு, பாத்திரம் பண்டங்களை அடகு வைக்கும் கடையொன்று அருகில் இருந்தது. தன் காதில் இருந்த கம்மல்களைக் கழற்றி நீட்டி, "அவசரமா ஒரு அஞ்சு ரூபா குடுங்கையா; உங்களுக்குப் புண்ணியமாப் போகும்!" என்று பதறினாள். ஐந்து ரூபாய் கையில் கிடைத்ததும் யானையின் பலம் வந்துவிட்டது அவளுக்கு. ஓடிப் போய் ஒரு டாக்ஸியை வழிமறித்து நிறுத்தி அதில் ஏறிக் கொண்டாள். செத்துப் போய்க் கொண்டிருந்தவனின் அருகில் வந்து அந்த டாக்ஸி நின்றது. டாக்ஸி டிரைவரும் அவளுமாகச் சேர்ந்து அந்த மனிதனை மெதுவாகத் தூக்கி உள்ளே கிடத்தினார்கள். அவளும் ஏறிக் கொண்டாள்.

"ஏதாச்சும் ஒரு ஆஸ்பத்திரிக்கு வண்டியை விடுங்கையா!"

கூட்டத்தில் நின்ற படித்தவர்கள், பக்தர்கள், அறிவாளிகள், உயர்குடிப் பெருமக்கள், நாகரிகப் பேர்வழிகள் இவர்களுக்கெல்லாம் திடீரென்று வெட்கம் வந்துவிட்டது போலும்! தலையைத் தொங்க விட்டுக்கொண்டு, அவரவர் வேலையை நினைத்தபடி அவரவர் வழியே கலைந்து செல்லத் தலைப்பட்டனர். தெருவில் வழிந்து கிடந்த பச்சை இரத்தமும் காயத் தொடங்கியது.

ஆஸ்பத்திரியில் இருந்த டாக்டர்களைப் போட்டு உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.

"ஐயா, சொல்லுங்கையா! இந்த ஆள் பிழைச்சுக்குவாரா ஐயா? எப்படியாவது காப்பாத்திடுங்க ஐயா! இவரோட மனுஷங்களுக்குச் சொல்லி அனுப்புங்க, ஐயா!"

"ஆபத்தான நிலைதான்; எப்படியும் பிழைக்கவைக்கப் பார்க்கிறோம்" என்றார் டாக்டர்களில் ஒருவர்.

அவள் ஆஸ்பத்திரி வார்டில் நெடுநேரம் அழுகையும் புலம்பலுமாய்க் காத்திருந்தாள். அடிபட்ட மனிதனின் வீட்டாரும் அங்கே வந்து சேர்ந்தார்கள். அபாயநிலை தாண்டி விட்டது, என்ற செய்தி அவளுக்குக் கிடைத்தது. அடிபட்ட மனிதனின் வீட்டார் கொடுத்த பணத்தை அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஏழுமைல் தொலைவில் இருந்த தன் குடிசையை நோக்கிக் கால்நடையாகவே நடந்தாள். வயிற்றில் மூண்ட பசி அவளைத் தள்ளாட வைத்தது. குழாய்த் தண்ணீரினால் குடலை நிரப்பிக்கொண்டு வீட்டை நோக்கி அவள் நடந்தாள்.

அவள் யாரோ, அவன் யாரோ? அவன் முகத்தைக்கூட அவள் சரியாப் பார்க்கவில்லை. 'எல்லா உயிர்களிடத்திலும் ஒரே இறைவன்தான் குடிகொண்டிருக்கிறான்' என்ற பெரிய தத்துவத்தை அவள் காதால் கூடக் கேட்டதில்லை. படிக்கத் தெரியாதவள்; 'வள்ளுவர்' என்றால் அவளுடைய அகராதியில் 'நாடி ஜோசியர்' என்றுதான் பொருள். தன் காதுக் கம்மல்களையும் இழந்துவிட்டு அவள் நடந்தாள். அன்றைக்கு வேலை பார்த்திருந்தால் கூலி கிடைத்திருக்கும்; அதுவும் போய்விட்டது. கம்மல்களும் இல்லை. புருஷன் கோவத்தில் தன்னைப் போட்டு அடிப்பானோ, உதைப்பானோ என்ற பயத்தோடு அவள் நடந்தாள். அப்படி அடித்தாலும் அதையெல்லாம் வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். அவனைக் கேட்காமல் காதுக் கம்மலைக் கழற்றியது தப்புத்தான்; வேலைக்குப் போகாமல் இருந்தது தப்புத்தான்; நேரம் கழித்து வீட்டுக்குப் போவதும் தப்புத்தான். 'ஆனால், இந்தத் தப்புக்களை எல்லாம் செய்யாமல் இருக்க என் பாழாய்ப்போன நெஞ்சு இடம் கொடுக்கவில்லையே!'

அவள் அழுது கொண்டே, வீட்டில் தண்டனையை எதிர்பார்த்துக் கொண்டே, நடந்தாள்.

சுந்தரலிங்கம் கதையைப் படித்து முடித்துவிட்டார். முடித்துவிட்டுச் சிறிது நேரம் மௌனத்தில் மூழ்கிப் போனார். அந்தப் பெண்மணியைப் பற்றி முன்னால் தமக்கு நண்பர் சொல்லாமற் போனாரே என்ற வருத்தம் அவருக்கு.

"தெரிந்திருந்தால் அவளை ஒரு படம் பிடித்துக் கொண்டாவது வந்திருக்கலாம்."

"ஊஹூம்; முடியாது. நான் பத்திரிகையில் செய்தியைக் கொடுத்த போது அவளைப் படம் பிடிக்க முயன்றேன்; அவள் ஒப்புக் கொள்ளவில்லை" என்றார் நிருபர்.

பிறகு இலங்கை நண்பர் கொடுத்த பட்டியலை எடுத்து வைத்துக் கொண்டு முதலில் அவர் குறிப்பிட்டிருந்த மூன்று பெயர்களையும் சுட்டிக் காட்டி, "இவர்கள் மூன்று பேரும் அன்றைக்கு அந்த வழியே கார்களில் போனவர்கள்; அந்தச் சிற்றாளால் வழிமறிக்கப்பட்டு அவளிடமிருந்து தப்பிக் கொண்டவர்கள்" என்றார் பழனியப்பன்.

இலங்கை அன்பரின் நெஞ்சுக்குள் இடிகள் இடித்தன. சிந்தனையில் தீ கொழுந்துவிட்டுச் சூடேற்றியது.

"உண்மையாகவா?"

"நான் நெடுநாளைப் பத்திரிகை நிருபன்; நான் கொட்டை எழுத்துக்களில் தரும் செய்திகளைப் படித்துவிட்டு நீங்கள் மனிதர்களை எடை போட்டு வருகிறீர்கள். நான் அவர்களோடெல்லாம் நெருங்கிப் பழகியவன்."

"நீங்கள் எதற்காக அப்படியெல்லாம் எழுத வேண்டும்?"

"மக்கள் கூட்டமும் அப்படிப் பூதக் கண்ணாடி போட்டுக்கொண்டு அவர்களைப் பார்க்க விரும்புகிறது. பிரமுகர்கள் அப்படியெல்லாம் தங்களைப் பற்றி எழுதச் சொல்லி எங்களுக்கு வலை விரிக்கிறார்கள். எங்களில் சிலர் வலையிலிருந்து தப்ப முயன்றால், எங்களுக்கு மேலே உள்ளவர்களைப் பிடித்துக் கைக்குள் போட்டுக் கொள்ளுகிறார்கள். சிலருக்கு அன்றைக்குச் சாப்பாடு இல்லாவிட்டாலும் கவலை இல்லை, தங்கள் பெயரைப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பார்க்காவிட்டால் இரவு தூக்கமே வராது. எங்கள் முதலாளி வரையிலும் போய்த் துளைத்து எடுத்து விடுவார்கள்."

பத்திரிகை நிருபர் சொல்லிக் கொண்டு வந்த புதிய செய்திகளைக் கேட்டு மலைத்துப் போனார் சுந்தரலிங்கம்.

"மற்றப் பத்திரிகைகள் தங்களுக்குப் போதுமான விளம்பரம் கொடுக்கவில்லை என்பதற்காக, சுயவிளம்பரத்துக்காகவே பத்திரிகை தொடங்குபவர்களும் உண்டு. பக்கத்துக்குப் பக்கம் அவர்களுடைய செய்திகளையும் படங்களையுமே போட்டு, காசு கொடுத்து வாங்குவோர் தலையில் கட்டுவார்கள். தலைகளின் எண்ணிக்கைதான் இந்த நாட்டில் அதிகமே தவிர, தலைக்குள்ளே சுயமாகச் சிந்திக்கும் திறமையை வளர்த்துக்கொண்டிருப்பவர்கள் மிகவும் குறைவு. எது விளம்பரம், எது புகழ் என்று தெரியும் வரையில் இந்தக் கூத்துக்களுக்கெல்லாம் இங்கே குறைச்சல் இருக்காது."

"வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இல்லையா?"

"நாங்களும் பிழைக்கவேண்டுமே!" என்று கூறிச் சிரித்தார் பழனியப்பன்; "இது விளம்பர யுகம்; புகழுக்கு இங்கே புதைகுழிதான் இடம்."

தாம் சந்திக்க வேண்டுமென்று தவியாய்த் தவித்துக்கொண்டிருந்த மனிதர்களின் பெயர்களில் பாதிக்கு மேல் பட்டியலில் இருந்து அடித்தார் சுந்தரலிங்கம். புதிய பெயர்களைப் பழனியப்பனைக் கேட்டுச் சேர்த்துக் கொண்டார். ★







புனித நீரைப் புனிதமாக்கும் புனிதன்

போட்டோ : ஹரிஹ

# வெள்ளம் ஓடுகிறது

**ஸ்ரீ. ஜ. ஜோசீ**

நான் அலகாபாத் ஸ்டேஷனில் இறங்கியபோது காலை மணி ஐந்து. எங்கும் இருள். தாங்க முடியாத குளிர். புனாவிலிருந்து இங்கு மாற்றலாகி வந்த நான், 'எப்படிச் சமாளிக்கப் போகிறேனோ?' என்ற எண்ணத்துடன் ஜட்காவில் ஏறினேன். என் நண்பன் குடியிருந்த ஸிந்தி தர்ம சாலைக்கு வந்தேன். டீயைச் சுவைத்துப் பருகிச் சிறிது நேரம் வம்பளந்த பின் மொட்டை மாடிக்கு வந்தேன்.

வீட்டின் இடப் புறத்தில் ரெயில் பாலம். காசிக்குப் போகும் சிறிய தண்டவாளம் தெரிந்தது. எதிரே பைராகிகளின் மடம். என் பின்னால் வந்த நண்பன், ''அசோகன் கட்டிய கோட்டை அதோ!'' என்று சுட்டிக் காண்பித்தான். பிரம்மாண்டமான கோட்டை அது.

''அந்தக் கோட்டையில் ஓர் ஆலமரம் இருக்கிறது. அதை அட்சய வடம் என்கிறார்கள். அதன் வேர் காசிக்கும் கயைக்கும் பரவியிருக்கின்றனவாம். இந்தக் கோட்டை கட்டுவதற்கு எத்தனையோ காலம் முன்பாகவே இந்த ஆலமரம் இருந்ததாம். கோட்டையை ஒட்டித்தான் திரிவேணி இருக்கிறது'' என்று நண்பன் தொடர்ந்தான். மொட்டை மாடியின் மறுபுறத்தில் ஓடும் வெள்ளத்தைப் பார்த்து, ''இதுதான் கங்கையோ?'' என்று கேட்டேன்.

''ஆம். இப்படி இடப் புறமாகக் கங்கை வருகிறது. எதிரே யமுனை வருகிறது. கோட்டைக்கு எதிரில் சங்கமம். கங்கை வெளுப்பு; யமுனை கறுப்பு; சரசுவதி மறைந்திருக்கிறது. கருநீரும் வெண்ணீரும் கலப்பது ரம்யமாக இருக்கும்.''

''நாம் கங்கைக்குப் போகலாமா?''

''கங்கைக்கா! இந்தக் குளிரிலா? வீட்டில் குளித்துவிட்டு ஆபீஸுக்குப் புறப்படு. நாளை மறுநாள் பார்த்துக் கொள்ளலாம்.''

குழாயில் குளித்தது எனக்குப் பிடிக்கவில்லை. சாப்பிட்டு ஆபீஸுக்குப் போயும், என் உள்ளத்தில் ஏதோ குறுகுறுப்பு. பளிங்கு போன்ற கங்கையின் முதல் தரிசனம் என்னை மயக்கியது. வேலையில் மனம் செல்லவில்லை. அன்று இரவு தூக்கமும் வரவில்லை; அரைத் தூக்கத்தில் வெண்மையான மணற் பரப்பும் அதில் ஓடும் கங்கையும் தெரிந்தன. என் சிறு வயதில் என் பாட்டி குழாயடியில் குளிக்கும்போது, 'ஹரகங்கே, பாகீரதி!' என்று உருக்கமாகச் சொல்லுவாள். கங்காஸ்நானத்தில் அவளுக்கு இருந்த ஆர்வம், வறுமையினாலோ, குடும்பக் கஷ்டத்தினாலோ நிறைவேறாமற் போயிருக்கலாம். அந்த ஆர்வத்தை நிறைவேற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. பாட்டி மட்டுமா? என்



முந்திய தலைமுறையினர் அனைவருமே இந்த ஆர்வம் கொண்டவர்கள்தாமே? அவர்களில் பலர் பிரயாகையைப் பார்த்தே இருக்க மாட்டார்கள். உயிரோடு ஸ்நானம் செய்ய முடியாவிட்டாலும் செத்த பின்பாவது அஸ்திகள் கங்கையில் கரைய வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு ஹிந்துவின் தூய ஆவல். என் முன்னோர்களின் அஸ்திகள் நாசிக்கில் கோதாவரியிலும் ஆளந்தியில் இந்திராயணியிலுமே கரைந்திருக்கும். அவர்களின் கங்காஸ்நான ஆவல் இன்னமும் அந்த அஸ்திகளில் ஊறியிருக்கும்.

எனக்கு முந்திய தலைமுறையினர் ஒருவரை அடுத்து ஒருவராக நிற்பதாகவும், எல்லாருக்கும் முன்னால் நான் நின்று கங்கையைப் பார்ப்பதாகவும் தோற்றியது. கங்கையைப் பார்ப்பவை 'என்' கண்கள் என்றாலும், எனக்கு முந்திய ஐம்பது தலைமுறையினரின் பார்வை அவற்றில் கலந்திருந்தது. கங்கையின் எழிலை நான் கண்டேன்; ஆனால் அந்த எழிலைப் பற்றிய கற்பனை என் முன்னோர்கள் தந்த பழஞ்செல்வம்.

இருள் கலைகிற நேரம். வானம் தெளிந்திருந்தது. குளிரில் உடல் நடுங்கியது. துறையில் யாரும் இல்லை. எங்கும் அமைதி. மகாராஷ்டிரத்து ஆற்று மணலைப் போலக் கடுமையாகக் காலை உறுத்தாமல், வெண்மையும் சன்னமுமான நொய் மணல் பரந்திருந்தது. உடனே என் காலணியைக் கழற்றி எடுத்துக் கொண்டு நடக்கலானேன். மணலின் மென்மையான ஸ்பரிசத்தில் தாய்மையின் கனிவு இருந்தது.

கதிரவன் மெதுவாகப் புறப்பட்டுத் தூய வெள்ளை நீரில் கதிர்களைப் பரப்பிக்கொண்டிருந்தான். மானத்தைக் காக்குமளவுக்கு மட்டும் ஆடை அணிந்து இரண்டொருவர் வெள்ளத்தில் நீந்திக் களித்தார்கள். கங்கைத் துறையில் பொற்கலசம் கொண்ட கோயில்கள் இல்லை; கம்பீர மணியோசை இல்லை. பண்டரிபுரத்தில் நதி என்பது கருவி; பாண்டுரங்க மூர்த்தி லட்சியம். ஆனால் கங்காஸ்நானமோ அதுவே கருவி, அதுவே லட்சியம். ஆகையால் இங்கே கோயில் இல்லாமலிருப்பது இயல்பே.

கரையில் ஒரு மணைமேல் அமர்ந்திருந்த பண்டா என்னைக் கவனித்தார். வலுவான உடல்; கூரிய மூக்கு; கழுத்தில் ருத்திராட்ச மாலை; வெள்ளைப் பஞ்சகச்ச வேஷ்டியின்மேல் காச்மீரச் சால்வை; நெற்றியில் சந்தனப் பொட்டு. எதிரே மண் சிமிழ்களில் சந்தனமும் குங்குமமும் இருந்தன. அன்பு தோய்ந்த குரலில், ''வாருங்கள் ஐயா, ஸ்நானம் செய்யுங்கள், வெள்ளம் ஓடுகிறது!'' என்று அவர் அழைத்தார்.

'வெள்ளம் ஓடுகிறது' என்பது முக்காலத்துக்கும் உண்மை. இது ஒருவர் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 'கங்கை வெள்ளத்துக்கு முடிவு கிடையாது' என்பதை யாராவது சொல்ல வேண்டுமா, என்ன? பாரதக் கதையும் இராமாயணக் கதையும் கோடி

மராட்டிச் சித்திரம்

கோடி வாய்களின் வாயிலாகப் பெருகுவது போலக் கங்கையும் ஓடுகிறது என்பது பேருண்மை. இந்தப் பேருண்மையை அந்தக் கிழவர் குழந்தையைப் போலக் கள்ளங்கபடு இல்லாமல், ''வாருங்கள் ஐயா, ஸ்நானம் செய்யுங்கள். வெள்ளம் ஓடுகிறது!'' என்று கூவிக் கூறிக்கொண்டிருந்தார்.

நான் கையில் சோப்புக் கட்டியுடன் வெள்ளத்தை நோக்கிச் செல்வதைக் கண்ட அவர், ''ஐயா, இங்கே இது தேவையில்லே. கங்கை மண்ணே உடலைப் பளபளப்பாக்கி விடும். நீங்களே அநுபவித்துப் பாருங்கள்'' என்ருர்.

வெள்ளத்தில் மூழ்கியதுமே கடுங்குளிர் எங்கோ மறைந்தது. சுறுசுறுப்புப் பிறந்தது. இடுப்பளவு ஆழத்திலும் கங்கை வெள்ளம் வேகமாக ஓடியது. இளவெயில் உடலுக்கு இதமாக இருந்தது. அக்கம்பக்கத்தில் பலர் ஸ்நான ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார்கள். யாரும் யாருடனும் பேசவில்லே. எல்லாருமே வெகு வேகமாகப் பெருகும் கங்கையைக் கண்டு களித்தார்கள். இரண்டு பஞ்சாபி மங்கையர் ஏறக்குறைய நிர்வாண



நிலையில் குளித்துக்கொண் டிருந்தார்கள். நான் பார்த்ததை அவர்கள் பொருட்படுத்தவே இல்லை. கங்கை வெண்மணலைக் கொண்டு தம் வெண் மேனிக்கு அவர்கள் மெருகூட்டினார்கள். எனக்கும் எந்த விகற்பமும் தோன்றவில்லை.

இளம் பெண்ணின் அழகைக் காண்பதில் எனக்கு ஆவல் உண்டு. ஆனால் இங்கே, மேனிவளம் கொண்ட பஞ்சாபி மங்கைகள், ஷெமாய் என்ற மென்தோலைக் கொண்டு தந்தக் கலைப் பொருள்களைத் துலக்குவது போல, கங்கை மண்ணைக் கொண்டு தங்கள் மேனியைத் துலக்கியதைக் கண்ட போதிலும் என் மனத்தில் விகற்பம் எழவில்லை. போர்வை யில்லாத பெண்ணுடலைக் கண்டும் மனம் கலங்காத சில சந்தர்ப்பங்கள் வாழ்வில் வருவதுண்டு. இது அத்தகைய தருணம். சுற்று முற்றும் பார்த்தேன். பெண்களும் இருந்தனர்; ஆண்களும் இருந்தனர். எல்லார் உடலையும் கங்கை மூடியிருந்தாள். ஆயினும் யாரும் யாரையும் பார்க்கவில்லை. எல்லாருமே நிர்க்குணமாக, நிராகாரமாகக் கங்கையில் ஆழ்ந்திருந்தார்கள். ரத்தினக் கம்பளத்தை உதறினால் தூசி தும்பு பறந்துவிடுவதுபோல எல்லாருடைய வேட்கையையும் கங்கைநீர் அகற்றிவிட்டது. பெண்மை, ஆண்மை என்ற உணர்வுகளின் சுமை நீங்கியது. அது தனி மன உலகம்.

ஆசை தீர நீராடிக் கரைக்கு வந்து, பண்டா நெற்றியில் திலகம் இட்டதும் அவருக்குத் தட்சிணை கொடுத்து, வீட்டுக்குத் திரும்பினேன். தாராகஞ்சில் ஆண்களும் பெண்களும் கறிகாயும் மளிகைச் சாமான்களும் வாங்க வந்திருந்தார்கள். நான் மீண்டும் வாழ்க்கைக்கு வந்தேன். பெண்கள் முக்காடிட்டு இருந்தார்கள்; ஆயினும் அவர்களின் எழிலைக் காணவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. கங்கை வெள்ளத்திலே நிர்க்குணமும் நிராகாரமுமாக இருந்த என் பார்வை இப்போது மாய மோகவலையில் சிக்கியது.

இப்படி ஐந்தாறு நாட்கள் கங்கா ஸ்நானம் நடந்தது. மாக மாதம் நெருங்கியது. வேடிக்கை விளையாட்டு, நாகரிக உடை, இனிய உணவு— எதிலுமே எனக்குப் பற்றுக் குறைந்தது. என் வாழ்க்கைப் போக்கே மாறியது. நான் வேற்று மனிதனானேன்.

அதிகாலையில் எழுந்து கங்கைக்குச் செல்லலானேன். நெடுந்தூரம் வரையில் திரிவேணியின் மணற்பரப்புத் தெரிந்தது. மாக ஸ்நானத்துக்காக வழிநெடுக மின்சார விளக்குகள் போட்டிருந்தார்கள். யமுனை நீரில் மிதக்க விட்டிருந்த நூற்றுக்கணக்



கான விளக்குகள் பல கல் தொலைவுக்குப் பளிச்சுப் பளிச்சென்று மின்னின. அருகில் பஜனைக் கூடம் ஒன்றிலிருந்து. 'ஸ்ரீகிருஷ்ண கோவிந்த ஹரே முராரே, ஹே நாத நாராயண வாஸுதேவ' என்ற பாடல் இன்னிசையுடன் காற்றில் மிதந்து வந்தது. இந்தக் காட்சிகளில் லயித்தபடியே நான் கங்கைக் கரையை அணுகினேன்.

அலகாபாத்தில் மாக மேளாவுக்கு அந்தக் கடுங்குளிரிலும் பாரதநாடு முழுவதிலிருந்தும் ஆயிரமாயிரம் மக்கள் வந்து கங்கை யமுனைப் படுகைகளில் தங்கியிருந்தார்கள். லட்சக் கணக்கான மக்கள் வைகறையில் மூன்று மணிக்கும் நான்கு மணிக்கும் திரிவேணிப் பனி நீரில் ஸ்நானம் செய்ய வந்திருந்தார்கள். பைராகிகள், நிர்வாண சாதுக்கள், குழந்தைகள், கிழவர்கள் எல்லாருமே இருந்தார்கள். கங்கைக் கரையில் கோயில் இல்லை, தெய்வம் இல்லை; பூஜை இல்லை, பாராயணம் இல்லை. இடப் புறத்திலிருந்து ஆழமின்றிக் கலகல ஒலியுடன் பெருகி வரும் தூய கங்கையும், மறுபுறம் ஆழமாக, மெதுவாக நகர்ந்து வரும் நீல யமுனையுமே இங்கு இருந்தன. பகீரதனுடைய பிதுர்க்களுக்கு மோட்சம் தருவதற்காகப் புவியில் இறங்கி, என்றும் தூய வடிவத்துடன் சிவபெருமானுடைய சடா மகுடத்தில் அமர்ந்திருக்கும் கங்கையும், கண்ணன் தெய்விக லீலைகளினால் புனிதமாக்கிய யமுனையும் இங்கே கலந்தன. மக்கள் தங்கள் உடலை மறந்து, திரிவேணியில் மூழ்கி, 'ஹரகங்கே, பாகீரதி' என்று முழங்கிக்கொண்டு, வெள்ளத்துடன் ஒருருவமானார்கள்.

திரிவேணி சங்கமத்தின் எதிரே சூரிய பிம்பத்தைக் கண்டபோது, அதை நான் கை நீட்டி மாம்பழம் போலப் பறித்துவிடலாம் என்று தோற்றியது. தலைமுறை தலைமுறையாக மாந்தரைக் காத்து, அவர்களின் அஸ்திகளை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தன் வயிற்றில் கரைத்துக் கொண்டு, காலமே வெள்ளமாக ஓடுவதுபோல விளங்கினாள் கங்கை. மரத்திலிருந்து உதிரும் சருகு போலப் படைப்பிலுள்ள எல்லா உயிர்களின் உடலும் வீழ்ந்து விடும். ஆனால் கங்கை என்றும் அழியாதவள்; என்றும் இளமங்கை.

விடியற்காலையில் திரிவேணியில் ஸ்நானம் செய்து திரும்பும் போதெல்லாம், 'இந்தப் பந்தங்கள் அனைத்தையும் துறந்து, காவி அணிந்து, கையில் கமண்டலத்துடன், பாரத நாடு முழுவதையும் சுற்ற வேண்டும்; கங்கையிலிருந்து கோதாவரி வரையிலும், காவிரியிலிருந்து துங்கபத்திரை வரையிலும் எல்லா நதிகளின் நீரிலும் ஆடி இந்த உடலைப் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும். திருமணமே வேண்டாம். வாழ்நாள் முழுவதும் நிர்விகாரமாக நிராகாரமாக வாழ்வேன். பெயர் வேண்டாம், ஊர் வேண்டாம், உற்றார் உறவினர் வேண்டாம்' என்று எண்ணலானேன்.

மாக ஸ்நானம் முடிந்தது. இரண்டொரு மாதத்துக்கெல்லாம் என்னை மீண்டும் புனாவுக்கு மாற்றினார்கள். புனாவுக்கு வந்ததுமே இரண்டொரு நாளில் நான் பழைய மனிதனானேன். வேடிக்கை விளையாட்டிலும் பரிகாசத்திலும் சுவை கண்டேன். மோகமும் லோபமும் உள்ளத்தில் இடம் கொண்டன. என் விரக்தி மறைந்து, குடும்ப வாழ்வில் இன்பம் கண்டேன்.

ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த விரக்தி பிறகு எனக்கு வரவே இல்லை. இன்று நான் சம்சாரியாகி விட்டேன். இன்றும் ஆண்டுதோறும் மாக மாதம் வருகிறது. புனாவிலும் குளிர் நடுக்குகிறது. அந்தக் குளிரில் என்றாவது காலையில் குளியலறையில் நறுமணச் சோப்புத் தேய்த்து வெந்நீரில் குளிக்கும்போது, என் கண்ணுக்குத் திடீரென்று திரிவேணி சங்கமம் புலப்படுகிறது. லட்ச லட்சம் பேர் குளிக்கிறார்கள். குழந்தை போன்ற உற்சாகத்துடன் யாரோ என் காதோடு, ''வாருங்கள் ஐயா, ஸ்நானம் செய்யுங்கள்; வெள்ளம் ஓடுகிறது!'' என்று கொஞ்சுவது கேட்கிறது. ★

தமிழ்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

ஆயாசம்



களைப்பு



போட்டோ: ஆர். உதய பாஸ்கர்



ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை

1 மண்டலம் (48 நாள்) கிரமப்படி பூஜை செய்யப்பட்டது

ஆயுள் பூராவும் பலன் தரக்கூடிய
வெள்ளி ரக்ஷை ரூ. 43.75

தற்போது அனுப்ப வேண்டியது ரூ. 10-76. ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை எழுதி தற்பொழுது ரூ. 10.75 மணியார்டர் செய்யவும் கீழே கொடுத்துள்ளபடி நம்மிடம் ரக்ஷை வாங்கிய பிறகு 108 நாட்களுக்குள் நன்மையான பலன்களை அனுபவித்து திருப்தியிருப்பின் பாக்கி ரூ. 33/- அனுப்பவும். தற்பொழுது கேட்கும் தொகை வெள்ளி, ரிஜிஸ்ட்டர், விளம்பரச் செலவிற்குமாகக் — கேட்கப்படுகிறது. —

குறிப்பு:

(1) நியாயமான கோரிக்கைகளுக்கு மட்டும் ரக்ஷை பலன் தரும். (2) ரக்ஷை ஆர்டர் செய்பவருக்கு ஆர்டர் கிடைத்த 9-ம் நாள்தான் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (3) வி. பி. பி. யில் அனுப்பச் சாத்தியப்படாது. (4) வெளி நாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகைக்குப் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும்.

*

ஜோஸ்யர் பாரத்வாஜ

ஸ்ரீ ஜெயராம அய்யர்

கோட்டமருதூர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி
ஜியோதிஷ ஆபீஸ்

அரகண்டநல்லூர் போஸ்ட்
(தென் ஆற்காடு ஜில்லா)



தமிழக அரசு
சிறு தொழில் நிறுவனம்
உற்பத்தி செய்யும்

எஃகு சாமான்கள்
மர சாமான்கள்

உங்கள் வீடு, அலுவலகங்களின்
தேவைகளுக்கு இன்றியமையாதது







நேர்த்தியான வடிவம்
எழில்மிகு வண்ணம்
உறுதியான அமைப்பு

நிருவாக இயக்குனர்:
தமிழக அரசு
சிறு தொழில் நிறுவனம்,
35/2, உட்ஸ் ரோடு, சென்னை-2.



# பஸ் விலையில் மூன்றில் ஒரு பங்கு பாடி: பலரும் வருகின்றனர் டிவிஎஸ்ஸை நாடி.

## காரணம் என்ன? இலேசான ஆனால் உறுதியான பாடிகள் அமைத்து, சிக்கனத்துக்கு வழிகாட்டுவது டிவிஎஸ்

ஒரு சேஸிஸ் விலை ரூபாய் 50 ஆயிரம் என வைத்துக்கொள்வோம். அதன்மீது நல்ல பஸ் பாடி அமைப்பதற்கு ரூபாய் 25 ஆயிரம் ஆகலாம். எனவே நீங்கள் செலவிடும் பணத்துக்குத்தக்க பெறுமதி வேண்டுமானல். பாடி கட்டும் பொறுப்பை டி வி எஸ்ஸிடம் ஒப்படையுங்கள்

**தேவைகள் கோடி; அவைக்கேற்ற பாடி**

உங்கள் தேவைகள் எதுவாய் இருந்தாலும் அவைக்கேற்ற பாடிகள் அமைப்பதிலே நிபுணர்கள் டிவிஎஸ். நாற்பதாண்டுகளாக பாடி கட்டிவரும் பழுத்த அனுபவம் அவர்களுக்கு உண்டு. பலவித சேஸிஸ்மீது, பல்வகையான பாடிகள், பத்தாயிரத்துக்குமேல் கட்டியுள்ளனர். இலேசான. உறுதியான, ஆட்டமில்லாத, வசதியான பாடிகள்; டயர் தேய்மானமும் எண்ணெய்ச் செலவும் குறையும். எந்தவிதமான கரடுமுரடான சாலைகளையும்சமாளிக்கும். முதல்தரமான ஸ்டீல், மரம் முதலியவற்றையே உபயோகிப்பதால், நீண்டகாலம் உழைக்கும்.

**உங்கள் சேஸிஸ் எது?** அசோக் லேலாண்டு கோமெட், பெட்போர்டு. டாட்ஜ், பார்கோ, டாடா மெர்ஸிடீஸ்-பென்ஸ், வில்லீஸ் ஜீப் அல்லது ஸ்டாண்டர்டு 20?

**உங்கள் தேவை என்ன?** முழு அலுமினிய பஸ், மினி பஸ், உல்லாச பஸ், எக்ஸ்பிரஸ் வான், டெலிவரி வான், பிக்-அப்-வான், அம்புலன்ஸ் வான், மூடிய அல்லது திறந்த லாரி, முழு ஸ்டீல் பஸ், டிப்பர் அல்லது வேறென்ன? எதுவாய் இருந்தாலும் சரி, சிறந்த முறையில் பாடி கட்டும் ஸ்தாபனம் டிவிஎஸ்.

**உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்**

**சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை**

(இது ஒரு டி.வி.எஸ். ஸ்தாபனம்)

TVS



SI-4694



# திடீர் திருமணம்

### கோமதி ஸ்வாமிநாதன்

[காரியாலயத்தின் ஒரு பகுதி. நடுப்பகல் வேளை. கடிகாரத்தில் சிறிய முள் ஒன்றை நெருங்கும் வேளை. ஏற்கனவே பேனாவை மூடி வைத்திருந்த கணபதி மேஜை டிராயரிலிருந்து எதையோ எடுத்து வாயில் போட்டுக்கொள்கிறான். அவனுக்குப் பக்கவாட்டில் சங்கரனும், எதிரே குப்புசாமி, மணி ஜோடியும் அமர்ந்திருக்கிறார்கள்.]

**மணி:** நம்ப காந்திஜீ வேர்க்கடலை சாப்பிட ஆரம்பிச்சுட்டார்! லஞ்ச் டைம் வந்துடுத்து.

**குப்புசாமி:** கடலை சாப்பிடுகிறவரெல்லாம் காந்திஜீன்னா, அப்புறம் இந்தப் பட்டணத்திலே மகாத்மா இல்லாத சாதாரண ஆசாமியை அலைந்து தேடணும் பிரதர்.

**சங்கரன்:** கணபதி காலை வார ஒரு சான்ஸ் பார்த்துக்கிட்டு இருந்தே. கிடைச்சுடுத்தாக்கும்!

**குப்பு:** ஏனப்பா இப்படிச் சிண்டு முடியறீங்க? நான் கண்ணாலே பார்க்கறதைச் சொல்றேன். சமயங்களிலே நம்ப கணபதி ஒரு வெயிஸ்ட்கோட் போட்டுண்டு வருவான். அப்போதெல்லாம் அவன் நேருஜீ மாதிரி இருக்கான்னு நான் சொல்றதில்லையா? என்ன கணபதி, நீயே சொல்லு!

**மணி:** உன்னுடைய விளக்கம் முதல் தாக்குதலைவிட மோசமாக இருக்கே குப்புசாமி! கிழிஞ்சு போன டெரிலீன் சட்டையைத் தூரப் போட மனசு இல்லாமே அதை மறைக்க, கணபதி வெயிஸ்ட் மாட்டிக்கொண்டு வருவான்னு உனக்குத்தான் தெரியாதா? எனக்குத்தான் தெரியாதா?

**கணபதி:** இதோ பாருங்க! வேலையிருந்தா செய்யுங்க! இல்லை, டிபன் கொட்டிக்கப் போங்க! உங்க பேச்சிலே கிண்டல் நாயகனாக என் பெயர் அடிபடுவதை நான் அப்ஜெக்ட் பண்றேன்.

**குப்பு:** இப்போ மிஸ்டர் கணபதி அசல் மொரார்ஜீயாகவே மாறிவிட்டார். கோபம் வந்துடுத்து.

**மணி:** கணபதி! டிபன் கொட்டிக்கப் போங்கங்கற வார்த்தைக் கோவையை நாங்க 'அப்ஜெக்ட்' பண்றோம்! நாங்க ரெண்டு இட்லியும் ஒண்ணரை விட்டர் சாம்பாரும் இருபது பைசாவுக்குச் சாப்பிட்டு விட்டு வருவோம். நாங்க கொட்டிக்கிற பகாசுரன்கள்....

**குப்பு:** இவர் பெரிய கடலை மாமுனிவர்!

**கண:** ரோஷம் மாத்திரம் பிரம்மபுத்திர வெள்ளம் மாதிரி வருதே! முந்தாநாள்தானே அப்பா நம் குப்புசாமி, சாம்பார் குடிக்கிற வேகத்திலே சட்டையிலெல்லாம் கொட்டிக்கொண்டு, அதன்மேல் தண்ணீரையும் விட்டுக் கசக்கி மஞ்சள் மசேர் என்று வந்தான்? நீங்கதானே சாம்பார் கொட்டிப் போச்சுன்னு சொன்னீங்க? எனக்குப் பொடி வச்சுப் பேச எல்லாம் வராது. போகட்டும். டிபனைக் கொட்டிக்கொள்ளாமல் ஓட்டலுக்குப் போயிட்டு வாங்க.

**மணி:** ஹூம்! உன்னைச் சொல்லிக் குத்தமில்லை. உனக்கும் கல்யாணம், அது இதுன்னு ஆயிருந்தா நீ இப்படியெல்லாம் பேசமாட்டே.

**குப்பு:** ஏன்டா! இவன் யாருக்கு இப்படிச் சொத்துச் சேர்த்து வைக்கிறான்? பத்துப் பைசா வேர்க்கடலையோடும், பச்சைத் தண்ணி ஒரு கிளாஸோடையும் பகல் உணவை முடிச்சுடறானே!

**கண:** ஒரு அன்னதான சமாஜம், மூணு பொம்பளைக் காலேஜ், ரெண்டு ஆம்பளைக் காலேஜ் எல்லாம் கட்டப் போறேன்! நீங்க ஹாய்யாச் சாப்பிட வரலாம்! மனுஷன் கொஞ்சம் தாராளமாகச் செலவழித்தால் ஊதாரிப் பயல் என்கறீங்க. சிக்கனமாக இருந்தால் கஞ்சப் பயல்னு பட்டம் சூட்டறீங்க! உங்களுக்கு இப்படியே பிறத்தியானைப் பத்தி வம்பளந்தே பொழுது போகுது. உங்க கிட்டேயே ஆயிரம் ஓட்டைகள் அடைபடாமல் இருக்கு.

**மணி:** ஏன்? ஏதும் சிமின்ட் மூட்டை வச்சிருக்கியா? காரியாலயங்களிலே வேலை செய்கிற பல பேர்கள் இப்போதெல்லாம் ஏதாவது சைட் பிஸினஸ் வச்சுக்கறது சகஜந்தான். சுப்பரமணி ஒரு வெத்திலை பாக்குக் கடையே தன் தெருவிலே வச்சுட்டான். ஒர்க்கிங் அவர்ஸ் ஈவினிங் ஸிக்ஸ் டு டென். ஹரன் இருக்கானே; அவன் க்ளீனா ஒரு அப்பளாம் ஏஜென்ஸியே எடுத்து ஆர்டர் புக் பண்றான். அதுமாதிரி நீ கொல்லத்து வேலை ஏதாவது நடத்துகிறாயா? நல்ல லாபகரமான பிஸினஸ்தான் கணபதி! அன்றாட ரேட்டா? கான்ட்ராக்டா?

**கண:** இல்லறத் துறையை அலசி ஆராய்ந்தாயிற்று. அடுத்தாற்போல தொழில் துறையிலே புகுந்தாச்சாக்கும்! சரி சரி, கொஞ்ச நேரம் உங்க உளறல்களைக் கேட்காமல் வெளியே போயிட்டு வறேன். [போகிறான்]

**குப்பு:** சரி சரி! நம்ப பேச்சுநாயகன் இப்போ திடீர் தலைமறைவு ஆயிட்டான்! நாம் டிபனுக்குக் கிளம்பலாமே?

**சங்:** அட போகலாம் அப்பா! பத்து நிமிஷம் கழிச்சுத்தான் போகலாமே? சாம்பார் காலி ஆகிவிடாது. பயப்படாதே. ஏன் மணி! இந்தக் கணபதி தன் மனசிலே என்னடா நினைச்சுண்டு இருக்கான்?

**மணி:** குடும்பச் சுழலிலே அகப்பட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கும் நம்மையெல்லாம் பற்றி மகாமட்டமாய் நினைத்துக்கொண்டிருப்பான்.

**குப்பு:** அதுக்காகத்தான் இந்தப் பயலும் சீக்கிரமே கல்யாணம் பண்ணித் தொலைச்சுண்டு நம்ப குருப்பிலே சேர்ந்துடணம்னு பிரார்த்திக்கிறேன்.

**சங்:** அவனைப் பழி வாங்கற பிரார்த்தனைன்னா இது.

**குப்பு:** ஏனப்பா! இந்தக் கணபதி ஏதும் காதல் கீதல்னு அவஸ்தைப் படறானோ?

**மணி:** அந்த வியாதி வந்துடுத்துன்னா அதுக்கூன்னு ஒரு அலாதி அசட்டுக்களை முகத்தில் வந்துடும்டா! இவனுக்கு அந்தக் களை வரலியே! பயல் துர்வாசராகத்தான் இருக்கானே தவிர துஷ்யந்தனாய் விடவில்லையே!

**சங்:** ஏன் மணி! நம்ப கணபதி அடிக்கடி உங்க வீட்டுக்கு வருவானா?

**மணி:** எப்பவாவது ஒரு சமயம் ஞாயித்துக்கிழமைகளில் வருவான். ஆனால் என்ன உபசாரம் பண்ணினாலும் ஒரு வாய் காபிகூடச் சாப்பிட மாட்டான்.

**குப்பு:** அவன் ஏன் குடிக்கிறான்? அப்புறம் உனக்கு ஏதாவது சந்தர்ப்பத்திலே காபி வாங்கிக் கொடுக்கணுமே? காசு செலவழியாது? பயல் எமகாதக வருமுன் காப்போனாச்சே! அது சரி சங்கரா; கணபதி மணி வீட்டுக்கு வரானா என்று எதற்காகக் கேட்டாய்?

**சங்:** அதுவா? மணி சம்சாரம் மணியை விரட்டு விரட்டுன்னு விரட்டறதைப் பார்த்துட்டுத்தான் கணபதி

கல்யாண ஆசையை விட்டுட்டானோன்னு தெரிஞ்சுக்கறதுக்குத்தான்.

**மணி:** ஓஹோ! அப்படியா சமாசாரம்? அவ்விடத்திலே ரொம்ப வாழறதாக்கும்! உன் வீட்டுக்கு அவன் வந்திருந்தான்னா அவன் அன்னிக்கே எங்கேயாவது சாமியாராப் போயிருப்பான். அவன் இன்னும் ஆபீஸிலே வேலை செய்யறதுலேருந்து உன் வீட்டுக்கு வரல்லை என்றுதான் நினைக்கிறேன்.

**குப்பு:** அப்பா, பழி வாங்கிட்டியா? ரொம்ப சமர்த்து! வீட்டுக்கு வீடு வாசற்படி, விட்டுத் தள்ளு.

[காரியாலயப் பியூன் ராஜாபாதர் கையில் சில கவர்களுடன் வருகிறான்.]

**சங்:** என்னப்பா ராஜாபாதர், இந்த நேரத்திலேயும் தபால் கொண்டு வறே? நாளைக்கு காலை டிஸ்ட்ரிபியூஷன்லே சேர்த்துக் கொடேன்.

**ராஜாபாதர்:** இது ஆபீஸ் பேப்பர் இல்லீங்க. என் கல்யாண நோட்டீஸ். நீங்களெல்லாம் அவசியம் வரணும்.

[ஆளுக்கு ஓர் அழைப்பைக் கொடுத்துவிட்டுப் போகிறான்.]

**மணி:** (கல்யாண அழைப்பைப் பிரித்துப் பார்த்துவிட்டு) பெயர்ப் பொருத்தம் பிரமாதம் — ராஜாபாதர், ராணி அம்மாள்! ராஜாங்கமே நடத்துவாங்க!

**சங்:** அவங்க ராஜாங்கம் நடத்தட்டும்; இல்லே, தர்பாரே நடத்தட்டும். அது அப்புறம் நடக்கிற விஷயம். இப்போ உடனடியாக ராஜாபாதரோட தோழர்கள் வசூல் லிஸ்டைத் தூக்கிக்கொண்டு வந்து நிற்பான்களே!

**குப்பு:** அட எழவே! குறைந்த பட்சம் ஒரு ரூபாயாவது அழுது தொலையணுமே! இவங்களையெல்லாம் யாரு கல்யாணம் பண்ணிக்கலேன்னு கேட்டாங்க? சுத்த வேலையத்த பசங்க. வாழ்க்கையிலே ஒவ்வொருத்தன் கல்யாணத்தைப் பண்ணிண்டு என்ன அவஸ்தைப்படறான்கள்!

**மணி:** நீ உன்னுடைய ஆட்டோபயகராபியை ராஜாபாதர் கிட்டே எழுதி வாசித்துக் காண்பித்திருக்கலாமே! இந்த லட்சணத்திலே நீ கணபதி கல்யாணம் பண்ணிக்கலியேன்னு கவலைப்படறே.

**குப்பு:** அவன் நிச்சயமாய்க் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். அதனாலே வசூல் லிஸ்ட் வராது. தைரியமாய் அவனைத் தூண்டலாம்.

**மணி:** புதுசா ஒரு சட்டமே கொண்டு வந்துவிடலாம். ஒண்ணு, வேலையிலே சேர்வதற்கு முன்னாலேயே கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டும்; இல்லே, ரிட்டயரான பிறகு பண்ணிக்கொள்ள வேண்டும். நடுவிலே கல்யாணம் பண்ணிண்டு இப்படிச் சக ஊழியர்கள் பிராணனை வாங்கக் கூடாது.

**சங்:** பாவம் மணி! அவன் வேலைக்கு அப்ளிகேஷன் போட நினைத்ததற்கு முன்னாலேயே அவங்க வீட்டிலே கல்யாண இன்விடேஷனை அச்சடிச்சுட்டாங்க! என்ன பண்றது?

**குப்பு:** டிபனுக்கு நான் வரலேப்பா. நீங்க போயிட்டு வாங்க.

**மணி:** பேஷ்! ஒரு ரூபாய் கான்ட்ரிபியூஷனுக்கு இப்பவே குப்புசாமி இருபது பைசா சேத்துவிட்டான். அட பாவி! அப்புறம் பசிக்குமே!

**சங்:** குப்புசாமி! ஒரு சின்ன ஐடியா. நம்ப சோமு அவன் செக்ஷனிலே இப்பத்தான் டிபன் பாக்ஸைத் திறந்துண்டு இருப்பான். ஏதாவது ஊறுகாய் இருக்கான்னு கேட்கறுப் போலே நோட்டம் விடு. கடைசியிலே அந்த அசடு இரண்டு கை தயிர் சாதத்தோடேயே ஊறுகாய் கொடுத்துடுவான். இப்படியே ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஐந்து தடவை செய்துவிடு. ஒரு ரூபாய் மிச்சமாகும்.

**மணி:** என்னப்பா சங்கரா! குப்புசாமியையும் லேடி கிளார்க் பிரமீளான்னு தீர்மானம் பண்ணிட்டியா? அவதான்.....

**குப்பு:** அவ என்ன பண்ணினாள்?

**சங்:** துளி ரோஷத்தைக் காணோம். கதைகேட்கக் காதைத் தீட்டிண்டுவா. அவ நைலான் சாரியும் சாட்டின் பிளவுசும் வாங்கினாளாம். நீயும் வாங்கிக் கட்டிண்டு வா நாளைக்கு.

**குப்பு:** நீ சொல்லு மணி! பிரமீளா அப்பாவிப் பொண்ணாச்சே!

**மணி:** எல்லாம் வேஷம்! வீட்டிலேயிருந்து டிபனும் கொண்டு வறதில்லை; ஓட்டலுக்கும் போறதில்லை.

**குப்:** பசியா வரம் வாங்கிண்டு வந்திருக்காளோ என்னவோ?

**மணி:** பகாசுரப் பசி வரந்தான் வாங்கிண்டு வந்திருக்கா. மற்ற லேடீஸ் எல்லாம் டிபன் ரூமிலே போய் உட்காரும்போது இவளும் போவாள். 'யாரு டிபன் பாக்ஸ்லேயிருந்து வெங்காய வாசனை? புளியோதரையா? உங்க வீட்டிலே வேர்க்கடலை போட்டுப் பண்ணுவாளே!' என்றெல்லாம் ஐஸ் வைத்து விசாரித்துவிட்டு, 'எனக்குப் பசிக்கல்லே'ன்னு சரடு விடுவா. மற்றவர்களெல்லாம் ஆளுக்குக் கொஞ்சம் சாம்பிள் கொடுத்து விடுவார்கள்.

**சங்:** பெரிய தொடர்கதையா நீட்டறியே! சிறுகதையாக்கு.

**மணி:** துணுக்காகவே ஆக்கிடறேன். இந்தத் துட்டு மிச்சக் குட்டு உடைஞ்சு போச்சு! மற்ற லேடீஸ் எல்லாம், பிரமீளா ஸீட்டை விட்டுக் கிளம்பறதுக்கு முன்னாலேயே தங்கள் டிபனை முடிச்சுண்டு குழாயடிக்கு வந்துடறா. இதுமாதிரி சோமுவும் குப்புசாமி வந்துடப் போறானேன்னு அவசர அவசரமா டிபனை விழுங்க ஆரம்பிச்சுடுவான்.

**சங்:** பலே பலே! அந்தப் பொண்ணோட கவனத்தைக் கணபதி பக்கம் திருப்பினால் என்ன? சரியான ஜோடியாக அமையாது? ஆனால் அவகூட இப்போ தட்டுப்படலே. ஒரு மாசம் லீவிலே போயிட்டாளாம்.

**குப்பு:** அட அப்பா! கடலை தின்னுகிறானே, பிண்ணாக்கைத் தின்கிறானே? ஆனால் கணபதி ஒசி டிபனுக்கு இதுவரை வந்ததில்லை. ஒருவேளை அந்த அம்மா காற்று அவன் மேலே அதிகமாகப் பட்டு அவனும்....

**மணி:** இன்னிக்கு நமக்கு டிபன் இந்தக் கல்யாணப் பேச்சுத்தானா? எழுந்திருங்கப்பா.

[கிராமத்துக்காரர் போலத் தோற்றமளிக்கும் ஒரு பெரியவர் அவர்களை நோக்கி வருகிறார்.]

**சங்:** (மெதுவாக) யாரப்பா இவர்? கையில் ஏதும் தர்ம கார்ய வசூல் லிஸ்ட் இருக்கான்னு கவனிச்சுப் பேசுங்க.

**குப்:** (இரைந்து) இப்போ ஒன்றும் சௌகரியப்படாது!.... நீங்க....

**பெரியவர்:** (ஒரு கணம் நிதானித்து) ஓ! கணபதியைப் பார்க்க இப்போ சௌகர்யப்படாதுன்னு சொல்றேளா? லீவு கீவு போட்டுட்டுப் போயிட்டானா?

**மணி:** ஓ! நீங்க கணபதியைத் தேடிண்டு வந்திருக்கேளா?

**பெரிய:** ஆமாம். நான் அவன் மாமா. போன தடவை வந்தபோது இந்த செக்ஷனிலேதான் இருந்தான். அப்போ நீங்கள் எல்லாம் இங்கே இல்லை.

**குப்பு:** உட்காருங்கோ, உட்காருங்கோ! ஸாருக்கு எந்த ஊரோ?

**பெரிய:** எனக்குத் திருநெல்வேலிக்குப் பக்கத்திலே உள்ள கருங்குளம் சொந்த ஊரு. கணபதி என் மருமான்.

**சங்:** உங்க மருமானை ஏன் பெயரைப் போலவே பிரம்மசாரியாக விட்டுட்டீங்க?

**பெரிய:** இந்தக் காலத்துப் பிள்ளைகளிலே யாரு பெரியவா சொல்றபடி கேட்டிருக்கிறா? கேட்கறா? எனக்கும் சொல்லி அலுத்துப் போச்சு. அதனாலே அவன் ஊர்ப்பக்கமே வறதில்லை.

**மணி:** இப்போ அது விஷயமாத்தான் வந்திருக்கிறீர்களா?

**பெரிய:** இல்லேப்பா. வேறே விஷயமா பட்டணத்துக்கு அவசரமா வந்தேன். ரெண்டே முக்கால் மணி ஜனதாவிலே ஊருக்குத் திரும்பியாகணும். இந்தப் பயலைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.

**குப்பு:** கணபதி எங்கேயோ வெளியே போயிட்டு வறேன்னுட்டுப் போனான். எப்போ திரும்புவான் என்று தெரியாது.

**சங்:** ஏதாவது அவசர சமாசாரம் சொல்லணும்னா எங்ககிட்டே சொல்லிட்டுப் போங்கோ.

**மணி:** நாங்க சொல்லிடறோம்.

**பெரிய:** கருங்குளத்து மாமா கந்தசாமி வந்துட்டுப் போனார்னு சொன்னாப் போதும். சீக்கிரம் ஏதாவது கல்யாணப் பத்திரிகையை அனுப்பிச்சு வைக்கச் சொன்னார்னு சொல்லுங்க. பெரியவர்களாப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கும் காலம் கடந்துவிட்டது. இனிமே அவங்களாகத்தான் நடத்திக்கணும்.

**குப்பு:** கையிலே இருக்கிற ராஜாபாதர் நோட்டீஸைக் கொடேன். பெரியவர் சாம்பிள் கேட்கிறார் போலிருக்கு.

**மணி:** (குப்புசாமியை முறைத்துப் பார்த்துவிட்டு) சொல்லிடறேன் ஸார். நீங்க போயிட்டு வாங்க. அப்புறம் டிரெயினுக்கு லேட்டாயிடப் போறது.

**பெரிய:** நான் வறேன். கணபதியைக் கவனிச்சுக்குங்கோ. [போகிறார்.]

**சங்:** சுத்த அப்பாவி மனுஷனா இருப்பார்போலிருக்கு!

**மணி:** ஒரு பஸ்ட் கிளாஸ் யோசனை! இந்தக் கணபதிப் பயலைச்



கொஞ்சம் ஓடவிட்டு வேடிக்கை பார்க்கலாம். சம்மதமா?

**குப்பு:** சொல்லு! சொல்லு!

**மணி:** கிளம்புங்க! ஓட்டலுக்குப் போயிட்டு வரப்போ சொல்றேன்.

[கிளம்புகிறார்கள்.]

2

[அதே இடம்.

பிற்பகல் மணி இரண்டரை. கணபதி தன் இடத்தில் உட்கார்ந்து வேலையில் ஈடுபட்டிருக்கிறான். டிபனை முடித்துக்கொண்டு, மணி, குப்புசாமி, சங்கரன் மூன்று பேரும் சாவகாசமாக வருகிறார்கள்.]

**மணி:** என்னப்பா கணபதி, அவசியமான நேரத்திலே எங்கே போயிட்டே?

**கண:** இங்கே பக்கத்திலே ஒரு ஓட்டலுக்கு இட்லி சாப்பிடப் போயிருந்தேன். என்னைப் பார்த்த பிறகுதான் சாம்பார் தயாரிக்கப் பாத்திரத்தை அடுப்பில் ஏத்தினான். காத்துக்கொண்டிருந்தேன். அந்த நேரத்திலே இட்லி எல்லாம் காலியாகிவிட்டது. அதனாலே சாம்பாரை மாத்திரம் ஒரு டம்ளர் குடிச்சுட்டு வந்தேன்.

**குப்பு:** மணி, ஜாக்ரதை! ரஷியாக்காரன் செக்கோஸ்லேவியாவைத் தாக்கறமாதிரி நம்மைத் தாக்கறான் கணபதி.

**சங்:** அவன் ஆசைதான் தீரட்டுமே! எத்தனை நாள் இனிமே இப்படிப் பேசுவான்? அவன் மாமா சொல்லிட்டுப் போனதிலிருந்து, இன்னிக்குப் பதினைந்தாம் நாள் முகூர்த்தத்திலே இவன் கொட்டமெல்லாம் அடங்கிப் போய், நம்ப கட்சியிலே சேர்ந்துடப்போறான்.

**குப்பு:** அடேடே, மறந்தே போச்சே! கணபதி, கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே உன்னோட கருங்குளத்து மாமா கந்தசாமி ஆவேசத்தோடே இங்கே வந்திருந்தார்.

**மணி:** நல்ல வேளை! கணபதி இல்லை. இருந்திருந்தான்னா, கையோடேயே இழுத்துண்டு போயிருப்பார்.

**சங்:** நமக்கெதற்கு இந்த வம்பெல்லாம்? அவன் மாமா பெண்ணைத் தேர்ந்தெடுத்துக் கல்யாணம் பண்ணி வைக்கிறார். இவன் ஜாம் ஜாம்னு தாலி கட்டப்போறான். கறுப்போ, கண்ட்ரியோ, கட்டுப் பொட்டியோ? அவன் பாடு அவள் பாடு. பட்டணத்துக்கு வந்தால் பாஷ்னயிட்டுப் போறா.

**கண:** (பொறுமையிழந்து) என்னப்பா வில்லுப் பாட்டுப் பாடறீங்க? நான் அகப்பட்டுக் கொள்வது போதாதென்று எங்க மாமா வேறு உங்கள் பேச்சில் அடிபட வேண்டுமா?

**மணி:** இந்தாப்பா, கணபதி! விஷயத்தைத் தெளிவாக் கேட்டுக்கோ. உங்க மாமா கருங்குளம் கந்தசாமின்னு சொல்லிண்டு ஒருத்தர் கொஞ்ச நாழி முன்னாலே உன்னைப் பார்க்க வந்தார். கொஞ்சம் சிவப்பா இரட்டை நாடியாக....ஒரு வாரத்தாடியோடே....

**சங்:** ரொம்பக் கோபமாக்கூட இருந்தார்.

**மணி:** உஷ்! சும்மா இரு. சங்கரா! கணபதியைச் சந்திக்க முடியலியேங்கற கோபம். கணபதி, உனக்கு ஊரிலேயே பெண் பார்த்து நிச்சயம் பண்ணிட்டாராம்.

**குப்பு:** நீ எந்த ஆட்சேபம் எழுப்பினாலும் அவர் காதிலே போட்டுக்

கொள்ள மாட்டாராம். முகூர்த்தம் வைத்தாயிற்றும்.

**கண:** முதலில் அந்த மாமா எங்கேன்னு சொல்லுங்க. அப்புறம் நீங்க கோரஸ் பாடலாம்.

**மணி:** அநேகமாக அவர் இந்த நேரம் செங்கல்பட்டைத் தாண்டியிருப்பார். திருநெல்வேலிச் சிநேகிதரோடு அவர் காரில் வந்தாராம். மறுபடியும் கல்யாண சாமான்கள் வாங்க அடுத்த வாரம் வருவார். நீ இருந்தால் உன்னைக் கையோடு ஊருக்கு அழைத்துப் போய்ப் பத்திரப்படுத்தத் தயாராகத்தான் வந்திருந்தார். உன் அதிருஷ்டம், நீ சமயம் பார்த்துத் தலைமறைவாயிட்டே.

**சங்:** கணபதி, ஒரு முக்கிய விஷயம்: இந்தச் சமாசாரத்தை எல்லாம் எங்க கிட்டேயிருந்து தெரிஞ்சுண்டதாக நீ காண்பித்துக் கொள்ளக் கூடாது. அப்புறம் நாங்க உன் மனசைக் கலைச்சுப்புட்டோம் என்ற வீண் பொல்லாப்பு....

**குப்பு:** இவன் மாமா, நாளைக்கு மதுரையிலே தங்கிட்டு ராத்திரிக்கு மேலேதான் ஊருக்குப் போறாராம். நம்ப கணபதி நாளைக்கு ராத்திரி ரெயிலேறி நாளைக்கு மறுநாள் மத்தியானம் கருங்குளம் போய் மாமாவோட ஒரு குஸ்தி போட்டுட்டுத் திரும்பி வந்துடுவான்.

**மணி:** ஆமாம், ஆமாம். உடனடியாக நடவடிக்கை எடுக்கலேன்னா, அப்புறம் மேளக்காரனும் பந்தல்காரனும் வந்துடுவாங்களே. எத்தனையோ அப்ஸரஸ்களைப் பார்த்தே மனசைக் கலக்கிக்காத கணபதி அந்த முன்பின் பார்த்திராத பட்டிக்காட்டுப் பெண்ணை ஏத்துக்கொள்வானா என்ன? கணபதி, நீ என்ன சொல்றே?

**கண:** ஊருக்குப் போயிட்டு வந்து அப்புறம் சொல்றேன். முதலில் நாலு நாளைக்கு லீவு எழுதிக் கொடுத்துட்டு வறேன். [போகிறான்.]

**சங்:** மணி, உன் நாடகம் பிரமாதம்! ஆனால் இந்தப் பயல் இப்போ நிஜமாவே ஊருக்குக் கிளம்பிவிடுவான் போலிருக்கே.

**மணி:** போகட்டுமே! என்ன குடி முழுகிப் போச்சு?

**குப்பு:** அப்புறம் நாம் கலாட்டாவுக்காகப் பொய் சொன்னோம் என்று தெரிந்தால் சீறி விழுவானே!

**மணி:** அட நீ ஒண்ணு. அதை அப்புறம் வேறு நாடகமாடிச் சமாளிக்கலாம். அவன் மாமா ஊருக்குத் தானே போறான்? ஐம்பது ரூபாய் செலவாகும். கஞ்சப் பயல் நமக்கு ஒரு வேளைக் காபிதான் வாங்கித் தர மாட்டேன் என்கிறான். ரெயில்வே இலாகாவுக்குத்தான் கொடுக்கட்டுமே.

**சங்:** இந்த விஷயம் பற்றி இனிமே ஒரு வார்த்தை நாம் யாரும் பேச வேண்டாம். அப்புறம் கணபதிக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுப் புரோகிராமைக் கான்ஸல் பண்ணிடுவான்.

**மணி:** எல்லாப் பொறுப்பையும் எங்கிட்டே விட்டுட்டு ஒதுங்கிடுங்க.

[மூவரும் வேலையில் ஈடுபடுகிறார்கள்.]

## 3

[கருங்குளம் கிராமத்தில் கந்தசாமி வீட்டுத் திண்ணை. கந்தசாமி பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார். கணபதி கையில் ஒரு பையுடன் அவர் முன் வந்து நிற்கிறான்.]

**கண:** (முறைப்பாக) மாமா! நீங்க இப்படிச் செய்வீர்கள் என்று எதிர் பார்க்கலே.

**கந்தசாமி:** கணபதியா! வா, வா! அதனாலே என்ன இப்போ? விஷயம் முடிஞ்சு போச்சு!

**கண:** அதெப்படி முடியும்னு கேட்கறேன்! என்ன இருந்தாலும் நீங்க இப்படி....

**கந்த:** அவகாசம் இல்லேடா. ஒரே பிரஷர். நான் என்ன செய்யட்டும்?

**கண:** கான்ஸல் செய்யணும்.

**கந்த:** அதெப்படி முடியும்? அவர் கிட்டே ஒப்புக்கொண்டுதானே நான் கிளம்பினேன்?

**கண:** நான் ஒப்புக்கொள்ளலியே!

**கந்த:** இந்த பாரு கணபதி! எனக்கு உன்பேரிலே பாசம் இல்லியா? அன்பில்லையா? நான் ஏதாவது செஞ்சால் காரியத்தோடுதான் செய்வேன்.

**கண:** (ஆவேசமாக) மாமா! உங்க ஏற்பாட்டுக்கு நான் ஒப்புக்கொள்ள முடியாது. இந்தக் கல்யாணத்தைக் கான்ஸல் பண்ணணும். அவள் ரதியாக இருக்கட்டும்; ரம்பையாக இருக்கட்டும். எனக்குத் தேவையில்லை.

**கந்த:** (எழுந்திருந்து நிதானமாக) யாருக்குடா கல்யாணம்? என்ன சொல்றே?

**கண:** இந்த நாடகமெல்லாம் வேண்டாம் மாமா! நீங்க எனக்காக ஏற்பாடு பண்ணி நிச்சயித்திருக்கிற கல்யாணம்; அது ரத்தாகணும்.

**கந்த:** டேய்! உனக்கா கல்யாணம்? நான் ஏற்பாடு பண்ணியிருக்கேனா? (மடமடவென்று சிரித்துவிட்டு) எந்தப் பயல் உன் கிட்ட இப்படிச் சரடு விட்டான்?

**கண:** (திகைத்துப் பிறகு சமாளித்து) சும்மா மழுப்பாதீங்க மாமா! 'விஷயம் முடிஞ்சு போச்சு, அவகாசமில்லை. ஒரே பிரஷர். ஒப்புக்கொண்டு கிளம்பி வந்தது' என்ற பேச்செல்லாம் உங்கள் வாயிலிருந்து தானே சற்று முன்னால் வந்தது?

**கந்த:** அட ராமசந்திரா! ஒரு கோர்ட் கேஸ் சம்பந்தமாகப் பட்டணம் வந்து திரும்பிய அவசரத்தைச் சொன்னேன். அதனால்தான் உன்னை இருந்து சாவகாசமாப் பார்க்க முடியவில்லை. கூடவந்த வக்கீல் அன்றைய ஜனதாவிலேயே கிளம்பணும்னுட்டார். அதைத்தான் முடிஞ்சு போன விஷயம்னேன்.

**கண:** (அசடு வழிய) அப்படீன்னா நீங்க என் கல்யாண விஷயமாய் ஒன்னும் ஏற்பாடு செய்யவில்லையா?

**கந்த:** ஏண்டா டேய்! எனக்கென்ன பைத்தியமா உன் விஷயத்திலே தலையிட? எப்போ நீ மூணும் வருஷம் நான் முனைஞ்சு நின்ன போது முகம் கொடுத்துப் பேசாமல் ஒதுங்கினையோ அப்பவே நான் கை கழுவிட்டேனே! எங்கேயாவது நீயாகக் கல்யாணம் பண்ணிண்டால் ஒரு கடுதாசி போடு. முடிஞ்சா வறேன். இல்லேன்னா ஒரு வாழ்த்து அனுப்பி வைக்கிறேன். அது போகட்டும். எதற்கு இப்படித் திடீர்னு புறப்பட்டு வந்து நிற்கறே?

**கண:** அப்படி ஆயிப்போச்சு. ஒரு சிக்கல்!

**கந்த:** என்னடா சொன்னே? சிக்கலா? ஏதாவது காதல் விவகாரத்திலே மாட்டிண்டுட்டியா? சொல்லுடா.

**கண:** காதல் விவகாரமில்லை, மாமா. காலிப்பயல்கள் விவகாரம். என் கூடவே வேலை செய்கிற காலிப்பயல்கள். என் காலை வாரிவிட்டிருக்காங்க. புரியுது....

**கந்த:** என்னடா புரியுது?

**கண:** என் நிலைமை. இப்போ அவங்களுக்கு ஒரு பாடம் கற்பிக்கணும், மாமா! நீங்க ஒரு அர்ஜண்ட் உதவி பண்ணணும்.

**கந்த:** பணம் கிணம் வேணுமா? எவ்வளவு வேணும்?

**கண:** அதெல்லாம் வேண்டாம். இப்போ எனக்கு உடனடியாகக் கல்யாணம் தேவை. இந்த ஊரிலே யாராவது பொண்ணைப் பெத்தவங்க மாப்பிள்ளை கிடைக்காமல் தவிச்சுட்டு இருக்காங்களா? சொல்லுங்க. தாலியைக் கட்டி அவளைக் கூட்டிக்கொண்டு போயிடறேன்.

**கந்த:** கணபதி, மழை கொட்டப் போறது. உனக்கே கல்யாண ஆசை வந்துடுத்துன்னா....

**கண:** ஆசை இல்லை மாமா! வெறி! அதாவது வெற்றியடைய வெறி. என் சிநேகிதங்க சில பேர் மூக்கை அறுக்கணும். அதற்காக இப்போ கல்யாணம் தேவை.

**கந்த:** நம்ப கோயில் குருக்கள் பேத்தி இருக்கா. ஆனா ஒத்துக்காது. வேண்டாம்! டேய் டேய்! கணபதி. நம்ப நாகசாமியைத் தெரியுமா? சந்நிதித் தெரு நாகசாமி. அவனுக்கு உறவுக்காரப் பொண் ஒண்ணு பட்டணத்திலேருந்து லீவுக்கு வந்திருக்கு! நாகசாமிகூட அந்தப் பொண்ணுக்கு வரன் பார்க்கணும்னு சொல்லிண்டு இருந்தான். குட்டி ஃபஸ்ட் கிளாஸா, பாஷனா இருக்கா.

**கண:** நீங்க போயி உடனடியா அந்த இடத்தை செட்டில் பண்ணுங்க. சீர் வரிசை, அது இது எல்லாம் அவர்கள் உசிதப்படியே நடக்கட்டும். நான் ஆபீஸுக்கு என் லீவை அதிகரிக்கச் சொல்லி லெட்டர் போட்டுவிடுகிறேன்.

**கந்த:** அப்புறம் கான்ஸல் பண்ணு, டிஸ்மிஸ் பண்ணுன்னு குதிக்கமாட்டியே?

**கண:** கிண்டல் பண்ணாதிங்க மாமா. நீங்க போங்க சீக்கிரம். நாகசாமி எங்கேயாவது வெளியே போயிடப் போறார்.

[கந்தசாமி வெளியே போகிறார். கணபதி உள்ளே போகிறான்.]

4

[கணபதியின் காரியாலயத்தில் அவன் வேலை செய்யும் பகுதி. அவனைத் தவிர மற்ற மூவரும் உட்கார்ந்திருக்கிறார்கள்.]

**சங்:** நம்ப விளையாட்டு வினையாகி விடக் கூடாதேன்னு நான் நடுங்கறேன். இந்த யோசனைக்கு மணிதான் பொறுப்பு.

**மணி:** உதறிக்கிறீங்களா? சுத்தத் துடை நடுங்கிப் பசங்க! நீங்களும் சேர்ந்து பக்க வாத்தியம் வாசிக்கலே? மறந்துட்டிங்களா?

[வேறு செக்ஷன் டைப்பிஸ்ட் பரிமளா கையில் சில கவர்களுடன் வருகிறாள்.]

**குப்பு:** வாம்மா பரிமளா! உன் கல்யாணக் கடுதாசியா? ஞாயிற்றுக் கிழமை பார்த்து முகூர்த்தம் வச்சுண்டு இருக்கியா? அப்பத்தான் எங்களாலே மத்தியான்னச் சாப்பாட்டுக்கும் வர முடியும்.

**பரிமளா:** இது என் கல்யாணக் கடுதாசி இல்லே. டெஸ்பாட்ச் கிளார்க் பிரமீளாவின் மாரியேஜ் இன்விடேஷன்.

**மணி:** ப்ரமீளாவுக்கும் பரிமளாவுக்கும் உச்சரிப்பில் அதிக வித்தியாசமில்லை.

**சங்:** (மெதுவாக) டிபன் வேட்டையாடறதிலேதான் வித்தியாசம்.

**பரி:** என்ன சொல்றீங்க?

**மணி:** ஒண்ணுமில்லை. டிபனையும் ஒரு கை பார்க்கணுங்கறான்.

[பரிமளா அழைப்புக்களைக் கொடுத்துவிட்டுப் போகிறாள். சங்கரன் பிரித்துப் பார்க்கிறான்.]

**சங்:** மணி, குப்புசாமி! நான் மயக்கம் போட்டு விழப்போகிறேன். அதற்கு முன்னால், மாப்பிள்ளை யாருன்னு சொல்லிடறேன். நம்ப வேர்க்கடலை கணபதி!

**குப்பு:** ஆமா! கல்யாணம் கருங்குளத்திலே!....கந்தசாமி பேருகூட இருக்கே!....அட பாவி! பிரமீளா படா ஸ்டைல் பொண்ணான்னா!

**சங்:** கணபதி யோகசாலி. அதெப்படி இந்தப் பயல் கருங்குளத்துக்கு ஓடினவன், கல்யாணச் சுழலிலே மாட்டிண்டான்?



**சங்:** மணி! இந்தக் கணபதி அவ்வளவு வேகமா ஊருக்குப் போனான். பதினஞ்சு நாளாச்சு. ஆளைக் காணலியே!

**குப்பு:** நாளாக நாளாக எனக்குப் பயம் ஜாஸ்தியாறது. திரும்பி வந்தவுடனே நம்மைக் கிழிகிழின்னு கிழிச்சுடப் போறான்.

**மணி:** மூணு வாரம் லீவு எக்ஸ்டென்ட் பண்ணி அப்ளிகேஷன் அனுப்பிச்சிருக்கான். நம்பேரிலே ஏற்பட்ட கோபத்திலே, பைத்தியம் கியித்தியம் பிடிச்சுடுத்தோ என்னவோ?

**குப்பு:** பட்டணத்து பாக்ரவுண்டிலே புலப்படாத அவள் அழகு பட்டிக்காட்டு பாக்ரவுண்டிலே பிரகாசிச்சுடுத்தா?

**மணி:** (பர்ர் என்று ஒரு பேப்பரைக் கிழித்து) வரிசையாக் கையெழுத்துப் போடுங்கோ. நான் ஐந்து ரூபாய் போடறேன். வசூல் லிஸ்ட் பிரமாதமா இருக்கணும். நாம் கொடுக்கிற பிரஸன்டைப் பார்த்து, கணபதி வாயைத் திறக்காமல் இருக்கணும். வேறவழியே இல்லை.

[சிரிப்பொலி எழுகிறது.] ★




## Today, Pfizer means pharmaceuticals, animal health products, pharmaceutical chemicals, agrochemicals and nutritional products

To put science to work for the welfare of people...This mandate brought Pfizer to India in 1951, with a very useful range of products — representing intensive research, a century's experience and the very latest production technology. In 1958, Pfizer and Dumex joined forces and embarked on a programme of further expansion. Today, Pfizer is a name associated with dynamic leadership in many fields.

*Pharmaceuticals*—the Pfizer range includes various antibiotics, T.B. drugs, vitamins, diabetic drugs, hormones, diuretics, and many other specialities. On the nutritional front, Pfizer has developed and marketed a range of products specially formulated for Indian conditions. *Agricultural and animal health products* include agrochemicals, feed supplements and veterinary medicines. *Pharmaceutical Chemicals*—Pfizer's indigenous production has made the country self-sufficient in various important basic pharmaceuticals and is saving increasingly bigger sums of foreign exchange every year. *Exports*—Pfizer's export drive is fast gaining momentum; the results achieved so far augur well for the future.

Some interesting facts about Pfizer—

1. In India, Pfizer has two manufacturing plants, research laboratories, 16 branch offices and about 2,000 employees.
2. Pfizer was the first in India to manufacture—largely from indigenous materials—broad-spectrum antibiotics, Oxytetracycline and Tetracycline. Other pioneering basic manufacturing activities of Pfizer in India include PAS, Isoniazid, Protein Hydrolysate and Chlorpropamide.
3. Worldwide, Pfizer currently spends Rs. 18 crores on research alone and over Rs. 28 crores on capital expansion per year. Total worldwide Pfizer sales in 1967 have exceeded Rs. 470 crores.

Pfizer

*Science for the world's well-being*

PHARMACEUTICALS — ANIMAL HEALTH PRODUCTS — PHARMACEUTICAL CHEMICALS — AGROCHEMICALS — NUTRITIONAL PRODUCTS





# ஸ்வாமியே சரணம் ஐயப்பா!

“ஸ்வாமியே சரணம் ஐயப்பா!'' என்ற கோஷம் ஒலிக்கத் தொடங்குகிறது. சபரிமலை யாத்திரை செய்யச் சங்கற்பித்துக் கொண்டு குருஸ்வாமியாகிய ஐயப்பனிடம் மாலை வாங்கிப் போட்டுக்கொண்டு பிரமசரியம் காத்த ஐயப்ப பக்தர்கள் இரண்டு முடிச்சு அடங்கின கட்டுக்களுடன் புறப்பட்டுவிடுகிறார்கள்.



இரு முடிக்கட்டு என்றால் என்ன தெரியுமா? தேங்காயின் குடுமியை எடுத்துவிட்டு அதனுள்ளே நெய்யை நிரப்பி மூடி அதையும் பூசைக்கு வேண்டிய பண்டங்களையும் ஒரு முடிச்சாகவும் தம்முடைய உணவு முதலியவற்றுக்கு வேண்டியவற்றை ஒரு முடிச்சாகவும் வைத்து இருமுடிகள் உள்ள ஒரு கட்டாகக் கட்டிக்கொள்கிறார்கள். புறப்படும்போது தேங்காய் உடைத்துத் தீபாராதனை செய்து புறப்படுகிறார்கள்.





கிழவர்களும் குமரர்களும் சிறிய இளைஞர்களுங்கூடப் பக்தியுடன் புறப்பட்டுவிடுகிறார்கள். அவர்களுடைய உள்ளத்திலே பக்தியைச் சுமந்து கொண்டும் தலையில் இரு முடிக்கட்டைச் சுமந்து கொண்டும் செல்கிறார்கள். எல்லோரும் ஒரு முகமாகச் சபரிமலை ஐயப்பனுடைய நினைவாகவே நடந்து செல்கிறார்கள். வீட்டைப்பற்றிய நினைவே இல்லை; பதினெட்டாம்படி ஏறுவது எப்போது என்ற ஒரே எண்ணந்தான்.

கூட்டம் கூட்டமாகப் போகிறார்கள். ''ஸ்வாமியே சரணம் ஐயப்பா!'' என்ற முழக்கம் எப்போதும் ஒலிக்கிறது. மகரவிளக்குக் காணவேண்டும் என்ற லக்ஷ்யத்தோடு போகிறார்கள்.





பல வழிகளிலிருந்தும் வரும் பக்தர்கள் எருமேலி என்னும் இடத்தில் சந்திக்கிறார்கள். அங்கிருந்து ஒரே காட்டு வழிதான். ஐயப்பனுடைய திருநாம ஒலி அவர்களுடைய நெஞ்சில் அச்சத்தைப் போக்குகிறது. தம் தலைமேல் இளஞ்சிறுவரைத் தூக்கிக்கொண்டு போவாரையும் கிழவரை அழைத்துச் செல்வாரையும் ஐயப்ப பக்தியே இயக்குகிறது.









போகும் வழியில் அழுதாறு என்ற ஆற்றில் பக்தர்கள் நீராடி அநுஷ்டானம் செய்கிறார்கள். இந்த ஆற்றுக்கு அலஸா நதி என்றும் பெயர் உண்டு. இங்கே நீராடிப் புனிதம் பெற்று மீண்டும் யாத்திரையைத் தொடங்கிச் சென்று, இடையே ஐயப்பனை வளர்த்த பந்தள ராஜா இருந்த இடத்தில் தங்குகிறார்கள். அங்கே தங்கும் இடங்கள் சில உள்ளன. காட்டு வழி என்றும் விலங்கு நடமாடும் இடமென்றும் கருதாமல் இளைப்பாறுகிறார்கள். எத்தனை தெய்வ நம்பிக்கை! பம்பைக் கரையை அடையும் முன்பே அதன் கரைகளில் வியாபாரம் நடப்பது தெரிகிறது. படம் விற்கிறார்கள். பிற பண்டங்களை விற்கிறார்கள். வேண்டியவற்றை யாத்திரிகர்கள் வாங்கிக்கொள்கிறார்கள்.









சபரி யாத்திரையில் பம்பா நதியை அடைவது ஒரு முக்கியமான கட்டம். புனிதம் நிறைந்த இதன் புண்ணிய நீரில் பக்தர்கள் ஸ்நானம் செய்து விரதத்தால் புனிதமடைந்த தம் திருமேனிகளைப் பின்னும் தூய்மையடையச் செய்கிறார்கள். காட்டுக்கு நடுவே இருமருங்கும் பச்சைப் பசேலென்ற காட்சி குலுங்கப் பம்பா நதி ஓடுகிறது. இராமாயணத்தில் வரும் பம்பாவே இது வென்று பக்தர்கள் நம்புகிறார்கள். இராமன் வந்து நீராடிய இடம் அது.

நீராடிய பக்தர்கள் விருந்துணவுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். [வாங்கி வந்த காய்கறிகளை அரிந்து குவிக்கிறார்கள் ஒரு புறம். ஒரு புறம் பெரிய பாத்திரங்களை வைத்துச்சமையல் செய்கிறார்கள். இருமுடிக் கட்டில் உள்ள ஒரு முடிச்சில் தமக்கு வேண்டிய அரிசி முதலியவற்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள் அல்லவா? அவற்றை உபயோகித்து இந்தச் சமையலைச் செய்கிறார்கள். சமையல் ஆகிச் சில தொண்டர்கள் விருந்து பரிமாறுகிறார்கள். எந்தவித வேறுபாடுமின்றி ஐயப்பனுடைய நினைவோடே அந்த விருந்தை அமுதமாக எல்லோரும் அருந்துகிறார்கள்.















பம்பாநதியில் பிதுர்க்கடன்களைக் கழிப்பதனுல் பிதுருக்கள் மிக்க திருப்தியை அடைவார்கள். அதனுல் அங்கே சிரத்தையுடன் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்கிருர்கள். பம்பைக் கரையில் தங்கி மீண்டும், ''ஸ்வாமியே சரணம் ஐயப்பா!'' என்ற முழக்கத்துடன் புறப்படுகிருர்கள். கூட்டம் கூட்டமாகப் போவதில்தான் எத்தனை உணர்ச்சி! வேறு எங்கும் காணுத இன்பம்!



அப்பாடி! இவ்வளவு தூரம் விரதம் காத்து விடா முயற்சியுடன் செய்த தவம் பலிக்கிறது. இதோ, கண் கண்ட தெய்வம் எழுந்தருளியிருக்கும் சபரிமலையின் அடிவாரம் வந்துவிட்டது. பதினெட்டுப் படிகளை ஏறினால் ஸ்வாமியின் திருக்கோயிலை அடைந்துவிடலாம். பதினெட்டாம் படிகளில் தேங்காய் உடைத்து ஏறுகிறார்கள். முதல் முறையாக வருகிறவர்கள் முதல் படியில் உடைப்பார்கள். இரண்டாந் தடவை வருகிறவர்கள் இரண்டாம் படியில் உடைப்பார்கள். இப்படியே தாம் வருகிற தடவைக்கு ஏற்றபடி உடைப்பது சம்பிரதாயம். பக்தர்களுக்கு உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. படிகளின் மேல் சுவர் தெரிகிறது. கோயில்மணி வா என்று அழைக்கிறது.









படியேறி வந்துவிட்டார்கள்! பிறவியின் பயனே கிடைத்தது போன்ற ஆனந்தம் உண்டாகிறது. தர்மசாஸ்தா எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் இதோ தோன்றுகிறது. பக்தர்கள் தாம் கொண்டு வந்திருந்த கற்பூரக் கட்டிகளை அக்கினி குண்டத்தில் போடுகிறார்கள். அதிலிருந்து எழும் தீக்கொழுந்து இறைவனுடைய சோதியுருவை நினைப்பூட்டுகிறது.

அதோ கிழக்கே பார்க்கிறார்கள் பக்தர்கள். தை மாதம் முதல் நாள் மகர ஜோதி வானத்தே தெரியுமாம். அதைத் தரிசிப்பவர்கள் பாக்கியவான்கள்.

தரிசித்தவர்கள் பதினெட்டாம் படியிலிருந்து மேலே பார்த்தபடியே மெல்ல இறங்குகிறார்கள்.







கோயிலுக்குப் புறங் காட்டுவதில்லை. அவர்கள் உள்ளத்தில் ஒரு நிறைவு துள்ளுகிறது. உடம்பில் விரதத்தின் பொலிவு பொங்குகிறது. ஸ்வாமியே சரணம் ஐயப்பா!—குரல் இனிதாகக் கேட்கிறது.

[போட்டோ: எஸ். ஹரிஹரன், புதுக்கோட்டை]

# இந்தியன் பாங்க் லிமிடெட்டில் நீங்கள்

**RP**
**ACCOUNT**

## ஒய்வுகாலத் திட்டக்கணக்கு ஆரம்பித்துவிட்டீர்களா?

### இல்லாவிட்டால் அருகிலிருக்கும் பாங்கின் கிளைக்குச் சென்று இந்த அபூர்வத்திட்டத்தின் பயனை அடையுங்கள்

சம்பாதிக்கும்பொழுதே சேமித்து
ஓய்வுகாலத்தில் நிம்மதியாக இருங்கள்.

புத்திகூர்மையுடன் சேமித்து வந்து உங்கள் குழந்தைகளுக்குக்
கல்விச்செல்வத்தை வழங்குங்கள்.

சேமிப்பது உங்கள் உசிதம். ரூ. 10, ரூ. 100, ரூ. 1000
அல்லது ரூ. 10-ன் மடங்காக எந்தத் தொகையும் சேமித்து
அது பெருகுவதை பெருமையுடன் கவனியுங்கள்.

மாதாமாதம் ரூ. 100 வீதம் 60 மாதங்களுக்கு டிபாசிட்
செய்து வந்தால் பிற்பாடு 60 மாதங்களுக்கு மாதம் 1க்கு
ரூ. 137 வீதம் திரும்பப் பெறலாம்.

மாதாமாதம் ரூ 100 வீதம் 84 மாதங்களுக்கு டிபாசிட்
செய்துவந்தால் பிற்பாடு 84 மாதங்களுக்கு மாதம் 1க்கு
ரூ. 155 வீதம் திரும்பப் பெறலாம்.

மாதாமாதம் ரூ. 100 வீதம் 120 மாதங்களுக்கு டிபாசிட்
செய்து வந்தால் பிற்பாடு 120 மாதங்களுக்கு மாதம் 1க்கு
ரூ. 186 வீதம் திரும்பப் பெறலாம்.

THE INDIAN BANK LTD. ESTD. 1907

## இந்தியன் பாங்க் லிட்.,
## சென்னை-1

"வடக்கு பீச் ரோடின் பழம்பெரும் சீமாட்டி"

எமது 221 கிளைகள் உங்கள் சேவைக்கு காத்திருக்கிறது

G லக்ஷ்மிநாராயணன்
சேர்மன்

ELEGANT



பண்டிட்-D. கோபாலாசார்லுவின்

## ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்

## அருணா

ஸ்திரீகளின்
ஆரோக்கியத்திற்கு

## சியவன ப்ராஷ்

இருமலுக்கு

## ரக்த சோதக

ரத்த விருத்திக்கு

## பால ப்ராஸ

குழந்தைகள்
டானிக்

பாலபாஸ்கர - - - - - - ஈரல் குலைக்கட்டிக்கு
மாதீபல ரஸாயனம் - - - - பித்தத்துக்கு
மாதுலுங்க ரஸாயனம் - கர்ப ஸ்திரீகளுக்கு
பஞ்சதிக்த குக்குளு கிருதம் - ரத்தசுத்திக்கு
சசிவிலாஸ் - - - - - - - மலேரியா ஜுரத்திற்கு
வஜ்ரதந்த் சூர்ணம் - - - - - - - பற்பொடி
நாராயண தைலம் - - - வாதநோய்களுக்கு
பிருங்காமலக தைலம் - - - ஸ்நானத்திற்கு

*1898 முதல் பிரசித்தி பெற்றது*

**ஆயுர்வேதாஸ்ரமம் (பி) லிமிடெட்**
100-கோபதி நாராயணசாமி ரோட்-சென்னை-17



# ARE YOUR PROFITS EATEN AWAY BY BIRDS AND ANIMALS?



**IF SO, INSTALL A**

# PURIVOX

**BIRD AND ANIMAL SCARER...**



வயல்களில் விளையும் விளைச்சலில் சராசரி 10 முதல் 15 சதவிகிதம் வரை பறவைகளும் விலங்குகளும் அழித்து விடுகின்றன. பூரிவோக்ஸைக் கொண்டு அவற்றைப் பயமுறுத்தித் துரத்துங்கள்; அதனால் அதிக விளைச்சலைப் பெற்று மிகுதியான லாபத்தைப் பெறுங்கள்.

**பூரிவோக்ஸ்** எளிய கச்சிதமான செட்டான யந்திரம்; நாளடைவில் அது பெரும் பொருளைச் சேமிக்க உதவும். அரைக் கிலோகிராம் கால்ஷியம் கார்பைடு இருந்தால் போதும், 12 மணி நேரம் அது வேலை செய்யும். துப்பாக்கி வெடியைப் போன்ற அதன் உரத்த ஓசை பறவைகளையும் விலங்குகளையும் பயமுறுத்தி ஓட்டிவிடும்.



FDS-B-CPC3B

Manufactured by:
CROP PROTECTION
**CPC**
**CROP PROTECTIONS CORPORATION**
Niranjan, 99, Marine Drive,
Bombay-2 BR.

THE BEST MECHANICAL GUARD ON ANY FIELD.

**பூரிவோக்ஸ்** தமிழக அரசோடு ஒப்பந்தம் செய்து 50 சதவிகிதம் உதவிப்பணம் பெற்று விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

சென்னைக்குத் தனியுரிமை பெற்ற விநியோகஸ்தர்கள்:

ஸி. ஸி. பாலு அண்டு கோ. பிரைவேட் லிமிடெட்,
17, அங்கப்பநாயக்கன் தெரு, சென்னை-1.

பணம் கொடுத்து ஸ்டாக் செய்து விற்பனைக்கு உத்தரவாதம் அளித்துத் தனி உரிமை பெறத்தக்க விநியோகஸ்தர்கள் மைசூருக்கும் ஆந்திரப் பிரதேசத்துக்கும் தேவை.



# இவளும் ஒரு தாய்

'ஜீவா'

நாங்கள் 'ஸபையர்' தியேட்டரை நோக்கி அவசரமாகப் போய்க்கொண்டிருந்தோம். அன்று எப்படியும் 'தி பைபிள்' படத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று நாங்கள் ஆவலுடன் முன்னதாகவே போய்விட்டோம். இந்த ஆங்கிலப் படம் ஏழெட்டு வாரங்களாக ஓடியும் இன்னும் கூட்டம் குறையவில்லை என்று போய் வந்தவர்கள் சொன்னார்கள். மத சம்பந்தமான படத்துக்கு மக்கள் திரள்வதற்குக் காரணம் என்ன?

'தி பைபிள்' படத்தைப் பார்த்த நண்பர்கள் சொன்னார்கள்: 'அடடா! படம் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? 'உலகம் தோன்றிய கதை'யைப் பைபிளில் விவரித்திருப்பதைப் படிக்கும்போது எவ்வித உணர்ச்சியும் கொள்ளாதவர்கள்கூட, படத்தில் சித்திரித்திருக்கும் காட்சிகளைக் காண்கையில் உணர்ச்சிப் பிழம்பாகிவிடுவார்கள். எல்லாம் வல்ல இறைவன் உலகத்தை உண்டாக்கியதிலிருந்து ஆபிரகாம் தம் குமாரன் ஐஸக்கைப் பலியிட வரும்வரையில் நிகழ்ச்சிகளை விறுவிறுப்புடன் படம் பிடித்திருக்கும் திறமை இருக்கிறதே; அப்பப்பா! பிரமாதம்!

'முதல் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் பிறந்த மேனியுடன் தோட்டத்தில் உலவும் காட்சியை அழகாகக் கலை நுணுக்கத்துடன் காட்டியிருக்கிறார்களே, அது ஒன்று போதும். யுகப் பிரளயத்தின்போது, நோவா என்பார் கடவுள் கட்டளைப்படி பெரிய கப்பலைக் கட்டி, அதில் எல்லா ஜீவராசிகளையும் ஜோடி ஜோடியாக ஏற்றிச் செல்லும் காட்சியை எப்படித் தயாரிக்க முடிந்தது என்று எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை. இந்த அற்புதத்தைச் சாதித்திருக்கும் டைரக்டர் ஜான் ஹஸ்டனே நோவாவாகப் பிரமாதமாக நடித்திருக்கிறார்.'

இப்பொழுதெல்லாம் எந்தத் தியேட்டரிலும் ஒரே கூட்டந்தான். சிறந்த படமோ, சாதாரணப் படமோ எதுவாக இருந்தாலும் படம் பார்ப்போரின் எண்ணிக்கை மட்டும் குறைவதில்லை. இந்த நிலையில் 'தி பைபிள்' போன்ற புதுமையான படத்துக்குக் கூட்டம் சேருவதற்குக் கேட்கவா வேண்டும்?

எங்களில் ஒவ்வொருவருக்குமே ஓய்வு ஒழிவில்லாத வேலை. அதனால், இன்று போகலாம், நாளை போகலாம் என்று காலம் கழித்து வந்த நாங்கள் சென்ற வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் திடீரென்று நினைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டோம். தியேட்டரை அடைவதற்குள் பஸ்ஸில் நாங்கள் அநுபவித்த கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

நாங்கள் எவ்வளவு ஆவலுடனும் அவசரத்துடனும் தியேட்டரை நோக்கிப் போனோமோ அவ்வளவுக்கு அவ்வளவு ஏமாற்றந்தான் ஏற்பட்டது. தியேட்டர் வாசலில் கூட்டமே இல்லை. இதைக் கண்டு ஒருவேளை டிக்கெட்டெல்லாம் கொடுத்து முடித்துவிட்டார்களோ என்று எங்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. இப்போதுதானே டிக்கெட் கொடுக்கத் தொடங்குவார்கள், ஆறரை மணி ஆட்டத்துக்கு என்று எண்ணிக்கொண்டே 'இன்றைப் படம்' என்று தலைப்பிட்டு ஒட்டியுள்ள படங்களைக் கவனித்தேன். அப்பொதுதான் விஷயம் புரிந்தது. அன்றைப் படம் 'இருட்டும் வரையில் காத்திரு' என்பது. 'தி பைபிள்' போனவாரத்துடன் முடிந்துவிட்டது என்று புரிந்தது.

இந்தத் தகவலை என் நண்பர்களிடம் தெரிவித்தபோது அவர்கள் வருந்தினர். ஒருவர் இன்னமும் சுவரொட்டியில் காட்சியளித்த ஏவாளின் (மார்பில் பச்சிலைகளை மூடிக்கொண்டு பிறந்த மேனியுடன் இருக்கும்) படத்தைப் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சிறிது நேர மௌனத்துக்குப் பின், ''என்ன செய்யலாம்?'' என்று நான் கேட்டேன்.

''நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படி'' என்று கூறினர் நண்பர்கள்.

''இந்தப் படமும் பரவாயில்லை: 'திபைபிளை'ப்போல இல்லாவிட்டாலும் பார்க்கக் கூடியதாயிருக்கும். இதில் கதாநாயகியாக நடிக்கும் ஆட்ரி ஹெப்பர்ன் குருடியாக நடித்து இருட்டிலேயே கொலைகாரனைக் கண்டு பிடிப்பதாகப் போட்டிருக்கிறது. இவளுடைய திறமையான நடிப்பை இதில் பார்க்கலாம்'' என்றேன்.

''அப்படியானால் சரி'' என்றார் மணி. மற்றவர்களும் அதற்கு இசைந்தனர்.

''அது சரி; மாணிக்கம் எங்கே?'' என்றேன்.

''வெளியில் அவருடைய ஆபீஸ் நண்பரொருவருடன் பேசிக்கொண்டிருக்கிறார். வந்துவிடுவதாகச் சொன்னார்'' என்றான் குமார்.

''அவன் வரட்டும். உங்களில் ஒருவர் போய் டிக்கெட் வாங்கிவிடுங்கள்'' என்றேன்.

பாலு உடனே கவுன்ட்டரை நோக்கி நடந்தான். மாணிக்கத்தின் வருகையை எதிர்பார்த்து நாங்கள் தியேட்டர் வாசலில் நின்றுகொண்டிருந்தோம். மற்றவர்கள் ஏதோ பேசிக்கொண்டிருக்க, நான் மட்டும் சிறிது முன் தள்ளி நின்று கண்ணுக்கெதிரில் தெரியும் நெடும் பாதையைப் பார்த்துக்கொண்டிருந்தேன். இந்தச் சில நிமிடங்களில் எத்தனை எத்தனை விநோதக் காட்சிகள்! எத்தனை வித

மான மக்கள் பிளாட்பாரத்தில்போய்க் கொண்டிருந்தனர்? நிமிடத்துக்கு ஒரு தரம் வந்து நிற்கும் பஸ்களிலிருந்து இறங்கும் மனிதர்களில்தான் எத்தனை ரகம்! நவநவமான கார்கள். ஸ்கூட்டர்களைவிட மக்களுடைய நடமாட்டந்தான் என் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

மாலைநேர மனோகரத்தில் மேற்றிசையில் வானம் புரிந்துகொண் டிருக்கும் வண்ணக் கோலங்களைக் கண்டு களிக்க முடியாதபடி 'ஸபைர்' தியேட்டர்க் கட்டிடம் நின்று மறைத்துக்கொண் டிருந்ததனால் அங்கும் இங்குமாய் அலைபாயும் மனித வெள்ளத்தின்மீது என் பார்வை பதிந்து சிந்திக்க வைத்தது.

திடீரெனப் பேரொலி செய்த கார் அரவம் என் சிந்தனையைச் சிதற அடித்தது. எனக்கு மிகச் சமீபத்தில் வந்து ஹார்ன் சப்தம் கேட்கவே, நான் துணுக்குற்றுத் திரும்பி நோக்கினேன். நான் நின்றிருந்த மேடையின் அருகே 'பென்ஸ் கார்' ஒன்று நின்றிருந்தது.

"இதென்ன அக்கிரமம், ஐயா? குழந்தையை வேலைக்காரியுடன் இருக்கச்செய்து அந்த அம்மா உள் ஸீட்டில் தனியாக அமர்ந்திருக்கிறார்களே! இதுதான் பட்டணத்து நாகரிகமா ஐயா?"

வெளியூர்க்காரர் போல உள்ள ஒருவர் தம்முடன் இருந்தவரிடம் அங்கலாய்த்துக்கொண் டிருந்தார்.

இதைக் கேட்டு நான் எதிரில் இருந்த அந்தக் காரைக் கவனித்தேன். அந்த மனிதர் குறிப்பிட்டபடி, டிரைவருக்குப் பக்கத்தில் பெண் குழந்தையொன்றும் தாதி ஒருத்தியும் உட்கார்ந்திருக்க, உள் ஸீட்டில் ஒரு மங்கை தனியாக வீற்றிருந்தாள். அந்த அழகிக்கு இருபத்தைந்து வயதுக்குமேல் இருக்கும். குழந்தைக்கு மூன்று வயது இருக்கும்.

அந்த மங்கை நாகரிகத்தின் பிரதிநிதியாக விளங்கினாள். செல்வத்தினாலும் செல்வாக்கினாலும் மட்டும் அவள் அப்படித் தோற்றினாள் என்று சொல்ல முடியாது. மேனாட்டுப் போலி நாகரிகத்தைப் புகுத்துவதற்குக் கருவியாக இருக்கும் ஆங்கிலப் படிப்பும் ஓரளவேனும் படித்திருப்பாள் என்று எண்ணும்படியாக அவள் தோற்றத்தில் ஒருவித மிடுக்கும் மெருகும் குடியேறியிருந்தன. கூந்தல் கோபுரம் போல் காட்சி அளித்தது. குடிகூரா முகப் பவுடரின் ரோஜா வண்ணம் அவளுடைய மாம்பழ மேனி நிறத்தைப் பளிச்சிட்டுக் காட்டியது. இமைகளில் தீட்டியிருந்த மை கருவிழிகளுடன் போட்டி போட்டது. இடக் கையில் தொங்கிய அழகுப் பையும் பொன்னிறக் காலணியும் அவள் 1968-ஆம் ஆண்டு நாகரிகத்தின் சரியான சின்னம் என்று பறைசாற்றின.

டிரைவர் இறங்குவதற்குள் தியேட்டர் ஆள் ஒருவன் ஓடோடி வந்து, அந்த மங்கை அமர்ந்திருந்த ஆசனத்தின் கதவைத் திறந்து மரியாதையாக ஒதுங்கி நின்றான். அவள் இறங்குமுன், தான் வைத்திருந்த அழகுப் பையிலிருந்து சிறு கண்ணாடியை எடுத்து, முகத்தில் அரும்பியிருந்த வேர்வையைப் பவுடர் அழியாதபடி கைக்குட்டையால் மிகப் பக்குவமாக ஒத்தியெடுத்துத் துடைத்தாள். அப்படியும் பவுடர் கலைந்துவிட்டதோ என்ற எண்ணத்தால் பவுடரை எடுத்து நாசுக்காகப் பூசிக்கொண்டாள். ஒரு முறை மேலும் கீழுமாகத் தன்னைப் பார்த்துக்கொண்டாள். மார்பகத்தின் மேலிருந்த ஆடையைச் சரிசெய்து கொண்டாள். பின்பே அவள் காரை விட்டு இறங்கினாள்.

"அம்மாயி, ரேவதியைக் கூட்டிக்கிட்டுப் போ. அவர் ஆபீஸிலிருந்து வந்தால் கவனிச்சுக்குவார். அதுவரை இவளை அழாமே வைச்சிரு; என்ன?"

சொல்லிக்கொண்டே அவள் ஒயிலாக நடக்கலானாள்.

இதைக் கேட்டதுமே ரேவதி, "நான் போவ மாட்டேன். உன்னோடேதான் வருவேன்" என்று சிணுங்கலாயிற்று.

அந்த மங்கை சடக்கெனத் திரும்பி, தன் சுட்டு விரலை உதட்டின்மேல் வைத்து, "உஸ்! சத்தம் போடப் படாது. போ என்றால் போகணும். அப்பத்தான் நான் திரும்பி வரச்சே சாக்லேட், பழமெல்லாம் வாங்கிவந்து தருவேன்" என்று மொழிந்தாள்.

ரேவதி தாயின் பேச்சைக் கேட்டுச் சமாதானம் அடையவில்லை. "உன் கூடத்தான் வருவேன்" என்று பிடிவாதம் பிடித்து அழுதது.

"கூடத்தான் அழைச்சுப் போயேம்மா! குழந்தை இப்படிக் கெஞ்சுதே!"

அம்மாயி குழந்தைக்காகப் பரிந்து பேசினாள்.

குழந்தை அடம் பிடித்ததனால் ஏற்கனவே எரிச்சல் அடைந்திருந்த அவளுக்குத் தாதியின் பேச்சு மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கியது.



''சட்! வாயை மூடு. அதிகப் பிரசங்கி! எனக்கு யோசனை சொல்ல வந்துவிட்டையா? நான் சொல்கிறபடி செய்; போ கழுதை!''

அவளுடைய அதட்டலைக் கேட்டு, ''கோவிச்சிக்காதீங்கம்மா! இதோ கூட்டிக்கினு போறேன்'' என்று கூறிக்கொண்டே டிரைவர் பக்கம் பார்த்தாள்.

டிரைவர் எசமானியம்மாளின் குணத்தை நன்கறிந்தவனாய் இருக்க வேண்டும். அதனால்தான் அவன் இந்தக் காட்சிகளைக் கண்டும் காணாதவன் போல் இருந்தான்.

இதற்குள் ரேவதி ஆசனத்தை விட்டு எழுந்துவிட்டது.

''அம்மா! நானும் உன்னோடு வரேம்மா. நீ சினிமாதானே பார்க்கப் போறே? என்னை மட்டும் ஏன் இட்டுப் போவக்கூடாது?''

'ஆயா'விடமிருந்து அன்னையை நோக்கித் தாவினாள்.

''சீ சனியனே! கத்தாமல் போ'' எனச் சீறியவள், ''டிரைவர், ஏன் இன்னும் காரை ஸ்டார்ட் செய்யாமலிருக்கிறாய்?—உம். ஓட்டு. சீக்கிரம்'' என்று அதிகாரத் தொனியில் ஆணையிட்டாள்.

உடனே டிரைவர் காரை ஸ்டார்ட் செய்தான். மெல்ல ஹாரன் ஒலித்துக்கொண்டே போயிற்று.

இந்தச் சமயம் எனக்குப் பின்னே பூட்ஸ் சப்தம் கேட்டது. உடனே நான் திரும்பிப் பார்த்தேன். இருபத்திரண்டு வயதுகூட இராது. அரும்பு மீசை முகத்தில் விளங்க அமெரிக்கன் கிராப்பை அழகாக வாரி விட்டிருந்த இளைஞன் ஒருவன், ''ஹலோ! ஹேமா!'' என்று அழைத்துக்கொண்டே அந்த மங்கையை வேகமாக நெருங்கினான். ''எவ்வளவு நேரமா நான் வந்து காத்திருக்கேன்? மணியாக ஆக, நீ ஒருவேளை வராமற் போவையோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. கடைசியாக எப்படியோ வந்துட்டாயே!'' என்று திருப்தி தொனிக்க, மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.



கார் நகரத் தொடங்கியதுமே ரேவதி கைகளை உதறிக்கொண்டு, ''அம்மா! அம்மா!'' என்று கதற ஆரம்பித்துவிட்டாள். ஆயா குழந்தையின் அழுகையை நிறுத்த மிகவும் முயன்றாள். கார் தியேட்டரை விட்டு வெளியேறிய பிறகுகூட, குழந்தை தாதியின் பிடியிலிருந்து திமிறி எழுந்து தாயைப் பார்த்துப் பெருங் கூச்சலிட்டது.

குழந்தை பெருங்குரல் எடுத்து அழுதது கூட்டத்தைக் கூட்டிவிட்டது. எங்களைப் போலவே மற்றவர்களும் வேடிக்கை பார்க்கலாயினர். ''அம்மா! அம்மா!'' என்ற குழந்தையின் பாசக் குரல் எங்கள் செவிகளில் எதிரொலித்துக்கொண் டிருந்தது.

குழந்தையின் கெஞ்சலும் கதறலும் அந்நியர்களான எங்கள் நெஞ்சங்களைக்கூட நெகிழ்வித்து விட்டன. ஆனால், பெற்றவளின் இதயத்தைச் சிறிதும் இளகச் செய்ததாகத் தெரியவில்லை. அவள் சிலைபோல நின்று, கதறிக்கொண்டே போகும் குழந்தையைச் சில விநாடிகள் பார்த்தாள். ஆனால், உணர்வு பெற்றுச் சூழ்நிலையை உணர்ந்தபோது, தன்னைச் சுற்றி நின்று பலர் பார்ப்பதை அறிந்து துணுக்குற்றுவிட்டாள். அவள் உடனே தலையைக் கவிழ்த்தவாறு அவ்விடத்தை விட்டு அவசரமாகப் போகலானாள்.

''வா, சந்தர்! உள்ளே போகலாம்'' என்று கை காட்டிக் கூப்பிட்டுக்கொண்டே விரைந்து நடந்த ஹேமா, ''நான் வராமல் போவேனா? அதுவும் நேற்றுச் சொல்லிவிட்டுப் போய்.....? உனக்கு ஏன் இப்படி அடிக்கடி சந்தேகம் உண்டாகிறது?'' என்று மெல்லக் கடிந்துகொண்டாள்.

சந்திரன் ஹேமாவின் மெல்லிய கரத்தை உரிமையோடு பற்றிக்கொண்டு, ''வேடிக்கை தெரியுமா? இன்னைக்கு அந்தப் படம் காட்டலை'' என்று கூறிக் கொண்டே போனான்.

ஹேமா சந்திரனின் கையைப் பிடித்து அழுத்தி, ''எந்தப் படமானாலும் இருக்கட்டும். வா, உள்ளே போவோம்'' என்று சொல்லி வேகமாக நடந்தாள். அவளுக்குக்கூட வெட்கம் இருந்தது. என்ன இருந்தாலும் பெண் அல்லவா?

சந்திரன் நாய்க்குட்டி போல ஹேமாவின் பின்னே ஓடினான்.

இவர்களைப் பிரிப்பது போல ஒரு பூனை தன் குட்டியை வாயில் கவ்விக்கொண்டு குறுக்கே ஓடியது. இந்தக் காட்சி பிள்ளைப் பாசமற்ற ஹேமாவின் செயலைப் பரிகசிப்பது போலிருந்தது. நான் ஒரு பெருமூச்சு விட்டேன்.

''இப்படியும் ஒரு தாய் இருப்பாளா?''

''தாயுள்ளம் இரக்கமுடையது என்கிறார்களே!''

''பெரிய இடத்துப் பெண்களின் போக்கு இது. போலி நாகரிகம் தாய்மையைக்கூடப் பாழாக்கி விடுகிறது!''

நண்பர்களிடையே இவ்விதமாக ஆற்றாமை வெளிப்பட்டது.

''இவளும் ஒரு தாய்தான். ஆம்; அன்னைதான்.'' நான் அவர்களுடைய பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.

இந்தச் சமயம் மாணிக்கமும் வந்துவிடவே, நாங்கள் அனைவரும் படம் பார்க்க உள்ளே போனோம். ★

# பரமானந்தம்



'சோமு'

எங்கள் ஊர் அரசாங்க மருத்துவ மனைக்கு டாக்டர் பரமானந்தம் தலைமை வைத்திய அதிகாரியாக மாற்றலாகி வந்த விநாடியிலிருந்து ஊர் முழுவதும் களிப்பும் கலகலப்பும் பரவ ஆரம்பித்தன. சுகாதார வசதிகளும், ஆரோக்கியமான வாழ்வுக்குரிய சூழ்நிலையும் போதியபடி இல்லாதிருந்த அந்தச் சிறிய ஊரில், நோவும் நொடியும் அதிகமாகி மக்களின் தொகை தேய்ந்து போகத் தொடங்கிய வேளையில் டாக்டர் பரமானந்தம் அங்கு மாற்றலாகி வந்தார். அவருடைய வரவினால் எங்கள் ஊருக்கு ஆரோக்கிய தேவதையின் திருவருள் உண்டாகத் தொடங்கியது.

குடியானவர்களும், பெண்டுகளும், கிழவர்களும் டாக்டர் பரமானந்தத்தின் கைராசியைப் புகழ்ந்தார்கள். படித்தவர்களும், பக்கத்துத் தலைமை நகரத்து அதிகாரிகளும் டாக்டரின் நோயாராய்ச்சித் திறமையையும், மருந்துகளைத் தேர்ந்தெடுக்கும் முறையையும் பாராட்டினார்கள். காரணம் எதுவானாலும் டாக்டர் பரமானந்தத்தைப் போற்றி வணங்காத மனிதர்களே அந்த ஊரிலும் சுற்று வட்டாரத்திலும் இல்லை. இறைவனுக்கு அடுத்தபடி அவர் முக்கியம் பெற்றார் என்றால் மிகையில்லை.

குழந்தைகளுக்கு வருகிற ஈரல் நோய், வயோதிகர்களுக்கு வருகிற நெஞ்சு வலி, பெண்களுக்கு வருகிற மாதத் தொந்தரவுகள் — எந்த வியாதியாக இருந்தாலும் சரி, டாக்டர் வந்து பார்த்து மருந்துகளைக் கொடுக்க வேண்டிய அவசியங்கூட இல்லை. அவருடைய ஆக்கம் மிகுந்த கை பட்டாலே போதும்; வாசியாகிவிடும். இந்த நோய்களைத் தவிர, மக்கட்பேறு மருத்துவம் இருக்கிறதே அதிலும் அவர் கைதேர்ந்தவராக இருந்தார். எனவே அந்த ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் மரணத்தின் தொகை குறைந்ததோடு, பிறப்பின் எண்ணிக்கையும் அதிகரித்தது. யமதருமராஜனே அந்த வட்டாரத்தைப் பொறுத்தவரை விடுமுறை எடுத்துக்கொண்டிருந்தான் என்று எங்கள் ஊருக்கு வருகை புரிந்த ஒரு பெரிய எழுத்தாளர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். டாக்டர் பரமானந்தம் என்றால் அந்தப் பெயருக்கு ஏற்ப அந்தச் சொல்லே ஒரு பரமானந்தமாக, ஒரு மகிழ்ச்சித் திருநாமமாகத் திகழ்ந்தது.

ஆனால் இத்தனை மகிழ்ச்சிக்கும், இத்தனை பரமானந்தத்துக்கும் இடையே அதே டாக்டரின் வரவினால் மனம் கொதித்துப் போன ஓர் ஆத்மாவும் அந்த ஊரில் இருந்தது என்றால் அதை நம்புகிறீர்களா?

அந்த ஊரில் மட்டுமல்லாமல் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலுமே மரண எண்ணிக்கை குறைகிறது என்று அதற்காக வருந்தி, அதற்காக அந்த டாக்டர் பரமானந்தத்தையே அடி மனத்திலிருந்து ஆழமாக வெறுத்த அந்த ஒரே மனிதன் வேறு யாரும் அல்ல, அவ்வூர் மயானத்தின் ஒப்பற்ற காவலன் சுடலையாண்டிதான்.

இந்த உலகில் இறைவனுடைய திருவிளையாடலின் தன்மையை எப்படிச் சொல்லுவது? உலகம் முழுவதும் துயரப்படுகிற, நடுங்கி அஞ்சுகிற ஒரு பெரிய நிகழ்ச்சி மரணம் என்றால், சாவு என்றால், அந்த மரணத்தை, அந்தச் சாவை நம்பித்தான் சுடலையாண்டியும் அவனுடைய குழந்தை குட்டிகளும் குடும்பமும் வாழவேண்டியிருந்தது. அது அவன் தலையெழுத்து.

என்ன செய்வான், சுடலையாண்டி? பிறருடைய மரணத்தில் அவனுடைய வாழ்வு நடந்தது. பிறருடைய துயரத்தில் அவனுடைய வரும்படி இருந்தது. பிறருடைய நஷ்டத்தில் அவனுடைய ஆதாயம் அடங்கியிருந்தது. சாவை வைத்த பிழைப்பு அவனுக்கு. அந்தப் பிழைப்பில், அந்த ஆதாயத்தில், அந்த வரும்படியில் மண்ணைப் போட்டார் டாக்டர் பரமானந்தம்.

சுடலையாண்டி நினைத்தான்: 'இந்த டாக்டர் இந்த ஊருக்கு வராமல் இருந்திருந்தால்?' அடடா, இவர் வருவதற்கு முன்பு எத்தனை மரணங்கள்! நாள் தப்பினாலும் சுடலையின் புகைச்சல் தப்பாதே! அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, நவமி முதலிய 'கடுத்த' நாட்கள் வந்துவிட்டால் சுடலையாண்டிக்கு மட்டுமல்ல, அவனுடைய குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்குமே ஓய்ச்சல் ஒழிவின்றி வேலை இருக்கும். காலரா, அம்மை போன்ற பெரிய நோய்கள் வந்தாலோ சொல்லவே வேண்டாம்.

இத்தனைக்கும் உலைவைத்து விட்டார் டாக்டர் பரமானந்தம். இப்போது அவர் வந்த ஏழெட்டு மாதங்களுக்குள், அவன் பாடு அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கூடக் கஷ்டந்தான். சுடுகாட்டிலே வெட்டுகிற விறகுக்கு விற்பனை இல்லை. மனைவி தட்டுகிற எரு வறட்டிகள் எல்லாம் அப்படி அப்படியே தேங்கிக் கிடக்கின்றன. குழந்தைகளுக்குப் போதியபடி சரியான ஊட்டம் கொடுக்க முடியவில்லை அவனால்.

ஒன்றரை ஆண்டுக்கு மேல் இப்படியே பல்லைக் கடித்துக்கொண்டிருந்தான் சுடலையாண்டி. அடுத்த ஆண்டும் நகர ஆரம்பித்தது. அவன் பாடும் குடும்பத்தின் பாடும் சொல்ல முடியாத வறுமை. 'இந்த டாக்டரை வேறு ஊருக்கு மாற்ற மாட்டார்களா? நமக்கு விடிவு காலம் வராதா?' என்று அவன் யோசிக்கலானான்.

சில மாதங்கள் உருண்டன. பல பொய்க் காரணங்களை இவனே இட்டுக் கட்டிச் சொல்லி மொட்டைக் கடிதங்கள் எழுதி மேலிடத்துக்கு அனுப்பிப் பார்த்தான். பயனில்லை. யார் யாரோ பெரிய மனிதர்களைப் போய்க் கண்டு அசைத்துப் பார்த்தான். ஒன்றும் நடக்கவில்லை. எல்லாருமே ஒரு மொத்தமாக டாக்டர் பரமானந்தத்தின் பக்கம் இருந்தார்கள். அவர் அந்த ஊரை விட்டுப் போவதை எவரும் விரும்பவில்லை.

## 2

இரவு தூங்கவே இல்லை சுடலையாண்டி. அவனால் தூங்க முடியவில்லை. கடந்த ஆண்டில் மேலும் அவன் தொழில் மந்தம் கண்டுவிட்டது. செலவுக்குப் பணம் இல்லை. சேமித்து வைத்திருந்த காசெல்லாம் அறவே கரைந்து போய் விட்டது. இந்தத் தொழிலே வேண்டாம் என்று பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் போட்டான். அவர்களுக்குப் பள்ளிப் புத்தகங்களுக்கும், உடுப்புகளுக்கும் என்று ஏதேதோ செலவு. என்ன செய்வான்?

இந்தத் தொழிலுக்குப் பெரிய முழுக்குப் போட்டுவிட்டு மலைக் காடுகளிலே விறகு வெட்டிப் பிழைக்கலாம், அல்லது பட்டினக் கரைக்குப் போய் ரெயிலடியில் மூட்டை தூக்கலாமே என்று மனைவி அவனைக் கடிந்து சொன்னாள். அந்தச் சொற்கள் அவனைக் குழப்பின. மனம் சுடலையாகக் கொதித்தது. டாக்டர் பரமானந்தத்திடம் குமுறிய கோபமும் ஆத்திரமும் நெஞ்சை எரித்தன. இமைகளை மூடினால் மனக் கண்ணுக்கு முன்னால் டாக்



டரின் உருவந்தான் வந்து நின்றது. கண்களிலிருந்து சுடலைப்பொறி தெறித்தது.

''பாவி மனிதா! என் வயிற்றிலும் என் குடும்பத்தின் வயிற்றிலும் அடித்தாயே! இதோ—''

டாக்டரின் மீது பாய்ந்தான் அப்படியே சுடலையாண்டி. அவருடைய கழுத்தை, அவருடைய குரல்வளையைப் பிடித்து ஒரு நெருக்கு நெருக்கினான் அந்த மயானக் கைகளினால்.

ஆனால் இதென்ன? இத்தனை பெரிய கூட்டம்! இந்த மனிதர்கள் எல்லாரும் எங்கிருந்து வருகிறார்கள்?

''விடு, விடு, டேய், டாக்டரை விடு!''

சுடலையாண்டியின் யமப் பிடியிலிருந்து டாக்டரை விடுவித்துக் கொண்டு அந்தக் கூட்டம் முழுவதும், அத்தனை பேரும் சுடலையாண்டியை நோக்கிப் பாய்கிறார்கள். டாக்டருடைய மருந்தின் மகிமையால், அவர் அளித்த சிகிச்சையின் பலத்தால் நோய் நொடிகளிலிருந்து தப்பிய ஆயிரம் ஆயிரம் பொதுமக்கள் அவர்கள்.

''டாக்டரைத் தொடுவதற்கு முன், அவர்மேல் கை வைப்பதற்கு முன் எங்கள் இத்தனை பேருக்கும் பதில் சொல்!''

ஆயிரம் ஆயிரத்துக்கு மேல் இருக்கும் அந்த மனிதர்கள், அப்படியே சுடலையாண்டியின் மேலே பாய்ந்து தாக்கி, அவனுடைய எலும்பையே நொறுக்குகிறார்கள்.

பதறி விழித்தான் சுடலை. என்ன பயங்கரமான கனவு! கண்களைக் கசக்கினான். மேலெல்லாம் படபடத்தது. கண்கள் இரண்டும் 'சிவுசிவு' என்றன. உடம்பு முழுவதும் ஒரே சூடு. காய்ச்சலாகக் காய்ந்தது. படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றான். முட்டும் கணுவும் ஒரே வலி. பல பேர் கூடி எலும்புகளையே தட்டி நொறுக்கியது போல் உடம்பெல்லாம் குத்திக் குடைந்தது. நாக்கு எழவில்லை; பேச முடியவில்லை.

''விடாதே, பிடி, நொறுக்கு; டாக்டரைத் தொடுவதற்கு முன் எங்களுக்குப் பதில் சொல்!''

இப்படி ஏதோ இரைச்சல் காதுக்குள்ளே புகுந்து ஒலித்தது.

அன்று பகல் முழுவதும் சுடலையாண்டி படுக்கையிலிருந்து எழவில்லை. அவன் மனைவி, அவளுடைய தம்பி ஒருவன், அந்த மயானத்தை அடுத்த குடியிருப்பிலுள்ள சில குடியானவர்கள், யார் யாரோ பார்த்தார்கள். பயனில்லை.

''ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போக வேண்டியதுதான். வேறு வழியில்லை. டாக்டர் பரமானந்தம் பார்த்தால்தான் சுடலையாண்டி பிழைப்பான்'' என்றார் அந்த ஊர் கிராம முனிசிபு.

''டாக்டர் பரமானந்தமா?'' என்று கேட்டுக்கொண்டே மூர்ச்சையானான் சுடலையாண்டி.

அன்றிரவு அவனுக்கு ஜன்னி கண்டது. 'டாக்டர்', 'பரமானந்தம்,' 'பிழைப்பு', 'வயிற்றிலே மண்'—இப்படி ஏதேதோ பிதற்ற ஆரம்பித்தான் சுடலையாண்டி. இரவுக்கு இரவே அவனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றார்கள்.

## 3

''நெனப்பு மயங்கினதிலிருந்து ஒங்க பேரைத்தான் அது சொல்லுது!'' என்றாள் சுடலையாண்டியின் மனைவி, டாக்டரைப் பார்த்து.

''உங்கள் கைராசியில் அவனுக்கு அத்தனை நம்பிக்கை'' என்றார் கிராம முனிசிபு.

டாக்டர் சிரித்தார்.

''இவனுக்கு நினைவு திரும்புகிற வரை நான் சிகிச்சை செய்வேன். பிறகு இவன் பக்கம் வரமாட்டேன்'' என்றார் பரமானந்தம்.

''என்ன டாக்டர், இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார் கிராம முனிசிபு.

''இவனுக்கு நினைவு திரும்பிய பிறகு நான் நேரில் வர மாட்டேன். மருந்துகளை மற்றவர்களிடம் கொடுத்தனுப்புவேன் என்றார் டாக்டர்.'' குழம்பி நின்ற நண்பர்களை நோக்கி அவர் மேலும் சொல்லுவார்:

''நோயாளிகளுடைய மனத்தத்துவம் ஆளுக்கு ஆள் மாறுபடும். மற்ற நோயாளிகளுக்கு நான் எதிரில் வந்தால் நோய் குணமாகும். இந்த நோயாளிக்கு என்னைப் பார்த்தால் நோய் அதிகரிக்கும்.''

இவ்வாறு சொல்லிக் கொண்டே மனத்துக்குள் ஏதோ ஆழமாகத் திட்டமிட்டார் டாக்டர் பரமானந்தம். பிறகு சொன்னார்: ''கவலைப் படாதீர்கள். சுடலையாண்டிக்கு மருந்து கொடுத்து அவனை எழுப்ப வேண்டியது என்பொறுப்பு. அது என் கடமை. நீங்கள் எல்லாம் கவலையில்லாமல் வீட்டுக்குச் செல்லலாம்.''

இவ்வாறு சொல்லி அவர்களையெல்லாம் அனுப்பிவிட்டு, ஊசிக் குழாயிலே மருந்தைச் செலுத்தினார் பரமானந்தம். பிறகு அதைத் தொடர்ந்து ஒரு வாரம் சுடலையாண்டிக்கு உயிர் கொடுப்பதிலும் அவனுக்கு வாழ்வு தருவதிலும் முழு மூச்சோடு முனைந்தார்.

ஆம்; சுடலையாண்டியை மயானத்தின் பிடியிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வந்து விட்டார் டாக்டர் பரமானந்தம். ஒரு வார காலத்தில் அவன் தன் நினைவுக்கு வந்து கண்களைத் திறந்து பார்த்தான்.

''நான் எங்கே, நான் எங்கே, எங்கே இருக்கேன்?''

''ஆஸ்பத்திரியில்'' என்றாள் மருத்துவத் தாதி.

''ஆஸ்பத்திரியிலா? டாக்டர் டாக்டர் பாமா....



''அவர் இல்லை இங்கே. டாக்டர் பரமானந்தத்தை வெளியூருக்கு மாற்றிவிட்டார்கள்!''

இப்படிச் சொல்லவேண்டும் என்பது டாக்டரின் கட்டளை. நர்ஸுகளும், நண்பர்களும், கிராம முனிசிபும், மற்ற எல்லாரும் இதையே சொன்னார்கள். எனவே—

சுடலையாண்டிக்கு உடல் தேறி விட்டது. அவன் எழுந்து நடக்கத் தொடங்கினான். இன்னும் இரண்டு நாட்களில் வீட்டுக்கே போய்விடுவான். சந்தேகம் இல்லை. இவன் பிழைத்து எழுந்தால்தானே ஊரிலுள்ள மற்றவர்கள் நல்லபடியாகச் சாகமுடியும் என்பது விதியின் ஏற்பாடு?

## 4

''சுடலையாண்டியைப் பிழைக்க வைத்து விட்டீர்கள். இனிமேலாவது நாங்கள் அவனிடம் உண்மையைச் சொல்லலாமா?'' என்று டாக்டரைக் கேட்டார் கிராம முனிசிபு.

''எந்த உண்மையை?'' என்று கேட்டார் டாக்டர்.

''நீங்கள்தாம் அவனைப் பிழைக்க வைத்தீர்கள், உங்கள் மருந்துதான் அவனுக்கு உயிர்ப் பிச்சை தந்தது என்ற உண்மையை அவனிடம் இனிமேலாவது சொல்லலாமா? நீங்கள் தாம் அவனுக்குப் பக்கத்திலேயே வரமாட்டேன் என்கிறீர்களே! ஏதேதோ மனத்தத்துவம் என்று சொல்லி அவனிடம் நீங்கள் வெளியூருக்கு மாற்றலாகியிருப்பதாக ஒரு பொய் சொல்லும்படி....''

''அது பொய் அல்லவே!'' என்றார் டாக்டர் பரமானந்தம், புன்முறுவல் செய்துகொண்டே.

''டாக்டர், என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? சுடலையாண்டிக்குச் சுய நினைவு வருகிறவரை நீங்களே வைத்தியம் செய்தீர்கள். அதன் பிறகு..''

''அதன் பிறகு அந்தச் சுய நினைவு மாறாமல் இருப்பதற்காக வெளியூர் போகிறேன். இதில் என்ன குழப்பம்?'' என்றார் டாக்டர்.

''என்ன என்ன?'' என்று பதறினார் கிராம முனிசிபு.

''நான் இந்த ஊருக்கு வந்து கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் ஆகின்றன. அதனால் என்னை வெளியூருக்கு மாற்றிவிட்டார்கள்.''

''ஐயையோ! உண்மையா இது?''

''ஆமாம்.''

''டாக்டர், நீங்கள் இந்த ஊரை விட்டுப் போக நாங்கள் விடமாட்டோம். இந்தக் கிராமத்து மக்கள், அக்கம்பக்கத்தார்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்துக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பி இதைத் தடுப்போம்.''

டாக்டர் சிரித்தார். மேலும் சிரித்துக் கொண்டே சொன்னார். ''அவர்களாக என்னை வெளியூருக்கு மாற்றியிருந்தால், நீங்கள் எல்லாரும் சேர்ந்து சொல்வதை ஒரு வேளை அரசாங்கம் கேட்கக் கூடும். ஆனால் இது நானாக வேண்டிக்கொண்ட விண்ணப்பம். மூன்று ஆண்டுகள் ஆகப் போவதை ஒரு காரணமாகச் சொல்லி, நானே என்னை இங்கிருந்து மாற்றிவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட தன் பேரில் மாற்றல் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.''

கிராம முனிசிபுக்கு அப்படியே அதிர்ச்சி உண்டாகி விட்டது. அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் மீளுவதற்குள், ''ஐயா!'' என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். நடந்து செல்ல ஆரம்பித்த சுடலையாண்டி இப்போது நேரே டாக்டரின் அறைக்குள்ளேயே வந்தான்.

''டாக்டர் ஐயா, நான் என்ன தப்பு நினைச்சிருந்தாலும் என்னை மன்னிக்கவும். எனக்கும் என் பிள்ளை குட்டிகளுக்கும் உயிர் குடுத்தீங்க. நீங்க என்னைக் காப்பாத்தி யிருக்காட்டி என் குடும்பமே ஆத்திலே குளத்திலே விழுந்து உசிரை விட்டிருக்கும் டாக்டர் ஐயா. என் தலைமுறைக்கே உயிரு குடுத்த சாமி நீங்க!''

டாக்டரின் கால்கள் இரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டான் சுடலையாண்டி.

''எழுந்திரு சுடலை'' என்று அவனுடைய தோள்களைப் பிடித்துத் தூக்கினார் டாக்டர்.

''சாமி, இந்த ஊரை விட்டு நீங்க போறீங்கண்ணு பேசிக்கிறாக. சாமி, வேண்டாம் சாமி! தலைவலியும் கால் வலியும் தனக்கு வந்தாத் தெரியும்னு சொல்லுவாக. அதை இப்ப புரிஞ்சுக்கிட்டேன். நீங்க போகாதீக சாமி. என்னைக் காப்பாத்துனதுபோலே இந்த ஊரையே காப்பாத்துற தெய்வம் சாமி நீங்க. என்னை மன்னிச்சதுக்கு அடையாளமா நீங்க போகலைன்னு ஒரு வார்த்தை சொன்னாத்தான் ஆச்சு. இல்லாட்டா, மறுபடியும் எனக்கு, மறுபடியும் எனக்கு, எனக்கு....''

கதறி அழுது கொண்டே மீண்டும் தம் காலடியில் விழுந்த சுடலையாண்டியை மிகுந்த பரிவோடு வாரி எடுத்தார் டாக்டர். அவருக்குக் கண் கலங்கியது. குரலைச் சரிப்படுத்திக் கொண்டார். பிறகு சொன்னார்: ''கவலைப் படாதே சுடலை. நான் இங்கேயே இருக்கிறேன். ஓய்வு எடுத்த பிறகுங்கூட இந்த ஊரிலேயே தங்கி விடுகிறேன்'' என்றார் உறுதியோடு.

டாக்டர் பரமானந்தம் அவர்களின் இந்த உறுதிமொழியைக் கேட்டுச் சுடலையாண்டியோடு அந்த வட்டாரம் முழுவதுமே பரமானந்தம் கொண்டது.

பல ஆண்டுகள் கழித்துச் சுடலையாண்டியின் பிள்ளைகளில் ஒருவன் டாக்டர் பரமானந்தம் அவர்களின் உதவியால் மருத்துவக் கல்லூரியில் படித்துத் தேறி அதே மருத்துவமனையில் டாக்டராகச் சேர்ந்தான். அவனுடைய பெயர் நித்தியானந்தம் என்று கேள்வி. ★



# THE DAWN MILLS CO., LTD.

Manufacturers of

YARN, SEWING THREAD, VESTS,

DRAWERS, COTTON & NYLON SOCKS



HAPPY DIWALI GREETINGS

## Messrs INDO-EUROPA TRADING CO.

Estd. 1926

21, SUNKURAMA CHETTY STREET, MADRAS-1

Phone : 24467

Offices at : BOMBAY, DELHI & CALCUTTA

Please contact us for everything and anything in Printing, Packaging, Book Binding and Allied Machineries

*FOR*

**PROMPT ATTENTION**

**EFFICIENT SERVICE**

**FULL SECURITY**

*INSURE WITH*

Phones: 24564, 21084

**THE SOUTH INDIA INSURANCE COMPANY LTD.**

(*Head Office*: **BOMBAY**)

*Regional & Branch Office at*: 32/33, Linghi Chetty Street, MADRAS-1

- Indian Railways consume Stores and Equipment worth over 300 crores annually, and contribute to the development and sustenance of numerous ancillary industries.
- Indian Railways move 90 per cent of the Nation's coal to feed the factories, big and small, all over the country.
- Indian Railways carry almost the entire raw materials and finished products of Iron and Steel Industries and thus help build the industrial edifice of the Nation.
- Indian Railways transport mountains of iron ore to the Ports for export and earn valuable foreign exchange for the country.
- Thus, the Indian Railways constitute the corner-stone of the Nation's economy.

ISSUED BY THE SOUTHERN RAILWAY

# முற்றத்தின் கதை

ஃபிக்ர் தவுன்ஸ்வி




அன்று பொழுது விடிந்ததுமே நீடாவுக்கும் எனக்கும் சச்சரவு. இருவரும் பேசாமலே டீ குடித்தோம். மௌனமாகச் சாப்பிட்டோம். முற்றத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தோம். முற்றத்தினல் வந்த தொந்தரவுதான் இவ்வளவும்.

வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விடுவதாக மிஸஸ் அகர்வாலிடம் நீடா சொல்லியிருந்தாள். எனக்கும் இதில் தடையில்லை. முற்றத்தில் குறுக்குச் சுவர் எடுத்து இரண்டு பகுதிகளாக்கி வாடகைக்கு ஒரு பகுதியை விட வேண்டுமென்றும், சுவரின் இருபுறமும் தனித் தனியே குளியலறை கட்ட வேண்டுமென்றும் மிஸஸ் அகர்வால் விரும்பினள். நான் அப்படிச் செய்ய மறுத்துவிட்டேன். அவள் எதிரிலேயே நான் இப்படிச் சொன்னது மனைவிக்கு ஆத்திரமூட்டியது. முப்பாட்டன் காலத்திலிருந்து ஆஸ்தியாகக் கிடைத்த - ஆறு அறைகள் கொண்ட - இந்த வீட்டை நடுவில் சுவரிட்டுப் பிரித்து இதன் அழகைக் குலைக்க நான் விரும்பவில்லை.

எங்கள் ஊரில் யார் வீட்டிலும் இவ்வளவு பெரிய முற்றம் இல்லை. பண்டிகை நாட்களிலும் ராம நாடகம் ஆடும்போதும் ஊரார் இந்தப் பெரிய முற்றத்தில்தான் கூடுவார்கள். இரண்டு நாள் முன்புதான் நேஷனல் பேங்க் ஏஜென்ட் புரி, தம் மகளின் திருமண வரவேற்புக்கு இந்த முற்றம் வேண்டுமென்று கேட்டிருந்தார்.

எங்கள் முற்றத்துக்குக் கிடைத்திருந்த இந்தப் பெருமையைப் பற்றி நீடா என்றைக்குமே சிந்தித்ததில்லை. ''ஊராருக்கு இனமாகக் கொடுக்



கவா நம் வீடு இருக்கிறது? இதிலிருந்து வருமானம் கிடைக்க வேண்டாமா? பணத்தைப் பற்றிய கவலையே உங்களுக்கு இல்லையே!'' என்று அவள் அடிக்கடி சொல்லி வந்தாள்.

அவள் பிடிவாதம் எனக்கு விந்தையாக இருந்தது. அழகு இருக்குமிடத்தில் பிடிவாதமும் கூடவே இருக்கும். நீடா முதல் நாள் இந்த வீட்டில் கால் வைத்தபோதே, ''இவ்வளவு பெரிய முற்றமா? இந்த இடத்தில் இரண்டு வீடுகள் கட்டலாமே!'' என்று சொன்னுள்.

இன்னெரு நாள், ''வீட்டைவிட முற்றந்தான் பெரியதாக இருக்கிறது. வீட்டை இடித்து மூன்றடுக்கு மாளிகை கட்டி, ஒவ்வோர் அடுக்கிலும் மூன்று மூன்று பகுதிகள் அமைக்கலாம். ஒவ்வொரு பகுதிக்கும் முந்நூறு ரூபாய் வாடகை வரும். என் நகைகளை வேண்டுமானலும் விற்றுவிடலாம். என் சம்பளம் முந்நூறு ரூபாயையும் மாதமாதம் கொடுக்கிறேன். உங்கள் சம்பளத்தில் குடும்பத்தை நடத்திக்கொள்ளலாம். மூன்று ஆண்டுகளில் கடன் அடைபட்டுப் போகும்'' என்று கொஞ்சினுள். இருக்கும் வீட்டை இடித்துப் புது வீடு கட்ட நான் என்றைக்குமே சம்மதித்ததில்லை. இதுதான் சச்சரவுக்குக் காரணம்.

நான் சோபாவில் சாய்ந்தபடியே முற்றத்தின் பெருமைகளைப் பற்றிச் சிந்திக்கலானேன். என் சிறுவயதில் இந்த முற்றத்தில்தான் என் அத்தையின் திருமணம் நடந்தது. அவள் கணவனுடன் புறப்பட்டபோது வீட்டில் ஒவ்வொருவரிடமும் அழுது கொண்டே விடைபெற்ருள். அவளுக்கு என்னிடம் மிதமிஞ்சிய பரிவு. தினமும் காசு கொடுப்பாள். ஓர் ராணுவச் சிப்பாய் எழுதிய கடிதங்களை அவளுக்காக இரண்டு தடவை நான் வாங்கி வந்தேன்

உருதூச்
சித்திரம்



அவள் அந்தக் கடிதங்களை இரகசியமாகப் படிப்பாள். ஒரு நாள் என் எதிரிலேயே இந்த முற்றத்துக்குப் பக்கத்துக் கதவில் மறைந்து நின்று அவள் அவனுடன் பேசினாள். அன்று போனவன் திரும்பவே இல்லை. என் அத்தை இப்போது குழந்தைகுட்டிக்காரி யாகிவிட்டாள். அவள் இந்த நிகழ்ச்சியை மறந்தும் போயிருக்கலாம்.

நான் உயர்தரப் பள்ளியில் பயின்றபோது, என்னைவிட இரண்டு வயது பெரியவர்களான அக்கம் பக்கத்துப் பெண்கள் இருவருடைய திருமணமும் இந்த முற்றத்தில்தான் நடந்தது. சம வயதுள்ள பையன்களும் பெண்களும் இந்த முற்றத்தில் சிறு வயது முதல் விளையாடிப் பழகுவார்கள். மண வயது வந்ததும் பெண்ணை வெளியூரில் கொடுத்து விடுவார்கள். இந்த ஊர்ப் பெண் எவளும் இங்கேயே மருமகளாகி வாழ்ந்ததில்லை.

ஒரு தடவை எங்களூரில் ஹிந்து முஸ்லிம் கலகம் மூண்டது. பலர் காயம் அடைந்தார்கள். என் தாத்தாவும் தகப்பனாரும் பல நாளாக இருந்த பகையைப் போக்கி, ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் இந்த முற்றத்திலே கூட்டி, அன்புடன் ஒருவரை ஒருவர் தழுவச் செய்தார்கள். குளிர்ந்த ஷர்பத்தும் இனிய தின்பண்டங்களும் கொடுத்து, அவர்களுக்கு வரவேற்பு விழா நடத்தினார்கள்.

நான் பொறியியல் கல்லூரியில் பயின்ற நாளில் ஒரு முறை விடுமுறையில் ஊருக்கு வந்தேன். போஸ்ட் மாஸ்டர் பாரத்துவாஜன் மகள் தமயந்திக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. அவள் என்னுடன் படித்தவள்; ஆனால் உயர்தரப் படிப்புடன் நின்றுவிட்டாள். என் முன்னோரைப் போலவே நானும் அவள் திருமணத்துக்குக் காலை முதல் மாலை வரையில் சுற்றிச் சுற்றிப் பல உதவிகள் செய்தேன். அவளுக்குப் பரிசும் கொடுத்தேன். அவள் கணவனுடன் சென்றபோது ஸ்டேஷன் வரைக்கும் சென்று விடை கொடுத்தேன். அவள் அண்ணன் நீலகண்டன் எனக்கு நெருங்கிய நண்பன். அன்று நாங்கள் இருவரும் அழுதோம்.

இந்த ஊரில் எல்லாருமே நாளடைவில் மாடி வீடுகளைக் கட்டி ஜன்னல்களை அமைத்துவிட்டார்கள். அந்த ஜன்னல்களில் எத்தனையோ பெண்களின் நகைமுகங்களை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் எல்லாரும் பாடவும் ஆடவும் விளையாடவும் தங்கள் வீடுகளில் இடம் இல்லாமல் இந்த முற்றத்துக்குத்தான் வருவார்கள்.

கடுங்கோடையில் புழுக்கம் தாங்காமல் ஊர்ப் பெண்களும் ஆண்களும் சில்லென்று காற்று வீசும் இந்த முற்றத்தையே தஞ்சமாகக் கொள்வார்கள. மூடிய அறைகளில் தண்ணீரைத் தெளித்து, மின்சார விசிறியை முழு வேகத்தில் போட்டு நித்திரையில் ஆழ்ந்து போகிறவர்கள் சிலரும் இருந்தார்கள்.

இந்த முற்றத்திலே நள்ளிரவுவரையில் சமீதாவுக்கு நான் எத்தனையோ கதைகள் சொல்லியிருக்கிறேன். கல்லூரியில் நான் செய்த குறும்புத்தனங்களைச் சொல்லி அவளைச் சிரிக்க வைப்பேன். இதே இடத்தில் ஓர் இரவில் என் அண்ணி, சமீதாவின் எதிரிலேயே, ''நீங்கள் ஏன் மணம் செய்துகொள்ளவில்லை, நரேன்? உங்கள் மனைவி வந்து இங்கே பேசினால் இந்த முற்றம் கலகல வென்று ஆகிவிடும். இப்படி வெறிச்சென்று இராது'' என்று சொன்னாள்.

நானும் சமீதாவும் பேசாமலே இருந்தோம். அண்ணி குறும்புச் சிரிப்புடன், ''நீங்கள் ஒருவரை மற்றவர் காதலிப்பவர்களைப் போல வாயை மூடிக்கொண்டீர்களே!'' என்றாள். அப்போது மாடியிலிருந்து அண்ணா தண்ணீர் கொண்டு வரச் சொல்லி அண்ணியைக் கூப்பிட்டார். அவள் எங்களைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு மாடிக்குப் போய்விட்டாள். சமீதா என்னிடம் ஏதும் பேசாமலே அவசரமாக வீட்டுக்குப் போக எழுந்தாள். நான் சென்று வாசற் கதவைத்

**பெற்றோர்களே! குழந்தைகளின் பாதங்களைக் கொண்டு தரம் பார்க்க வேண்டாம் அவைகள் வாழ்நாள் முழுவதும் உறுதியாக உழைக்கக் கூடியவை!**

பாடா லில்லிபுட்டில், சீரான, சரியான தயாரிப்பும் வளர்ந்து வரும் குழந்தைகளின் கால்களுக்கு, வசதியாகப் பொருந்தும் வகையில் காலணிகள் உருவாக்கப்படுவதை நீங்கள் காணலாம். கவர்ச்சியும் அழகும் கொண்டு நவீன தோற்றத்தில், குழந்தைகளின் கால்களுக்கு சுகம் அளிக்கும் வகையில்-மிருதுவான, உறுதியான தோலினால் லாவகமாக பாதங்களை வைத்துக்கொள்ளுமாறு அமைக்கப்பட்டுள்ளன. விரல்களை சுலபமாக மிக சுகத்துடன் பொருந்தி வைத்துக்கொள்ள வளரும் அறையும், குதிங்கால் தடிப்புப் பட்டையும் அமைக்கப் பட்டிருப்பதால், கால்களை நிலையாகப் பற்றிக்கொள்ள வசதியாக இருக்கின்றது. மேலும், வளைந்து கொடுக்கும் அடிப்பாகங்களின் அமைப்பும், காலடிகளை நன்கு பொருந்தி வைத்துக்கொண்டு இயற்கையாக அசைந்து நடந்து செல்ல துணை செய்கின்றது. எல்லாவகையிலும், பாடா லில்லிபுட் விஞ்ஞான ரீதியில் நேர்மையும், சீர்மையும், அழகும் கொண்ட காலணிகள். நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு பாடா லில்லிபுட் காலணிகளை வாங்குங்கள், சீக்கிரம் வாருங்கள். பொருத்தமான காலணிகளை உங்கட்கு வழங்குவோம்.




**Bata**

# லில்லிபுட்

வளர்ந்து வரும் குழந்தைகளின்
சிறு கால்களுக்கு மிகவும் ஏற்றது



தீபாவளி - எங்கும்
ஒளி - மகிழ்ச்சி - அன்பு - வனப்பு

# கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி துணிகள்
தன் எழில் மிகு வண்ண ஒளியால்
இன்பம் திழைத்திடும்
ஒவ்வொரு நன்னாளையும்
மேலும் பிரகாசிக்கச் செய்கிறது.

## தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.

பாலசுந்தரம் பில்டிங், எழும்பூர், சென்னை-8.

ELEGANT

---



அதிக உற்பத்தியின் மூலம் சிறு தொழில்களுக்கு வளர்ச்சியும் வளப்பமும் உண்டாக்குப் பொருட்டு நாங்கள் உதவுகிறோம்:—

★ வேலை நடப்பதற்குரிய முதலீட்டுக்காக அட்வான்ஸ்.
★ யந்திரங்கள் வாங்குவதற்குத் தவணைகளாகச் செலுத்தும்படியான கடன்.
★ தொழிலை விரிவுபடுத்தவும் புதுப்பிக்கவும் அல்லது புது முறையில் அமைக்கவும் நிதானமான நிபந்தனைகளில் கடன்கள்.

எங்கள் பீல்டு ஆபீசர்கள் உங்களுக்கு வேண்டிய விவரங்களைக் கூறவும் விண்ணப்பத் தாள்களை நிரப்புவதிலும் நிதி சம்பந்தமான விஷயங்களைத் தொகுப்பதிலும் உதவி செய்யத் தயாராக இருப்பார்கள்.

## ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்

(ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் சார்புடையது)

தலைமை அலுவலகம்:
அவென்யூ ரோடு, பெங்களூர்-9

STATE BANK OF MYSORE BANGALORE

T.R. சிவராமன்,
ஜெனரல் மானேஜர்.

BBC/SBM24A

தாழிட்டு, அங்கேயே ஒன்றும் தோன்ருமல் சிறிது நேரம் நின்றேன்.

பிறகு இதே முற்றத்தில் சமீதாவின் கணவனை நான் வரவேற்கும் நாளும் வந்தது. என் அன்புச் சோதரி சமீதாவை வேறொருவனுடன் செல்ல விடை கொடுத்து அனுப்பினேன்.

எங்கள் வீட்டுக் கிழவர்கள் ஒவ்வொருவராகக் காலமான போது, இந்த முற்றத்திலிருந்துதான் அவர்களுடைய சடலங்கள் புறப்பட்டன. அண்ணன் பக்கத்து நகரத்தில் தனி வீடு கட்டிக்கொண்டு, இந்த வீட்டை என்னிடம் ஒப்படைத்தார். இங்கே தனியாக இருக்க எனக்குப் பயமாக இருந்தது. இரவில் படுத்ததும் பல நினைவுகள் எழும். இவற்றில் பெரும்பாலானவை என் கண்ணில் நீரைப் பெருக்கும்.

மணமானபிறகு சமீதா ஒரு தடவை இந்த முற்றத்தில் என்னைப் பார்க்க வந்தாள். நான் அன்று வழக்கம்போல முற்றத்தில் தண்ணீர் தெளித்து, சுவரோரம் உள்ள செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தேன்.

அவளைப் பார்த்ததுமே வாளியைக் கீழே வைத்து, ''எப்போதம்மா வந்தாய், சமீதா?'' என்று கேட்டேன்.

அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய உருவமே முற்றும் மாறியிருந்தது. அவள் கண்ணில் துயரமும் ஏமாற்றமும் நிறைந்திருந்தன. உதடுகள் துடித்தன. ஆருகப் பெருகிய கண்ணீரை அவளால் தடுக்க முடியவில்லை. உடனே போய்விட்டாள். அவள் வருவானேன்? ஒன்றும் சொல்லாமல் போவானேன்?

அதற்குப் பிறகு நான் சமீதாவைப் பார்க்கவே இல்லை. அவள் தந்தை வேறு ஊரில் மாற்றலாகிப் போய்விட்டார். இனி அவளுக்கு இங்கே என்ன வேலை? அவள் எதற்காக இங்கே வரப் போகிருள்?

வெறிச்சென்று இருந்த முற்றத்தைக் காணப் பொறுக்காமல் நான் மணம் செய்துகொண்டேன். நீடாவை வீட்டுக்கு அழைத்து வந்தேன். அவள் இங்கே கால் வைத்ததுமே, அண்ணி சொன்னுற்போல, இந்த முற்றத்தில் கலகலப்பு ஏற்பட்டது.

**யா**ரோ வாசற்கதவைத் தட்டினார்கள். நீடா தாழ்வாரத்துத் திரைமறைவில் நின்ருள். காலையில் எண்ணெய் தேய்த்து முழுகிய அவள் கருங் கூந்தல் முதுகில் அழகாகப் பாவியிருந்தது. நாங்கள் ஒருவரை ஒருவர் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டோம்; தலையைத் தாழ்த்திக்கொண்டோம். நான் வேகமாகச் சென்று வாசற்கதவைத் திறந்தேன்.

வாசலில் பஞ்சாப் நேஷனல் பாங்க் ஏஜெண்ட் புரி நின்றிருந்தார். அவர் பணிவுடன் சொன்னுர்: ''தம்பி, மன்னித்துவிடுங்கள். உங்களுக்கு அநாவசியத் தொந்தரவு கொடுத்தேன். இந்த முற்றம் இப்போது திருமண வரவேற்புக்குத் தேவையில்லை என்று சொல்லவே வந்தேன். வரவேற்புக்கு ஆகும் செலவை மிச்சப்படுத்தி என் மகளும் சேகரும் காச்மீரில் தேனிலவு கொண்டாடத் திட்டம் போட்டிருக்கிருர்கள். நானும் சரியென்று சொல்லிவிட்டேன். இதில் ஒன்றும் தொல்லை இல்லையே! உங்கள் உதவிக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்''

புரி போய்விட்டார். நான் ஏதும் தோன்ருமல் விசாலமான முற்றத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நாலு புறமும் பெரிய பெரிய மாளிகைக்கு நடுவில் அந்த நெடுமுற்றம் பரந்து கிடந்தது.

அந்த முற்றத்தைத் தாண்டிச் சென்றபோது பல மணிகாலம் நடப்பதாக எனக்குத் தோன்றியது. மறுபுறம் போவதற்குள் நான் களைத்துவிட்டேன். அங்கே நீடா நின்றிருந்தாள்; திரைக்கு வெளியே மௌனமாக, ஆனல் உறுதியாக, தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்காமல் நின்றிருந்தாள்.

நான் புன்னகை பூக்க முயன்றேன். அவள் தோளில் கை வைத்துக்கொண்டு, ''ஒரு காரணமும் இல்லாமல் நீ வீணுகக் கோபித்துக்கொண்டிருக்கிருய், நீடா! போய் ஜோரான டீ போடு. இருவரும் ஆனந்தமாக உட்கார்ந்து குடிப்போம். அப்புறம் இந்த முற்றத்தை மாற்றி அழகிய மாளிகை கட்டும் திட்டத்தைப்பற்றி யோசித்து, எவ்வளவு ஆகும் என்று கணக்குப் போட்டுப் பார்ப்போம்'' என்றேன். ★

தமிழ்: **'கின்னரன்'**



★

வண்ண வண்ண மத்தாப்பு
மலர்ந்த சோதி மத்தாப்பு
கண்ணை யெல்லாம் பறிக்கின்ற
களிப்பைத் தரும் மத்தாப்பு !

★

# நீகோ

## கிருமி நாசினி சோப்பு

## பார்க்-டேவிஸ் தயாரிப்பு

பருக்கள், கரும்புள்ளிகள், வேர்க்குரு மற்றும் இதர சரும நோய்களினின்று உங்கள் சருமத்தைப் பாதுகாத்து அதை சுத்தமாகவும், ஆரோக்கியத்துடனும் வைத்திருக்கிறது. ஷாம்புவாக உபயோகிக்கும்போது கிருமிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்த அதன் நுரை பொருட்களிலிருந்து உங்களைக் காக்கிறது. ஒப்பற்ற கிருமி நாசினி சோப்பான நீகோ மூன்று விதங்களில் இணையற்றது—சுத்தம் செய்து, கிருமிகளை அழித்து, பராமரிக்கிறது. உங்கள் சருமத்திற்குத் தேவையான தினசரி பாதுகாப்பை அளியுங்கள்.




தினந்தோறும் உபயோகிப்பதற்கான ஒரிஜினல் கிருமி நாசினி சோப்பு.

JAISONS



### லீலாசுகர் கண்ட கண்ணன்

ராஸ லீலை

ஸாயங்காலே வநாந்தே .....

வசந்த காலம்; மாலை வேளை; சோலைகள் பூத்திருக்கின்றன. நிலாக் காய்கிறது. உயிர்கள் யாவும் வியக்கும் வடிவழகுடன் கண்ணன் கோபியருடன் ராஸக்ரீடையை நடத்துகிறான். தேவ மங்கையர் இந்தக் காட்சியைக் கண்டு மயங்கி நிற்கின்றனர். கண்ணனுடைய எழில் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.



வையமேழும் கண்டாள் க்ருஷ்ணோநாம்ப......

கண்ணனும் பலராமனும் விளையாடிவிட்டு வருகின்றனர். பலராமன் யசோதையிடம், "அம்மா, நான் எவ்வளவு சொல்லியும் கேளாமல் கண்ணன் இன்று மண்ணை அள்ளி அள்ளித் தின்றான்" என்கிறான். "கண்ணா, பலராமன் சொல்வது உண்மைதானா?" என்கிறாள் யசோதை. "அத்தனையும் பொய். வேண்டுமானால் என் வாயைப் பார்!" ஆவென்று திறந்த கண்ணன் வாயில் உலகமனைத்தையும் கண்டு வியக்கிறாள் யசோதை.



தேரோட்டி

நகநியமித ....

கண்ணன், அர்ஜுனனுடைய தேர்க் குதிரைகளைத் தன் நகங்களினால் தினவடங்கச் சொறிந்து கொடுக்கிறான்; தண்ணீரை வாரிக் குதிரைகளின் மேல் வீசிக் கழுவித் தேய்த்து முழுகச் செய்கிறான்; தேரை ஓட்டும்போது தன் தலைப்பாகையில் சவுக்கைச் செருகிக்கொள்கிறான்; கடிவாள வாரைப் பற்களால் கடித்துக்கொள்கிறான். இப்படி அர்ஜுனனுக்குத் தேரோட்டியாக இருந்து பல பணிவிடைகளைச் செய்தான், தேவகியின் தவப் புதல்வன்.



வேய்ங்குழலே, சொல்! அயி முரளி... ..

ஒரு கோபிகை கண்ணனுடைய வேய்ங்குழலைப் பார்த்துச் சொல்லுகிறாள் : "செல்வக் குழலே! நீ கண்ணனுடைய தாமரைமுகத்தில் தோன்றும் மூச்சின் சுவையைப் பருகுகிறாய். உன்னைப் பணிந்து வேண்டுகிறேன் : "அவன் உன்னை அதரத்தின் அருகில் வைத்து ஊதும்போது, அவன் காது உன்னை அணுகும். அப்போது அவன் காதோடு என் பிரிவுத் துயரத்தைக் கூறி, அவன் என்னைக் கைக்கொள்ள உதவ வேண்டும்."

*Happy Deepavali Greetings From*

# THE BOMBAY COMPANY (PRIVATE) LTD.

**169, BROADWAY, MADRAS-1**

Telegram : CABRONADA

Telephone : 21191

விவசாயப் பெருமக்களே!

அமோக விளைச்சல் பெற ஆசையா!

வீரிய ஒட்டுக் கம்பு, சோளம், மக்காச்சோளம்
விதைகளை உபயோகியுங்கள்.

சிறந்த தொழில் நுணுக்க உதவியாளர்களால்
தயாரிக்கப்பட்டு NSC-ன் அத்தாட்சி
பெற்ற தரமான விதைகள்
விற்பனைக்குத் தயார்

விவரங்களுக்கு:

சக்தி சுகர்ஸ் லிமிடெட்.

72, சென்குப்தா வீதி, ராம்நகர், கோயமுத்தூர்-9.

# மகாலட்சுமி

பி.வி.ஆர்.



சின்னஞ்சிறு கைப் பெட்டி, சிறு தலையணையைச் சுற்றியிருந்த சில்க் ஜமுக்காளம்—இவை இரண்டையும் அலட்சியமாகத் தூக்கி வந்த போர்ட்டர், நான் உட்கார்ந்திருந்த 'பர்த்'தின் ஓர் ஓரத்தில் வைத்தான். அவனுக்குப் பின்னாலே வந்தவர் - என்னுடன் ஓர் இரவும் அரைப் பகலும் ரெயிலினுள் குடியிருக்கப் போகிறவர் - என்னை ஒரு தடவை ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டே, பளபளக்கும் ஷர்ட் பையிலிருந்து மணி பர்ஸை எடுத்தார். நான் ஏற்கனவே அவருடைய ஆஜானுபாகுவான உடற்கட்டையும், தளதளவென்றிருந்த கன்னங்களின் செழுமையையும் பார்த்து அநுபவித்தாயிற்று. இப்போது நான் என் கையில் வைத்துக்கொண் டிருந்த மாலைப் பத்திரிகையைத் தாழ்த்தி மணி பர்ஸில் கண் செலுத்தினேன்.

பிரயாணி, அப்போதுதான் அச்சகத்திலிருந்து வந்த ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து, "இந்தாப்பா!" என்றார்.

"சில்லறை இல்லீங்களே!"

அவர் சிரித்தார்; "உன்னை யார் கேட்டா? உம் உம், ஒடு. வேறு கிராக்கி கிடைக்கிறதான்னு பாரு!" என்றார்.

சாய்ந்து உட்கார்ந்திருந்த என் உடல் தானாக நிமிர்ந்தது. கையில் இருந்த பத்திரிகை நழுவியது. ஒரு குழந்தை எளிதாகத் தூக்கக் கூடிய பெட்டியையும் படுக்கையையும் சுமக்கக் கூலி ஒரு ரூபாயா? இம்மாதிரி கொடுக்கப் பிரயாணிகள் இருப்பதனால்தான், போர்ட்டர்கள் மற்றவர்களைக் கசக்கிப் பிழிகிறார்கள்!

அவர் இன்னும் பர்ஸைப் பாக்கெட்டினுள் வைக்கவில்லை. இன்னும் கையிலேயே - நான் அதன் அமைப்பையும் அழகையும் பார்த்து அநுபவிக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலோ என்னவோ - வைத்துக்கொண் டிருந்தார். அதன் விலை குறைந்தது முப்பது ரூபாயாவது இருக்க வேண்டும். முதலைத் தோலில் மீனின் வடிவத்தில் செய்தது.

திடீரென்று என்னைப் பார்க்காமல், என்னிடம் பேசினார்: "டி. டி. எஸ்ஸுக்குப் போன் பண்ணினேன், 'லோயர் பர்த் போடடா'ன்னு. சரின்னு கூடச் சொன்னான்."

அவர் பேசின தோரணையிலிருந்து, ஒரு ரெயில்வே மேலதிகாரி அவர் கூப்பிட்ட குரலுக்காகக் காத்துக் கிடக்கிறவர் என்று தோன்றியது. என்னுடைய இயல்பான குறும்பு சும்மா இருக்கக் கூடாதா? அது பேசியது: "டி. டி. எஸ். தம் வேலைத் தொந்தரவில் மறந்து போயிருப்பார்!"

பர்ஸைப் பையில் போட்ட அவர் என்னைப் பார்த்தார்.

"நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்?" என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார்.

"பின் வேறு எப்படி நினைக்கிறது? உங்களுக்கு அப்பர் பர்த்தானே கொடுத்திருக்கிறார்கள்?"

"அப்பர் பர்த்திலே எனக்குத் தூக்கம் வராதுன்னு கருணாகரனுக்குத் தெரியும்."

"யார் கருணாகரன்?"

"அவன்தான் நான் சொன்ன டி. டி. எஸ். ஒரு தடவை இதுமாதிரித்தான் கூப்பே கம்பார்ட்மென்டில் எனக்கு அப்பர் போட்டிருந்தார்கள். கருணாகரன் மதுரையில் ஏறினான். அவனுக்கு லோயர். திருநெல்வேலியிலிருந்து தன்னந்தனியே சௌகரியமாக வந்து கொண்டிருந்த நான் சௌகரியமா இருந்தது யாருக்கோ பொறுக்கவில்லை. அப்பருக்குப் போய் உட்கார்ந்தேன்."

"உம். அப்புறம்?"

"அப்புறம் என்ன அப்புறம்? தூக்கம் வந்தால்தானே? திண்டுக்கல் வரும்போது கருணாகரன் தூங்கிக் கொண்டிருந்தான். மணப்பாறை போச்சு. ராத்திரி பதினொரு மணிக்குத் திருச்சி வந்தது."

"நீங்கள் இன்னும் உட்கார்ந்து கொண்டே இருக்கிறீர்கள்!"

"ஆமாம். திருச்சியில் அவன் திடீர்னு கண் விழிச்சான். என் கோலத்தைப் பார்த்தான். 'என்ன ஸார், தூங்கலியா?'ன்னு ஒரு கேள்வி கேட்டான். ஏதோ முகதாட்சிணியத்துக்காகக் கேட்கிறான்னு, 'அப்பர் பர்த்திலே எனக்கு என்னிக்குமே தூக்கம் வராது'ன்னேன். அடுத்த விநாடி என்ன செய்தான் தெரியுமா?"

"தூக்க மாத்திரை வேணுமான்னு கேட்டிருப்பார்."

"நோ நோ. 'நீங்க இங்கே படுத்துக் கொள்ளுங்கள். நான் அங்கே போகிறேன்'னான். தன் படுக்கையையும் சரசரன்னு சுருட்டிக் கையில் எடுத்துவிட்டான்."

"கரு கரன் ரொம்ப நல்லவராக இருக்க வேண்டும்."

"அதை ஒரு தடவை சொன்னாப் போதாது. இளம் வயசு; முப்பத்து நாலு முப்பத்தஞ்சு வயசுதான் இருக்கும். பெரியவர்கள்னால் ஒரு பக்தி, மரியாதை!"

"அன்னிக்கு நீங்க கேட்காமலே கிடைச்ச லோயர் பர்த் இன்னிக்குக் கேட்டும் கிடைக்கவில்லை!" என்றேன்.

''இன்னிக்கும் கேட்கவில்லை. பேச்சோடு பேச்சா, போனில் சொல்லியிருந்தேன், லோயர் போடுன்னு; அவ்வளவுதான். அந்தப் பிரயாணத்துக்கு அப்புறம் நாங்க நெருங்கிய பெரிய சிநேகிதர்களாகிவிட்டோம். ஆனாலும், 'மார்க்கபந்து'ன்னு என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடமாட்டான். ஸார், ஸார்ன்னு ஒரே ஸார்தான்!''

''நல்ல மரியாதை தெரிஞ்ச மனுஷர் அவர்.''

''இவ்வளவுக்கும் என் வயசு ஐம்பத்து மூணுதான்.''

ஒரு ருபாயை அவர் போர்ட்டரிடம் தூக்கி எறிந்தபோது வியந்தேனே, அதே வியப்பு மீண்டும் பூத்தது.

''ஐம்பத்து மூணுன்னா சொன்னீர்கள்?''

''ஆமாம், ஏன்?''

''எல்லாரும் வயதைக் குறைத்துச் சொல்லுவார்கள். நீங்கள் என்னடான்னா....'' உண்மையிலே நாற்பத்தைந்துக்கு மேல் அவரை மதிக்க முடியாது. சிவந்த நிறம்; வழுக்கை தேவைக்கு அதிகமாகவே படர்ந்திருந்தாலும் வாலிபத்தின் அஸ்தமனந்தான் தெரிந்ததே தவிர, மூப்பின் இளமை தெரியவில்லை.

''நீங்கள் ஆச்சரியப்பட்டதில் எனக்கு அதிசயமே இல்லை. எல்லாரும் நான் எப்படி என் உடற்கட்டைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறேன்னு மூக்கில் விரல் வைத்து விசாரிக்கிறார்கள். ஆனால்....'' திடீரென்று அவர் நிறுத்தினார். குரல் கம்மியது.

நான் அவரைப் பார்த்தேன். திடீரென்று முகம் வாடியது. கண்கள் பனித்தன. கண்ணீர் கன்னத்தில் விழுவதற்குள் அவர் அங்கவஸ்திரத்தினால் துடைத்துக்கொண்டார்.

''ஆனால்.....'' என்று மீண்டும் மென்மையான குரலில் ஆரம்பித்த அவர் தொடர்ந்து, ''இனிமே அது தானாகக் குலைந்துவிடும்'' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. யோசித்துக்கொண்டிருக்கையிலேயே என்ஜின் ஊதியது கேட்டது. ரெயிலும் நகர ஆரம்பித்தது.

'ஏன்?' என்று நானாகக் கேட்பேன் என்று அவர் எதிர்பார்த்தார். நான் கேட்கவில்லை. அது அவருக்கு ஏமாற்றமாகத்தான் இருந்திருக்கும். இரண்டொரு நிமிஷங்கள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் தம்மைத் தாமே மூழ்கடித்துக் கொண்டவரைப் போலக் காணப்பட்டார். என் மௌனம் அவருக்கு எரிச்சலைக்கூட மூட்டியிருக்கும். நான்தான், உடற்கட்டுக் குலையக் காரணம் கேட்கவில்லையே!

திடீரென்று பாக்கெட்டில் கை விட்டு, முதலை - மீன் பர்ஸை எடுத்தார்; திறந்தார்.

''இதைப் பாருங்கள், ஸார்'' என்று என் கண்முன் நீட்டினார். பார்த்தேன். ''கையில் எடுத்துப் பாருங்கள்.''



என் கை கொடுத்து வைத்தது. சர்க்கார் பணத்திலல்லாமல், ரெயிலில் முதல் வகுப்பைக் கண்டறியாத நான், எந்த ஜன்மத்தில் முதலைப் பர்ஸை அநுபவிக்க முடியும்? வழுவழுவென்று இருந்தது.

''போட்டோவைப் பாருங்கள், ஸார்!'' பர்ஸை என் கையில் கொடுத்த காரணத்தை அவர் நினைவுறுத்தினார்.

போட்டோ! சின்னஞ்சிறு படம். படத்தில் வட்ட வடிவமான முகம். நெற்றியின் நடுவில், பெரிதான, ஆனால் பாந்தமான குங்குமப் பொட்டு. கழுத்துத் தாங்காத நகைகள். காசு மாலையின் காசுகள்கூடத் தெரிந்தன. மூக்கிலும் காதிலும் அணிகள்.

உடற்கட்டு இனி ஏன் குலையும் என்பதை அவர் சொல்லாமலே ஒரு படத்தைக் காட்டி எனக்கு விளக்கிவிட்டார்.

மௌனமாக, பயம் கலந்த பக்தியுடன் கொடுப்பது போல, பர்ஸை நீட்டினேன்.

''மகாலட்சுமியின் மறு அவதாரம் ஸார் அவள்! ஆறு மாசமாச்சு!'' மீண்டும் வராத கண்ணீரைத் துடைக்க முற்பட்டார் அவர்.

நான் ஏதும் பேசவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்னால் நடந்துவிட்ட துக்கத்தை இப்போது என்னால் எப்படி ஆற்ற முடியும்? மேலும், அவருடைய துக்கத்தை நினைவுதான் தூண்டில் போட்டு இழுக்கிறது. அந்த நினைவைத் தொடர வைப்பானேன்?

ரெயில் தாம்பரத்தைக் கடக்கும் வரை பத்திரிகையிலேயே மூழ்கிக் கிடந்தேன். திடீரென்று அவருடைய குரல் கேட்டது.

''நீங்களும் திருநெல்வேலியா?''

''ஆமாம் ஸார்!''

''எந்த ஆபீஸோ?''

''கல்வி இலாகாவில் இருக்கிறேன்.''

''இன்ஸ்பெக்ஷனா?''

''இல்லை, ஒரு சின்னக் கருத்தரங்கு நாகர்கோயிலில் நடக்கிறது.''

''முதலியார் எப்படி இருக்கிறார்?''

''யாரைச் சொல்லுகிறீர்கள்? டெபுடி டைரக்டர் சிவசைலத்தையா?''

''வேறு யார் முதலியார் இருக்கிறார்கள்?''

''சௌக்கியமாக இருக்கிறார்.''

''ரொம்ப முருகபக்தி மனுஷனுக்கு. ஒரு தடவை திருச்செந்தூர் ஆண்டவன் சந்நிதியில் உட்கார்ந்து மணிக்கணக்காகப் பாடிக்கொண்டிருந்தார். அடுத்த தடவை பார்த்தால் விசாரித்தேன்னு சொல்லுங்கள். அடடா, இதுவரை உங்க பெயரையே தெரிந்து கொள்ளவில்லையே!''

''ராமகிருஷ்ணன்.''

''உங்களுக்கும் கருணாகரன் வயசு தான் இருக்கும்; இல்லியா?''

''முப்பத்துமூணு.''

''செங்கற்பட்டு வரப் போகிறது. சாப்பிடப் போகிறீர்களா?''

''கையிலே கொண்டு வந்திருக்கிறேன்.''

திடீரென்று மார்க்கபந்து மௌனத்தில் உறைந்தவரைப் போலக் காணப்பட்டார்.

''நான் ரெயிலேறப் போகிறேன்னா, கமலா, ஒரு கல்யாணத்துக்குத் தயார் செய்யறது போல ஆரம்பித்துவிடுவாள்.''

கமலாதான் போட்டோவில் பார்த்த உருவத்தின் பெயர் என்று புரிந்து கொண்டேன்.

''அப்படியா?''



''திருநெல்வேலியிலிருந்து மூணு மணிக்கு ரெயில் புறப்படறது. ராத்திரிவரையில் என்ன என்ன தேவையோ அதெல்லாம் ஒரு பிரம்புக் கூடையில் இருக்கும். ஸ்வீட் இல்லாமல் டிபன் சாப்பிடத் தெரியாது எனக்கு. கார்த்தாலே ஒரு நல்ல ஸ்வீட்டாப் பண்ணி எவர்ஸில்வர் சம்புடத்தில் அடைத்துவிடுவாள்.'' குரல் கம்ம ஆரம்பித்தது. நினைவைத் திருப்ப முயன்றேன். மனுஷன் மனைவியை நினைத்துப் புலம்ப ஆரம்பித்தால், அப்புறம் வீட்டில் நிம்மதியாகத் தூங்கிக்கொண் டிருக்கும் சரஸ்வதியைப் பற்றி என் சிந்தனையும் ஓட ஆரம்பிக்கும். எனக்கு எதற்கு அநாவசியச் சிந்தனை?

''அவள் எந்தக் காரியம் செய்யட்டுமே, அதிலே அவள் கை மணக்கும். எதிலும் ஒரு கச்சிதம், ஒரு சுத்தம். முகங் கோணாமல், புன்னகையோடு செய்வாள், ஸார், மகாலட்சுமி.''

''பாவம்!'' நினைவை என்னால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நிற்காத ஸ்டேஷனில்கூட ரெயில் நிற்கும். ஆனால் அவருடைய நினைவு நிற்கும் என்று தோன்றவில்லை.

''மனுஷன் பிறந்தால் ஒரு நாள் போகவேண்டியதுதான் என்ற வேதாந்தம் எனக்குத் தெரியும். என் வருத்தம் அவள் போனதில் மட்டும் இல்லை, ஸார். என்னைத் தவிக்க வைத்துப் போனாளே என்பதுதான்.''

''அவ்வளவு தூரம் உங்க ரெண்டு பேர் மனசும் இணைஞ்சு போயிருந்திருக்கு!'' என்றேன்.

''நன்றாகச் சொன்னீர்கள், ராமகிருஷ்ணன், நன்றாகச் சொன்னீர்கள்! எனக்குக் குழந்தைகள் இல்லியே என்ற குறை ரொம்ப உண்டு. ஆனா அவள் என்னைச் சமாதானப் படுத்துவாள். தன் மனசிலும் அந்தக் குறை உண்டு என்பதைக் காட்டிக் கொள்ளவே மாட்டாள். சே, என்ன பொறுமை, பெருந்தன்மை!''

''பாவம்! நீங்கள் கொடுத்து வைக்கவில்லை!''

''ஸார், ஒரு சின்ன உதாரணம் சொல்றேன். அவள் ஒரு பிச்சைக் காரனை விரட்டி நான் பார்த்ததில்லை. ஆனா அவனுக்குத் தர்மம் கொடுப்பாளே, எப்படித் தெரியுமா? நாங்க தினம் தினம் சாப்பிடற அரிசியை, முத்து முத்தா இருக்கிற அரிசியை, ரெண்டு கையிலும் அள்ளிக் கொண்டு போடுவாள். அவள் இருக்கிற இடத்தில் தரித்திரத்தின் நிழல்கூட இருக்காது.''

''இனிமேல் பாவம்! நீங்கள் ஏகாங்கிதான்.''

''சரியாச் சொன்னீர்கள். என்னிக்குக் கமலா என்னை விட்டுப் போனாளோ அன்னிக்கே என் ஏகாந்தம் ஆரம்பித்து விட்டது, ஸார். அவள் உயிரோடு இருக்கிறபோது அடிக்கடி என்ன சொல்லுவாள் தெரியுமா?''

அவள் என்ன சொல்லுவாள் என்று எனக்கு எப்படித் தெரியும்?

''என்ன?''

'' 'இதோ பாருங்கள், நமக்குப் பகவான் ஐசுவரியத்தில் குறை வைக்கவில்லை. சந்தான பாக்கியம் இல்லேன்னுட்டான். இதுக்குக் காரணம் என்ன தெரியுமா? அவனைப் பத்தியே நாம் என்னென்னிக்கும் நினைச்சுண்டு இருக்கணும் என்கிறதுதான். உங்களுக்குச் சஷ்டியப்த பூர்த்தி ஆனதும், நாம் ரெண்டு பேரும் எல்லாத்தையும் உதறி எறிஞ்சுட்டுத் தீர்த்த யாத்திரை போவோம். கடைசியிலே ரிஷிகேசத்திலே போய், சிவானந்தரின் ஆச்ரமத்தில் காலத்தைக் கழிப்போம்.' இப்படிச் சொல்லுவாள் ஸார் அவள்! எதிலும் ஆசை இல்லை, மோகம் இல்லை.''

சரஸ்வதி புறப்படுவதற்குமுன்கூட ஓர் எவர்சில்வர் கிண்ணம் வாங்க ஆசைப்பட்டாள்.

''வானப்பிரஸ்தாசிரமத்துக்கு முன் கூட்டியே திட்டம் போட்டிருந்தாள்!'' என்றேன்.

''சொத்தை எல்லாம் தர்ம ஸ்தாபனத்துக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் எழுதி வைக்கணும்னு ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது சொல்லுவாள்.''

''அவள் இருந்தபோதே அப்படி என்றால், இனிமேல் உங்க ஏகாந்த வாழ்க்கையில் சொத்துக்கு என்ன அவசியம் இருக்கப் போகிறது?''

நான் சொன்னது அவருடைய காதில் விழவில்லை போலிருந்தது. பேசாமல் இருந்தார்.

செங்கற்பட்டில் என் டிபன் ஸெட்டைத் திறந்தேன்.

''ஸார், வாருங்கள். ரெண்டு பேரும் சாப்பிடலாம்'' என்றேன்.

''வேண்டாம் ஸார், பாவம்! உங்களுக்கு இல்லாமற் போய்விடும்.''

''என் மனைவி எப்போதும் நிறைய வைத்திருப்பாள். ரேஷன் இருக்கிறது கூட அவளுக்குத் தெரியாது.'' சரஸ்வதியைப்பற்றி நான் பெருமையடித்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. நன்றாகப் பயன்படுத்திக்கொண்டேன்.

திறந்த பாத்திரங்களைப் பார்த்ததும், ''ஓ! எல்லாம் வைத்திருக்கிறாளே, உங்க சம்சாரம்! சாம்பார் சாதம், ரசஞ்சாதம், கறி, அப்பளம். பேஷ் பேஷ்!'' என்றார் மார்க்கபந்து.

ரெயில் மதுராந்தகம் தாண்டியதும் மெதுவாக எழுந்தேன். மார்க்கபந்து இருட்டில் மரங்களை எண்ணிக்கொண்டிருந்தார்.

''நீங்க தூங்கவில்லையா?''

அவர் முகத்தைத் திருப்பிப் பார்த்தார்.

''நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள், ராமகிருஷ்ணன். நான் இந்த மூலையிலேயே கொஞ்ச நேரம் ஒண்டிக்கொள்ளுகிறேன். அப்புறமாப் பர்த்திலே உட்கார்ந்துகொள்றேன்.''

''உட்காருகிறீர்களா?''

''ஆமாம். எனக்கு இன்னிக்குச் சிவராத்திரிதான்.''

மனுஷர் என்னிடம் நேரடியாக 'எனக்குக் கீழ்ப் பர்த்தைத் தர முடியுமா?' என்று கேட்கமாட்டேன் என்கிறார். அவருடைய வறட்டுக் கௌரவம் எவ்வளவு தூரத்துக்குப் போகிறது என்று பார்க்க மனம் ஒரு பக்கம் ஆசைப்பட்டது. ஆனால் அடுத்த கணமே, 'மகாலட்சுமி' என் கண் முன், தன் கணவர் ரெயிலில் தூங்காததற்காக முகம் கலங்கி நிற்கும் காட்சி எழுந்தது.

நான் என் படுக்கையை மேல்தளத்தில் விரித்தேன்.

''என்ன ஸார் இது? பரவாயில்லை. நீங்கள் இங்கேயே இருங்கள்'' என்றார் அவர். மேலே போட்டுவிட்ட படுக்கையை மீண்டும் எடுக்க மாட்டேன் என்று அவருக்கு நன்றாகத் தெரியும்.

இப்போதும் அவருக்குக் கேட்காமலே அவர் விரும்பியது கிடைத்து விட்டது. நல்லவர்களுடைய கோஷ்டியில் நிச்சயமாக என்னையும் ஓர் அங்கத்தினனாகச் சேர்த்திருப்பார்.

திண்டுக்கல்.

ஒரு சிப்பந்தி இட்டிலி, வடை, காபி எல்லாம் கொண்டு வந்து வைத்தான். இரண்டு பேரும் சாப்பிட்டோம்.

''கமலா இட்டிலி வார்த்தால் எப்படி இருக்கும் தெரியுமா? மல்லிப்பூத்தான். அதுக்கு ஸ்பெஷலாக் கொத்சு பண்ணுவள். ஆகா!''

மனுஷன் ஆரம்பித்துவிட்டார் ராத்திரி விட்ட இடத்திலிருந்து என்று எனக்கு ஆத்திரம் வந்தது. ஆனால் நல்ல வேளை, காபியின் தரம் பேச்சைத் தொடர விடவில்லை.

''காபியா ஸார் இது?'' என்று அவர் காபியின் மேல் பாய ஆரம்பித்தார். அப்போதும், கமலா தயாரித்த காபிக்குப் புகழ்மாலை பாட ஆரம்பித்துவிடுவாரோ என்ற பயம் பிறந்தது.

சிப்பந்தி மீண்டும் வந்ததும் பர்ஸை எடுக்கப் போனேன். ''ஸார், கொஞ்சம் இருங்கள்'' என்று கை அமர்த்தின அவர் தம் பர்ஸை எடுத்தார். ஓர் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்தார்.

''இரண்டு நாப்பத்தெட்டு ஆச்சு ஸார்.''

''பாக்கி ரெண்டு ரூபாய் கொடு'' என்றார் மார்க்கபந்து.

''ரொம்ப தாங்க்ஸ், ஸார்'' என்றான் சிப்பந்தி.

தாராளம் அவருடன் பிறந்த குணங்களில் ஒன்று என்று நினைத்தேன். போர்ட்டருக்கு ஒரு ரூபாய். இப்போது சிப்பந்திக்கு ஐம்பத்திரண்டு பைசா. ஆனால் வாய் திறந்து நான் புகழவில்லை.

ரெயில் நகர்ந்ததும் அவர், ''எவ்வளவுன்னு சொன்னான்?'' என்று கேட்டார்.

''இரண்டு நாப்பத்தெட்டு.'' அந்தக் கணமே நான் அவரைப் புரிந்து கொண்டேன். என் பர்ஸை எடுத்தேன். அவர் எங்கேயோ பார்த்தார்.

''இந்தாருங்கள்.'' ஒரு ரூபாய் இருபத்துநாலு பைசாவை நீட்டினேன்.

திடுக்கிட்டவரைப் போல அவர் என்னைப் பார்த்தார். நான் செய்யும் காரியம் கேவலமானது என்று உள்ளம் நினைப்பதை முகம் காட்டுவது போலத் தோன்றியது.

''எதற்கு ஸார் இதெல்லாம்?'' சொல்லிக்கொண்டே கையை நீட்டினார். நான் கொடுத்த பழைய

நோட்டுக்கூடக் கண்ணை உறுத்தியிருக்கும்.

**தி**ருநெல்வேலி வரும்வரை என்ன என்னவோ பேசினார். தம்முடைய திறமை, வியாபாரத்தில் கொழித்த பணம், ஒரு மந்திரியை அவர் முன்னாலேயே மண்டையில் அடித்துப் பேசிய பேச்சு, மகாலட்சுமியுடன் அவர் நடத்திய இல்லற வாழ்க்கை. ஒன்றையும் விடாமல் பேசித் தீர்த்துவிட்டார். ரெயிலுக்கே அலுத்திருக்க வேண்டும். வழக்கத்துக்கு ஐந்து நிமிஷம் முன்னாலேயே திருநெல்வேலியைச் சரண் அடைந்தது.

“ஸார் ராமகிருஷ்ணன், வாருங்கள் வீட்டுக்குப் போகலாம். குளித்துச் சாப்பிட்டுவிட்டு, மெதுவாக நாகர் கோவிலுக்குப் போகலாம்” என்றார் அவர்.

“இல்லை ஸார். ஜீப் வந்திருக்கும். இன்னொரு தடவை அவசியம் வறேன்.”

“நீங்கள் என் வீட்டுக்கு அவசியம் வரணும். கமலா இல்லாத வீட்டுக்கு இதுவரை யாரையும் அழைத்ததில்லை. இப்போ முதல்முதலாக் கூப்பிடறேன்.”

“அடுத்த தடவை வறேன் கண்டிப்பாக.”

“அப்போ நான் வறேன், உங்க மாதிரி இளம் பிள்ளைகள் நிறைய இருந்தாலே போதும். நம் நாடு ரொம்ப சீக்கிரம் முன்னேறிவிடும். வரட்டுமா?”

“ரொம்ப தாங்க்ஸ், ஸார்.”

போர்ட்டர் படுக்கையையும் சின்னஞ்சிறு கைப்பெட்டியையும் அலட்சியமாகத் தூக்கிக்கொண்டு நடந்தான்.

**நா**கர்கோவிலிலிருந்து சென்னைக்குத் திரும்பிச் சென்ற நான் ஆறு மாதங்களுக்குப் பிறகு, மீண்டும் திருநெல்வேலிக்குச் செல்ல வாய்ப்பு உண்டாயிற்று.

ஒரு ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியை அடைந்த நான் நேரே சர்க்கார் விடுதிக்குச் சென்றேன். குளித்துவிட்டுச் சாப்பிட்ட எனக்குப் பொழுது போகவில்லை. கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஒரு ஜீப்பை என் உபயோகத்துக்கென்று வைத்துவிட்டுப் போனார்கள். மறுநாள் காலை வரையில் வேலை ஏதும் கிடையாது.

திடீரென்று மார்க்கபந்துவின் ஞாபகம் வந்தது. போன் டைரக்டரியிலிருந்து அவருடைய விலாசத்தைக் குறித்து வைத்துக் கொண்டேன்.

**பா**ளையங்கோட்டையில் சுமார் ஓர் ஏக்கர் நிலத்தில் அவருடைய பங்களாத் திகழ்ந்தது. கண்ணுக்குக் குளிர்ச்சியான இளம் பச்சை நிறம். மனுஷன் உண்மையிலேயே பெரிய பணக்காரர் என்று பங்களாவும், அதன் முன் பரந்து விரிந்த நந்தவனமுமே கூறின.

போர்ட்டிகோவின் அருகில் ஜீப்பை நிறுத்தச் சொன்னேன்.

நான் திண்ணையில் கால் வைத்த போது கடிகாரத்தைப் பார்த்தேன். மூன்று மணி. வீடே மௌனத்தில் ஆழ்ந்திருந்தது. ஒருவேளை மார்க்கபந்து சிப்பந்திகளிடம் பங்களாவை ஒப்படைத்துவிட்டு வெளியூர் எங்காவது சென்றிருக்கிறாரோ?

திரும்பிப் போய்விடலாமா என்ற எண்ணம் தோன்றிய மறு கணமே, கண்ணெதிரே சுவரில் மின்சார மணியின் ஸ்விட்ச் தெரிந்தது. ஒரு தடவை அழுத்தினேன்.

சுமார் இரண்டு நிமிஷங்களுக்குப் பின் மாடியிலிருந்து யாரோ இறங்கி வரும் ஒலி கேட்டது. திண்ணையில் இருந்தவாறே பார்த்தேன். முப்பத்து நாலு முப்பத்தைந்து வயது மதிக்கக் கூடிய ஒரு மாது, பட்டுப் புடைவை சரசரக்க வந்துகொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் நான் திகைத்தேன். அவள் உள்ளூர்ப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பணி செய்யும் ஆசிரியை காந்திமதி! அவள் எப்படி இங்கே இருக்கிறாள்? ஒருவேளை மார்க்கபந்துவுக்கு உறவோ?

‘யார்?’ என்று கேட்க வந்தவள் என்னைக் கண்டதும் புரிந்துகொண்டாள். “வாருங்கள், வாருங்கள். என்னைத் தெரிகிறதா, ஸார்?” என்றாள்.

“நீங்கள் காந்திமதி அல்லவா?”

“ஆமாம் ஸார். நீங்கள் வந்து...” அவள் இழுத்தாள்.

“மிஸ்டர் மார்க்கபந்துவைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.”

“முதலில் உட்காருங்கள். காபி கொண்டு வருகிறேன். அவர் இன்னும் அரை மணி நேரத்தில் வந்துவிடுவார்.” சொல்லிவிட்டு அவள் உள்ளே விரைந்தாள்.

‘அவர்’ என்ற வார்த்தை, அதைக் காந்திமதி சொன்ன விதம் எல்லாமே என்னைத் திகைப்பில் ஆழ்த்தின.

ஹால் வெகு நேர்த்தியாகக் காணப்பட்டது. சுவர் நிறைய ஓவியங்கள். ஒரு பெரிய ஊஞ்சல். சற்றுத் தள்ளி, சோபா செட்டு. காந்திமதி சென்ற திசையில் கண் சென்றது. வாயிற்படிக்கு மேலே சுவரில், இரண்டு படங்களுக்கு நடுவில் காலியான இடம் சூனியமாகப் பட்டது. அங்கே இத்தனை நாளாக ஏதோ ஒரு படம் இருந்திருக்க வேண்டும். சமீபத்தில் தான் எடுத்திருக்கிறார்கள் என்பது வெறிச்சோடியிருந்த மூன்று ஆணிகளிலிருந்தே தெரிந்தது. காலியான இடத்தில் என்ன இருந்தது இத்தனை நாளாக? ஓவியமா, சுவாமி படமா?

என் கேள்விகளில் நானே மயங்கிக் கொண்டிருக்கையில், காந்திமதி காபியுடன் வந்தாள். என்னையும் அறியாமல் என் கண் அவளுடைய கால்விரல்களைப் பார்த்தன. வெள்ளி மெட்டிகள். அடுத்த கணம் காந்திமதி, மார்க்கபந்துவின் அக்கா பெண்ணாகவோ தங்கை பெண்ணாகவோ இருக்கக் கூடும் என்று தோன்றியது.

டீப்பாயின் முன் காபியை வைத்த அவள், “இன்ஸ்பெக்ஷனுக்காக வந்திருக்கிறீர்களா?” என்று கேட்டாள்.

“ஆமாம். உங்க ஸ்கூலுக்குக்கூட ஒருவேளை போக வேண்டியிருக்கும்.”

“நான் இப்போ அங்கே இல்லை. வேலையை ராஜீநாமாப் பண்ணி ஒன்றரை மாதந்தான் ஆகிறது!”

“அப்படியா?”

“ஆமாம். நான் தொடர்ந்து டீச்சராக இருப்பது இவருக்குப் பிடிக்கவில்லை.”

காபியைக் கையில் எடுத்த நான், திடீரென்று, “அதோ அந்த இடத்தில் ஒரு படம் இருந்தது இல்லியா? மகாலட்சுமியின் படம்!” என்றேன்.

நான் திடீரென்று கேட்டதனால் தானோ என்னவோ, காந்திமதி ஒரு நிமிஷம் விழித்தாள். பிறகு சமாளித்துக்கொண்டு, “ஆமாம், இருந்தது. ஆனால் மகாலட்சுமியின் படம் அல்ல; இவருடைய மூத்த மனைவியின் படம்” என்றாள்.

எடுத்த காபித் தம்ளரைக் கை மீண்டும் டீப்பாயின் மேலேயே வைத்தது.

“அந்தக் காலி இடம் கண்ணை உறுத்துகிறது!” என்றேன் சிரித்துக்கொண்டே.

அவள் யதார்த்தமாகப் பேசினாள்: “இன்னும் ரெண்டு மூன்று நாளைக்குத்தான். அப்புறம் வேறு படம் அங்கே வந்துவிடும். இன்னும் பிரேம் போட்டாகவில்லைன்னு பிரேம் கடைக்காரன் சொன்னான்.” யாருடைய படம் வரப்போகிறது என்று அவள் சொல்லாமலே எனக்குத் தெரிந்துவிட்டது.

நான் மெதுவாக எழுந்தேன்.

“காபி சாப்பிடவில்லையே!” குரலில் ஒரு வருத்தம். சட்டென்று எடுத்துத் தண்ணீர் குடிப்பது போலக் குடித்தேன்.

“நான் அப்புறமா வருகிறேன்.”

“இப்போ வந்துவிடுவார்.”

“அவர் மெதுவாக வரட்டும். எனக்கு ஒருவரைப் பார்க்க வேண்டும்.”

“ஏதாவது விசேஷமாகச் சொல்லணுமா?”

நான் சிரித்துக்கொண்டே பேசினேன்: “என் கிட்டே சொல்லாமலே, என்னை அழைக்காமலே, கல்யாணம் செய்துகொண்டது மன்னிக்க முடியாத குற்றம்னு நான் கோபித்துக் கொண்டதாகச் சொல்லுங்கள்.”

“கோலாகலமாக நடத்த வேண்டாம்னு நாங்க ரெண்டு பேரும் தீர்மானித்தோம். நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது!” காந்திமதி மன்னிப்பைக் கேட்கும் குரலில் கூறினாள்.

நான் அவசரமாக விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன். ஜீப்பில் ஏறும்போது, மார்க்கபந்துவின் முதலை மீன் பர்ஸைப் பார்க்க வேண்டும் என்ற விபரீத ஆசை திடீரென்று எழுந்தது. முதலைத் தோல் பர்ஸா அல்லது முதலைக் கண்ணீரில் மிதந்து ஓடும் மீன் உருவப் பர்ஸா? அதனுள் இப்போது யாருடைய படம் இருக்கிறது? ஹால் சுவரில் காலி இடம் இருந்தது போல, அதிலும் காலி இடம் இருக்கிறதா? அல்லது வேறு படம் வந்துவிட்டதா? என்னால் எதையும் நிச்சயமாக நிர்ணயம் செய்ய முடியவில்லை.

ஜீப் புறப்பட்டது.

மகாலட்சுமியைப் பற்றி அழுதேனா அல்லது மார்க்கபந்துவை நினைத்துச் சிரித்தேனா? இதுகூட எனக்குத் தெரியவில்லை. ★

# லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் டீ




## தரத் தேயிலைத் தூள்களிலே தனிப்பெருமை வாய்ந்தது

குணமும், சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை வெகு சீக்கிரத்தில் இந்தத் தேயிலையைக் கொண்டு அதிகமான கப்புகளைப் பெறுவீர்கள். இந்த ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள்—உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள். நிச்சயமாக இதை ரசித்து நீங்கள் மகிழ்வீர்கள்—ஆம்!—அப்படியே உங்கள் விருந்தினர்களும்கூட! தரத் தேயிலைத் தூள்களில் லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தனிப்பெருமை வாய்ந்தது, தன்னிகரற்றது என்பது உண்மை.

**லிப்டன்ஸ் என்றாலே நல்ல டீ**

LIPTON

LHGC-5 TAM

# சயாமில் சிவனும் திருமாலும்

இரா. நாகசாமி

மலேயா நாட்டின் வடகோடியில் பினாங்கு இருக்கிறது. அதற்கும் வடக்கே உள்ள நாட்டைச் சயாம் என்று குறிப்பர். இந்த நாடுகளுடன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகம் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தது. அந்த நாட்டின் மேற்கிலும் கிழக்கிலும் கடற்பகுதி. அதன் மேற்குக் கரையில் 'தகூபா' என்ற துறைமுகம் இருக்கிறது. தகூபா என்ற நதி வங்கக் கடலில் புகும் முகத்தில் இந்த நகர் இருக்கிறது. தகூபா என்பது இக்காலத்தில் வழங்கும் பெயர். அதன் உண்மைப் பெயர் தக்கோலம் என்பது. இது தமிழ்ப் பெயர். அதுவே மக்களின் வழக்கில் தகூபா என்று மாறியது.

சங்க காலத்தில் உலக வாணிகத்தில் பெரும் பங்கு தமிழ் மக்கள் கையில் இருந்தது. மேலை நாடுகளிலிருந்து வந்த வாணிகர்கள் தமிழகத்தோடு திரும்பிவிடுவர் என்றும், தமிழக மாலுமிகளே கீழை நாடுகளுக்குச் செல்வர் என்றும் அறிகிறோம். வங்கக் கடல் கடந்து சயாம் செல்லும் தமிழ்க் கலங்கள், முதல் முதலில் தக்கோலத்தில் தான் தங்கும். அதனால் அது அக்காலத்தில் சிறந்து விளங்கியது. அதற்குத் தலைத் தக்கோலம் என்ற பெயர் இருந்தது. முதல் இராசேந்திர சோழன் இதைக் கைப்பற்றினான் என்று அவன் கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

இந்த நகரிலிருந்து பத்துக் கல் தொலைவு, நதிக் கரையூடே உள்நாட்டில் சென்றால் ஓர் இடத்தை அடையலாம். அங்கே நதியின் வடகரையில் ஒரு மேடு. அந்த மேட்டில் சில சிற்பங்களும், ஒரு கல்வெட்டும் இருக்கின்றன. அவற்றை அவ்வூர் மக்கள் 'பிர நராய்' என்பர். இவற்றில் முக்கியமான மூன்று சிலைகளின் மேல் ஒரு மரமே வளர்ந்திருக்கிறது. வேர்களின் இடையில் இந்தச் சிலைகள் நன்கு தெரிகின்றன. இவை இப்போது இருக்கும் இடத்துக்கு நேர்எதிரே நதியின் தென்கரையில் சிறிய குன்று உள்ளது. அது இப்போது மூங்கிற் புதர்களும் மற்றக் கொடிமரங்களும் அடர்ந்த காடாக இருக்கிறது. அங்கு ஒரு கட்டிடம் இருந்த தடயங்கள் காண்கின்றன. இந்தச் சிலைகளும் கல்வெட்டும் அங்கு இருந்ததாகவும், பின்னர் இப்போதுள்ள இடத்துக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

இந்த மூன்று சிலைகளில் சிறப்பாக உள்ளது திருமாலின் சிலை. நான்கு கரங்களை உடைய இந்தப் பெருமானின் மேல் இடக் கரம் உடைந்துள்ளது. வலக் கரத்தினால் அபயம் அளித்து இடக் கரத்தைத் துடைமீது அமர்த்திப் பெருமான் விளங்குகிறார். இந்தச் சிலையைப் பார்த்தவுடன் பல்லவர் சிற்பங்கள் நினைவுக்கு வரும். இதன் அருகில் ஸ்ரீதேவியின் சிலையும் கிடக்கிறது. மூன்றாவதாக ஓர் ஆண்தெய்வத்தின் சிலை வேர்களுக்கு இடையில் சிக்கிக் கொண்டுள்ளது. அது சிவபிரானுடையதாக இருக்கலாம். இவை தவிர, முடிவடையாத ஒரு சிலையும், இன்னும் சில சிதைந்த சிற்பப் பகுதிகளும் கிடக்கின்றன.

இதன் அருகிலுள்ள கல்லில் நல்ல தமிழில் ஒரு சாசனம் உள்ளது. அது கி. பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு, சயாம் நாட்டில் எப்படி வந்தது? அதைக் கவனிப்பதற்கு முன், கல்வெட்டு என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

கல்வெட்டில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது;



சிவபெருமான்

....ய வர்மருக்கு....மாந்தாந் நாங்கூருடையான் தொட்டகுளம். பேர் ஸ்ரீ அவனி நாரணம். மணிக்கிராமத்தார்க்கும் சேனா முகத்தார்க்கும் .....பதார்க்கும் அடைக்கலம்.

நாங்கூருடையான் அங்கு ஒரு குளம் தோண்டி அதற்கு 'அவனி நாரணம்' என்ற பெயரையும் இட்டிருக்கிறான். அதை மணிக்கிராமத்தாரும், சேனாமுகத்தாரும், இன்னும் யாரோ ஒரு குழுவும் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளான். அந்தக் கல்வெட்டு



திருமால்

வர்மன் என்ற பெயரில் முடியும் ஒரு மன்னன் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

வர்மன் என்று பெயர் கொண்ட பல மன்னர் அங்கு ஆண்டிருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியில் ஆண்ட ஒரு மன்னனை இது குறிக்கிறது. நாங்கூர் என்பது தமிழகத்தில் காவிரிப் பூம்பட்டினத்தின் அருகில் உள்ள ஓர் ஊர். அவ்வூரைச் சேர்ந்தவன், கடல் கடந்து சயாமுக்கு வந்து திருமாலுக்குக் கோயில் எழுப்பி அவனி நாரணம் என்ற ஏரியையும் தோண்டியிருக்கிறான்.

காவிரிப் பூம்பட்டினம், சங்க காலத்திலிருந்தே சிறந்த துறைமுகமாக இருந்தது. அங்கு இன்றும் வணிகர்கள் வாழ்ந்த மணிக்கிராமம் என்ற பகுதி இருக்கிறது. எனவே கடல் கடந்து சென்று வாணிபம் புரிந்த தமிழ் வணிகர்கள் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து கலங்களில் செல்வர் என்பது தெளிவு. அவ்வாறு அவர்கள் செல்லும்போது கடல் கொள்ளைக்காரர்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளச் சேனைவீரர்களை அழைத்துச் செல்வது வழக்கம். காவிரிப்பூம்பட்டினத்தில் மணிக்கிராமம் இருப்பதனாலும், அருகில் நாங்கூர் இருப்பதனாலும், சயாம் நாட்டில் குறிக்கப்படும் மணிக் கிராமத்தாரும் நாங்கூருடையானும் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து சென்றிருக்கிறார்கள் என்பது தெளிவு. நாங்கூரில் சிறந்த வீரர்கள் வாழ்ந்ததாகக் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் திருமங்கையாழ்வார் பாடியிருக்கிறார். சங்க காலத்திலேயே கரிகால் பெருவளத்தான், நாங்கூர் வேள் மகளை மணந்தான் என்று அறிவோம்; எனவே கடல் கடந்து வாணிகம் செய்த தமிழ் மக்களுக்கு, நாங்கூர் வேளிர்கள் உறுதுணையாகச் சென்றிருக்க வேண்டும்; அவர்களே சேனாமுகத்தார் என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டவர்களாக இருக்கலாம்.

காவிரிப் பூம்பட்டினத்தி லிருந்து சென்ற தமிழ்க் கலங்கள் சயாம் நாட்டில் தக்கோலத்தில் தங்கியிருந்தன. அங்கு மணிக்கிராமம் ஏற்படுத்தப்பட்டுச் சிறந்த வாணிகம் நடைபெற்றிருக்கிறது என்பது இந்தக் கல்வெட்டினால் தெளிவாகிறது. நாங்கூர் சிறந்த வைணவத் தலம். எனவே அங்கே சென்ற நாங்கூருடையான், திருமாலைப் பிரதிட்டை செய்து, குளத்தையும் தோண்டியிருக்கிறான்.

அவனி நாரணம் என்ற பெயர் அந்தக் குளத்துக்கு இடம்பெற்றதும் சிறப்பாகும். தமிழகத்தில் அப்போது ஆண்ட பல்லவ மன்னன் தெள்ளா றெறிந்த நந்திவர்மன். அவன்மீது நந்திக் கலம்பகம் என்ற சிறந்த நூல் பாடப்பெற்றுள்ளது. அதில், நந்திவர்மன் சிறந்த கடற்படையின் தலைவன் என்றும், கடற்படை அவனிநாரணன் என்னும் பட்டம் பெற்றவன் என்றும் குறித்திருக்கிறது. அவன் ஆட்சியின்கீழ்க் காவிரிப் பூம்பட்டினம் இருந்தது. 'காவிரி சூழ் திருநாடுடை நந்தி' என்று கலம்பகம் குறிக்கிறது.

எனவேதான், காவிரிப்பட்டினத்திலிருந்து சென்ற நாங்கூருடையான், தன் மன்னனாகிய நந்தியின் பெயரால் அந்தக் குளத்துக்கு அவனி நாரணம் என்று பெயரிட்டிருக்கிறான். அவனி நாரணன் என்பதே 'பிரித்வி நாராயணன்' என்று வரும். இந்தப் பெயர்தான் மருவி இப்போது அந்த நாட்டு மக்கள் மொழியிலே 'பிர நராய்' என வந்துள்ளது. இங்குக் கிடைத்துள்ள சிலைகள் பல்லவர் காலச் சிலைகளைப் போல் இருப்பதற்குக் காரணமும் இதுவே.

கடல் கடந்து வாணிகம் செய்த தமிழ் மக்கள் பல நாடுகளில் தங்கி, அங்குள்ள மக்களோடு ஒன்றித் தங்கள் பண்பையும் போற்றியிருக்கின்றனர் என்பதற்கு இது ஒரு சான்று. ★



தமிழ்க் கல்வெட்டு



கலைமகள்—தீபாவளி மலர்—1968 | ஆற்றங்கரையில் ஆயிழை | ஓவியர்: ஜி. கே. மூர்த்தி




உங்களது பாதுகாப்பு; எங்களது தலையாய குறிக்கோள்.

மோட்டார் வண்டியின் மூலாதாரப் பணி உறுப்புக்களாக விளங்குகின்றன டை ராடு எண்டுகள். ஓட்டுவோருக்கும் சரி, சாலையிலுள்ளவர்களுக்கும் சரி; அவற்றின் உழைப்பையே பொருத்திருக்கின்றன வண்டியின் பத்திரத் தன்மையும் பாதுகாப்பும்.

'QHR' உங்களுக்கு வழங்கும் டை ராடு எண்டுகள் நம் நாட்டுத் தயாரிப்புகளிலேயே அதி உன்னதமானவை. ஸ்டியரிங் பாதுகாப்புக்கென, தலையாய வாகனத் தயாரிப்பாளர்களால் பொருத்தப்படும் டை ராடு எண்டுகள், ரானே (மதராஸ்) லிட்., தயாரிப்பாகும்.

அதற்குக் குறைந்த எதனையும் ஏற்காதீர்கள், இல்லையேல், நாளடைவிலே உங்கள் செலவு அதிகமாகிவிடும்.

QHR

தயாரிப்பாளர்கள்:

ரானே (மதராஸ்) லிமிடெட்

47, வேளச்சேரி ரோடு, சென்னை—32.

Criterion-RE-1507

# பித்து மனம்

## அநுத்தமா



நான் பால் விநியோகக் கூடத்திலிருந்து திரும்பியபோதே நன்றாக இருட்டிவிட்டது. தெரு முழுதும் பட்டாசுக் கடைகள். ஒவ்வொரு கடையிலும் சிறியோரும் பெரியோருமாகக் கும்பல் ஆங்காங்கே தெருவில் நடக்க விடாமல் தடுத்தது. எனது ஒரு கையில் ஐந்து லிட்டர் பாலுடன் எவர்ஸில்வர் தூக்கு, மற்றொரு கையில் சாமான் பை. பையில் மேலாக லாலாக் கடைப் பட்சணக் கூடை எட்டிப் பார்த்தது. பாலும் சிந்தாமல், லாலா கடைப் பட்சணக் கூடையும் நசுங்காமல், நானும் விழாமல் எப்படித்தான் தீபாவளிக் கூட்டத்தைத் தாண்டி எங்கள் தெரு முனையை அடைந்தேனோ எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

தெருமுனையில் என்னைக் கண்டதும் வீதி ஓரத்தில் தோசை இடியாப்பம் முதலியவற்றைச் சுட்டு விற்றுப் பிழைக்கும் மருதாயி "சாமி!" என்று அழைத்து, சின்னம்மாவுக்குப் பிடிக்கும் என்று கனகாம்பரம் கொடுத்தாள்.

நான் கைநீட்டி அவள் அளித்த பூச்செண்டை வாங்கி, பையில் லாலா கடைக் கூடை மீது அலுங்காமல் வைத்தேன்.

மீனுவுக்கு நான்கு பிள்ளைகள். அவர்களுக்குப் பிறகு அருமையாகப் பிறந்தவள் உஷா. அந்த மகளிடம் அவள் பாசத்தோடு இருப்பதில் என்ன தவறு? மேலும், பையன்களாவது அருகே இருந்தபடியால் அடிக்கடி வந்து தாயைக் கண்டு போவார்கள். உஷாவின் கணவன் பம்பாயில் இருந்தான். வருஷத்துக்கு ஒரு முறைதான் அவளால் தாய் வீடு வர முடியும். அவளும் அவள் கணவனும் வருவார்கள்.

இந்தத் தடவை தீபாவளிக்குத் தன்னிடமே பெண்ணும் மருமகனும் வரப் போவதை நினைத்து மீனு மிகவும் மகிழ்ச்சி கொண்டாள். பெண்ணுக்கு விருப்பமானதை யோசித்துச் சேகரித்துத் தயாரித்தாள்.

உஷாவுக்குத் திரட்டுப் பால் என்றால் உயிராம். என்ன பெரிய அதிசயமான பொருள்! பம்பாயில் கிடைக்காத பாலா? அங்கே செய்து சாப்பிட மாட்டாளா?

"மாமா, நீங்கள் சரியாக நாலு மணிக்குக் கோனார் வீட்டிலிருந்து வாங்கி வந்துவிட வேண்டும். நல்ல எருமைப் பால் தருகிறேன் என்றார்" என்று நூறு தடவை என்னை எச்சரித்துவிட்டாள் மீனு.

"சரிதான்."



மீனு கூடத்தில் என்னவோ வேலைக்குப் போனாள். ஒரு விநாடி கழித்து மீண்டும் ஓடி வந்தாள். ''மாமா, மாமிக்கு ஒரு வரி எழுதிப் போட்டீர்களா? நாளைக்கு உஷா வந்துவிடுவாளே! மாமி அதற்குள் வர வேண்டாமா? மாமி கையால் முறுக்குச் சுற்றினால்தானே மாப்பிள்ளைக்குப் பிடிக்கும்?''

''எழுதியிருக்கிறேன். ஆனால் மாமிக்கு உடம்பு கொஞ்சம் சரியாக இல்லையாம். முடிந்தால் வருவாள். போதாக்குறைக்கு அங்கே சுசீலாவுக்கு உதவி தேவையாக இருக்கிறது. குழந்தைகளை வைத்துக்கொண்டு சிரமப் படுகிறாள்.''

''இதெல்லாம் ஒரு காரணமா, மாமா? மாமிக்கு உடம்பு சரியில்லை என்றால் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? நம் சுசீலாவுக்குந்தான் ஒரு மாறுதலாக இருக்கட்டுமே! குழந்தைகளை அழைத்துக்கொண்டு தீபாவளிக்கு இங்கு வரட்டும். எல்லாருமாக அவள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வோம். உடனே புறப்படும்படி மாமிக்குத் தந்தி கொடுங்கள்'' என்றாள் மீனு.

மீனுவின் பாசத்தைப் பாராட்டுபவளே அல்ல என் மனைவி. எட்டு மக்களைப் பெற்றவள் அவள். எல்லாரிடமும் பரிவாக இருப்பாள். ஆயினும் யாரிடமும் பற்றுடன் இருப்பதாகத் தெரியாது.

''மாமா, மாமிக்குத் தந்தி?'' என்று மீண்டும் நினைவுபடுத்த வந்தாள் மீனு.

வேறு வழியின்றி நானும் தபாலாபீஸை நோக்கி நடந்தேன்.

சிறு பிராயத்திலேயே தாய்தந்தையரை இழந்தவள் மீனு. நாங்களே அவளை எடுத்து வளர்த்தோம். தன் மக்களைப் போல அவளையும் நினைத்தாள் என் மனைவி. ஆனாலும் அநாவசிய உணர்ச்சி வசப்பாடுகளை அவள் விரும்புவதே இல்லை. என் மீனு என்னைப் போல இருக்கிறாள், பாவம்!

தபாலாபீஸிலிருந்து திரும்பும்போது ''மாமா, மாமோவ்!'' என்று குரல் கேட்டு நான் திரும்பினேன். தபாலாபீஸ் வாசலில்தான் வெளியூர் பஸ்கள் நிற்கும். அங்கே சாமான்களுடன் நின்றுகொண்டிருந்தான் மீனுவின் கடைசிப் பையன் முரளி.

''என்னடா? காலேஜில் படிக்கிற பையனுக்கு இவ்வளவு மூட்டை எதற்கு? தீபாவளிக்கு வருகிற பயல் இடுப்புத் துணியோடு வரலாமே!'' என்றேன்.

''போங்கள், மாமா. உங்கள் மருமகள்தான் இருக்கிறாளே! தஞ்சாவூரி

லிருந்து கல் பதித்த கிருஷ்ணன் படமாம், நெட்டியில் செய்த திருச்சி மலைக் கோட்டையாம். எல்லாம் வாங்கி வந்தேன்.''

அவனுடன் சாமானைத் தூக்கிக் கொண்டு விடுவந்து சேர்ந்தேன்.

மீனுவின் கணவன் கூடத்தில் தரையில் அமர்ந்து பழைய செய்தித் தாள்களைப் பிரித்து வைத்துக்கொண்டு என்னவோ தேடிக்கொண் டிருந்தான். மீனு அவனருகில் அமர்ந்து என்னவோ சளசளவென்று பேசிக் கொண்டேயிருந்தாள். அவள் கூறியதில் ஏதேனும் ஒரு வார்த்தையாவது அவன் செவியில் புகுந்ததா என்பது புரியவில்லை. என்னைக் கண்டதும் மீனு 'சிவுக்'கென்று எழுந்தாள்.

''பாருங்கள், மாமா. இவரை நீங்கள்தாம் கிளப்ப வேண்டும். ஒன்றையும் காதில் வாங்க மாட்டேன் என்கிறார். இவர் கையால் ஒரு வரி எழுதினால்தானே மதிப்பு இருக்கும்? இந்த ஊரில் மாப்பிள்ளையின் அத்தை வீட்டினர் இருக்கிறார்கள். அவர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். மாப்பிள்ளை வரும் செய்தியைச் சொன்னேன். இவர் கூப்பிட்டால்தானே அத்தையின் கணவர் வருவார்?''

''தலைதீபாவளியா, நான் போய் வீடு வீடாக அழைத்துவிட்டு வர? தானே வருகிறார்கள் தம் மனிதர்களைப் பார்க்க'' என்று பதிலளித்தான் மீனுவின் கணவன்.

மீனு மிகவும் ஏமாற்றத்துடன் எழுந்து போனாள். அவளைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. ''கொஞ்சங்கூட ஆசை என்பதே இல்லையே! பெற்ற பிள்ளைகளிடத்தில் கூடவா அன்பு இருக்காது? கிடக்கட்டும். மாமா, ஜவுளிக் கடையிலிருந்து மூட்டை வரவில்லையே!''

''என்ன புடைவை வாங்கப் போகிறாய்?''

''காசிப் பட்டுப் புடைவைதான். அவள் ஆசைப்பட்டாள். அதாவது, யாரோ கட்டிக்கொண்டு இருந்ததாகவும், மிகவும் அழகாக இருந்ததாகவும் ஒரு சமயம் எழுதியிருந்தாள். உடனே நான் கடையில் சொல்லி வரவழைக்கச் சொன்னேன். நாளைக்கு அவள் வருவதற்குள் எல்லாம் தயாராகிவிட வேண்டும்'' என்றாள் மீனு.

தாய்ப் பாசம் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும் என்று என் மனம் வியந்தவாறு இருந்தது.

மறுநாள் உஷாவும் மாப்பிள்ளையும் வருவதற்குள் வீடு திருவிழாப் பட்ட பாடு பட்டது. மாக்கோலமும் செம்மண்ணும் மாவிலைத் தோரணமும் ஆங்காங்கே பூக்கொத்துகளும் கண்ணுக்கு விருந்தாகத் திகழ்ந்தன.

மற்றப் பிள்ளைகளும் குடும்பத்துடன் வந்துவிட்டனர். மூத்தவன் தையல் மிஷின் ஒன்றைச் சுமந்து வந்தான்.

''மீனு, தையல் வகுப்பில் சேரப் போகிறாயா என்ன?'' என்று நான் உரக்கக் கேட்டுவிட்டேன்.

''உஷ்!'' என்று தன் வாய் மீது ஒரு விரலை அழுத்தினாள் அவள். ''உஷா இப்பொழுது தையல் கற்றுக் கொண்டு நன்றாகத் தைக்கிறாளாமே? விசு அவளுககுப பரிசாகத் தரப் போகிறான்'' என்று பெருமைப்பட்டுக் கொண்டாள்.

என் மனைவி மட்டும் இன்னும் வந்து சேரவில்லை. மீனுவுக்குத் தன் மாமி மீது மிகவும் கோபந்தான்.

உஷா வந்தாள். வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தாள். தனக்காக வீடே அலங்காரமாக விளங்குவதைக் கண்டாள். அண்ணன் குழந்தைகளுடன் விளையாடினாள்.

மீனுவின் கணவனும் நானும் கூடத்தில் அமர்ந்து திண்டுக்கல்லிலிருந்து வந்த பழக் கூடையைப் பிரித்துக் கொண்டிருந்தோம். உஷா மூத்த அண்ணன் விசுவின் பிள்ளையுடன் ஊஞ்சலில் ஆடிக்கொண் டிருந்தாள்.

''அத்தை, அப்பா தையல் மிஷின் வாங்கியிருக்கிறாளே, பார்த்தியோ? எங்க அம்மா எனக்கு அதில் புதிசு புதிசாச் சொக்காய் தைக்கப் போகிறாளாம்'' என்றான் குழந்தை.

''எங்கேடா இருக்கிறது?'' என்று கேட்டாள் உஷா.

''தாத்தா ரூமிலே வச்சிருக்கா. நாங்கள் எல்லாம் இனிமேல் இங்கேதான் இருக்கப் போகிறோம். அதனாலே, தாத்தா ரூமை அப்பாவுக்குத் தந்தூட்டா.''

உஷா நேராகத் தகப்பனாரின் அறைக்குள் சென்று நோக்கினாள்.

நல்ல அழகான பெண் உஷா. உயரமாக, ஒல்லியாகப் பொற்கொடி போல இருப்பாள். கருநாகம் போன்ற ஜடை. சுருட்டை சுருட்டையாகக் கூந்தல் அமையவில்லையே என்பது அவள் குறையாம். ஒயிலாக நடந்து செல்வதை நான் ரசித்தேன். அவள் தகப்பனும் அவள் போவதைப் பார்த்தான். ஆனால் அவன் ரசித்தானா, ஆராய்ந்தானா, அல்லது தன் மனசுக்குள் சிரித்துக்கொண்டானா என்பது புரியவில்லை.

மாப்பிள்ளை தன் அத்தை வீட்டுக்குப் போய்விட்டு வந்தான். ''என்ன மாமா, மாமி எங்கே?'' என்று என்னைக் கேட்டவண்ணம் என் அருகில் அமர்ந்தான்.

''மாமி வருவாள்'' என்றேன். அதைச் சொல்லக்கூட எனக்கு அவமானமாக இருந்தது. இப்படிக் கடிதம், தந்தி ஒன்றையுமே கவனியாமல் பேசாமல் இருந்துவிட்டாளே என்று எனக்கு அவள்மீது எரிச்சல்.

''மாமியின் வரவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கிறாள் உஷா. என்னையும் ஆசைகாட்டி அழைத்து வந்திருக்கிறாள்.''

''என்ன விஷயம்?'' என்று நான் வியந்து கேட்டேன்.

''மாமி கை முறுக்கும் பொரிவிளங்காய் உருண்டையும் பிரசித்தமாமே?''

நான் சிரித்தேன். ''ஆமாம், இவர்களுக்கு அப்படி எண்ணம்.''

தீபாவளி ஜவுளி எடுப்பதற்காகச் சென்றிருந்த மீனு பெரிய மூட்டையுடன் உள்ளே வந்தாள். நானும் அவள் பின்னால் சென்றேன். கூடத்தை அடுத்த பெரிய அறையில் அவள் கடை பரப்பினாள். எல்லாருக்கும் எடுத்திருந்தாள்.

''இதுதான் விசுவுக்கு. டெரிலின் சட்டையே அவனிடம் ஒன்றுகூட இல்லை. வாங்கினது தெரிந்தால் திட்டுவான்.''

''ஏன்?''

''அவன் சுபாவம் அப்படி. பிறருக்குச் செய்வானேயன்றித் தனக்காகச் செய்துகொள்ள மாட்டான்.''

''அம்மா, எனக்கு எங்கே புடைவை? நீ பாட்டுக்குத் தத்துப் பித்தென்று ஏதாவது வாங்கி வைத்துவிட்டாயா என்ன? எனக்குப் பனாரஸ் இளநீல நிற உடலில் வெள்ளிச் சரிகையில் சின்னச் சின்னக் குருவிப் புட்டா போட்ட புடைவைதான் வேண்டும். நீ வேறு ஏதாவது வாங்கித் தந்தால் நான் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன்'' என்றாள் உஷா, தனிச் செல்லச் சலுகையுடன்.

''நீ நினைத்தபடி நினைத்த நேரத்தில் கிடைக்குமா, உஷா? அம்மா நன்றாகப் பார்த்து எடுப்பார்கள். அதை நீ சந்தோஷமாக வாங்கிக் கொள்ள வேண்டியதுதான்'' என்றாள் மீனுவின் பெரிய மருமகள்.

''உங்களுக்கென்ன, மன்னி, நீங்கள் இங்கேயே அம்மாவின் பக்கத்தில் இருந்துகொண்டு எதை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். நான் எனக்கு வேண்டியதைக் கேட்டு வாங்கிக் கொண்டுதான் போகப் போகிறேன்.''

மீனு எழுந்து போனபோது அவள் முகம் வாடிப் போயிருந்தது. மருமகள்மீது வருத்தமோ என்று எனக்குத் தோன்றியது. அருமை மகளை யாருமே ஒன்றும் சொல்லக் கேட்க மாட்டாள் போலும்!

''அம்மா, நீ எழுந்து போய்விட்டாயே! முதலில் எனக்குத் திரட்டுப் பால் காய்ச்சி எடுத்துவிடு. ஆறுமுகக் கோனாரிடம் பாலுக்குச் சொன்னாயா? நான் கடிதத்தில் எழுதாமல் போய் விட்டேன். இப்பொழுதே சொல்லி விடுகிறேன். லாலா கடையிலிருந்து சந்திரகலா வாங்கி வந்துவிடச் சொல்.''

உஷாவின் பேச்சை முழுவதும் கேட்கவே இல்லை மீனு. அவள் கொல்லைப் பக்கம் போய்விட்டாள்.

''அம்மா காதில்கூடக் கேட்டுக் கொள்ள மாட்டேன் என்கிறாள்'' என்று முணுமுணுத்தாள் உஷா.

''இதோ பார். உன் அம்மா நீ சொன்ன இரண்டையும் தயார்செய்து விட்டாள். இந்தா'' என்று கூறிக் கொண்டே நான் லாலா கடைப் பட்சணக் கூடையிலிருந்து ஒரு சந்திரகலாவை எடுத்து அவளிடம் தந்தேன். அவள் அதை வாங்கி வாயில் திணித்துக்கொண்டாள்.

''சரி, மாமா, அம்மாவிடம் நீங்களே சொல்லுங்கள். தோசைக் கடை மருதாயிகிட்டே சொன்னால் நல்ல கனகாம்பரம் தருவாள். ஏற்பாடு செய்துவிட வேண்டும்.''

''அதுவும் தயார்!'' என்றேன், வெற்றியுடன்.

உஷா பூச் செண்டை எடுத்துக் கொண்டு முன்பக்கம் ஓடினாள். மீனுவின் கணவன் என்னை அழைக்கவும் நான் வெளியே சென்றுவிட்டேன்.

நாங்கள் வீடு திரும்பியபோது வீடு பண்டிகைக் களை தாங்கிக் கோலாகலமாக இருந்தது.

என்னைக் கண்டதும் "மாமியும் வந்துவிட்டாள்" என்முள் மீனு.

"ஆமாம். நானும் முறுக்குக்கும் பொரிவிளங்காய்க்கும் சொல்லியாயிற்று" என்முள் உஷா.

நான் நேராக என் மனைவியைத் தேடிச் சென்றேன். அவள் வருவதற்கு ஏன் தாமதமாயிற்று என்று கேட்டேன்.

வெட்டெனப் பதில் வந்தது. "அவள் ஒரு பைத்தியம். நீங்கள் அதற்கு மேல்" என்று கூறி, அவள் தலையைத் தோளில் இடித்துக்கொண்டாள்.

மீனுவுக்கு மூன்று பேத்திகள், ஒரே ஒரு பேரன். அவர்களை அமர வைத்துக் கதை சொல்லிக்கொண்டிருந்தாள் அவள். மருமக்கள் இருவரும் அடுப்படியில் இருந்தார்கள்.

ஆற அமர நிம்மதியாக இருக்க வேண்டிய சமயத்தில் நின்ற இடத்தில் நிற்காமல் ஓடோடி வேலை பார்த்த மீனு இப்பொழுது, பண்டிகை நெருக்கடி சமயத்தில், அமைதியாகக் கதை சொல்லிக்கொண்டிருப்பது எனக்கு அதிசயமாக இருந்தது.

"என்ன மீனு, மிகவும் ஓய்வாக இருக்கிமுய்?" என்று கேட்டேன்.

"பின்னே? எனக்கு மேலே மாமி வந்தாகிவிட்டது. கீழே நாட்டுப் பெண்களாயிற்று. இனி நான் ஓய்வு பெற வேண்டியதுதானே?" என்முள்.

மீனுவின் நிர்வாகத் திறனை மெச்ச வார்த்தை இல்லை. மாலை விருந்து மிகவும் நன்முக அமைந்தது.

"நாளைக்காலை எல்லாரையும் எழுப்புவது உங்கள் வேலைதான் மாமா" என்முள் மீனு.

ஆனல் நான் விழித்துக் கொள்வதற்கு முன்பே என் மனைவியும் மீனுவும் எழுந்து, வெந்நீர் போட்டு, அவரவர் புத்தாடைகளை எடுத்து வைத்துக் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.

எல்லாரும் புத்தாடை உடுத்துக் கொண்டு ஒவ்வொருவராக வந்து என்னையும் மீனுவின் கணவனையும் வணங்கினர்கள்.

"உஷா, நீ கேட்டபடி புடைவை கிடைத்ததா?" என்று உஷாவைக் கேட்டேன்.

"இல்லாவிட்டால் விட்டேனு? எனக்கு வேண்டியதை நான் கடத்திக் கொண்டுதான் இந்த ஊரை விட்டுப் புறப்படுவேன். தையல் மெஷின் வாங்கியிருக்கிருனுமே விசு அண்ணு? அதன் மேலும் ஒரு கண் வைத்துத்தான் இருக்கிறேன்."

நான் ஒன்றும் சொல்லவில்லை. பார்த்துப் பார்த்துக் கஷ்டப்பட்டு வாங்கிவைத்த மீனுவுக்கு ஒரு பாராட்டுச் சொல்லவில்லையே இந்தப் பெண்! ஊரார் வீட்டுப் பெண்களானுலும் மருமக்கள் இருவரும் வாயாரப் புகழ்ந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

தீபாவளிக்கு மறுநாளே உஷாவும் மாப்பிள்ளையும் கிளம்பிவிட்டார்கள். தென்னுட்டுக் கோவில்களை எல்லாம் சுற்ற வேண்டுமாம். அதுவரை அவளுக்கு வேண்டியதெல்லாம் செய்வதில் முனைந்திருந்த என் மனைவியும் மீனுவும் அவளை வழி



யனுப்பிவிட்டுத் தெருப்பக்கம் திண்ணையில் ஓய்வாக அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

மீனுவின் கணவன் என்னுடன் ஏதோ பேசிக்கொண்டே இருக்கவும், என்னுல் எழுந்து சென்று அவர்களைக் காண முடியவில்லை.

சற்று நேரம் கழித்து நான் போன போது, மீனு தன் கடைசிப் பையன் முரளிக்கு முட்டை கட்டிக்கொண்டிருந்தாள்.

"அம்மா, நீ வெறுமனே அலட்டிக் கொள்ளாதே. இனிமேல்தான் பெரிய அண்ணுவும் மன்னியும் இங்கேயே வந்துவிட்டார்களே!" என்று புத்தி கூறினுன் மகன். பிறகு தன் அண்ணன் பெண்ணை அழைத்து, "பானு, பாட்டியை நீதான் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்முன்.

மீனு "சரிதானடா!" என்று அடக்கினுள். ஆனல் அந்தக் குரலைக் கேட்டதும் என் உள்ளம் தித்தித்தது. தீபாவளிப் பண்டிகை இரண்டு நாட்களும் மீனுவின் வதனத்தில் சுரத்தே இல்லை. இப்போது முகம் பிரகாசமாக இருந்தது.

"ஏனடா, உனக்குத்தான் தீபாவளிக்கு ஒன்றும் நல்ல துணி வாங்கவில்லை. அடுத்த முறை பார்ப்போம். நாலுமுழ வேஷ்டியோடு போய்விட்டது உன் பண்டிகை" என்முள் மீனு.

"போ, அம்மா. இந்தத் தீபாவளி அடாவடியில், உன் செல்லப் பெண் வந்த மவுசில், என்னை எங்கே கவனிக்கப் போகிமுய் என்று நினைத்தேன். எப்படியோ நடுவில் எனக்கு மாங்கொட்டைக் குழம்பும், பருப்புத் துவையலும் செய்து போட்டுவிட்டாயே! ரொம்ப நன்றி, அம்மா" என்று கூத்தாடினுன் முரளி.

"போடா முட்டாள்!" என்று கடிந்துகொண்டாள் மீனு.

மற்றவர்களும் ஊருக்குப் போய்விட்டார்கள். நான் மீனுவுடன் முற்றத்தருகில் அமர்ந்திருந்தேன். வீட்டில் எஞ்சியிருந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் இடம் போயிருந்தனர். நானும் மீனுவும் மட்டுமே இருந்தோம்.

"மிகவும் மனசையும் உடலையும் அலட்டிக் கொண்டுவிட்டாய், மீனு. பண்டிகைச் சமயத்தில் உன் முகத்தைக்காணச் சகிக்கவில்லை" என்றேன்.

"ஆமாம், மாமா. என் மனசே விசித்திரமாகத்தான் இருக்கிறது" என்று கூறிச் சிரித்தாள் அவள்.

"ஏன் அப்படிச் சொல்கிமுய்?"

"உஷா வருவாள் வருவாள் என்று ஆவலோடு எதிர்பார்த்தேன். அவளுடைய ஒவ்வோர் ஆசையையும் யோசித்து யோசித்துச் செய்தேன். ஆனுல் ஒன்றைக்கூட அவளிடம் நானுகச் செய்துகொடுத்ததாக ஒரு துரும்பு கூடக் கொடுக்க முடியவில்லையே! எல்லாம் அவள் கேட்டு நான் செய்ததாக அமைந்துவிட்டது. தஞ்சாவூர்ப் படத்தையும் நெட்டிப் பொம்மையையுமாவது நானுகக் கொடுத்ததாக இருக்கட்டும் என்று அவசர அவசரமாக அவளை அழைத்துக் கையில் கொடுத்தேன். அப்பொழுதும், 'வாங்கியிருக்கிறது; எனக்குத் தெரியும். முரளியைக் கேட்டேன் சொன்னுன்' என்று சொல்லிவிட்டாள். உடனே என் மனம் கூம்பிவிட்டது. கொடுப்பவர்களுக்கும் ஓர் ஆசை இருக்கும். அவர்கள் தங்கள் ஆசையைத் தீர்த்துக்கொள்ள ஒரு வாய்ப்புத் தர வேண்டும் என்று ஏன் உஷாவுக்குத் தோன்றவில்லை?"

"இது ஒரு பிரமாதமா, மீனு? குடும்பத்தில் அடிபட்டவள் நீ. சின்ன விஷயத்துக்கு மனசைத் தளர விட்டுவிட்டாயே! அவளும் சலுகையில்தான்

கேட்டாள். நீ கட்டாயம் செய்வாய் என்ற நம்பிக்கை இல்லாவிட்டால் கேட்கவே மாட்டாளே!'' என்று உரைத்து என்னையே நான் ஏமாற்றப் பார்த்தேன்.

''அது வேறு விஷயம், மாமா. கேட்டுக் கேட்டு வாங்குவதைவிட, அவர்களாகவே கொடுப்பதை வாங்குவதில் மகிழ்ச்சி அதிகம் என்று யார் என் பெண்ணுக்குச் சொல்லப் போகிறீர்கள்? சிறப்பாகச் சீர் என்று எடுத்துச் செல்லலாம், கொள்ளை அடித்துச் செல்வதுபோல! அவள் மன்னி கூறினபோது எப்படிப் பதிலளித்தாள் பார்த்தீர்களா? 'நீங்களெல்லாரும் அருகே இருப்பவர்கள். நான் தட்டிப் பறித்துக் கொண்டுதான் போவேன்' என்கிற மாதிரி பேசினாளே!''

''அப்படி வளர்த்திருக்கிறாய் உன் பெண்ணை. நாம் கொடுப்பதைத்தான் அவள் பெறுவது என்று முதல் நாள் முதற்கொண்டு இருந்திருந்தால்...'' என்று அவளுக்குப் பதிலளித்துக் கொண்டே உள்ளே நுழைந்தான் அவள் கணவன்.

''ஆமாம், அதுவும் சரிதான். முரளியைப் பாருங்கள். குழம்பும் துவையலுமே அவனுக்கு அமிர்தமாகிவிட்டன. அவன் பேச்சுத்தான் எனக்குப் பரிசாக இருந்தது'' என்றாள் மீனு.

மகனை நினைத்தபோதே அவள் முகம் ஒளி நிரம்பியது. மீனுவின் முக வாட்டத்துக்குக் காரணம் இப்பொழுதுதான் புரிந்தது. அவள் கணவன் கூறுவதுபோல, 'ஏதாவது கொடுப்பார்களா?' என்று ஏங்கிப் பெறுவதில்தான் இன்பம் போலும். 'எப்படியும் தருவார்கள்' என்ற இடத்தில் அவர்களுக்கு மதிப்பு இல்லாமற் போவதும் மனித சுபாவத்தின் விசித்திரமோ?

''என்ன மாமா, யோசனையில் ஆழ்ந்துவிட்டீர்கள்?'' என்று கேட்டாள் மீனு.

''ஒன்றுமில்லை. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. உன் மருமகளுக்கு இருக்கிற தெளிவுகூடப் பெற்ற பெண்ணுக்கு இல்லையே!''

''உஷாவின் அப்பா சொல்வது போலத் தப்பு என்மீதுதான். நான் கொடுப்பேனோ மாட்டேனோ என்று எப்பொழுதுமே சந்தேகத்தில் விட்டிருந்தேனானால், பரிசு கிடைத்த போது உஷா ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்திருப்பாள். அதை விட்டு, நானாக ஓடி ஓடிச் செய்யவும், அவளுக்கு அருமை தெரியவில்லை.''

நான் உதட்டைப் பிதுக்கினேன். சாதாரண சம்பவம், சாதாரண மனிதர்கள்; இதில்கூடச் சுகத்துக்கும் துக்கத்துக்கும் என்ன பின்னல்?

''முரளியின் பேச்சு என்னை எவ்வளவு சந்தோஷப்படுத்தியது தெரியுமா, மாமா? நாட்டுப் பெண்கள் இருவரும் என் சொல்லுக்குக் காத்திராமல் எல்லாம் செய்தது எனக்கு எவ்வளவோ நிறைவைத் தந்தது. பெரியவன் டெரிலின் சட்டையை வாங்கவே மறுத்துவிட்டான். 'அம்மா, உன் பாசத்துக்கும் சபலத்துக்கும் அளவே இல்லை. இந்த நெருக்கடியில் நான் டெரிலின் போட்டுக் கொண்டால்தானா? நான் எங்கே போய்விடுவேனாம்?' என்று கோபித்துக் கொண்டான். நீங்கள் சொல்வது போல, உஷா சலுகையில் கேட்டிருக்கலாம். கேட்ட விதந்தான் என்னை வாட்டுகிறது.''

''எல்லாவற்றையும் வைக்கிற இடத்தில் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தத் திண்டாட்டந்தான்'' என்றாள், அப்பொழுது அங்கு வந்த என் மனைவி.

''ஆமாம், மாமி'' என்று ஆமோதித்தாள் மீனு.

மனசில் உள்ளதை வெளியே எடுத்து ஆராய்ந்ததில் அவள் மனம் தெளிந்துவிட்டதோ? அவள் பேரன் ஓடி வந்து அவள் முகத்திலே நீட்டிய கம்பி மத்தாப்புத்தான் அவள் வதனத்துக்குப் பொலிவு ஊட்டியதோ? மத்தாப்புப் பூச் சொரிந்தது. மீனுவின் முகம் புன்னகையைச் சொரிந்தது. ★

---

'திலக சுந்தரி'





போட்டோ: ஆர். பி. எஸ். மணி



# குறிஞ்சிப் பாட்டு

தன் பெண்ணின் வாட்டத்தை அறிந்து வருந்திய தாய்க்கு அந்த இளநங்கையின் உயிர்த்தோழி முன்பு நிகழ்ந்த காதல் நாடகத்தைச் சொல்கிறாள்:

எங்களை நீ தினைப்புனம் காவல் செய்து இரவு வருக என்று கூறினபடி நாங்கள் சென்று தினைக் கொல்லையைக் காத்தோம். தட்டை என்னும் கருவியை அடித்துப் பறவைகளை ஓட்டினோம். தினைக் கதிர்கள் முதிர்ந்திருந்தன.

அங்கே துகிலைப் போல வீழ்ந்த அருவியில் நீராடிக் கண்கள் சிவந்தன. எம் கூந்தலை உலர்த்திக்கொண்டு, மலைச் சாரலில் பூத்திருந்த பலவகை வண்ணமலர்களைப் பறித்துப் பாறையில் குவித்தோம். பிறகு அவற்றைக் கட்டி எங்களுடைய கூந்தலில் அணிந்தோம். இடைக்குத் தழையாடை புனைந்துகொண்டு ஓர் அசோக மரத்தின் அடியில் தங்கினோம்.






அப்போது எண்ணெய் பூசி வாரி முடித்த கேசத்தையும் மலர்ந்த அகலமான மார்பையும் உடைய ஒரு வீரன் கையில் வில்லை ஏந்திக்கொண்டு அங்கே வந்தான். அவனுடன் வந்த நாய்களுக்குப் பயந்து நாங்கள் ஓடுவதைக் கண்ட அவன் எங்கள் அருகில் வந்து பேசத் தொடங்கினான். அப்போது ஓர் யானை அங்கே சினத்துடன் வரவே, நாங்கள் அவனை அணுகி நடுங்கி நின்றோம். அவன் ஓர் அம்பை விட்டு யானையை ஓட்டினான்.

அப்பால் நாங்கள் இருவரும் நுரைத்து வருகிற வெள்ளத்தில் பாய்ந்து நீராடியபோது நாங்கள் ஆற்றோடு இழுத்துச் செல்லப்பட்டோம். அப்போது, ''நடுங்க வேண்டாம்'' என்று எங்களை எடுத்துத் தலைவியின் நுதலை நீவினான். அவள் நாணமும் அச்சமும் கொண்டு நிற்க அவளை விடாமல் தழுவினான்.





குறிஞ்சி நிலத்துக்குத் தலைவனாகிய அந்த வீரன் இனிய மொழிகளைக் கூறி அவளோடு அளவளாவினான். ''விருந்தினர்களுக்கு உணவு அருத்தி எஞ்சியதை உன்னோடு உண்பது மிகவும் சிறப்பாக இருக்கும்'' என்று நயவுரை பகர்ந்தான். ''உன்னை என்றும் பிரியமாட்டேன்; பிரியின் வாழேன்'' என்று கடவுளை நோக்கி வணங்கி உறுதிமொழி கூறினான்.

பகலைக் கழித்த பிறகு மாலைக் காலம் வந்தது. கதிரவன் மலையில் மறைந்தான். பசுமாடுகள் மேயப் போயிருந்தவை தம் தம் இடங்களில் வந்து புகுந்தன. ஆயர்கள் குழலை ஊதினர். அப்போது அந்த வீரன், ''உன்னைச் சேர்ந்தவர்கள் எனக்கு உன்னைத் தர உலகமறியத் திருமணம் செய்துகொள்வேன்'' என்று சொல்லிப் பிரிந்தான்.





பிறகு அவன் இரவுதோறும் இங்கே வந்துகொண் டிருக்கிறான். வந்து தலைவியோடு அளவளாவிச் செல்லுகிறான். நாய் குரைத்தாலும் ஊர்காவலர்கள் சுற்றி வந்து காவல் செய்தாலும் நீ துயிலாமல் இருந்தாலும் அவன் இவளைச் சந்திக்காமல் போய்விடுவான். இளமையும் வளமையும் உடையவனாகிய அந்த வீரனையே இவள் நினைத்து வாடுகிறாள்.

அவன்சில நாட்கள் வந்து சந்திக்க முடியாமற் போவதால் இவள் வருந்துகிறாள். 'இரவு நேரத்தில் அவர் வரும் வழியில் புலிகளும் சிங்கமும் கரடிகளும் இருக்குமே! யானை உலாவுமே! இடி இடிக்குமே! பாம்புகள் ஓடுமே! காட்டாற்றில் முதலைகள் இருக்குமே!' என்றெல்லாம் அவன் வரும் வழியிலுள்ள அபாயங்களை எண்ணி வருந்துகிறாள்.

இந்தப் பாட்டைப் பாடியவர்: கபிலர்





உங்கள் எல்லோருக்கும்
எங்கள் மனமார்ந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**



RELIABILITY · QUALITY · SERVICE

எங்களிடம்
உங்களுக்குத்
தேவையான
உயர்ந்த ரக

வைரங்கள்
மாணிக்கங்கள்
மரகதங்கள்
நீலங்கள்
கோமேதகம்
வேலைப்பாடுள்ள
தங்க நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள்
இன்னும்
அருமையான பரிசு
வகைகள்
(Cups-Trophies-Caskets and Replicas)
நிறையக் கைவசம் உள்ளன

எங்கள் ஷோ-ரூமுக்கு விஜயம் செய்யுமாறு உங்களை அழைக்கிறோம்

# பாபாலால் & கம்பெனி

(ஸ்தாபிதம்: 1910)

வைர, தங்க நகை வியாபாரிகள்

ராட்டன் பஜார் : : : : மதராஸ் - 3.
தந்தி: "NECKLACE" போன்: 32396

*OVERSEAS ENQUIRIES INVITED.*


டிவிஎஸ்
வினியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை
உழைப்பிற்கு ஆராய்ச்சி செய்யப்பெற்ற உறுப்புகளையே உபயோகித்து செலவைக் குறையுங்கள்
Commercial Wheels
Automobile Electrical Equipment
LUCAS TVS
Hydraulic Brake System
Compressors and Servos
CD TVS
SIRUBBER Engine Mountings and Bushing Kits
Clutch Housings, Brake Drums and King pins
SUNKAST
Hydraulic Brake Parts
TVS
Standard Battery
MICO Fuel Injection Parts
KAP AUTO PARTS
ROLON Timing Chains
Tie Rod Ends
HELLA Horns
Springs and Leaves
BANCO-ROYAL Gaskets and Radiators
TRANCO VALVES
allite Bulbs
Fenner Fan Belts
NBC Ball Bearings
FERODO Brake Linings and Clutch Facings
AP Lubrication Fittings
BORG & BECK Clutch Spares
DOUBLE Lite PRECISION PARTS
FRITZ Filter Element
ABC Roller Bearings
TEX Wiper arms and Blades
டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்புகளை
உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர்
தங்கள் தங்கள் துறைகளில்
தலைசிறந்தவர். அவை நீண்ட நாள்
உழைக்கும் என்பதில் ஐயமில்லை.
உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்
டி வி சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை
சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்
சுந்தரம் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட், மதராஸ்-
பெங்களூர்-செகந்திராபாத்-விசாகபட்டினம்
மதராஸ் ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா
TVS
TVS/4695



# வெளிச்சம்

ஏ. எஸ். ராகவன்

அந்தக் கடிதத்தை விடியற்காலையிலிருந்தே எழுத முயன்றும் இன்னும் சுஜாதா எழுதி முடிக்கவில்லை. ஆரம்பிக்கும்போது மிகவும் சுலபம் போலத்தான் இருந்தது. ஆனால் மனத்தில் இருந்த பாரம் கையில் இறங்கிப் பேனாவுக்குள் புகுந்தபோது பாதரசமாக மாறிவிட்டதோ! ஏன் இப்படி வழுக்கி, நழுவிப் பிடிக்கு அகப்படாமல் உருண்டு உருண்டு விலகிப் போகிறது? ஐம்பது தாள்கள் வீணாகியிருக்கும். சொற்கள் கண்ணாமூச்சி ஆடுகின்றன. உணர்ச்சிகள் நொண்டி அடிக்கின்றன. அலையலையாய்க் கட்டிய மணல் வீடு சரிந்துகொண்டே இருக்கிறது.

''ஊஹூம். இது வீண் முயற்சி. அவர் என்னைப் புரிந்து கொள்ளப் போவதே இல்லை'' என்று அலுத்துக் கொண்டாள் அவள். அலுப்பு வந்தால் சுஜாதாவுக்கு எல்லையில்லாமல் கோபம் தொடரும். அந்தக் கோபம் யார்மேல் எப்படிப் பாயும் என்பதைச் சொல்ல முடியாது. இப்போது அவளுடைய கோபம் பேனாவின் மேல் பாய்ந்தது. விலையுயர்ந்த அந்தப் பேனா, சிங்கப்பூரிலிருந்து அவளுடைய அப்பா ஆசையோடு அனுப்பி வைத்தது. ஒரு மூலையில் போய் விழுந்து தன் தங்கக் கூர்மை மழுங்கிப் போய்விட்டதை மை கசிய அழுது வெளிப்படுத்தியது.

போகட்டும். இந்தப் பேனா, இந்தத் தாள்கள், சுழல் நாற்காலி, 'காட்ரெஜ்' மேசை எல்லாமே போய்த் தொலையட்டும்! அவளுக்கென்ன?

ஒரு கடிதம் உருவாக மாட்டேன் என்று அடம் பிடித்தால் அதற்காகச் சுஜாதா பணிந்து போக முடியுமா?

பரபரவென்று அத்தனை தாள்களையும், எஞ்சியிருந்த அழகிய 'லெட்டர் பேடை'யும் - இதுவும் சிங்கப்பூர்ச் சரக்குத்தான் - கிழித்துத் தூள் தூளாக்கி, மாடி அறை முழுவதும் தூவிவிட்டாள் சுஜாதா.

கோபம் அடங்கிற்றா?

வெளியே வேலிக் காலை ஒட்டிய கருவேல மரத்தில் மூன்று பச்சைக் கிளிகள் சிவந்த அலகுகளைத் திறந்து, 'கீ, கீ' என்று கத்தின. கண்ணை உருட்டி உருட்டி அவளைப் பார்த்தன. படபடத்துப் பறந்து ஓடின.

சுஜாதாவுக்குக் கோபம் பறந்து போய்விட்டது.

கிளிகளுக்குத்தான் எத்தனை அழகு! நாமாக வர்ணம் பூசி விட்டால்கூட இப்படி நெளிநெளியாக ஓர் அழகுக் குவையை உருவாக்க முடியாது.

தொலைவில் நாரைக் கூட்டம் ஒன்று கிழக்கு நோக்கி விரைவது தெரிந்தது.

நாரைகளுக்குக் காலிலே சிவப்பு!

கிளிக்கு மூக்கிலே சிவப்பு!

ஏன், சுஜாவுக்கு உடம்பெல்லாம் சிவப்பு இல்லையோ? அவளே சிங்கப்பூர்ச் சரக்குத்தான். அங்கேதான் அவள் பிறந்தாளாம், வளர்ந்தாளாம். இன்னுங்கூட இரண்டொரு சீன, மலாய் வார்த்தைகள் நிழலாக நினைவில் வட்டமிடுகின்றனவே!

ஆனால் ரொம்ப நாளாகி விட்டது இங்கேயே வந்து தங்கி. அப்பாவுக்கும் அலுத்துவிட்டது சம்பாதித்து. போதுமே, யாருக்காக இன்னமும் சம்பாதிக்க வேண்டும்? ஒரு பெண், ஒரு பிள்ளை, அவ்வளவே. பையன் அமெரிக்காவில் கைநிறையச் சம்பாதித்துக்கொண் டிருக்கிறான். போயும் போயும் சுஜா ஒருத்திதான் இங்கே இருக்கிறாள். இந்த வீடு அவளுக்குத்தான். காவேரிக் கரையில் எடுப்பாகக் கம்பீரமாக நிற்கிறது வீடு. ஊருக்குள்

இன்னொரு வீடு உண்டு. அந்த வீட்டுக்கு வாடகையே இருநூறு ரூபாய் வருகிறது. அமெரிக்காவில் இருக்கும் அண்ணனின் பங்குக்கு அந்த வீட்டை ஒதுக்கியிருந்தார் அப்பா.

சன்னலருகில் நின்று, காவேரி ஆற்றை, அதன் நீள அகலத்தை, ஆழத்தை எடை போடுவதுபோலப் பார்த்தாள் சுஜா.

அவளுடைய பார்வை அப்படி. அதில் கூர்மையும் உண்டு; கனிவும் உண்டு. அந்தக் கண்கள் மீன்போல, உருண்டு, பளிச்சுப் பளிச்சென்று அம்மாவின் வம்சாவளி. தீர்க்கமாக, நேர்க் கோடுபோல, எடுப்பாக இருக்கிற மூக்கு. அது அப்பாவின் வம்சாவளி. இப்படி அப்பாவும் அம்மாவும் ஒருசேர முகவிலாசமாக அமைந்த விசேஷத்தினால்தானோ என்னவோ, அவளுக்கு அப்பாவின் கூர்மையும் அம்மாவின் கனிவும் உணர்ச்சிச் சுழிப்பாக வார்த்தன.

காவேரியில் தண்ணீர் மிகுதி. போன வாரம் மணல்மேடாக இருந்த இடம் இப்போது மூழ்கிவிட்டது. அப்படியும் நடுவில் ஒரு தீவு மார்பை நிமிர்த்திக்கொண்டு கிடந்தது.

சுஜா பெருமூச்சு விட்டாள்.

புரிந்தும் புரியாமலும் இப்படித்தான் தீவு கட்டியிருக்கிறது அவளுடைய வாழ்க்கையிலும். அந்தத் தீவில்தான், அவளுக்கு எட்டாத இடத்தில், அவர் இருக்கிறார்.

''ஊஹூம். இது வீண் முயற்சி. அவர் என்னைப் புரிந்து கொள்ளப் போவதே இல்லை.'' விரக்தியுடன் உரக்கக் கத்தினாள் சுஜாதா.

**ச**ன்னலருகில் இப்படி அழுது கொண்டு நின்றால் யாராவது சிரிக்க மாட்டார்களோ?

அது ஏன்? ஒருவர் அழுதால் இன்னொருவர் சிரிப்பானேன்?

உக்கும். இந்த உலகமே இப்படித்தான். பிறர் உணர்ச்சிகளை விளையாட்டாகப் பார்க்கிற சுபாவம் இவர்களுக்கு. உணர்ச்சிகள் விளையாட்டுச் சரக்கு அல்ல என்பது எவர்க்கும் புரிவதில்லை.

அதோ படித்துறையில் 'சப் ரிஜிஸ்தார்' மாமூது தூண்டிலில் ஒரு மீன் சிக்கிவிட்டது! கெண்டையா, கௌத்தியா? பாம்பு மாதிரி நீளமாகக் கருகருவென்று, தொடத் தொட வழுக்கித் துள்ளுகிற அந்த மீன் எந்த இனம்?

மாமூது 'சப் ரிஜிஸ்தார்' அலுவலகத்தில் பியூன்தான். ஆனால் சப் ரிஜிஸ்தார் மாமூது என்றே எல்லாரும் அவனை அழைக்கிறார்கள். எந்தச் சப் ரிஜிஸ்திராரும் இதுபற்றி வழக்குப் போடாதபோது அவளுக்கு என்ன அதைப்பற்றி?

உலகம் இப்படித்தான். யாரை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் பெயரிட்டு அழைப்பது!

ஏன், அவளையே ரங்குவும் மங்குவும் 'குள்ள வாத்து' என்று அழைக்கவில்லையா? அவள் குள்ள வாத்தாம்! எப்படி இருக்கிறது? ஐந்து அடி, ஐந்து அங்குலம் குள்ளமா?

''மிஸ்டர் ரங்கு, இங்கே வா. நீயுந்தான், மங்கு. உங்கள் இரண்டு பேருக்கும் இன்றைக்குப் புதிதாக ஒரு பாடம் கற்பிக்கப் போகிறேன்'' என்றார் மாது.

மாது யார் என்கிறீர்களா? அவர் தாம் 'அவர்'!

ரங்குவும் மங்குவும் ஒருவர் காதை ஒருவர் பற்றிக் கொண்டு தோப்புக்கரணம் போட்டபிறகு விடுதலை கிடைத்தது.

விஷயம் இத்துடன் விட்டுப் போயிருந்தால் தேவலையே! ரங்குவும் மங்குவும் மறுநாளே படை சேர்த்துக் கொண்டு, 'மாது ஸார் ஒழிக!' என்று கோஷம் போட ஆரம்பித்தார்கள். அட ராமா! இவர்களுக்கும் ஒத்து ஊத ஆள் கிடைக்கிறதே!

மாது கலங்கவில்லை. நேரே மங்குவின் அப்பாவிடமும் ரங்குவின் அப்பாவிடமும் போய்ப் பிட்டுப் பிட்டு வைத்தார். ''ஒரு பெண்ணைக் கேலி செய்கிற அளவுக்கு இவர்கள் போவதானால், என் ஸ்தாபனத்தின் பெயர் என்ன ஆவது? தண்டனை தருவதற்கு உரிமை இல்லாமல் நான் எதற்காக 'மாஸ்டராக' இருக்க வேண்டும்?'' என்று போட்டாரே ஒரு போடு.

போராட்டம் பிசுபிசுத்துவிட்டது.

அப்பாவுக்கு ஜாடைமாடையாக விஷயம் தெரிந்ததும் அவரே நேரே நிலையத்துக்கு வந்தார். அவள் தட்டெழுத்தில் அன்று அடித்ததெல்லாம் தப்பெழுத்துத்தான். ஒருவேளை தட்டெழுத்துப் பயிற்சி போதும் என்று சொல்லிவிடுவாரோ? மாது ஸார் நிலைமையை அநுசரித்து இனி அவன் வராமலிருப்பது நல்லது என்று உபதேசித்துவிடுவாரோ?

நல்ல வேளை. அப்படி ஏதும் நடக்கவில்லை.

**மா**து ஒரு நாள் விட்டுக்கு வந்தார். அப்பாதாம் வரச் சொல்லியிருந்தாராம். அப்பா நல்ல அப்பா! சிங்கப்பூரில் கொடி கட்டினவர் இல்லையா? பெண்ணுக்கு விரோதமாக எதுவும் செய்வாரா?

''வீடு எப்படி இருக்கிறது?'' மாடி வராந்தாவின் கைபிடிச் சுவரில் சாய்ந்தபடி சுஜா கேட்டாள்.

''வீடா இது? அரண்மனை!'' என்றார் மாது.

சுஜாவுக்குப் பெருமை பிடபடவில்லை.

''இந்த வீட்டில் நீயும் உன் அப்பாவுந்தான் இருக்கிறீர்களா, சுஜாதா?''

''ஆமாம், ஸார்.''

''உங்களுக்கு இவ்வளவு இடம் தேவைப்படுகிறதா?''

''ஏன் ஸார், உங்களுக்கு இடம் வேண்டுமா?''

''இல்லை, இல்லை. வெறுமேதான் கேட்டேன். எனக்கு எதற்கு இடம்?''

உக்கும். வேண்டுமென்று கேட்டாலென்ன? இந்த மாது ஸாருக்குப் புரிவதே இல்லை.

''நீங்கள் வாடகை தர வேண்டாம் ஸார். நான் அப்பாவிடம் சொல்லட்டுமா?'' வலியக் கேட்டாள் சுஜா.

''வாடகை தராமல் என்றால் இங்கே தங்க முடியாது, சுஜாதா.'' அவர் சிரித்தார்.

''சரி. உங்கள் விருப்பம் போலவே செய்யுங்கள். வாடகை ஐந்து ரூபாய். சம்மதமா?'' அவளும் சிரித்தாள்.

''ஐந்து ரூபாயா? இந்த அரண்மனைக்கா?''

''இந்த வாடகைக்கே அப்பா சம்மதிக்கிறாரோ என்னவோ! உங்களிடம் பணம் வாங்க அவர் விரும்ப மாட்டார், ஸார். ''

மாது தோளை உலுக்கி இரண்டு கைகளையும் விட்டேற்றியாக அசைத்தார். இது அவருடைய பாணி. அதற்கு எப்படி வேண்டுமானாலும் அர்த்தம் செய்துகொள்ளலாம். கேலியா, சம்மதமா, விரக்தியா, மகிழ்ச்சியா எதுவென்று சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி வெளியீடு அது.

அப்பா ஒன்றும் சொல்லவில்லை. அவளை அநுதாபத்துடன் பார்த்து, மாதுவை நோக்கி ஒரு முறுவலை வளைத்ததோடு இந்த வாடகை விவகாரம் நின்று போயிற்று.

அப்புறம்......

அவர் இங்கே வருவார், பேசிக்கொண்டிருப்பார், போவார். பல முறை மாடிப் பக்கம் வந்து காவேரியின் அழகை ரசிப்பார்.

''நானும் அப்பாவும் குற்றாலம் போவதாக இருக்கிறோம். நீங்களும் வருகிறீர்களா?'' என்று சுஜா கேட்டாள்.

''குற்றாலத்துக்கா?''

''ஆமாம், காரில், வாருங்களேன்.''

''நான் வருவதற்கில்லை, சுஜாதா.''

''ஏன்?''

''இலவசச் சவாரியை ஏற்கிற பழக்கமில்லை.''

''பாருங்கள், அப்பா, இவர் பிடிவாதம் பிடிப்பதை!'' பிராது கொடுத்தாள் சுஜாதா அப்பாவிடம். அந்த நீதிபதியோ, 'உம், உம்' என்றாரே தவிர, குறுக்கு விசாரணையோ, தீர்ப்போ வழங்கவே இல்லை.

**த**ட்டெழுத்துத் தேர்வு முடிந்தது. சுஜாதா தேறிவிட்டாள். சுருக்கெழுத்து அவளுக்கு ஒத்து வரவில்லை. ஒல்லியும் பருமனுமாய், வளைத்தும் சுழித்தும் எழுதுவதைவிடக் குண்டு குண்டாக, லட்சணமாக எழுதுவதே மேல் என்று தோன்றிற்று. தவிரவும் அதெல்லாம் படித்துத் தேறி என்ன ஆகவேண்டும்? அப்பா வேண்டாமென்று சொல்லிவிட்டார்.

மாது இப்போதெல்லாம் நடந்து வருவதில்லை. ஒரு பழைய சைக்கிளை விலைக்கு வாங்கிவிட்டார். அதன் லொடலொடச் சத்தம் தொலைவிலேயே கேட்கும். எத்தனை எண்ணெய் இட்டாலும், ஒரு 'கிரீச் கிரீச்' வேறே. ஆனால் அவருக்கு அதில் கொள்ளைப் பெருமை.

''எப்படி என் வண்டி?'' அவர் கேட்டார்.

''ஐயோ, சகிக்கவில்லை!'' அவள் சிரித்தாள்.

''உனக்குத் தெரியாது, சுஜாதா. இதில் சவாரி செய்வது தனிச் சுகம். மிதியே வாங்குவதில்லை. பழைய வண்டி என்று நீ கேவலமாக எண்ணலாம். ஆனால் இந்த 'மாடல்' இப்போது அபூர்வம்!''



''வாஸ்தவந்தான். இந்தப் பிராந்தியத்திலேயே இவ்வளவு லொட லொட வண்டி இல்லை, கண்ணுக்கு எட்டியவரை.''

திடீரென்று அவளுக்கு அந்த எண்ணம் உதித்தது. அப்பாவிடமும் சொன்னாள். 'கேட்டுப் பாரேன். எனக்கு ஆட்சேபமில்லை' என்றார் அப்பா. ஆனால் கேட்டு என்ன பயன்? மாதுவுக்கு அதெல்லாம் புரிந்தால் தானே? அவருக்குப் புரியுமா? ஊஹூம். அது வீண் முயற்சி. அவருக்குப் புரியப்போவதே இல்லை.

''நான் சொல்வதைத் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே?'' அவள் பீடிகையுடன் துவங்கினாள்.

மாது சிரித்தார்.

''உங்களுக்கு ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தர வேண்டுமென்று அப்பா ஆசைப்படுகிறார்.''

''ஸ்கூட்டரா?''

''ஆமாம்.''

''எதற்காக?''

''இந்தச் சைக்கிளில் நீங்கள் வருவதை அவர் விரும்பவில்லை.''

''அவர் விரும்பவில்லையா? அல்லது நீ விரும்பவில்லையா?''

''நானுந்தான்.''

''உண்மையாகவா?''

''இதிலே பொய் வேறேயா?''

தோளைக் குலுக்கிக் கைகளை அசைத்தார் அவர். ''நான் இதை எதிர்பார்க்கவில்லை, சுஜாதா'' என்றார். பிறகு எழுந்துவிட்டார். ''நான் வருகிறேன்'' என்றவாறே.

''நில்லுங்கள். வர வர உங்கள் போக்கு எனக்குப் புரியவே இல்லை'' என்றாள் அவள், கோபமாக.

''நான் சொல்ல வேண்டியதை நீ சொல்கிறாய். நல்லது. நீ சொல்லலாம். ஏனென்றால் சொல்வதற்கு உனக்கு அந்தஸ்து இருக்கிறது.''

''இவ்வளவுதான் பேசத் தெரியுமா அல்லது இதற்கு மேலும் பேசுவீர்களா?''

''வேண்டாம், சுஜாதா. அதை எல்லாம் உன்னால் தாங்க முடியாது. என் மனத்தை மேலும் வெறுப்படையச் செய்யாதே. விட்டுவிடு.''

''நான் விடப்போவதில்லை.''

''அது உன் விருப்பம். ஒன்று மட்டும் தெரிந்துகொள்: இந்த மாது உன் அரண்மனை வீட்டுக்கோ, ஸ்கூட்டருக்கோ பல்லிளிக்க மாட்டான்.''

லொடலொட, க்ரீச் க்ரீச்! அவர் போய்விட்டார்.

சுஜாதா மாடிக்குப் போய் நூறு புத்தகங்களைத் தூக்கி எறிந்தாள். நாற்காலிகளை உதைத்துத் தள்ளினாள். விலையுயர்ந்த கண்ணாடியைத் தூள் தூளாக்கினாள். அப்போதும் சீற்றம் தணியவில்லை.

அட, ஒரு பெண்ணின் மனத்தைப் புரிந்துகொள்ள முடியாத இவர் என்ன மனிதர்! அந்த 'லொடலொட'தான் வேண்டுமாம். ஸ்கூட்டர் வேண்டாமாம்.

அப்பா சொன்னார்: ''சுஜி, அவர் சொல்வதிலேயே நியாயம் இருக்கிறதம்மா. நீ அந்தச் சைக்கிளைப் பார்க்கிற பார்வைக்கும் அவர் பார்க்கிற பார்வைக்கும் வேறுபாடு உண்டு.''

''நீங்களும் அவர் கட்சியா?'' — பொருமினாள் சுஜா.

''இல்லை, சுஜி. உன் கட்சிதான். அந்தச் சைக்கிளின் விலை அதிகம் போனால் நூறு ரூபாய்கூட இருக்காது. ஆனால் அந்த நூறு ரூபாய் அவருடைய உழைப்பினால் வந்த செல்வம். தாமே சம்பாதித்து வாங்கிய பெருமைக்கு உரிய மூலதனம் அது. அதை நீ அவமதிக்கலாமா, அம்மா?''

''நான் அவமதிக்கவில்லையே, அப்பா!''

''பின்னே என்னவாம்? ஸ்கூட்டர் வாங்கித் தருவதற்கு வேறு என்ன நோக்கம்?''

''போங்கப்பா. போன வாரங்கூட வேலைக்காரிக்குப் பட்டுப் புடைவை எடுத்துக் கொடுத்தேனே. நம்மிடம் வசதி இருக்கிறது. மனமும் இருக்கிறது. பெருமைக்காகச் செய்கிற காரியமாக என்றைக்காவது நான் எண்ணியிருக்கிறேனா?''

அப்பா தலையை ஆட்டினார். மகளின் மனம் இவ்வளவு வாடுவதே அவருக்குத் தாளாது. ''சுஜி, உலகம் பல விதம். வேறு என்ன சொல்லட்டும் அம்மா?'' என்பதோடு முடித்துக் கொண்டார்.

மாது மறுநாளே வந்தார்.

சுஜாதா மாடியிலேயே இருந்தாள். கீழே வரவில்லை.

''சுஜா இல்லையா?'' அவர் விசாரிப்பது கேட்டது.

''மாடியில் இருக்கிறாள். ஜாக்கிரதை! அவளுடைய கோபம் இன்னமும் ஆறவில்லை'' என்றார் அப்பா.

ஆனால் இந்தச் சமயம் பார்த்துச் சுஜாதாவுக்கு விரக்தி பொத்துக் கொண்டு வருவானேன்? குழந்தைமாதிரி அழுதுகொண்டு, படுக்கையில் பொத்தென்று விழுந்து கிடப்பாளா அவள்?

அவர் வந்து நின்றார். மாடியருகில், கம்பீரமாக, அழகாக.

''போங்கள். போய்விடுங்கள்!'' சுஜாதா உரக்கக் கத்தினாள்.

''என்மேல் கோபமா?'' அவர் கேட்டார்..

''நான் கோபித்துக்கொள்ள முடியுமா உங்கள் மேலே? எனக்கு இருக்கிற அந்தஸ்துக்கு அது சரிப்பட்டு வராது.''

''அட! சுஜி அழகாகப் பேசுகிறாளே!''

''போங்கள். போய்விடுங்கள்.''

தலையணையை உயர்த்தினாள் அவள். ஏனோ அவளுக்கு விரக்தியில் தலைகால் தெரியவில்லை.

''சுஜி, நான் யோசித்துப் பார்த்தேன். நேற்று முழுவதும் மண்டையைக் குழப்பிக்கொண்டேன். இறுதியாக, உன் ஸ்கூட்டரை ஏற்றுக்



கொள்வதென்று முடிவு செய்திருக்கிறேன்.''

''நான் என்ன முடிவு செய்திருக்கிறேன் தெரியுமா?''

''சொல். சுஜி.''

''ஸ்கூட்டர் வாங்கித் தருவதில்லை என்று. இவ்வளவு கர்வம் பிடித்த உங்களுக்கு நான் ஏன் ஸ்கூட்டர் வாங்கித் தர வேண்டுமாம்?''

தோளை உலுக்கி ஒரு குலுக்கல். கேலியா, கோபமா, விளங்கவில்லை. ஆனால் அதுகூட அழகாகத்தான் இருக்கிறது. இந்த மனிதரிடம் எல்லாமே அழகுதான்.

அவர் உட்கார்ந்தார், படுக்கையின் விளிம்பில். புடைவைத் தலைப்பு உரசிற்று அவர்மீது. அது ஏன் உடம்பு முழுவதும் இப்படி ஒரு புல்லரிப்பை உண்டாக்குகிறது?

''நான் எதுவுமே வாங்கித் தர மாட்டேன் உங்களுக்கு. நேற்று முழுவதும் மண்டையை உடைத்துக் கொண்டு நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். உங்கள் 'லொட லொட' ரொம்ப உயர்ந்த சரக்குத்தான். இந்தப் பிராந்தியம் முழுவதும் தேடினாலும் அப்படி ஒரு வண்டி கிடைக்குமா? அதன் 'லொடலொட'வில் ஓர் இனிமை இருக்கிறது. அதன் 'க்ரீச் க்ரீச்'சில் ஒரு தாளகதி இருக்கிறது. ஸ்கூட்டர் எதற்கு வேட்டு வைக்கிற மாதிரி, பட்பட் என்று சீறிக் கொண்டு?'' கேலி செய்வதாகத்தான் சுஜாதா பேச்சை இப்படி வளைத்தாள். ஆனால் பேச்சில் அவளை அறியாமல் அப்பாவின் கூர்மை ஏறிவிட்டது. அம்மாவின் கனிவும் கூடிவிட்டது.

மாது சிரித்தார்.

இவ்வளவு நாள் இல்லாத ஒரு நெருக்கம் அந்தச் சிரிப்பில் இழையோடியது. ஊடாகப் பாவியது.

சுஜாதா எழுந்து உட்கார்ந்தாள். அவர் பாவம்! விளிம்பில் தத்தளிக்கிறபோது, அவள் 'டன்லபில்லோ' மெத்தை நெடுகக் காலை நீட்டிக் கொண்டு கிடப்பதா?

''அட, ஏன் எழுந்துவிட்டாய்?''

''போங்கள். எனக்கு உங்கள் மீது இன்னமும் கோபம் தணியவில்லை.''

''சுஜி, உன் கோபம் தணியவே வேண்டாமென்று பிரார்த்திக்கத் தோன்றுகிறதே. ஏன் தெரியுமா?''

''போங்கள். கேலி செய்வீர்கள்!''

''கோபிக்கும்போது நீ அழகாக இருக்கிறாய். குழந்தையாகத் தோன்றுகிறாய்.''

''அதனால்தான் இந்தக் குழந்தையை அழ வைக்கிறீர்களாக்கும்!''

''இனிமேல் அப்படிச் செய்யப் போவதில்லை. உன் ஆசைகளை நான் மறுக்கவும் போவதில்லை.''

''அப்படியானால் என் ஆசையை நிறைவேற்றுவீர்களா?''

''கட்டாயமாக.''

''மறுக்க மாட்டீர்களே?''

''ஊஹூம்.''

''அந்தஸ்து, அது இது என்று வாதாட மாட்டீர்களே?''

''மாட்டேன்.''

சுஜாதா குறும்பாக அவரைப் பார்த்தாள். இப்போது அவள் ரொம்பப் பெரிய 'மனுஷி' போலத் தோற்றம் தந்தாள். உணர்ச்சிச் சுழிப்பின் ஓர் அதிசய வளைவில் நிற்கிற பெருமை அவளுக்கு. திடீரென்று காவேரியில் வெள்ளம்போல, இந்த வெளிச்சம் எப்படியோ வந்து அவள் கண்களைக் கூசச் செய்தது. அது எப்படி வந்தது?

அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று மாது ஆவலோடு பார்த்தார்.

''இந்தத் தீபாவளிக்கு எனக்கு ஒரு நல்ல கெட்டிச் சாய நூல் புடைவை வாங்கித் தருவீர்களா?'' அவள் குழைந்தாள்.

''சுஜி! பட்டுப் புடைவையிலே புரள்கிற நீயா நூல் புடைவைக்கு ஆசைப்படுகிறாய்?'' மாது கூவியே விட்டார்.

''ஆமாம். அதுதான் இனி நம் அந்தஸ்துக்குச் சரி. இந்த மயக்கம் தெளிந்துவிட்டது எனக்கு'' என்றாள் அவள்.

மாது சிரித்தார். அது சரி. சிரித்தால் கண்களில் நீர் கசிவானேன்?

மாடியில் ஒரு போராட்டத்தை எதிர்பார்த்து வந்த அப்பாகூடக் கண்ணைத் துடைத்துக்கொண்டு திரும்பினார். அங்கே விம்மினால் நன்றாக இருக்குமா? ★

**மகிழ்ச்சியூட்டும்**

**அன்பளிப்புக்குச் சிறந்தது**



Parry's

பாரியின் புதிய டின்

# காரவெல்









கவர்ச்சியான புதிய டின்...பலவகை
பாரி மிட்டாய்களும் டாபிகளும் கலந்தவை.
(அவற்றை விரும்பாதவர் யார்?)
எல்லாம் ஒரு வனப்புமிக்க மேலுறையுடன் கிடைக்கும்.

**வாங்குங்கள்-வழங்குங்கள்-**
**அன்பைப் பொழியுங்கள்**
*(நீங்களும் ஒன்று வைத்துக்கொள்ளலாம்!)*

தயாரிப்பவர்கள்:
பாரிஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை

PRS 4744

# ஆனைமலைஸ் ஏஜன்ஸீஸ்

கோவை-11.

தொலைபேசி: 30222

(3 லைன்) தந்தி-ராஜ்தூத்-
டெலக்ஸ்-234 ARCCB

**ESCORT** டிரேக்டர்கள், டிரெய்லர்கள்
விவசாய உபகரணங்கள் மற்றும் **RAJDOOT**
மோட்டார் சைக்கிள்களுக்கும்

கோவை, நீலகிரி, சேலம், தருமபுரி, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்ற டீலர்கள்.

எமது கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| மதுரை - 1 | திருநெல்வேலி - 2 | சேலம் - 4 | திருச்சி - 1 |
| தொலைபேசி: 5577 | 599-600 | 4300 | 6266 |

உறுதி, உழைப்பு, சிக்கனம்
இவற்றின் சின்னம்

ARC

உங்களது ஓடித் தேய்ந்த டயர்களை
சிறந்த முறையில் புதுப்பிக்க அணுகுங்கள்

# ஆனைமலைஸ் ரிட்ரீடிங் கம்பெனி

கோவை-18.

கிளை: திருநெல்வேலி - 2.

(எமது புதிய கிளை ஒன்று திருச்சி நகரில் விரைவில்
திறக்கப்படுவதையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறோம்.)

பையன் பி.காம். பரீட்சையில் தேறிவிட்டான் என்றாலும் அவன் 'டிஸ்டின்க்ஷன்' வாங்கவில்லை என்பது அவருக்குக் கவலையளிக்கத்தான் அளித்தது. முதல் வகுப்பு இல்லை. இரண்டாம் வகுப்பும் இல்லை. சாதாரணமாகத் தேறியிருந்தான்.

திவான் பகதூர் திருவேங்கடம் பிள்ளை பேரப் பையன் பரீட்சை தேறியிருக்கும் லட்சணத்தைக் கண்டிப்பதற்காக அவன் அம்மாவை - அதாவது தம்முடைய ஒரே மகள் நாச்சியாரை-க் கூப்பிட்டனுப்பினார். நாச்சியார் வந்தாள். எதிர்த்துப் பேசினால் அப்பாவுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் ப்ளட்ப்ரஷர் அதிகமாகும் என்றெல்லாம் தெரிந்திருந்ததனால் அடக்க ஒடுக்கமாக அப்பாவுக்கு முன் வந்து நின்றாள் மகள். கிழவர் இரைந்தார்: ''பார்த்தியா, உன் பிள்ளையாண்

# சண்பகப் பூ

## நா.பார்த்தசாரதி




டான் பாஸ் பண்ணியிருக்கிற லட்சணத்தை? இவனை நம்பி நான் என்ன என்னவோ கோழிக்கனாக் கண்டுக்கிட்டிருக்கேன்: ஒரு செகண்ட் கிளாஸ் கூட வாங்கலை. இவனை நம்பி 'லண்டன் ஸ்கூல் ஆஃப் காமர்ஸி'லே இடத்துக்கு எழுதினேனே! இப்ப என்ன செய்யிறது?''

''அவன் தலையிலே எழுதியிருக்கிறது அவ்வளவுதான் அப்பா! அதுக்கு நீங்க என்ன செய்விங்க?''

''இந்தப் போர்டிலே பளிச்சுப் பளிச்சுனு எழுதி வச்சிருக்கே; இதெல்லாம் நாளைக்கு யாரைநம்பி விடறது?'' என்று கூறிக்கொண்டே வாக்கிங் ஸ்டிக்கால் முகப்பில் இருந்த அந்தப் பெரிய பித்தளைப் போர்டை மகளுக்குச் சுட்டிக் காட்டினார் திவான் பகதூர். திருவேங்கடம் கெமிகல்ஸ் அன்ட் இன்டஸ்ட்ரீஸ், திருவேங்கடம் ஃபெர்டிலைஸர்ஸ், மெட்ராஸ் மெஷின் டூல்ஸ் அன்ட் அல்லய்ட் பிராடக்ட்ஸ் என்று கம்பெனிகளின் பெயர்கள் பளீரென்று பாலிஷ் செய்திருந்த பித்தளை எழுத்துக்களில் மின்னின.

''என்னமோ போம்மா, ஒண்ணுமே நல்லாயில்லை. பிஃபார்ம் தொந்தரவு, ஃபாரின் எக்ஸ்சேஞ்ஜ், எல்லாத்தையும் சமாளிச்சு, எப்பிடியோ தலைகீழே நின்னு, பழைய சிநேகிதன் ராபர்ட்ஸனுக்கு லெட்டர் மேலே லெட்டராப் போட்டு நச்சரிச்சு 'லண்டன் ஸ்கூல் ஆஃப் காமர்ஸ்' லே இடம் பிடிச்சேன். உலகத்திலே




இருக்கிற கோடீசுவரன்களோட பிள்ளைகள் எல்லாம் படிக்க வருகிற இடம் அது. இப்ப இவனை அங்கே எப்படிம் தள்ளி விடறதுன்னே புரியலை.''

''அனுப்புங்கப்பா, எல்லாம் அங்கே போய்ப் படிச்சா மாறிடுவான்'' என்று கூறிவிட்டு நாச்சியார் மெல்ல நழுவி விட்டாள்.

திவான் பகதூருக்கு அவளுடைய மறுமொழிகளினால் சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்று கூறுவதற்கில்லையானாலும் மனத்தின் பாரத்தை இன்னொருவரிடம் பகிர்ந்து கொண்டோம் என்ற அமைதி கிடைத்தது. கோடி கோடியாக முதல் போட்டு மாபெரும் தொழில்களை நடத்தும் ஒரு பெரிய இன்டஸ்டிரியலிஸ்ட் தம் வாரிசாக எதிர்பார்த்து வளர்க்கும் ஒரு பையன் கொஞ்சங்கூட அந்த வழியில் வரவில்லை என்பது அவருக்கு ஏமாற்றத்தையும் பயத்தையும் அளித்தது. பங்களா காம்பவுண்டில் அவன் படிப்பதற்கென்று ஒதுக்கி விட்டிருந்த அறையில் எகனமிக் அட்வைஸர், பிஸினஸ் வீக்லி, கமர்ஷியல் டைம்ஸ் என்று தொழிலுக்கு உதவும் பத்திரிகைகளை வாங்கிக் குவித்திருந்தார் அவர். புத்தகங்களையும் வாங்கி அடுக்கியிருந்தார். மாகாணத்திலேயே அந்தத் துறையில் தேர்ச்சி மிக்க பேராசிரியர் ஒருவரைக் கொண்டு டியூஷனுக்கும் ஏற்பாடு செய்திருந்தார். பட்டம் வாங்கியதும் வெளிநாட்டுப் படிப்புக்கு அனுப்பவும் ஏற்பாடாகியிருந்தது.

பெண் நாச்சியாருக்கு எவ்வளவோ தேடித் தேடி வரன் பார்த்துப் பெரிய தொழிலதிபரின் ஒரே மகனுக்குக் கொடுத்தார். அவளுடைய போதாத காலம், கணவன் விமான விபத்தில் வெளிநாட்டில் மாண்டான். ஒரு மகனோடு வாழாவெட்டியாகத் தந்தை வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் மகள். பேரனைக் குழந்தைப் பருவத்திலேயே தம் பொறுப்பில் வளர்க்கத் தொடங்கியும் அவனை அவர் நினைத்தபடி உருவாக்க முடியவில்லை.

சில மாதங்களுக்கு முன் டியூஷன் வாத்தியார் ஒரு விஷயத்தைத் திவான் பகதூரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அப்போதே அவருடைய நம்பிக்கை ஆட்டம் கண்டுவிட்டது.

''ஒண்ணுமில்லை. சாதாரண விஷயந்தான். நான் ஏதோ புரொடக்ஷன், கன்ஸம்ப்ஷன்னு பாடம் ஆரம்பிச்சா உங்க பேரப்பிள்ளையாண்டான், 'ஸார் ஸார்! நான் ஒரு கவிதை எழுதியிருக்கேன். படிச்சுக் காட்டட்டுமா?'ன்னுன். 'சரி! படி'ன்னேன். 'ரோஜாப் பூ ஏன் சிவப்பாயிருக்கிறது?' ன்னு கவிதைக்குத் தலைப்பாம். தலைமுறை தலைமுறையாக உழைக்கிறவங்க ரத்தம் எல்லாம் பூமிக்குள்ளே பாய்ந்து தேங்கிக் காய்ந்து போயிருக்கிறதனாலேதான் ரோஜாப்பூச் சிவப்பாப் பூக்கிறதுன்னு பாட்டு எழுதியிருக்கான்'' என்று சொல்லிக்கொண்டே ஒரு துண்டுக் கடிதத்தைப் பெரியவரிடம் எடுத்து நீட்டினார் டியூஷன் வாத்தியார்.

பெரியவர் அதை வாங்கிக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு படிக்கத் தொடங்கினார்:

**''ஆயிரமாயிரம்**
**ஆண்டுகளாய்**
**ஆடி அயர்ந்தே**
**இருகாமும்**
**ஓய உழைப்பார்**
**உழைப்பெல்லாம்**
**உதிரம் பெருக்கிப்**
**பரந்தபின்னே**
**காயும் நிலத்துள்**
**கரந்தந்தக்**
**கைகள் உழைத்த**
**காந்தியினால்**
**பூவாய்ப் பூத்து**
**மலர்ந்ததுவே**
**புத்தம் புதிய**
**ரோஜாவாம்.''**

படித்ததும் திவான் பகதூருக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

''ஸார்! உங்ககிட்டக் காண்பிக்கிறதுக்காக நான் எனக்கு வேணும்னு சொல்லிப் பையனிட்ட எழுதி வாங்

கிக்கொண்டு வந்தேன். நீங்க இதை அவனிட்டக் கேட்க வேண்டாம். அப்புறம் என்னை மிஸ்டேக் பண்ணிப்பான். தயவு செய்து இதை மறந்துடுங்க. எல்லாம் படிப்படியாச் சரியாயிடுவான்'' என்றார் டியூஷன் வாத்தியார்.

கோபத்தோடு காகிதத்தைக் கிழித்துக் கசக்கி எறிந்தார் திவான் பகதூர்.

''பாட்டா இது? கண்ணராவி! ஒரு டிரேட் யூனியன் லீடர் மாதிரியின்னா பிதற்றி வச்சிருக்கான்?'' என்று கோபத்தோடு கூப்பாடு போட்டார்.

அன்று மாலையிலேயே வீட்டுக்குப் பத்திரிகைகள் புத்தகங்கள் சப்ளை செய்துவந்த கடைக்காரனை வரவழைத்து, ''அவன் கேக்கிற புக்ஸை அனுப்பு. ஆனா அது என்ன என்ன புக்ஸ்னு எனக்கும் ஒரு லிஸ்ட் கொடுக்கணும் நீ. அவன் வேண்டாம்னாலும், பிஸினஸ் வீக்லி, காமர்ஸ் ரெவ்யூ, அட்வான்ஸ் எகனாமிக் ரீடர் அதெல்லாம் நிறுத்திடப்பிடாது. ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து அனுப்பினார் திவான் பகதூர்.

அடுத்த வாரமே புத்தகக் கடைக்காரன் கிழவருக்கு ஒரு லிஸ்ட்டும் பில்லும் அனுப்பியிருந்தான். பேரப் பிள்ளையாண்டானுக்கு அவராகக் கொடுக்கச் சொல்லியிருந்த புத்தகங்களைத் தவிர அவனே கேட்டு விரும்பி வாங்கிக்கொண்ட புத்தகங்களின் பெயர்களைப் பார்த்த போது அவருக்கு எரிச்சல் மூண்டது. 'வர்ஜின்ஸ் அன்ட் வைன்யார்ட்ஸ்' என்ற கவிதைத் தொகுதி, பால் கிரேவ் தொகுத்த 'கோல்டன் டிரெஷரி ஆஃப் இங்கிலீஷ் போயம்ஸ்', பாரதியாரின் குயில் பாட்டு, பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு', ரவீந்திரரின் கீதாஞ்சலி என்று எல்லாப் புத்தகங்களுமே கவிதைகளாக இருந்தன. அவனாக விரும்பி வாங்கிய அந்தப் புத்தகங்களின் பட்டியலில், ஒரு புத்தகமாவது அவர் விரும்புகிறபடி இருந்திருந்தால்கூட மற்றவை பற்றி அவருக்கு அவன்மேல் கோபம் வந்திருக்காது. ஆனால் எல்லாமே அவர் விரும்பாத துறையாக இருக்கவே தான் கோபம் தாங்க முடியவில்லை. 'இப்படிப் புத்தகங்களை அவன் கேட்டால் கொடுக்காதே' என்று புத்தகக் கடைக்காரனிடம் கண்டிக்கவும் மனம் வரவில்லை. சிறுவயதிலிருந்து மடியில் வைத்துக் கொஞ்சி வளர்த்த பேரனை முகம் சிணுங்கச் செய்யவும் பாசம் இடம் கொடுக்கவில்லை. ரங்கராஜன் என்று பெயர் வைத்திருந்தாலும் பிரியத்தைக் காட்டுவதற்காகச் செல்லப்பா, செல்லப்பா என்று அவனை வாய்நிறையக் கூப்பிடுவார் பெரியவர்.

வாத்தியாரைக் குறை சொல்லிப் பயனில்லை. அவருக்குக் கொடுத்த டியூஷன் பணத்துக்குச் செல்லப்பாவைப் பாஸ் செய்ய வைத்துவிட்டார். அவனை வெளி நாட்டுக்கு அனுப்பியாக வேண்டும். லண்டன் ஸ்கூல் ஆஃப் காமர்ஸில் படித்துவிட்டுத் திரும்பும்போதாவது பையன் மாறி வருகிறானா என்று பார்க்க ஆர்வமாக இருந்தார் பெரியவர். பணத்தின் செல்வாக்கும், தொழிலதிபராக இருப்பதன் பெருமிதமும் செல்லப்பாவுக்கு உறைக்க வேண்டும் என்பதற்காக, 'ஸ்டூடன்ட்ஸ் கன்ஸெஷன்ஸ்' டிக்கட் வசதி இருந்தும் விமானத்தில் முதல் வகுப்பில் அவனை



லண்டனுக்கு அனுப்ப முடிவு செய்தார் பெரியவர்.

அவனுக்குள் வியாபார உலகின் நுணுக்கங்களே இல்லை. அவன் போக்கே புதுமையாக இருந்தது பெரியவருக்கு. அவுட் ஹவுஸில் அவன் படிப்பதற்காக விட்டிருந்த கீழ்ப்பகுதி அறையின் முன்னால் பூந்தொட்டிகளில் புதிய புதிய பூக்கள் பூக்கும்போதெல்லாம் அவன் சிறு குழந்தைபோல் அதைக் கொண்டாடினான். மேற்கே சாயங்கால மேகம் ரோஜாப் பந்துகளாகச் சுருண்டிருப்பதை மொட்டை மாடியில் நின்று பருகுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான் செல்லப்பா. இந்த நிலையில் அவனை அடிக்கடி பார்த்திருந்தார் பெரியவர்.

"இந்த மாதிரிப் புத்தகம்லாம் இனிமே வாங்காதே செல்லப்பா! பேரே கேக்க அசிங்கமா இருக்கு. 'வர்ஜின்ஸ் - வைன்யார்ட்ஸ்' இதெல்லாம் உனக்கு எதுக்கு?" என்று ஒரு நாள் பேரனைக் கண்டித்துப் பார்த்தார் திவான் பகதூர். பேரன் அவரை விடவில்லை.

"பேர்லே என்ன இருக்கு தாத்தா? ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா எழுதினது இது. இன்னிக்கி இந்தியாவிலியே சிறந்த கவி அவர்தான். அவரோட முதல் புத்தகத்துக்கு யோகி அரவிந்தரே பாராட்டுக் கொடுத்திருக்கிறார்" என்று பேரன் தாத்தாவிடம் விவாதத்துக்கே வந்துவிட்டான்.

ஒரு முறை ஆல் இண்டியா மானுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் கூட்டம் ஒன்றுக்காக டில்லி போனபோது அவனையும் விமானத்தில் அழைத்துப் போயிருந்தார் அவர். அவனுக்கு அப்போது கல்லூரி விடுமுறையாக இருந்ததனால் தம் வழியைப் பழக்கிவிட்டுவிடலாம் என்று எண்ணித்தான் அவர் அவனை அழைத்துச் சென்றிருந்தார். அவனோ அவரோடு சுற்றுவதில் சலிப்படைந்து, டில்லியிலிருந்து தாஜ்மகல் போவதும், ஹரித்துவார் போவதும், திரும்பி வந்து அவற்றை ஒரு குழந்தையின் வியப்போடு கிழவரிடமே வருணிப்பதுமாக இருந்தான். ஒரு தேர்ந்த வியாபாரியின் திறனோடு அவனை உரையாடப் பழக்க வேண்டும் என்று, "திஸ் இஸ் தி ஸிட்டி ஆஃப் வி. ஐ. பிஸ் அண்ட் டிப்ளமேட்ஸ். யூ மஸ்ட் லேர்ன் திங்க்ஸ் ஃப்ரம் அதர்ஸ்" என்று டில்லியைப் பற்றி அவர் ஆரம்பித்தால், "என்ன தாத்தா நீங்கள்?" என்று பதிலுக்குத் தமிழில் ஆரம்பித்தான் அவன். "பல மொழிகளில் சாமர்த்தியம் காட்ட முடியாமைக்குக் காரணம் ஒரு கவி மனப்பான்மையினால் ஒரு சிறிதும் 'லிங்க்விஸ்டிக்' ஆக இருக்க முடியாமைதான்" என்று டியூஷன் வாத்தியார் அதற்குப் பின்னால் எப்போதோ கிழவரிடம் விளக்கம் கூறினார்.

செல்லப்பா சில பத்திரிகைகளில் கவிதை எழுதி அச்சில் வெளிவருவதாகவும் டியூஷன் வாத்தியார்மூலம் அவர் கேள்வியுற்றிருந்தார். மிகவும் கடுமையாக அவனை எப்படிக் கண்டிப்பதென்று அவருக்கு விளங்கவில்லை. பாசமும் தடுத்தது.

சில சமயங்களில் காரில் அவனை அழைத்துக்கொண்டு வெளியே எங்காவது போகும்போது, "ஸீரியஸ்லி ஐயாம் டெல்லிங் திஸ், யூ மஸ்ட் பிகம் எ பிஸினஸ் மேக்னட்! டோன்ட் வேஸ்ட் யுவர் டைம்" என்று அவனிடம் ஆரம்பித்திருக்கிறார் அவர். அதையும் அவன் சிரித்து மழுப்பிக் கொண்டே கேட்டிருக்கிறானே ஒழிய, ஸீரியஸ்ஸாகக் கேட்டதில்லை. ஒரு நாள் இப்படி அவர் ஏதோ கண்டிக்க முற்பட்டபோது, "தாத்தா, போன தடவை பெங்களூர் போனப்ப நாம தங்கியிருந்த வீட்டிலே மாடி ஜன்னலோரமா ஒரு சண்பக மரம் பூத்திருந்ததே; அது ரொம்ப நல்லா இருந்திச்சு. விடிகாலம்பர அறை முழுவதும் சண்பக வாசனை நிரம்பியிருந்திச்சு. அதுமாதிரி ஒரு சண்பக மரம் அதே சாதிச் செடி கொண்டாந்து என் அவுட்ஹவுஸ் கிட்ட தோட்டத்திலே வைக்கணும். என்ன சொல்றீங்க?" என்று சம்பந்தமில்லாமல் அவன் பதிலுக்கு அவரைக் கேட்டான். அவருக்குச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. பெங்களூரிலிருந்து ஒரு நர்ஸரி மூலம் சண்பகச் செடி வரவழைத்து நட ஏற்பாடு செய்தார். பேரன் மனம் புண்படச் செய்யவும் அவருக்குத் துணிவில்லை.

சண்பக மரம் பெரிதாகி வளர்ந்து தன் அறை ஜன்னலருகில் பூத்து மணம் பரப்புவதைப் பற்றி அவன் ஒரு நாள் டியூஷன் வாத்தியாரிடம் வியந்து சொல்லிக்கொண்டிருந்தான்.

மேற்படிப்புக்காக அவன் லண்டனுக்குப் புறப்படுமுன் அம்மாவுக்கு இரகசியமாகச் சொல்லிவிட்டுப் போன செய்தி, "தோட்டக்காரன் மறந்துடப் போறான். நீ தினம் சொல்லி அந்தச் சண்பகச் செடிக்குத் தண்ணி ஊத்தணும்! தாத்தாகிட்டச் சொன்னா சண்டைக்கு வருவாரு" என்பதுதான். அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது இதைக் கேட்டு.

"அத்தினி தூரம் சமுத்திரத்தைத் தாண்டிப் போறவன் ரொம்ப முக்கியமான சங்கதிதான் சொல்லிட்டுப் போறே. வேறே யாராவது கேட்டாச் சிரிப்பாங்க. போடா போ" என்று அவனுடைய தாய் அவனைக் கேலி செய்தாள்.

"எரையாதே! தாத்தா காதிலே விழுந்திடப் போகுது. ப்ளேனுக்குப் புறப்படற சமயத்திலே கோபிச்சுக்கப் போறாரு" என்று சொல்லிச் சிரித்தான் செல்லப்பா.

அவள் பதில் சொல்லவில்லை. திவான் பகதூர் பம்பாய் வரையில் போய் அவனை வழியனுப்பி வந்தார்.

"லண்டன்லே போனதுமே ராபர்ட்ஸனைப் பாரு. அவரு சொல்றபடி எல்லாம் செய். நடுவே பத்து நாள் பன்னிரண்டு நாள் லீவு வரபோது மத்த நாடுகளைப் பாரு. ஸ்வித்சர்லாந்து, ரோம், ஜெனிவா, ப்ராங்க்பர்ட் எல்லாத்தையும் வியாபார நோக்கத்தோடே பாரு. ராபர்ட்ஸன் எல்லா உதவியும் பண்ணுவாரு. பணம் தேவையானப்ப எழுது. பி. காம். தான் இப்பிடிப் போச்சு. அங்கேயாவது டிஸ்டிங்க்ஷன் வாங்கணும்" என்றெல்லாம் படித்துப் படித்துச் சொல்லிப் பம்பாயில் அவனை வழியனுப்பி வைத்தார் திவான்பகதூர். பல முறை போய் வந்த போது தமக்குப் பழக்கமாகியிருந்த லண்டன் நண்பர்களுக்குக் கடிதம் வேறு கொடுத்திருந்தார் அவனிடம்.

"இங்கிலாந்திலிருந்து இங்கிலீஷ் சானல் வழியாகவும் பிரான்ஸ் போகலாம். ஆனால் நீ ப்ளேன்லேயே போய்ப் பாரு. லண்டன் டு பிரான்ஸ் 'ஏர் ஃப்ரான்ஸில்' ஜெட் ப்ளேட் நாற்பது நிமிஷந்தான். இங்கிலீஷ் சானல் வழியாப் 'போட்'லே போய்ச் சிரமப் படாதே." கிழவர் தொணதொணவென்று கூறித் தீர்த்திருந்தார். செல்லப்பன் சிரித்தபடியே கேட்டான். பிரியப் போகிற நேரத்துப் பாசமும் பிரியமும் அவன் மனத்தைப் பிசைந்தன.

விமானம் புறப்பட்டதும் தாத்தாவைப் பிரிவதையும் பாசத்தையும் அவன் மிக அதிகமாக உணர்ந்தான். சொந்த மண், சொந்த மனிதர்கள், பாசம் எல்லாம் எப்படி இரத்தத்தோடு இரத்தமாக, உணர்வோடு உணர்வாக ஒன்றியவை என்பதை அவன் அப்போது உணர்ந்தது போல் அதற்கு முன் எப்போதும் உணர்ந்ததில்லை எனலாம்.

லண்டனிலிருந்து அவன் அவருக்கு எழுதிய இரண்டாவது கடிதத்தில் லேக் டிஸ்டிரிக்ட்டுக்குப் போய்க் கவி வேர்ட்ஸ்வொர்த் பிறந்துவாழ்ந்த பகுதியைப் பார்த்துவிட்டு வந்ததை வியந்து வர்ணித்து எழுதியிருந்தான். தாத்தாவுக்கு மறுபடி கவலை பிறந்தது. மகள் நாச்சியாரிடம் சொல்லிக் குறைப்பட்டுக்கொண்டார்.

"படிக்கப் போன இடத்திலியும் இவன் மாறலே! என்னதான் ஆகப் போகுதோ?" என்று வருத்தப்பட்டுக் கொண்டார். பையனைக் கவனித்துக் கொள்ளும்படி நண்பர் ராபர்ட்ஸனுக்கு விரிவாக ஒரு கடிதம் எழுதிப் போட்டார்.

ராபர்ட்ஸன் அவருக்கு எழுதிய பதிலில், "ஹி ஹாஸ் காட் எ ரேர் பொயடிக் டாலெண்ட். டோன்ட் ஸஸ்பெக்ட் ஹிம்" என்று எழுதவே, ராபர்ட்ஸன் மேலும் கோபம் கோபமாக வந்தது அவருக்கு. உலகமே தமக்கு எதிராகத் தம் பேரனைக் கெடுக்கச் சதி செய்வதுபோல் தோன்றியது.

ஆறு மாதம் கழித்து ஒரு கிறிஸ்துமஸ் லீவில் ஸ்வித்சர்லாந்து போய் அங்கிருந்து ஸ்விஸ் மலைகள் ஏரிகளின் அழகைக் கவிதையில் வருணித்து ஒரு தமிழ்க் கடிதம் அவருக்கு எழுதியிருந்தான் பேரன். முன்பு செய்தது போல் என்ன காரணத்தினாலோ அந்தக் கவிதையைக் கிழித்துக் கசக்கி எறிய மனம் வரவில்லை அவருக்கு.

**"பளிங்கிற் பதித்த நீர்நிலைகள்—இளம்**
**பச்சை மரகதப் புல்வெளிகள்"**

என்று ஆரம்பமான அந்தக் கவிதையை அவரால் வெறுக்கவும் முடியவில்லை.




பேரனின் இந்தப் போக்கை விரும்பவும் முடியவில்லை. படிப்பைக் கவனிக்குமாறு கடிதம் எழுதிக் கண்டித்தார். 'அவன் குடிக்கிறான், கண்டபடி அலைகிறான்' என்றெல்லாம் கேள்வியுற்றிருந்தால்கூட அவருக்கு இவ்வளவு கவலை ஏற்பட்டிருக்காது. அப்படி எல்லாம் செய்தால்கூட அவன் தேர்ந்த வியாபாரியாக மாறிவிட முடியும் என்று நம்பினார். ஒருவன் பிறரிடம் மறைக்கப் பழகும் இரகசிய உணர்வு அடைந்தாலே அந்த அளவு வியாபாரியாகிவிடுகிறான் என்பது அவருடைய நம்பிக்கை. பேரப்பிள்ளையாண்டான் அப்படியும் இல்லையே என்பதுதான் அவருடைய வருத்தமாக இருந்தது. கவலைப்படும் ஒவ்வொரு சமயமும் நண்பர் ராபர்ட்ஸனுக்கு ஒரு கடிதம் எழுதிப் பேரனைக் கவனிக்குமாறு வேண்டுவது அவர் வழக்கமாகியிருந்தது. ஒரு முறை ராபர்ட்ஸனே திவான் பகதூருக்கு விரிவான கடிதம் எழுதியிருந்தார்:—

''நீங்களும் நானும் நம்முடைய தலைமுறை இளைஞர்களைப் போலவே இன்றைய இளைஞர்களும் இருக்க வேண்டும் என்று எண்ணுவது தவறு. இன்றைய இளைஞர்கள் உருவாகிற விதமே பல விதங்களில் நமக்குப் புரிவதில்லை; புதிராகவும் இருக்கிறது. பெற்றோருக்கு அடங்கி அவர்கள் காட்டுகிற பாதையிலேயே போக வேண்டுமென்று 'கன்ஸர்வேடிவ்' ஆக அவர்கள் எண்ணுவதே இல்லை. உங்களுடைய பேரனுக்கு மிக நளினமாகவும் மென்மையாகவும் ஒரு மனம் வாய்த்திருக்கிறது. அப்படிப்பட்ட மனத்தை வியாபாரிக்கு உரிய கபடு, சூது எல்லாம் உடையதாக ஆக்கிவிட நீங்கள் அவசரப்படுகிறீர்கள். எனக்கு உங்கள் மேல் கோபந்தான் வருகிறது. ஓர் அற்புதமான கவி கடுமையான வியாபாரியின் குடும்பத்தில் இடம் தவறிப் பிறந்துவிட்டானே என்று உங்கள் பேரன் மேல் எனக்கு அநுதாபமாகவும் இருக்கிறது'' என்று எழுதியிருந்தார். வழக்கம் போல் அதைப் படித்ததும் ராபர்ட்ஸன்மேல்தான் திவான் பகதூருக்குக் கோபம் வந்தது.

எப்படியோ பேரப் பிள்ளையாண்டான் லண்டனுக்குப் புறப்பட்டுப் போய் வருடம் ஒன்று ஓடிவிட்டது. விடுமுறைகளில் ஊருக்கு வரவிடாமல் ஐரோப்பாவில் ஒவ்வொரு நாடாகச் சுற்றிப் பார்த்து அவன் வியாபார அநுபவம் பெறும்படி ஏற்பாடு செய்திருந்தார் திவான் பகதூர். மொத்தம் இரண்டு வருடம் படிக்க வேண்டும், இரண்டு வருடமும் முடிந்து அவன் திரும்பும்போது தம்முடைய தொழில் பொறுப்புக்களில் சிலவற்றை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார்.

அவன் போன ஐந்தாறு மாதங்களில் அவருடைய தொழில் நிறுவனங்களிலும் சில குழப்பங்கள் ஏற்பட்டன. ஸ்டிரைக், போனஸ் தகராறு, கோ ஸ்லோ, வேலைநிறுத்தம் என்றெல்லாம் குழப்பங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வயது முதிர்ந்த காலத்தில் அவ்வளவு கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு, சமாளிப்பதற்கு அவர் சிரமப்பட்டார். தளராத மனத் திடமும், தொழில் துறை நிபுணத்துவமும், விவகார ஞானமும் இருந்ததனால்தான் அந்த வயதிலும் அவரால் அவற்றை ஒழுங்கு செய்ய முடிந்தது. ஆயினும் அவருக்கு மன அமைதி இல்லை. இராத் தூக்கம் போயிற்று. 'பிளட் பிரஷர்' தொந்தரவு அதிகமாயிற்று.

வியாபாரத் தந்திரங்களிலும் தொழில்துறை நுணுக்கங்களிலும் வல்லாளகண்டர் என்று பெயரெடுத்த தமக்கே இப்படி என்றால் சூதுவாது அறியாத பேரப்பிள்ளை செல்லப்பன் எதிர்காலத்தில் இவற்றைக் கட்டிக்கொண்டு என்ன என்ன கஷ்டப்படப் போகிறானோ என்று சிந்தித்து அவர் மனம் குழம்பினார். நாட்டில் தொழில் நடத்துகிறவனுக்கும், தொழிலில் பணி புரிகிறவர்களுக்கும் இடையே சகஜமாக இருந்த நல்லுறவைக் குழப்பக்காரர்களும் அரசியல்வாதிகளும்

சுயநலத்துக்காகப் படிப்படியாய்க் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டனர் என்பது அவருக்குப் பெரிய வேதனையாக இருந்தது.

மனவேதனையோடு அவர் உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாக இருந்தபோது செல்லப்பாவின் பழைய டியூஷன் வாத்தியார் அவரைப் பார்த்துவிட்டுப் போக வந்திருந்தார்.

''நாடு போகிற நிலையைப் பார்த்தால் இத்தினி தொழிலிலே முதலீடு செய்திருக்கவே வேண்டாம்னு தோணுது. இந்தத் தொழில்களாலே ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு வேலை கொடுத்துக் காப்பாத்தரேும். ஆனாலும் குழப்பக்காரன்களும் அரசியல்வாதிகளும் அவர்களுக்கும் நமக்கும் இடையே சண்டை மூட்டி விடறுங்க. மனநிம்மதி கெட்டுப் போச்சு'' என்று புரொபஸரிடம் அலுத்துக் கொண்டார் பெரியவர். அப்போது புரொபஸர் சிரித்துக்கொண்டே பெரியவரை ஒரு கேள்வி கேட்டார்: ''திரும்பி வந்ததும் உங்க பேரனுக்கும் இப்படிப்பட்ட சிரமங்களை எல்லாம் கொடுத்து அவனைக் கஷ்டப் படுத்தப் போறீங்க, இல்லியா?''

திவான் பகதூரால் இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. தம்மைப் போன்ற வல்லாள கண்டராலேயே சமாளிக்க முடியாத பிரச்னைகளை ஒரு சூது வாதும் அறியாத பேரன் எப்படி எதிர்கொள்ளப் போகிறுனே என்பது தான் அவருடைய பயமாகவும் இருந்தது. அதையே வாத்தியார் கேட்கவும் கிழவர் திகைத்தார்.

''புரொபஸர், செல்லப்பா ஸ்வித்சர்லாந்திலேருந்து ஒரு கவிதை எழுதியனுப்பியிருந்தான். அது கொஞ்சம் நல்லாவே இருந்தது. நானே அதை ரஸிச்சேன்'' என்று திவான்பகதூர் கூறியபோது புரொபஸரால் தம் காதுகளையே நம்ப முடியவில்லை. ராபர்ட்ஸனுடைய கடிதம் பற்றியும் பெரியவர் புரொபஸரிடம் குறிப்பிட்டார். புதிய தலைமுறை இளைஞர்கள் பற்றிப் புரொபஸரும் அதே கருத்தைப் பெரியவரிடம் தெரிவித்தார். அப்புறம் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் புரொபஸர் போய்விட்டார். போகும் போது திவான் பகதூரிடம் ஏற்பட்டிருக்கும் மனமாற்றத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டேதான் போனுர்.

பெரியவரோ உடல்நலமும் மன நலமும் கெட்டுப் படுத்த படுக்கையானதிலிருந்து பேரனின் நினைவாகவே இருந்தார். அந்த வேளைகளில் அவர் பேரனின் கடிதங்களையும், ராபர்ட்ஸனின் கடிதங்களையும் திரும்பத் திரும்ப எடுத்துப் படிக்கலானுர். அது அவருக்கு மனச் சந்துஷ்டி அளித்தது.

ராபர்ட்ஸன் எழுதியிருந்த வரிகள் இப்போது அவருக்கு வெறுப்பைத் தரவில்லை. டியூஷன் ஆசிரியர் கேட்ட கேள்வி இன்னும் கிழவரின் மனத்தை விட்டு அகலாமல் சுழன்றது.

'பூப்போன்ற மெல்லிய மனத்தோடு கபடு சூதுவாது இன்றி இருக்கும் பேரப்பிள்ளையாண்டானை இந்த உலகின் துரோகங்களிலும் வஞ்சகங்களிலும் முக்கி எடுத்துக் கஷ்டப்படுத்துவது அவசியந்தானு? பூக்களின் மலர்ச்சியிலும், நீரூற்றின் சிலிர்ப்பிலும், சண்பக மலரின் வாசனையிலும், சாயங்கால மேகங்களின் அழகிலும் மனத்தை லயிக்க விடும் ஒருவனை இன்வெஸ்ட்மென்ட், எஸ்டாபிலிஷ்மென்ட், பாலன்ஸ் ஷீட், போனஸ், இன்ஸென்டிவ் போனஸ் என்றெல்லாம் நினைக்க வைத்து மனம் வறளச் செய்வது அவனுக்குச் செய்யும் நன்மையாக முடியுமா? தீமையாக முடியுமா?' என்று அவர் மனம் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது.

ஒரு பூவை நெருப்பில் எடுத்துப் போடுவதா, கூடாதா என்பது போன்ற தயக்கமாக இருந்தது அது. அதே சமயம் அவன் பாடிய பழைய ரோஜாப் பூக் கவிதையை நினைத்தபோது அவன் மேல் கடுங்கோபமும் மூண்டது. அது ஏதோ ஒரு புரட்சிக்காரனுடைய சிந்தனை மாதிரி தோன்றி அவரை மிரட்டியது. எதிர்காலத்தில் தம்முடைய தொழில் நிறுவனங்கள் அனைத்தையும் கவனித்துக் கொள்ளும் ஒரு 'டிப்பிகல் இன்டஸ்டிரியலிஸ்ட்' ஆக அவனை அவர் எதிர்பார்த்தார். அவர் எதிர்பார்த்தது பயனளிக்கவில்லை. தொழில்களும் தொழிலாளர்களும் போகிற போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் அவனுல் அந்தப் பொறுப்பைத் தாங்க முடியும் என்று அவராலேயே நம்ப முடியவில்லை.

திவான் பகதூரின் இரண்டு கம்பெனிகளில் 'லாக் அவுட்' ஆறு மாதத்துக்கு மேல் நீடிக்கலாயிற்று. ஒரு கம்பெனியில் ஸ்டிரைக். இன்னொரு கம்பெனியில் மானேஜரைக் 'கேராவ்' செய்து கொடுமைப்படுத்தியதனுல் ஆபீஸ் முழுவதும் போலீஸ்காரர் காவலுக்கு நின்றுர்கள். மற்றொரு தொழிலகத்தில் 'கோ ஸ்லோ'வினுல் பொருளுற்பத்தி மிக மிகக் குறைந்தது. ஆறேழு மாதம் அவர் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே இல்லை. மானேஜர்களும், அட்மினிஸ்டிரேடிவ் ஆபீஸர்களும், அந்தரங்கக் காரியதரிசிகளும், தொழில் சம்பந்தமான பிரச்னைகளை அவரிடம் வீட்டிலேயே வந்து கலந்து ஆலோசித்துக் கொண்டு போனுர்கள். நாளுக்கு நாள் குழப்பங்கள் அதிகமாயின. அரசியல் சார்புடைய சுயநல நோக்கமுள்ள தொழிற் சங்கவாதிகள் நல்ல தொழிலாளர்களைக்கூடக் குழப்பமான பாதைகளுக்கு அழைத்துச் சென்றனர். இன்னொரு வருடமும் ஓடிவிட்டது. நிலைமையில் எந்தவித மாறுதலும் இல்லை.

அடுத்த வெள்ளியன்று டிரான்ஸ் வோர்ல்ட் ஏர்லைன்ஸ் விமானத்தில் பம்பாய் வந்து, பம்பாயிலிருந்து செல்லப்பா சென்னை வருகிறுன். பேரனை வரவேற்க விமான நிலையத்துக்குக் கூடப் போக முடியாத நிலையில் இருந்தார் திவான் பகதூர். டியூஷன் வாத்தியாரும், நாச்சியாரும், திவான் பகதூரின் கம்பெனி நிர்வாகிகளும் மீனம்பாக்கம் போய்ப் பேரனை அழைத்து வந்தனர்.

செல்லப்பா வெளிநாட்டுச் சூழ்நிலையில் நன்ருக அழகாக வெளுத்திருந்தான். ஆளும் திடீரென்று மிகவும் உயர்ந்துவிட்ட மாதிரி தோற்றமளித்தான். தாத்தா படுக்கையிலிருந்து எழுந்து அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். ஆஜானுபாகுவாகச் செழித்திருக்கும் பேரனைக் கண்டதும் அவருக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி.

''ராபர்ட்ஸன் உங்களை விசாரித்தார்'' என்றுன் பேரன்.

''ஹௌ இஸ் ஹி நௌ? டிட் யூ ஹாவ் எ நைஸ் டிரிப்?'' என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்தார் கிழவர். பேரன் தமிழிலேயே பதில் சொன்னுன். வெளிநாட்டில் நாவுக்கு ருசியாகச் சாப்பிட முடியாமல் இரண்டு வருடத்தைக் கழித்துவிட்டு வந்திருக்கும் பிள்ளைக்கு வாய்க்கு ருசியாகச் சாப்பாடு போட அழைத்துக்கொண்டு போனுள் நாச்சியார். மற்றவற்றை அப்புறம் பேசிக் கொள்ளலாம் என்று கிழவரும் பேரனை டைனிங் டேபிளுக்கு அனுப்பி வைத்தார். கம்பெனி அதிகாரிகள் தொழில் நிர்வாகத்தில் பேரனுக்கு என்ன என்ன பொறுப்புக்களை அளிப்பது என்பதுபற்றிக் கலந்து பேசுவதற்காகக் கிழவரின் படுக்கையருகில் சூழ்ந்தார்கள்.

உள்ளே டைனிங் டேபிளில் திடீரென்று அம்மாவுக்கும் பிள்ளைக்கும் ஏதோ பலத்த வாக்குவாதம் நடப்பது தடித்த குரல்களில் கேட்கவே அது என்ன என்று அறிந்துகொள்வதற்காக மகளைக் கூப்பிட்டனுப்பினுர் கிழவர். மகள் வந்தாள்.

''வந்ததும் வராததுமா அவங்கிட்ட என்ன சத்தம் போடறே நாச்சியார்?''

''அவனுக்கு வேற வேலை என்ன? ஊருக்குப் போறபோது ஏதோ சண்பகச் செடி நட்டுட்டுப் போனுனும். அதுக்கு நான் தோட்டக்காரனிட்டச் சொல்லி ஒழுங்காத் தண்ணிவிட்டுக் கவனிக்காததனுலே அது பட்டுப் போச்சாம். அதைப் பார்த்து அவனுக்கு மனசே சரியில்லையாம். சாப்பிடக் கூடப் பிடிக்கலையாம். கத்தருன். கூப்பாடு போடருன்.''

கிழவர் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது. ''எனக்கு உடம்பு கெட்டுப் போயி நான் படுத்த படுக்கையா இருக்கறதைப்பத்திக்கூட அவன் கவலைப்படலை. சண்பகச் செடி பட்டுப் போனதைப்பத்தி எவ்வளவு உருகருன் பார்த்தியா நாச்சியாரு?''

''ஆமா! அசட்டுப் பிள்ளை. ஒண்ணுமே தெரியலே.''

கிழவர் தம்மைச் சுற்றியிருந்த அதிகாரிகளிடம், ''எக்ஸ்க்யூஸ் மீ ஃப்ரண்ட்ஸ்! ஹி இஸ் டூ யங், டூ டெண்டர் டு டேக் சார்ஜஸ் இன் தி ஆபீஸ். லீவ் ஹிம் நௌ'' என்று கூறினுர். அவர்கள் விடை பெற்றுச் சென்றனர். அவர் மனத்தில் பாரம் அகன்றுற் போலிருந்தது.

அன்று அவருக்கு ப்ளட்ப்ரஷர் அதிகமாகவில்லை. போன இடங்களை, பார்த்த இடங்களை, சந்தித்த மனிதர்களைப் பற்றி எல்லாம் பேரன் கவித்துவம் பொங்கச் சொல்லியவற்றை அவர் அமைதியாக ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். ★



எமது தீபாவளி
வாழ்த்துக்கள்

இம் மலரிலுள்ள கலர் பிளாக்குகள்
யாவும் எங்களால் செய்யப்பட்டவை.

ஸ்தாபிதம் 1890

போன்: 21902

M. C. அப்பாசாமி செட்டி & கம்பெனி

14, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

*Deepavali Greetings From*

# BHARAT HEAVY ELECTRICALS LIMITED

## High Pressure Boiler Plant

**TIRUCHIRAPALLI-14**

*MANUFACTURERS OF*

High Pressure Boilers for Thermal Power Stations of capacity 50/60 MW, 100 MW upto 200 MW.

Industrial Boilers capacity 6 t/hr., 9 t/hr., 16 t/hr., 25 t/hr., 35 t/hr., and 50 t/hr.

Medium and High Pressure Valves made of Cast Steel, Cast Iron and Forged Steel for Pressure Ranges from 2.5 Kg./Sq.Cm. to 250 Kg./Sq.Cm. and temperature ranges from 200°C to 400°C.

Other Boiler Auxiliaries like Ball Mills, Mechanical Separators, Electrostatic Precipitators, Heavy Duty Fans like Axial and Radial Fans, De-superheaters, High Pressure Piping Etc.

Pressure Vessels for various Industries etc.

*PLEASE CONTACT*

Sales Manager
BHARAT HEAVY ELECTRICALS LTD.
HIGH PRESSURE BOILER PLANT
**TIRUCHIRAPALLI-14. Madras State**

பாலரைத் தடுப்பினும் பார்வையைத் தடுக்குமா?



வட்டச் சக்கரம் தடுக்கிறது
வையம் முன்னே இழுக்கிறது



போட்டோ: பி. வி. சுப்பிரமணியன்

ஆர். பி. எஸ். மணி

உண்ணும் குழந்தை தோள்மேலே



ஊட்டும் குரங்கு தலைமேலே



உதயபாஸ்கர்



# பிரசாதம்

கோவில் வாசலில் யாரோ பிள்ளையாருக்குச் சிதறு தேங்காய் உடைத்துக்கொண் டிருந்தார்கள். சுற்றிலும் தெளித்தாற்போலப் பையன்களின் கூட்டம். எறும்புச் சுறுசுறுப்பாக, துண்டு விழுந்த தேங்காயைத் தேடிப் பொறுக்கிக்கொண் டிருந்தார்கள்.

''அம்மாவ் — ம்மாவ்!''

பதினாறுகால் மண்டபத் தூண்களைச் சுற்றி ஒரு சிறு பையன், பயந்து ஒளிந்து ஓடிக்கொண் டிருந்தான். கண்கள் திகிலில் சுழன்றன. கைகள் அவசரமாய்த் தேங்காய்த் துண்டைச் சட்டைக் கிழிசலின் மறைப்பில் ஒளித்துக்கொண் டிருந்தன. பெரியவனாக ஒரு முரட்டுப் பையன் கையில் சிறு கழியுடன் அவனை விரட்டி வளைய வந்துகொண் டிருந்தான்.

''குடுத்திடு — உம் — கீழே போட்டிடு!''

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



வெடவெடவென்று அந்தச் சிறு பையனின் முட்டிக் கால் உதறியது. 'தடால்' என்று குப்புற விழுந்து தரையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். முகம் நிமிர்ந்து தண்ணீர் மாலை மாலையாக ஒழுகியது. பேச்சுத் தொண்டையில் சிக்கி அடைத்துக் கொண்டது.

அந்த வழியே வந்து நின்று கவனித்துக்கொண்டிருந்த அபிராமி, அவனருகில் வந்து அவனை லேசாகத் தூக்கினாள்.

''எழுந்திருடா.''

''ம்மாவ்!'' தண்ணீர் நிரப்பி வைத்த தவலையைத் தட்டினாற் போல அவன் குரல் அழுகையோடு அவள் மேல் திரும்பியது; ''அவன் என்னை அடிக்க வராம்மா.''

நெருப்பாய்ச் சுடுகிற பார்வையோடு, அபிராமி திரும்பி அந்தப் பையனைப் பார்த்தாள்.

''நீ போ. நீ போ! மரியாதையா போயிடு. இங்கே நிக்காதே. ஓடியே போயிடு.''

அவளைப் பார்த்தபடி அவன் ஒரு கணம் தயங்கினான். அப்புறம் திரும்பிச் சிறுவனை முறைத்தபடி திரும்பி, மெதுவாக நகர்ந்தான். தலையைச் சிலுப்பி அலட்சியமாக உதறிக்கொண்டு 'விர்' என்று வேகமாக ஓடிவிட்டான், இடுப்புச் சராயை வரிந்து மேலே இழுத்தபடி.

''அம்மா, நான் ஒங்க கூடவே வர்றேம்மா. இங்கே இருந்தா அவன் அடிக்க வருவான்.''

அவனுக்கு ஆறேழு வயசு இருக்கலாம். அவன் அதைப் போல அலைந்து பொறுக்குகிற கூட்டத்துப் பையனுக்குத் தெரியவில்லை. நல்ல ரேக்குச் சிவப்பு. எண்ணெய் படாத சிகையின் மயிர்க் குஞ்சங்கள், பளபளவென்று காது மூடத் தழைந்து சுருண்டு தொங்

கின. பட்டையாய் விபூதி இட்டுக்கொண்டு, புருவ மத்தியில் மூன்றாவது கண் திறந்தாற்போல, அகலக் குங்குமப் பொட்டும் வைத்திருந்தான். கண்களில் ஒரு சோகம் தூங்கியது, பால் மறக்கடித்த குழந்தை மாதிரி.

''சரி, சரி. வா பின்னாலே'' என்று அபிராமி பூஜைத் தட்டையும் தேங்காய் பழத் தூக்கையும் பிடித்தபடி நடந்தாள்.

''ஒண்ணு குடுங்கம்மா. நான் கொண்டாறேன்.''

குரலின் விநயமும் ஒட்டிக்கொள்ளத் துடிக்கும் குழந்தைத் தவிப்பும் அவளை இழுத்தன. மறுக்க மனம் இல்லை. தெறித்தாற் போல ஒரு சொல் சொல்லிவிட்டால் அந்தப் பிஞ்சு மனம் விரிசல் கண்டுவிடுமோ என்ற தயக்கம்.

''பரவாயில்லேடா!'' ஆனாலும் அவள் கை நீண்டது. அவன் அந்தத் தூக்கைத் தாங்கிப் பிடித்து வாங்கிக்கொண்டு, பின்னால் நிழலாய் ஒட்டி நடந்தான்.

பிரசாதத் தட்டை ஏந்தியபடி அபிராமி, வாசல் அறைக்குள் நுழைந்தாள். சாய்வு நாற்காலியில் படுத்தபடி செய்தித் தாளைப் புரட்டிக்கொண்டிருந்தான் குமரு. கதவோரம் திரும்பிய அவன் பார்வை, கனிந்து அசைவின்றி நிலைத்தது. தன் உருக்கம் தனக்கே தாளாமல், நிறை விழியும் ததும்பு மனமுமாக, அவள் அவன் அங்கையில் பிரசாதத்தை வைக்கும் காட்சி அவனுக்குப் புதிதல்ல. அவள் ஏக்கத்தை அவன் அறிவான். நெஞ்சடைப்புக் கண்ணில் தெரிய நிற்பவளை, கைகளைப் பற்றி அருகே இழுத்துக்கொள்வான்.

இன்று அவள் கண்களில், கடல் அலை கழுவி உமிழ்ந்த சோழியாய், ஒரு பளபளப்புத் தெரிந்தது. குரலிலுங்கூட லேசான துடிப்பு. இதழ்கள் கண்மேல் நிழலாய் அமர்ந்து அடங்கின.

''இந்தப் பையனைப் பார்த்தீர்களா? கோவில் வாசலிலிருந்து அழைத்துவந்தேன். பாவம்! அநாதையா முழிச்சு அழுதுக்கிட்டிருந்தான்.''

''ஆரது அபிராமி? தவற விட்டுட்டுப் போயிட்டாங்களா யாராச்சும்? என்ன பண்ணிக்கிட்டிருந்தான்?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை. சிதறு காய்க்குச் சண்டை போட்டுச் சமாளிக்க முடியாமே முளிச்சுக்கிட்டிருந்தான். அவ்வளவுதான்.''

''ஏய் பயலே! இங்ஙன வா.''

குமருவின் குரல் கேட்டதும் அவன் உள்ளே வந்தான். இன்னும் காயாத கண்ணீருக்கிடையே, கண நேரம் ஒரு புன்னகை, உதடுகளின் மேல் படிந்து விலகியது.

''ஓம் பேரு என்னடா?''

அவன்புறங்கையில் நெற்றிமயிரைத் தள்ளிக்கொண்டு நின்றான். அப்புறமும் பேச்சு வரவில்லை. சிறிது நேரம் கழித்து, அணைகிற திரியை வெளியே இழுத்துக் கொழுந்தைத் தூண்டிவிட்டாற்போல, பேச்சுச் சிரமப்பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வந்தது.

''எம் பேரு பழனி.''

''எலே. உம் பேரா, ஊரு பேராடா அது?''

'குபுக்'என்று அவன் சிரிப்புப் பொங்கிக் குதித்தது, பழைய அரிக்கேன் விளக்கின் திரிச் சுடரைப் போல.

''ஒங்கப்பா பேரு, ஊரு தெரியுமாடா?''

அவன் கண்கள் மங்கின. உதடுகள் கோணிக் கொண்டன. இடுப்புச் சராயை மேலே இழுப்பதும், முன் நெற்றிமயிரை ஒதுக்கிக் கொள்வதுமாக நின்றான்.

''எத்தினி நாளாச்சுடா மெட்ராஸ் வந்து?''

அவனிடமிருந்து இன்னும் பதில் இல்லை. பார்வை மிரண்டு, சுழன்று ஓய்ந்தது. தெரு வாசற்படியை ஒரு முறை பார்த்துக்கொண்டான்; பதில் சொல்வதைவிடத் திரும்பிப் போய் விடலாமா என்று நினைப்பதைப் போல.

''சொல்லுடா.''

''எனக்கு....எனக்கு....எதுவுமே தெரியாது.'' பொங்கிவந்த



அழுகையில் அவன் குரல் உடைந்தது. பேசாமலே அபிராமிக்குக் குரல் கம்மியது.

''சரி, சரி. அப்புறம் ஆவட்டும் ஒங்க விசாரணை'' என்று கண் பார்வையினால் அவனை உள்ளே வர ஜாடை காட்டிவிட்டு, ஒதுங்கினாள் அபிராமி.

அவர்களுடைய சாப்பாடு முடிந்ததும், கொல்லையில் குறட்டோரமாக உட்கார்ந்திருந்த பழனியைக் கூப்பிட்டாள் அபிராமி. உள்ளே ஓடி வந்தவன் விளக்கடியில் இலையில் வைத்திருந்த சோற்றைப் பார்த்தான். அவன் கண்கள் கசிந்தன. மூக்கை ஒரு முறை உறிஞ்சிக்கொண்டான்.

''சாப்பிட வா'' என்று சொல்லிவிட்டு, மோரைக் கொண்டு வர உள்ளே போனாள் அபிராமி. திரும்பி வந்தவள் இலையின் முன்னால் காலைச் சப்பணம் கட்டிக்கொண்டு தயாராக உட்கார்ந்திருந்தவனைப் பார்த்தாள். முகம் பொய்க் கோபமாய் ஒரு முறை சிடுசிடுவென்று மாறியது.

''கைகால் கழுவிக்கொண்டு வந்து உட்கார வேண்டாம்? எழுந்திரடா.''

அவள் குரலில் ஒலித்தது பொய்க் கோபம் என்று தெரிந்து கொண்டவனைப்போல, அவன் சிரித்தபடி எழுந்து ஓடினான். செம்பு நீரைக் காலிலும் கையிலும் கொட்டிக்கொண்டு, மறுபடி வந்து உட்கார்ந்தான்.

ஊறுகாயைத் தொட்டுத் தொண்டை நாக்கில் இழுத்துக் கொண்டவனைக் குனிந்து, கணவனைப் போலவே விசாரித்தாள் அபிராமி. ஆனால் அவனிடமிருந்து பேச்சு எழவில்லை. மலங்க மலங்க அந்த விழிப்புத்தான் பதில். அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. மேலே பேசாமல் விட்டுவிட்டாள்.

பழனி சாப்பிட்டுவிட்டு, இலையை எடுத்துச் சுத்தம் செய்துவிட்டான். அறையைக்கூட, தண்ணீர் விட்டு, அவள் கையில் எடுத்துக் கொண்ட விளக்குமாற்றைப் பறித்து எடுத்துக்கொண்டு, தேய்த்துக் கழுவி விட்டான். பற்றுப் பாத்திரங்களை எடுத்து வெளியே அடுக்கி வைத்துவிட்டு, அவள் விளக்கை அணைத்த பிறகு, கையைக் கழுவிக் கொண்டு வாசற்புறம் வந்தான். திண்ணையில் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவன் குறட்டை ஒலி லேசாகக் கேட்டது.

அபிராமி சிரித்துக்கொண்டே, படுத்துக்கொண்டிருந்த கணவன் மார்பின்மேல் கைவைத்தபடி, அருகில் உட்கார்ந்தாள். அவள் கழுத்தை அணைத்துத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான் குமரு. அவள் தன்னை விடுவித்துக்கொண்டாள். மெத்தென இருள் அவர்களைச் சூழ்ந்தது. சற்று நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

''ஒன்று கேட்கலாமா உங்களை?''

''கேளு. ஆனால் நீ என்ன கேட்கப் போகிறாய் என்று எனக்குத் தெரியும்.''

''என்னவாம்?''

''அந்தப் பையனை இங்கே வீட்டோடு வைத்துக்கலாமான்னு கேட்கப் போறே. அப்படித்தானே?'' என்று சிரித்துக்கொண்டே மறுபடி அவளை அணைக்க முயன்றான். இம்முறை அவள் சுவாதீனமாக அவன்மீது சாய்ந்து கொண்டாள்.

''ஆமாம். ஏன்? ஒங்களுக்கு இஷ்டமில்லியா?''

அவன் மௌனமானான்.

''என்ன? பதில் சொல்லுங்களேன்.''

''ஒன்றுமில்லை. யாரோ ஊர்பேர் தெரியாத பையன். நீ யாரையும் சட்டுனு நம்பிடறே. என்னால் முடியவில்லை.''

''சேசே! பார்த்தாலே 'ஐயோ பாவம்'னு இருக்குது. எனக்கும் துணையா இருக்கும்.''

''உம். யோசிக்கலாம். இப்போதைக்கு இங்கேயே இருக்கட்டும்.''

குமரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். கட்டிலின் மேல் தணற்பொறி கனிந்தது. அம்மாதிரி அவள் கணவன் புகையை உறிஞ்சி இழுக்கும்போது, அவன் மனம் சிந்தனையில் ஆழ்ந்து நிற்பதை அவள் அறிவாள். அந்த வேளைகளில்

அவள் அவனைத் தொந்தரவு செய்ய மாட்டாள்.

**கா**லை நேரம்.

பழனி அங்கேயே குளித்துவிட்டு, நீராகாரம் சாப்பிட்டு விட்டு வேலை செய்துகொண்டிருந்ததைக் கவனித்தபடி இருந்தான் குமரு. அபிராமி எவ்வளவு சீக்கிரம் யாரையும் நம்பிவிடுகிறாள்! எவ்வளவு விரைவில் அவளுடைய அன்பை எளிதாகச் சம்பாதித்துக் கொண்டுவிட முடிகிறது!

அவனைக் கூப்பிட்டு அன்றைச் செய்தித்தாள் ஒன்றும், ஒரு நெருப்புப் பெட்டியும் வாங்கிவரச் சொல்லி அனுப்பினான். அனுப்பியபிறகு சற்று நேரத்துக்கு ஒரு தடவை, மணிக்கட்டுக் கடிகாரத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். வருவதற்குக் கொஞ்ச நேரந்தான் ஆயிற்று. அதற்குள் குமருவுக்குக் கொஞ்சம் சந்தேகங்கூட; பையன் அப்படியே சில்லறையோடு மறைந்துவிடுவானோ என்று.

திரும்பி வந்ததும் அவனிடம் கேட்டான்: ''ஏன் இத்தனை நேரம்?''

பதில் இல்லை.

மீதிச் சில்லறையைக் கணக்குப் பார்த்தான். ஐந்து பைசாக் கூடுதலாக இருந்தது.

''சில்லறையைக் கணக்குப் பார்த்தாயா? இல்லை, உன் பையில் இருந்த சில்லறை எதையாச்சும் கலந்துவிட்டாயா?'' என்று கேட்டான். அவனிடமிருந்து அதற்கும் பதில் இல்லை. அவனைப் பார்த்து மெதுவாகச் சிரித்துவிட்டுப் பையன் மிரள மிரள விழித்தான்; தலையைக் குனிந்துகொண்டான்.

''சரி, நீ போ உள்ளே'' என்று அங்கே வந்து பழனியை உள்ளே அனுப்பிவிட்டாள் அபிராமி. அவளைப் பார்த்ததுமே அவன் முகம் பலகணி திறந்தது போலத் திடீரென வெளிச்சமாயிற்று. உதட்டோரம் குறுநகையில் குழிந்தது. உள்ளே போய்விட்டான்.

''அவனைக் கவனித்தாயா? அவன் வயதுக்கு ஏற்ற புத்தி வளர்ச்சி இல்லை அவனுக்கு.''

''அப்படி என்றால்?''

''டாக்டர்கள் 'ரிடார்டெட் சைல்ட்' என்று சொல்வார்கள். பின் தங்கிய குழந்தை என்று அதற்கு அர்த்தம். பார்க்க அவன் ஏழெட்டு வயதுப் பையனாக இருக்கிறான். புத்தி மூன்று அல்லது நான்கு வயது அளவுக்குத்தான் வளர்ந்திருக்கிறது.''

மணல்மேல் போட்ட பூவைப்போல அவள் முகம் சட்டென்று வாடியது. இரக்கத்தில் குரல் நெகிழ்ந்தது.

''அவன் இங்கேயே இருக்கட்டும். அவனைக் கடுமையா எதுவும் சொல்லாதீங்க. எனக்கு என்னவோபோல இருக்குது.''

**சே**வலின் அறைகூவலோடு, அவனும் எழுந்து விடுவான், அவளுக்குத் துணையாக. வாசலில் கறக்க



வரும் பசுவின் கழுத்து மணி கேட்கும். தூரத்தில் கடற்கரையோரம் மணல் மேல் சரிந்து வடியும் அலைகளின் இரகசியப் பேச்சு. கோவிலில் காலை நேரப் பூஜை மணி ஒலி. கோபுர கலசத்தின் பளபளப்பு. வாசற்குறடுகளின் மேல் பிரம்மாண்டமாகப் பூத்து வழியும் கோலங்கள்.

பூசைத் தட்டும், பூக்கூடையுமாக உலர்ந்து உலராத தலையுடன் அபிராமி கோவிலுக்குக் கிளம்பிவிடுவாள். பட்டாசுத் திரியாய்ப் பரபரவென்று பழனியும் கூடக் காரியங்கள் செய்துகொண்டே இருப்பான்; கூடவே கோவிலுக்கும் வருவான். பிரசாதம் ஏந்தி அவனுக்கும் கொடுக்கும்போது, ஞாபகமாய் ஒரு வாழைப் பழத்தையும் எடுத்துக் கொடுப்பாள் அபிராமி. பரிவு துடிக்க அவன் தோளையும் தலைமயிரையும் தடவிக் கொடுப்பாள். இராமர் அணிலைத் தடவிக் கொடுத்ததுபோல அது.

அந்தப் பரிவில்தான் அவனுக்கு ஊட்டம்; அந்த வீட்டுச் சாப்பாட்டில் அல்ல. அந்த அன்பு கனியும் கண்கள் சிந்திய பார்வைதான் அவன் நெஞ்சுத் தாகத்தை அடக்கும் தண்ணீர். அதைத்தான் அவனால் வேறு எங்கேயும் பெற முடியவில்லை. பேச முடியாமல், கண்கள் மட்டும் உருக, சில வேளைகளில் அவள் காலைப் பிடித்துக்கொண்டு, அப்படியே அமிழ்ந்து உட்கார்ந்துவிடுவான்.

**அ**பிராமி அந்த வீட்டில் புகுந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. குமரு இன்னும் காத்துக்கொண்டிருந்தான். ஆனால் அவன் ஆசையின் விடிவுக்கு அடையாளங்கூட இன்னும் தெரியவில்லை.

வீட்டுக்கு அருகிலேயே கோவில். அம்பாளுக்கு நீராட்ட நீர் சேந்திக் கொண்டு வைப்பதும், கோவிலில் இழைகோலம் போடுவதும், பூத்தொடுத்துக் கொடுப்பதும், அரசமரத்தைச் சுற்றுவதுமாக, அவள் நம்பிக்கை இன்னும் முறியாமல் நிமிர்ந்துகொண்டுதான் நின்றது. அதிகாலையில் குளித்துவிட்டு, முதுகிலும் தோள்களிலும் நீர் துளிக்க, முகம் கைகால்களில் மஞ்சள் பளிச்சிட, உடலோடு ஒட்டிய ஈரத் துணியோடு, குவிகரமும் பொரியும் இதழுமாக நிற்பாள்.

தாய்மை அவள் பார்க்கும் இடத்தில் எல்லாம் காண்பது போலத் தோன்றும். ரேடியோவின் விளம்பரத்தில் இருக்கும் கட்டைவிரலைச் சப்பும் கொழுகொழு குழந்தை, கூரை மீதிருந்து நழுவி விழுந்துவிட்ட குருவிக் குஞ்சு, மடிமீது விளையாடி மறையும் அணிற்குட்டி, ஆயன் கழுத்தின் மீது சவாரி செய்தபடி பின்

னால் தொடர்ந்து வரும் தாய்ப்பசுவைப் பார்க்கும் கன்று - ஒவ்வொன்றிலும் அவள் நெஞ்சு உருகும்.

அந்த மன நெகிழ்ச்சியைத்தான் அவனிடமும் கண்டாளோ? புலர்ந்து புலராத வைகறை வெளிச்சமென, இன்னும் அறிவு தெளியாத அந்தச் சிறுவனின் களங்கமற்ற பார்வையில் இன்னும் உருப் பெறாத, முற்றுப் பெறாத, ஆசையின் வடிவங்களையே கண்டாளோ? கண்ணுக்குத் தெரியாமல் உள்ளே வெல்லம் பதித்த தின்பண்டமாய், அவள் இயல்பாகக் காட்டும் பரிவிலுங்கூட, உள்ளே அந்த ஆசை கனிந்து ததும்பிக் கொண்டு நிற்கும்.

பழனிக்கு இரண்டொரு சொக்காயும் சராயும் கிடைத்தன. இரண்டொன்று புதிது; அவனிடம் ஏற்கனவே இருந்த பழைய துணிகள்; மாறி மாறி அவற்றை அவன் சுத்தமாகத் தோய்த்துக் காயவைத்து மடித்துப் பிறகு உடுத்துக் கொள்வான். படிய வாரிய தலையும், துல்லியமாக நெற்றி நிறையக் கட்டு விபூதியும், பளிச்சென்று குங்குமப் பொட்டுமாக, கன்னம் தழைந்த புன்னகை தெரிய நிற்பான்.

குனிய வளைய அயரமாட்டான். சர்க்கரையை மொய்க்கும் எறும்பாய் வேலையில் மூழ்கிவிடுவான். வேலைக்குக் கூப்பிட்டுவிட்டாலோ, கலைந்து அலையும் எறும்பின் சுறுசுறுப்புத்தான். எட்டாத உயரப் பலகையின் பாத்திரத்துக்கு அவள் விரல்கள் நீளும்போது, ஓணானாய்க் கணப்பொழுதில் மேலே ஏறிவிடுவான்.

ஒழிந்த நேரங்களில், அவளிடம் புத்தகமும் கையுமாக வந்து உட்காருவான். செய்தித் தாளின் பக்கங்களில் ஒவ்வோர் எழுத்தையும் காட்டி அவளிடம் கேட்பான். அவள் சொன்னாலும், சொல்லிக் கொடுத்தாலும் லேசில் படிந்து சொல்ல வராது. உடல்தான் சிட்டுக் குருவி; அடங்கி அயர்ந்த அறிவு? ஒவ்வொரு சொல்லிலும், இழுத்த பாகுபோல, ஏதோ யோசனையாய், முடைந்த சிந்தனை வலைகளிலிருந்து பிரியத் தவிப்பதாய் எழுத்துக்கள் சிதறும்.

சில சமயம் அவள் அலுப்பாய்ப் புத்தகத்தைப் பெருமூச்செறிந்து மூடிவிடுவாள்.

''வேண்டாமா அம்மா?''

அபிராமி சலிப்போடு தூணில் சாய்ந்த தலையைப் பக்கத்துக்குப் பக்கம் ஆட்டிக்கொள்வாள். அவன் முகம் கவிழ்ந்து எல்லாவற்றையும் திரட்டி எடுத்துக்கொண்டு உள்ளே போவான்.

இரவு நேரம்.

பழனி தூங்கிவிட்டான். குமரு விளக்கடியில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண் டிருந்தான். அவன் காலடியில் அமர்ந்து அபிராமி தனக்குள்ளே தன் மழலையாகப் பேசியபடி தரையில் வெறும் விரலால் கோலமிட்டுக்கொண் டிருந்தாள். சட்டென்று அவள் முகம் நிமிர்ந்தது.

''உங்களை ஒன்று கேட்கப் போகிறேன்.'' குமருவின் மனம் லேசாகிவிட்டது. மணந்த நாளாய் அவள் அவனிடம் எதையும் கேட்டது அருமை. அவனும் அவள் மனமறிந்து பழகுவான். அவள் விரும்பி அவனால் அடைய முடியாதது எதுவென்று அவனுக்குத் தெரியும். இப்போது அந்த நினைவின் மூட்டந்தான் அவனுக்கு. அவள் கேட்கு முன்பே அவன் உள்ளம் பச்சாத்தாபத்தில் துவள ஆரம்பித்தது.

அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவளை ஒரு குழந்தையைப் போல அணைத்துக் கொண்டான். தன்னை எரிக்கும் வெம்மையை அந்த நெருக்கத்தின் குளுமையில்தான் அவனால் ஆற்றிக்கொள்ள முடியும். அந்தச் சமயங்களில் ஆதரவாய் முதுகில் சுருளும் அந்தக் கைகளின் பலத்தைத்தான் அவள் நாடுவாள்.

''நாலைந்து பேர் எனக்குச் சொன்னார்கள். நாம் பதரிநாத் வரை போய் வருவது நல்லதாம்.''

''அபிராமி!''

அவளுடைய அசையாத தெய்வ நம்பிக்கை அவனுக்குத் தெரியும். அதற்கு இணையான மன உறுதி அவனுக்கு இல்லை. ஆனாலும் அவன் எதையும் செய்யச் சொல்லி அவள் மனத்தைப் புண்படுத்தியதில்லை.

''போய் விட்டுத்தான் வருவோமே!''

அவன் புத்தகத்தைத் தன் மார்பின் மேல் சாத்திக் கொண்டான். காற்றில் ஏடுகள் படபடவென்று அடித்துக்கொண்டன; அவையும் ஏதோ சொல்ல முயலுவதைப் போல.

''உங்களுக்கு மனமில்லையானால் வேண்டாம்.'' அவள் முகம் குனிந்துவிட்டது. அவள் வற்புறுத்த மாட்டாள்; அவனுக்குத் தெரியும். அவன் அவள் ஏமாற்றத்தில் மனம் அழுந்த விட்டுவிட மாட்டான்; அவளுக்குத் தெரியும்.

''அப்படி இல்லை அபிராமி; போகலாம். அது கொஞ்சம் தூரப் பயணம். ஏற்பாடு செய்துகொண்டு கிளம்ப வேண்டும். ஒரு மாதத்துக்குக் குறையாமல் வீட்டை விட்டுப் போக வேண்டி இருக்கும்.''

விரலால் தரையில் எதையோ எழுதிக்கொண்டு வந்த அவள் விரல் அப்படியே தயங்கி நின்றது. பழனி? அவ்வளவு நாட்களுக்கு அவன் எங்கே இருப்பான்? என்ன சொல்லி அவனை விட்டுப் போவது? விவரம் புரிந்தால் அவன் அவர்களைப் பிரிய ஒப்புக் கொள்ளமாட்டான்.

குமரு ஒவ்வொன்றைப் பற்றியும் பேசிக்கொண்டே வந்தான். ஆனால் பழனியைப் பற்றி அவன் குறிப்பிடவில்லை. அதை ஒரு பொருட்டாக அவன் கருதவில்லையோ என்னவோ?

''இந்தப் பையன்? அவனை எங்கே விட்டுப் போவது?''

அப்போதுதான் அவள் முகத்தில் ஒளி எழுந்தது. பழனி அவளிடந்தான் ஒட்டிக் கொண்டு விட்டான். இன்னும் அவன் மனத்தில் இடம் பெறவே இல்லை. அந்தக் குடும்பத்தில் அவனைப் பொறுத்தவரை, அந்த இடம் காலியாகத்தான் இருந்தது.

''நீ அவசியம் என்று நினைத்தால், தெரிந்தவர்கள் யார் வீட்டிலாவது விட்டுப் போகலாம். அவன் செலவுக்குப் பணமும் கொடுத்து, விவரம் சொல்லிவிட்டுப் போகவேண்டும். பிறகு யோசிக்கலாம்.''

ரெயில் கிளம்பிவிட்டது.

புறப்படும்போது பழனி அவர்களைப் பார்க்கவில்லை. கொஞ்சம் முன்னதாகவே குமரு தன் நண்பர் வீட்டுக்கு அவனை அனுப்பிவிட்டான். சாமான்கள் கட்டுவதையும், அபிராமியின் புதுப் புடைவையையும் பார்த்து அவனுக்கு ஏதோ சந்தேகம்; ஆனால் அது மனக் குழப்பந்தான்; தெளிவாகப் புரியவில்லை. காலையிலிருந்து வளைய வந்தான். வாயைத் திறந்து கேட்கவில்லை; ஆனாலும் பார்வையில் ஆயிரம் கேள்விகள் குமுறின. அவனுடைய கண்ணை நேர்ப்பார்வையாக நிமிர்ந்து பார்க்கத் துணிவில்லை அபிராமிக்கு. அவனைக் குமரு அனுப்பி வைத்தபோது அவளையறியாமல், சிறுகச் சிறுகச் சேர்ந்த பிரயாண மூட்டையைப் போல அவள் மனமும் கனத்தது. வாயைத் திறந்து அவனிடம் சொல்லிக்கொள்ளத் துடித்தாள். ஆனால் அது முடியாது; அப்புறம் அவன் அவளைப் பிரிய ஒப்ப மாட்டான்.

ரெயில் ஓட்டத்தில் எதிர்த்திசையில் ஓடும் பொருள்களின் ஓட்டமாய், நினைவும் பின்னோக்கி அவனையே எண்ணி ஓடிக்கொண் டிருந்தது. இந்நேரம் அவன் எப்படித் தேடிக் கொண்டிருப்பானோ? சொல்ல வகை அறியாமல் எப்படிப் புலம்பிக்கொண் டிருப்பானோ? எண்ணங்களை ஒழுங்காகச் சொல்லில் வடிக்கக்கூடத் தெரியாதே அவனுக்கு? நெருடலான அவன் சுபாவத்தை, வளர்ச்சி அறியாத அவன் சிந்தனையின் பலவீனத்தை, அந்த வீட்டார் இதமறிந்து புரிந்து கொள்வார்களோ என்னவோ?

ரெயில் ஓட ஓட மனம் கொஞ்சம் லேசாயிற்று. பார்க்கப் போகும் புண்ணியத் தலங்களின் நினைவில், அமிழ்ந்து நீராடப் போகும் புனித நதிகளின் ஞாபகத்தில், நினைவு சிறுகச் சிறுகத் தொடர ஆரம்பித்தது. ஒரு மாதந் தானே? விரைவில் ஓடிவிடும். திரும்பிப் பார்க்குமுன் நாட்கள் நகர்ந்து விடும். திரும்பி வந்ததும் அவனை, மார்பில் முகம் புதைய எடுத்துக் கொள்வாள். தலையைத் தோளில் தாங்கியபடி, கோதித் தடவி ஆறுதல் சொல்வாள். அவன் கண்ணீர் அவள் முகத்தை நனைத்து அவளுடைய கண்ணீருடன் கலக்கும்.

தேவப் பிரயாகை வரையில் பஸ்ஸிலேயே போக முடிந்தது. அப்புறம் நடைதான். 'டோலி' வைத்துக் கொள்ளுமாறு குமரு சொல்லிப் பார்த்தான். அவள்தான் ஒப்புக்கொள்ள வில்லை. அந்த வலியிலும் சிரமத்திலும், அறியாமற் செய்த ஏதோ ஒரு குற்றத்துக்குப் பிராயச்சித்தம் தேடும் மன ஆறுதல்.

ருத்திரப் பிரயாகையில், நதிகள் கூடிக் கலக்கும் இடத்தில், நலுங்கிய நீலமும், பனிநீரின் தூய்மையும், அவள் மனத்தைக் கொள்ளை கொண்டன. கேதாரநாத் மலையிலிருந்து வரும் மந்தாகினி நதி; பதரிநாத்திலிருந்து துள்ளி ஓடி வரும் அலகநந்தா நதி; இரண்டும் கலக்கும் இடம் அது. சங்கமத்தில் இருக்கும் கோவில் அருகே பாறைகளில் அமைத்த படிக்கட்டில் அமர்ந்து, அலகாவின் பனிவெளுப்பும், மந்தாவின் மரகதப் பச்சையும் கலந்து இணையும் எழிலை வியந்தபடி இருந்தாள். ஓடும் நீரில், குளிர்ச்சியின் அடியில் இதமாய்த் தழுவும் லேசான வெம்மையை, துளைந்து அநுபவிக்கும் களிப்பையும் நெஞ்சின் துள்ளலையும் அங்கேதான் கண்டாள்.

குப்தகாசிக்குப் போன பிறகுதான், கண்ணைப் பறிக்கும் வெள்ளையாய், நிமிர்ந்து நிற்கும் பனிமலைகளின் முதற் காட்சி தெரிந்தது. நந்தி முகத்தின் வழியே கொட்டும் புண்ணிய தீர்த்தத்தில் அமிழ்ந்து நீராடியபோது, மனத்துள் ஒரு மோனமும், அபூர்வ அமைதியும் அளையும்.

இருபது மைல்களுக்கு மேல் நடை. வழியில் ஆங்காங்கே உணவுப் பண்டங்களும், நெருப்பும், தங்குவதற்குச் சாவடிகளும் கிடைக்கும் சிற்றூர்கள். கால்கள் சலித்து, மூச்சு இரைத்தாலும், கண்களுக்கு அலுப்புத் தெரியாமல் சுற்றிலும் தெரியும் இயற்கையின் கொள்ளை அழகு. கேதார்நாத்துக்கு மூன்று மைல்களுக்கு முன்பாகவே, நம்பாராவில் சாவடியில் தங்கிவிட்டார்கள், இரவுப் பொழுதைக் கழிக்க. இரவு அவள் தூங்கவே இல்லை. துருவுமணையின் அடியில் தும்பைப் பூவெனக் குவியும் தேங்காய்த் துருவலாய், கண்ணிமை மூடிய கறுப்பில் எங்கும் அந்தப் பனி வெளுப்பே தெரிந்தது.

மறுநாள் நடை அலுப்பாக இல்லை. உற்சாகத்திலும் எதிர்பார்ப்பிலும் உள்ளத்தைப் போல, நடையிலும் கால் பாவாமல் ஒரு துள்ளல். சட்டென்று நடைபாதை வளைந்து திரும்பியதும், பனிமுடிகளில் காலைக் கதிரொளியின் பொன் உருகும் காட்சி கண்களைப் பறிக்கும் விதமாகத் தெரிந்தது. ஒரு கணம் அவள் அயர்ந்து நின்றுவிட்டாள். மனத்துள் பெருகிய மோனம் விரிந்து, நெஞ்சு கரைந்து, நினைவின் அடிவாரம் அலகநந்தாவின் அலைப்புரளலாய் ஒதுங்கி, பொங்கி வடிந்து பெருகியது. கேதாரநாத் கோயிலின் முடி, பளபளக்கும் பொன்னிறக் கலசம், உள்ளத்தில் உவகையையும் அச்சம் தூண்டும் பக்தியையும் ஒருங்கே எழுப்பிற்று.

நான்கு நாட்கள் யாத்திரை செய்யவேண்டும், பதரிநாத் வந்து அடைவதற்கு.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சங்கராசாரிய சுவாமிகள் நிறுவிய கோவில். அமர்ந்து மோனத்தவம் செய்யும் நிலையில் இறைவன் திருவுருவம். பூசை செயய வாழ்நாள் முழுவதும் பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்த கேரளத்து அந்தணர்.

ஆண்டுக்கு ஆறு மாதங்கள் பனி மூடிக் கிடக்கும் கோவில் அது. ஆனாலும் பக்தர்கள் மனத்தை அந்தக் குளிர் தொட்டதில்லை. கடும்பனிச் சாரலிலும் இடைத்துணி ஒன்று மட்டும் உடுத்து இறைவனைப் பரவி அமர்ந்திருக்கும் துறவிகள். கோவில் எதிரே கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும் நீலகண்ட மலை தெரியும் காட்சி. அதன் முடியில் இதுவரை மனிதன் கால் பட்டதில்லை. பூத்துச் செறியும் நந்தன் பூங்காவிலிருந்து பூசைக்கு வந்த வண்ணமலர்கள் குவிந்து கிடக்கும் தோற்றம்.

வாழ்க்கையிலேயே இது புது அநுபவமாகத் தோன்றியது அபிராமிக்கு. உணர்ச்சிகள் நெஞ்சு கொள்ளாமல் பூத்து நின்றன. அவள் அறியாத ஒளிக்கோளங்கள் அகக் கண் கூச இழைந்து படர்ந்து நிறைந்து கவிந்தன. மனத்துள் ஏதோ ஒரு நிறைவு, தேடி அலைந்து துரத்திக்கொண்டே வந்த ஒன்றைக் கடைசியில் பிடித்துவிட்டாற் போல.

இரவில் கண் மூடிப் படுத்தபோதும், கண்ணிமைகளின் அடியில் மலரும் அந்தக் குளிர்ச்சிதான் தெரிந்தது. இமைகள் இதழ்களாக அவிழ்ந்து திறந்தன. தான் இதழ் பிரிந்தாற் போலத் தன்னுள் சூழும் ஒரு நறுமணம். நெஞ்சை ஒழித்துப் பெருக்கி வைத்தது போன்ற அமைதி. அவற்றுக்கு நடுவே அந்த முகம் தெரிந்தது. நட்சத்திரச் சிரிப்பாய் அந்தக் கண் பார்வை ஒளிவிட்டது. மார்பில் பொங்கும் உணர்வை அழைக்கும் குரல் கேட்டது.

பழனியை அவள் ஏன் தன் குழந்தையாக ஏற்றுக்கொள்ளக் கூடாது? அன்பைப் பொழிய அவள் ஏன் இப்படி இடம் தேடி அலைகிறாள்? அவனையன்றி வேறு யாரும் தனக்கு இல்லை என்று எண்ணும் அந்த அறியாப் பையனை அவள் ஏன் நினைவிலிருந்து ஒதுக்க வேண்டும்? அவளுக்கு அவன் தேவை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவனுக்கு? வாழ்க்கையில் பின்தங்கி விட்ட அந்தக் குழந்தைக்கு?

திரும்பி வந்த வழியெங்கும் அந்த நினைவுதான் உறுத்திக்கொண்டே வந்தது. காற்றிலும் மலையிலும் முகிலிலும் எதிரொலித்து அந்தக் குரல்தான் கேட்டது. இலைகள் துளித்து உதிர்த்த மோனக் கண்ணீரில் அவன் இமை அருகுதான் புலனாயிற்று.

**ஊ**ர் திரும்பி வீடுவந்து சேரச்சேர அந்த உணர்ச்சியும் சுரவேகமாய்க் கூடிக்கொண்டே போயிற்று. தாயின் மார்பில் கட்டிவிட்ட பால் போல, அவள் நெஞ்சில் கனமாய் அழுத்திக் கொண்டிருந்த பரிவை, வடிகாலாய்ப் பேச்சிலும் செயலிலும் தணித்துக் கொள்ள மனம் பறந்தது.

**வீ**ட்டுக்கு வந்து கொஞ்சநேரத்துக்குள் குமருவின் நண்பர் வந்தார். ஆனால் கூடவே பழனி வரக் காணோம். அவர் கையில் ஒரு கடித உறை இருந்தது.

''அந்தப் பையனை அவனைப் பெத்தவங்க வந்து கூட்டிக்கிட்டுப் போயிட்டாங்கப்பா. ரொம்ப சந்தோசம் அவங்களுக்கு. ஒன்கிட்ட இதைக் கொடுக்கச் சொன்னாங்க'' என்று கூறிக் குமருவிடம் அந்தக் கடித உறையை நீட்டினார். அவனுக்கு முன் அபிராமிதான் அதை வாங்கினாள்.

நெஞ்சில் 'லொட்' என்று ஏதோ ஒரு பள்ளம் விழுந்துவிட்ட உணர்ச்சி. இமயச் சிகர உயரத்திலிருந்து புல்வெளிக்கு உயரம் நழுவிச் சரிந்து விட்டது போன்ற மனநெகிழ்ச்சி. உடல் வெலவெலத்தது. உறையைக் கிழித்து, உள் காகிதத்தை எடுத்து, அதன்மேல் கண் ஓட்டுவதற்குள், காகிதம் கைக்குள் சிக்காமல் பறக்கத் தவிக்கும் பட்சியாய்க் குதித்தது.

''பழனியின் தாயார் இந்த இரண்டு ஆண்டுகளாக, அவனைப் பிரிந்து பட்ட துயரம் சொல்லி முடியாது. அந்த வேதனையே உட்புழுவாய் அவள் உடலை உலுக்க அடித்துக் கொண்டிருந்தது. மருத்துவ சிகிச்சைக்குச் சென்னை வந்தபோது தற்செயலாய்க் கடற் கரையில் சந்தித்தோம்.

''உலகம் அறியாத பையன் அவன். உணர்ந்ததைச் சொல்லத் தெரியாத குறை வளர்ச்சி. அவனை எப்படியோ காத்து வைத்திருந்து காப்பாற்றி இருக்கிறீர்கள். கை நழுவிப் போன செல்வத்தைக் குறைவின்றி மீட்டுக்கொடுத்திருக்கிறீர்கள். மகப் பேற்றுக்கு வரம் நாடித் தாங்கள் பதரி யாத்திரை போயிருப்பதாகச் சொன்னார்கள். பதரிநாராயணன் நிச்சயம் மடி நிறைய மழலைச் செல்வம் தருவான். எங்கள் குழந்தையே எங்களுக்குப் பதரி யாத்திரை போன பிறகு பிறந்த அரும் பிரசாதந்தான்.''

மேலே படிக்க முடியவில்லை. நெற்றிப் பொட்டில் பச்சை நரம்புகள் புடைத்தன. பொங்கி வந்த கண் உருகலை மறைக்க இமைகளை இறுக மூடிக் கொண்டாள். பனிமலையின் அருவியாய் ஒரு பேரொலி பொங்கி எழுந்து அவள்மேல் இறங்கிற்று. படிப்படியாய்க் குதித்துச் சிதறி மெல்ல மெல்ல அடங்கி, மௌன நீர்ப்பரப்பாய் அகன்று அடங்கிற்று. அந்த நிறைவில் அவள் மார்பினுள்ளிருந்து ஒரு குழந்தையின் மழலைக் குரல் அழைத்தது.

அந்த உள்ளொளி படர, திடீரென அழகிட்டு நின்ற அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டு அதிசயித்து நின்றான் குமரு. ★



எந்தக் கை வாட்டம்?

இடது கையா? வலது கையா?
எப்படி இருந்தாலும் சரி,
நல்ல மணமுள்ள சுவை மிக்க காபியை
நிச்சயம் விரும்புவீர்கள்.
என்ன தெம்பு! என்ன திருப்தி!

எந்த இடத்திலும்...எந்த வேளையிலும்...காபி அளிக்கும் நிறைவே நிறைவு

காபி போர்டு • பெங்களூர்

FDSCB843TM A

எமது நண்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சேமிப்பாளர்களுக்கும் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்





இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

மத்திய அலுவலகம்: 151, மௌண்ட் ரோடு, சென்னை-2
R. N. செட்டூர், சேர்மன். A. M. கதிரேசன், ஜெனரல் மானேஜர்.

IOB-4768



1968

கலைமகள்— தீபாவளி மலர் ‘நன்ருய்ப் பழகியபின் நாணம் எதற்கோ?’ ஓவியர்: ஜி. என். ஜாதவ்




"பிரதர்! இந்தக் காலனிக்குப் பெயர் 'இந்திரா நகர்' என்று பலகையில் போட்டிருக்கிறதே. 'ஸாம் பாரா, மோர்க் குழம்பா!' என்ற திரைப்படப் புகழ் இந்திராவா?" என்று டாக்ஸியின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்த பிரயாணி டிரைவரைக் கேட்டார்.

வண்டி அடையாற்றைத் தாண்டி, திருவான்மியூர் எல்லைப் பக்கம் சென்று கொண்டிருந்தது.

டிரைவர் புன்னகை புரிந்து, "இல்லை, நம் பிரதம மந்திரி இந்திரா காந்தியின் பெயர்" என்று தெரிவித்தார்.

வண்டி மேலும் சிறிது தூரம் சென்றதும் டிரைவர் தம் ஒரு கையை வெளியே நீட்டிக் காட்டி, "அதோ இருக்கிறது, சாஸ்திரி நகர். அதற்கு லால்பஹதூர் சாஸ்திரியின் பெயர் வைத்திருக்கிறது" என்றார்.

இந்தப் பெயர் பிரயாணியின் காதில் விழுந்த மாத்திரத்தில் ஆசனத்தில் சாய்ந்தவண்ணம் இருந்த அவரது உடல் நிமிர்ந்தது; துவளத் தொங்கிக் கொண்டிருந்த அவருடைய கைகள் விறைப்பாக உடலை ஒட்டிக் கொண்டன; கால்கள் இரண்டும் சேர்ந்து கொண்டன; வலக் கை நெற்றிக்குப் போய் 'ஸல்யூட்' அடித்தது.

இதைக் கவனித்த டிரைவர், 'இராணுவப் பழக்கம். மரியாதை செலுத்துகிறார்!' என்று எண்ணினார்.

"சாஸ்திரிஜி எங்கள் முகாமுக்கு வந்திருந்தபோது என் உடல்நலனைப் பற்றி விசாரித்தார்" என்று பிரயாணி பெருமையாகக் கூறினார்.

வண்டி போய்க்கொண்டிருந்தது.

"உங்கள் வீட்டுக்கு எப்படிப் போக வேண்டும்?" என்று டிரைவர் விசாரித்தார்.

"இந்தப் புது நகர்கள் ஏற்பட்டிருப்பதனால் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அது சின்ன மாடி வீடு. தோட்டத்தில் இரண்டு மூன்று மாமரங்கள் உண்டு. இந்திரா நகருக்குப் பின் பக்கமாக ஓட்டுங்கள்" என்றார் பிரயாணி.

கடைசியில் வீட்டைக் கண்டு பிடித்து விட்டார்கள். டிரைவர் வண்டியை நிறுத்தி, டிக்கியிலிருந்து இரண்டு பெட்டிகளை வெளியே எடுத்து வைத்தார். பெட்டிகளின்மீது.

'டி. வரதன், லான்ஸ் நாயக்.
— 78-ஆவது ரெஜிமென்ட்'

என்று வெள்ளைப் 'பெயின்ட்'டில் பொறித்திருந்தது.

வண்டி நின்ற சத்தம் கேட்டு வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு ஒருவர் வெளியே வந்தார்.

அவர் வரதனைக் கண்டு ஆச்சரியப்பட்டவராய், "யாரு தம்பியா? வா! சௌக்கியமா? வரதாகக் கடிதமே போடவில்லையே!" என்றார்.

"திடீர் என்று கிளம்பிவிட்டேன், மாமா. நீங்கள் சௌக்கியந்தானே?" என்று வரதன் அவருக்குப் பதில் கூறிக்கொண்டே ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து டாக்ஸி டிரைவரிடம் கொடுத்தார். "பாக்கி தர வேண்டியதில்லை" என்று கூறி வரதன் அவரை அனுப்பிவிட்டார்.

பிறகு மாமனும் மருமகனுமாகப் பெட்டி படுக்கைகளை உள்ளே எடுத்துக் கொண்டு போனார்கள். மாமன் சமையலறைக்குச் சென்று காபி கொண்டு வந்தார்.

"இன்னும் ஆள் வைத்துக்கொள்ளவில்லையா? நீங்களேதான் சமைத்துச் சாப்பிடுகிறீர்களா?" என்று வரதன் கேட்டார்.

"ஆமாம். நான் ஒண்டிக்கட்டை. எதற்காக ஆள்? சமைக்கத் தள்ளாமற் போனால் ஹோட்டலில் சாப்பிட்டு விடுகிறேன்" என்றார்.

"ஆனால் நான் ஒருத்தன் இப்போது வந்திருக்கிறேனே; இனிமேல் அநேகமாக இங்கேயே தங்கியிருப்பேன்."

"நான் எப்படியும் உனக்குப் பெண் பார்க்கப் போகிறேன். நீ இப்போது லீவில் வந்திருக்கிறாயா?" என்று மாமன் கேட்டார்.

"இல்லை. நான் தரைப் படையில் சேர்ந்தது உங்களுக்குத் தெரியுமே. அதில் சேர்ந்தவர்கள் முதலில் எட்டு வருஷம் யுத்த களச் சேவை செய்ய வேண்டும். பிறகு ஏழு வருஷ காலம் 'ரிஸர்வ்' ஆக இருக்க வேண்டும். அந்த ஏழு வருஷ காலத்துக்குள் எப்போது யுத்த களச் சேவை செய்யக் கூப்பிட்டாலும் போகத் தயாராக இருக்கவேண்டும். நான் சென்ற எட்டு



வருஷத்தில் சீனச் சண்டை, பாகிஸ்தான் சண்டை இரண்டிலும் ஈடுபட்டிருந்திருந்தேன். இன்னும் ஏழு வருஷம் 'ரிஸர்'வில் இருப்பேன்'' என்று வரதன் தம்மைப் பற்றி விவரமாகத் தெரிவித்தார்.

இருவரும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பிறகு, வரதன் தம் பெட்டி படுக்கையை மாடியறைக்கு எடுத்துச் சென்றார்.

அந்த வீடு பழைய காலத்து வீடு. அதன் பக்கத்தில் இருந்த நிலத்தை 'இந்திரா நகர்' காலனி அமைப்பதற்காக வாங்கிவிட்டார்கள்.

வரதன் மாடி அறையின் ஜன்னல் கதவுகளைத் திறந்து வெளியே பார்த்தார். பக்கத்தில், மேல் மாடி கப்பல் தளம்போல் அமைத்திருந்த ஒரு சிறிய நவீன பங்களா இருந்தது. அதைச் சுற்றியுள்ள தோட்டத்தில் பல வண்ணப் புஷ்பச் செடிகள்.

பிறகு, அவர் ஜன்னல் பக்கத்திலிருந்து திரும்பி வந்து பெட்டிகளைத் திறந்தார். அஸ்ஸாம், காச்மீரம், பஞ்சாப் முதலிய பிரதேசங்களிலிருந்து தாம் வாங்கி வந்த சில அபூர்வப் பொருள்களை வெளியில் எடுத்து வைத்தார். தண்ணீர்ப் பாட்டில், முதுகுப்பை முதலியவற்றை எடுத்து ஆணிகளில் மாட்டினார்.

அவர் மிக்க பெருமையுடன் ஒரு புகைப் படத்தை எடுத்தார். அது அவர் ரெஜிமென்ட் சம்பந்தமான படம். அதை எடுத்துச் சுவரில் ஓர் ஆணியில் மாட்டினார். ஒரு ஸெட் இராணுவ உடைகளைக் 'கோட் ஸ்டான்ட்'மீது போட்டார்.

அன்று மாலை அவர் இராணுவ உடையை உடுத்துக் கொண்டு வெளியே கிளம்பிச் சென்றார். அவர் சட்டையின் தோளில் லான்ஸ் நாயக் பதவியைக் குறிப்பிடும் ஒரே ஒரு 'ஷெவ்ரான்' அடையாளம் இருந்தது. மூன்று 'ஷெவ்ரான்' உள்ள உடை அணிந்துகொள்ளக்கூடிய ஹவில்தார் பதவி கிடைக்கவில்லையே என்ற குறை அவருக்கு உண்டு.

அவர் தமது ராணுவ பூட்ஸின் சப்தம் 'டாக்' 'டாக்' என்று ஒலிக்கத் தெருக்களில் கம்பீரமாக நடந்து சென்றார். இராணுவ வீரரான தம்மைப் பலர் கவனித்திருப்பார்கள் என்று அவர் எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால், ஜனங்கள் யாரும் அவரை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

அவர் முதல் தர ஹோட்டலுக்குச் சென்று காபி சாப்பிட்டார். அங்கேயும் யாரும் அவரை அதிகம் கவனிக்கவில்லை. சிலர் அயல் நாட்டானைப் பார்ப்பதுபோல் பார்த்தனர். இராணுவத்தினருடன் மற்றவர்கள் சகஜமாகப் பழகுவதில்லை என்று அவருக்குத் தோன்றிற்று. அவர் உற்சாகமிழந்தவராய் வீடு திரும்பினார்.

மறுநாள் அவர் வெளியில் சென்றபோது ஒரு ஸினிமாக் கொட்டகை வாசலில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர். விசாரித்ததில் 'ஜூடோ' சண்டைத் திலகம் பீமகுமார் அன்று மேடைமீது பிரசன்னமாகப் போகிறார் என்று தெரிய வந்தது. இந்த ஸ்டுடியோ யுத்த நடிகருக்கு இவ்வளவு வரவேற்பு அளிப்பதென்றால், யுத்த களத்தில் பனி நிறைந்த மலைப் பிராந்தியங்களிலும் காட்டிலும் மழை பனி குளிர் காற்று எதையும் லட்சியம் செய்யாமல் பலசாலிகளும் முரடர்களுமான எதிரிகளுடனும், குண்டுகளையும் நெருப்பையும் கக்கும் நவீனப் போர்க் கருவிகளுடனும் போராடி வெற்றி பெறும் ராணுவ வீரர்களுக்கு எத்தகைய மகத்தான வரவேற்பளிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி அவர் மனம் கற்பனை செய்து பார்த்தது.

மறுநாள் வரதன் வெளியே போகவில்லை. பரங்கிமலைப் பக்கம் சென்றால் ராணுவத்தினரைச் சந்தித்துப் பழகலாம் என்று அவருக்குத் தோன்றிற்று. ஆனால் சிறிது காலம் இராணுவ வாசனையே அடிக்காமல் காலங் கழிக்க வேண்டுமென்றும் விரும்பினார். அன்று இரவு வெகு நேரம் படித்துவிட்டுப் படுத்துக்கொண்டார்.

காலையில் அவர் எட்டு மணிக்குத்தான் விழித்துக்கொண்டார். படுக்கையினின்றும் எழுந்து சென்று, காற்றினால் மூடிக்கொண்ட ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டு, வழக்கம்போல் பக்கத்து வீட்டுத் தோட்டத்தைப் பார்த்தார். அங்கே, அவருக்கு ஓர் ஆனந்தக் காட்சி காத்திருந்தது.

பூச்செடிகளுக்கு நடுவில் சிறிய குழந்தை நின்றுகொண்டிருந்தது. அதன் கைகால்கள் கரணை கரணையாகக் கடைந்தெடுத்தவைபோல் இருந்தன. தலையில் கன்னங் கறேலென்று சுருட்டைத் தலை மயிர். இடுப்பில் 'ஜட்டி' தரித்திருந்தது. உடலில் சட்டை இல்லை. ஜன்னல் கதவுகளைத் திறந்த சப்தத்தைக் கேட்டு அது திரும்பிப் பார்த்தது.

குழந்தை தன் தலையை ஆட்டியது. வரதனும் தம் தலையை அதே மாதிரி ஆட்டினார். அதைப் பார்த்துக் குழந்தை வாய் விட்டுச் சிரித்தது.

அப்போது, ''சரோஜா, எங்கே இருக்கே?'' என்று ஓர் இனிமையான குரல் விசாரித்தது.

''அம்மா'' என்று சொல்லிக்கொண்டே குழந்தை தன் தாயின் குரல் வந்த பக்கம் தத்தக்கா பித்தக்கா என்று நடந்து சென்றது. சற்றுத் தூரம் சென்றதும் அது ஜன்னல் பக்கம் திரும்பிப் பார்த்தது. அதையே விழுங்கி விடுபவர் போல் கவனித்துக்



கொண்டிருந்த வரதன் ''போ போ!'' என்று கைகளால் ஜாடை காண்பித்தார். குழந்தை சிரித்துவிட்டு வேகமாக நடக்கத் தொடங்கியது. அப்போது அதன் காலில் ஒரு செடி தடுக்கி அது கீழே விழுந்துவிட்டது. அதைக் கண்ட வரதன் தவித்துப் போனார்.

குழந்தை சமாளித்துக் கொண்டு எழுந்து போய்விட்டது. அது உடனே திரும்பி வராது என்று வரதன் ஊகித்துக்கொண்டு தாமும் தம் காரியங்களைக் கவனிக்கச் சென்றார்.

அவரால் அந்தக் குழந்தையை மறக்கவே முடியவில்லை. ''சரோஜா என்று பெயர்? ரோஜா என்றாலே பொருத்தமா யிருக்கும்!'' என்று தமக்குள் கூறிக்கொண்டார்.

அவளைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும், விளையாடிக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். மாடி அறையில் இருக்கும் போதெல்லாம் அடிக்கடி ஜன்னல் பக்கம் சென்று சரோஜா வந்திருக்கிறாளா என்று பார்ப்பார். மாலை நான்கு மணி சுமாருக்குச் சரோஜா ஆஜரானாள். மாலையில் நின்றிருந்த இடத்திலேயே நின்றிருந்தாள்.

அப்போது வரதன் இராணுவ உடை அணிந்திருந்தார். குழந்தை பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான். சரோஜா ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தாள்.

வரதன் இராணுவ பாணியில் நின்று ஒரு ஸல்யூட் அடித்தார். சரோஜாவும் கிட்டத்தட்ட அது மாதிரியே செய்தாள். அவர் டக் டக்கென்று இப்படியும் அப்படியுமாக 'மார்ச்' செய்தார். சரோஜா ஓட்டமாக ஓடிப் போய்விட்டுத் திரும்பி வந்தாள்.

அப்போது அங்கே இன்னொரு குழந்தை வரவே சரோஜா அதனுடன் விளையாடப் போய்விட்டாள்.

அன்று மாலை வரதன் சென்னையிலுள்ள குழந்தைகள் பொம்மைக் கடைக்குச் சென்று பலவிதப் பொம்மைகள் வாங்கினார். அவை எல்லாம் பெரும்பாலும் இராணுவ சம்பந்தப் பட்டவையாக இருந்தன. விமானம், பீரங்கி, டாங்கி, கப்பல் முதலிய பொம்மைகள்.

மறுநாள் காலை அவர் விரும்பியது போல, சரோஜா காலை எட்டு மணி சுமாருக்கு அவள் வீட்டுத் தோட்டத்தில், முதல் நாள் நின்றுகொண்டிருந்த இடத்திலேயே நின்றிருந்தாள். வரதனைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

வரதன் பீரங்கிப் பொம்மையை



எடுத்துக் காட்டினர். அதைச் சுடுவது போலப் பாவனைசெய்து 'பூம், பூம்! பூம்!' என்று சப்தமிட்டார். அதைக் கேட்டுச் சரோஜா சிரித்தாள். பிறகு விமான எதிர்ப்புப் பீரங்கியால் சுடுவதுபோல் காட்டி, 'அக், அக், அக்' என்று சப்தமிட்டார். பிறகு விமானம் பறக்கும் சப்தம்.

வரதன் செய்த இந்த வேடிக்கை விளையாட்டுக்களைப் பார்த்துச் சரோஜா கைகொட்டிச் சிரித்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் தன் தாயார் கூப்பிடவே அவள் 'போய் விட்டு வறேன்' என்று சொல்வதற்குப் பதிலாகத் தலையை ஆட்டிவிட்டுச் சென்றாள்.

மறுபடியும் மாலை நாலு மணிக்கு அவள் வந்துவிட்டாள். வரதன் அவளுக்காகப் புதுப் புது விளையாட்டுக்களை யோசனை செய்து வைக்க வேண்டியதாயிற்று. ஆனால் எந்த விளையாட்டும் ராணுவ சம்பந்தப்பட்டதாகவே இருக்கும்.

சரோஜாவுக்கும் அவருக்குமிடையே ஏற்பட்டிருந்த பாசம் நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது. அவர் அவளைக் காணும்போதெல்லாம் புளகாங்கித மடைவார். குழந்தையும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டது.

வரதன் அவளுக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க விரும்பினர். அவளை வாரி எடுத்துக் கொஞ்ச ஆசைப்பட்டார். ஆனால், அப்படி ஏதாவது செய்ய முயன்றால் அவளை மாடி அறை ஜன்னலுக்கு அப்பாலிருந்து பார்த்து மகிழும் பாக்கியத்தையும் இழந்துவிட நேருமோ என்று பயந்து பேசாதிருந்தார்.

பக்கத்து வீட்டுக்காரர்களைப்பற்றி வரதன் தம் மாமனை விசாரித்தார். அந்த வீட்டுக்காரர் பெரிய வியாபாரி என்றும், அவர் பெண் தன் குழந்தையுடன் வெளியூரிலிருந்து வந்திருக்கிறுளென்றும் தெரிவித்தார்.

அவர் சரோஜாவைச் சிநேகிதம் பிடித்து ஒரு வாரமாகியிருக்கும். ஒரு நாள் அவர் குழந்தையைப் போட்டோ பிடிப்பதற்காக ஒரு காமிராவுடன் வந்து நின்றார். அப்போது 'சரோஜா' என்று கூப்பிட்டுக்கொண்டே அவள் தாய் வருவது தெரிந்தது. ஆனல் அந்த அம்மாள் இன்னும் கண்ணில் படவில்லை. அவருக்குச் சரோஜாவின் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. ஆனல் அப்படிச் செய்யவும் தயங்கினர். தவிர, தாம் காமிராவும் கையுமாக நிற்பதைப் பார்த்து மற்றவர்கள் தப்பபிப்பிராயப்படக் கூடும் என்றும் பயந்தவராய், பின்புறமாக நகர்ந்தவண்ணம் அப்பால் சென்று விட்டார்.

''என்ன பார்க்கிறே அங்கே?'' என்று சரோஜாவை அவள் தாய் விசாரித்தாள். ''பூம் பூம் மாமா! அக் அக் மாமா!'' என்று குழந்தை சொல்லிக்கொண்டே போனுள்.

தாயாருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் அவள் அந்தச் சிறிய மாடி வீட்டிலுள்ள ஜவானைப் பற்றிக் கூறுகிறுள் என்று ஊகித்துக்கொண்டாள். அந்த வீட்டில் இராணுவ வீரர் ஒருவர் வந்திருப்பதாக அவள் தந்தை சொல்லக் கேள்வியுற்றிருந்தாள்.

''வா! இன்றைக்கு ஊருக்குப் போகணும்!'' என்றாள் தாயார்.

''மாமா!'' என்றது குழந்தை.

''சாயங்காலம் பார்க்கலாம்!'' என்று தாயார் கூறி அவளைத் தூக்கிக்கொண்டு சென்றாள்.

அன்று ஊருக்குப் போக வேண்டும் என்று குழந்தையின் தாயார் கூறியது வரதனின் காதில் இலேசாக விழுந்தது. குழந்தை ஊருக்குப் போய் விட்டால் பிறகு தமது வாழ்க்கை வீணகப் போய்விடுமென்று மனம் கலங்கினர்.

மாலை ஐந்து மணி சுமாருக்குச் சரோஜா வீட்டுப் பங்களா வாசலில் மோட்டார் வந்து நின்றது. ஒரு வேலையாள் பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்தான். சில நிமிஷங்களுக்கெல்லாம் சரோஜாவும் அவள் தாயாரும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள்.

வண்டி வரதன் வீட்டு வாசல் வழியாகத்தான் போக வேண்டும். சரோஜாவுக்காக இராணுவ உடை தரித்துக் கொண்டிருந்த வரதன், அத்துடனேயே விரைவாகக் கீழிறங்கி வந்தார். மோட்டார் வண்டியை எதிர் பார்த்து நின்றிருந்தார்.

வண்டி சற்றுத் தூரத்தில் வரும்போதே சரோஜா அவரைப் பார்த்து விட்டாள். ''மாமா!'' என்று கைகளைக் கொட்டிக்கொண்டு கூத்தாடினுள். அவள் ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி வரதனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

சரோஜாவின் தாயார் வண்டியைப் பக்கத்து வீட்டு வாசலில் நிறுத்தச் செய்தாள். வரதன் அவளைப் பார்த்துக் கும்பிடு போட்டார்.

''மாமாவைத் தொட்டுப் பார்க்கணும்!'' என்றாள் குழந்தை.

''ஊம்!'' என்றாள் தாயார். அந்த அம்மாள் குழந்தையை உரித்து வைத்தது போலிருந்தாள். சரோஜா வரதனைத் தன் சின்னஞ்சிறு தளிர்க் கரங்களால் தொட்டுப் பார்த்துச் சிரித்தது.

''இவர் ஸோல்ஜர் மாமா! இவர் தான் நம்மை எல்லாம் காப்பாற்றுகிறவர். மாமாவுக்கு 'டாட்டா' சொல்லு!'' என்றாள் தாயார்.

சரோஜா தன் இரு கைகளையும் வெளியில் நீட்டி வரதன் கழுத்தைக் கட்டிக் கொண்டது.

''டாட்டா, மாமா! பூம் பூம் மாமா!'' என்றது.

வரதன் அதன் பட்டுக் கன்னங்களைத் தம் முரட்டுக் கையால் மெதுவாகத் தொட்ட மறுகணம் வண்டி புறப்பட்டது.

வரதன் சில நிமிஷங்கள் வண்டி செல்வதைப் பார்த்துக்கொண் டிருந்தார். அவர் கால்கள் வீட்டுக்குள் திரும்பிப் போக மறுத்தன. அப்போது அவர் மாமா கூப்பிடவே உள்ளே சென்றார்.

அவர் தமது மாடி அறைக்குச் சென்று ஜன்னல் பக்கம் பைத்தியம் பிடித்தவர் போல் நின்றிருந்தார். அவர் கண்கள் சரோஜா நிற்கும் இடத்தையே உற்று நோக்கின.

அவர் பிறகு ஜன்னல் கதவை இறுகச் சாத்தினர். சாப்பிட்டதாகப் பெயர் பண்ணிவிட்டுப் படுக்கையில் படுத்தார். டிரான்ஸிஸ்டரை எடுத்து வைத்துக்கொண்டு இரவு செய்தி அறிக்கையைக் கேட்டார். செய்தி அவரைப் படுக்கையினின்றும் எழுந்து உட்காரச் செய்தது.

''முக்கியமான அறிவிப்பு! எந்தச் சமயத்திலும் யுத்தம் ஆரம்பிக்கக் கூடிய நிலைமை திடீரென்று ஏற்பட்டிருப்பதனல் விடுமுறை எடுத்துக் கொண்டுள்ள இராணுவத்தினரும் ரிஸர்வ் இராணுவத்தினரும் இருபத்திரண்டு மணி நேரத்துக்குள் தங்களுக்குச் சமீபத்திலுள்ள இராணுவ முகாமில் 'ரிப்போர்ட்' செய்து கொள்ள வேண்டும்.''

இந்தச் செய்தி இன்னொரு முறை சொல்லப்பட்டது. இதைக் கேட்டு வரதன் பெருமகிழ்ச்சி யடைந்தார். மனத்தில் இருந்த பெரிய பாரம் குறைந்ததுபோல் அப்படியே தூங்கிப் போய்விட்டார்.

கனவில் குழந்தை சரோஜாவுடன் அவர் ஓயாமல் விளையாடிக்கொண் டிருந்தார். அப்பொழுது நடுவே நடுவே, ''இவர்தாம் ஸோல்ஜர் மாமா. நம்மை எல்லாம் காப்பாற்றுகிறவர்!'' என்ற வார்த்தைகள் அவர் காதில் கேட்டன.

**வி**டியற்காலையிலேயே எழுந்து, தம் மாமனிடம் ரேடியோவில் கேட்ட தகவலைச் சொல்லிவிட்டு, வரதன் இராணுவ முகாமுக்குப் போகத் தம்மைத் தயார் செய்துகொண்டார். காலை எட்டு மணிக்கெல்லாம் தம் மாமனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

தெருக்களில் செல்லும்போது அவர் கம்பீரமாக டாக் டாக் என்று தலை நிமிர்ந்து விறைப்பாக நடந்து சென்றார். அவரைப்பற்றிய வரையில் யுத்தகளம் அங்கேயே ஆரம்பமாகி விட்டது.

இப்போது தெருக்களில், கடை கண்ணிகளில் உள்ளவர்கள் எல்லாரும் அவரைக் கவனித்துப் பார்த்தார்கள். பஸ்களில் மோட்டார் வண்டிகளில் செல்பவர்கள் வெளியே தலையை நீட்டி அவரைப் பார்த்தார்கள்.

ஐம்பத்திரண்டு கோடி மக்களின் மானத்தை, உயிர்களை, சொத்துக்களைப் பாதுகாக்கப் போகும் ஓர் இராணுவ வீரராகத் தம்மை எண்ணிக் கொண்டு வீறு நடை போட்டு அவர் நடந்து சென்றார்.

வழியில் ஒரு டாக்ஸி வண்டிக்காரர் தாமாகவே வரதனை வண்டியில் ஏறிக் கொள்ளச் சொன்னர். வண்டி புறப்பட்டது.

மறுபடியும் வரதன் ஒரு டாக்ஸியில் திரும்பி வீட்டுக்கு வருவாரா? அதைப்பற்றி அவர் மாமன் கவலைப் படுவார்; குழந்தை சரோஜா கவலைப் படலாம்.

மற்றவர்களுக்கு அவரைப் பற்றிக் கவலைப்பட நேரம் ஏது? கேவலம் இராணுவத்தினர்தாமே? ★



# என்றும் இன்பமே!

எல்லார்வி



'அன்புள்ள....

என்ன முறைவைத்து எழுதுவதென்றே புரியவில்லை. சுற்றமே வேண்டாம் என்று நீங்கள் எல்லாரையும் உதறிவிட்டாலும், முக்கியமாக என்னைப் புறக்கணித்து அடியோடு மறந்துவிட்டாலும் என்னுல் உங்களை மறக்க முடியவில்லை.

நான் உங்களை நோக்கி ஆசையோடு கைநீட்டினேன். நீங்கள் அதைப் பற்றவில்லை. நீங்கள் நிராகரித்த அந்தக் கரத்தை இன்னெருவர் பற்றுகிற வேளையிலாவது நேரில் வந்திருந்து ஆசி கூறுங்கள். வணக்கம். நீலா.'

நீண்ட பெருமூச்சுடன் கடிதத்தை மடித்துப் பைக்குள் வைத்துக்கொண்ட ரகுராமன் அழைப்பிதழைப் பிரித்தான். எங்கிருந்தோ கடிகார ஒலி கேட்டது. பரபரப்புடன் அறையைப் பூட்டிக்கொண்டு கிளம்பினன்.

அலுவலகத்தில் வேலையே ஓடவில்லை. மாமாவை நினைத்தால் போக வேண்டாம் என்று இருந்தது. நீலாவின் வேண்டுகோள் நெஞ்சத்தை நெகிழ வைத்தது. முடிவில், 'போய்த் தலை காட்டிவிட்டு வருவது' என்று உறுதி கொண்டான்.

மாலையில் திரும்புகிறபோது அழகான வெள்ளிக் குத்துவிளக்கு ஒன்றை வாங்கினன். பெயர் பொறிக்கும் கடைக்குச் சென்று, தம்பதிகள் இருவர் பெயரையும் பொறிக்கும் நோக்கத்துடன் அழைப்பிதழைத் தேடினன். சட்டைப் பையிலும் இல்லை; கைப்பையிலும் காணவில்லை. மணமகன் பெயரும் நினைவில் இல்லை. நீலாவின் பெயரை மட்டும் பொறிக்கச் செய்தான்.

கடைசி நிமிஷம் வரையில் போவோமா வேண்டாமா என்று குழம்பிக் குழம்பித் தவித்தவன் முடிவில் கிளம்பிவிட்டான். ஓடிக்கொண்டிருந்த ரெயிலில் உறக்கமின்றி உட்கார்ந்திருந்த ரகுராமனுக்குப் பழைய நினைவுகள் வந்தன.

வியாபாரத்தில் புதுப் பணமும் செல்வாக்கும் பெற்ற அருணுசலம் ஹோதாவோடு வாழ்ந்து வந்தார். அவருடைய சகோதரியின் ஒரே புதல்வன் ரகுராமன். உயர்நிலைப் படிப்புக்காகக் கிராமத்திலிருந்து வந்து அவர் இல்லத்தில் இருந்து வந்தான். அழகன், படிப்பிலே படுசுட்டி.

அருணுசலத்தின் ஒரே செல்வி நீலா எழிலும் அறிவும் நிறைந்து விளங்கினுள். ரகுவைத் தன் உயிர்நிலையாகப் பாவித்தாள்.

அவ்வூர்ப் படிப்பு முடிந்து, மேல் படிப்புக்காக ரகு பட்டணத்துக்குக் கிளம்பினன். நீலா அவனைச் சுற்றிச் சுற்றி வந்தாள். ரகு அவள் மன நிலையை ஒருவாறு உணர்ந்தே இருந்தான். ஆனல் அவனுக்கு அவளிடம் சகோதர பாசந்தான் நிறைந்திருந்தது.

ஊரகத்தில் பெயர் போன அருணுசலம் மகளின் மனநிலையைப் புரிந்துகொண்டார். 'நம் வீட்டுப் புழைக் கடைப் பச்சிலைதானே? தேவையான போது பயன்படுத்திக் கொண்டால் போகிறது' என்பதுபோல் நடந்து கொண்டார். பணம் படைத்த திமிர் காரணமாகத் தன்னை விலைக்கு வாங்கிவிட்டது போன்ற மனேபாவத்துடன் மாமா நடந்துகொள்ளும் முறை அவன் நெஞ்சில் வேதனையைப் பெய்தது. நன்றிக் கடனின் நினைவு குறுக்கிட்டு வெறுப்புணர்ச்சிக்கு அணை கோலிற்று.

''அத்தான், நீ மளமளவென்று படித்து முன்னேறுவாய்; பெரிய உத்தியோகமும் கிடைக்கும். என்னை மறந்துவிடுவாய்!''

ரகு சாகசமாகச் சிரித்தான். ''அசட்டுப் பிசட்டென்று உளறுதே நீலா'' என்றுன் அன்பாக.

''அசடா நான்? உளறலா இது?''

''பின்னே என்ன? அத்தை பிள்ளை, மாமா பெண் என்ற உறவெல்லாம் மறக்கக் கூடியவையா?''

''ஹூம். இவ்வளவுதானு நீ? எங்கே என்னை மறக்க மாட்டேன் என்று கையடித்துக் கொடு!''

அவள் அவனை நோக்கிக் கையை நீட்டினுள். அவன் சிரித்துக்கொண்டே அப்பால் சென்றுன். அவள் உள்ளம் வேதனையுற்றது.

பட்டணம் சென்ற ரகு படித்தான், பட்டம் பெற்றுன், உத்தியோகத்தில் அமர்ந்தான். அடிக்கடி பெற்ருேரைக் காண வந்து சென்றுன். ஒரு முறை கூட மாமனின் இல்லத்துக்குச் செல்லவில்லை.

நீலா மடமடவென்று வளர்ந்தாள். அருணுசலம் விரிவான திட்டத்தில் திருமணம் நிகழ்த்த முனைந்தார். நீலா தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படையாகவே தகப்பனுக்கு உணர்த்தினுள். அவர் தம் சகோதரியையும் அவள் கணவரையும் அணுகினர். பேச்சு வந்த சமயத்தில் ரகு தன் மறுப்பைப் பெற்ருேர்களிடம் தெரிவித்திருந்ததனல் அவர்கள் பிடி கொடுக்கவில்லை. ''எல்லாம் அவன் பாடு'' என்ருர்கள்.

அருணுசலத்துக்கு அப்பொழுதே கோபம் வந்துவிட்டது. ஆனலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அதே பிரயாணம் சென்னை சென்ருர். ரகுராமனை நேரில் சந்தித்தார். அவன் மிக்க மரியாதையுடன், நயமாகத் தன் மறுப்பைத் தெரிவித்தான். ''சீ! அற்பப் பதரே!'' என்று சீறினர் அருணுசலம். இன்னும் என்ன என்னவோ வாய்க்கு வந்தபடி எல்லாம் ஏசிப் பேசினர். ரகுராமன் வாயே திறக்கவில்லை.

கோடை விடுமுறைக்கு ரகு ஊருக்கு வந்தான். பெற்ருேர் அவனுக்கு அடுத்த ஊரில் பெண் பேசியிருந்தனர். எல்லாரும் பெண்ணைப் பார்த்துவரச் சொன்னுர்கள்.

பெண்ணின் பெயரே ரகுவுக்கு இனித்தது: பாரதி. தோற்றத்திலும் அவள் சிறப்புடையவளாக இருந்தாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன் பட்டணத்தில் ஒரு கண்காட்சியில், பெண்கள் சிலர் நடுவே அவளைப் பார்த்தது ரகுவுக்குப் பசுமையாக நினைவிருந்தது. அப்பொழுது அவள் ஒரு முறை கலகலவென்று சிரித்தாள். அதே பெண் இப்போது அவன் எதிரே வந்து வணங்கினுள். அவன் மனம் பூரித்தது.

'இனி நமக்கொரு கவலையும் இல்லை; என்றும் இன்பமே!'

எல்லாரும் விடைபெற்றுப் புறப்பட்டனர். வண்டியில் ஏறுகிறபோது தற்செயலாகத் திரும்பினன் ரகு. காமிரா உள் சன்னலருகில் பாரதியின் முகம் தெரிந்தது; கவர்ச்சிமிக்க கயல்

விழிகள் அவன் மதியைக் கிறங்க வைத்தன.

இருப்பிடம் திரும்பியபின் எல்லாரும் நல்ல முடிவுக்கு வந்து தங்கள் சம்மதத்தைப் பெண் வீட்டாருக்கு அறிவிக்கத் தீர்மானித்தனர்.

அந்த நிலையில் அருணாசலம் ஜாம் ஜாம் என்று வில்வண்டியில் வந்து இறங்கினார். தம் பெண் நீலாவுக்குப் பெரிய இடத்தில் மணம் பேசியிருக்கும் பிரதாபங்களை அளந்தார். பிறகு ரகுவின் திருமண முயற்சிபற்றிப் பரிவோடு வினவினார். அனைத்தையும் அறிந்தார். பிறகு இடி இடி என்று சிரித்தார். பிறகு தம் தமக்கை கணவரிடம் இரகசியமாக என்னவோ சொன்னார்.

''ஆ, என்னையா? என்னைப்பற்றியா அந்தப் பரதைப் பயல் அவ்வாறு சொன்னான்? இவன் பெண் தரா விட்டால் என் பிள்ளை அப்படியே பிரம்மசாரியாக நின்றுவிடுவானோ? நாளைக்கே நல்ல இடம் ஒன்றில் சம்பந்தம் செய்து காட்டுகிறேன் இவனுக்கு! இனி இவன் தலைகீழாக நின்று தவம் செய்தாலும் இவன் பெண்ணைக் கொள்வதில்லை!'' என்று கூச்சல் போட்டார் ரகுவின் தந்தை.

அருணாசலம் புறப்பட்டுச் சென்றார். தமக்கை கணவரின் கோபமும் ரோசமும் அவருக்குப் புதியன அல்லவே? வைத்த தீ அணையாது; திருமணம் நடவாது என்ற திருப்தியோடு சென்றார்.

என்றுமே தந்தையாரிடம் எதிர் நின்று பேசி அறியாத ரகு இந்த ஒரு செயலில் மாறாக நடந்துகொண்டான். அதுவும் தாயை முன்னிட்டுக்கொண்டுதான். ''மாமா விஷமம் செய்கிறார்; அதை நம்ப வேண்டாம்'' என் று அவன் கூறி முடிக்குமுன் அவர் அவன் வாய்க்குப் பூட்டிட்டார், ''மாமாவைக் குறை கூறாதே!'' என்று. தாயும் பிள்ளையும் ஒரு கட்சியாக நின்று எவ்வளவோ வாதாடியும் பயனில்லை. ''என்னைக் கேவலமாகப் பேசினவன் வீட்டிலே உறவாட மாட்டேன்'' என்று அவர் திரும்பத் திரும்பக் கூறினாரே தவிர, விவரமாக எதுவும் சொல்லவில்லை. 'வேறு பெண், வேறு பெண்' என்றே உருப் போட்டார். ரகுவுக்கு அந்தச் சொல் நாராசமாக இருந்தது; கோபமும் வந்தது. எனக்குத் திருமணமே வேண்டாம் என்று மறுநாளே புறப்பட்டுவிட்டான்.

**பெ**ரிய மனிதர் வீட்டுத் திருமணம். ஊரே திமிலோகப்பட்டது. தெருவடைத்துப் பந்தல். பாண்டும் மேளமும் முழங்கியவண்ணம் இருந்தன. மக்கள் கூட்டம் ஏராளம். ஒவ்வொருவரும் முயன்று முயன்றுதான் உள்ளே போக வேண்டியிருந்தது.

ரகுராமன் போனபோது மாலை மாற்றி முடிந்து ஊஞ்சல் நடந்து கொண்டிருந்தது. நீலாவைப் பார்த்துப் பரிசை அளித்து, வந்த சூட்டோடு திரும்பிவிடலாம்; ஆனால், அப்பா அம்மாவைப் பாராமல்....

தேனடையில் ஈ மொய்ப்பதுபோல் பெண்கள் கூட்டம் ஊஞ்சலைச் சூழ்ந்



திருந்தது. முயன்று அணுகி எட்டிப் பார்த்தான். எதிர்ப்புறத்தில் தொலைவில் தன் தாய் நிற்பதைக் கண்டான். ஊஞ்சலில் அரசகுமாரிபோல் நீலா. பக்கத்தில்....?'ஆ' என்று மகிழ்ச்சியால் கூவிற்று ரகுவின் உள்ளம்.

'ராஜாமணி! நண்பன் ராஜாமணி! அழைப்பிதழில் ராஜாராம். இவனுக்கு இரண்டு பெயர்கள் அல்லவா?'

இன்னிசையின் தெய்வமாய் விளங்குபவள். இங்கே, இவளும் வெள்ளைக் கலையே உடுத்திருக்கிறாள்; இன்னிசையைப் பொழிந்து நிற்கிறாள். ஏன் வெள்ளை உடுத்திருக்கிறாள்? கை, கழுத்து, காது மூக்கு எங்கும் ஏதும் இல்லையே; ஏன்? ஒருவேளை அப்படி இருந்தால் பாடுவாளா, பாட அநுமதிப்பார்களா?'

அவன் சிந்தனை முடியவில்லை; அவள்

ரகுவும் எழுந்து சென்று என்ன என்று விசாரித்தான்.

மணமகனுக்குத் தபாலில் வாழ்த்துக்கள் வந்தன. யாரோ அவற்றைப் பெற்று ஊஞ்சலில் இருந்த அவனிடம் தந்தார்கள். வாழ்த்துக்களினிடையே ஒரு கடிதம் இருந்தது. படித்ததும் மணமகன் விருட்டென்று எழுந்து போய்விட்டான். குனிந்த தலைநிமிராது அருகே அமர்ந்திருந்த



உளங்கொள்ளா மகிழ்ச்சியுடன், 'சரி, இந்த ஊஞ்சல் கலாட்டா முடியட்டும்' என்று ஒரு புறமாகச் சென்று அமர்ந்தான்.

யாரோ ஒருவர் பாடி முடித்ததும் இன்னொரு குரல் ஒலித்தது.

'இனி நமக்கொரு கவலையும் இல்லை; என்றும் இன்பமே!'

விசையால் உந்தப் பெற்றவன் போல் துள்ளி எழுந்தான் ரகு. அதே குரல்!

பெண்கள் பகுதியில் கண்ணை ஓட்டித் துருவித் துருவி ஆராய்ந்தான் அவன். குழுவுக்கு அப்பால், சிறிது தள்ளி, தனித்த இடத்தில் சுவரில் சாய்ந்தபடி ஒரு பெண் நின்று நிலத்தை நோக்கியபடி பாடிக் கொண்டிருந்தாள். எல்லார் பார்வையும் அவள்மீதே லயித்திருந்தது.

'பா..ர தி! நீயா? நீயேதானா?' என்றது ரகுவின் உள்ளம். பாரதி-வீணையும் கையுமாகத் தோற்றும் 'பாரதி-வெள்ளைக் கலை உடுத்தவள்;

பாட்டு முடிந்துவிட்டது. மெல்ல நிமிர்ந்தாள். நெற்றியிலே பளிச் சென்று குங்குமப் பொட்டு!

'அப்பாடா!' என்றது ரகுவின் உள்ளம். 'எங்கோ ஏழைக்கு வாழ்க்கைப் பட்டு எளிய நிலையில் வாழ்கிறாள் போலும்!' என்று எண்ணிக் கொண்டான். நீண்ட பெருமூச்சுடன் சோர்ந்து உட்கார்ந்தான்.

புத்தாடை சரசரக்க, ஏவலர் புடை சூழ அந்தப் பக்கமாக வந்தார் அருணாசலம். உள்ளத்தில் வெறுப்பு இருந்தாலும் பழைய வாசனை காரணமாக மரியாதையாக எழுந்து நின்றான் ரகு. அவர் ஒரு முறை, அவனைக் கோணலாக, உதாசீனமாகப் பார்த்து விட்டுச் சென்றார்.

'சே! வந்ததே பிசகு. போய்விடலாமா?' என்று அவன் எண்ணினான். அதே நேரத்தில் மணவறையில் ஏதோ சலசலப்பு. நாற்புறங்களிலிருந்தும் பலரும் அந்தப் பக்கம் ஓடினார்கள்.

மணமகளும் அந்தக் கடிதத்தைப் படித்தாளோ, அல்லது அவன் போன அதிர்ச்சியோ அவள் அப்படியே நிலத்தில் சாய்ந்துவிட்டாள்.

ரகுராமன் ராஜாமணியைத் தேடிக் கொண்டு சென்றான். அவன் ஓர் அறையில் குப்புறப் படுத்துக் கிடந்தான். சூழ இருந்தவர்களை நயமாக வெளியேற்றிக் கதவை அடைத்துக் கொண்டான் ரகுராமன்.

''ராஜாமணி, என்னைப் பார். நான் சொல்வதைக் கேள்!''

ராஜாமணி எழுந்து உட்கார்ந்தான். முகம் பேயறைந்த மாதிரி இருந்தது. ரகு அவனை ஆசுவாசப் படுத்தினான்.

''ஊஞ்சல் நடக்கிறபோதே நான் வந்து விட்டேன். உன்னிடமிருந்து எனக்கு அழைப்பில்லை; அதனால் உன் சார்பில் நான் இங்கே வரவில்லை. பெண்வீட்டார் சார்பில் வந்தேன். ஊஞ்சலில் உன்னைப் பார்த்தேன்; மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். ஆனால்

சற்று நேரத்துள் என் மகிழ்ச்சியெல்லாம் தவிடுபொடியாகிவிட்டதே! திடீரென்று ஏன் இப்படி ஒரு கலவர நிலை? உனக்கு ஏதோ கடிதம் வந்ததாம்; அதில் மணப் பெண்ணைப் பற்றி ஏதோ இருந்ததாம். இதெல்லாம் என்ன அப்பா? மணப் பெண்ணின் தூய்மைக்கு என்னால் உத்தரவாதம் தர இயலும். எதுவானாலும் சொல்!''

ராஜாமணி அமைதியாக விரக்தி தோன்ற நகைத்தான். ''மணப்பெண்ணைப் பற்றிய கடிதம் இல்லை ரகு; மணப்பெண்ணே தன் காதலனுக்கு எழுதிய கடிதம் அது. இந்தா, நீயே பார்.''

ரகு கடிதத்தை வாங்கிப் பிரித்தான். உடனே, 'ஆகாகா!' என்று துடையிலே ஓங்கித் தட்டிக்கொண்டான். உடனே சமாளித்துக் கொண்டு, ''இதில் என்ன இருக்கிறது ராஜாமணி? ஏற்கனவே நட்புடையவனைத் திருமணத்துக்கு வருமாறு நீலா அழைத்திருக்கிறாள். இது பெரிய தவறா?'' என்றான்.

''ஹூம்! அந்த நட்பின் தன்மை? அதன் ஆழம்? எல்லை? நெஞ்சை வேறோர் இடத்திலே பறிகொடுத்து விட்ட பெண்ணுடன் வாழ்நாளெல்லாம் கூடி வாழ்வது எப்படியப்பா?''

''பூ! 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற வீர கர்ஜனையெல்லாம், கடற்கரை, கல்லூரிச் சொற்பொழிவு, நாடகமேடை இவற்றோடு சரிபோலும்! ஆண் பெண் சமத்துவம் என்பது வாய் வேதாந்தந்தானா? தன்மையாம், ஆழமாம், எல்லையாம், தொல்லையாம்! கற்பனைக் குதிரையை அடக்கினால் அடங்குகிறது; தட்டிவிட்டால் பறக்கிறது. இல்லாதவற்றைக் கற்பனை செய்து கொள்வது முட்டாள்தனம், ராஜாமணி!''

''அது இருக்கட்டும், நீ இந்தக் கடிதத்தைக் கண்டவுடன், 'ஆகாகா!' என்று துடையிலே தட்டிக்கொண்டாயே, ஏன்?''

''இந்தக் கடிதம் எனக்கு வந்தது.''

''ஆ! அப்படியா?''

''நீ என்னையே மறந்துவிட்டாய். அதனால்தான் எனக்கு அழைப்பு அனுப்பவில்லை. என்னையே மறந்துவிட்ட உனக்கு என்னைப்பற்றிய செய்திகள் எங்கே நினைவிருக்கப் போகின்றன? கல்லூரி நாட்களில் ஒருவருக்கொருவர் அந்தரங்கங்களை மனம் விட்டுப் பரிமாறிக்கொண்டோமே, அப்பொழுது சொல்லியிருக்கிறேன்: உறவினளான ஒரு பெண் என்னை விரும்பினாள்; என் மனம் அவளிடம் தங்கையின் பாசத்தையே கொண்டது; பின்பு அவள் தந்தை என்னைப் பகைத்தார்; அதனால் உறவே விட்டுப் போயிற்று என்று. அந்தப் பெண் இந்த நீலாதான். இவள் தந்தை என் மாமா. முன்பு நான் பேரையும் ஊரையும் உறவையும் சொல்லவில்லை. ஒருதலைக் காதலில் நீ சந்தேகிக்கிற தன்மை ஆழம் எல்லை எல்லாம் எந்த அளவினதாக இருக்கும்? இப்போது சொல்.''



''என்னை மன்னித்துவிடு, ரகு. அது சரி; இந்தக் கடிதம் எப்படி என்னிடம் வந்தது?''

''அலுவலகம் புறப்படுகிற நேரத்தில் நீலாவின் கடிதமும் அழைப்பிதழும் வந்தன. அவசரமாகக் கண்ணோட்டம் விட்டுச் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டேன். பரிசுப் பொருளான வெள்ளிக் குத்துவிளக்கின் பாதவளையில் மணமக்களின் பெயர்களைப் பொறிக்க எண்ணி, மணமகனின் பெயரைப் பார்க்க அழைப்பிதழைத் தேடினேன்; காணவில்லை. அதனோடு அந்தக் கடிதமும் கைநழுவியிருக்கிறது.''

''அது சரி; இதை இத்தனை அக்கறையோடு எனக்கு....''

''அதைச் சொல்கிறேன். ஆனால் அந்த ஆசாமியை நீ மன்னித்துவிடுவதாகச் சத்தியம் செய்து கொடு.''

''அப்படியே ஆகட்டும்.''

''உன் அன்புக்குரிய விட்டல் தான்!''

''விட்டல்!''

''நம்மோடு படித்தவன். படிப்பில் தோல்வியுற்றுப் பிறகு அண்ணனின் கடை வியாபாரத்தில் ஈடுபட்ட...''

''அவன் என் வைரி அல்லவா?'' இந்தக் கடிதம் அவனிடம் எப்படி......?''

''அந்தக் கடையிலேதான் குத்துவிளக்கு எடுத்தேன். பர்ஸை எடுக்கிறபோது தவறி விழுந்து அந்தப் பயல் கையிலே கிடைத்திருக்கிறது.''

''கதைபோல் இருக்கிறதே!''

''சரி, எழுந்து வா. வெளியே ஒரே ரகளை. விரசம் முற்றுமுன் பரிகாரம் தேடலாம்.''

ராஜாமணி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு எழுந்தான். இருவரும் கைகோத்த வண்ணம், மலர்ந்த முகத்துடன் வெளியே வந்தனர். அந்த நிலையைக் கண்டு அனைவரும் கப்சிப் பென்று வாயை மூடிக்கொண்டனர்.

நீலா தெளிவு பெற்றிருந்தாள். ரகு அவள் எதிரே சென்று, ''எழுந்து வா அம்மா'' என்றான். அவனைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை குமுறி வந்தது. தான் அவனுக்கு எழுதிய கடிதத்தை அவனே ராஜாமணிக்கு அனுப்பி வஞ்சம் தீர்த்துக்கொண்டிருக்கிறான் என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாள்.

புரோகிதரின் கெடுபிடியின்பேரில் மளமளவென்று செயல்கள் நிறைவேறி, உரிய நேரத்தில் ராஜாமணி நீலாவின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவித்தான். உடனே முதல் அலுவலாக ராஜாமணி நீலாவுடன் இணைந்து ரகுவை வணங்கினான். ரகு அவர்களை வாழ்த்தினான்.

''நீ கடிதத்தில் எழுதியபடி நேரில் வந்து வாழ்த்தி விட்டேன் நீலா. இந்தா, இந்தக் குத்துவிளக்கும் அதன் ஒளியும்போல நீயும் என் நண்பன் ராஜாமணியும் இணைந்து பன்னெடுங் காலம் வாழ வேண்டும்'' என்றான்.

இவ்வளவையும் அருகில் நின்று பார்த்தும் கேட்டும் மெய்சிலிர்த்தபடி இருந்த அருணாசலம் அப்படியே தம் மருமகன் ரகுவை ஆரத் தழுவிக் கொண்டார்.

''அப்பா, இங்கே இப்போது என்ன நடந்தது, தேடி வந்த வினை எப்படி நீங்கிற்று என்று விவரங்களை நான் அறியேன். வினை உன்னாலே தீர்ந்தது என்பதை மட்டும் அறிகிறேன். நான் உன் பகைவன். உனக்கு நான் இழைத்த கொடுமையின் பரிமாணத்தைச் சொற்களால் விளக்க முடியாது. இல்வாழ்வின்றி ஏகாங்கியாக நிற்கும் நீயும், 'மனத்தால் வரித்தவரை அன்றி மற்ற எவரையும் கண்ணெடுத்தும் பாரேன்!' என்று உறுதியுடன் தங்கைகளின் திருமணத்தை அநுமதித்துத்தான் கன்னியாக அதோ நிற்கும் பாரதியுமே பிரத்தியட்சப் பிரமாணங்கள். உன் நண்பரும் என் மாப்பிள்ளையுமான ராஜாமணியின் எஸ்டேட்டில் குழந்தைகளுக்குப் படிப்பும் பாட்டும் பயிற்றுவிப்பதனால் அவள் இப்போது இங்கே வர நேர்ந்தது. அவள் பாட்டின் உயர்வை எல்லோரும் பாராட்டிப் பேசுகிறபோதுதான் அவளையும் அவள் நிலையையும் அறிந்தேன். ரகு, உன் தகப்பனார் தள்ளாமையினால் அதோ வராந்தாவில் கட்டிலில் படுத்திருக்கிறார். நாளை மறுநாள் முகூர்த்தம் இருக்கிறது. பரதேசியாய் நிற்கும் பாரதியை அரசகுமாரி போல் அலங்கரித்து நானே உனக்குக் கன்னிகாதானம் செய்து தருகிறேன். என் கொடிய பாவத்துக்கு அது ஒரு சிறு பரிகாரம். ரகு, என்னை நீ மன்னித்துவிடு'' என்றார் கண்களில் நீர் துளும்ப.

ரகு சட்டென்று அவர் வாயைப் பொத்தினான். ''பெரிய வார்த்தைகளைச் சொல்லி என்னைப் பாவத்துக்கு உள்ளாக்காதீர்கள் மாமா'' என்றான்.

ராஜாமணி ஜாடை செய்ய நீலா விரைந்து சென்று பாரதியை அழைத்து வந்தாள். அருணாசலம் அப்பொழுதே ரகு பாரதி கரங்களை இணைத்து ஆசி கூறினார்.

எல்லாரும் கும்பலாக ரகுவின் தந்தையிடம் சென்று வணங்கினர்; அவர் வாழ்த்தினர்.

எங்கிருந்தோ ரேடியோ ஒலித்தது: 'இனி நமக்கொரு கவலையுமில்லை; என்றும் இன்பமே!' ★





# ஆற்றங்கரைக் காட்சிகள்

பாரத நாட்டில் ஆறுகளெல்லாம் தெய்வங்கள். கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி, தாமிரபர்ணி முதலிய ஆறுகள் நீராடினவர்களுக்குப் புண்ணியத்தைத் தருபவை. அங்கே சென்று நீராடுவதற்காகத் தீர்த்தயாத்திரை போகிறார்கள் பக்தர்கள். ''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாத் தொடங்கினர்க்கு, வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'' என்று பாடுகிறார் தாயுமானவர்.

ஆற்றங்கரையில்தான் எத்தனை அழகான காட்சிகள்! இருகரையும் புரண்டு ஓடும் ஆற்றின் தோற்றமே தனி அழகு. நிறைந்த அணிகளும் ஆடைகளும் புனைந்து அழகு சுமந்து ஒரு மங்கை நடப்பதுபோலச் செல்லுகிறது ஆறு. அதன் கரையில் சிறியவையும் பெரியவையுமான கோயில்கள் இருக்கின்றன. மங்கல மடந்தையர் மஞ்சள் பூசி நீராடுகிறார்கள்.







தம் மங்கல வாழ்வு வளம் பெற வேண்டுமென்று ஆற்றங்கரையில் வளர்ந்துள்ள மரத்தடியில் இருக்கும் தெய்வங்களை வழிபடும் மங்கையருக்குத்தான் எவ்வளவு பக்தி!



புனித நீரில் ஆடி அங்கேயே நித்திய கர்மாக்களைச் செய்வதனல் அந்தணர்களுக்கு ஒரு திருப்தி உண்டாகிறது. சங்கற்பம் செய்துகொண்டு நீராடுகிருர்கள். பிறகு திருநீறணிந்து அர்க்கியம் கொடுக்கிருர்கள். கதிரவனை நோக்கி இந்த அர்க்கியம் வழங்குவதனல் உலகத்துக்கே நலம் உண்டாகிறது.

மாயூரத்தில் துலாக் காவிரியில் நீராடுதல் மிகவும் சிறந்த பலனைத் தருவது. கங்கையே வந்து கலக்கிற காலம் அது. நீராடிச் செல்பவர்கள் ஒருவரை ஒருவர் க்ஷேமம் விசாரித்துக் கொள்கிறார்கள். சில சமயங்களில் ஊர்வம்பு பேசவதும் உண்டு. காவிரித் தாய்க்குப் பூஜை செய்து, தேங்காய் பழம் நிவேதனம் பண்ணி, ''நாடும் இல்லமும் உன்னால் வளம் பெறுக'' என்று மடந்தைமார்கள் வேண்டிக் கொள்கிறார்கள்.







அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு எப்போதுமே மகிமை அதிகம். நீராடித் தூய்மையுடன் அவரை வழிபட்டால் வேண்டிய வரங்களைத் தவறாமல் அவர் அளிப்பார் என்ற நம்பிக்கை மங்கையர் உள்ளத்தில் ஒளிர்கிறது. நாகப் பிரதிஷ்டை செய்து நாகர்களை வழிபட்டால் மகப்பேறு பெறலாம் என்பது ஆன்றோர் நம்பிக்கை. இதோ மணம் புரிந்து பல நாளாகியும் மகவைப் பெறாத மங்கை நாகர்களுக்குப் பூஜை செய்து வழிபடுகிறாள்.





புனிதமும் தெய்விகமும் பொருந்திய ஆற்றில் பக்தியுடன் நீராடி வழிபடுபவர்கள் மட்டுமா இருக்கிறார்கள்? மக்கள் ஆடைகளைச் சலவை செய்யும் தொழிலும் அங்கே நடைபெறுகிறது. மணலைத் தாண்டி ஆடைகளைச் சுமந்து செல்லும் வாகனங்களை ஓட்டிச் செல்லுகிறார்கள் சலவைத் தொழிலாளர்கள். அந்தப் பிராணிகளின் பொறுமையை வியக்கத்தான் வேண்டும்.

அதோ அந்த எருமைக்குத்தான் எத்தனை குதூகலம்! அந்த எருமையைவிடக் குதூகலம் அதன்மேல் ஆரோகணிக்க முயலும் இளஞ் சிறுவர்களுக்கு.







ஆற்றிலே புதுப் புனல் வந்துவிட்டால் ஊராருக்கெல்லாம் ஒரே கொம்மாளம்! சிறு குழந்தையும் விளையாட்டுப் பையன்களும் சிறுமிகளும் குதித்து விளையாடுகிறார்கள். கட்டிளங் காளைகளும் குமரிப் பெண்களும் தண்ணென்ற நீரில் மூழ்கி இன்புறுகிறார்கள். வயது முதிர்ந்தவர்களோ தம் உடம்பையும் உள்ளத்தையும் புனிதப்படுத்துவதற்கு இந்தப் புனல் வந்ததென்று ஆடிக் களிக்கிறார்கள்.

இந்த மகிழ்ச்சி ஆரவாரம் ஒருபுறம் இருக்க, மற்றொருபுறம் மருத நிலத்தின் விலங்காகிய எருமை அந்தப் புனலில் மூழ்கி முக்காரமிடுகிறது. அது களிப்பதைக் கண்டு அதன்மேற் சாய்ந்து களிக்கிறான், அதை ஓட்டும் இளஞ்சிறுவன். எங்கும் களிப்பு மயம்!





குழந்தை விடும் ஓடம்


படங்களை உதவியவர்கள்

உதய பாஸ்கர்: ப.1: 1-2. ப.2: 1,2,3,4. ப.3: 1,3. ப.6: 3. ப. 7: 1,2. ப. 8: 1,2.

ஹரிஹரன்: ப. 3: 2,3. ப. 5:1.

புஷ்பத்துறை சுப்பிரமணியன்: ப. 4: 1. ப. 6: 2. ப. 7: 2.

ஆர். பி. எஸ் மணி: ப. 4: 2, 3. ப. 5: 2.

ஸ்வாமி: ப. 6: 1.






ஆறு என்னும் பெண் தெய்வத்தின் ஆஸ்தானமோ இது? கரையில் எத்தனை எத்தனை வண்ண ஆடைகள்! சிவப்பும் பச்சையும் நீலமும் மஞ்சளுமாகக் கரை முழுதும் வண்ணக்கோலம் போட்டது போன்ற காட்சியாக இருக்கிறது. கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ணப் புடைவைகள், சிறு துணிகள்; இடையே ஆடவர்களுடைய ஆடைகளும் இருக்கின்றன. நீராடியவர்கள் தங்கள் ஆடைகளை ஆற்றங்கரையிலேயே உலர்த்திக் கட்டிக்கொள்ள விரும்பி இப்படிப் பரப்பியிருக்கிறார்கள். அதற்கு ஏற்ற வெயிலும் காய்கிறது. சலவைத் தொழிலாளர்களும் இப்படி ஆற்றங்கரையில் தாம் கொண்டு வந்து அழுக்குப் போகச் சலவை செய்து ஆடைகளை உலர்த்துகிறார்கள். எங்கும் நடைபாவாடை போட்டமாதிரி அவை காட்சி அளிக்கின்றன.



வெயில் குறைவான நேரத்தில் காற்றிலே ஆடையை உலர்த்துகிறார்கள். சேலையை இரண்டு பக்கமும் இருவர் பிடித்துக்கொள்ள வாயு அதில் உள்ள ஈரத்தை வாங்குகிறான். ஆறு என்னும் மங்கைக்கு அலங்காரத் திரை எடுப்பதுபோல விளங்குகிறது அந்தச் சேலை. 'சீக்கிரத்தில் உலர்ந்தால் உடுத்துக்கொண்டு கோவிலுக்குப் போகலாம்' என்கிறாள் ஒருத்தி. 'தூக்கிப் பிடி; மண்ணில் புரளப் போகிறது' என்று எச்சரிக்கிறாள் மற்றொரு மங்கை.





நீராடிய பிறகு எழில் மங்கையர் குடம் நிறைய நீர் மொண்டு இடை துவள அதை ஏந்திக்கொண்டு புறப்படுகிறார்கள். அவர்களுடைய குடம் நிறைந்திருக்கிறது. அவர்களும் நிறைகுடமாகத் திகழ்கிறார்கள்.

ஆறு மனிதர்களைத் தூய்மையாக்குகிறது. வயல்களில் ஆற்றுநீர் பாய்ந்து பயிரை விளைவிக்கிறது. உண்ணும் அமுதமாய்க் குடத்தை நிரப்பும் ஆற்றுநீர் உண்ணும் உணவையும் விளைக்கிறது. அறுவடையாகி வண்டிகளில் செல்லும் நெற்கதிர்களைப் பார்த்தால் ஆறு உண்டாக்கும் வளத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

ஆற்றங்கரையில் தெய்வபக்தி பொங்குகிறது: களியாட்டம் துள்ளுகிறது; மனம் நிறைவு பெறுகிறது; நிலவளம் மலிந்து பொலிகிறது.





# தீபாவளி வாழ்த்து

பி.எஸ்.ஜி.ஆர் **கதிர்**

சூபர்ஃபாஸ்பேட் 18% & 16% மேலும் கலப்பு உரங்கள்

தயாரிப்பாளர்கள்:

கோயம்புத்தூர் பயனீர் பேர்டிலைஸர்ஸ் லிமிடெட்,

முத்துக்கவுண்டன் புதூர் அஞ்சல் சூலூர் ரோடு, (ஆர்.எஸ்.) திருப்பூர்-2

PSGR KADIR



CPF-2061

# தந்தக் கலை

வி. கோபாலன்



'யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்று கூறுவதுண்டு. யானைக்கு இப்படி ஆயிரம் பொன் மதிப்பை எக்காலத்தும் வழங்கியிருப்பவை அதன் தந்தங்களே. நெடுங் காலமாகவே யானைத் தந்தங்களை அழகுப் பொருள்கள் செய்ய உபயோகிக்கிறார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு இருநூறு ஆண்டுகள் முற்பட்ட சாஞ்சி ஸ்தூபத்துலுள்ள ஒரு கல் வெட்டு, விதேகம் என்ற நகரில் வாழ்ந்து வந்த தந்தக் கலைஞர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தந்தக் கலை இந்தியாவில் சிறப்புற்று விளங்கியமைக்கு அந்தக் கல்வெட்டு, சான்று பகர்கிறது. ராமாயணத்திலும், காளிதாசனின் நாடக நூல்களிலும், தமிழ் இலக்கியத்திலும் தந்தப் பொருள்கள் பற்றிய பல செய்திகள் வெகு விரிவாகக் காண்கின்றன.

தந்தங்களின் வகைகள், தந்தத்தில் கலைப் பொருள்களைச் செய்யும் முறை, மோஸ்தர்கள் முதலியவற்றை விரிவாகக் கூறும் நூல்கள் சிலவும் உள்ளன. அவற்றுள், 'பிருஹத்சம்ஹிதை' 'ஹரிவம்சம்' ஆகிய இரண்டும் முக்கியமானவை. தந்தங்களில் தெய்வ வடிவங்கள், தட்டுக்கள், பேழைகள் மட்டுமன்றி, பெரிய அளவில் வீட்டு ஜன்னல்களும், வாசற்கதவுகளுங் கூடப் பண்டைக்காலத்தில் செய்ததாக இந்த நூல்கள் கூறுகின்றன.

பழங்காலத்தில் செல்வச் செழிப்பு மிக்க பிரபுக்களும் மன்னர்களும் தந்தக் கலைப் பொருள்களை விரும்பி வாங்கினர். தந்த வகைகளை வைத்திருப்பதைக் கௌரவமாகவும் செல்வத்தின் அடையாளமாகவும் கருதினார்கள். தந்தம் விலைமதிப்பில் வைரம், வைடூரியம் முதலியவற்றுக்கு ஒப்பானது. எனவே, செல்வர்கள் அதைத் தம் பொக்கிஷத்தின் அங்கமாக்கிக் கொண்டதில் வியப்பில்லை.

விஜயநக்ரத் தலைநகருக்கு விஜயம் செய்த போர்த்துக்கீசிய யாத்திரிகர் ஒருவர், மன்னரின் மாளிகை முழுவ



தந்தத்தில் கண்ணன்
(ஸ்ரீரங்கம்)

தும் தந்தத்தினாலேயே இழைத்திருந்ததாகவும், தூண்களும் சுவர்களும் தந்தமயமாகக் காட்சியளித்தன என்றும், மாளிகை மலர்த் தொட்டிகளில் இருந்த ரோஜாப் பூக்களும் தந்தத்திலேயே இருந்தன என்றும் வியந்து தம் பிரயாணக் குறிப்புக்களில் எழுதியிருக்கிறார். பண்டை மன்னர்கள் தந்தங்களைச் சேகரிப்பதிலும் அவற்றைக் கொண்டு அழகுப் பொருள்களைச் செய்வதிலும் கொண்டிருந்த ஈடுபாட்டை அந்தப் பிரயாணக் குறிப்பு நன்றாகத் தெளிவாக்குகிறது.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்து கிடைக்கும் தந்தங்களின் இயல்பும் தரமும் இடத்துக்கு இடம் மாறுபட்டிருக்கின்றன. திருவாங்கூர்த் தந்தம் சுத்தமானது என்றும், அதிக வழ வழப்பானது என்றும், 'டிஸைன்' களுக்கு மிகவும் சிறப்பாக அநுசரித்து வரக் கூடியது என்றும் தந்தக் கலைஞர்கள் கூறுகின்றனர்.

மைசூரிலும், குடகுப் பிரதேசங்களிலும் கிடைக்கும் தந்தம் அதிக வெண்மையானது. இந்தப் பிரதேசத்துத் தந்தக் கலைஞர்கள் பெரும்பாலும் தந்தத்தில் ஆபரண 'டிஸைன்'களையும் காட்டு விலங்குகளின் வடிவங்களையுமே செய்கின்றனர். தஞ்சாவூரிலும் மைசூர்ப் பகுதியிலும் கிடைக்கும் தந்தங்கள் தரத்தில் அதிக வித்தியாச மற்றவை. நுண்ணிய வேலைப்பாட்டுடன் கூடிய அழகுப் பொருள்களைச் செய்வதற்கும் இந்தத் தந்தங்கள் ஏற்றவை என்றும் தெரிகிறது.

மைசூர்ப் பகுதியில் உருவாகும் தந்த வடிவங்களில் அந்தப் பிரதேசக் கலைஞர்கள் கிருஷ்ண லீலைகளுக்கு முதலிடம் கொடுக்கின்றனர். தஞ்சாவூர்த் தந்தக் கலைஞர்கள் சிறு பெட்டி, தட்டுக்கள், கத்திப் பிடி, பேழை முதலியவற்றைத் தந்தத்தில் உருவாக்குகிறார்கள். ஸ்ரீரங்கம் ஆலயத்தில் தந்தத்தினாலான பெட்டிகள் சில உள்ளன. இவற்றில் மிகவும் நேர்த்தியான வேலைப்பாட்டைக் காணலாம். அந்தப் பெட்டிகளில் கண்ணன் கோபிகளுடன் ஆடிய நாட்டியங்களைக் காண்கிறோம்.

தந்தக் கலைஞர்களுக்குத் 'தந்தகாரர்' என்று பெயர். காளிதாசனின் நூல்களிலும், மாகரின் சிசுபாலவதத்திலும் தந்தக் கலைஞர்களைப் பற்றியும், தந்தக் கலைப் பொருள்களைப் பற்றியும் அழகான பல குறிப்புக்கள் உள்ளன.

தந்தத்துக்கு எழில்வடிவம் கொடுத்துக், கலைப்பொருள்களை உருவாக்க, தந்தக் கலைஞர்கள் பல கருவிகளை உபயோகப்படுத்துகின்றனர். ஒவ்வொரு கருவிக்கும் தனி உபயோகம் உண்டு. ரம்பம் போன்ற அமைப்புள்ள 'அரி' என்னும் கருவி தந்தத்தை வெட்டுவதற்குப் பயன்படுகிறது. தந்தத்தைச் சிறு பாளங்களாக்கக் 'காஞ்சி' என்னும் கருவியை உபயோகிப்பர். மேலே இழைப்பதற்குப் பயன்படுவது 'ஸோஹன்'. 'பீரா' தந்தத்தைத் துளையிட உதவுகிறது.

சிறந்த தந்தப் பொருள்களுக்கு அமிருதசரஸ், பாடியாலா, டில்லி, காசி, லட்சுமணபுரி, மூர்ஷிதாபாத், அகமதாபாத், சூரத், பாலஸோர், திருவாங்கூர், விசாகப்பட்டினம், மைசூர் முதலிய ஊர்கள் சென்ற நூற்றாண்டில் பெயர் பெற்றிருந்தன. இன்றுங்கூட இந்த ஊர்களில் செய்த தந்தப் பொருள்களுக்குத் தனிச் சிறப்பு இருக்கிறது.

ஒளிவீசும் வெண்ணிறத்தில் எழில் வடிவங்களில் வரும் தந்தக் கலைப் பொருள்களை அனைவரும் விரும்பி வாங்குகிறார்கள். ஆனால், அவற்றின் விலை சாதாரண மக்கள் வாங்கக்கூடியதாக இல்லை.

புது மணத் தம்பதிகளுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு, தந்தத்தினாலான விளையாட்டுப் பொம்மைகள், அழகுப் பொருள்கள் சிறந்தவை என்று வாத்ஸ்யாயனர் காம ஸூத்திரத்தில் கூறியிருக்கிறார்.

அந்தக் காலத்தில் தந்தக் கலைப் பொருள்களை வாங்கக்கூடிய நிலையில் மக்கள் இருந்தார்கள் என்பதை இதிலிருந்து ஊகித்து அறிய முடிகிறது. ஆனால், இந்தக் காலத்தில் பணமும் மனமும் படைத்தவர்கள் மட்டுமே இந்தக் கலைப் பொருள்களை வாங்கித் திருமணப் பரிசாக அளிக்க முடிகிறது. ★



முனிவர்களும் தேவகன்னிகைகளும் (மைசூர்)

# அதிக சக்தி, அதிக கண்ட்ரோல், அதிக பாதுகாப்பு ஆகியவற்றுடன் கூடிய அசோக் லேலாண்டு கோமெட் — அழகிய பிரயாணிகள் பஸ்

**அதிக சக்தி :** புதிய 110 bhp பவர் பிளஸ் டீசெல் என்ஜின் அதிக உந்தும் சக்தி வாய்ந்தது.

**அதிக கண்ட்ரோல் :** யந்திரத்தின் கண்காணிப்பில் இயங்கும் பியூயல் பம்ப், என்ஜின் வேகத்தைக் கட்டுப்படுத்தும்.

**அதிக பாதுகாப்பு :** தனிச்சிறப்பு வாய்ந்த பிரத்தியேகமான புல் ஏர் பிரேக் வண்டியை உடனடியாக நிறுத்திவிடும். இதனால் பிரயாணிகள், டிரைவர், பஸ் அனைத்துக்கும் பாதுகாப்பு.

நுண்ணிய விஞ்ஞான ரீதியில் உற்பத்தி செய்யப் பெறும் அசோக் லேலாண்டு கோமெட்டுக்கு, ஆரம்பத்தில் சிறிது அதிகத் தொகை கொடுத்தாலும், சில மாதங்களில் எண்ணெய், நடைமுறைச் செலவு, நிர்வாகச் செலவு ஆகியவற்றில் கண்கண்ட சிக்கனத்தால் சரிக்கட்டிவிடலாம்.

ஒவ்வோர் அசோக் லேலாண்டு கோமெட் வாங்கும் பொழுதும், டி.வி.எஸ்ஸில் ஒப்பற்ற ஒருங்கிணைந்த பணியும் உங்களுக்கு கிடைக்கிறது. சுலபமான தவணைகளில் செலுத்தக்கூடிய பண உதவி, இன்ஷ்யூரன்ஸ், பாடி கட்டுதல், நியாய விலையில் ஸ்பேர் உறுப்புகள், பழைய டயர்களை ரீடிரெடிங் செய்தல், தேய்ந்துபோன உறுப்புகளைப் புதுப்பித்தல் மற்றும் தேவையான பணிபுரிதல்.

---

டி.வி.எஸ்.பாடி கட்டப்பட்ட கோமெட் சேஸிஸ் ஒன்றை தவணை முறையில் வாங்க ரு. 55,000 வரை **சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்** ஏற்பாடு செய்கிறது. அதனை நீங்கள் மாதத் தவணைகளில் சுலபமாகச் செலுத்திவிடலாம்.

---



## டி. வி. சுந்தரம், ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம்.

சப் டீலர்ஸ்: C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை - திருவிலோன் ஆட்டோமோபைல்ஸ், கொல்லம் - மனோரஞ்சன் கங்கூலி & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், பாண்டிச்சேரி.

## சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதராஸ்-பங்களூர்-செகந்திராபாத்-விசாகப்பட்டினம்

சப் டீலர்ஸ்: மணிக்பாக் ஆட்டோமோபைல்ஸ், பெல்காம்-ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பெட் - P. V. பாய் & கம்பெனி, மங்களூர். மர்க்காரா.

TVS

உங்கள் நம்பிக்கைக்கு உரியது—டிவிஎஸ்

TVS-4696




"இதனினும் சிறந்த சொர்க்கம் எங்குண்டு சொல்லாய் நீயே."

ஓவியர்: இந்திரா

1968

# ரங்க மணி

உமாசந்திரன்



“அந்த வெறிப் பயல் ரங்கமணி இப்போது இங்கேயே திரும்பி வந்துவிட்டான் தெரியுமா?'' என்ருர் சபேசன்.

'ரங்கமணி' என்ற பெயர் காதில் விழுந்த கணத்தில் ஐந்து வருஷங்களுக்கு முன்ஞல் நடந்த நிகழ்ச்சிகள் என் மனத்தில் தோன்றின. சாதாரணக் கொதிப்புடஞ ரங்கமணி இங்கிருந்து போஞன்? இனி இந்த ஊர்ப் பக்கம் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை என்ற வைராக்கியத்துடன் சென்ருனே! இந்த ஐந்து வருஷங்களும் எங்கெல்லாம் சுற்றிக் கொண்டிருந்தானே?

''எப்போது திரும்பி வந்தான்?''

''நேற்றுத்தான் வந்தாஞம். வந்ததுமே வீட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனவன் அடுத்த கணமே கதவைத் தாழிட்டுக் கொண்டாஞம். தானே வீடெல்லாம் பெருக்கித் தண்ணீர் ஊற்றி அலம்பிச் சுத்தம் செய்துகொண் டிருந்தான் போலிருக்கிறது. ஐந்து வருஷமாகப் பூட்டிக் கிடந்த வீடாயிற்றே!''

''நீங்கள் அவனைப் பார்த்தீர்களா?''

''நான் ஏன் விழுந்தடித்துக் கொண்டு அவனைப் பார்க்கப் போக வேண்டும்? அந்த வெறியன் வெறித்தனமாகப் பேசிஞல் அதை வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமா?''

''சாயங்காலம் நான் அவனைப் பார்க்கப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?''

''நீ போய்விட்டு வந்து எப்படி இருக்கிருனென்று சொல்லு. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்ருர் சபேசன்.

ரங்கமணியின் வீடு நான் குடியிருந்த தெருவுக்கு அடுத்த தெருவின் மறு கோடியில் இருந்தது. மாலையில் காரியாலயத்திலிருந்து புறப்பட்டதும் வீட்டுக்குக்கூடப் போகாமல் அவனுடைய வீட்டை நோக்கித்தான் என் காரை ஓட்டிச் சென்றேன். நல்ல வேளை, அப்போதுதான் அவன் வெளியே புறப்படத் தயாராக இருந்தான். என்னைக் கண்டவுடன் மகிழ்ச்சி பொங்க, ''ராமு, நீயா?'' என்று கேட்டுக்கொண்டே விரைந்து வந்தான்.

''நம்முடைய எண்ணங்களில்தான் எவ்வளவு ஒற்றுமை! இப்போது உன்னைப் பார்க்கத்தான் புறப்பட்டுக்கொண் டிருந்தேன்!'' என்ருன் என் கையைப் பிடித்துக் குலுக்கியவாறு.

''மிகவும் நல்லது. வா, காரிலே போய் விடலாம்'' என்று கூறியதும் என்னுடன் காரில் உட்கார்ந்து கொண்டான்.

சட்டென்று அவனுக்கு என்ன தோன்றியதோ; ''ராமு எனக்குத் தெரியும். என்னிடம் உண்மையான பாசம் வைத்திருப்பவன் நீ ஒருவன் தான்!'' என்ருன் தழுதழுக்கும் குரலில்.

அவனை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தேன்.

''கமலா எப்படி இருக்கிருள்? குழந்தை எப்படி இருக்கிறது?'' என்று அவன் கேட்டான்.

''கமலாவும் நானும் உன்னைப் பற்றிப் பேசாத நாளே கிடையாது. குழந்தை இன்னும் கைக்குழந்தையாகவே இருப்பாளென்று நினைத்துக் கொண்டிருக்கிருயா? ஆறு வயதாகிறது அவளுக்கு. இரண்டு வருஷமாகப் பள்ளிக்கூடத்துக்கும் போகிருள்.''

''நான் திரும்பி வந்துவிட்டேன் என்று உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்ருன் சட்டென்று.

''சபேசன் சொன்ஞர்.''

காரை நான் என் வீட்டு வாசலில் கொண்டு நிறுத்தியதும் இருவரும் இறங்கி உள்ளே சென்ருேம்.

''கமலா, வந்திருப்பது யாரென்று பார்!'' என்று உரக்கக் கூறியவாறே நான் உள்ளே சென்றபோது கமலா ஹாலிலிருந்து எழுந்து வந்து எங்களை எதிர்கொண்டாள். ரங்கமணியைப் பார்த்ததும் அவளுடைய வியப்புக்கு அளவே இல்லை.

ரங்கமணி சிரித்துக்கொண்டே, ''ஆண்டி பரதேசி மாதிரிதான் ஊருராகத் திரிந்துகொண் டிருந்

தேன். சபேச மாமா அடிக்கடி சொல்வது போல் நான் வெறியன்தானே? ஆனால் தலைக்கு ஏறிய வெறி என்றாவது ஒரு நாள் இறங்கித்தானே ஆக வேண்டும்? வெறி தணிந்ததும் வீட்டு நினைவு வந்தது; திரும்பிவிட்டேன்'' என்றான்.

இருவரும் உட்கார்ந்து கொண்டோம். கமலா சிற்றுண்டியும் காபியும் கொண்டு வந்து வைத்தாள். குழந்தை பத்மா மாடியிலிருந்து இறங்கி ஓடி வந்து எங்கள் நடுவே உட்கார்ந்தாள்.

''அடேடே! கைக்குழந்தையாக நான் பார்த்த பத்மாவா இவள்?'' என்று கூறிய ரங்கமணி பத்மாவைக் கொஞ்சி முத்தமிட்டான்.

''இத்தனை வருஷம் கழித்தாவது உனக்கு வீட்டு நினைவு வந்ததே; அதுவே சந்தோஷமாயிருக்கிறது'' என்றாள் கமலா.

''வீட்டு நினைவு வந்து என்ன பிரயோசனம்? எனக்காக யார் அந்த வீட்டில் காத்திருக்கிறார்கள்?''

''கமலா, ரங்கமணி அந்த வீட்டைப் பற்றிய பாசமே இல்லாத மாதிரி பேசுகிறானே. வந்ததும் வராததுமாக, வீட்டைத் தன் கையாலேயே பெருக்கி, தண்ணீர் கொட்டி அலம்பி....''

ரங்கமணி உரக்கச் சிரித்தான். ''ஏதேது, சபேச மாமா இவ்வளவெல்லாம் சொல்லி விட்டாரா? கொஞ்ச நாள் இங்கே நான் தங்கியிருக்க வேண்டி இருக்கிறதே!''

''இன்று இரவு நீ எங்களுடன் சாப்பிட வேண்டும்'' என்றேன் நான்.

அன்று பௌர்ணமி. சாப்பாட்டுக்கு மேல் நாங்கள் திறந்த மாடிக்குச் சென்று உட்கார்ந்துகொண்டோம்.

''ஏன் ரங்கமணி, இந்த ஐந்து வருஷமாக எங்களுக்குக்கூட ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று தோன்றவில்லையே உனக்கு?'' என்றாள் கமலா.

''உண்மைதான். ஆனால் நான் உங்களைப் பற்றி நினைக்காத நாளே கிடையாது. என்னிடம் உண்மையான பாசம் காட்டுபவர்கள் உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கூறியபோதே அவன் குரல் தழுதழுத்தது.

அன்றிரவு ரங்கமணி சென்ற பின்பு நானும் கமலாவும் அவனைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். பத்து வருஷங்களுக்கு முன்னால் அந்தச் சிறிய ஊரில் புதிதாக ஏற்பட்ட சர்க்கரை ஆலைக்கு மானேஜராக நான் வந்து சேர்ந்த நாளிலிருந்தே அவனை எங்களுக்குத் தெரியும். அந்த நாளில் ரங்கமணியின் தாத்தா அந்தச் சர்க்கரை ஆலைக்குக் கௌரவ டைரக்டராக இருந்தார். தாத்தாவின் நிழலில்தான் அவன் வளர்ந்து வந்தான். வீட்டில் தாத்தா, ரங்கமணி, சமையல்கார அம்மாள் இவர்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. தாத்தா டெபுடி கலெக்டராயிருந்து ஓய்வு பெற்றவரானாலும் அந்த வீட்டைக் 'கலெக்டர் வீடு' என்றுதான் கௌரவமாகச் சொல்லுவார்கள். ஊருக்குப் பெரிய மனிதர்தாம். ஆனால் ஊரின் வாயும் பெரிதுதானே? அவரையும் அந்தச் சமையல்கார அம்மாளையும் சம்பந்தப்படுத்தி ஏதேதோ பேச்சுக்கள் ஊரில் அடிபடும். அவையெல்லாம் எவ்வளவு தூரத்துக்கு உண்மையோ?

குழந்தைப் பருவத்தில் பெற்றோரைப் பறி கொடுத்துவிட்டுத் தாத்தாவின் அரவணைப்பை நாடி வந்தவன் ரங்கமணி. ஆனால் தாத்தாவுக்கு அநுதாபம் கொஞ்சமும் இருந்ததாகத் தெரியவில்லை. ரங்கமணியைப் படாத பாடு படுத்தினார். அசுரத்தனமாக அடித்து நொறுக்கிவிடுவார். அடி பொறுக்க முடியாமல் ரங்கமணி எங்கள் வீட்டுக்கு வந்து ஒளிந்து கொள்வான். தாத்தாவின் கோபம் தணிந்த பிறகு வீட்டுக்குச் செல்வான். அந்த அறியாப் பருவத்தில் அடுத்தடுத்து நேர்ந்த கொடுமைகள் தாம் ரங்கமணியை முரடனாக மாற்றி விட்டனவோ?

இவ்வளவுக்கும் மத்தியில் அவன் படிப்பு நடந்துகொண்டிருந்தது. பக்கத்து நகரத்தில் இருந்த கல்லூரிக்குச் சைக்கிளில் சென்று படித்துப் பட்டமும் வாங்கினான்.

தாத்தா அப்போது சர்க்கரை ஆலையின் டைரக்டர் பதவியிலிருந்து விலகிவிட்டிருந்தாலும் அவருடைய செல்வாக்கினால் ரங்கமணிக்கு அங்கேயே வேலை கிடைத்தது. அவன் வேலையில் சேர்ந்தபிறகு அவனுக்கும் எங்களுக்கும் இருந்த பழக்கம் பின்னும் அதிகமாயிற்று. மாலையில் காரியாலயம் முடிந்ததும் பெரும்பாலும் என்னுடன் எங்கள் வீட்டுக்கு வந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பான். அப்போது பத்மா கைக்குழந்தை. அவளைத் தூக்கிக் கொஞ்சுவான். கமலாவைத் தன் சொந்தத் தமக்கையாகவே அவன் மதித்து வந்தான்.

புதியதொரு வேதனையும் அப்போது தலைதூக்கி யிருந்தது. அந்தச் சமையற்கார அம்மாளின் பெண் அதுவரைக்கும் எங்கிருந்தாளோ தெரியாது; திடீரென்று அவளையும் அழைத்து வந்து தம்முடன் வைத்துக்கொண்டார் தாத்தா. ஏதோ நாடகக் கம்பெனியில் சில்லறை வேஷங்களில் நடித்து வந்தாள் என்றும், அந்தக் கம்பெனி திவாலான பிறகு வேறு வழி இல்லாததனால் தாத்தாவுக்குக் கடிதம் எழுதி அவரிடம் வந்து சேர்ந்தாள் என்றும் ஊரார் பேசிக்கொண்டார்கள். அதற்குத் தகுந்தாற்போலத்தான் அந்தப் பெண் திலகாவும் இருந்தாள்.

''அந்தத் திலகா செய்துகொள்ளும் அருவருப்பான அலங்காரங்களைக் கண்டால் எனக்கு அவளை அப்படியே அறைந்துவிடலாம் போலிருக்கிறது. வளர்ந்த பையன் வீட்டில் நான் ஒருவன் இருக்கிறேனே, அதைப் பற்றித் தாய்க்கோ பெண்ணுக்கோ கொஞ்சமாவது லட்சியம் இருப்பதாகவே தெரியவில்லை. என்னைக் கண்டால்தான் திலகாவின் குரங்குத்தனம் இன்னும் அதிகமாகிவிடுகிறது. இதனாலேயே வரவர எனக்கு வீட்டுக்குப் போக வெறுப்பாக இருக்கிறது'' என்று வெறுப்புடன் பேசுவான் ரங்கமணி.

''ராமு, சமாசாரம் தெரியுமா உனக்கு?'' என்று தமது வழக்கமான வியப்புக் குரலில் கேட்டவாறே ஒரு நாள் என்னிடம் வந்த சபேசன், ''கலெக்டர் தாத்தாவின் திட்டம் பிரமாதமாகத்தான் இருக்கிறது! சமையற்காரி மகள் திலகாவைத் தம் பேரனுடைய தலையில் கட்டப் போகிறாராம்'' என்றார்.

''நிஜமாகவா?''

''பேச்சுச் சும்மா வருமா என்ன? ரங்கமணி மட்டும் லேசுப்பட்டவனா? அவனை நான் குற்றம் சொல்லவில்லை. அசம்பாவிதம் ஏதோ நடந்திருப்பதனால்தான் தாத்தா அப்படித் துடியாய்த் துடிக்கிறார்'' என்று கூறிய சபேசன் நகர்ந்தார்.

அன்று மாலை ரங்கமணி எங்கள் வீட்டுக்கு வந்ததும் நான் அதைப் பற்றிக் கேட்டேன். ''அடேயப்பா! அதற்குள் இந்த விஷயம் வெளியே பரவிவிட்டதா? தாத்தா அதைப் பற்றிச் சொன்னது உண்மைதான். ஆனால் நான் ஒரேயடியாக மறுத்துவிட்டேன். நானாவது, அந்த நாடகக்காரியைக் கல்யாணம் செய்துகொள்வதாவது!'' என்றான் ரங்கமணி.

அதற்கடுத்த ஒரு வாரத்துக்குள்தான் எவ்வளவு நடந்துவிட்டன! வழக்கம்போல் சபேசன்தாம் அந்தப் பயங்கரச் செய்தியை என் காதில் போட்டார்: ''ஊரே அல்லோலகல்லோலப் படுகிறதே, தெரியாதா உனக்கு?''

''என்ன நடந்தது?''

''நேற்று இரவு ரங்கமணி தாத்தாவிடம் ஏதேதோ சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்தானாம். இன்று காலையில் அந்தப் பெண் மூட்டைப் பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டு விட்டாள். போலிஸ் விசாரணை முடிந்து தற்கொலை என்று தீர்ப்புச் சொல்லிவிட்டார்களாம்.''

திகைப்பு மிகுதியில் நான் அசைவற்று உட்கார்ந்திருந்தேன். ''ரங்கமணி கல்யாணம் செய்துகொள்ள மறுத்ததற்காகவா அந்தப் பெண் உயிரையே மாய்த்துக்கொண்டாள்?'' என்றேன்.

''இன்னும் என்ன அசம்பாவிதம் நடந்ததோ, யாருக்குத் தெரியும்? ரங்கமணியின் பிடிவாதம் அந்தப் பெண்ணின் உயிருக்கே யமனாய் முடிந்தது!'' என்று சொல்லிச் சபேசன் போய்விட்டார்.

ரங்கமணி வெளியே தலைநீட்ட முடியாத அளவுக்கு அந்தப் பேச்சுப் பரவிவிட்டது. அதற்காகப் பயந்துகொண்டு வீட்டிலேயே பதுங்கியிருக்கவில்லை. தலை நிமிர்ந்தவாறு காரியாலயத்துக்கு வந்து போய்க்கொண்டிருந்தான். ஆனால் ஏனோ எனக்கு அவனைப் பார்க்கவே மனம் கூசியது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு காரியாலயத்துக்குத்தான் வந்துகொண்டிருந்தானே தவிர எங்கள் வீட்டுக்கு வருவதை நிறுத்திவிட்டான்.

யாரும் எதிர்பாராதிருந்தபோது எரிமலை வெடித்துவிட்டது. அன்று ஏனோ சபேசன் நேரடியாகக் கேட்ட ஒரு கேள்வி அவனைத் திடீரென்று வெடிக்கச் செய்துவிட்டது.

''என்னப்பா ரங்கமணி! தாத்தா உனக்கு வேறு பெண் பார்த்துக் கொண்டிருக்கிறாரா?'

அவ்வளவுதான்! ரங்கமணி அத்தனை நாளும் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை அவர் மேல் கொட்டித் தீர்த்தான். சபேசன் வெலவெலத்துப் போனார். ''இனிமேல் இதைப் பற்றி யார் பேசினாலும் சரி, அந்த இடத்திலேயே சமாதி வைத்துவிடுவேன், ஜாக்கிரதை!'' என்று அவன் கத்திவிட்டுப் போய்விட்டான்.

மறுநாள் அவன் காரியாலயத்துக்கு வரவில்லை. அடுத்த நாளும் வரவில்லை. எனக்குக் கவலையாகப் போயிற்று. சபேசனைத்தான் விசாரித்தேன்.

''சமாசாரம் தெரியாதா உனக்கு? அந்தச் சமையற்கார அம்மாளை அழைத்துக்கொண்டு மாயமாய் மறைந்துவிட்டார் ரங்கமணியின் தாத்தா.''

''அப்படியா! ரங்கமணி அவர்களைத்தான் தேடிக்கொண்டிருக்கிறானா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, வெறி பிடித்த மாதிரி எங்கெங்கோ அலைகிறான். எப்போது சாப்பிடுகிறான், எப்போது வீடு திரும்புகிறான் என்று யாருக்குமே தெரியாது.''

அன்றிரவு பத்து மணிக்கு அவன் வீட்டுக்குப் போனேன். அவன் வீட்டில்தான் இருந்தான். சபேசன் சொன்னது



போல அவன் முகத் தோற்றம் பார்க்கவே பயங்கரமாகத்தான் இருந்தது. அழுக்குப் படிந்த உடைகளும் குச்சி குச்சியாகத் தலைதூக்கியிருந்த மீசை தாடிகளும் அவன் தன்னையே மறந்த வெறிநிலையில் இருந்ததை உணர்த்தின. அவன் என் அருகில் வந்தான்.

''ராமு, நீயே சொல்லு. நானா அவர்களை வீட்டை விட்டுப் போகச் சொன்னேன்? என்னுடன் இருக்கப் பிடிக்கவில்லை என்றால் என்னை வெளியே போகச் சொல்ல வேண்டியது தானே? அதற்கு அவாகளுக்கு உரிமை இல்லையா? இருக்கிற பழி போதாதென்று, தள்ளாத வயதில் அவர்களை வீட்டை விட்டுத் துரத்தினேன் என்ற பழியும் வேண்டுமா?'' என்று புலம்பினான். ''நானும் இந்த



ஊரை விட்டே போகப் போகிறேன்'' என்று கத்தினான் ஆத்திரத்துடன்.

''ரங்கமணி, பத்து நாள் வெளியே சுற்றிவிட்டுத் தாங்களாகவே திரும்பி வருவார்கள். நீ மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு உன் வேலையில் கவனத்தைச் செலுத்து. நாளடைவில் எல்லாம் சரியாகிவிடும்'' என்று கூறித் திரும்பினேன்.

ஆனால் என் ஆறுதல் வார்த்தைகள் எவ்விதப் பயனும் அளிக்கவில்லை. அவன் ஊரைவிட்டே போய்விட்டான். ஐந்து வருஷங்கள்! இப்போதாவது திரும்பிவர வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியதே!

**தீ**பாவளிப் பண்டிகையைக் கொண்டாட எங்கள் வீட்டுக்கே வர வேண்டுமென்று ரங்கமணியிடம் சொல்லியிருந்தோம். பண்டிகைக்கு முந்திய இரவே வந்துவிடுவதாக அவன் உறுதி கூறியிருந்தான். அன்று காரியாலயத்தில் வேலை சற்று அதிகமாயிருந்ததனால் நான் விளக்கு வைத்த பிறகுதான் வீடு திரும்ப முடிந்தது. அன்றைத் தபாலில் எனக்கு வந்திருந்த ஒரு கடிதத்துடன் கமலா என்னை எதிர்கொண்டாள்.

''யாரிடமிருந்து?'' என்று கேட்டவாறே அசிரத்தையுடன் உறையைப் பிரித்தேன். கையெழுத்தைப் பார்த்ததுமே ரங்கமணியின் தாத்தா எழுதியிருந்தார் என்பதைப் புரிந்துகொண்டதும் என் வியப்புக்கு அளவே இல்லை. வடக்கே இமயமலைப் பகுதியிலுள்ள ஓர் ஆசிரமத்தின் விலாசம் மேலே போட்டிருந்தது.

''ராமு, இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும்போது என் காரியம் முடிந்துவிட்டிருக்கும். ஆம், படுத்த படுக்கையிலிருந்துதான் இதை எழுதியிருக்கிறேன். ஆனால் என் உயிர் உடலில் இருக்கும்வரை என் மனத்திலிருக்கும் உண்மையை யாருடனும் பகிர்ந்துகொள்ளத் தைரியம் இல்லாததனால், எல்லாம் முடிந்த பிறகே இதைத் தபாலில் சேர்க்கும்படி நான் தங்கியிருக்கும் ஆசிரமத்தின் நிர்வாகியிடம் சொல்லியிருக்கிறேன்.

''ராமு, ரங்கமணியிடம் உண்மையான அன்பு வைத்திருப்பவன் நீ ஒருவன்தான். அதனாலேயே உன்னிடம் மனம் விட்டு எழுதுகிறேன். நான் புரிந்துவிட்ட பயங்கரமான பாதகத்தைப்பற்றி ரங்கமணிக்கே நேரில் எழுத எனக்குத் துணிவு வரவில்லை.

''என்னிடம் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளத் தெரியாத பலவீனம் மட்டுமல்ல; அளவில்லாத அகந்தையும் சேர்ந்திருந்தது. அதனால்தான் ஆரம்பத்திலிருந்தே ரங்கமணியிடம் கொடுமையாக நடந்துகொண்டேன். என் பலவீனத்துக்கு அவன் சாட்சியாக இருக்கிறான் என்ற நினைப்புத்தான் என்னை அவன்மேல் ஆத்திரம் கொள்ளச் செய்தது. ஊரார் பேசிக்கொண்டதில் சிறிதும் தப்புக் கிடையாது. ரங்கமணியின் பாட்டி உயிரோடு இருந்தவரை அவனுக்கு ஒரு குறையும் இருக்கவில்லை. அவளுக்கு உடம்பு தள்ளாமல் போனபோது அவளுக்கு ஒத்தாசையாக எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்த அம்புஜம் அவள் காலமான பிறகு என் தனி வாழ்க்கைக்கு ஆதாரமாக என்னுடனேயே நிலைத்துவிட்டாள். நாளடைவில் நாங்கள் கணவன் மனைவிமாதிரி இருக்க ஆரம்பித்தோம். விவரம் தெரிந்தவனாக வளர்ந்துவிட்ட பேரன் வீட்டில் இருக்கும்போது அப்படி நான் நடந்துகொண்டதை நினைத்தால் இப்போது அவமானமாக இருக்கிறது.

''நல்ல எண்ணத்துடன்தான் அம்புஜத்தின் பெண் திலகாவை என்னிடம் வரவழைத்துக்கொண்டேன். அவளைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு ரங்கமணியை எப்படியாவது சம்மதிக்கச் செய்தால் எல்லா விதத்திலும் நன்மையாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவன் திலகாவைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அதற்கு மாறாக, நானே....அந்தக் கேவலமான சபலத்தைப் பற்றி எழுதுவதற்கே என் கை கூசுகிறது. எழுபது வயதுக் கிழவன் தன்னிடம் தகாத விதத்தில் நடந்துகொண்டானே என்ற அவமானம் தாங்காமல்தான் திலகா தன் வாழ்வையே முடித்துக்கொண்டாள். அவள் மரணத்துக்கு நான் பொறுப்பாளி என்று அறிந்திருந்தும் அதை ஒப்புக்கொள்ளத் துணிச்சல் இல்லாத கோழையானேன். யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அம்புஜத்துடன் ஊரைவிட்டே புறப்பட்டேன்.

''பாவம் அம்புஜம்! மகளுக்கு நேர்ந்த முடிவை எண்ணி எண்ணி அந்தச் சோகத்தில் மடிந்து போனாள். ஆயிற்று, நானும் இப்போது நிமிஷங்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் புரிந்துவிட்ட மகா பாதகத்தின் பழியை இனிமேலும் ரங்கமணி தாங்கிக்கொண்டிருக்கக்கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறேன். இதை அவனிடம் சேர்த்துவிடு. இந்தக் கடிதம் இனி அவனை எந்தப் பழியும் அணுக முடியாத கவசமாக இருந்து காக்கட்டும்.''

தமது வீடு, பாங்கியில் இருந்த ரொக்கம் எல்லாம் ரங்கமணிக்கே சேர வேண்டுமென்று பத்திரம் எழுதிவைத்திருப்பதாயும், அதைத் தம் வக்கீல் அனுப்புவார் என்றும் பிற்குறிப்பைச் சேர்த்து அந்தக் கடிதத்தை முடித்திருந்தார் கிழவர்.

செய்தியை அறிந்த கமலா ஒன்றுமே பேசவில்லை. அந்தப் பயங்கரம் அவளை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. சற்றுப் பொறுத்து ஒரு பெருமூச்சுடன் கூறினாள்: ''எப்படியோ, ரங்கமணி இனி மேல் யாருடைய பழிக்கும் அஞ்ச வேண்டியதில்லை.''

சற்றுப் பொறுத்து அவன் வந்ததும், ''ரங்கமணி, உனக்குத் தீபாவளிப் பரிசு'' என்று கூறிக்கொண்டே தாத்தாவின் கடிதத்தை அவனிடம் கொடுத்தேன். அவன் சிறிதும் சலனமில்லாமல் அதைப் படித்து முடித்து நிமிர்ந்தான்.

ஒளிக் கீற்றுக்களை உமிழ்ந்துகொண்டிருந்த மத்தாப்பு ஒன்றைக் கையில் ஏந்தியவாறு பத்மா அவனருகில் ஓடி வந்தாள். தாத்தாவின் கடிதத்தை மத்தாப்புக்கு நேரே பிடித்தான் ரங்கமணி.

''என்ன செய்கிறாய் ரங்கமணி?''

''தீபாவளி கொண்டாடுகிறேன். இந்தக் காகிதக் கவசம் எனக்குத் தேவையில்லை. உலகத்தின் பழிப்பை என்னால் தாங்கிக்கொள்ள முடியும். தெய்வமாகிவிட்டவரை இந்தக் களங்கம் தொடர வேண்டாம்.''

மத்தாப்பு அணைந்துவிட்டது. ஆனால் தாத்தாவின் பாவத்தைப் பொசுக்கிக்கொண்டிருந்த ஜ்வாலையின் ஒளியில் ரங்கமணியின் முகம் பொலிந்தது. ★


:.பாஸ்:.போமின்
சக்தியை அதிகரிக்கிறது.
பசியைத் தூண்டுகிறது.
வலிவைப்
பெருக்குகிறது.
நோய்களை எதிர்க்கும் சக்தியை
கூட்டுகிறது.
சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது :.பாஸ்:.போமின்
:.பாஸ்:.போமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும்,
பலவகை கிளிஸரோ:.பாஸ்பேட்டுகளும் அடங்கிய.
பழரஸ மணம் கமழும் பச்சைநிற டானிக.
Phosfomin
Phosfomin
SQUIBB
SARABHAI CHEMICALS




வேலும் மயிலும் துணை

அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எங்கள் இதயங் கனிந்த

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

பிறந்த நாள் விழா, மண விழா, மணி விழா போன்ற வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளுக்கும் மற்றும் தீபாவளி, பொங்கல் போன்ற திருநாட்களுக்கும் திருவிழா நாட்களுக்கும் தேவையான பட்டாடைகளும் நூலாடைகளும் வாங்கும்பொழுது எங்களை மறவாதீர்கள். வணக்கம்.

# கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53, கிடங்குத் தெரு, சென்னை - 1.
போன்: 34614

**கருப்பண்ணு சில்க்ஸ்**
*18, உஸ்மான் ரோடு,*
(பனகல் பார்க் சமீபம்)
*தி. நகர் — சென்னை-17.*

**கருப்பணு சில்க் ஹவுஸ்**
*21/22, ரட்டன் பஜார்,*
*சென்னை-3* — போன்: 38094



போன்: 76103 த. பெ. 2910 தந்தி: செந்தில்

# இந்தோ மெர்கண்டைல் பண்ட் பிரைவேட் லிட்.,

*(ரிஜிஸ்டர்டு: இந்தியன் கம்பெனிச் சட்டம் 1956-க்கு உட்பட்டது)*
25, சுந்தரேஸ்வரர் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

**வேலை நேரம்:** *காலை 8 முதல் 11 வரை, மாலை 4 முதல் 7-30 வரை.*

*கீழ்க்காணும் சீட்டு குருப்புகளுக்கு, 1961-ம் வருடத்திய 24-ம் நம்பர் மதருஸ் சீட்டு பண்டுகள் சட்டத்தின் கீழ் நாங்கள் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.*

| | | சீட்டுத் தொகை: |
|---|---|---|
| 1. | தினசரி சீட்டுகள் ரூ. 1 முதல் ரூ. 20 வரை. | ரூ. 400 முதல் ரூ. 9000 வரை |
| 2. | குறுகிய கால மாதாந்திர சீட்டுகள்: 30 மாதங்களுக்கு ரூ. 15 முதல் ரூ. 200 வரை | ரூ. 450 முதல் ரூ. 6000 வரை |
| 3. | நீண்ட கால மாதாந்திர சீட்டுகள்: 60 மாதங்களுக்கு ரூ. 20 முதல் ரூ. 500 வரை | ரூ. 1,200 முதல் ரூ. 30,000 வரை |

*இதர விவரங்களுக்குத் தேவையான குருப்பைக் குறிப்பிட்டு அலுவலகத்திற்கு எழுதவும்.*

**இந்தோ மெர்கண்டைல் மூலம் சேமித்துப் பலன் அடையுங்கள்.**

*1, ஜோன்ஸ் தெரு, பிராட்வே, சென்னை-1. போன்: 21941. த. பெ. 1524.*

*459/461, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5. போன்: 811551.*

*34, தியாகராயா ரோடு, (ராஜகுமாரி தியேட்டர் எதிரில்) தி. நகர், சென்னை-17. போன்: 441665*

*133, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-26. போன்: 444694.*

*38, புரசவாக்கம் ஹைரோடு, மதருஸ்-7. போன்: 64691*

M. V. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்.

SOBHAGYA-IMFL-5



# கொள்ளை

**வாசவன்**

''**வா**ங்கோ. எல்லாரும் வாங்கோ. என்ன சாப்பிடறேள்? காபியா? மோரா? நீங்க எதுவுமே சாப்பிட மாட்டேள். ஏன்னு நீங்கள்ளாம் என்னேடே சண்டை போட வந்திருக்கேள். இதுவரை தனியே நின்னு சண்டை போட்டிருக்கேள். ஜயிக்க முடியலே. அதனுலே படை சேர்த்திண்டு வந்திருக்கேள். என்னை என்ன செய்யப் போறேள்? நான் தனி ஆள். ஜமாயுங்கோ!'' என்று படபடத்த சர்மா, வருகிறவர்களுக்கெல்லாம் வழி விடுவதைப் போல விலகி நின்று, முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சாம்புத் தாத்தா, பர்மா முதலியார், பிரஸிடென்ட் பிள்ளை, பட்டாமணியம் சிதம்பரம், விபூதிச் சாமியார் என்று ஒருவர் பின் ஒருவராக வந்த ஊர்ப் பிரமுகர்களின் கூட்டம், அறை கொடுப்பதைப் போலப் பேசிய சர்மாவைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் கூடத்தில் உட்கார்ந்தது.

வந்தவர்கள் அத்தனை பேரும் பெரிய மனிதர்கள். அவர்களுக்கும் மான அவமானம் உண்டு. அந்த ஒரு கணத்தில் அவ்வளவையும் மூட்டை கட்டி வைத்துச் சர்மாவையும் புழுவாக்கிவிட்டார்கள். தம்முடைய கோபத்தை ஆயுதமாக்கி, அவர்கள் தன்மதிப்பில் பிரயோகித்து, அவர்களை அப்படியே வாசலோடு அனுப்பிவிடலாம் என்று தப்புக் கணக்குப் போட்ட சர்மா, அவர்கள் கூடத்தில் உட்கார்ந்ததும் ஏமாற்றம் அடைந்தார். தம் திறமை தோற்று, தாமும் சிறிய மனிதராகி விட்டதை எண்ணியபோது அவருக்கு எரிச்சல் வந்தது. அந்த இடத்தை விட்டே போய்விட எண்ணி இரண்டு எட்டு எடுத்து வைத்தார்.

''நில்லுடா சர்மா'' என்று ஓங்கி அதட்டினுர் சாம்புத் தாத்தா.

சர்மா நின்ருர்.

''நாங்கள்ளாம் உன் வீட்டுக்கு வந்திருக்கோம். அதுவும் நாங்க எதுக்காக வந்திருக்கோங்கறது எங்களைவிட உனக்கு ரொம்ப நன்னுத் தெரிஞ்சிருக்கு. நாங்க சண்டை போட வந்திருக்கோம்னுதானே நீ சொன்னே? எங்களுக்குச் சண்டை போடறதுக்கு ஒரு சான்ஸே இல்லாமே நீ போயிட்டா எப்படிடா சர்மா? வாடா இங்கே!'' என்று உரிமையோடு கட்டளையிட்டார் சாம்புத் தாத்தா.

எல்லாரையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து மெல்லுவது சர்மாவுக்குச் சுலபம். ஆனுல் குணம் பார்த்து, குற்றம் ஒதுக்கி, இனம் பிரித்தால் சாம்புத் தாத்தா இரும்புக் கடலை. அவரை மெல்ல நினைக்கிறவர்களின் பல் உடையும். இங்கே வந்திருப்பவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் அன்னக் காவடி. அவருடைய பலமெல்லாம் பழுப்பேறிப் போன கந்தல் வேட்டியில் தான் இருந்தது. அவருக்குச் சொந்தம் என்று ஒன்றில்லை. அதனுல் அவர் எதையும் எதிர்பார்க்கும் பலவீனம் இல்லாமல் உலகத்தோடு பழக முடிந்தது. அவரைப் பொறுத்தவரையில் ஊர் நிலத்தில் பாதியை வளைத்துப் போட்டு ஊரில் பெரிய அந்தஸ்தும், காதில் வைரக் கடுக்கனுமாக டாலடிக்கும் சர்மாவும், ஊர் ஓரத்தில் குச்சைப் போட்டுக்கொண்டு கூலி வேலை செய்து பிழைக்கும் குப்பனும் ஒன்றுதான்.

எல்லாரையும் அலட்சியப்படுத்த நினைத்தாலும், சாம்புத் தாத்தாவை அலட்சியப்படுத்த முடியாமல், மற்றவர்களைவிட அந்தஸ்தில் மிக மிகக் குறைந்திருந்த அவருக்கு விருப்பமில்லாமலே கட்டுப்பட்டு, மேலே நடக்க முடியாமல் அவர்கள் பக்கம் திரும்பி, ''நீங்க எதுக்காக வந்திருக்கேள் என்கிறது எனக்குத் தெரியும். அதைப் போல நான் ஏன் போறேங்கறதும் உங்களுக்குத் தெரியும். நான் ஏற்கனவே தீர்மானிச்ச விஷயம். அதை நீங்க ஒரு படையாச் சேர்ந்துண்டு வந்தாலும் என்னுலே மாத்திக்க முடியாது'' என்று தீர்மானமாக கூறினுர்.

அங்கே தலையைக் குனிந்துகொண்டிருந்தவர்களையும் சர்மாவையும் ஒரு முறை பார்த்துவிட்டு, ''ஏய்யா இப்படி உட்கார்ந்திண்டிருக்கேள்? ஏதோ சர்மாவை நார் நாராக் கிழிச்சு எறியறவாளைப் போலத் தவ்விண்டு வந்தேள். இங்கே வந்ததும் ஊமையாயிட்டேள்! ஏன் அப்படி? நீங்கள்ளாம் சர்மாவோடே தயவாலே பிரஸிடென்ட் ஆனேள். ஊரிலே பெரிய மனுஷாளா ஆனேள். எனக்குச் சர்மாவோட தயவு வேண்டாம். சத்தியம் வேணும். தர்மம் வேணும். நேர்மை வேணும். நான் கேக்கறேன். ஏன்டா சர்மா, அந்தப் பையன் ராமுவை ஊரை விட்டுப் போகணும்னு பிடிவாதம் பிடிக்கிருயாமே; அதுக்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்.

''எந்தக் காரணமும் இல்லே!'' என்று எங்கேயோ பார்த்துக்கொண்டு பதிலிறுத்தார் சர்மா.

''ஒரு காரணமும் இல்லாமே ஒருத்தனை ஊரை விட்டு விரட்டறது எந்த வகையிலே நியாயம்?''

''நியாயத்தை இங்கே இழுக்க வேண்டாம். அவன் இங்கே இருக்கப்படாது. அவ்வளவுதான்!'' என்று கண்ணை மூடிக்கொண்டார் சர்மா.

''சர்மா! நீ கண்ணை மூடிக்கலாம். காதைப் பொத்திக்கலாம். பல்லை நற நறன்னு கடிக்கலாம். எப்படியோ உன்னேடே உணர்ச்சிகளை நீ அநுபவிக்கலாம். ஆனு அதே உணர்ச்சிகளை ஒரு நல்ல பையன்மேலே ஏவிவிட்டு அதோட கரிப்பையும் கசப்பையும் அவன்தான் அநுபவிக்கணும்னு நீ விரும்பினு, அது அநியாயம். ஓ! உனக்குத்தான் நியாயம், அநியாயம் எதுவுமே பிடிக்காதே!'' என்று லேசாகச் சிரித்துக்கொண்ட சாம்புத்தாத்தா தொடர்ந்தார்:

''சர்மா, நீ கண்ணை மூடிண்டதிலே தவறு இல்லே. ஏன்னு, கண்ணு ஒரு காமிராவைப் போல அப்படியே பார்க்கிறதில்லே. மனசிலே இருக்கிற அழுக்கையும் சேர்த்துண்டு கண் பார்க்கிறது. அப்போ பார்வை வேருவும், பார்க்கப்படற பொருள் வேருவும் போயிடறது. காதை மட்டுமாவது கொஞ்சம் திறந்து வச்சுக்கோடா, சர்மா! ராமு ரொம்ப நல்ல பையன். பிரஸிடென்ட்வாள், நீங்க கோபிச்சுக்காதிங்கோ. உங்க நிர்வாகத்திலே நடக்கற பள்ளிக்கூடங்களிலே தவளைகள் கத்தறது. அதைத் தவிர ஒழுங்கான படிப்புச் சொல்லித் தராளா? தர்மசத்திரம் நடத்தற மாதிரி, தர்ம வைத்தியசாலை நடத்தற மாதிரி; கடனுக்கு அழற கல்வியிலே அறிவு முளை விடுமா? இப்படிப் பள்ளிக்கூடம் இருந்தும் மூடமா இருந்த நம்ம ஊரிலே ஸ்கூல் ஒண்ணு ஆரம்பிச்சான் ராமு. தெய்வம் கருணையை வழங்குகிற மாதிரி கல்வியை வழங்க

ணும். ராமு அப்படி வழங்கினுன்' ஊரிலே இப்போ குழந்தைகளைப் பாருங்கோ. ஒவ்வொண்ணும் அறிவின் வித்தா வளர்ந்துண்டு வர்றதுகள். சர்மா, உங்களோடே பணம், அந்தஸ்து, அடாவடி, போலீஸ், சட்டம் எதுவும் சாதிக்க முடியாததை அந்த ராமு சாதிச்சிருக்கான். இதுக்கெல்லாம் நீங்க நன்னி காட்டணுமாஞ அவனுக்கு ஒரு கோயில் கட்டி வைக்கணும். நீங்க கட்டமாட்டேள். ராமுவை ஊரிலே இருந்து விரட்டி விட்டுப் பாவத்தை மூட்டை கட்டிக்க வேண்டாம்னு சொல்றேன்.''

அது வரையில் பொறுமை இல்லாமலும், வேறு வழி இல்லாமலும் கேட்டுக்கொண்டிருந்த சர்மா, உட்கார்ந்துகொண்டிருந்த பெரிய மனிதர்களை உறுத்துப் பார்த்தார். ''ஏய்யா, சாம்புத் தாத்தாவை வக்கிலா நிறுத்தி வச்சு வாதாடிப் பார்க்கிறேளா? யார் சொன்னுலும் நான் கேட்கப் போறதில்லே. ராமு இந்த ஊரை விட்டு உடனே போயாகணும்!''

சாம்புத் தாத்தா கடகடவென்று சிரித்தார். ''ஏய் சர்மா! நீ இப்படிச் சொல்றதுக்கு மகாராஜாவா இருக்கணும். அதுவும் இல்லேன்னு பைத்தியக்காரனு இருக்கணும். மகாராஜா காலமெல்லாம் மலையேறிப் போயிடுத்து. இது சுதந்தர யுகம். யாரு வேணுமானுலும், எங்கு வேணுமானுலும் பிழைப்பு நடத்தவும் இருக்கவும் உரிமை இருக்கு. நீ ஏதோ இந்த உலகமெல்லாம் உன் உள்ளங்கையிலே இருக்கிற மாதிரி நினைச்சிண்டு, 'ராமு உடனே இந்த ஊரை விட்டுப் போயாகணும்'னு கட்டளை போடறே. ராமு இந்த ஊரை விட்டுப் போக மாட்டான். அவன் போனுலும் நான் விட மாட்டேன்'' என்று ஆவேசமாக இரைந்தார்.

''நான் பணக்காரன் தாத்தா!'' என்று வெறித்தனமாகச் சிரித்தார் சர்மா.

''யாருடா இல்லேன்னது? நீ பணக்காரன்தான். உன் பணம் பத்தும் செய்யுந்தான். ஆனு ராமுவோட விவகாரம் பதினெண்ணுவது. இதிலே ஈடுபட்டா நீ தோத்துப் போவே!''

''இதிலே நான் ஜயித்துக் காட்டறேன்!'' என்று மார் தட்டினுர் சர்மா.

''பாவம் என்றைக்குமே ஜயிச்சதில்லே'' என்று கூறிவிட்டு, அவர் முகத்தைக்கூடப் பார்க்கப் பிடிக்காதவராய் வெளியேறினுர் சாம்புத் தாத்தா.

அதுவரை தாத்தாவின் பலத்தில் உட்கார்ந்திருந்த பிரமுகர்கள், அவர் போனதும் சர்மாவின் பாய்ச்சல் தங்கள் பக்கம் திரும்பப் போவதை ஓர் உறுமலின் மூலம் அறிந்துகொண்டு, அதற்கு வகை வைக்காமல் ஒருவர் பின் ஒருவராய் நழுவினர்.

படுகிழம். வக்கற்றது. என்ன பேச்சுப் பேசிவிட்டுப் போயிருக்கிறது!

சர்மாவுக்கு ஆத்திரம் வர வேண்டும்; வரவில்லை. அவரை நோக்கி ஓர் இருட்டு வருகிறது. அந்த இருட்டில் கொஞ்ச நேரம் புதைந்துகொண்டால் தேவலை.

அருகில் இருந்த சோபாவை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.



''என்ன, தீர்த்தம் வேணுமா?'' - பரிவா, பரிகாசமா?

கேட்டுக்கொண்டே வந்து நின்ற தர்முவின் குரலில் பொருளாய் வருவது எதுவென்று புரியாமல், அவள் முகத்தைப் பார்த்தார் சர்மா.

''ரொம்பச் சத்தம் போட்டுப் பேசினேளே! நாக்கு உலர்ந்து போயிருக்குமே! அதுதான் தீர்த்தம் வேணுமான்னு கேட்டேன்'' என்று சிரித்தாள் தர்மு.

''சிரிக்காதேடி தர்மு! எனக்குப் பத்திண்டு வர்றது'' என்று பல்லைக் கடித்தார் சர்மா.

''உங்களுக்கு எதுக்குப் பத்திண்டு வரணும்? நீங்க பணக்காரா. பத்தும் செய்வேள். ஆனு அந்தப் பத்தைக் கொண்டு ஓர் உண்மையைச் செய்துட முடியாது. ஏன்னு, உண்மை செய்யப்படறதில்லே.''

''என்னடி சொல்றே தர்மு?'' என்று குழப்பத்துடன் கேட்டார் சர்மா.

''நான் சொல்றது இருக்கட்டும். நீங்க உண்மையைச் சொல்வேளா?''

''என்னடி உண்மை?'' என்று அதட்டினுர் சர்மா.

''எங்கேயோ நீங்க பலவீனமா இருக்கேள். அதனுலேதான் என்னை அதட்டி அடக்கப் பாக்கிறேள். இப்போ இங்கே ஊர்ப் பிரமுகர்கள் இல்லே; நாம் மட்டுந்தான் இருக்கோம். உண்மை உங்களுக்குப் பாதகமா இருந்தாலும் அதை அப்படியே சொல்லுங்கோ. ராமுவை ஊரை விட்டு ஏன் போகச் சொல்றேள்?'' என்று கேட்டுக்கொண்டே, அவர் காலடியில் உட்கார்ந்தாள் தர்மு.

''நானும் சாம்புத் தாத்தாவும் பேசிண்டிருந்ததை நீ கேட்டயோ?''

''கேட்டேன்.''

''நான் அவருக்குச் சொன்ன பதில் உன் காதிலே விழுந்ததோ?''.

''விழுந்தது.''

''உனக்கும் அதே பதில்தான்.''

''நான் சாம்புத் தாத்தா இல்லே.''

''புரியறது. நீ என் ஆம்படையா.''

''புரியறதோன்னோ? அதுக்குத் தகுந்த மாதிரி பதில் சொல்லுங்கோ: ராமு என்ன குத்தம் செய்தான்?''

''அதை என் வாயாலேயே சொல்லணுமாடி?'' என்று பரிதாபமாகக் கேட்டார் சர்மா.

''பக்கத்திலே யாரும் இல்லே. சும்மாச் சொல்லுங்கோ.''

''அந்த ராமுப் பயல் நம்ம ஜானுவைக் காதலிக்கிறுன்!''

''அவன் கிடக்கட்டும். ஜானுவோடே கதை என்ன? அவ அவனைக் காதலிக்கிருளா, இல்லையா?''

''அது எனக்குத் தெரியாது.''

''பொய் சொல்லாதீங்கோ. எல்லாம் தெரியும். காதல்னு ஒருத்தர் காதலிக்கிறதில்லே. ரெண்டு பேர் சேர்ந்தாத்தான் காதல். அதாவது தெரியுமோன்னே?''

சர்மா தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டார்.

''காலங்கடந்து தலையைத் தொங்கப் போட்டுண்டிருக்கேள். ராமுவை ஊரை விட்டுப் போகச் சொன்னப்போ நீங்க தலையைத் தொங்கப் போட்டுண்டு இருக்கணும். இல்லேன்னு, சாம்புத் தாத்தா, 'நீ ஏதோ இந்த உலகமெல்லாம் உன் உள்ளங் கையிலே இருக்கிற மாதிரி நினைச்சிண்டு, ராமு உடனே இந்த ஊரைவிட்டுப் போயாகணும்னு கட்டளை போடறே!'ன்னு சொன்னுரே. அப்போ நீங்க தலையைத் தொங்கப் போட்டுண்டு இருக்கணும். ராமு உங்க பொண்ணைக் காதலிச்சது குத்தம்னு, அதே குத்தத்தை அவளும் செய்திருக்கா. அதுக்குத் தண்டனையா ராமுவை விரட்டியாகணும்னு, உங்க பொண்ணையும் விரட்டியே தீரணும். ஒரே சமயத்திலே ரெண்டு காரியத்தையும் செய்ய வேண்டிய நீங்க, ஒண்ணை மட்டுமே செய்யத் துடிக்கிறேள். நாலு பேருக்கு நியாயம் சொல்றேள். இது உங்களுக்குப் புரியலையா?''

''ஜானு பெத்த பெண்ணுச்சேடி!'' என்று கலங்கினர் சர்மா.

''அதுக்காக ஊரார் பெத்த பிள்ளையோட தலைமேலே கை வைக்கறதா?'' என்ருள்.

அப்பொழுது, ''மன்னிக்கணும்'' என்ற குரல் வாசலில் கேட்டது.

சர்மாவும் தர்முவும் திரும்பிப் பார்த்தார்கள். கூப்பிய கரத்துடன் நின்றுகொண்டிருந்தான் ராமு.

சர்மாவுக்குக் கசப்பாய்க் கசந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அவன் உருவத்தில் பதிந்த தர்முவின் கண்கள் கொஞ்ச நேரம் விலகவே இல்லை. அறிவின் விசாலத்தைக் காட்டும் அகன்ற நெற்றி. அதில் முப்பாலுக்கும் அப்பாலாய் மெய்ப்பொருளின் சீர்மையைப் பளிச்சிட்டுக் காட்டும் திருநீற்றுக் கோடுகள். தாழ்ந்த உணர்ச்சிகளைச் சுட்டெரிக்கும் கூரிய கண்கள். முத்துவைப் பொத்திக் காக்கும் சிப்பியைப் போன்ற அதரங்கள். முழங்காலைத் தொடும் நீள் கரங்கள். உள்ளத்தின் வெண்மையைப் புறத்தே காட்டுவது போன்ற கதராடை.

அவனை அவள் பார்ப்பது புதிதல்ல. அவனை ஒவ்வொரு முறையும் அப்படித்தான் அவள் பார்க்கிருள். நூலைப் படிப்பதைப் போல அவனைப் படித்துப் பார்த்தால் ஒவ்வொரு முறையும் நயங்கள் குவிகின்றன.

வந்தவனை வரவேற்க நினைத்தவள், நீண்ட நேரத்துக்குப் பிறகே, ''வாப்பா ராமு!'' என்ருள்.

உள்ளே வந்தான்.

''உட்கார்'' என்ருள் தர்மு.

''பரவாயில்லை. ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போகலாம்னு வந்தேன். மாமா முகத்தைத் திருப்பிக்கிட்டார். அதுக்காக நான் வருத்தப்படலே. பேசாமலும் போகப் போறதில்லே. மாமா! முகத்தைக் கொஞ்சம் இந்தப் பக்கமாத் திருப்பறேளா?''

உள்ளே கனன்றுகொண்டிருந்த சர்மா, அதைக் கொட்ட முடியாமல் அவனை வேண்டாவெறுப்பாகத் திரும்பிப் பார்த்தார்.

அவன் அதைப் பார்த்துப் புன்னகை பூத்தான். ''மாமா! நான் இந்த ஊரை விட்டுப் போயிடணும்னு நீங்க விரும்பறேளாம். இந்த ஊரிலே நான் என்ன என்னவோ செஞ்சதாக யார் யாரோ சொல்ரு. அப்படி இல்லே. நான் ஒரு மழைத்துளி. இந்த ஊரிலே வந்து ஒன்டிண்டேன். அற்பமான என்னைக் கீழே வழிச்சுப் போட்டுடாமே எல்லாரும் கையிலே ஏந்திண்டா. அது என் பாக்கியம். அத்தனை பேரும் என்னை விரும்பறதைக் காட்டிலும் நீங்க ஒருத்தர் வெறுக்கிறதுதான் எனக்கு உறுத்தலா இருக்கு. நீங்க என்னை வெறுத்தாலும் விரட்ட முடியாது. இந்த உலகத்திலே பிறக்கிறதுக்கு எனக்கு எப்படி உரிமை இருந்ததோ, அதே மாதிரி எங்கேயும் வாழறதுக்கு உரிமை இருக்கு. ஆக நீங்க ஒருத்தர் நான் இங்கே இருக்கப்படாதுன்னு வெறுக்கிறப்போ, என் உரிமையை ஸ்தாபிச்சிண்டு இருக்கிறதிலே என்ன அர்த்தம் இருக்கு? நான் மழைத் துளி; எங்கேயும் ஒட்டிண்டுடுவேன். நமக்குள்ளே மனஸ்தாபம் வேண்டாம். பஞ்சாயம் வேண்டாம். நேருக்கு நேரா என்னிடத்தில் சொல்லிடுங்கோ. நான் போயிடறேன்'' என்ருன்.

அவன் முகத்தைப் பார்க்கத் தெம்பில்லை. பார்வை எங்கேயோ திருட்டுத்தனம் செய்தது. ''நீ போகத்தான் வேணும். நீ போய்த்தான் ஆகணும்'' என்று கத்தினர் சர்மா.

''போயிடறேன் மாமா! போயிட்டு வர்றேன், மாமா!'' என்று கண் கலங்கக் கரத்தைக் கூப்பிக் கொண்டே நடந்தான் ராமு.

''நில்லுங்கோ!''

சமையலறையிலிருந்து குரல் வந்தது. பிறகு ஜானு வந்தாள். ராமுவின் அருகில் போய் நின்றுகொண்டாள். ''என்னையும் கூட்டிண்டு போயிடுங்கோ'' என்ருள்.

சர்மாவுக்கு இடி விழுந்த மாதிரி இருந்தது. பரபரப்பே இல்லாமல் அமைதியாக இருந்த தர்முவைப் பார்த்தார். பிறகு தீர்மானத்துடன் ராமுவை நெருங்கி நிற்கும் ஜானுவைப் பார்த்தார். ''ஜானு, நீ பயத்தையே விட்டுட்டியா?'' என்று பொருமினர்.

''ஆமா, விட்டுட்டேன். பயம் காவலா இருக்கலாம். ஆனு கல்லறையா இருக்கப்படாது!'' என்று அழுத்தமாகக் கூறினுள் ஜானு.

''நீ செய்யறது அக்கிரமம், ஜானு!''

''முதல்லே செய்தது நீங்கங்கறதை மறந்துட்டேளா? நீங்க இவரை ஊரை விட்டுத் துரத்தப் பார்க்கறேள். அது அக்கிரமம் இல்லையா? நீங்க செய்த அக்கிரமம் எனக்குத் துணிச்சலைக் கொடுத்தது. இல்லேன்னு நான் உங்க எதிரிலே வரவும், உங்களிடத்திலே இப்படிப் பேசவும் துணிஞ்சிருக்கவே மாட்டேன்!'' என்று நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நிதானமாகப் பேசினுள் ஜானு.

''நீ போறதை நான் தடுக்கல்லே'' என்ருர் சர்மா.

''தடுக்கவும் முடியாது. நான் மேஜர்.''

''சட்டம் பேசறயா ஜானு?''

''பேசலே. சட்டம் தெரியும்னு சொன்னேன்.''

சர்மாவின் இருதயத்தில் ஒரு பிரளயமே நடந்துகொண்டிருந்தது.





ஒற்றைப் பெண் என்று அவளை உயிரில் வைத்து வளர்த்தார். இப்பொழுது அந்த உயிரை லங்காதகனம் செய்துகொண்டிருக்கிருள் அவள்!

''ஜானு, நீ போகத்தான் போறயா?''

''கிளம்பிண்டே இருக்கேன்.''

''என்னைவிட அவன் உனக்கு ஒசத்தியாப் போயிட்டானு?''

''உங்க அம்மாவுக்கும் எங்க அம்மாவுக்கும் எது ஒசத்தியா இருந்ததோ அதுதான் எனக்கும் ஒசத்தியா இருக்கணும். இருந்தாகணும்!'' என்று கூறிவிட்டு ராமுவின் முன்னல் போய் நின்றுகொண்டாள்; ''வாங்க போகலாம்.''

''ஜானு!'' என்று அழைத்த சர்மாவுக்கு இப்பொழுது கலக்கமும் பரபரப்பும் இல்லை; ''உன்னைப் பெத்தெடுத்து வளர்த்த தோஷத்துக்காக ஒண்ணு கேட்கிறேன்: எனக்கு ஒரு வரம் கொடுப்பாயா?''

''கேளுங்கோ. கைகேயி கேட்ட மாதிரி கேட்கப் படாது. அப்படி நீங்க கேட்டாலும் தசரதனைப் போல நான் கட்டுப்படவும் மாட்டேன். இந்த எச்சரிக்கையை நினைவிலே வச்சிண்டு எதை வேணுமானலும் கேளுங்கோ.''

''தயவு செய்து இப்போ நீ அவனேடே போக வேண்டாம்'' என்ருர் சர்மா.

''அப்பா!''

''அவசரப்படாதே. முழுக்கக் கேட்டுட்டுப் பிறகு பேசு. இப்போ நீ போயிட்டாயானு, ஓடிப் போயிட்டேன்னு ஊர் தூத்தும். உன்னைப் பொறுத்த வரையிலே அதை ஏத்துக்க நீ தயாராயிட்டே. நான் மானம் மரியாதைக்குக் கட்டுப்பட்டவன். உலகத்தை எதிர்த்து நிற்கிற துணிச்சல் எனக்கு இல்லே. அதனுலே உனக்கும் ராமுவுக்கும் சட்டுப்புட்டுன்னு கல்யாணம் செய்து வச்சிடறேன். பிறகு நீங்க எங்கே வேணுமானுலும் போங்கோ!''

''அப்பா!'' அவரை நோக்கித் துள்ளியோடி வந்தாள் ஜானு.

''நமக்குள்ளே இருந்த உறவு எப்போதோ போயிடுத்து. இப்போ நாம் ஒப்பந்தக்காராள்தான். அதை மறந்துட வேண்டாம்'' என்று கடுகடுத்தார் சர்மா.

ஒப்பந்தக்காரர் சர்மா நாணயஸ்தர். சொன்னபடியே ராமுவுக்கும் ஜானுவுக்கும் விரைவில் திருமணம் முடித்து வைத்தார்.

மணமக்களை ஆசிர்வதிப்பதற்காகச் சர்மாவை வலைபோட்டுத் தேடினர்கள். மனிதர் கண்ணுக்குத் தென்படவில்லை. தர்மு எங்கெங்கோ சுற்றியலைந்து தேடிவிட்டுக் கடைசியாக அந்த இருட்டறைக்குள் நுழைந்த போது விசும்பல் ஒலி கேட்டது. தர்மு விளக்கைப் போட்டாள். குப்புறப்படுத்தபடி விசித்துக்கொண்டிருந்த சர்மா, தலை தூக்கிப் பார்த்தார்.

''ஏன் அழறேள்?'' என்று பதறினுள் தர்மு.

''என்னவோ அழறேன்.''

''நன்னு இருக்கு போங்கோ. குழந்தைகளை ஆசீர்வதிக்கறதுக்கு உங்களைத் தேடு தேடுன்னு தேடிண்டிருக்கா. எழுந்திருந்து வாங்கோ.''

''நான் வரல்லே.''

''ஏன் வரல்லே? ராமுவை இன்னமுமா உங்களுக்குப் பிடிக்கலே?''

''அவனைப் பிடிக்கல்லேன்னு எனக்கு அறிவில்லேன்னு அர்த்தம்; கண் இல்லேன்னு அர்த்தம். அப்படி ஒரு பையன் கிடைக்கிறதுக்கு ஜானு அஞ்சு ஜன்மமா அதிர்ஷ்டம் செய்திருக்கணும். நான் அழறதுக்குக் காரணம் அதுவெல்லாம் இல்லே. ஜானுவண்டை நான் எத்தனை உசிரா இருந்தேன் என்கிறது உனக்குத் தெரியும். அவளைப் பிரிஞ்சு என்னுலே ஒரு நிமிஷம் உயிரோடே இருக்க முடியுமா? அதனுலேதான் அவ கல்யாணத்தை ஒத்திப் போட்டுண்டு வந்தேன். அவ ராமுவைக் காதலிச்ச போதும், குறுக்கே நின்னு நான் குழப்படி செஞ்சதுக்குக் காரணம் அதுதான். ஜானு என்னை விட்டுப் பிரிஞ்சிட்டா. நான் அவளை இழந்துட்டேன். இனிமே நான் உயிரை விட்டுடப் போறேன்டி, தர்மு'' என்று குலுங்கிக் குலுங்கி அழுதார் சர்மா.

''உளருதீங்கோ'' என்று கடிந்து கொண்ட தர்மு தொடர்ந்தாள்: ''ஜானுவை நாம இழக்கல்லே. வழங்கியிருக்கோம். உலகம் தோன்றின நாள்முதலா ஒவ்வொரு தாய் தகப்பனும் இதே மாதிரி கஞ்சத்தனம் இல்லாமே வழங்கியிருக்கா; எங்கப்பா எங்கம்மா என்னைப் 'பாசம்'னு பூட்டி வச்சிருந்தாள்னு உங்களுக்கு நான் ஏது? ஜானுதான் ஏது? என்னை நீங்க பிரிக்கலாம். உங்களை மட்டும் உங்க பொண்ணு விட்டுப் பிரியக் கூடாதோ? இதென்ன நியாயம்?''

''அநியாயம்தான்டி தர்மு! உன்னை நான் திருமணம் என்கிற பேரிலே கொள்ளையடிச்சேன். அதே சமயத்தில் நான் ஜானுவைக் கொள்ளை கொடுக்கப் பயப்படறேன். ஒவ்வொரு பொண்ணைப் பெத்தவனும் இந்தக் கொள்ளையைக் கொடுக்கத் தயாரா இருக்கணும். நான் மட்டும் ஏன் தயங்கறேன்?'' என்று எழுந்தார். மணமக்களை ஆசிர்வதிக்க விரைந்தார்.

★

எமது தீபாவளி வாழ்த்துக்கள்!!




பட்டுச் சேலைகள்
சோளி பீஸ்கள்

கைத்தறி ஜவுளிகளுக்கு

நல்லி
டெக்ஸ்டைல்
பாண்டி பஜார்
தியாகராய நகர் - சென்னை-17

போன்:
442567

நல்லி ஸ்டோர்ஸ்

லஸ்-மையிலாப்பூர் சென்னை-4

போன்: 71595

- சகாயமான விலையில் தரமான ஜவுளிகள் மற்றும்
- பின்னியின் எல்லா ரகங்களும் எம்மிடம் கிடைக்கும்..

NALLI SILKS
— SILK SAREES —




ஸ்ரீ

பட்டுச் சேலைகளுக்கு மட்டும்
பிரத்யேகமான புதிய ஷோ-ரூம்

நல்லி சில்க்ஸ்

82, ராயப்பேட்டை ஹைரோட்

லஸ் - மயிலாப்பூர் · போன் 74862 · சென்னை 4

விஜயம் செய்யுங்கள்! நல்லி சில்க்ஸ் பனரஸ் ஹால்




பின்னியின்
எல்லா ரகங்களுக்கும்

நல்லி

சின்னசாமிசெட்டி & ஸன்ஸ்

பாண்டி பஜார்
தி. நகர் - சென்னை-17

போன்: 444347

GP

ராஜா
ஸ்னோ

ஓர் பிரசித்திபெற்ற
முக அழகு சாதனம்,
ஆடவரும், பெண்டிரும்
விரும்பி உபயோகிப்பது
ராஜா ஸ்னோ.









ராஜா
டால்கம்
பவுடர்

தனிச்சிறப்புள்ளது
நல்ல மணமுள்ளது
பட்டுப் போன்றது
ராஜா டால்கம் பவுடர்

MANYAM & CO.,
RAJA SNOW BUILDINGS, BANGALORE – 20

# பரமனை மணந்த பக்தைகள்



உறையூர்வல்லி



லல்லேசுவரி



அக்க மாதேவி



நங்கைப் பெண்

**ஆ**ண்டாளையும் மீராவையும் போல, 'பரமனே என் பதி' என்ற உணர்வுடன் பல பக்தைகள் பாரத நாட்டில் இருந்திருக்கிறார்கள். அவர்களில் நால்வரின் ஓவியத்தை அடுத்துக் காணலாம்.

**உ**றையூரில் இருந்து ஆண்ட நந்தசோழனுக்கு, அரங்கநாதனின் அருளினால் அழகிய மகள் பிறந்தாள். அவள் தோழிகளுடன் அரண்மனைத் தோட்டத்தில் பூப்பறிக்கையில், ஓர் அழகன் குதிரை மேல் வேட்டையாடச் செல்வதைக் கண்டு, அவனிடம் மையல் கொண்டாள். அரங்கனே அந்த அழகன். அவனும் உறையூர்வல்லியிடம் மனத்தைப் பறிகொடுத்தான்.

மகள் நலிவதைக் கண்ட மன்னனும் அரசியும் அவளை அரங்கனுக்கே மணம் செய்விக்க விரும்பினர். அரங்கனும் இதற்கு இசைந்தான். உறையூரில் திருமணம் நடந்தது. அரசன் உறையூர் வல்லியை ஆயிரம் தோழிகளுடன் ஸ்ரீரங்கத்துக்கு அனுப்பி வைத்தான். கோயிலில் திருமணத் தூணை அணுகியதும் உறையூர்வல்லி அரங்கனுடன் கலந்துவிட்டாள்.

உறையூரில் இப்போதும் ஆண்டுதோறும் இந்த மணத்தைக் கொண்டாடுகிறார்கள். பெருமாளும் தாயாரும் திருமணக் கோலத்தில் விளங்குகிறார்கள்.

**கா**ச்மீரத்தில் ஸ்ரீ நகரிலிருந்து வடகிழக்கில் நான்கு மைல் தொலைவில் பண்ட்ரன்தான் என்ற ஊரில், காச்மீரிப் பண்டித குடும்பத்தில் பிறந்தவள் லல்லேசுவரி. பதினான்காம் நூற்றாண்டில் இவள் வாழ்ந்தவள்.

அந்தக் குடும்பத்தினர் வழிவழியாகச் சிவபெருமானை வணங்குகிறவர்கள். சிறு பருவம் முதலே லல்லாவுக்குப் பரமனிடம் பக்தி நிரம்பியிருந்தது.

வழக்கப்படி அவள் தந்தையார் அவளுக்கு ஏற்ற கணவனைத் தேர்ந்தெடுத்து, திருமணம் செய்து கொடுத்தார். அவள் மணமாகிக் கணவனுடன் வாழ்ந்த போதிலும் அவள் மனம் உலகை வெறுத்துச் சிவபெருமானையே காதலித்தது. ஆதலால் கணவனுடன் அவள் இன்புற்று வாழவில்லை. அது கண்டு கணவன் அவளை வெறுத்து அலட்சியப்படுத்தினான். பன்னிரண்டு ஆண்டுகள் பொறுமையோடு இருந்த அவள், கணவனுடைய புறக்கணிப்பும் மாமியாரின் கொடுமையும் தாங்காமல், வீட்டைத் துறந்து, இறைவனையே பாடி ஆடிக்கொண்டு நாடு முழுவதும் சுற்றினாள். ஈசுவரனையே, கணவனாகக் கொண்ட லல்லா, லல்லேசுவரியானாள்.

ஸ்ரீசைலத்துச் சென்ன மல்லிகார்ஜுனனைச் சிறு பிராயத்திலிருந்தே காதலித்து வாழ்ந்தவள் அக்க மாதேவி. கன்னட நாட்டில் உடுதடி என்பது அவள் பிறந்த ஊர்.

அரசன் ஒரு நாள் ஊர்வலம் செல்லுகையில் அவளது அழகைக் கண்டு அவளை மணக்க விரும்பினான். 'நான் என் விருப்பப்படியே சிவபிரானைத் தொழுவேன்; சிவனடியார்களை வழிபடுவேன்; குருவுக்குப் பணிவிடை செய்வேன். இவற்றுக்குத் தடை நேர்ந்தால் எந்தக் கணமும் விலகுவேன்' என்று அவள் விதித்த நிபந்தனையை ஏற்று, அரசன் கௌசிகன் அவளை மணந்தான்.

சிவனடியார்கள் அரண்மனைக்கு எந்நேரமும் வந்தபடி இருப்பார்கள். அரசனுக்கு இது பொறுக்கவில்லை. ஒரு நாள் மாதேவி கணவனுடன் இருக்கையில், குரு அவளைக் காண வந்தார். அவன் தடுத்தும் கேளாமல் அவள் குருவைத் தரிசிக்க விரைந்தாள்.

அன்றே அவள் தனியாக ஸ்ரீசைலத்தை நோக்கிப் புறப்பட்டாள். 'பொன்னணி பூண்டு, நறுமணங் கமழ, நல்லாடையுடுத்து என்னை மணம் புரிய வருவாய், நாதனே!'' என்று அவள் பாடிச் சென்று, சிவபிரானை அடைந்து பேரின்பமெய்தினாள்.

**தி**ருப்புலித் துறையில், வடக்கெடுத்த இல்லம் என்ற மலையாளி அந்தணக் குடும்பத்தில் தோன்றிய நங்கைப் பெண், அறியாப் பருவத்திலேயே அவ்வூர்க் கோவிலில் எழுந்தருளியிருக்கும் திருமாலிடம் அன்பு கொண்டாள். அவளுக்கு வயது வந்ததும், பெற்றோர் ஒரு பணக்கார இளைஞனுக்கு அவளை மணம் செய்து கொடுக்க நிச்சயித்தார்கள்.

திருமண நாள் வந்தது. மணமகன் ஊர்வலம் வந்தான். நங்கைப் பெண் கோவிலில் திருமாலை வழிபடச் சென்றாள். விக்கிரகத்திலிருந்து வெளிவந்து, திருமால் அவள் கையைப்பிடித்து அழைத்துப் போனான். இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. மணமகன் விட்டார் இதைக் கேட்டுத் திரும்பிப் போனார்கள். ஆனால் ஊரார், நங்கைப் பெண்ணின் பெற்றோர் பெற்ற பேற்றைப் புகழ்ந்தார்கள்.

இன்றும் கோவிலில் ஆண்டுதோறும் நங்கைப் பெண் மணவிழா நடைபெறுகிறது. நங்கைப் பெண் வாழ்ந்திருந்த வீட்டுக்குத் திருமால் எழுந்தருளி, அந்தக் குடும்பத்தினரிடமிருந்து ஆடை ஆபரணங்களையும் விருந்தையும் ஏற்றருளுகிறார்.

[இந்தப் படங்களை வரைந்தவர் ஓவியர்: உமாபதி]









# அம்மாவுக்கு விஷக்கண்

"கல்பனா"



"அண்ணு! சபேசண்ணு! இவர் நம்ப ஊரைப் பார்க்கிறதுக்கு வந்திருக்கார்.''

வந்துட்டாளா, மறுபடியும்?

ஏன்ய்யா, வேறே வேலே கிடையாது, உங்களுக்கெல்லாம்? விவசாயம் பண்ணப் போகக் கூடாது? நாலு பண்டத்தை உற்பத்தி பண்ற பாக்டரி வைக்கக் கூடாது?

பயனில்லாமல் வாழக் கூடாதய்யா யாரும். புல்கூட ஒரு பிராணிக்கு உணவாப் பிரயோசனப்படறதய்யா. வேதத்திலே என்ன சொல்லியிருக்குன்னு தெரியுமா உமக்கு? நீர் எங்கே வேதம் படிச்சிருக்கப் போறீர்?

ஆனல் எங்க இச்சிப்புடியிலே ஒரு காலத்திலே வேதம் ஆகாசம் முட்ட முழங்கித்து. வேதபுரீச்வரன்னுதான் பேர் எங்க ஊர் ஸ்வாமிக்கு. மார்க்கண்டேசுவரர்ங்கறதெல்லாம் இப்ப; உம்மப் போல யாரோ ஒருத்தர் 'ரிசர்ச்' அது இதுன்னு குத்திக் குடைஞ்சுட்டு, சர்க்கார் உத்தரவோட நாமகரணம் பண்ணினப்போ. ஆதியிலே எங்க ஸ்வாமி, வேதபுரீச்வரர்தான்; அம்பாள் வேதாம்பாள்தான். அம்பாளுக்கு மட்டுமில்லே; இந்த ஊரிலே பெண்ணுகப் பிறந்ததெல்லாம் வேதம், வேதவல்லி, வேதம்மாதான். இப்பத்தான் லல்லி, புல்லி, சுலோச்சு, மிலேச்சுன்னு காட்டுமிராண்டிகள் எல்லாம் வந்து புகுந்துண்டு ஊரையே நாசமாக்கிண்டிருக்குகள்.

நீரும் ஒரு காமிராவைத் தூக்கிண்டு வந்துட்டீரே. என்னய்யா இருக்கு, இந்த ஊர்ச் சிலேயிலே, சிற்பத்திலே, கோபுரத்திலே? ஒண்ணொண்ணேயும் காட்டிக் காட்டி அலுத்துப் போயிடுத்தய்யா எனக்கு. கல்சங்கிலி, கல்லூஞ்சல், யாளி வாயிலே உருளற கல்லுருண்டை, அன்னத்திலே உட்கார்ந்திருக்கிற ரதி, அவள் எதிரே கரும்பு வில்லோட நிக்கற மன்மதன். போருமய்யா, போரும்.

அந்த ரதி சிலேயை எனக்குத் தெரிஞ்சு ஒரு நூறு 'போட்டோ கிராப'ராவது வந்து படம் புடிச்சுண்டு போயிருப்பன். 'நாஷனல் ஆர்ட் காலரி' யிலே சீப் ரிஸர்ச் டைரக்டரா இருக்காரே - எலத்தூர் நாகசாமியய்யர் பிள்ளே, ரங்கண்ணு, அவர் மட்டும் நாலு தடவை வந்து 'போட்டோ' எடுத்துண்டு போயிருக்கிறா. ஆனு அவதான் ரதியா?

''என்னண்ணு சொல்றேள்?''ன்ணுர் ரங்கண்ணு.

''ஆயிரம் பதிணுயிரம் வருஷமாக வாழையடி வாழையாக அப்பாவுக்குப் பின்னே பிள்ளே, பிள்ளேக்குப் பின்னே அவன் பிள்ளேன்னு ஒரு ஜீவ சக்கரமே திரும்பத் திரும்ப வேதகோஷம் பண்ணிப் பண்ணி, அதிலே எழுந்த தேஜஸ், அதிலே எழுந்த காம்பீர்யம், அதிலே எழுந்த தைரியம் எல்லாத்தையும் முத்திப்போன நிலேயிலே பெண்ணுக வடிச்ச வடிவம் ஒண்ணு எங்க ஊரிலே இருக்கு, ஸ்வாமி! அதை மட்டும் உங்க மன்மதன் விநாடிப் பொழுது பார்த்துட்டான்னு, அப்பறம் ஆனேகட்டித் தெரு ஏழாம் நம்பர் ஆத்து வாசல்லேயே ஸ்திரமா 'டேரா'ப் போட்டுடுவன்!'' என்றேன்.

''அப்படியா? அப்போ அவளே நான் பார்க்கணுமே''ன்ணுர்.

''வாண்டாம்; நீர் பார்க்க வாண்டாம். பார்க்காமல் இருக்கிறதே உமக்கு உத்தமம். பார்த்துட்டா, அப்பறம் ஆர்ட் சப்ளிமென்ட், கலர் ஸ்நாப், பெண்டாட்டி பிள்ளே, உத்தியோகம் எல்லாத்தையுமே மறந்துடுவீர். இந்த இச்சிப்புடியைப் பைத்தியமாக அவள் அடிச்சுண்டிருக்கிறது போரும். உம்மையும் பைத்தியமாக்க வாண்டாம்.''

ரங்கண்ணு, ''அப்போ கட்டாயம் அவளே நான் பார்த்தே ஆகணும்''னு பிடிவாதம் புடிச்சார். ''சரி, கிளம்பும்''ன்னேன்.

புறப்படுகிறபோது பின்னுல் கதவோரம் வளே குலுங்கி, ''உள்ளே சித்தே வந்துட்டுப்போங்கோ''ன்னுது; போனேன். ''எங்கே கிளம்பினேள்?'' என்ருள் என் சம்சாரம்.

''வேதாவைப் பார்க்கணுமாம் ரங்கண்ணுவுக்கு!'' என்றேன்.

''அட்ரஸ் சொல்லி அனுப்பிச்சுடுங்கோ. நீங்க போக வாண்டாம்'' என்ருள் அவள்.

''அசடே! எனக்கு நாலு வருஷத்துலே சஷ்டியப்த பூர்த்தி வர்ரதுடீ' என்று கூறிச் சிரிச்சேன்.

''சதாபிஷேகம் வந்தாலும், நீங்கள் புருஷாள். நீங்கள் போக நான் சம்மதிக்க மாட்டேன்'' என்ருள். அவளுக்குப் பயம். அவளுக்கு மட்டுமில்லே. இந்த ஊரிலே இருக்கிற பொம்மனுட்டிகள் எல்லாருக்குமே வேதாகிட்ட அப்படி ஒரு பயம்.

ஆனேகட்டித் தெருவும் புலிமால் தெருவும் சேர்கிற சந்தியிலே பொட்டிக் கடை வைத்திருக்கிருரே சுலேமான் ராவுத்தர் - அவர் எனக்கு ஆப்தர். அவர் கடையிலே கொண்டு போய் ரங்கண்ணுவை உட்கார்த்தி வைத்தேன்.

''அதோ, வாசல்லே ஒரு 'டும்' லேட் துருத்திண்டு தெரியறதே, கீழண்டை வரிசையிலே, அந்த வீட்டையே பார்த்துண்டிரும்'' என்றேன்.

''திண்ணேயிலே யாரோ காலேத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிற மாதிரி இருக்கே'' என்ருர் ரங்கண்ணு.

''ஆமா. அது வந்து அவ பொண்ணு: அது எப்பவும் திண்ணையிலே அலங்காரம் பண்ணிண்டு உட்கார்ந்து இப்படித்தான் காலை ஆட்டிண்டிருக்கும். தன் கால் விரல்களையே பார்த்திண்டிருக்கும். ராஜஸ்தான்லேதான் அவ அப்பன் ஏதோ அரண்மனையிலே வேலையாயிருந்தான். இவளை இவ அம்மா உண்டாயிருந்தபோது ஒரு வருஷம் வந்துகூட இருந்தான். அப்புறம் திடீர்னு 'நந்தவனத்திலோர் ஆண்டி'ன்னு பாடிண்டு கிளம்பிப் போயிட்டான்.''

''அப்படியா? பொண்ணும் ராஜஸ்தான் பொம்மனாட்டிகள் மாதிரி கரணை கரணையாக் காலும் கையும் கொண்டுதான் இருக்கு. ஒண்டர் புல்; ஒண்டர் புல்''னார் ரங்கண்ணா.

அவர் வைத்த கண் வாங்காமல் அந்தப் பொண்ணையே பார்த்திண்டிருந்தார். ''சாமி, பொண்ணைப் பார்த்தே இப்படிச் சொல்றகளே, அம்மாக்காரியைப் பார்த்தா என்ன சொல்விகளோ?'' என்றார் ராவுத்தர்.

''ஆணியடிச்ச மாதிரி நின்னுப்புடுவர்'' என்று சிரித்தேன். ராவுத்தரும் என்கூடச் சேர்ந்து சிரித்தார்.

திடீரென்று ரங்கண்ணா என் கையைத் தாவிப் பிடிச்சுண்டார். ''அண்ணா! அண்ணா!'' என்றார். ''அதோ, அதோ'' என்றார். ''ஆஹா! ஆஹா!'' என்றார்.

நானும் ராவுத்தரும் அந்தத் திசையிலேயே பார்க்காமல், திரும்பி நின்றுகொண்டு ரங்கண்ணாவையே பார்த்துக்கொண்டிருந்தோம்.

பின்னால் கலீர் கலீர் என்று மெட்டி சிரித்துக்கொண்டே நிதானமாக வந்தது. நிதானமாகக் கடந்து போயிற்று. கூடவே என்ன மணம்! சம்பங்கி, மல்லி, முல்லை, மருக்கொழுந்து எல்லாத்தையும் ஒரு கூடை சுமந்துகொண்டு போகிற மாதிரி மணம். 'பாருடா, என்னைப் பாருடா' என்று வலிந்திழுக்கிற மாய மணம்.

ரங்கண்ணா ஆணியடிச்ச மாதிரிதான் நின்றார். ரொம்ப நேரமாச்சு, அவருக்குப் பிரக்ஞை வர. ''அண்ணா, இப்படிக்கூட ஒரு புருவமா? இப்படிக்கூட ஒரு நெத்தியா? இப்படிக்கூட ஒரு மூங்கில் ஆகிருதியா? இப்படிக்கூட ஒரு ஆகர்ஷணமா?'' என்று புலம்பிக்கொண்டேதான் திரும்பி வந்தார்.

அன்றிரவு அவர் ஊருக்குப் போகவில்லை. பிரயாணத்தை ரத்துப் பண்ணிவிட்டு, தாழ்வாரத்திலே ஈஸிசேரில் படுத்துக்கொண்டு விட்டார், பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு.

''அண்ணா! இப்படிக்கூட ஒரு புருவமா? விழிகளா?''

இடக்கையில் வெத்திலையைச் சுருட்டிண்டு, பிச்சோடாவும் சங்குக் கழுத்துமாக அவள் கிளம்பிவிட்டாளானால் தெரு முழுக்க மின்னல் பாயும். அசட்டு லஜ்ஜை, அசட்டுத் தயக்கம், அசட்டுப் பயம் ஒண்ணும் கிடையாது. அசட்டுச் சிரிப்பும் சிரிக்க மாட்டாள். கணீரென்று பேசுவாள்; பளிச்சென்று சொல்ல வந்ததைச் சொல்லுவாள்.

புருஷன் ஓடிப்போனப்புறம் ரொம்ப நாள் வெளியில் வராமல் இருந்தாள். ''என் கண் ரெண்டையும் குத்திக்கொண்டு விடப்போகிறேன்'' என்று குதியாய்க் குதிச்சாள். ''இந்தக் கண்தான் அவர் புத்தியைப் பேதலிக்கப் பண்ணித்து; இந்தக் கண்தான் அவர் புத்தியைப் புடுச்சுத் திருகித்து'' ன்னு குதிச்சாள். ஒரு நாள், கரண்டிக் காம்பைப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சிக்கூடச் சுட்டுக்கப் போனாளாம். யாரோ பாத்து-யாரோ என்ன, பெத்த பெண்ணேதான் - பாத்துப்பிட்டு, 'அம்மா அம்மா'ன்னு கதறி, இனிமே அந்த மாதிரி எல்லாம் ஒண்ணும் பண்றதில்லைன்னு சத்தியம் வாங்கிண்டப்புறம் அடங்கினாளாம்.

எதுக்குச் சொல்ல வந்தேன் என்றால் அப்பேர்ப்பட்ட விஷம் தோய்ந்த கண் அவளுக்கு. வில்லாக எகிறி விழுந்திருக்கிற புருவத்தின் ஒவ்வொரு காலிலேயிருந்தும் மோகம் சொட்டும்.

வேதாந்தம் ராகவய்யான்னு ஒரு பெரியவர் இருந்தார் இந்த இச்சிப் புடியிலே. அவர் சொல்லுவார்: ''ஆயிரம் வருஷமா இந்த ஊரிலே வேதம் முழங்கித்துங்கறேள். வீடு தவறாமல் முழங்கித்து என்கிறேள். அவ்வளவு முழங்கினப்புறமும் இங்கே விளைஞ்சிருக்கிறதெல்லாம் சுத்தத் தங்கந்தானா? எத்தனை பித்தளை, எத்தனை ஓட்டை ஒடசல்னு உரசிப் பார்க்கிறதுக்குப் பகவான் அனுப்பியிருக்கிற இரண்டு சாணைக்கல்தான் அந்த இரண்டு புருவமும்.''

ராகவய்யா சகல சாஸ்திரத்தையும் கரைச்சுக் குடிச்சவர். கோயில் மண்டபத்திலே 'வேதாந்த லெக்சர்' அடிப்பர். கோயில்லே ஆனை வாகனம், யாளி வாகனம் எல்லாம் வரிசையாக வச்சிருக்கே ஒரு பிராகாரம், அதிலே கடைசியில் இருக்கிற கதவில்லாத ரூம்தான் அவர் ஜாகை. சாயந்தர வேளையிலே அந்த ரூம் வாசலில் வந்து பத்மாசனம் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருப்பர்.

தாயும் பெண்ணுமாகக் கோயிலுக்கு வரும்பொதெல்லாம், வேதாந்தத்தின் முன்னால் வெகு நேரம் நிற்பார்கள், வேதாவும் சிலாவும்.

ஒரு நாள் யாளி வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து கையை உத்தரீயத்துக்குள்ளே மறைத்துக்கொண்டு ஜபம் பண்ணிக்கொண்டிருந்தேன். திடீரென்று விம்மல் சத்தம் கேட்டது; பொம்மனாட்டி விம்மல்.

''என்ன?'' என்று ஓர் அதட்டல் போட்டார், பத்மாசனத்திலே இருக்கிற வேதாந்தம். விம்மல் சட்டென்று அடங்கிற்று. குரல் கேவிற்று. ''எனக்கு மனசிலே நிம்மதியே இல்லை; ராத் தூக்கம் இல்லை.''

''காரணம்?''

''லோகம் முழுக்க வெறுக்கிறது என்னை; இந்த ஊர்ப் பொம்மனாட்டிகள் எல்லாம் என்னை விஷமாப் பார்க்கிறா; விஷமா நினைச்சு ஒதுக்கறா. நான் என்ன பாவம் பண்ணினேன்?''

வேதாந்தம் பேசாமல் இருந்தார்.

''ஸ்வாமி என்னை இப்படிப் படைச்சதுக்கு நானா பொறுப்பு? நான் யாரையும் ஏறிட்டுக் கூடப் பார்க்கிறதில்லை; பார்க்க எனக்கே பயமாக இருக்கு இப்பல்லாம். பார்த்தால் லோகம் சொல்றது நிஜமாயிடுமோன்னு பயமா இருக்கு. எங்கே கொண்டுபோய் என் கண் ரெண்டையும் நான் ஒளிச்சு வைப்பேன்?''

''நம் ஊருக்கு இச்சிப்புடின்னு ஏன் பேர் வந்தது தெரியுமா உனக்கு?'' என்று கேட்டார் வேதாந்தம் கணீரென்று.

''தெரியும். முன்னே நம்மூர்லே கலிதீர்த்த பெருமாள்னு ஒரு ஸ்வாமி வேதவதிக் கரையிலே எழுந்தருளியிருந்தாராம். அவருடைய ரெண்டு திருவடிகளும் ரெண்டு தாமரையாய் இருக்குமாம். 'இத்தைப் பிடிச்சுக்கோடா, உன் பித்தெல்லாம் தெளியும்'னு அவர் சொன்னாராம். இத்தைப் பிடிச்சுக்கோதான் இச்சிப்புடியாயிடுத்து என்பார்கள். இப்போ அந்தப் பெருமாள் வெள்ளத்தோட போயி, வேதவதியிலே காளிங்கர் படித் துறை மடுவிலே எங்கோ இருக்கார். அவர் பாதங்களை மனசிலே வாங்கிண்டு, அதிலே உன் கண்ணை மறைத்துக் கொள்; எல்லாம் சரியாயிடும்!'' என்றார் வேதாந்தம்.

எட்டிப் பார்த்தேன். வேதாதான் கண்ணைத் துடைத்துக்கொண்டே தலையை ஆட்டிவிட்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

'அட, இப்படி ஒரு துக்கமா, இவள் மனசிலே?' என்று நினைத்தபடி வீட்டுக்கு வந்தேன். ஆனைகட்டித் தெரு வழியாகத்தான் வீட்டுக்கு வர வேண்டும். தெரு முனை திரும்பினதுமே திண்ணையில் உட்கார்ந்து காலை ஆட்டிக்கொண்டிருக்கிற பொன் கண்ணிலே பட்டது. வெறுமனே காலாட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கலை. ஒரு காலைத் தரையிலே ஊனிண்டு சைக்கிள் மீது உட்கார்ந்திருக்கிற ஒரு பயலோடு பேசிச் சிரித்துக்கொண்டிருந்தது.

'அட, என்னடா, இது இப்படி! அம்மா கோயிலுக்குப் போயிருக்கிறபோது இப்படி ஒரு நாடகம்?' என்று நினைத்துக்கொண்டேன். நான் கிட்ட வருவதற்கும் பையன் 'நான் வரட்டுமா? சீரியோ!' என்று கிளம்புவதற்கும் சரியாக இருந்தது. விருட்டென்று சைக்கிளில் தாவிப் போய்விட்டான். ஆனால் அந்தக் கட்டம் போட்ட சட்டை, அந்தப் பின் காதுகள், மண்டை எல்லாவற்றையும் எங்கோ பார்த்த மாதிரி இருந்தது. வீட்டுக்கு வந்தேன். படியேறினதும் முதலில் என் கண்ணில் பட்டது ஆணியில் மாட்டியிருந்த அதே சட்டைதான். பகீரென்றது.

''என்னடா இது? ஏன்டா பொய் சொல்றே? காமாட்சி அத்தை வந்து சொன்னாளே; 'உன் பிள்ளை ஆனைகட்டித் தெருவிலே அரை மணியாய்ச் சுத்திக்கொண்டிருக்காண்டி' ன்னாளே. மறைக்காதேடா, பெத்த தாயாரிட்டே. நீச நாய்டா அந்த ஏழாம் நம்பர் வீட்டு முண்டம்'' என்று என் சம்சாரம் சொல்லிக்கொண்டிருப்பது கேட்டது.

''நீ ஒரு முட்டாள் அம்மா, சுத்த முட்டாள்!'' என்று சொல்லிக்கொண்டே பையன் பெட்டியில் துணிமணிகளை அடுக்கினான்.

கிறபோது வாசல்லே அந்தப் பொண் உட்கார்ந்திருந்தது. என்னைப் பார்த்துச் சிரிச்சுது. 'ஒரு நிமிஷம் நின்னுட்டுப் போ'ன்னுது. 'காலேஜ் படிக்கப் போகிறாயாமே. எங்களை எல்லாம் மறந்துடாதேப்பா'ன்னுது!'' என்றான் பையன்.

''அவ்வளவுதானே? வேறே ஒண்ணுமில்லையே?'' என்றேன்.

''வேறே என்னப்பா இருக்கு?'' என்றான் பையன்.

''பொய், எல்லாம் பொய். பொண்ணைப் பார்த்தேன், பேசினேன் என்றதெல்லாம் பொய். அந்த அம்மாப் பிசாசைத்தான் பார்த்துப் பேசிவிட்டு வந்திருக்கிறான்!'' என்று கத்தினாள் மனைவி.



''கேட்டயளா, உங்க பிள்ளை பண்ணின காரியத்தை? ஆனை கட்டித் தெருவுக்குப் போயிட்டு வந்திருக்கிறான்'' என்று என்னைப் பார்த்ததும் மனைவி பிரலாபித்தாள்.

''யாரைப் பார்க்கவோ?'' என்று கேட்டேன்.

''சும்மா ஒரு 'கர்ட்டஸி விஸிட்'. நாளைக்குக் காலேஜுக்குப் படிக்கக் கும்மாணம் போகிறேனே இல்லையோ, சொல்லிண்டு வரப் போனேன்.''

''அவள்கிட்ட என்னடா சொல்லிக்கிறது நீ?'' என்று பாய்ந்தாள் தாயார்.

''அவள்கிட்டச் சொல்லிக்க யார் போனா? பாப்லு ஸார் கிட்டச் சொல்லிக்கன்னா போனேன்? திரும்பி வரு

''முட்டாள்! முட்டாள்!''

பையனும் பதிலுக்குக் கத்தினான். படாரென்று பெட்டியை அடித்து மூடினான். எழுந்து போய்விட்டான்.

மறுநாள் கும்பகோணம் போய்விட்டான்.

அடுத்த தடவை லீவுக்கு வந்திருந்தபோது ரொம்ப ஜாக்கிரதையா இருந்தான். அம்மா தன்னைச் சந்தேகப்படுவதை உணர்ந்து கொண்டு ஜாக்கிரதையாக இருக்கிற மாதிரி இருந்தது. வீட்டிலேயே புத்தகங்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அம்மாக்காரியும் விழிப்பாகத்தான் இருந்தாள். பையன் ஆனை கட்டித் தெருப் பக்கமே போகாமல் இருந்து, லீவு முடிந்ததும் திரும்பிப் போய்விட்டான்.

எதுக்குச் சொல்ல வந்தேன்னா, அப்படி நல்லவனைக்கூடச் சந்தேகப் படும்படியாக, அப்பேர்ப்பட்ட அசாதாரணக் கண்கள் எங்க ஏழாம் நம்பர் வீட்டுப் பெண்டுக்கு.

''அது கிடக்கட்டும்னா. பையன் சமாசாரம் சொல்லுங்கோ.''

ஆள் 'ஜம்'முனு இருப்பன். உத்தியோகம் போட்டுத் தரேளா, உங்க ஆபீசிலே? பையனை வேணும்னா வரவழைக்கிறேன்; பக்கத்துக் கிராமத்துக்குத்தான் மாமா் வீட்டுக்குப் போறேன்னுட்டுப் போயிருக்கிறான். இன்னிக்கென்ன வியாழனா? நாளைக்குக் கட்டாயம் வந்துடுவன். அவன் வர்ரவரைக்கும் நம்மாத்திலேயே நீங்க தங்கியிருக்கலாம். நம்ப சம்சாரம் நளபாகமாச் சமைப்பாள். சாப்பிட்டுட்டு ஆனந்தமா ஓய்வு எடுத்துக்குங்கோ. அதுக்குள்ள நாலு நாளாப் பேயாய்க் கொட்டற இந்த மழையும் நின்னுடும். கோயில்லாம் பாத்துட்டு, மலைமேலே போய்க் குகைகள் எல்லாம் பார்க்கணும்ங்கறயளே. வேதவதியைத் தாண்டின்னா போகணும்? நதியிலே இப்ப ரெண்டு கரையும் தொட்டுக் கொண்டுன்னா போறது வெள்ளம்?

யாரடீ, அது? பேசிண்டிருக்கச் சேயே சும்மா தொணதொணன்னு கதவுக்குப் பின்னாலே நின்றுகொண்டு ஓயாமல் கூப்பிடறது? என்ன சமாசாரம்? என்ன விஷயம்? நான் இப்ப இவாளோட நம்ப பையன் உத்தியோக விஷயமாப் பேசிண்டிருக்கேன்.

'என்னது? என்னது? என்னது?'

நிஜமாகவா? ஆம் திறந்து கெடக்கா? ஏழாம் நம்பர் வீடா? பொண்ணையும் காணோம்; தாயார்க்காரியையும் காணோமா? அட கடவுளே! நேத்திலேருந்தேவா? என்னடீ சொல்றே? உனக்குப் பைத்தியம் கியித்தியம் பிடிச்சுடுத்தா என்ன?

''ஊர்முழுக்கக் கூடியிருக்காம் அந்த முண்டத்தோட ஆத்து வாசல்லே. போட்டது போட்டபடி போட்டுட்டு மாயமாப் பறந்துடுத்தாம் பெரிய பிசாசும் குட்டிப் பிசாசும். போய்ப் பாருங்கோ.''

ஸார் ஸார், என்னை மன்னிச்சுடுங்கோ ஸார்! நான் இப்பக் கொஞ்சம் அவசரமாப் பக்கத்துத் தெரு வரைக்கும் போக வேண்டியிருக்கு. பெரிய நஷ்டம் ஒண்ணு நேர்ந்துடுத்து ஸார், இன்னிக்கு, இந்த இச்சிப்புடிக்கு. வாங்கோ ஸார், நீங்களும் என்னோட. போய்ப் பார்த்துட்டு வரலாம்.

**கூ**ட்டமான கூட்டம் ஏழாம் நம்பர் வீட்டு முன்னால். ஆனைகட்டித் தெருவில் ஸ்வாமி எழுந்தருளினால்தான் இப்படி ஜேஜே என்றிருக்கும். ஊர் முழுக்க வந்து குழுமி இருக்கிறது.

திண்ணை காலியாக, இருக்கிறது; தெருக் கதவு திறந்து கிடக்கிறது. ஜனங்கள் போவதும் வருவதுமாக இருக்கிறார்கள். நானும் போகிறேன். நெட்டைச் சீமா கூடத்தில் இடுப்பில் கையை வைத்துக் கொண்டு நிற்கிறார். ''போங்கோ, போங்கோ! ஒருத்தர் ஒன்றைத் தொடப்படாது!'' என்று அதட்டிக் கொண்டிருக்கிறார். தலைக்குத் தலை பேசுகிறார்கள்.

கூடத்திலே, கிழக்காலே பார்த்துச் சுவரோரமாக மாக் கோலம் போட்டுச் சுவரில் ஸ்வாமி படங்களாக மாட்டியிருக்கின்றன. நடுவில் இருக்கிறது கலி தீர்த்த பெருமாளோடே படந்தான். வேறே யாருக்கு இருக்கும், இப்படி ஒரு பத்மபாதம்? வேதாந்தம் ராகவய்யா விநியோகித்துப் பிரபலப்படுத்தின படம் இது தான்.

ரோஜா மாலை சாத்தியிருக்கிறது. இதழ்கள் வாடிக் கருகி உதிர்ந்திருக்கின்றன. ''நீயே சரணம்'' என்று மாவால் எழுதி யிருக்கிறது.

'ஏதோ லெட்டர் மாதிரி இருக்கிறதே' என்று விருட்டென்று பார்க்கிறேன். ஆம், லெட்டர்தான்.

'இதை யார் கண்டெடுத்தாலும் துக்கோஜித் தெரு கோயில் காரியம் சபேசண்ணா அவர்களிட்டே சேர்ப்பித்து விட வேண்டியது' என்று எழுதியிருக்கிறது.

எனக்கா? எனக்கா லெட்டர் எழுதி வைத்துப் போயிருக்கிறாள்? படபடவென்று அடித்துக் கொள்கிறது நெஞ்சு. வேர்த்துக் கொட்டுகிறது. மோகம் வழியற புருவமும் கண்ணும் தெரிகின்றன. லட்டர் மேலே பளிச்சென்று. எனக்கா? எனக்கா?

''என்னண்ணா?'' என்கிறார் சீமா.

''ஒண்ணுமில்லை; ஏதோ பழைய கடுதாசி'' என்று அதைச் சட்டென்று அங்கவஸ்திரத்துக்குள் மறைத்துக்கொள்கிறேன். ''ஆத்தைப் பூட்டுங்கோ. சாவியைக் கர்ணத்திட்ட கொடுத்துடுங்கோ. ரெண்டு நாள் பார்த்துட்டு, மேலே என்ன செய்யலாம்னு பார்ப்போம்'' என்று சொல்லிவிட்டு வாசலுக்கு வருகிறேன். வேதவதி ஆற்றைப் பார்க்க நடக்கிறேன்.

காளிங்கர் படித் துறையிலே ஆளரவம் இல்லாமலிருக்கிறது. நுங்கும் நுரையுமாகச் சுழியிட்டுக் கொண்டு ஓடுகிறது வெள்ளம். படித் துறையிலே உட்கார்ந்து, தாள முடியாத தவிப்போடு கடிதத்தைப் பிரிக்கிறேன்.

''**ந**மஸ்காரம் - சம்பந்திகளுக்கு நமஸ்காரம்' என்று தொடங்குகிறது கடிதம்.

'சம்பந்தியா? நானா? வேதாவுக்கா?'

வேறே எப்படி எழுதறதுன்னு எனக்குத் தெரியலை. லட்டர் எழுதி எனக்குப் பழக்கமில்லை. எழுதறதுக்கு எனக்கு யாரும் இல்லவும் இல்லை. எனக்கு இருந்தவரும் வேஷ்டியைக் கிழிச்சு எறிஞ்சுட்டுப் போயிட்டார். நான் அவரைத் தெய்வமாக நினைச்சுண்டிருந்தேன்; இப்பவும் நினைச்சுண்டிருக்கேன்; என்னிக்கும் நினைச்சிண்டிருப்பேன்.

என்னைப் பத்தி, என் கண்களைப் பத்தி லோகத்திலே எத்தனையோ பேச்சுக்கள்; எத்தனையோ ஏச்சுக்கள். புருஷனைப் பறிகொடுத்துட்ட துக்கம் போராதுன்னு எனக்கு 'இந்த மாதிரி விஷக் கண்கள் நமக்கிருக்கே'ன்னு இன்னொரு துக்கம்.

என் பொண் சீலாவுக்காகத்தான் நான் உயிர் வாழ்ந்துண்டிருக்கேன். அவள் என் உயிர். இந்த ஊர்ப் பொம்மனாட்டி வர்க்கம் முழுக்க என்னை விஷமாக வெறுத்து ஒதுக்கினப்பறமும், 'நானும் உங்களைப் போல ஒரு பொம்மனாட்டிதான்டி' என்று சொல்கிற ஒரு வெறி மாதிரி நான் எடுப்பாகவும் கம்பீரமாகவும் வளைய வந்துண்டிருக்கிறதுக்குக் காரணம் என் பொண்தான். 'அவள் ஒருத்தியாவது என்னை, என் கண்ணைச் சிநேகமாகப் பார்க்கிறாளே' என்கிற ஆறுதல்தான்.

பத்துப் பன்னிரண்டு வருஷமாக இந்த ஆறுதலிலும் தைரியத்திலுந்தான் வாழ்கிறேன். ''நீங்கள் யார் வெறுத்தாலும் என்னை நேசிக்கிற ஆத்மாவும் ஒண்ணு இருக்குடீ எனக்கு'' என்று நான் சொல்லாமல் உணர்த்திண்டு வாழ்ந்துண்டிருக்கிறேன்.

ஆனால் அதுவும் பிரமைதான்னு இப்ப நிரூபணமாயிடுத்து. என் பொண்ணே என் கண்ணை விஷக்கண் தான்னு சொல்லிட்டு, இருக்கவே பயந்துண்டு, ஓடிப் போயிட்டாள்; என்னை நிராகரிச்சுட்டுப் போயிட்டாள்.

நான் இந்த ஊரிலே, இத்தனை சந்தேகாஸ்பதமா நடமாடிண்டிருந்தாலும் நான் என் புருஷன் போனப்பறம் ஏறெடுத்துப் பார்த்த ஒரே ஒரு ஆண்பிள்ளை உங்க பிள்ளை. இப்பப் பெரியவனாயிட்டாலும் அவன் எங்க சீலாவைத் தேடி வருகிற போதெல்லாம் அவன் பால்யத்திலே குஞ்சுக் காலும் குஞ்சுக் கையுமாக வந்திண்டிருந்த மாதிரியே, இப்பவும் வருகிறதாக எனக்கு நினைப்பு. அவன் வருகிறபோது என் மனசிலே ஒரு குறுகுறுப்பு; மாரிலே ஒரு குறுகுறுப்பு. அவனை வாடா குழந்தைன்னு அணைச்சுண்டு அமுதத்தை ஊட்டணும்போல ஒரு குறுகுறுப்பு. இலையிலே உட்கார வச்சு, அவன் 'போரும் போரும்'னு சொல்றவரை என் கையாலேயே சாப்பாடு போடணும்.

நான் மனப்பூர்வமாகச் சம்மதிச்சு, சீலாவும் அவனை உயிராக நினைச்சு,

அவனுக்கும் அது பிடிச்சதுனுலேதான் அவனே இந்த ஆத்துக்குள்ளே வரவிட்டிருந்தேன்கிறதைவிட, என் மாரிலே குளுகுளுக்கிற பிள்ளைப் பாசத்தைப் பார்த்துத் தீர்த்துக்கிறதுக்காகத்தான் வரவிட்டிண் டிருக்கேன்கிறதுதான் உண்மை.

என் பாசம், என் தாபத்தைப் பத்தி எல்லாம் யார் யோசித்தார்கள்? ஆனுல் என் மனசிலே சதா வேதாந்தம் ராகவய்யா கொடுத்த கவிதீர்த்தான் உருவந்தான் குடிகொண்டிருந்தது.

திடீரென்று அம்மாவின் பக்கலிலிருந்து இந்த ஊர் விஷப் பெண்டுகள் பக்கலுக்குப் போய்விட்டாள் சீலா; என்னே, அவர்களைப் போலவே கண்களில் மஞ்சளைப் பூசிக்கொண்டு பார்க்க ஆரம்பிச்சுட்டாள். 'அம்மா! ஸ்வாமி உனக்கு இப்படி ஒரு கண்ணைக் கொடுத்திருக்கக்கூடாது' என்று முந்தாநாள் நாலஞ்சு தடவை சொல்லிவிட்டாள். 'அது என்மேலே பிசகா?' என்று நான் சிரிச்சேன். 'என் கண்ணை ஏன்டி பார்க்கிருய்? சம்பத் வந்தா அவன் கண்ணைப் போய்ப் பார்' என்று சிரித்தேன்.

"இனிமேல் அவர் வரமாட்டார் அம்மா, இந்த ஆத்துக்கு!" என்று தலையைக் குனிந்துகொண்டு சொன்னுள்.

"என்ன ஆச்சு உங்களுக்குள்?"

"என்னமோ ஆச்சு — போ!" என்று எழுந்து போனுள்.

அன்றைக்கு மத்தியான்னம் கூடத்து ஊஞ்சலில் மல்லாக்கப் படுத்துக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு, 'என்ன இந்தப் பெண் இப்படிப் பேசிற்றே, இன்றைக்கு?' என்று யோசித்தேன். காலம்பற எண்ணெய் தேய்த்துக் குளித்ததனுல் தலைபாரமாக இருந்தது. தலையை அவிழ்த்து விசிறியாப் பரப்பிக்கொண் டிருந்தேன். பக்கத்தில் யார் வீட்டுக்கோ சீலா போயிருந்தாள்.

திடீரென்று என்னவோ ஒரு உணர்ச்சி; யாரோ கிட்டத்திலே ஊமை மாதிரி நின்று கொண்டு — ரொம்ப நேரமா நின்று கொண்டு என்னையே பார்த்துக்கொண் டிருக்கிற மாதிரி உணர்ச்சி.

சடக்கென்று விழித்துக்கொண்டேன். ஆனுல் எழுந்திருக்கவில்லை. எதிரே சம்பத் நின்று, 'இப்படி ஒரு உடம்பா? இப்படி ஒரு முழங்கால் சில்லா, இப்படி ஒரு மார்பா, இப்படி ஒரு முகமா, புருவமா?' என்கிற மாதிரி பார்த்துக்கொண்டிருப்பது தெரிந்தது.

எடுத்த எடுப்பில் அது சம்பத் என்று தெரியவில்லை. சொன்னுல் நம்ப மாட்டீர்கள். என் அகத்துக்காரர்— என்னைத் தவிக்க விட்டு ஓடிப் போன அகத்துக்காரர் - மாதிரி தான் இருந்தது. அவர் வந்துட்டார் என்று அரை விநாடி நேரம் நினைச்சுட்டேன்; சிரிச்சதாகத்தான் நினைவு.

ஆனுல் அது அரை விநாடிப்பொழுது தான். அதற்குள் கண்ணின் ஈரம் வற்றி, பார்வை தெளிந்து, 'ஓ! இவன் சம்பத்துன்னு?' என்று பிரக்ஞை வந்துவிட்டது. சடக்கென்று எழுந்து "வா, அப்பா, வா!" என்றேன்.



பையன் கண்களைத் தாழ்த்திக்கொண்டு ஏதோ குற்றம் செய்துவிட்டவன் போல் நின்ருன். "உட்காரு, சம்பத், ஊஞ்சலிலே."

அவன் உட்கார்ந்து கொண்டான்; "சீலா இல்லையா?"

"இல்லே. ஆனுல் இப்போ வந்துவிடுவாள். நீ இப்போ வந்ததும் அவள் இல்லாதிருக்கிறதுங்கூட ஒரு விதத்துக்கு நல்லதுதான். உன்கிட்ட ரொம்ப முக்யமான விஷயம் ஒண்ணு பேசணும்னு எனக்கு வெகு நாளா எண்ணம். சித்த இரு. காபி கொண்டு வறேன், நிமிஷத்திலே!" என்று சொல்லிவிட்டு உள்ளே வந்தேன். காபி கொண்டு வர வந்தேன் என்கிறது சும்மா ஒரு வியாஜந்தான்; அவனைப் பார்க்கிற போதெல்லாம் ஏற்படுகிற மாதிரி, அப்பவும் குறுகுறுத்த மார்பை அடக்கி நசுக்கிக்கொள்ளத்தான் வந்தேன்.

நான் திரும்பி வந்தபோது ஊஞ்சலில் சம்பத் இல்லை. விருட்டென்று வாசலில் இறங்கிப் போய்க்கொண் டிருப்பது தெரிந்தது.

சற்றைக்கெல்லாம் சீலா வந்துவிட்டாள். "சம்பத் வந்திருந்தாண்டீ" என்றேன். "பார்த்தேன்—எதிரே!" என்ருள். "பார்த்தாயா? திடீரென்று ஏன் போய்விட்டாளும்?" என்று கேட்டேன்.

அவள் பதில் சொல்லாமல் என்னை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு மடமடவென்று மாடிக்குப் போய்விட்டாள்.

அன்றைக்குச் சாயங்காலம் வேதாந்தம் ராகவய்யா கோயில்லே பகவானுடைய கமலநயனங்களைப் பற்றி மூணு மணி நேரம் பேசினுர். 'மனுஷ்யாளுடைய கண் பொன்னைப் பார்க்கும்; பூவைப் பார்க்கும்; பொருளைப் பார்க்கும். சதையும் நாளமுமாக இருக்கிற இன்னொரு உடம்பைப் பார்க்கும். ஆனுல் அங்கெல்லாம் அதற்குச் சீக்கிரத்திலே சலிப்புத் தட்டித் திரும்பிடும். ஆனுல் அது மட்டும் ஒரே ஒரு தடவை பகவானுடைய கண்ணுக்குள் பார்த்ததோ, அப்புறம் அதனுடைய கண்ணுக்குள் இருக்கும் ஆசை, காமம், கோபம், லோபம் ஆகிற எல்லா விஷங்களுமே பகவானுடைய கண்களுக்குள் போய்விடும். அப்புறம் அது இந்தப் பிரபஞ்சத்தைத் திரும்பியே பார்க்காது' என்று அவர் சொன்னதை நினைத்துக் கொண்டே வீட்டுக்கு வந்தேன்.

வந்தால் — என் கண், என் உயிர், என் பிரபஞ்சமே என்னை விட்டுப் போயிருந்தது. சீலா முழு நீளம் ஒரு கடிதம் எழுதி வைத்து ஓடிப் போய் விட்டாள்.

''அம்மா! அம்மா! நான் என் புருஷனை, எனக்கு இருக்கிற ஒரே ஒரு புருஷனை, உன் மாய விழிகளிலிருந்து-விஷக் கண்களிலிருந்து - காப்பாத்திக்கிறதுக்காக அவரையும் அழைத்துக் கொண்டு உன் கண்ணிலிருந்து எட்டாக் கைக்குப் போகத் தீர்மானிச்சுக் கிளம்பிட்டேன்! நீ ஊரைக் கெடுத்தாச்சு; ஊர் புருஷா மனசிலே எல்லாம் பார்வையால் விஷத்தை விதைச்சாச்சு; ஊர்ப் பொம்மனுட்டிகளை எல்லாம் பதைபதைக்கப் பண்ணியாச்சு. கடைசியிலே நான்தானும்மா கெடைச்சேன், உனக்கு?''

எத்தனையோ காலமாக இல்லாமல், போன வாரம் சம்பத் அகஸ்மாத்தாக என் மோகவிழிகளை ஏறிட்டுப் பார்த்து விட்டானும். அதிலிருந்து பைத்தியம் பிடித்த மாதிரி ஆகிவிட்டானும். ''நான் தப்புப் பண்ணிவிடுவேன் போலிருக்கு, சீலா. உனக்குத் துரோகம் பண்ணி விடுவேன் போலிருக்கு'' என்று புலம்புகிறுனும். தூக்கம் சாப்பாடு இல்லாமல் புலம்புகிறுனும். அதனுல்தான் சீலாவைப் பார்க்கக்கூட வராமல் இருந்தானும்.

இன்றைக்கு மத்தியான்னம், அவன் வந்ததைத் தெரிஞ்சுண்டும், நான் வேணுமென்றே அலங்கோலமாக ஊஞ்சலில் படுத்துக்கொண் டிருந்தேனும்; சிரிச்சேனும். 'உங்கிட்டத் தனியா ஒண்ணு பேசணும்' என்று ஆரம்பிச்சேனும்.

சீலா! — நான் உன் கல்யாண விஷயத்தைப் பேசத்தான் நினைச்சேன்டீ — நான் வேதம்டீ!

சடக்கென்று அவள் கடிதத்தைச் சுக்கல் சுக்கலாகக் கிழிச்சுப் போட்டேன். என் பார்வையை ஒளித்து வைக்க ஓர் இடம் இருப்பது நினைவு வந்தது.

ஆற்றிலே வெள்ளம் இருகரையும் தொட்டுக் கொண்டு போகிறது. காளிங்கன் மடுவிலே இதற்கு முன்னே மார்பு வரை இறங்கி எத்தனையோ தடவை குளிச்சிருக்கேன். இன்னும் இரண்டு தப்படி வைச்சால், ஜலம் கழுத்துக்கு வரும்; மேலும் இரண்டு தப்படி வச்சால் முகத்துக்கு வரும்; அதற்கப்புறமும் இரண்டு தப்படி வச்சால், கண்ணை ஒளிச்சுக்க இடம் கிடைச்சுடும்.

அங்கேதான் கலிதீர்த்தான் இருக்கிறுர்; அங்கேதான் வேதாந்தம் ராகவய்யா எனக்குப் புகலிடம் காட்டின பத்மபாதங்கள் இருக்கின்றன. ஏன், பகவானுடைய கண்களும் இருக்கின்றன. அந்தப் பகவானுடைய கண்களுக்குள் என் கண்களிலுள்ள இத்தனை விஷத்தையும் நான் பாய்ச்சிவிடத் தீர்மானித்தேன். போய் வருகிறேன்.

நான் ரெண்டு நாளாய்ச் சீலாவைத் தேடவில்லை. அவள் உங்கள் பிள்ளை இருக்கிற இடத்தில் பத்திரமாக இருப்பாள் என்று எனக்குத் தெரியும். அவள் இனி உங்கள் பெண்; நாட்டுப் பெண். அவர்களை அழைத்து வந்து கல்யாணம் பண்ணிவச்சு நீங்கள் பாதுகாக்க வேணும்.

இச்சிப்புடி முழுக்கப் பெருமூச்சு விடும் — என்னை நினைச்சு. ஒரொருத்தரும் ஒரொரு மாதிரி நினைச்சுப் பெருமூச்சு விடுவா. ஆனுல் மூச்சற்ற மோனத்திலே, நான் கலிதீர்த்தானுடைய பாதங்களை இறுகக் கட்டிக் கொண்டு, காலமெல்லாம் இந்த ஊரிலேதான், வேதவதியிலேதான் கிடப்பேன்.

இதை விட்டுப் போக என்னுல் முடியாது; ஏனென்றுல் இது என் மூதாதையர் பிறந்து வளர்ந்த மண்; நான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த ஊர்; என் ஊர்; என் ஊர்!

'களிக்' கென்று ஒரு சுழல் கமறிக் கொண்டு காலடியில் நகர்கிறது. ஒரு பெரிய தாமரைப் பூச் சுழன்று நகர்கிற மாதிரி இருக்கிறது.

என்னவோ பிரமை — பின்னுல் ரோஜா மாலைகள் மணக்கிற மாதிரி. மாலையும் கழுத்துமாகச் சீலாவும் சம்பத்தும் வந்து நின்றுகொண்டு அந்தச் சுழலையே பார்த்திண்டிருக்கிற மாதிரி பிரமை.

திரும்பிப் பார்க்கிறேன். படிக்கட்டுக் காலியாக இருக்கிறது. ★

கலையும் களியாட்டமும்







# தீபாவளி வாழ்த்துக்கள்

**விவசாயத்துறைக்கு எமது தயாரிப்புகள்**

**பாக்டம்பாஸ்**
(அம்மோனியம் பாஸ்பேட் 16:20)

**அல்ட்ராபாஸ்**
(நன்கு அரைக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

**அம்மோனியம் ஸல்பேட்**

**சூபர்பாஸ்பேட்**

**NPK கலப்பு உரம்**

FACT

பாக்ட்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ்
திருவிதாங்கூர் லிமிடெட்,
உத்யோகமண்டல், கேரளா.
பிராந்திய அலுவலகம்: 2-வது மாடி,
19, கமாண்டர்-இன்-சீப்-ரோடு, சென்னை-8.

Criterion-FT-2062

# மைகோ தரத்திற்கு நிற்கின்றது



MC-CO-MAC (B) 13

ஸ்பார்க் பிளக்குகள் மற்றும் ப்யூயல் இன்ஜெக்ஷன சாதனங்களை உற்பத்தி செய்வதில் முன்னேடிகளான பாஷ் (BOSCH), ஜெர்மனி, ஸ்தாபனத்திடம் பெற்ற லைஸன்ஸின் கீழ், மைகோ எல்லாவித மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள் மற்றும் ஸ்டேஷனரி என் ஜின்களுக்கும் ஏற்ற ப்யூயல் இனஜெக்ஷன் சாதனங் களையும் மற்றும் பலவிதமான பிளக்குகளையும் உற்பத்தி செய்கிறது. இதுபோன்ற சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலேயே பெரிதான மைகோ ஸ்தாபனம், அதனுடைய வாடிக்கைக்காரர்களுக்குப் போதுமான சேவைபுரிய இந்தியா முழுவதிலும் 150-க் கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விற்பனை மற்றும் பழுது பார்க்கும் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது.

**MICO** LICENCE BOSCH

**மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி லிட்., பெங்களூர்.**

அடையக்கூடிய அளப்பற்கரிய
நன்மைகளை எண்ணி எண்ணி

**இந்தத் தீபாவளி நன்னாளில்**

ஆனந்தமாக இருங்கள்



ஆயுள் இன்சூரன்சு அளிக்கும் காப்பு நலமும் மன அமைதியும் உறுதியாகக் கிடைக்கும் நன்மைகளில் முன்னணியில் நிற்பவை யாகும்.

இந்த ஏற்பாட்டினுல் நீங்களும் உங்களைச் சார்ந்தோரும் இத் தீபாவளி திருநாளில் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள். பிறரும் உங்களைப்போலவே மகிழ்ச்சிகரமாக இருக்க வேண்டும் என்று தானே நீங்களும் விரும்புகிறீர்கள்?

உங்கள் அன்புசால் உறவினருக்கும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கும் ஆயுள் இன்சூரன்சு அளிக்கும் நற்செய்தியை ஏன் எடுத்துச் சொல்லக்கூடாது? அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் ‘காப்பு நலம்’ என்ற ஈடு இணையில்லா ஏற்பாட்டினைச் செய்து கொடுத்தோம் என்ற பெருமித உணர்வு உங்களுக்கு உண்டாகும்.

**ஆயுள் இன்சூரன்சு**
**போல ஆதரவு தருவது**
**எதுவுமே இல்லை**

EP-LIC 74

# மங்கலக் குங்குமம்

'மாயாவி'




அலுவலகத்தை நெருங்கும்போதே அதன் இனிய மணம் என் நெஞ்சை அள்ளும். பாலைவனத்திடையே பூஞ்சோலையைக் கண்டவன்போல் நாள்தோறும் போகும்போதும் திரும்பும்போதும் சிறிது நேரமாவது அந்த மணமலர் மரத்தடியில் நின்று உள்ளம் நிறையு மளவு அந்த மணத்தை உறிஞ்சாமல் நகர மாட்டேன்.

அது ஒரு செண்பக மரம். கோடை தொடங்கியதும் மரமே மலர் மயமானதோ எனத் தோற்றுமாறு பூத்துச் சொரியும். மலரின் மணத்தில், அதிலும் செண்பகம் போன்ற இனிய, குளுமையான மணம் வீசும் மலரிடம் மயங்காதவர் யார்? என் மனைவியிடம் ஒரு நாள் ஏதோ பேச்சுவாக்கில் எங்கள் அலுவலகத்தில் செண்பக மரம் இருப்பதைக் கூறினேன். அன்றிலிருந்து அவள் அந்த மலரையெல்லாம் தன் கூந்தலில் சூட்டிக் கொள்ள ஆசை கொண்டாள்.

அவள் ஆசையை நிறைவேற்றுவதில் எனக்கும் விருப்பந்தான். ஆனல் அதற்குப் பெருந் தடையாக இருந்தது, அலுவலக அதிகாரிகள் அந்த மரத்தடியில் மாட்டியிருந்த போர்டு. ஆம்; அது, ''மலர்களைப் பறிக்காதே!'' என்று என்னை மட்டுமல்ல, எல்லாரையும் எச்சரித்தது.

நேற்று ஒரு முக்கியமான அலுவல் காரணமாக, பொழுது விடியுமுன்னே அலுவலகம் செல்லவேண்டியிருந்தது. நான் பம்பாயிலுள்ள மத்திய அரசின் செய்திப்படப் பிரிவில் உதவிப் படப்பிடிப்பாளனுகப் பணியாற்றி வருகிறேன். பம்பாய் மாநிலத்தில் எங்கே, எந்த முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்ருலும், முன்னதாகவே போய் அந்த நிகழ்ச்சியைத் திரைப் படக் காமிராவில் பதிவு செய்து கொண்டு வருவது பிரதானப் படப்பிடிப்பாளர்களின் வேலை. அந்தப் பணியில் அவர்களுக்கு உதவுவதற்காக உதவிப் படப் பிடிப்பாளர்களாகிய நாங்களும் உடன் செல்வோம். அன்று மாலையில் புனுவில் இயங்கி வந்த மாநில அரசின் டி. பி. ஸானடோரியத்தில், புதிய 'பிளாக்' ஒன்றை முதலமைச்சர் திறந்து வைக்க இருந்தார். அந்த நிகழ்ச்சியைப் படம் பிடிக்கும் பணி என் பிரதானப் படப்பிடிப்பாளர் ராஜீவிடமும் என்னிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது. காலை ஒன்பது மணிக் கெல்லாம் நாங்கள் இருவரும் அலுவலகக் காரிலேயே புனு செல்வதென்று தீர்மானித்திருந்ததால், படப் பிடிப்புக்கான காமிராவையும், பிற உபகரணங்களையும் சுத்தம் செய்து கொள்வதற்காக அன்று அதிகாலையிலேயே அலுவலகம் சென்றேன்.

வழக்கம்போல் அலுவலகத்தை நெருங்கும்போதே செண்பக மலரின் மணம் மனத்தை இழுத்தது. அந்த மரத்தைச் சுற்றிலும் காற்றில் இரவு உதிர்ந்திருந்த மலர்கள் பாய் விரித்தாற்போல் பரவிக் கிடந்தன. ஏக்கத்தோடு எதிரே இருந்த போர்டைப் பார்த்தேன். அதில் எழுதியிருந்த இரண்டு சொற்களையும் பல தடவை படித்தேன். மின்னல்போல் மனசில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. 'மலரைப் பறிக்காதே' என்றுதான் போர்டு அறிவித்ததேயன்றி, 'மலரைப் பொறுக்காதே' என்று அறிவிக்கவில்லையே! சட்டென்று கைக் குட்டையை விரித்து, அது கொள்ளு மட்டும் நல்ல மலர்களாகப் பொறுக்கி எடுத்துக்கொண்டு என் வேலையைக் கவனிக்கச் சென்றேன்.

நான் பொறுக்கி எடுத்தவை இருபது முப்பது மலர்கள். எனினும் பெருநிதி ஒன்றைப் பெற்றுவிட்ட பூரிப்பு எனக்கு ஏற்பட்டது. மனைவியின் ஆவலை இன்று ஒரு நாளாவது இந்த அளவுக்கு நிறைவேற்ற முடிந்ததே! புனுவுக்குப் போகும்போது கார் என் வீட்டின் வழியாகத்தான் போகும். மனைவியிடம் மலர்களைக் கொடுத்து, அவள் முகம் மலருவதைப் பார்த்த மகிழ்ச்சியோடு போகலாம்.

எட்டரை மணிக்குள் படப்பிடிப்புக்கான யாவற்றையும் சித்தம் செய்து விட்டேன். சற்றைக்கெல்லாம் பிரதானப் படப் பிடிப்பாளர் ராஜீவும் வந்துவிட்டார். ''என்ன ராம், எல்லாம் ரெடியா?'' என்று கேட்டபடி நுழைந்தவர் ஒரு கணம் திகைத்து நின்று மூக்கை இரண்டு மூன்று தடவை உறிஞ்சினுர். செண்பகத்தின் மணம் அவரைக் கவர்ந்துவிட்டது. கைக் குட்டைப் பொட்டலத்தைப் பிரித்து ஒரு மலரை எடுத்து அவரிடம் நீட்டி

னேன். "அதிகாலையில் வந்துவிட்டேன் அல்லவா? ஆபீஸ் செண்பக மரத்தடியில் மலர் கொட்டிக் கிடந்தது. என் மனைவிக்குச் செண்பக மலர் என்றால் உயிர். கொஞ்சம் பொறுக்கி எடுத்துக் கொண்டேன், போகும் வழியில் வீட்டில் கொடுத்து விட்டுப் போகலாம் என்று."

"செண்பக மலர் என்றால் யாருக்குத்தான் உயிர் இல்லை? ம.. சரி" என்றார் ராஜீவ். ஆனால் அவர் நான் நீட்டிய மலரைப் பெற்றுக்கொள்ளவில்லை.

"இந்தாருங்கள்; நீங்களும் இதைக் கோட்டில் செருகிக் கொள்ளுங்கள்" என்றேன்.

"வேண்டாம்" என்றார் அவர்.

"ஏன் ஸார்?"

"அது என் வாழ்வின் சோகச் சம்பவங்களை நினைவூட்டும் சின்னம்."

ராஜீவை என் மேலதிகாரியாகத் தெரியுமேயன்றி, அவருடைய குடும்ப வாழ்வைப்பற்றி எனக்கு ஏதும் தெரியாது. அமெரிக்காவில் மூன்றாண்டுகள் படப் பிடிப்புப் பயிற்சி பெற்ற அவர் இரண்டாண்டுகளுக்கு முன் இந்தியா திரும்பி, செய்திப் படப் பிரிவில் வேலையேற்றார். அதுமுதல் நான்தான் அவருக்கு உதவிப் படப் பிடிப்பாளனாகப் பணியாற்றி வருகிறேன். ஆயினும் தம் கதையை அவரும் கூறியதில்லை; நானும் கேட்டதில்லை. இப்பொழுது அதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததும் பிடித்துக்கொண்டேன். "அது என்ன சோக சம்பவம், மிஸ்டர் ராஜீவ்?" என்று கேட்டேன்.

"அது ஒரு பெரிய கதை. காரில் போகும்போது சொல்கிறேன்" என்றார் அவர். அவ்வாறே புனாவை நோக்கிக் காரில் சென்றபோது ராஜீவ் அந்தக் கதையைச் சொன்னார்.

## 2

எனக்குச் சொந்த ஊர் பஞ்சகனி மிஸ்டர் ராம். பஞ்சகனி, புனா - மகாபலேசுவரம் பாதையில் மகாபலேசுவரத்துக்குச் சில மைல்கள் முன்னே இருக்கிறது. கடல் மட்டத்திலிருந்து சுமார் ஐயாயிரம் அடி உயரத்தில் இருக்கும் எங்கள் ஊர் இயற்கைக் காட்சிகளுக்குப் பேர்போனது. அங்கே செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்துப் பிள்ளை நான். எங்களுக்கு அவ்வூரில் நிறைய மலைத் தோட்டங்களும் நெல் வயல்களும் உண்டு.

நான் சிறு வயசிலேயே தந்தையை இழந்துவிட்டேன். என் மாமா கணேஷ் தேஷ்பாண்டே தம் குடும்பத்துடன், அதாவது தாயற்ற தம் ஒரே மகள் புஷ்பாவுடன், சொந்த ஊரான சாதாராவை விட்டு எங்கள் ஊரில் வந்து குடியேறி எங்கள் நிலங்களைக் கவனித்து வந்தார்.

புஷ்பா தன் பெயருக்கேற்ப அன்றலர்ந்த மலர்போல் இருப்பாள். ஆதலால் அறியாப் பிராயத்திலேயே அவள் என் உள்ளத்தில் அழியா இடத்தைப் பெற்றுவிட்டாள். அம்மாவும் மாமாவும் வேறு எங்கள் அன்பு பெருக வகை செய்தனர். வாய்க்கு வாய், எங்கள் இருவரையும் இணைத்துப் பேசிய பேச்சின் பயனாக நாங்கள் அந்த வயசிலேயே எங்களைக் கணவன்-மனைவியாகக் கருதத் தலைப்பட்டோம்.

எங்கள் ஊரில் புகழ்பெற்ற போர்டிங் பள்ளி ஒன்று இருக்கிறது. நான் அங்கே படித்து மெட்ரிகுலேஷன் தேறினேன். புஷ்பாவும் திடு திடுவென்று வளர்ந்தாள். அப்பொழுதே எங்களுக்கு முடி போட்டுப் பார்த்து விட வேண்டுமென்று அம்மா ஆசைப் பட்டாள். ஆனால் மாமா, "சேசே! புஷ்பாவுக்கு இன்னும் பதினைந்து வயசுகூட நிரம்பவில்லை. அதற்குள் அவளுக்குக் கல்யாணமா?" என்று கூறித் தடைபோட்டு விட்டார்.

"படித்தது போதும். உன் நிலபுலன்களின் மேற்பார்வையை ஏற்றுக் கொண்டு வீட்டோடு இரு. எனக்கு வயசாகி விட்டது. முன்போல் ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை" என்று நான் மெட்ரிகுலேஷன் தேறினதும் மாமா சொன்னார். ஆனால் நான் மேலே படிக்க விரும்பினேன். அதற்கு இரண்டு காரணங்கள். மெட்ரிகுலேஷன் இந்தக் காலத்தில் ஓர் இளைஞனுக்குப் போதாது என்று நான் கருதியது ஒன்று; மற்றொன்று, மலர்ந்த மலராய் மணம் பரப்பி வந்த புஷ்பாவை மனையாட்டியாக்கிக் கொள்ளாமல் ஒரே வீட்டில் வசிப்பதை என்னால் தாங்க முடியாது என்று தோன்றியது. மாமாவோ இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் புஷ்பாவின் திருமணத்தைப் பற்றிய பேச்சையே எடுக்கக் கூடாது என்று கண்டிப்பாக இருந்தார். இந்த நிலையில் கல்லூரிப் படிப்பை மேற்கொண்டால் புனா, பம்பாய் என்று போக வேண்டியிருக்கும்; என் துடிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சௌகரியமாக இருக்கும் என்று எண்ணினேன். எனவே அந்த வருஷமே புனா டெக்கன் கல்லூரியில் போய்ச் சேர்ந்தேன்.

ஆனால் புஷ்பாவைப் பிரிந்து வந்தது நான் நினைத்தது போல் மனசைக் கட்டுப்படுத்திக் கொள்ள உதவவில்லை. மாறாக அதிகமாக ஏங்கச் செய்தது. எனவே புனாவில் எனக்குப் படிப்பைவிட அடுத்த விடுமுறையின் மீதே நாட்டம் அதிகமாக இருந்தது.

லீவு தோறும் ஊருக்கு வந்து புஷ்பாவுடன் சந்தோஷமாக நாட்களைக் கழிப்பது எனக்குப் புதுப் புனலில் குளித்தெழுவது போன்ற இன்பத்தை அளிக்கும். கல்லூரி திறக்கும் நாள் நெருங்க நெருங்க என்மனசை வேதனை அரிக்கும். படிப்பை அப்படியே நிறுத்திவிட்டு ஊரிலேயே தங்கி விடுவோமா என்று எண்ணத் தோன்றும். ஆனால் மாமா அதற்கு இடமளிக்காமல் கல்லூரி திறப்பதற்கு முந்திய நாளே மூட்டை முடிச்சுடன் என்னைப் பஸ் ஏற்றி விட்டுவிடுவார்.

இப்படி ஒருவாறாக இரண்டு வருஷங்களைத் தள்ளிவிட்டேன். அந்த வருஷம் 'இன்ட்டர்' பரீட்சை எழுதிவிட்டுப் பஞ்சகனிக்கு வந்தேன். அப்பொழுது நிகழ்ந்த இரண்டு சம்பவங்கள் என் வாழ்வின் போக்கையே மாற்றிவிட்டன. தன் மகனை மணக்கோலத்தில் காண வேண்டுமென்று காத்திருந்த அம்மா, சில நாள் நோய்வாய்ப்பட்டிருந்து யாரும் எதிர்பாராதவாறு திடீரென்று காலமானாள்.

பெற்றவளைப் பறிகொடுத்த துயரம் மாற எனக்கு ஒரு மாதம் ஆயிற்று. அது மாறி, நான் பழையபடியும் புஷ்பாவுடன் இன்பப் பொழுது போக்கத் தொடங்கிய உடனேயே இரண்டாவது துயரச் சம்பவம் நடந்தது.

புஷ்பாவுக்கு மலர்கள் என்றால் உயிர். அவளுக்காகவே மாமா ஊர் எல்லையில் இருந்த எங்கள் நிலம் ஒன்றை மலர்த் தோட்டமாக மாற்றியிருந்தார். அங்கே விதம் விதமான மலர்ச் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. அத்தனை மலர்களையும் நாள் தோறும் தானே பறித்துத் தானே தொடுத்துச் சூடிக்கொண்டுங்கூடப் புஷ்பாவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவளுக்குச் செண்பக மலர் வேண்டுமென்று ஆசை பிறந்தது. எங்கள் ஊர் மலைப்பிரதேசமாக இருந்தபோதிலும், துரதிருஷ்டவசமாக அங்கே செண்பக மரங்கள் அதிகம் இல்லை. ஊர் எல்லையில் எங்கள் பூந்தோட்டத்தை அடுத்து எங்களூர்ப் பணக்காரர் வேறொருவருக்குச் சொந்தமாக ஒரு மாந்தோப்பு இருந்தது. அந்தத் தோப்பில் ஒரு செண்பக மரம் இருந்தது. அதுதான் எங்கள் ஊரில் இருந்த ஒரே செண்பக மரம். அந்தப் பணக்காரருக்குப் பல பெண் குழந்தைகள். புஷ்பாவுக்குச் செண்பக மலர் மீது ஆசை இருந்தது போல் அவர்களுக்கும் இருப்பது இயற்கைதானே? எனவே, அந்த மரத்தில் கோடையில் பூக்கும் பூவில் ஒன்றுகூட வெளியாருக்குக் கிடைக்காது. அதனால் புஷ்பாவின் செண்பக மலர் ஏக்கம் நெடுங்காலமாக ஏக்கமாகவே இருந்து வந்தது.

அம்மா இறந்து, நாங்கள் மீண்டும் உல்லாசப் பறவைகளாகச் சுற்றித் திரியத் தொடங்கியபின் ஒரு நாள் அதிகாலையில் நான் புஷ்பாவுடன் எங்கள் தோட்டத்துக்குப் பூப் பறிக்கச் சென்றேன். அப்போது பக்கத்துத் தோப்பில் அந்தப் பண்ணையார் வீட்டு வேலையாள் ஒருவன் செண்பக மரத்தில் ஏறிப் பூப் பறித்தான். புஷ்பா அதைப் பார்த்ததும் பெருமூச்சு விட்டுக்கொண்டு சொன்னாள்: "அத்தான்! அதோ மரத்தின் மேலேறிச் செண்பக மலர்களைப் பறிக்கிறானே, பண்ணையார் வீட்டு வேலையாள், அவனைப் போன்ற விசுவாசமுள்ள வேலையாளை நீங்கள் காணவே முடியாது. கோடைதோறும் நான் பூப்பறிக்க வரும் நேரத்துக்குத்தான் அவனும் வருவான். 'ஒரு பத்துப் பூக் கொடுத்துவிட்டுப் போ, அப்பா!' என்று எத்தனையோ தடவை அவனைக் கெஞ்சிக் கேட்டிருக்கிறேன். 'ஐயோ! எசமானுக்குத் தெரிஞ்சா என் தலையே போயிடும், தாயே!' என்று மறுத்துவிடுவான்."

நான் சிரித்தேன்.

"ஏன் சிரிக்கிறீர்கள், அத்தான்?" என்று புஷ்பா கேட்டாள்.

"பெண்களுக்கே கொஞ்சம் புத்தி மட்டுத்தான். வேலையாட்களிடமிருந்து எஜமானருக்குச் சொந்தமான ஒரு பொருளை எஜமானருக்குத் தெரி

யாமல் வாங்க வேண்டுமென்ருல் கெஞ்சிப் பயனில்லை, புஷ்பா. காசை வீசினுல் பொருள் கதறிக் கொண்டு நம் கைக்கு வந்துவிடும். இதோ பார். நான் இப்பொழுதே அவனிடம் போய் அவன் பறித்த பூக்களில் பாதியை வாங்கி வருகிறேன்'' என்று கூறி, நான் பக்கத்துத் தோப்புக்கு வேகமாக நடந்தேன்.

ஆனுல் புஷ்பா கூறியது உண்மைதான். அந்த வேலையாள் இந்தக் கலிகாலத்தில் தப்பிப் பிறந்தவன் போலும்! ''பூ ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் பத்துப் பூக் கொடு, போதும்'' என்று பத்து ரூபாய் நோட்டை நீட்டியும், அவன் ஒரு பூக் கூடத் தர மறுத்துவிட்டான்.

எனக்கு ஏமாற்றம் ஒரு புறம்; அவமானம் ஒரு புறம். அவை இரண்டும் புஷ்பா என்னைப் பார்த்து எள்ளி நகைத்த போது ஆத்திரமாக உருவெடுத்தன. ''புஷ்பா, நாளைக்கு இந்த மரத்தில் பூத்திருக்கும் பூக்களெல்லாம் உனக்குத்தான்'' என்றேன் ஆக்ரோஷத்துடன்.

''எப்படி?''

''பின் நிலவுக் காலந்தான். கையில் டார்ச்சையும் எடுத்துக்கொண்டு அதிகாலை நான்கு மணிக்கே வந்து மரத்திலேறி ஒரு பூக்கூட இல்லாமல் அத்தனையையும் பறித்து வந்துவிடுகிறேன். வருவது வரட்டும்!'' என்றேன்.

புஷ்பாவால் செண்பக மலர் ஆசையையும் விட முடியவில்லை. அதே சமயம் நான் திருடுவதையும் அவள் விரும்பவில்லை. ''ஐயோ! வேண்டாம், அத்தான்'' என்ருள் முதலில். பிறகு, ''அவ்வளவு பூக்களையும் பறித்து விட்டால் நீங்கள்தாம் அவற்றைப் பறித்திருக்க வேண்டும் என்று அந்த வேலையாள் சந்தேகித்து விடுவானே!'' என்ருள் ஆற்ருமையோடு.

கடைசியில் மறுநாள் வந்து ஐம்பது அறுபது பூக்களை மட்டும் பறிப்பது என்று நாங்கள் முடிவு செய்தோம்.

இந்த முடிவின்படி மறுநாள் காலை நான்கு மணிக்கே நாங்கள் இருவரும் இரண்டு டார்ச் விளக்குடன் பண்ணையாரின் தோப்புக்கு வந்தோம். அது சற்று உயரமான மரம். இருந்தாலும் எனக்கு மரம் ஏறத் தெரியும். மளமளவென்று ஏறினேன். புஷ்பா மரத்தின் கீழேயிருந்து டார்ச்சை அடித்து வெளிச்சம் காட்டினுள். நல்ல நல்ல பூக்களாகப் பறித்துக் கீழே போட்டேன். அவள் அதைப் பொறுக்கிச் சேகரித்துக் கொண்டாள். கிட்டத்தட்ட நாற்பது பூ வரையில் பறித்து விட்டேன். அதன் பிறகுதான் அந்த விபத்து நடந்தது. ஒரு கொப்பின் நுனியில் இருந்த சில மலர்களைப் பறிக்க நான் குனிந்த போது என் இடக் கையில் இருந்த டார்ச் லைட் நழுவி விழுந்தது. அதை எட்டிப் பிடித்து விடும் முயற்சியில், ஒரே ஆதாரமாகப் பிடித்துக் கொண்டிருந்த இடக் கைப் பிடியை விட்டு விட்டேன். மறுகணம் சுமார் முப்பது அடி உயரத்திலிருந்து தடாலெனக் குப்புற விழுந்தேன்.

மண்டை சிதறி அந்த இடத்திலேயே நான் உயிர் இழந்திருக்க வேண்டும். ஆனுல் தெய்வம் காத்தது. நான் விழுந்த இடத்தில் ஓர் உரக் குழி தோண்டி, அதில் தோப்பு மரங்கள் உதிர்த்த காய்ந்த இலைச் சருகுகளை நிரப்பி யிருந்ததால் உயிர் தப்பினேன். உடலில் ஒரு காயங்கூட இல்லை. ஆனுல், குப்புற விழுந்ததால் நெஞ்சில் மட்டும் இலேசாக வலி இருந்தது. வீடு திரும்பி மாமாவுக்குத் தெரியாமல் நெஞ்சுக்கு ஒற்றடம் கொடுத்த பிறகு அந்த வலியும் மறைந்து விட்டது. 'பெரிய கண்டத்திலிருந்து தப்பினேன்' என்று ஆறுதல் கொண்டேன்.

ஆனுல் நான் அதிலிருந்து தப்பவில்லையே!



3

லீவு முடிந்து புனுவுக்குத் திரும்பி, பி.ஏ. வகுப்பில் சேர்ந்த பிறகு எனக்கு அடிக்கடி இருமத் தொடங்கியது. இருமியபோது நெஞ்சு அதிகமாக வேதனை அளித்தது. அதோடு எப்பொழுது பார்த்தாலும் ஒரே சோர்வாக இருந்தது. இடையிடையே ஜுரமும் வந்தது. டாக்டரிடம் போய்ப் பரிசோதிக்கச் சொன்னேன். சில நாட்களுக்கு முன் மரத்திலிருந்து விழுந்து நெஞ்சில் அடிபட்டதையும் கூறினேன். அவர் என் மார்புப் பகுதியை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்துவிட்டு, ஓர் இடியைத் தூக்கித் தலையில் போட்டார். என்னை க்ஷயரோகம் பிடித்திருக்கிறது, உடனேயே நான் டி.பி. ஸானடோரியத்தில் சேர்ந்து சிகிச்சை பெற வேண்டும்!

இதைக் கேட்ட கணத்திலேயே என் உயிரில் பாதி போய்விட்டது. இருந்தாலும் டாக்டரின் ஆலோசனைப்படி உடனடியாகப் புனு டி.பி. ஸானடோரியத்தில் சேர்ந்தேன். இந்தப் பயங்கர நோய் பற்றி நான் மாமாவுக்கு எழுதவில்லை. ஆனுல், கல்லூரியில் என்னுடன் படித்த நண்பர்கள் எழுதி விட்டார்கள் போலிருக்கிறது; மாமாவும் புஷ்பாவும் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தனர். என்னைப் பரிசோதித்த டாக்டரிடமிருந்து அவர்கள் ஏற்கனவே எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தார்கள். உலர்ந்த சருகாய் நான் கிடந்த கோலத்தைக் கண்டு புஷ்பா, ''ஐயோ அத்தான்! என் மலராசை உங்கள்

உயிருக்கே எமனாக வந்துவிட்டதா?'' என்று கதறி அழுதாள்.

'உயிருக்கே எமன்!' அந்த வார்த்தைகளைக் கேட்டபோதுதான் என் உண்மையான நிலையை நான் புரிந்து கொண்டேன். ஆம்; இனி நான் இந்த நோயிலிருந்து மீளப் போவதில்லை. போவதற்கு முன் புஷ்பாவை மணமாலையும் கழுத்துமாகவாவது பார்த்துவிட வேண்டாமா?

''மாமா!'' என்றேன்.

''என்ன, ராஜீவ்?''

''புஷ்பாவுக்கு உடனே நல்ல வரனைப் பாருங்கள். என் சொத்து முழுவதையும் அவளுக்குச் சீதனமாகக் கொடுப்பேன். அந்த மண மலரின் மென்மையறிந்து போற்றிப் பாதுகாக்கும் ஒரு மன்மதனைப் பிடித்து வாருங்கள்.''

புஷ்பா சீறினாள்: ''என்ன சொன்னீர்கள்? உங்களை இந்த நிலைக்கு உள்ளாக்கி விட்டு, நான் இன்னொருவருக்குக் கழுத்தை நீட்டவா? அப்படி நடப்பேன் என்று கனவுகூடக் காணாதீர்கள்.''

''நான் பட்டுக் கொண்டிருக்கும் செடி, புஷ்பா. என்னிலிருந்து பிரிந்தாலன்றி நீயும் கருகிவிடுவாய்.''

''மொக்காகி, அரும்பி, மலர்ந்த செடியிலிருந்து பிரிக்கப்பட்ட மலர் என்றாயினும் கருகியே தீரும், அத்தான்! அதைவிட அது அந்தச் செடியிலேயே கருகுவதுதான் நல்லது.''

''இல்லை, புஷ்பா. இறுதிச் சீட்டு வாங்கிவிட்ட என்பொருட்டு நீ உன் வாழ்வை வாட விடக்கூடாது. நாம் எத்தனையோ ஆகாயக் கோட்டைகள் கட்டினோம். ஆனால் ஊழ்வினை அவற்றையெல்லாம் தகர்த்துவிட்டது. சாவதற்கு முன் நீ சந்தோஷமாக இல்லறம் நடத்துவதைக் காண வேண்டும் என்பதே இப்போது என் ஆவல். தயவு செய்து நிறைவேற்று, புஷ்பா.''

இப்படி நான் எவ்வளவோ கெஞ்சினேன், ராம். ஆனால் புஷ்பாவின் பிடிவாதத்தைத் தளர்த்த முடியவில்லை.

என் வற்புறுத்தலைப் பொறுக்க முடியாமலோ என்னவோ, ஒரு தடவை புஷ்பா சொன்னாள்: ''இதோ பாருங்கள், ராஜீவ் அத்தான். என்னை மணமாலையும் கழுத்துமாகப் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நாளைக்கே வேண்டுமானாலும் உங்களுக்கு மாலையிட்டு, அதன் விளைவை அநுபவிக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் என் உள்ளத்தில் காதலை வளர்த்த நீங்களே என்னை வேறொருவருக்கு மனைவியாக்கும் கொடுமையைச் செய்ய முனையாதீர்கள்.''

''ஆமாம், ராஜீவ். காதல் வயப்பட்ட எந்தப் பெண்ணுக்கும், காதலனைத் தான் மணக்க முடியாமல் நோய் கொண்டு போய்விடப் போகிறது என்பது நிச்சயமாகத் தெரிந்தாலுங்கூட, அவன் கண்முன் இன்னொருவனுக்கு மாலையிட மனம் வராது'' என்று மாமாவும் சொன்னார்.

நான் அந்தத் தடவை அவர்களிடம் இதுபற்றி விவாதிக்கவில்லை. அடுத்த தடவை மாமா மட்டும் தனியாக என்னைப் பார்க்க வந்தபோது, விவாதத்தைத் தொடர்ந்து, ''ஆனால் மாமா, அவ்வளவு தீவிரமாயிருக்கும் ஒருத்தி தன் காதலன் இறந்த பின்பும் வேறொருவனுக்கு மாலை யிடுவாள் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டேன்.



''காதலித்தவன் கண்முன் இருக்கும்போது அவளுக்கு இருக்கும் மன நிலை வேறு; அவன் மறைந்துவிட்ட பின் இருக்கும் மனநிலை வேறு, ராஜீவ். இழப்பின் துயரம் எவரிடமும் நிலையாக நிற்பதில்லை. நாள்பட அது மறைந்துவிடுகிறது.''

''ஆனால் மாமா, சாவு என்னை அணுகாமல் இழுத்தடித்துக் கொண்டே இருக்கிறதே! நான் என்ன செய்வேன்?'' என்று கதறினேன்.

மாமா என்னைத் தேற்றினார். ''மனசைத் தேற்றிக் கொள், ராஜீவ். புஷ்பாவின் திருமண நினைவை உன் மனசிலிருந்து அகற்றி விடு.''

''அது முடியாது மாமா. அவள் மணம் செய்து கொண்டாள் என்ற செய்தியாவது காதில் விழுந்தால்தான் என் நெஞ்சு வேகும்.''

மாமா ஆலோசித்தார்; நானும் ஆலோசித்தேன். சட்டென்று ஒரு வழி தென்பட்டது எனக்கு. மாமாவிடம் சொன்னேன்: ''மாமா, என்றைக்கும் சாகப் போகிறவன் நான். சாவதை மனக் குறையுடன் சாகாமல், மன நிறைவோடு சாக விரும்புகிறேன். நீங்கள் துணிந்து ஓர் உதவி செய்தால்தான் அது சாத்தியமாகும். நாளைக்குச் சாகப் போகிற நான் இன்றே செத்து விட்டதாக அறிவித்து விட்டால், புஷ்பா சில நாட்கள் என் நினைவில் வாடினாலும், பிறகு மனம் தேறித் திருமணம் செய்து கொள்ள இணங்கி விடுவாள்.''

''ஆனால் ராஜீவ், உயிரோடு, பக்கத்தில் ஐம்பது மைல் தூரத்தில் இருக்கும் நீ செத்து விட்டாய் என்று பொய் சொல்லிப் புஷ்பாவை எப்படி நம்ப வைக்க முடியும்?''

''அதற்கும் ஒரு வழி இருக்கிறது, மாமா. இங்கே எனக்குச் சிகிச்சை அளிக்கும் அமெரிக்க டாக்டர் என்னிடம் பரிவு கொண்டவர். இந்த நோய்க்காரர்களுக்குக் குளிர் தேசம் மிகவும் நல்லது. அங்கே இருந்து சிகிச்சை பெற்றால் இன்னும் சில மாதங்கள் அதிகமாக ஜீவித்திருக்க முடியும் என்று அவர் கூறக் கேட்டிருக்கிறேன். இதைக் காரணமாகக் காட்டி நான் அந்த டாக்டரிடமிருந்து சிபாரிசுக் கடிதம் ஒன்று வாங்கிக் கொண்டு அமெரிக்காவுக்குப் போகிறேன். அங்கே போய்ச் சில நாட்கள் ஆன பின் இறந்துவிட்டதாக நானே வேறு




யார் பெயரிலாவது உங்களுக்குக் கேபிள் அனுப்பி விடுகிறேன். இப்படிச் செய்தால்தான் என் உடலில் உயிர் இருக்கும்போதே என் அன்புக்குரிய புஷ்பா மண வாழ்வில் ஈடுபட்ட செய்தியையாவது அறிந்து நான் ஆறுதல் பெற முடியும்'' என்று விளக்கினேன்.

என் மனச் சாந்திக்காக மாமா இதற்குச் சம்மதித்தார். என் சொத்து முழுவதையும் புஷ்பாவுக்கு எழுதி வைத்து விட்டு, அமெரிக்காவுக்குப் பறந்தேன். பத்து நாட்களுக்குப் பிறகு, நான் மரணம் அடைந்து விட்டதாக, ஆஸ்பத்திரிக்காரர்கள் அனுப்பியது போல் ஒரு பொய்க் கேபிளும் அனுப்பினேன். இது நடந்து இரண்டு மாதங்களுக்குப் பின், மாமாவிடமிருந்து எனக்கு ஓர் இரகசியக் கடிதமும், புஷ்பாவுக்கும் தாமோதர் ஸாங்விக்கர் என்ற ஒரு கல்லூரிப் பேராசிரியருக்கும் நடக்க இருந்த திருமணத்தின் அழைப்பிதழும் வந்தன. என் மனப்பாரம் நீங்கிற்று. நிம்மதியுடன் சாகும் நாளை எதிர்பார்க்கலானேன்.

4

இங்கேதான் எதிர்பாராதது நடந்தது, மிஸ்டர் ராம். என் நோயில் திடீரென்று ஓர் அபிவிருத்தி தென்பட்டது. ''பிழைத்து விட்டீர்கள், ராஜீவ்!'' என்று எனக்குச் சிகிச்சை அளித்து வந்த டாக்டர் ஒரு நாள் கூறியபோது நான் திடுக்கிட்டுப் போனேன். நான் பிழைத்து விட்ட செய்தி மாமாவுக்கும் புஷ்பாவுக்கும் தெரிந்தால் என்ன ஆகும்? மாமாவையாவது ஒதுக்கி விடலாம். ஆனால், நான் இறந்து விட்டதாக நம்பி, வேறொருவருக்கு மனைவியாகியிருக்கும் புஷ்பாவின் சலனமற்ற இல்வாழ்வுக்கு இது ஒரு பேரிடியாக அல்லவா ஆகிவிடும்? தவிர, வேறொரு முக்கியமான பிரச்னையும் எழுந்தது. சில மாதங்களில் இறந்து விடுவோம் என்று நம்பி வந்ததால், நான் நிறையப் பணங் கூடக் கொண்டு வரவில்லை. ஆதலால், ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலை பெற்ற பிறகு, இரண்டொரு மாத காலம் ஓய்வு எடுத்துக் கொண்ட பின் நான் பிழைப்புக்காக, எனக்குச் சிகிச்சை அளித்த டாக்டரின் உதவியால் ஹாவி

வுட் ஸ்டுடியோ ஒன்றில் வேலை தேடிக் கொண்டேன். என்னதான் நான் பிழைத்து விட்டது மாமாவுக்கும் புஷ்பாவுக்கும் தெரியாமல் இருக்க வேண்டும் என்று விரும்பினாலும், அதன் பொருட்டு அமெரிக்காவிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட என் மனம் இடம் கொடுக்கவில்லை. தாய் நாடு திரும்பி, அங்கே எங்கேயாவது வேலை தேடிக் கொண்டு பிழைப்பை நடத்துவது என்று தீர்மானித்தேன். எனவே, அந்த ஹாலிவுட் ஸ்டுடியோவில் வேலை பார்த்துக் கொண்டே, அங்குள்ள தொழிற் கல்விக் கழகம் ஒன்றில் சேர்ந்து 'காமிராமன்' பயிற்சி பெற்றேன். மூன்றாண்டுகள் பயிற்சி பெற்றுப் பட்டம் வாங்கிய பிறகு இந்தியா திரும்பினேன். உடனடியாக இந்தப் பிலிம்ஸ் டிவிஷனில் எனக்கு வேலையும் கிடைத்தது.

## 5

ராஜீவ் இவ்வாறு தம் கதையை முடிக்கவும், நாங்கள் புனா வந்து சேரவும் சரியாக இருந்தது. நேரே டி.பி. ஸானடோரியத்துக்கு வண்டியை விடச் செய்து அங்கே போய் இறங்கினோம். நிகழ்ச்சி தொடங்க இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. ஸானடோரியத்தின் பிரதான டாக்டர் எங்களை வரவேற்று, தம் அறைக்கு அழைத்துச் சென்று சிற்றுண்டியும் தேநீரும் வழங்கி உபசரித்தார். பிறகு, ''வாருங்கள்; இன்று திறக்கப்படும் பிளாக்கை நிறுவ நன்கொடை வழங்கிய அம்மாள் விழாப் பந்தலில் இருக்கிறாள். முதலில் அவளை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று எங்களை அழைத்துச் சென்றார்.

பந்தலில் விழா ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண் டிருந்தாள் ஓர் இளம் பெண். அவளிடம் எங்களை அழைத்துச் சென்று, ''இவர்கள்தாம்......'' என்று டாக்டர் ஆரம்பித்தாரோ இல்லையோ, அங்கே திடுக்கிடும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

''புஷ்பா!'' என்று கூவினார் ராஜீவ்.

''ராஜீவ்!'' என்று அலறினாள் அவள்.

எதிர்பாராத சந்திப்பின் அதிர்ச்சி நீங்கியதும் அவர்கள் பரஸ்பரம் விசாரணையில் இறங்கினர்.

''அப்பா போன வருஷம் காலமாகி விட்டார்'' என்று புஷ்பா வருத்தத்துடன் சொன்னாள்.

''உன் கணவர்?''

நான் சட்டென்று ''ராஜீவ்!'' என்று அவரை அதட்டி அடக்கிப் புஷ்பாவின் பாழ்நெற்றியைக் காட்டினேன்.

''ஐயோ புஷ்பா! இது என்ன கோலம்?'' என்று வீறிட்டார் ராஜீவ்.

மறுகணம் புஷ்பா எங்களை அதிர வைக்கும் காரியம் ஒன்றைச் செய்தாள். அருகே ஒரு மேஜைமீது விழாவுக்கு வருபவர்களுக்குக் கொடுப்பதற்காகச் சந்தனமும் குங்குமமும் வைத்திருந்தன. புஷ்பா சட்டென்று குங்குமச் சிமிழிலிருந்து சிறிது குங்குமம் எடுத்துத் தன் நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டாள்.

''புஷ்பா! என்ன இது?'' என்று மறுபடியும் வீறிட்டார் ராஜீவ்.

''ஆம்; இழந்த குங்குமத்தை நான் மீண்டும் பெற்றுவிட்டேன்'' என்றாள் அவள்.

அவள் பேச்சின் பொருள் ராஜீவுக்கும் விளங்கவில்லை; எனக்கும் விளங்கவில்லை. கடைசியில் புஷ்பாவே அதை விளக்கினாள்.

தான் இறந்துவிட்டதாகக் கதை கட்டிவிட்டால் புஷ்பா வேறு யாரையாவது மணம் செய்து கொள்வாள் என்று ராஜீவும் அவன் மாமாவும் நினைத்தார்களே, அவர்கள் நினைத்தது நடக்கவில்லை. மாறாக அவர் இறந்துவிட்டதாகக் கேபிள் வந்தது தொட்டு அவள் மங்கலப் பொருள்களை விலக்கி விட்டாள். இது காரணமாகத் தேஷ்பாண்டே தம் மகளிடம் திருமணப் பேச்சையே எடுக்க முடியாமற்போயிற்று. ஆனால் ராஜீவ் நிம்மதியுடன் சாக வேண்டுமே! அதற்காக அவர், தம் மருமகனின் பொய்க் கேபிளைப் போலவே பொய்த் திருமண அழைப்பிதழ் ஒன்றைத் தயாரித்து ராஜீவுக்கு அனுப்பி விட்டார். துறவு வாழ்க்கை வாழ்ந்து வந்த புஷ்பா, தந்தை இறந்த பிறகு ராஜீவ் தனக்கு எழுதி வைத்திருந்த சொத்து முழுவதையும் விற்று, அவன் பெயரால், இந்த க்ஷயரோக ஆஸ்பத்திரியில் ஒரு பிளாக் நிறுவ ஏற்பாடு செய்தாள்.

அப்புறம் என்ன?

அடுத்த முகூர்த்தத்தில் ராஜீவுக்கும் புஷ்பாவுக்கும் திருமணம் அமர்க்களமாக நடந்தேறியது. ★

---

தளிர்



சருகு



போட்டோ: ஆர். பி. எஸ். மணி


Mysore Government Silk
DRAPES
LIKE A DREAM
FLATTERS
YOUR FIGURE
GOVT. SILK WEAVING FACTORY
MYSORE
MYSORE GOVERNMENT
SILK WEAVING FACTORY
MANATHODY ROAD MYSORE-4
SHOW ROOMS:-
● GUPTA MARKET — KEMPEGOWDA ROAD, BANGALORE - 9.
● MYSORE SILK PALACE—LUZ CORNER, 92, ROYAPETTAH HIGH ROAD, MYLAPORE, MADRAS-4.




everest/3636 Acw tm




மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

Criterion-MC-1154 T



# பிரமன் செய்த தவறு

'நாடோடி'

முன்னொரு காலத்தில், அதாவது பிரமன் உலகைப் படைக்க ஆரம்பித்த காலத்தில் மார்மி தார்மி என்று இரண்டு பேர் இருந்தார்கள். மார்மியின் மனைவியின் பெயர் மார்மிணி; தார்மியின் மனைவியின் பெயர் தார்மிணி; மார்மிக்கு மார்மிமித்திரன் என்று ஒரு மகனும், தார்மிக்குத் தார்மிமித்திரன் என்று ஒரு மகனும் பிறந்தார்கள். (சற்று இந்தப் பாராவை இன்னொரு தடவை படித்துப்பார்த்துப் பெயர்களை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் மேலே கதை புரியும்.)

ஒரு நாள் மார்மி நதிக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு, வீடு திரும்பிக்கொண்டிருக்கையில், எதிரே தம் எட்டு வயது மகன் மார்மிமித்திரன் அழுதுகொண்டு வருவதைக் கண்டார்.

''ஏண்டா மார்மிமித்ரா! எதற்காக அழுகிறாய்? யார் உன்னை அடித்தார்கள்?'' என்று கேட்டார்.

''என்னப்பா! என் பெயர்கூட உங்களுக்கு மறந்துவிட்டதா? என்னைப் போய் மார்மிமித்திரா என்று கூப்பிடுகிறீர்களே!'' என்றான் பையன், அழுதுகொண்டே.

''என்னடா விளையாடுகிறாய்? நீ என் பிள்ளை மார்மிமித்திரன்தானே?'' என்றார்.

''இல்லையப்பா, நான் உங்கள் பிள்ளை தார்மிமித்திரன்.''

''நீ தார்மிமித்திரன் என்றால் நீ எப்படியடா என் பிள்ளையாக இருக்க முடியும்? உன் பெயர் தார்மிமித்திரன் என்றால் உங்கள் அப்பா தார்மி அல்லவா? அப்படியானால் என்னை ஏன் அப்பா என்று அழைக்கிறாய்? நான் மார்மியாக்கும்.''

''என்னப்பா விளையாடுகிறீர்கள்?''

''நான் ஒன்றும் விளையாடவில்லை. நீதான் விளையாடுகிறாய். மார்மிமித்திரனாகிய நீ உன்னை வேடிக்கையாகத் தார்மிமித்திரன் என்று அழைத்துக் கொள்கிறாய்.''

''இல்லையப்பா, நான் உங்கள் மகன் தார்மிமித்திரன்தான்.''

''நீ தார்மிமித்திரனாக இருக்கலாம். ஆனால் நான் உன் தகப்பனார் தார்மி அல்ல; நான் மார்மி.''

இவர்களுக்குள் இப்படி வாக்குவாதம் நடந்துகொண்டிருக்கையில் அங்கு மார்மிணி வந்து சேர்ந்தாள்.

மார்மிணியைக் கண்டதும், மார்மி, ''இதோ பார் மார்மிணி! உன் பிள்ளை மார்மிமித்திரன் எதற்காக அழுகிறான் என்று கேள்'' என்று கூறினார்.

அதற்கு மார்மிணி, ''தார்மிமித்திரன் எப்படி என் பிள்ளையாவான்? அவன் தார்மியாகிய தங்கள் பிள்ளை அல்லவா?'' என்றாள்.

''என்ன, கணவனாகிய என்னைக்கூட உனக்கு அடையாளம் தெரியவில்லையா? நான் தார்மி அல்ல; உன் கணவன் மார்மி.''

''யாரை ஏமாற்றுகிறீர்கள்? என் கணவர் மார்மி இத்தனை நேரம் என்னோடு இன்பமாக இருந்துவிட்டு, இப்பொழுதுதானே வெளியே சென்றார்?''

''என்ன, தார்மிப் பயல் உன்னோடு இன்பமாக இருந்தானா? அந்தப் பயலைக் கொன்றுவிட்டுத்தான் மறுகாரியம்.''

''என் கணவர் என்னிடம் இன்பமாக இல்லாமல் வேறு யாரிடம் இன்பமாக இருப்பார்? அதற்காக அவரைக் கோபித்துக்கொள்ள உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''யாரை யாருக்குக் கணவன் என்கிறாய்? நான்தான் உன் கணவன் மார்மி.''

''யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? இதோ என் கணவரைக் கூப்பிட்டு, உங்கள் நாக்கை அறுக்கச் சொல்லுகிறேன்.''

அந்தச் சமயம் பார்த்துத் தார்மி அந்தப் பக்கமாக வரவே, அவர் மார்மியும் மார்மிணியும் சண்டை போட்டுக் கொள்வதைப் பார்த்து, ''டேய் மார்மி! என் மனைவியிடம் உனக்கு என்னடா பேச்சு?'' என்று கேட்டார்.

''டேய் தார்மி! யாரை யாருடைய மனைவி என்கிறாய்?''

அவ்வளவுதான், இருவரும் ஒருவர் சிண்டை இன்னொருவர் பிடித்துக்கொண்டு, வெகு நேரம் சண்டை பிடித்தார்கள். (அந்தக் காலத்தில் சிண்டு இருந்ததனால், சண்டை போட்டுக்கொள்ள இது உதவிற்று.) கடைசியில் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இதுபோன்ற சம்பவங்கள் அந்தக் காலத்தில் நிறைய நடந்துகொண்டிருந்தன. காரணம், அந்தக் காலத்தில் பிரமன் எல்லாரையும் ஒரே அழகு, ஒரே உருவம், ஒரே வயது உடையவர்களாகப் படைத்துவிட்டதுதான். அவர் ஆணுக்கு ஒரு வார்ப்பு, பெண்ணுக்கு ஒரு வார்ப்பு என்று இரண்டே இரண்டு வார்ப்புக்கள்தாம் வைத்திருந்தார். அந்த வார்ப்பில் எல்லாரையும் வார்த்து, ஆண்கள் எல்லாம் ஒரே மாதிரியாகத் தோன்றவும், பெண்கள் எல்லாம் ஒரேமாதிரியாகத் தோன்றவும் செய்துவிட்டார்.

பிரம்மா இப்படி அசட்டுத்தனம் செய்திருப்பாரா என்று நினைக்காதீர்கள். ஏன் செய்ய மாட்டார்? உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் வால்மீகி ராமாயணத்தின் உத்தர காண்டத்தைப் படித்துப் பாருங்கள். அவரே தாம் செய்த இந்தப் பிழையைப்பற்றி இந்திரனிடம் கூறுகிறார்!

இப்படி எல்லாரும் ஒரே மாதிரியாக இருந்ததனால், பூமியில் எங்கே பார்த்தாலும் குழப்பங்கள் ஏற்பட்டன.

ஓர் அரசன் இன்னோர் அரசனைத் தாக்குவதற்காகப் போவான். வழியில் இவனுக்கு உதவிக்கு வரும் அரசனைத் தன் எதிரி என்று நினைத்துக்கொண்டு, அவனைத் தாக்கிவிட்டு, எதிரி அரசனோடு உறவாடிவிட்டு வந்துவிடுவான்!

நாட்டில் எங்கே பார்த்தாலும் குற்றங்கள் அதிகரித்தன. ஒருவன் செய்த குற்றத்தை இன்னொருவன் மீது சுமத்துவது எளிதாக இருந்தபடியால், எல்லாரும் குற்றங்கள் செய்து அந்தக் குற்றத்தைப் பிறர்மீது சுமத்தி விடுவார்கள்; ஆள் அடையாளம் தெரியாமல் இருந்ததனால், நிரபராதிகள் தண்டிக்கப்படுவார்கள்; குற்றம் செய்தவர்கள் தப்பித்துக் கொண்டு விடுவார்கள். இதனால் நாட்டில் அமைதி குலைந்தது.

பள்ளிகளில் பையன்கள் இடம் மாறி உட்காருவார்கள்; அதை வாத்தியார்களால் கண்டுபிடிக்க முடியாது. அதே மாதிரி வாத்தியார்கள் ஒருவருக்குப் பதில் இன்னொருவர் வருவார்; காவியம் சொல்லிக் கொடுக்கும் வாத்தியாருக்குப் பதில் தர்க்கம் சொல்லி கொடுப்பவர் வருவார். அதைப் பையன்களால் கண்டுபிடிக்க முடியாது.

கழனிகளிலும், தோட்டங்களிலும், காரியாலயங்களிலும், யாருக்காவது ஒரு வேலை இடப்பட்டால் அவர்கள் அந்த வேலையைச் செய்வதில்லை. கேட்டால் தனக்கு அந்த வேலை இடப்படவில்லை என்றும், இன்னொருவருக்குத் தான் இடப்பட்டது என்றும் சொல்லித் தப்பித்துக் கொள்வார்கள்.

மற்றத் துறைகளில் குழப்பம் ஏற்பட்டாலும் அதைப் பற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் கணவன் மனைவி உறவில் ஏற்பட்ட சண்டைகள் இருக்கின்றனவே, அவைதாம் கணக்கில் அடங்காமல் போய்விட்டன. யார் யாருடைய மனைவி, யார் யாருடைய கணவன் என்ற குழப்பம் அதிகரித்தது. சில கயவர்கள் இந்தக் குழப்பத்தை வேண்டுமென்றே தங்களுக்கு அநுகூலமாகப் பயன்படுத்திக்கொண்டு, உல்லாச வாழ்க்கை நடத்தத் தொடங்கினர்.

இந்தச் சிக்கலான பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்று மக்களுக்குப் புரியவில்லை. சிலர் கல்யாண வழக்கத்தையே ஒழித்து, இஷ்டம்போல் இருக்கலாம் என்று இருந்தால் என்ன என்று கூட வாதித்தனர்.

கடைசியில் ஒருவர் ஒரு வழி கண்டுபிடித்தார். எல்லாரும் சட்டை அணிய வேண்டும் என்றும், அந்தச் சட்டையில் தங்கள் பெயர் பொறித்த ஓர் ஓலைத் துண்டைக் குத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு ஆயிற்று.

ஆனால் இந்த வழி பலன் அளிக்கவில்லை. எவனாவது அசதி மறதியாகவோ அல்லது ஸ்நானம் பண்ணுவ





தற்காகவோ, சட்டையைச் சற்றுக் கழற்றி வைத்தால் போதும், அதை இன்னொருவன் தூக்கிக் கொண்டு ஓடிப் போய்விடுவான். சட்டையை இழந்தவன் தான் இன்னான் என்று நிரூபிப்பது மிகவும் கஷ்டமாகிவிடும்.

ஆகவே சட்டைகளை நம்பாமல் எல்லாரும் தங்கள் தங்கள் பெயர்களை லைசன்சு வில்லைகளைப் போலக் கையில் மாட்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். நாளடைவில் இந்த வில்லைகள் தங்கத் தகட்டில் செய்யப்பட்டு, அவை தங்கச் சங்கிலியில் இணைக்கப்பட்டு, கைக் கடிகாரங்களைப் போலக் கையில் கட்டிக்கொள்ளப்பட்டன.

ஆனால், இதனால் தங்க வில்லைகளைத் திருடர்கள் திருடிக்கொண்டு போகும் வழக்கம் அதிகரித்ததே தவிர, குழப்பம் குறையவில்லை.

கடைசியில் அவரவர் பெயரை அவரவர் கையில் பச்சை குத்திக்கொள்வது என்னும் வழக்கம் ஏற்பட்டது. ஆனால் இந்த வழக்கத்தையும் சிலர் தாம் கடைப்பிடித்தார்கள்; ஆதலால் குழப்பம் குறையவில்லை.

உலகில் இத்தனை குழப்பங்கள் இருந்தும், இவற்றைப் பொருட்படுத்தாமல் பிரம்மா வழக்கம் போலத் தம் சிருஷ்டித் தொழிலை நடத்திக் கொண்டே போனார். ஒரே மாதிரி ஆண்களையும், ஒரே மாதிரிப் பெண்களையும் உற்பத்தி செய்துகொண்டே போனார்.

ஆனால் பிரம்மா செய்துகொண்டே போன இந்தப் பிழையினால் பூலோகத்தில் மட்டுமன்றி யமலோகத்திலும் குழப்பம் ஏற்பட்டது.

எல்லாரும் ஒரே மாதிரியாக இருந்ததனால், யமகிங்கரர்கள் தங்கள் காரியத்தில் தவறு செய்யத் தொடங்கினார்கள். முதலில் ஒருவரின் உயிரைக் கொண்டு போவார்கள். பிறகு மேல் உலகுக்குச் சென்ற பிறகுதான் தாங்கள் செய்தது தவறு என்று கிங்கரர்களுக்குத் தெரியவரும். உடனே உயிரைத் திருப்பிக் கொண்டு விட்டு, மீண்டும் ஓர் உயிரை எடுத்துச் செல்வார்கள். பிறகு அதுவும் தவறு என்று தெரியவரும். இப்படியாக ஓர் உயிரைக் கொணர, அவர்கள் பத்துப் பதினைந்து தடவைகள் பூலோகத்துக்கும் யமலோகத்துக்கும் அலைந்தார்கள்.

இதனால் யம கிங்கரர்களிடையே அதிருப்தி நிலவியது. வேலைநிறுத்தம் செய்துவிடுவோம் என்று அவர்கள் யமனைப் பயமுறுத்த ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் யமதர்மனுக்கு, பூலோகத்தில் இருந்த ஷர்மி என்னும் அந்தணரை வேதாந்த விசாரணை செய்வதற்காக அழைத்து வரவேண்டியிருந்தது. அதற்காக ஒரு கிங்கரனை அனுப்பி வைத்தால், அவன் போய் இன்னொரு ஷர்மியை அழைத்து வந்து விட்டான்!

யமனுக்கு ஏற்பட்ட கோபம் சொல்லி முடியாது.

"ஏன் இந்தத் தவறு?" என்று கோபமாகக் கிங்கரனைக் கேட்டான்.

"நான் என்ன பண்ணுவேன்? உலகில் எல்லாரும் ஒருவரைப் பார்த்தாற் போல் இன்னொருவர் இருக்கிறார்கள்" என்று கிங்கரன் சொன்னான்.

இது குறித்துப் பேச வேண்டும் என்று யமன் பிரம்மாவைத் தேடி வந்தான். பிரம்மா வழக்கம்போல இரண்டு வார்ப்படங்களை வைத்துக்கொண்டு தம் சிருஷ்டித் தொழிலை நடத்திக் கொண்டிருந்தார்.

ஷர்மி விஷயமாக நடந்த ஆள் மாறாட்டத்தைக் குறித்து யமன் பிரம்மாவிடம் சொன்னான்.

இதற்குப் பிரம்மா, "நான் என்ன பண்ணுவேன்? என்னால் படைக்கப் படும் எல்லாரும் ஒரே மாதிரி இருக்கிறார்கள். உருவத்தால் ஒன்றாக இருந்தாலும் பெயர்களை அவர்கள் மாற்றி வைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று கேட்டார்.

"உங்களால் ஒருவருக்கு ஒருவர் வேறாகத் தோன்றும் மக்களைப் படைக்க முடியாதா?" என்று யமன் கேட்டான்.

"என்னால் முடியவில்லையே! நான் என்ன செய்வேன்?"

"இதனால் பூலோகத்தில் விளையும் குழப்பம் போதாது என்று யமலோகத்திலும் குழப்பம் ஏற்பட ஆரம்பித்து விட்டது. கிங்கரர்கள் வேலைநிறுத்தம் செய்வதாகப் பயமுறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை."

"எனக்குந்தான் என்ன செய்வது என்று தெரியவில்லை" என்றார் பிரம்மா.

"நாராயண, நாராயண!" என்ற சத்தம் கேட்க, இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். நாரதர் நின்றுகொண்டிருந்தார்.

"இதில் ஒரு கஷ்டமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே! எப்பொழுது படைப்புத் தொழிலை உம்மால் சரியாகச் செய்ய முடியவில்லையோ, அப்போது அதை வேறு யாரிடமாவது கொடுத்துவிட வேண்டியதுதானே?" என்றார் நாரதர்.

"யாரிடம் கொடுப்பது?"

"பூலோக மக்களிடமே கொடுத்து விடுங்கள். ஆணும் பெண்ணும் சேர்ந்து படைப்புத் தொழிலைச் செய்ய வேண்டும் என்று வைத்துவிட்டால், அவர்களிடையே உள்ள பலவித அம்சங்கள் பல சேர்க்கைகளில் சேர, விதம் விதமான மக்கள் பிறப்பார்கள்" என்றார் நாரதர்.

"இத்தனை நாளும் இது எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! அப்படியே செய்கிறேன்" என்று பிரம்மா படைப்புத் தொழிலை உலக மக்களிடமே கொடுத்தார்.

அன்றையிலிருந்து உலகில் விதம் விதமான மக்கள் பிறந்தனர்.

ஆனால் இதுவரை ஒரே பிரம்மா இருந்தது போய், எல்லாரும் இந்தக் காரியத்தில் பிரம்மா ஆகிவிடவே, மக்களின் எண்ணிக்கை கட்டுக்கு அடங்காமல் அதிகரித்துக்கொண்டே போய், இன்றுள்ள தாங்க முடியாத அளவுக்கு வந்துவிட்டது.

பாவம், பிரம்மா! தாம் செய்து கொண்டிருந்த காரியத்தை ஏன் மக்கள் கையில் கொடுத்தோம் என்று கவலைப்பட்டுக்கொண் டிருக்கிறார்.

ஆதியில் எல்லாரையும் ஒரே மாதிரியாகப் படைத்தது தம் தவறா, அல்லது படைப்புக் காரியத்தை மக்களிடம் கொடுத்தது தவறா என்று தெரியாமல் பிரம்மா திகைத்துக் கொண்டிருக்கிறார்! ★




## புதுடயரா
## அல்லது டிவிஎஸ் ரீடிரெட் செய்ததா?

### சொந்தக்காரருக்கு மட்டுமே தெரியும்!

மதிநுட்பமுள்ள கார் சொந்தக்காரர் என்ற முறையில் உங்கள் டயர்கள் ரீடிரெட் செய்யப்படுவதன்மூலம் அதிக நாளைக்கு பயன்படுவதையே நீங்கள் விரும்புவீர்கள். எனினும் வெளிப்படையாக ரீடிரெட் செய்யப்பட்டதாக தோன்றும் ஒரு டயரை உபயோகிக்க விரும்பமாட்டீர்கள். டிவிஎஸ் ரீடிரெட் செய்தவை புதியனபோலவே தோன்றுகின்றன. புதியனபோலவே உழைக்கின்றன அவை ரீடிரெட் செய்யப்பட்டவை என்று உங்களுக்கு மட்டுமே தெரியும். மேலும் எவ்வளவோ செலவு மிச்சம்! புதிய டயர் ஒன்றின் விலைக்கு நீங்கள் மூன்று டயர்களை ரீடிரெட் செய்துகொள்ளமுடியும்!

TVS

**உங்கள் நம்பிக்கைக்கு**
**உரியது டிவிஎஸ்**

*இந்தியாவிலேயே மிகப்பெரிய ரீடிரெடிங் ஸ்தாபனம்*

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், (இது ஒரு டி.வி.எஸ். ஸ்தாபனம்) பங்களூர்-கோயமுத்தூர்-சென்னை-புதுக்கோட்டை – செக்கந்திரபாத்-திருநெல்வேலி-விஜயவாடா

SI–4743

1968
கலைமகள்
தீபாவளி மலர்




வரப்பிலும் துணை நிற்கின்ற வாழ்வு

ஓவியர்: ரெஸாக்




"என்னை மனிதனாகவே கருதுகிறேன்'' என்று கூறிய ராமன் விசுவரூபம் கொண்டான் என்றால் விந்தையாக இருக்கலாம். ஆனால் சங்கீதம் எந்த விந்தையைத்தான் செய்யாது?

தியாகையரின் சங்கீதத்தில் ராமன் விசுவரூபம் கொள்கிறான்.

தியாகையரை வால்மீகியின் அவதாரம் என்று சொல்வார்கள். தியாகையர் பாடலிலேயே இதற்கு அகச்சான்று இருப்பதாகவும் சொல்வார்கள். 'எவரநி நிர்ணயிஞ்சிதிரா' என்பதுதான் அந்தப் பாடல். இந்தப் பாடலின் சரணத்தில், சிவமந்திரத்தின் ஜீவாட்சரமான 'ம'காரமும், நாராயண மந்திரத்தின் ஜீவாட்சரமான 'ரா'காரமும் சேர்ந்து 'ராம' என்ற பெயர் அமைந்திருப்பதைத் தியாகையர் குறிப்பிடுகிறார். இந்த வரிசைக் கிரமப்படி 'மரா' என்ற பெயர்தான் கிடைக்கிறது; 'ராம' என்ற பெயர் அல்ல.

தியாகையர் ஏன் இப்படிச் சொன்னார்? இதில்தான் அவர் வால்மீகியின் அவதாரம் என்பதற்கு அகச்சான்று இருக்கிறது என்று கதகர்கள் கூறுகிறார்கள். வால்மீகி வேடனாக இருக்கையில், அவர் தாரக மந்திர உபதேசத்துக்குப் பாத்திரரல்ல என்பதனால், நாரத முனிவர் அவருக்கு மராமரத்தைக் காட்டி, 'மரா' என்று மனனம் செய்யப் பணித்தார் என்பதும், 'மரா மரா, மரா மரா' என்று ஜபித்தே ராம சப்தத்தில் வால்மீகி கரைந்தார் என்பதும் கதை. அந்தப் பூர்வ வாசனையாலேயே தியாகையர் 'எவரநி' கிருதியில் தம்மையும் அறியாமல் முதலில் 'ம' வையும் பிறகு 'ரா' வையும் கூறினார் என்பார்கள். சந்தத்துக்காகவே இப்படிச் சொன்னார் என்போரும் உண்டு.

வால்மீகியாகத் தியாகையரைப் பாவிப்பதில் விரோதம் ஏதும் இல்லை. ஆனால் தியாகையர் வால்மீகியை அப்படியே பின்பற்றவில்லை என்பதை அவர் பாடல்களில் காண்கிறோம். வால்மீகி ராமாயணத்தில் காணாமல், அத்புத ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், துளஸி ராமாயணம் ஆகியவற்றில் மட்டுமே காண்கிற பல சம்பவங்களைத் தியாகையர் வருணிக்கிறார். எந்த ராமாயணத்திலும் காணாத தம் சுயமான அநுபூதிக் கற்பனைகளையும் பாடுகிறார். வால்மீகியில் காணப்படாத இந்தச் சம்பவங்களைக் கூறும் தியாகையரின் பாடல்களே ஒரு விசேஷ அழகு பெற்றுள்ளன என்று கூடச் சொல்லலாம். இந்த நூதனக் காட்சிகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

ஏனோ ராம சரிதங்களில் பால ராமனின் லீலைகள் அதிகம் சொல்லப்படவில்லை. துளசி ராமாயணத்தில் காணும் காக புசுண்டி விருத்தாந்தம் ஒன்றே இதற்கு விதிவிலக்கு. இந்தப் பெருங் குறையைத் தியாகையர் ஒரே ஒரு கிருதி மூலம் தீர்த்து வைத்துவிட்டார் எனலாம்.

'ராம ராம ராம லாலி' என்று தொடங்கும் சஹானா ராகக் கிருதியில் கௌசல்யாதேவியும், குழந்தை ராமனும் சம்பாஷிக்கின்றனர்.

[இதோ அவர்களது உரையாடல்.]

**கௌஸல்யை:** அழகு ராமா! மன்னர் மன்னா! தொட்டிலில் அமர வா! என் பிள்ளைச் செல்வமே, வா! என் பூர்வ விரதங்களின் பலனே, வா! வர மாட்டாயா? கலகலவென்று நெருங்க மாட்டாய்? ஏன் வர மறுக்கிறாய்? பசி வந்துவிட்டதா? அல்லது வேறு என்ன வருத்தம்? சொல்லடா என் ஐயனே!

**ராமன்:** என் வயசுப் பிள்ளைகள் 'விளையாட வா' என்று அழைத்தனர். நான் விளையாடப் போனவுடன் 'நீ வர வேண்டாம்' என்று கூறிவிட்டனர்.

**கௌ:** ராகவா! உன்னை அப்படிச் சொன்னவர் யார்? என்ன குற்றம் கண்டு அப்படிச் சொன்னார்கள்?

**ரா:** அவர்கள் கண்ணாமூச்சி விளையாடிக்கொண்டிருந்தனர். என் கண்களைப் பொத்திப் பார்த்தால் அவை



அவர்களுடைய கைகளுக்கு அடங்கவில்லை. அதனால் திட்டி அனுப்பிவிட்டனர்.

**கௌ:** என்னைப் பெற்ற அரசே! இதற்காகவா உன் குவளைக் கண்கள் கலங்குகின்றன?

**ரா:** பின்னே? ஒவ்வொருத்தராக அத்தனை பையன்களும் என் கண்ணை மூடி மூடிப் பார்த்து, அத்தனை பேரும், 'நீ வேண்டாம் போ' என்று சொல்லிவிட்டார்களே!

**கௌ:** நெற்றி எல்லாம் இப்படி வேர்வை துளிக்கிறதே! இது என்ன கதையடா?

**ரா:** விளையாட்டில் சேர்த்துக் கொள்ளவில்லையே என்று யார் கண்ணிலும் படாமல் ஒளிந்துகொள்ளப் பார்த்தால், அதுவாவது முடிகிறதா? 'நீ எங்கே ஒளிந்து கொண்டாலும் உன் தேகத்தின் நீல காந்தி உன்னைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே!' என்கிறார்கள். 'இதுதான் உன் கர்மம்' என்கிறார்கள்.

**கௌ:** அது போகட்டும். உன் மாலைகள் ஏன் இப்படி முடிச்சாகிவிட்டன? காற் சிலம்புகள் ஏன் இப்படிக் கலைந்தன? நீ பொய் சொல்லாதவனாயிற்றே! உண்மையைச் சொல்.

**ரா:** அவர்களை நான் கட்டிப் பிடித்தேன். உடனே அவர்கள் என் காலில் விழுந்தார்கள். கட்டிப் பிடிக்கும்போது மாலைகள் பின்னிக் கொண்டு முடிச்சு விழுந்தது. அவர்கள் காலில் விழுந்தபோது காற் சிலம்புகள் கலைந்தன.

**கௌ:** அப்படியானால் விளையாட்டுக்கு வேண்டாம் என்றவர்களே உன்னை வணங்கி விட்டார்களா? உன்னை யாரென்று தெரிந்து கொண்டார்களா? உன்னைப் பற்றிக் கௌரவமாக நினைத்த அவர்கள் உன்னை என்ன பெயரிட்டு அழைத்தனர்?

**ரா:** நான் சாட்சி மாத்திரமானவன் என்றும் தியாகராஜர் பூஜிக்கும் தெய்வம் என்றும் அவர்கள் என்னைச் சொன்னார்கள்.

**எ**வ்வளவு அழகான பாடல்! அவன் கண்ணைப் பொத்த முடியாததனாலேயே அவன் சாட்சி. எல்லாவற்றையும் பார்க்க வேண்டிய சாட்சியினுடைய கண்களைப் பொத்திவிட்டால்?

அட்சியோடு கூடியவன் சாட்சி. அதாவது, கண் பெற்றவனே சாட்சி. கிருஷ்ணனைக் கண்ணன் என்று சொல்வது இதனால்தான். அந்தக் கிருஷ்ணனின் பால லீலைக்குச் சமமாக ராமனின் பிள்ளைப் பருவ விளையாடலைச் சொல்லுகையில் ராமனே கண்ணனாகிறான். கானத்தின் சக்தி அது. அந்தக் கானம் கிருஷ்ணனைப் போல் ராமனையும் விசுவரூபம் எடுக்கச் செய்கிறது.

**வி**சுவரூபம் என்று சொல்லிவிட்டதனால் உருவத்தில் மட்டுந்தான் தியாகையர் ராமனைப் பெரியவனாகக் காட்டுகிறார் என்று அர்த்தமில்லை. குணத்திலும் அவனை மிகமிகப் பெரியவனாக விசுவரூபம் எடுக்கச் செய்து நமக்குக் காட்டுகிறார்.

தருமத்தில் பிகுவாக நின்ற ராமனுக்கு ஒரு பௌதிக அடையாளம் போலவே விளங்குவது அவனுடைய தநுசு. 'ஒக மாட ஒக பாணமு' என்று புகழ் பெற்ற அந்த வீராதிவீரன் தன்னுடைய ஒரு பாணத்தையே இன்னொரு பாணத்தால் முறித்தான் என்றால் விந்தையாக இருக்கும்.

ராமனுடைய வீரத்தை அவனுடைய நெஞ்சின் ஈரத்தில் ஊறச் செய்கிற தியாகையர் இந்த விந்தைத் தரிசனத்தை 'வாசாமகோசரமே' என்ற பாடலில் செய்து வைக்கிறார்.



சீதை பொன்மான் வேண்டியது நமக்குத் தெரியும். அதற்கு முன்னதாகவே அரணிய வாசத்தின்போது இன்னொரு மானை அவள் விரும்பினதாகத் தியாகையர் சொல்கிறார். பொன்மான் வரலாற்றில் அவள் தன் விருப்பத்தைப் பிடிவாதமாக நிறைவேற்றிக் கொள்ள முற்பட்டு விபரீதத்தைத் தேடிக் கொண்டாள். தியாகையர் காண்கிற சீதை அப்படிப்பட்டவள் அல்ல. அவள் பொன்மானுக்கு முன் கவரிமானை விரும்பியபோது தன் ஆசையை வெளியிடக்கூட இல்லை. மானவதியான அவளுடைய மனத்தில் இருப்பதை ராமன் தானாகவே அறிந்தானாம். ('மானவதி மதிநெரிகி' என்று கூறுகிற தியாகையர் இதனால் அன்னையின் உத்தமப் பாங்கையும் சீதா - ராம தம்பதியரின் அந்நியோந்நியத்தையும் எவ்வளவு அழகாகச் சுருக்கமாக விளக்குகிறார்!) சீதைக்குக் கவரிமானின் வாலைப் பெற்றுத் தருவதற்காக அந்த மானின் மீது, வால்புறமாக அம்பெய்தான் பெம்மான்.

மானுக்கும் சீதையைப் போலவே மானம் அதிகம். சாமர மானுக்கு வால் விசேஷம்—மயிலுக்குத் தோகையும், யானைக்குத் தந்தமும் போல. பெருமைக்குரிய தன் வாலில் அம்பு பட அநுமதிப்பதா என்று மான் கருதிற்று. உடனே முகத்தை வளைத்து வாலை மறைத்துக் கொண்டது. நேராக நெற்றியிலேயே அம்பை எதிர்கொண்டு பிராணனை விட்டாலும் விடுமாம்; வாலை மனமறிந்து இழக்காதாம்!

மானவதியான சீதையின் மனத்திலிருந்த எண்ணத்தைவிட மானமுள்ள அந்த மானின் மனத்திலிருந்த எண்ணம் ராமனுக்குப் பெரிதாகப் பட்டது. அவ்வளவுதான்! பத்தினியிடமுள்ளதைவிட வாயில்லா ஜீவனிடம் அண்ணலுக்கு அதிக அன்பு சுரந்துவிட்டது.

தொடுத்தான் இன்னொரு கணையை. முதல் அம்பு மானை நெருங்குமுன்பே, தோள் வலியோடு அன்பின் சக்தியும் கலந்து செலுத்தப்பட்ட இரண்டாவது அம்பு சீறிச் சென்று, முதலம்பை நடுவழியிலேயே தடுத்து அடித்துச் சிதறச் செய்துவிட்டது.

ராம பாணத்தை யாரும் வெற்றி கொள்ள முடியாது என்பார்கள். இங்கோ ராமபாணத்தை ராமபாணமே வெற்றி கொண்டு விட்டது. புஜபல பராக்கிரமத்தைக் கருணை வெற்றி கொண்ட கதை அது.

'ஒக மாட ஒக பாணமு — ஒரு சொல், ஒரு வில்' என்று பாடியவர் தியாகையர். ராமன் தன் வாக்குத் தவறும்படி ஓர் இக்கட்டு ஏற்பட அவர் அநுமதிப்பாரா?

ஆயினும் ராமனுக்கு இப்படி ஓர் இக்கட்டு ஏற்படவும் வாய்ப்பு இருக்கத்தான் இருந்தது. விபீஷணனுக்கு இலங்காபுரி ராஜ்யத்தை வழங்குவதாக வாக்குத் தத்தம் செய்தபின்னரே ராமன் அங்கதனை ராவணனிடம் தூது அனுப்பினான். அங்கதன் சொல்லை ராவணன் கேட்கவில்லை. யுத்தம் மூண்டது. ராவணன் மரித்தான். ராமன், விபீஷணனுக்கு வாக்களித்தபடி அவனை இலங்கைக்கு அரசனாக்கினான். ராமனுக்கு ஓர் இக்கட்டும் ஏற்படவில்லை. ஆனால் ராவணன் அங்கதன் சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சீதையை ராமனிடமே திரும்பவும் அளித்திருந்தால் ராமனுக்குப் பெரிய



இக்கட்டு ஏற்பட்டுத்தான் இருக்கும். ராவணன் சீதையைத் திருப்பிவிட்டு, தானும் திருந்தியிருந்தால் அவனிடமிருந்து இலங்கையை ராமன் எடுத்துக்கொண்டிருக்கவே முடியாது. எனவே விபீஷணனுக்கு இலங்கையை அவன் அளித்திருக்கவும் முடியாது. ஆனால் ராமனோ அங்கதனைத் தூது அனுப்பு முன்னரே விபீஷணனுக்கு இலங்காதிபனாக அபிஷேகம் செய்து விட்டான். எனவே தன் சொல்லை ராவணன் கேட்டுவிட்டால் என்ன செய்வது என்று ராமன் சிந்தித்து இருக்க வேண்டுமல்லவா? ராவணன் தருமத்துக்குக் கட்டுப்பட மாட்டான் என்ற ஒரே எண்ணத்தின் மீது ராமன் அங்கதனை அனுப்பியதுபோல் மற்றக் கவிகள் பாடிவிட்டனர். ராவணன் தருமத்தின் வழிக்கு வந்திருந்தால் ராமனுக்கு எத்தகைய இக்கட்டு ஏற்பட்டிருக்கும் என்பதை அவர்கள் எண்ணவில்லை.

தியாகராஜர் இதை எண்ணினார். எண்ணியதனால் ராமனைக் குணச் சிறப்பில் ஒரே தூக்கலாகத் தூக்கி விட்டார். 'ராவணன் திருந்தி விட்டாலும் விபீஷணனுக்கு இலங்கையைத் தந்தது தந்ததுதான். வாக்கு மீறுவதற்கில்லை. அதனால் என்ன? இலங்கை இல்லாவிட்டால் அயோத்தி ராஜ்யம் இருக்கவே இருக்கிறது. வனவாசம் முடிகிற தறுவாயாகிவிட்டது. எனவே அயோத்தி அரசு கைவசம் வரப் போகிறது. அதை அப்படியே ராவணனிடம் கொடுத்து விட்டால் போகிறது' என்று ராமன் எண்ணினானாம். தம்பி பரதனுக்காக ராமன் அரசு துறந்ததை உலகம்கொண்டாடுகிறது. ராக்ஷஸேந்திரனுக்காகவும் அதே துறவைச் செய்ய முன்வந்த தியாகராமனை எவ்வளவு கொண்டாட வேண்டும்? அந்தத் தியாகராமனைத் தரிசனம் செய்து வைக்கும் தியாகராஜரையும் எவ்வளவு கொண்டாட வேண்டும்?

வழிவழியாக வந்த சூரிய குல ராஜ்யாதிகாரத்தை அலாக்காக எடுத்து அரக்கர்கோனுக்கு வழங்க நினைத்த ராமனையே, 'ஸரஸ ஸாம தாந' கிருதியில் காண்கிறோம். வழங்க நினைத்தது மட்டுமல்ல. வழங்குவதாகச் சொல்லியே அனுப்பி விட்டானாம்! ஸாம —



தான — பேத — தண்டத்தில் இதுவே தானம். 'ஸதமுகா நயோத்ய நிச்சே நண்டிவி' என்ற நாலு வார்த்தைகளினால் தியாகராமனைத் திட்டிவிட்டார் தியாகையர். 'ஸதாமுகாநு' என்றால் 'நிரந்தரமாக' என்று அர்த்தம். ராவணனுக்கு அயோத்தியை நிரந்தரமாகத் தர ராமன் முன்வந்தான் என்பதனால், விபீஷணனைப் போலவே ராவணனையும் ஐயன் சிரஞ்சீவியாக்கக் கூடத் திருவுள்ளம் கொண்டான் எனலாம்.

ராமனுடைய சொல் தவறக்கூடாது —அது தவறக்கூடிய ஓர் இக்கட்டுக் கூட ஏற்படக்கூடாது — என்பதில் தியாகையருக்கு இருந்த ஈடுபாடு என்னவெல்லாம் செய்து விடுகிறது!

'ஒக மாட, ஒக பாண'த்தோடு 'ஒக பத்னீ வ்ரத'த்தையும் போற்றியவர் தியாகையர். ராமனின் ஏக பத்தினி விரதத்தில் தியாகையருக்கு இருந்த பெருமதிப்பினால்தான் 'பர நாரீ ஸோதர'னாக, பிற பெண்களைச் சகோதரியாகப் பார்ப்பவனாக, ராமனைப் பாடுகிறார்.

'நாத ப்ரோவவே' (பைரவி)யில் இது இன்னும் விரிகிறது. தளதளவென மின்னும் ராமனின் முகக் களையைக் கண்டு நகர வனிதையர் அவனிடம் மையல் கொண்டு நெருங்கினராம். அவர்களைத் தாய்மாராகப் பார்த்துப் புனிதப்படுத்தினானும் ஏக பத்தினி விரதன்.

**கலகலமநு முககள கநி புரபாமலு வலசகநு தல்லுலவலெ ஜூசே**—எவ்வளவு உத்தமமான திருஷ்டி!

'தல்லுலவலெ ஜூசே' என்றால் தாய்மாராகப் பார்த்தான் என்று ஆகும். 'தன ஸுதலவலெ ஜூசே' என்ற பாட பேதத்தை ஏற்றால், தன் புதல்விகளாகப் பார்த்தான் என்று ஆகும்.

குழந்தையாகி விடுவதற்குத் தெரிந்தவர்களுக்கு மற்றவர்களைத் தம் குழந்தைகளாக்கிக் கொள்ளவும் தெரியும்.

இப்படியெல்லாம் ராமனைக் குணக் குன்றாகக் காண்பதனால்தான் போலும் ராமனைக் குன்றின் மீதேற்றிப் பார்ப்பதில் தியாகையர் தனியானதோர் ஆனந்தம் அடைகிறார்.

சுவேல மலையின் மீதேறி இலங்கையை ராமன் பார்த்ததாக ராமாயணம் கூறுகிறது. மலைமீது அமர்ந்த அந்தக் கோலத்தில் எப்பொழுதும் லயித்துத் தியானம் புரிகிறவர்கள் பரம பாக்கியசாலிகள் என்கிறார் துளசிதாசர். (தந்ய தே நர ஏஹிம் த்யாந் ஜே ரஹத் ஸதா லயலீந்.) தியாகையர் இப்படி லயித்துத் தியானம் செய்ததனாலேயே 'கிரிபை' என்ற சஹான ராகக் கிருதி உதித்திருக்கிறது. அந்தப் பாட்டே மலையாகத்தான் இருக்கிறது.

'மலைமீது நிலை கொண்ட ராமனைக் குறி தப்பாமல் கண்டேன்' என்று அபரோக்ஷ அநுபூதியை அழுத்திச் சொல்லுகிறார் தியாகையர். அந்தக் காட்சி கண்டு தாம் புளகமுற்றதையும், பாஷ்பம் சொரிந்ததையும், வாக்குத் தடுமாறியதையும் சொல்கிறார்.

மற்ற ராமாயணங்களின் ராமன் செய்யாததை இந்த ராமன் செய்கிறான். 'பத்து நாட்களில் உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று தியாகையரைப் பார்த்துக் கூறுகிறான், மலைமேல் நிலை கொண்ட ராமன்.

தியாகையருடைய ராம தரிசனச் சிறப்பு இதுவே. வால்மீகியும் கம்பனும் துளசியும் அருணாசலக் கவியும் தங்களோடு ராமனுக்கு நேரடியாக இருந்த தொடர்பைச் சொல்லவில்லை. தியாகையரே அவன் நேருக்கு நேராக, முகமுகமாகத் தம்முடன் பழகியதையெல்லாம் சொல்கிறார். காப்பியங்களுக்கு இல்லாத, கானத்துக்கே உரிய பெருமை அது.

சரயு நதியிலே, தங்கத் தோணியிலே சீதா தேவியோடு மிதந்து வருகிறானும் ராமன். தியாகராஜரின் பரிதாபத்தைக் கண்டு, 'பத்து நாளில் உனக்கு அருள் பாலிக்கிறேன்' என்றானும். 'பரிதாபமு கனி' (மனோகரி)யில் இந்தக் காட்சி விரிகிறது. பின்னணி மலையாயினும் ஆறாயினும் ஐயனின் மனமும் வாக்கும் ஒன்றாகவே உள்ளன.

ராம தர்பாரில் நாட்டியம் நடக்கிறது. கலைச் செல்வன் ராமன் ரசிக்கிறான். ரசிகராமனை ரசிக்கிறார் தியாகையர், ஒரு மூலையில் நின்று கொண்டு. ராமனுடய திருநோக்கு தியாகையர் மீது விழுகிறது. ஆனால் அந்தக் கடாட்சம் அவர்மீது முறிவின்றி நிற்கவொட்டாமல், தியாகையருக்கும் ராமனின் முகத்துக்குமிடையே பரதன் வீசும் சாமரம் குறுக்கிடுகிறது. சாமர மானின் வால் அந்த மானின் முகத்தை மறைத்தபோது கருணை பெருக்கிய ராமனுடைய உள்ளம், இப்போது தன் முகத்தைத் தியாகையரிடமிருந்து சாமரம் மறைக்கும்போது மட்டும் நெகிழாதிருக்குமா?

பரதனைப் பார்த்துச் 'சாமரம் வீசாதே' என்கிறான் ராமன்.

சத்ரம் (வெண்கொற்றக் குடை), சாமரம், நிருத்யம் எல்லாம் ராஜோபசாரங்களில் முக்கியமானவை. ந்ருத்யத்தைப் பார்ப்பதைத் தியாகையருக்காக நிறுத்தினான் ராமன். சாமரத்தையும் நிறுத்தினான். சத்ரத்தையோ ராவணனுக்கே வழங்க முன் வந்ததை முன்பு கண்டோம்!

இவ்வாறாக ராமனை அணு அணுவாகப் பார்க்கும்போதே விசுவ தரிசனமும் பெறுகிறோம். கடைசியாக, அவன் விசுவரூபம் கொண்டதையும் பார்த்து விடுவோம்.

'பிரகலாத பக்த விஜய'த்தில் இந்தக் காட்சி தீட்டப்பட்டிருக்கிறது. பிரகலாதன் தியாகையராகி, தியாகையர் ராமநாயகியாகிப் பாடும் 'தயஸேயவய்யா' (யதுகுல காம்போஜி) பாடலில் ராமன் விசுவரூபியாகிறான்.

சீதா சுயம்வர கட்டம். அநேக அரச குமாரர்கள் வந்த போதிலும் அயோத்தி ஏந்தலை மட்டும் காணோமே என்று கலங்கியபடி சுயம்வர மண்டபத்துக்கு வருகிறாள் ஜானகி. 'பாங்கியரே, என்போல் அவருக்கு இன்னும் எத்தனை நாயகிகளோ?' என்று அரற்றுகிறாள். ('ஏகபத்னி விரதன்' என்று புகழ் பெறப் போகிறவனிடம் அவனது பத்தினியாவதற்கு இருப்பவளே சந்தேகிப்பதைப் பாருங்கள்!) அந்த ஐயத்தைத் தாளமாட்டாமல், ஐயன் திடுமென அவள் முன் தோன்றி விடுகிறான். சீதையின் கலக்கம் நீங்குகிறது. ஆனால் அது ஒரு விநாடிக்குத்தான். இப்போது புதுக் கலக்கம் உண்டாகிறது. 'உண்மையில் இது சுயம்வரம் அல்லவே! சுயமாக நான் இவரை வரிப்பதற்கில்லையே! சிவதநுசை முறித்தாலன்றோ இவர் என் கைப்பற்ற முடியும்? இளங்குமாரனாகிய இவரால் அந்தப் பெரிய வில்லை முறிக்க முடியுமோ?' என்று கலங்குகிறாள் மைதிலி.

தன் தோள்வலியில் அவள் ஐயுறுவதை ஐயனால் தாங்க முடியவில்லை. வில்லை இழுத்து நாண் பூட்டி நிமிர்ந்து நிற்கப் போகும் இவனது தோள்வலியைத்தான் முதன்மையாகக் கருதித் 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்று கம்பன் பாடப்போகிறான். அப்படியிருக்க அந்தத் தோள்வலியைத் திருமகளே சந்தேகிப்பதென்றால்? ராமனால் பொறுக்க முடியவில்லை. தன்னை மனிதனாகவே மதித்துக் கொள்ளும் அவதார இரகசியத்தையும் பொறுமையின்மையின் வேகத்தில் மறந்து விடுகிறான். 'என்னால் வில்லை வளைக்க முடியுமா என்றா மயங்குகிறாய்? நான் யார், பார்த்துக் கொள்' என்று சொல்வது போலச் சீதைக்குத் தனது விசுவரூபத்தைக் காட்டிவிடுகிறான் ராமன்.

தேவிக்கு மட்டுமே கிட்டிய பாக்கியம் அந்த விசுவரூப தரிசனம். இதனால்தான், அநுமனும் பரதனுங்கூட மறைவிலிருந்தே கேட்டு அநுபவித்த இன்ப உரையாடலை நிகழ்த்தியபடி ராமனும் சீதையும் மட்டும் அந்தரங்கமாகப் பல்லாங்குழி விளையாடியதைப் பாடுகையில் 'விசுவரூபுடனே' என்று ராமனை விளிக்கிறார் தியாகையர் (வின நாஸகொனி).

பரதனுக்கும் அநுமனுக்கும் கிடைக்காத அந்தத் தரிசனம் மற்றக் கவிகளுக்கும் கிடைக்கவில்லை. சீதைக்குத்தான் கிடைத்தது; தியாகராஜருக்குத்தான் கிடைத்தது. அவரால் நமக்கும் கிடைக்கிறது. இந்தத் தரிசனத்தைப் பார்க்க மறுப்பவர்களும் உண்டு. 'நடந்தது நடந்தபடி, கறந்த பால் கறந்தவாறாக வால்மீகி சொன்னார். அதற்கு அதிகமாகவோ புறம்பாகவோ சொல்வது சரியல்ல' என்பது இவர்கள் கட்சி. இவர்களுக்குத் தியாகராஜரே விடை சொல்லியிருக்கிறார்:

**வால்மீகாதி முநுலு நருலு நிந்நு வர்ணிஞ்சிந நாயாச தீருநா?**
**(ஏ பநிகோ ஜன்மிஞ்சிதிநநி)**

'வால்மீகி முதலிய முனிவர்களும், மற்ற மானுடக் கவிகளும் உன்னை வருணித்து விட்டதனால் என் ஆசை தீருமா?'

சீதை சந்தேகப்பட்டதையும் அதற்காக ராமன் விசுவரூபம் கொண்டதையும் மறுப்பவர்கள் மறுக்கலாம். ஆனால் தியாகையரின் சங்கீதம் ராமனை விசுவரூபியாகக் காட்டுவதை யாரால் மறுக்க இயலும்? ★


எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்
Spartan
PLASTIC EMULSION PAINT
Spartan
DURAFLEX
SYNTHETIC FINISHES
ஸ்பார்ட்டன்
பெயிண்டுகள்
Spartan
AUTOMOBILE
LACQUER FINISHES
Spartan
INDUSTRIAL
FINISHES
SPARTAN
SUPERFINE PRODUCTS
அடிஸன்ஸ் பெயிண்ட்ஸ் & கெமிகல்ஸ் லிமிடெட்
செமபியம், சென்னை-11
அங்கத்தினர்: இந்தியன் பெயிண்ட் அஸோஸியேஷன்


விடிந்தால் லதாவுக்குப் பிறந்த நாள். பல சிநேகிதிகளுக்கு அழைப்பு அனுப்பியாகிவிட்டது. ஆனால் பத்மாவுக்கு இப்போது ஒரு பெரிய பிரச்னை!
மழை நாள். கிடைக்கும் விறகு ஒரே ஈரம். விலையும் ஏறியபடி இருக்கிறது!
கவலையோடு இருந்த பத்மாவைக் காண வருகிறாள் எதிர்வீட்டு கீதா.
கப்பல் கவிழ்ந்தாலும் கன்னத்தில் கை வைக்க வேண்டாமே, பத்மா! உனக்கு இப்போது என்ன கவலை?
ஒரே கவலைதான் கீதா! சமையல் அடுப்புக்குக் கிடைப்பது பச்சை விறகு தான். அதுவும் ஒரேயடியாக விலையேறியிருக்கிறதே. எப்படி சமாளிக்கப் போகிறேனோ!
பூ! இதற்கா கவலைப் படுகிறாய்! கையிலே வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிறாயே. 'லீக்கோ' இருக்கக் கவலை ஏன்?
நானும் 'லீக்கோ'வைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் வாங்கிப் பார்த்ததில்லை.
'லீக்கோ' குறைந்த விலையுள்ளது, அதிசிக்கனமானது, புகையற்ற எரிபொருள். எல்லா ரக கரி அடுப்புக்கும் உகந்தது. சமையலும் சீக்கிரமாக முடிந்து விடும். ஏன் நாளை விருந்தை 'லீக்கோ'வை வைத்து நடத்திப் பாரேன்
கீதா, இந்தா இன்னொரு டம்ளர் பாயசம். உன் யோசனைக்கு ரொம்ப நன்றி. எனக்கும் திருப்தி. எல்லோருக்கும் சந்தோஷம் இனி எப்போதும் 'லீக்கோ'வை வாங்கத் தீர்மானித்து விட்டேன்.
FDS-NLC-735-TM
LECO
லீக்கோ
நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி-1

# கைடுகள்

**ஆர்வி**



கோபிகிருஷ்ணன் கண்விழித்துப் பார்த்தபோது ஏதோ புண்ணிய காலம்போலத் தூற்றல் தூறிக்கொண்டிருந்தது. அவனைப் பற்றிய வரையில் அன்றைக்கு விசேஷமான நாள்; அவனுடைய வாழ்க்கைக்கே ஒரு திருப்பம் ஏற்படப் போகிற நாள். இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் யோசித்து அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான். இன்று அந்த முடிவைச் செயலாக்கப் போகிற முக்கியமான நாள்.

மாதவரம் பாலும் மழைத் தூற்றலில் நனைந்த காலைப் பத்திரிகையும் மேடை மேலே காத்திருந்தன. அவன் ஸ்டவ்வைப்பற்ற வைத்துக் காபி தயாரித்துவிட்டு, பத்திரிகையைப் புரட்டிக் கொண்டே அதைப் பருகினான். பிறகு ஷேவிங் பசையைக் குழை குழை என்று குழைத்துக் கன்னமெல்லாம் பூசிக்கொண்டு, ரேஸரும் கையுமாகக் கண்ணாடி முன்னால் போய் நின்றான். நெஞ்சிலே என்ன என்னவோ நினைவுகள் வந்து அலைமோத, கை வழுக்கலில் அந்த எஃகுப் பிளேடு கொஞ்சம் காதோரம் இறங்கிவிட்டது. வெள்ளைப்பூச்சிலே சிவப்பாக ஒரு சின்னக்கோடு.

'கை தவறினால் நல்ல சகுனந்தான்' என்று அதை லட்சியமே செய்யாமல் வேலையை முடித்துக் கொண்டு குளியல் அறைக்குப் போனான். தலையில் தண்ணீரைக் கொட்டிக் கொண்டதும் வெகு சுகமாக இருந்தது.

இனி இன்று முதல் எல்லாமே இப்படித்தான் இருக்கப் போகிறது என்று ஒரு சுறுசுறுப்பு உண்டாயிற்று.

வகுளாபரண கோபிகிருஷ்ணன் நேற்று வரையில் வயது வந்த விளையாட்டுப் பையன்; மாணவன்; இன்னும் மதிப்பாகச் சொன்னால் வாலிப இளைஞன். இனி, இன்று முதல் அவன் இருபத்தைந்து வயது நிறைந்த மனிதன். இனிமேல் நேற்று வரையில் இருந்தது போல் குஷியாய், எதையுமே லட்சியம் செய்யாமல் இருப்பதற்கில்லை; எதிலுமே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இன்று முதல் அவன் புது மனிதன். புதிய வழியில் துணிந்து அடியெடுத்து வைக்கப் போகிறவன்.

அடுத்தடுத்து இனிச் செய்ய வேண்டிய முக்கியமான காரியங்களை வரிசைப்படுத்திப் பார்த்துக் கொண்டான். முதல் காரியம், அந்தப் பட்டக்காரர் சந்து ஜானம்மாக் கிழவியின் ஆறும் நம்பர் வீட்டு மாடி அறையை இன்றோடு தொலைத்துத் தலை முழுகுவது. இரண்டாவது தலை முழுக்கு, இந்த ராஜன் அண்ட் போஜன் லா ஆபீசுக்கு. மூன்றாவது காரியம், அதுவும் தலை முழுக்குத்தான். சரளாவைப் பார்த்துக் கடைசிச் சலாமாகப் போட்டுவிட்டு வந்துவிட வேண்டியது. அப்புறம் பம்பாய்க்கோ, இன்னும் தள்ளி டில்லிக்கோ, அதை முடிவு செய்து கொண்டு இரண்டு நாளில் புறப்பட்டுவிட வேண்டியதுதான். இங்கே இருந்து மனிதன் முன்னுக்கு வரவா? ஊம்; நடக்காது; நடக்கவே நடக்காது.

ஜானம்மாப் பாட்டியின் ஒரே பேரன் கோவிந்தராஜன் - அவனைத் தவிர வேறு யாருமே இல்லை அந்தப் பாட்டிக்கு-இப்போது அமெரிக்காவில் இருக்கிறான். கைச் செலவு இல்லாமல் அமெரிக்காவில் போய்ப் பயிற்சி பெற்று வருவது சாதாரணமாக எல்லாருக்கும் அடிக்கக்கூடிய அதிருஷ்டமா? அதுகூட ஒரு பெரிய காரியம் அல்ல; இருக்கிற ஒரே பேரனையும் அத்தனை தூரம் அனுப்பிவிட்டுக் கல்லுக்குண்டு போல் கலங்காத நெஞ்சழுத்தமான ஒரு பாட்டி கிடைத்தாளே, அவனுடைய அதிருஷ்டத்தை என்ன என்று சொல்வது? ஏதாவது கேட்டால் பேரனை அனுப்பிவிட்டு, அவன் சிநேகிதன் முகத்தைப் பார்த்து மனசைத் தேற்றிக் கொள்கிறாளாம் இந்தக் கிழவி. அதற்காகவே கோபிக்கு மாடியறையை வாடகைக்கு விட்டு வைத்திருக்கிறாளாம்! அப்படி ஆறுதல் அடைகிறவள் அவனிடம் வாடகை வாங்காமல் இருப்பதுதானே. முதலில் இந்த வீட்டை ஒழித்துவிட்டுப் போக வேண்டும்.

கோபி அந்த வேகத்தோடு கீழே இறங்கி வந்தான்.

''பாட்டீ, நான் இந்த ஊரை விட்டே போகப் போகிறேன். கோவிந்தனுக்காக எனக்கு இடம் கொடுத்து, அவனைப் போலவே என்னை நினைத்து அன்பாய் இருந்ததற்கு, என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. 'தாங்க்ஸ்' என்று ஒரு சின்ன வார்த்தைதான் எனக்குத் தெரிகிறது. என் தரித்திரம் அதற்குமேல் வார்த்தைகள் கிடைக்கவில்லை.''

அமெரிக்கா போய்ப் பயிற்சி பெறுவதற்குப் பரிவர்த்தனைத் திட்டம், நல்லுறவுத் திட்டம் என்று என்ன என்ன திட்டங்கள் எல்லாம் உண்டோ அத்தனையையும் நுணுக்கமாக இருந்த இடத்திலிருந்தே புரிந்து கொண்டிருந்த ஜானம்மாப் பாட்டிக்குக் கோபி இப்போது என்ன சொல்லிவிட்டுப் போகிறான் என்றே புரியவில்லை. கோபிக்கு அந்த வகையிலே ஒரு பெரிய ஆத்மத் திருப்தி.

ஆக, முதல் விஷயத்திலேயே வெற்றியின் முதல் படியைத் தாண்டியாகிவிட்டது. அந்த மகிழ்ச்சியோடு அவன் தன்னுடைய லா ஆபீஸுக்குள், டைப்ரைட்டர் இருந்த மேஜைக்கு முன்னால் போய் உட்கார்ந்தான். முதல் முதலில் இந்தக் கையில்லாத நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்ட நினைவு வந்தது. என்ன என்னவோ ஆசைப் பெருங் கனவுகளுடன் உள்ளே வந்து உட்கார்ந்த அவன், சுருக்கெழுத்தில் விவகார நகல் எடுத்துக் கொள்வதும், அதைத் திருத்தமான பிரதியாக டைப் செய்து கொடுப்பதுமாக ஒன்பது பொன்னான மாதங்களைக் கழித்திருக்கிறான். இந்தத் தட்டெழுத்து வேலைக்குச் சட்டம் படித்து, பட்டமும் பெற்றவன்தானா அகப்பட்டான்? ஒரு ஸ்டெனோகிராபர் போதுமே!

'வம்பும் வேண்டாம், வழக்கும் வேண்டாம் என்று கறுப்புக் கவுனையே தீண்டாமல் 'ஜர்னலிஸம்' படித்தவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து, இல்லாத ஆசைகளையெல்லாம் படச் செய்த ஸீனியர் பார்ட்னர் நம்பிராஜன் வரட்டும்; பேசிக் கொள்கிறேன்' என்று அரைமணி நேரம் போலக் காத்திருந்தான்.

சரியாகப் பத்தே முக்காலுக்கெல்லாம் நம்பிராஜன் விசிறி சுழலத் தொடங்கியது. மறுகணமே கோபி தோரணையாக உள்ளே நுழைந்தான்.

நம்பிராஜன் அவனை வியப்போடு பார்த்தார்.

''உங்களிடம் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்.''

''ஹூம்?''

''எனக்கு வந்து வயசாகிக் கொண்டே போகிறது. நான் இன்னும் சிறு பிள்ளை இல்லை. அதனால் ஒரு மாறுதல் வேண்டும் என்று நினைக்கிறேன்.''

''என்ன செய்யப் போகிறாய்?''

''ராஜீநாமாச் செய்யலாம் என்று நினைக்கிறேன்.''

''ஏன், இங்கே ஏதாவது தகராறு நடந்ததா?''

''அதெல்லாம் இல்லை.''

''பின்னே?''

''நானாகத்தான் ராஜிநாமாச் செய்கிறேன். வேறு நல்ல வேலையாகப் பார்க்கலாம் என்று ஆசை.''

''சரி; உனக்கு என்ன வயது?''

''இருபத்தைந்து. இன்றைக்கு எனக்குப் பிறந்த நாள்.''

''பாராட்டு.''

''நன்றி.''

''என்ன செய்வதாக உத்தேசம்?''

''முதலில் ராஜிநாமாச் செய்வது. எனக்கு இந்த அபிடவிட், வக்காலத்து விவகாரமெல்லாம் பிடிக்கவில்லை. சொந்தமாக, கிரியேட்டிவ்வாக, உருப்படியாக ஏதாவது செய்யப் போகிறேன்.''

''இந்த லாயர் தொழில் ஆக்ககரமானது அல்ல என்று நினைக்கிறாயா?''

''எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான். குற்றத்திலிருந்து தப்பிக்க, பழி வாங்க, சுய லாபத்துக்காக, வீம்புக்காக விவகாரம் செய்கிற புத்தியுள்ளவர்களோடு பழக எனக்குப் பிடிக்கவில்லை.''

நம்பிராஜன் இளநகையோடு, ''உனக்குப் பிடிக்கவில்லை என்றால் விட்டு விட வேண்டியதுதான். பிறந்த நாளும் அதுவுமாகக் குஷியாகப் படம், கிடம் பார்த்துவிட்டு வாயேன். நாளைக்கு வந்து ராஜிநாமாவை நீட்டி விட்டு எல்லாரிடமும் சொல்லிக் கொண்டு போகிறது'' என்று தட்டிக் கொடுத்துப் பேசினார்.

''சரி ஸார்.''

''உம். அப்படிச் செய். பைபிள் படம் நன்றாக இருக்கிறதாம். இன்னும் ஏதோ இரண்டு 'ஸ்பை பிக்சர்' பிரமாதமாக இருக்கிறதாம். என்னாலேதான் போக முடிகிறதில்லை. போய்ப் பார்த்துவிட்டு வாயேன்.''

''சரி ஸார். நீங்கள் என்னிடம் காட்டின அன்புக்கெல்லாம் என்ன சொல்வது என்றே தெரியவில்லை ஸார். என் மொழித் தரித்திரம், 'தாங்க்ஸ்' என்பதற்குமேல் ஒரு வார்த்தையும் கிடைக்கமாட்டேன் என்கிறது ஸார்.''

''சரி சரி... இந்தா, எதற்கும் கையிலே ஐம்பது ரூபாய் இருக்கட்டும். பையிலே பணம் கணிசமாக இருந்தால்தான் நெஞ்சிலே தெம்பும் குஷியும் வரும். போய்விட்டு வா.''

''சரி ஸார். உங்கள் ஆசிகளுடன் ஸார். ஆனால் எப்படியும் நான் சொன்னது முடிவான பேச்சுத்தான் ஸார்.''

நம்பிராஜனுக்குத் திடீரென்று அவன் பிறந்த நாளைக் கொண்டாடுவதில் அக்கறை வந்துவிட்டதோ? அத்தனையும் 'தாஜா' பண்ணுகிற வேலை! இத்தனை மாதங்களாக ஒரு டைப்பிஸ்ட் வேலை முழுவதையும் அவன் தலையில் கட்டிவிட்டு வேலை வாங்கியிருக்கிறாரே. பெரிதாக ஐம்பது ரூபாயைத் தூக்கிக் கொடுக்கிறாராம்! ஐயாயிர ரூபாய் என்று நினைப்பு!

கோபி வெளியே வந்து கோபத்தோடும் வெறுப்போடும் ராஜன் அன்ட் போஜன் லா ஆபீஸ் பெயர்ப் பலகையைப் பார்த்து ஒரு சலாம் போட்டு விட்டு நடந்தான். நடையிலே ஒரு தனி மிடுக்கு. நம்பிராஜன் ஸ்வரம் இறங்கியதைக் கண்டு ஒரு பெரிய திருப்தி.

பொழுது விடிந்து இரண்டு காரியங்கள் முடிந்து விட்டன. இனிச் சரளாவைச் சந்திக்க வேண்டியதுதான் பாக்கி. மணி பதினொன்றரைகூட ஆகவில்லையே! அவளை ஒரு மணிக்கு முன்னால் சந்திக்க முடியாதே!

சரியாக ஒரு மணி அடித்தால்தான் அவளுடைய நிலவு முகம் அந்த 'டிராவல் சர்விஸஸ் பீரோ' வாயிலில் தோன்றும். வண்ணத் துகில் உடுத்து வந்து வனதேவதை நிற்பது போலிருக்கும்.

அவளைப் பார்த்தால் இந்த ஊர்ப் பெண் என்று சொல்லவே முடியாது. கிட்டத்தட்டப் பார்ஸிக்காரி போல ஒரு தோற்றம். திருவாங்கூர்த் தந்தத்தில் வெள்ளை ராசியாகப் பார்த்துக் கடைந்தெடுத்தது போன்ற ஒரு நிறம். கொடி உடல். கழுத்து இறங்கிய தோள் பட்டையிலும் இடையிலும் தனிக்கடைசல் பிடித்ததுபோல ஒரு மினுமினுப்பு. நாளைக்கு ஒரு விதமான தலையலங்காரம். பாப் வைத்தது போல ஒரு நாள்; அஜந்தாக் கொண்டை ஒரு நாள்; பஞ்சாபிப் பாணி இன்னொரு நாள். மற்ற நாட்கள் எல்லாம் எப்போதும் தலை கலைந்திருப்பதுபோல ஒரு 'ஸ்பெஷல் ட்ரீட்மென்ட்'.

சரளாவுக்கு இதெல்லாம் முன்பு தெரியாது; பிடிக்கவும் பிடிக்காது. அவ்வளவுக்குப் பொதுப் பணி எழுத்தர் சேஷாச்சாரியின் வருமானமும் இடம் தராது. முதல் பெண்ணாயிற்றே என்று என்.ஜி.ஓ.ச் சலுகையில் அவர் அவளைப் பி.ஏ. படிக்க வைத்து விட்டார். வெறும் பி.ஏ. எதற்கும் லாயக்கில்லை என்று, பக்கத்து வீட்டு நிருபர் ஒருவரின் யோசனையின் பேரில் பத்திரிகையாளர் பயிற்சி பெற அவளாகவே போய்ச் சேர்ந்தாள். அந்தச் செலவுகளைச் சரிக்கட்ட நல்ல வேளையாக அவள் 'டூரிஸ்ட் கைடு'களில் ஒருத்தியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாள். அப்போதெல்லாம் கூட அவளுக்கு இத்தனை அழகு வரவில்லை. ஆனால் அவளிடம் திறமை இருந்தது. டூரிஸ்ட் கைடுகளுக்கு என்று முப்பது நாள் ஒவ்வொரு துறையிலும் நிகரற்று விளங்கிய பிரமுகர்களைக் கொண்டு விரிவுரை நிகழ்த்த ஏற்பாடு செய்திருந்தார்கள். யாருக்கும் எளிதில் கிடைக்காத அருமையான வாய்ப்பு இது. அவற்றைக் கிரகித்துக் கொண்ட முறையில்தான் அவளுடைய திறமை நன்கு வெளிப்பட்டது. பயிற்சி முடிவில் வைத்த தேர்வில் அவள் இரண்டாவதாக வந்தாள். முதல் மதிப்பைப் பெற்றவன் கோபி. ஆமாம்; அவனும் இந்திய அரசு தேர்ந்தெடுத்துள்ள ஒரு கைடுதான்.

அவர்களுடைய நட்பு முதலில் பொறுமையிலும், பின்னர்ப் போட்டியிலுந்தான் ஆரம்பமாயிற்று. அவள் இரண்டாவது மதிப்பெண் பெற்றதைப் பாராட்டலாம் என்று நினைத்தான் கோபி. ஆனால் அவன் வருகிற நோக்கம் தெரிந்து அவள் வேறு யாரிடமோ பேசப் போவது போல் எழுந்து போய்விட்டாள்.

பத்திரிகையாளர் பயிற்சியின் போதும் அவர்கள் தினமுந்தான் பார்த்துக் கொண்டார்கள். 'நான் போகிற இடங்களில் எல்லாம் இவளும் இருக்கிறாளே!' என்று நினைத்தான் அவன். 'நான் போவதைத் தெரிந்து கொண்டுதான் இங்கேயும் இரண்டாவதாகப் பிடித்துத் தள்ள இவன் வருகிறானோ?' என்று அவள் நினைத்தாள். மற்றவர்களிடமெல்லாம் வலுவில் போய்ப் பேசினாலும் பேசுவாள்; அவன் பேச வந்தால்கூட அதைக் கவனிக்காததுபோல் போனாள்.

அப்போதும் அவளுடைய திறமைகளைத்தான் கோபி வியந்து பாராட்டினான். கவனித்து வியக்கத்தக்க அழகு ஒன்றும் அவளிடம் மலர்ந்திருக்கவும் இல்லை.

வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளை அழைத்துச் சென்று வழிகாட்ட அரசு நிறுவனங்களும் சரி, தனிப்பட்ட நிறுவனங்களும் சரி, பெரும்பாலும் கோபியையும் சரளாவையுமே விரும்பி அழைத்தன. இவர்கள் இருவரும் கிடைக்கவில்லை என்றால்தான் மற்றவர்கள். இதிலும் அவர்கள் ஒருவரை ஒருவர் போட்டி போடுபவர்களைப்போல நினைத்தார்கள்.

ஆனால் அது ஒரு நாள் திசை மாறி விட்டது. டூரிஸ்ட்டுகள் கோஷ்டி என்றால் பெரும்பாலும் ஐந்து பேர்களுக்கு மேல் இருப்பது வழக்கம் அன்று. ஒரு சமயம் அமெரிக்கப் பயணிகள் குழுவில் பத்துப் பேர் போல இருந்தார்கள். குறுகிய கால அளவுக்குள் அவர்கள் காஞ்சி, செஞ்சி, மகாபலிபுரம் என்று போய்த் திரும்ப வேண்டியிருந்தது. ஆகவே அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து அழைத்துச் சென்று வர, அவர்கள் இரண்டு பேருமே திட்டம் செய்யப்பட்டார்கள்.

சென்னையிலிருந்து புறப்பட்டது முதல் கோபியிடம் பேசாமலே சமாளித்துக் கொண்டு வந்தாள் சரளா. ஆனால் காஞ்சிபுரம் கோயிலுக்கு வந்த பிறகு அவளே வலுவில் அவனுடைய உதவியை நாடிப் பெற வேண்டியிருந்தது.

''அந்த மைக் இருக்கிறானே, அவனுக்கு ஓர் இழவும் தெரியவில்லை. அவர்கள் நாட்டைப் போல எண்ணிக் கொண்டு என்னிடம் வந்து குழந்தைத்தனமாகப் பழகுகிறான். பார்க்கிறவர்கள் தப்பாக நினைப்பார்களே! யூ ப்ளீஸ் ஹான்டில் ஹிம்'' என்று கெஞ்சாத குறையாக வேண்டிக் கொண்டாள்.

''தட்ஸ் ஆல் ரைட்! லீவிட் டு மீ'' என்று அபயம் அளித்தான் கோபி.

அதற்குப் பிறகு, சரளாவுக்கு உடம்பு அத்தனை கலகலப்பாக இல்லை என்று கூறி, இரட்டிப்பு இனிமையைப்



புன்னகையிலும் குரலிலும் காட்டி அவன் அத்தனை பேரையும் சமாளித்த விதம் இருக்கிறதே, அவனை என்ன பாராட்டினுலும் தகும் என்று நினைத்தாள் சரளா.

''உங்களிடம் எனக்கு எத்தனை கோபம் தெரியுமா?''

''தெரியாதே!''

''தெரியாதே! அந்த டெட்ராய்ட் கிழவியிடம் என்னை மாட்டிக் கொள்ளும்படி அப்படியா என்னைக் கைவிட்டு விடுவது? உடம்பு சரியாக இல்லை என்று அவள் என்னை நடக்கவும் விடவில்லை; பேசவும் விடவில்லை. இருக்கிற சாக்லெட் அத்தனையையும் தண்டனையாகத் தின்று வைத்தேன்!'' என்ருள் சரளா.

''அந்தக் கிழவிகிட்டே அகப்பட்டுக் கொண்டு திண்டாடியதை விட அந்த மைக்கே தேவலை போல இருந்ததோ?''

''சேசே! அவன் தோளைச் சுற்றிக் கட்டிக் கொண்டு 'வாட் ஹாவ் ஐ டன் ராங்?' என்று கேட்கிருன். 'ஐ ஒன்ட் டு யூ எனி ஹார்ம்' என்கிருன். இந்த ஊர்ப் பெண்களுக்கு இதைவிடக் கெடுதல் என்ன வேண்டும்? கைடுகள் என்ருலே நம் ஊரில் இளப்பம். அதிலும் பெண் கைடு என்ருல் இன்னும் என்னவெல்லாமோ நினைப்பு; கேவலம். ஆண்களுக்குத்தான் கண்ணியம், பெண்களுக்கு அதெல்லாம் கிடையாது என்று நினைப்பு.''

கைடுகள் என்ருல் அவர்கள் சகலமும் தெரிந்தவர்கள் என்று வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் நினைக்கிருர்கள். ''அது என்ன, உங்கள் கூட்டுச் சேராக் கொள்கை? எங்கள் நாட்டவர்க்குப் புரியவில்லையே. அது என்ன? இது ஏன்?'' என்றெல்லாம்கூடக் கேட்கிருர்கள். இது நுட்பமும் திட்பமும் பொருந்திய தேசியப் பணி. டாலர் சம்பாதிப்பதற்கு மட்டுமல்ல; பிற நாட்டவரின் அன்பையும் மதிப்பையும் சம்பாதிப்பதற்கும் உதவுகிறவர்கள் இந்தக் கைடுகள். கோபிக்கு இந்தப் பணியில் பல நல்ல வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிந்தது. அதனுல்தான் ராஜன் அன்ட் போர்ஜன் லா ஆபீஸில் போய்ச் சேர்ந்தபோது, கூட வாரக் கடைசியில் அடிக்கடி வெளியூர் போக வேண்டியிருக்கும் என்று சொ. ல் லி விட்டே போய்ச் சேர்ந்தான். அவன் போய்ச் சேர்ந்ததற்கு முக்கியக் காரணம், சரளா டிராவல் சர்விஸஸ் பீரோவில் போய்ச் சேர்ந்ததுதான். இந்த ஊர் மதிப்புப்படி அவளுக்கு நல்ல சம்பளந்தான்; அறுநூறு ரூபாய்.

அவர்கள் வெவ்வேறு இடங்களில் போய்ச் சேர்ந்தாலும் வழக்கம்போல் வாரக் கடைசியில் சந்தித்துப் பழகிக் கொண்டுதான் வந்தார்கள். வரவர, பார்த்துக்கொண் டிருக்கும்போதே சரளாவின் உருவம், உடை, பேச்சு, பூச்சு எல்லாம் மாறிக் கொண்டு வந்துவிட்டன. ஆங்கிலமும் இந்தியும் அத்தனை சரளமாகப் பேசினுள். அழகிய கன்னடத்தையும் இனிய தாய் மொழியையும் கிளி கொஞ்ச மிழற்றினுள். 'மிஸ் அஹூஜா பியூட்டி க்ளினிக்'கில் அவளுக்குத் தனிச் சலுகை. அங்கிருந்த ஸ்பெஷலிஸ்ட் அகல்யா தேவிதான் அவளுக்குத் தலையலங்காரம் செய்தாள்.

''வர வர உன்னைப் பார்க்க வருவதற்கே தயக்கமாய், யோசனையாய் இருக்கிறது'' என்ருன் கோபி, அவளைப் பார்த்து.

''ஏன்? திடீரென்று இது என்ன காம்ப்ளெக்ஸ் உங்களுக்கு?''

''எனக்குக் காம்ப்ளெக்ஸ் - மனப்பாங்கிலே - ஒரு குழப்பம் என்ருசொல்கிருய்?''

''பின்னே எதனுல் தயக்கம்? எதனுல் யோசனை?''

இந்தக் கேள்விக்கு அத்தனை சுலபமாக எப்படிப் பதில் சொல்ல முடியும்? மனம் திறந்து, பட்டவர்த்தனமாக



**FOR QUALITY SANITARY WARES CONTACT**

Messrs SANITARY SUPPLIES CO.

13, RESERVOIR STREET, BASAVANGUDI, BANGALORE-4

**Distributors for Mysore State—Neycer Keramag**

## இன்பத் தீபாவளிக்கு......

## .......இதுவே வழி

ஆலைத் தொழிலாளி ராஜூ தன் தலைதீபாவளியை அகமகிழ்வோடு சமாளிக்கிறுர். காரணம்....வளரும் மாதச் சேமிப்பு மூலம் அவர் பணம் சேர்த்து வந்ததுதான்! நீங்களும் ராஜூவைப் பின்பற்றிப் பணம் சேர்த்து வரலாமே.

**தீபாவளித் திருநாளா! திருமண நன்னுளா!!**

**மகன் மேல்படிப்பா!!! வீடு கட்ட ஆவலா!!!**

**அனைத்திற்கும் சிறந்த வழி....,**

**......வளரும் மாதச் சேமிப்பு**

இன்றே அருகில் உள்ள அஞ்சலகத்தில் தொடர்பு கொள்ளுங்கள்.

**சிறு சேமிப்பு நிறுவனம்**

சென்னை-9

அலசிப் பேச வேண்டிய விஷயம். காண்டீனில் பேசுகிற விஷயமல்ல. அவன் சமயம் தெரியாமல் அந்த வார்த்தையைச் சொல்லியிருக்கக் கூடாது.

பார்க்கப் போனால் இந்தக் கடைசிச் சந்திப்புத்தான் அவனறியாமலே உள்ளூற வேலை செய்து, அவனை இன்றைக்கு இந்த முக்கியமான முடிவுகளைச் செய்யத் தூண்டியிருக்கிறது. இப்பொழுதுதான் அவனுக்கே காரணம் புரிந்தது.

''என்னா ஸார் ஒணும்?''

''அதோ அந்த வாலட்டை எடு, பார்ப்போம்.''

''அது லேடீஸ் வாலட், ஸார்.''

''அதுதான் கேட்கிறேன். என்ன விலை?''

''பதினாலு நாற்பத்தொன்பது.''

''அது என்னப்பா, பதினாலு நாற்பத்தொன்பது? ஒரு பைசாவையும் சேர்த்து வைத்துவிடுவதுதானே?''

''அது கம்பெனி விலை ஸார்! நாங்க வைக்கறதில்லை.''

''ஓ—'' எதுவுமே ஒரு முழுத் தொகையாக இருக்கக் கூடாது என்று என்ன வியாபார சித்தாந்தமோ! இதில் எல்லாம் ஒன்றும் குறைச்சல் இல்லை. நல்ல சரக்கு, நாணயமான விலை, நாட்டின் மதிப்பு ஒன்றையுமே லட்சியம் செய்யாத வியாபாரிகள். நாடே ஊழல் மயம். ஓர் உறுதியான கை வந்து இந்தக் கசடுகளையெல்லாம் எப்பொழுது துடைக்கப் போகிறதோ? உடனே துடைத்தாக வேண்டும்!

**கோ**பி டிராவல் சர்விஸஸ் பீரோ செல்லும் வாயிலைப் பார்த்தபடி எதிர்த்த பிளாட்பாரத்தில் வந்து நின்றான். மணி பன்னிரண்டு ஆகும் சமயம். இன்னும் ஒரு மணி நேரம் எப்படி இங்கே நிற்பது? நல்ல காலம்; வெயிலைக் காணோம் இன்றைக்கு!

அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அதோ, சரளாவின் கோலமுகம் படிக்கட்டின்மேல் தெரிகிறதே! அதோ அவனைப் பார்த்துவிட்டு அவளே இறங்கி வருகிறாள். முகத்திலே புன் சிரிப்பு. தொழில் சிரிப்பு அல்ல; இயற்கையான, இதய பூர்வமான புன்னகை.

''எப்படி இவ்வளவு கரெக்டாக வந்தீர்கள்?''

''உன்னைப் பார்க்கத்தான்!''

''அது தெரியும். இப்போதுதான் உங்கள் ஆபீசுக்குப் போன் செய்தேன். இன்றைக்குப் பிறந்த நாளாமே உங்களுக்கு?''

''நம்பிராஜனே பேசினாரா?''

''ஆமாம்; போய் அரை மணி இருக்கும் என்றார். அரைமணி என்றால் இன்னும் காணோமே என்று வெளியில் வந்து எட்டிப் பார்த்தேன். தூரத்தில் மெதுவாக வருவது தெரிந்தது. உடனே உள்ளே போய், மானேஜரிடம் சொல்லிவிட்டு வந்தேன்.''

''பர்மிஷன் வாங்கிக் கொண்டே வந்துவிட்டாயா?''

''அரை நாள் லீவு போட்டுவிட்டே வந்துவிட்டேன். இனிமேல் திரும்பிப் போக வேண்டாம்.''

''அப்படியா? அதெப்படி ..அதெப்படி....?''

''அப்படித்தான். இனி, மேலே என்ன?''

''நீ என்ன பிளானோடு வந்திருக்கிறாய்?''

''எனக்கு உங்களைப் பார்க்கிறது ஒன்றுதான் பிளான். இன்றைக்குப் பிறந்த நாள். இதைச் சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும். எங்கேயாவது குஷியாகப் போவது. வீக் என்டு வந்தால்கூட நம்மால் போக முடியாத சினிமாவுக்குப் போவோமே. அப்புறம் பீச்சுக்குப் போவோம்; பிறகு கோயிலுக்குப் போவோம். கடைசியாக அவரவர் ஜாகைக்குப் போவோம்.''

''சாப்பாடு?''

''சரி; சாப்பிட்டு விட்டே போகலாமே.''

பிளான் போடாமல் இப்படி எதையாவது செய்வது நல்ல யோசனையாகத் தோன்றியது. சரளாவுக்குத்தான் இப்படி நல்ல யோசனையாகச் சொல்லத் தோன்றும். அவனைக் கவர்ந்த அம்சமே அவளிடம் இதுதான். திறமை, புத்திசாலித்தனம், சாதுரியம் மூன்றும் அவனுக்கு ஏற்ற விதமாக அவளிடம் நிறைவாகப் பொருந்தியிருந்தன. ஆனால் அவனுக்குப் பொருந்தாத ஒன்றும் அவளிடம் சமீபகாலமாக இருந்ததாகத் தோன்றியது. என்ன அது?

இருவரும் ஓட்டலை நோக்கி நடந்தார்கள். சேர்ந்து போவது பெருமையாகத்தான் இருந்தது. போவோர் வருவோர் ஒரு தடவை அவர்கள் இருவரையும் பொருத்தம் பார்ப்பது போல் பார்த்துவிட்டுப் போகிறார்கள். கொஞ்ச தூரம் போன பிறகு மறுபடியும் நின்று திரும்பிப் பார்க்கிறார்களே, எதற்காக? அவளுக்குச் சரியான ஜோடியாக அவன் இல்லாததனால்தானே?

ஓட்டலில் சாப்பிடுகிற போது தான் செய்துகொண்ட முடிவு முற்றும் சரியானது என்ற எண்ணம் அவனுக்கு வலுத்தது. எதனாலோ இவளுக்கு நான் ஏற்றவனல்ல என்று அவன் நெஞ்சம் புலம்பிக் கொண்டேயிருந்தது. ஓட்டல் சிப்பந்தி கூட அவளைத்தான் வலிந்து உபசரித்துக் கொண்டிருந்தான். ஒரு கட்டத்தில் நேரம் பொருத்தமாக இருக்கும்போல் இருந்தது. பேச்சோடு பேச்சாக, 'என் பிறந்த நாளை ஒட்டி நான் உனக்குத் தரக்கூடிய சிறந்த பரிசுதான் என் முடிவு. எல்லாம் முடிந்துவிட்டது. இனி அவரவர் பாதையில் அவரவர் போவதே நல்லது' என்று சொல்லிவிட நினைத்தான். அதற்குள்,—

''அப்புறம் அந்த ருஷ்யன் பார்ட்டியை யார் அழைத்துக்கொண்டு போனார்கள் என்று உங்களுக்குத் தெரியாதே?''

''தெரியாதே! கம்யூனிஸ்ட் கன்ட்ரியிலேருந்து வர்றவங்க உல்லாசப் பயணிகளாக இங்கே வருவதில்லை. அதனாலே அவர்களுக்கு வழிகாட்டியாகப் போக நான் விரும்பவில்லை. அதனால் தான் யார் போனார்கள் என்றும் நான் கேட்கவில்லை.''

''அவர்கள் என்ன நோக்கத்தோடு வந்தவர்களாக இருந்தாலும் சரிதான். ஒருவரும் போகத் தயாராக இல்லையென்றால் அப்புறம் போகிற வழிதான் என்ன? உல்லாசப் பயணிகளாக வராதவர்களோடு திறமை குறைந்தவர்களை அனுப்புவது இன்னும் பெரிய தப்பு அல்லவா? எல்லாருமே உங்களை அனுப்புவதுதான் நல்லது என்று நினைத்தார்கள். தோழர் லெனின் திரும்ப உயிர்பெற்று வந்தால்கூட இந்த நாட்டில் கம்யூனிசம் வளர இடம் இல்லை என்று சொல்லாமல் சொல்லி விளங்க வைக்க நீங்களே லாயக்கு என்று பார்த்தார்கள். ஆனால் நீங்கள் மறுத்துவிடவே அப்புறம் எனக்கு விழுந்தது அந்தச் சீட்டு. வேறு வழியில்லை. நான்தான் போனேன்.''

''நீ சொல்ல வருகிறபோதே நினைத்தேன்.''

''நீங்கள் இப்படி ஏதாவது சொல்வீர்கள் என்று நானும் நினைத்தேன். ஆனால் ஒன்று. அந்தக் கடகோத்ஸ்கி பார்வைக்குத்தான் கரடி. மற்றப்படி எல்லாவற்றிலுமே பழகிய கரடிதான். அத்தனை மரியாதை, அத்தனை அடக்கம். அவன் பெயரை நினைத்துப் பார்த்த பிறகு எனக்கு என்னவோ அவனுக்கு நம் ஊர்க் கடோத்கஜன் கதையைச் சொல்ல வேண்டும்போல் இருந்தது....''

கோபி, 'உம்' என்று கேட்டுக் கொண்டிருந்தான்.

''மேடம் மீனாட்ஸ்காயாவுக்கும் காம்ரேட் ஷிவ்ஸ்கி பெருமாளுட்ஸோவுக்கும் மத்ரோகிராடில் நடந்த திருமணத்துக்கு மூல காரணமே காம்ரேட் கடோத்கஜன்ஸ்கி செய்த உணவுப் புரட்சிதான் என்று வர்ணித்தேன். மனிதன் திறந்த வாயை மூட வேண்டுமே!'' என்று சொல்லிவிட்டுச் சரளா கிண்கிணிக் குரலில் மெல்லச் சிரித்தாள்.

கோபியின் மனம் தடுமாறிவிட்டது. 'அதுதான் சாயங்காலம் வரையில் கூடவே இருக்கப் போகிறாளே; அப்புறம் நம் முடிவை இவளிடம் சொல்லிக் கொள்ளலாம்' என்று விட்டுவிட்டான்.

''இன்றைக்கு வானம் நமக்காகவே மப்புப் போட்டிருக்கிறது போலிருக்கிறது; இல்லை?''

''ம்..ம். ஆமாம்!''

''வேறே எங்கேயோ நினைப்புப் போலிருக்கிறது!''

''சரளா!'' என்று அதுதான் சரியான சமயம் என்று திரும்பினான் அவன்.

''உம்'' என்று அவளும் புன்னகையோடு பார்த்தாள்.

புன்னகையா அது? சாதாரணமாகப் பூக்கக்கூடியதா அது? இரண்டும் இல்லை. உயிரைத் தொடுகிற என்னவோ ஒன்று.

''என்ன?''

''ஒன்றும் இல்லை; என்ன படம் பார்க்கலாம் என்று கேட்க வந்தேன். பைபிள் போகலாமா, தண்டர்பால் போகலாமா? அது ஒரு ஸ்பை பிக்சராம்.''

''அதாவது கேர்ல்ஸ், கன்ஸ். அது தானே?''

''அப்படித்தான் இருக்கும்.''

''அதற்கே போவோம். பைபிள் வேண்டாம். படத்தைப் பார்த்துப் பைபிள் பக்தி நமக்கு வர வேண்டாம்.''

படக்காட்சியின் போதும் அவர்களால் சரிவரப் பேசிக் கொள்ள முடியவில்லை. கோபியின் மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது. என்னவோ தோல்வி அடைந்துவிட்டது போல ஓர் உணர்ச்சி அவனைக் கவிந்து கொண்டிருந்தது.

பிச்சில் போய் உட்கார்ந்தால்தான் இந்தமாதிரி விஷயங்களைப் பற்றிப் பேச முடியும் என்று அவனுக்குத் தோன்றிற்று. காபியைப் பருகிவிட்டு அவர்கள் தண்ணீருக்கு அருகில், தனியிடமாகப் போய் உட்கார்ந்துகொண்டார்கள். ஆனல் என்ன பேசுவது? எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

''நான் லா ஆபீஸ் வேலையை இன்று ராஜீநாமாச் செய்து விட்டேன்.''

''இத்தனை நேரம் அதைப் பற்றிச் சொல்லவில்லையே!''

''மெதுவாகச் சொல்லலாம் என்று தான்.''

''அதுதான் நினைத்தேன்.''

''அந்த அறையையும் காலி செய்வதாகச் சொல்லி விட்டேன், ஜானம்மாப் பாட்டியிடம்.''

சரளாவுக்கு இரண்டுமே ஆச்சரியமாகப் படாதது கண்டு அவன் வியப்படைந்தான். அவள் வானமும் கடலும் சேருகிற இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் என்ன யோசித்தாளோ, திரும்பிப் பார்க்கட்டும் என்று அவன் பொறுமையாக உட்கார்ந்திருந்தான். கடலலைகள் ஒன்றன்மேல் ஒன்ருக வந்து கரையைச் சாடிக்கொண்டிருந்தன. இந்தத் தீராத விளையாட்டுக் கொஞ்சம் ஓயட்டும் என்பதுபோல அவள் உட்கார்ந்திருந்ததாகத் தோன்றியது.

திடீரென்று அவள், அவன் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு, ''கோபீ!'' என்று அழைத்தாள்.

''என்ன?''

''உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்று நினைத்துத்தான்....''

''நினைத்துத்தான்....?''

''இன்று லீவு போட்டுவிட்டு வந்தேன்.''

கோபிக்கு நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. அவன் எச்சிலை விழுங்குவதுபோலப் பாவனை செய்துவிட்டு, ''என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

அவள் நிதானமாகத் தலையை அசைத்தாள்.

''ஆனல் அந்த விஷயத்தைப்பற்றிப் பேச இன்றைக்குச் சரியான சமயம் இல்லையோ என்று நினைக்கிறேன்.''

''எதனுல் அப்படி நினைக்கிருய்?''

''அதுதான் எனக்கே தெரியவில்லை.''

அன்று காலையிலிருந்து அவன் தவித்த தவிப்பெல்லாம் மறந்து போய்விட்டது. அவளிடம் சொல்ல நினைத்த தன்னுடைய பிறந்த நாள் முடிவு இப்போது அற்பமான விஷயமாகப் பட்டது. அவள் தன்னிடம் பேச நினைத்த விஷயந்தான் இப்போது அவனுக்கு மிகமிக முக்கியமானதாகத் தோன்றிற்று. அதைத் தெரிந்து கொண்டால்தான் நல்ல மூச்சே வரும்போல் இருந்தது. தன்னுடைய முடிவைப் போல இருக்குமோ என்று பயமாகவும் இருந்தது.

''என்ன, 'என்ன, சொல்லேன், சொல்லேன்.''

அவள் பேசாமல் இருந்தாள்; பெருமூச்சு விட்டாள்; சொன்னுள்: ''எனக்கு வெளிநாடு போக வேண்டும் என்று கொஞ்ச நாட்களாகவே ஓர் ஆசை.''

அகல்யா தேவியின் கூந்தல், கூடைக் கொண்டை அலங்காரத்துக் கெல்லாம் இப்போதுதான் விளக்கம் கிடைத்தது.

''ம்....அதனுலே?''

''அதற்கு இப்போது ஒரு சான்ஸ் வந்திருக்கிறது.''

''ம்..''

''அதனுல் போகலாம் என்று.. ''

''எப்போது?''

''நாளைக்கே போகலாம். ஒரு மாதத்திலும் போகலாம்.''

முதலில் கோவிந்தன்; இப்போது இவள். அவன் மட்டும் இங்கேயே கிடந்து புழுங்கவேண்டியதுதான்; இல்லையா? கோபிக்கு நெஞ்சு கிட்டத்தட்ட வெடித்தே விட்டது. அவன் மெதுவாக எழுந்துவிட்டான். கீழே விழவில்லை.

அவளும் எழுந்திருந்தாள்; மணலைத் தட்டிக்கொண்டாள்.

''கோபி! என் உள்ளம் உங்களுக்கு இன்னும் தெரியவில்லையா, கோபி?''

அவன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தீரபுருஷனுக இருக்க விரும்பினுன்.

''சரி சரளா. அந்தப் பேச்சு இந்த நேரத்தில் வேண்டாம். விட்டுவிடுவோம்!''

கோபி இரு கைகளையும் காலில் தட்டிக் கொண்டபோது, கால் பைக்குள் அவன் மத்தியானம் வாங்கிய வாலெட் தட்டுப் பட்டது. அதை அப்படியே ஒரு தடவை நெருடிப் பார்த்தான். அவனுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. அவன் முடிவு செய்துகொண்ட மூன்ருவது காரியத்துக்கு அவள் அவசியமே இல்லாமல் செய்துவிட்டாள். அதுதான் இப்போது துக்கம்.

''சரி; நான் வருகிறேன்'' என்று அவன் மணலில் வேகமாக நடக்க முயன்ருன்.

''கோபி!''

அலையெறியும் இரைச்சலில் அது காதில் விழாததுபோல அவன் நடந்தான். ஆனல் காலே முறிந்தது போல் நடை நொண்டிற்று.

''கோயிலுக்குப் போக வேண்டாமா?''

அவள் நெருங்கி வந்துவிட்டாள். இருவரும் சேர்ந்து நடந்தார்கள்.

''கோபமா? அதுதான் அப்போதே சொன்னேன்: சமயம் சரியாக இல்லை. இப்படி நடுவிலே என்னை விட்டு விட்டுப் போவதுதான் அழகா கோபி? நான் தனியாக எப்படிப் போவேன் வீட்டுக்கு?''

''ஹூம். தனியாக வெளி நாடு போகப் போகிறவளுக்கு இங்கேயே இருக்கிற வீட்டுக்குப் போவதுதான் பெரிய விஷயமா?''

''வெளிநாட்டுக்குத் தனியாகவா?''

''நீதானே சொன்னுய்?''

''அப்படித் தனியாகப் போக முடியாது என்பதனுல்தானே உங்களிடம் சொல்கிறேன்?''

கோபி சட்டென்று நின்ருன்.

''என்ன சொல்கிருய் நீ? கிடைத்த சான்ஸை வேண்டாம் என்று சொல்லிவிடப்போகிருயா?''

''இல்லை; அதைப் பயன்படுத்திக் கொண்டு இருவருமே போவோம் என்கிறேன். இருவராகப் போவோம் என்கிறேன்.''

''நான் என்ன துணைக்காகவா? என்னை யார் அழைக்கிருர்கள்?''

''எல்லாந்தான். டிராவல் சர்விஸஸ் பீரோவுக்குப் பயிற்சி பெற்ற கைடுகளாக உள்ள இரண்டு பேர் அவசரமாகத் தேவை. இரண்டு பேரை உடனே மேலும் பயிற்சி பெற அனுப்பும்படி இன்றைக்குத்தான் கேபிள் வந்தது. உடனே உங்களுக்குப் போன் செய்தேன். குறைந்தது ஆறு மாதமாவது பயிற்சி பெற வேண்டுமாம்.''

''அது சரி; இருவருமே போவோம் என்ருய். அப்படியே போவோம். அப்புறம் இருவராகப் போவோம் என்ருயே, அதற்கு என்ன அர்த்தம்? புரியவில்லையே எனக்கு!''

''அதுவா, மூவராக இல்லை என்று அர்த்தம்!''

புண்ணிய காலம் என்பதற்கு அறிகுறியாக மறுபடியும் மழைத் துளி, தூற்றலாகப் போடத் தொடங்கியது. ★



1968

கலைமகள்—தீபாவளிமலர்

மங்கையும் மச்சமும்

ஓவியர்: ஸிம்ஹா



தீபாவளி வாழ்த்துக்கள்

திருவின் சீரும் செல்வ நலனும்
உங்கள் TMBயைத்
தொடரட்டும்

TATA
MERCEDES-BENZ

டாடா எஞ்சினீரிங் அண்டு லோகமோடிவ் கம்பெனி லிட்.
விற்பனை அலுவலகம்; 148, மகாத்மா காந்தி ரோடு,
பம்பாய்-1.




ஒளி பரவ, பரவ, வதனங்கள் அதிக பிரகாசமடைகின்றன.
ஒவ்வொன்றும் தீபாவளி குதூகலத்தை அதிகரிக்கிறது.
ஒவ்வொன்றும் ஒரு நல்லெண்ணச் செய்தியை கொணருகிறது.
தீபாவளி நேரத்தில் மக்களை ஒன்று சேர்க்கும் செய்தியைப் போல,
செய்தி கருவிகளை அனுப்புவதே ஐ.டி.ஐ. நிறுவனத்தில் எங்கள் அலுவல்.

Communication is our business

இந்தியன்
டெலிபோன்
இண்டஸ்டிரீஸ் லிட்.
பெங்களூர்-16.

ITI-106 TM



# ஐடெக்ஸ்

## அழகு சாதனங்கள்

ஐடெக்ஸ் கண்மை

ஐடெக்ஸ் பிந்தி
குங்கும் சாந்து

ஐடெக்ஸ்
குங்கும் பேஸ்ட்




ARAVIND LABORATORIES, P.B. 1415... MADRAS-17.



# இருமையில் ஒருமை

பிரபாகர் மாச்வே

இந்தியா என்னும் பாரத நாட்டில், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லாரும் இரு மனத்தவர்களாக இல்லை என்றாலும் இரு மொழியாளர்களாகியிருக்கிறார்கள். பழங்காலத்திலிருந்தே இங்கு அத்துவைதத்துடன் துவைதமும் சேர்ந்துதானே வாழ்கிறது?

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்பு சமயப் பிரசாரத்துக்கு ஸம்ஸ்கிருதத்தையும் முகல் தர்பார்களில் பெர்ஸிய மொழியையும் மக்கள் பயன்படுத்தி வந்தனர். குமாஸ்தா என்ற புது வர்க்கம் தோன்றியதுமே வங்காளத்திலும் தமிழ் நாட்டிலும், பம்பாயிலும் லாகூரிலும் தாய்மொழிகள் தலையெடுக்கலாயின. இதற்கு முன்பு மடங்களிலும் கோயில்களிலும் கதா காலட்சேபங்களிலும் தெருக்கூத்துக்களிலுமே அவற்றுக்கு இடம் இருந்தது. ஆபீஸில் 'இந்திய ஆங்கில'மே வழங்கியது.

இன்று விடுதலை கிடைத்து இருபத்தோராவது ஆண்டில் மிக்க விநோதமான நிலை ஏற்பட்டிருக்கிறது; அதாவது, எந்த மொழியையும் முழுமையாக யாரும் அறிந்துகொள்ளத் தேவையில்லை. அதனால் நாட்டில் கடுமையான இம்சையும் அதிருப்தியும் சச்சரவும் சூழ்ந்த நிலைமை தோன்றி, இன்று அது மொழிக்கு அப்பாற்பட்டிருக்கிறது.

பம்பாயில் ஒரு ஸிந்தி நண்பரின் வீட்டுக்குப் போனேன். "தேசப் பிரிவினையினால் நான் இங்கு வந்து சேர்ந்தேன். ஸிந்தி என் தாய்மொழி. மராட்டி மாநில மொழி. ஸம்ஸ்கிருதத்தைக் கட்டாயமாக்கியிருக்கிறார்கள். நீங்களே சொல்லுங்கள்: எங்கள் குழந்தைகள் பாவம்! ஐந்து மொழிகளா படிப்பது?" என்று அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் பிற மொழியாளர்கள் சிலர் வாழ்கிறார்கள். வேலைக்காரியுடனும், கறிகாய்க்காரிகளுடனும் பழகிப் பெண்கள் தமக்கு வேண்டிய மொழிகளை எளிதில் கற்றுக் கொண்டு விடுகிறார்கள். ஆபீஸ் போகிறவர்கள் வீட்டில் தாய் மொழியிலும், அலுவலகத்தில் ஆங்கிலத்திலும் தங்கள் வேலையை முடித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு மூன்றாவது மொழி எதற்கு? பெரிய நகரங்களில் தாய் மொழியிலேயே சினிமாப் பார்த்துவிடலாம். ரேடியோச் செய்திகளைத் தாய்மொழியில் கேட்கலாம். செய்திப் பத்திரிகைகளைத் தாய்மொழியில் படித்துவிடலாம். இது போதுமே!

ஹிந்திச்
சித்திரம்



உண்மையிலே நாட்டில் மொழித் தொந்தரவுக்குக் காரணமாக இருப்பவர்கள் நாலைந்து மொழிகள் தெரிந்த சில துஷ்டர்களே. 'தாய்மொழியைத் தவிர இன்னோர் இந்திய மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள்' என்று இவர்கள் ஓயாமல் உபதேசிக்கிறார்கள். எதற்காக ஐயா கற்க வேண்டும்? ஏதாவது வலுக்கட்டாயமா? எங்கள் தகப்பனாரும் பாட்டனாரும் ஒரே ஒரு மொழிதான் கற்றுக்கொண்டார்கள்; அவர்களிடம் 'கல்ச்சர்' குறைவாக இருந்ததா? 'தேசிய ஒருமைப்பாடு' என்ற அர்த்தமில்லாத உளறல் ஏதுக்கு? பாரதத்தில் சௌராஷ்டிரம், மகாராஷ்டிரம், மச்சநாடு, மகதநாடு முதலிய பல நாடுகள் இருந்தபோது என்ன தீமை வந்துவிட்டது?



''ஸம்ஸ்கிருதத்தைப் பொதுமொழியாக்கினால் எந்தத் தொல்லையும் வராது. டிரான்ஸிஸ்டர், டெரிலின் ஷர்ட், பிலிம், ஜாஸ் முதலிய சொற்கள் அதில் இல்லையென்றால், 'காயின்' செய்துகொள்கிறோம். பக்கிங்ஹாம் அரண்மனையைப் பிராம்மணக் கிராமம் என்றும், அரசி விக்டோரியாவை விகடாவதி என்றும் சொல்லிக் கொள்ளவில்லையா?'' என்கிறார் எங்கள் பண்டிதர் ஸம்ஸ்கிருதானந்த சாஸ்திரி.

மறு புறம், அமெரிக்காவிலிருந்து புதிய விஞ்ஞானியாகித் திரும்பி வந்திருக்கும் மிஸ்டர் சட்டர்ஜி சொல்லுகிறார்: ''அங்கே 'மெல்ட்டிங் பாட் லேங்குவேஜ்' அதாவது எல்லா மொழிகளும் கலந்த புது மொழி வழங்குகிறது. இந்தியாவிலும் அப்படித்தான் செய்யவேண்டும். பெயர்ச் சொற்களை ஆங்கிலத்தில் வைத்துக்கொண்டு, வினைகளை நம் மொழியில் செய்யலாமே! நாம் வெளிநாட்டில் கடன் வாங்கவில்லையா? நம் கார்கள், யந்திரங்கள், விமானங்கள், சிந்தனைகள் — எல்லாமே விதேசியாக இருக்கும்போது சில சொற்களைக் கடன் வாங்குவதிலே என்ன குற்றம்? வரட்டுமே வெளிநாட்டுச் சொற்கள்; அவற்றை வரவேற்போம். நாளடைவில் அவை நம்மை வீட்டிலிருந்து துரத்திவிட்டாலும் பாதகமில்லை.''

வேடிக்கையாகப் பேசும் என் நண்பர் ஒருவர், ''பாரதத்தில் உள்ள பதினைந்து மொழிப் பெயர்களின் முதல் எழுத்துக்களை எடுத்துக் கொண்டு மக்கள் தொகைக்கு ஏற்றபடி வரிசைப் படுத்தி ஒரு பொது மொழியைப் படைப்போம். 'அபெகுஹிககாமமலை ஒபஸஸிததெஉ' என்பது அதன் பெயர். அ என்றால் அஸ்ஸாமி, பெ - பெங்காலி, கு - குஜராத்தி, ஹி - ஹிந்தி, க - கன்னடம், கா - காச்மீரி, ம - மராட்டி, மலை- மலையாளம், ஒ - ஒடியா, ப- பஞ்சாபி, ஸ - ஸம்ஸ்கிருதம், ஸி - ஸிந்தி, த - தமிழ், தெ - தெலுங்கு, உ - உருது'' என்று சொன்னார்.

தமிழ் மொழி பேசும் கிருஷ்ணன் இதை எதிர்த்தார்: ''ஹிந்திக்கு ஏன் நாலாவது இடம்? தமிழ் ஏன் பதின்மூன்றாவது? பதின்மூன்று நல்ல எண் அல்லவே!''

''நான் சொன்னது ஆங்கில ஏபிஸிடி வரிசையில் அமைந்தது'' என்றார் நண்பர்.

''ஒரு வரிசையும் வேண்டாம். முதலில் தமிழ், அடுத்தது ஸம்ஸ்கிருதம்; உருது, பஞ்சாபி முதலிய புதிய மொழிகள் கடைசியில் வரட்டும். இதுதான் சரித்திர ரீதியாகப் பொருந்தும்'' என்றார் கிருஷ்ணன்.

ஹிந்திப் பிரசார சபையில் உற்சாகமாகப் பணியாற்றும் பிரசாரகர் சொன்னார்: ''அகரவரிசையில் வைத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றுக்கும் கடைசியில் ஹிந்தி வரும்.''

இந்த விஷயத்தில் ஒரு தீர்மானத்துக்கு யாருமே வரவில்லை. பாரத நாட்டின் பெருமையே இதில்தான் இருக்கிறது. உடை, உணவு, எழுத்து, எண், பஞ்சாங்கக் கணனம் — எதிலுமே இரண்டு இந்தியர்கள் ஒரே முடிவுக்கு வர முடியாது. ஆனால், சச்சரவு என்று வந்தால், எல்லாரும் சுலபமாக ஒரே முடிவுக்கு வருவார்கள்.

நம் வீட்டுப் பாலில் பசும்பாலும் எருமைப் பாலும் கலந்திருப்பதைப் போல, மொழியிலும் பசுவும் எருமையும் கலந்துதான் இருக்கின்றன. நமது அகராதியில் 'ஒருமைப்பாடு' என்ற சொல் மெல்ல மெல்லப் பழசாகி, அர்த்தமற்றதாகப் போய்விட்டது.

'வேற்றுமையில் ஒற்றுமை'க்குப் பதிலாக நாம் 'ஒற்றுமையில் வேற்றுமை'யைத் தே டிச் செல்கிறோம். இதுதான் இரு மொழியிலிருந்து ஒரு மொழிக்கும் ஒரு மொழியிலிருந்து இரு மொழிக்கும் நாம் ஊசலாடும் விந்தை! ★

[தமிழ்: மதுகரம்]


நடிகர்திலகம்
சிவாஜி கணேசன்
அளிக்கும்
அருண் பிரசாத் மூவீஸ்
எங்க ஊர் ராஜா
- டைரக்ஷன்
P. மாதவன் B.A.,
கதை-வசனம்: பாலமுருகன்
ஒளிப்பதிவு: P.N. சுந்தரம்
இசை: M.S. விஸ்வநாதன்

தான் வகுத்துக்கொண்டுள்ள சேவைப் பாணிக்கேற்ற படி, கனரா பாங்க் என்றுமே சிறு தொழில்களுக்கு மேன்மேலும் அதிகமான பண உதவி செய்ய முயற்சித்து வந்துள்ளது. இந்தியாவின் பொருளாதார வளமையில் தான் வகிக்கும் இன்றியமையாத பாகத்தை கனரா பாங்க் நன்கு உணர்ந்துள்ளது. இன்றும், கனரா பாங்க், 3000க்கு மேற்பட்ட சிறுதொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 11·5 கோடிக்கு மேல் உதவியளித்துவரு




# சிறு தொழில்களுக்கு பெருமளவில் பண உதவி

கிறது; இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. நீங்கள் ஒரு சிறுதொழில் ஸ்தாபகராக இருந்தால், உங்கள் தேவைகளுக்கெல்லாம்—அவை சிறியவையோ அல்லது பெரியவையோ—அருகிலுள்ள கனரா பாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் வளர்ச்சியைக் காண்பதிலும், உங்கள் வெற்றியில் பங்கு கொள்வதிலும் கனரா பாங்க் என்றுமே எல்லையற்ற மகிழ்ச்சியடையும்.

## கனரா பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம்: 1906)

பதிவுபெற்ற அலுவலகம்: ஹெட் ஹவுஸ் ஹில், மங்களூர்-1
நிர்வாக அலுவலகம்: 112, ஜயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர்.

SSTA'S CB-33 A TAM

திரவிய சாதனங்கள் 141 கோடிக்கு மேல்—கிளைகள் 245க்கு மேல்—உலகெங்கும் பிரதிநிதிகள்



குழந்தை மோதல்

போட்டோ: பி. வி. சுப்பிரமணியன்



கோழி மோதல்



கலைஞன் படைப்பு



கடவுள் படைப்பு

போட்டோ: ஆர். பி. எஸ். மணி

# நான்கு நாயன்மார்கள்

## 1 இளையான்குடி மாற நாயனார்

அவர் பெயர் மாறர். ஊர் இளையான்குடி. சிவனடியார்களை வழிபட்டு அமுதருத்துவதில் சிறந்தவர். இறைவன் வறுமை உண்டாகும்படி செய்தான்.

ஒருநாள் இரவில் ஒரு சிவனடியார் உருவத்தில் சிவபெருமானே அவர் வீட்டுக்கு வந்தார். மாரிக்காலம். வீட்டில் சமைப்பதற்கு ஒன்றும் இல்லை. மனைவியின் யோசனையின்படி நாயனார் அந்த இரவில் வயலுக்குச் சென்று காலையில் விதைத்திருந்த முளை நெல்லை வாரிவந்து தம் மனைவியார் கையில் கொடுத்தார். புறக்கடையில் குழியில் சிறிது வளர்ந்திருந்த பயிர்களைப் பறித்தார். அடுப்பு எரிக்கத் தம் வீட்டின் மேற்கூரையில் உள்ள அலக்கை அறுத்துக் கொடுத்தார். மனைவியார் சமையல் செய்தார். அடியாரை அழைப்பதற்காகப் பார்த்தபோது அவர் அங்கே இல்லை. இறைவன் இடபவாகனத்தின்மேல் உமாதேவியாருடன் காட்சி அளித்தருளினார்.

## 2. மெய்ப்பொருள் நாயனார்

திருக்கோவலூரை ஆண்ட மன்னர் மெய்ப்பொருளார். அடியார் திருக்கோலத்தைக் கண்டாலே அவர் உள்ளம் உருகிப் பணிவார். அவருடைய பகைவன் முத்திநாதன் பலமுறை அவரை எதிர்த்துத் தோற்றுப் போனான். வஞ்சகமாக அவரைக் கொல்ல எண்ணினான். உடம்பெல்லாம் நீறு பூசிக் கையில் சுவடிக்கட்டைப் போன்ற ஒன்றில் வாளை மறைத்துக்கொண்டு திருக்கோவலூருக்கு வந்தான். அரண்மனையை அணுகி உள்ளே புகுந்தான். அப்போது மெய்ப்பொருள் நாயனார் தனியே படுத்திருந்தார். அருகில் அவர் மனைவி இருந்தாள். தத்தன் என்னும் காவற்காரன் ''அரசர் தூங்குகிறார்'' என்று சொல்லியும் கேளாமல் முத்திநாதன் உள்ளே புகுந்தான். அவனைக் கண்டு எழுந்தார் மன்னர். அரசி அவ்விடம் விட்டுச் சென்றாள். ''சிவபெருமான் அருளிய ஆகமம், எங்கும் இல்லாதது என்னிடம் இருக்கிறது. அதை உனக்குச் சொல்ல வந்தேன்'' என்றான் முத்திநாதன். உடனே நாயனார் அவரை உயர்ந்த ஆதனத்தில் இருத்திப் பணிந்தபோது அந்தப் பாதகன் குத்திவிட்டான். அப்பொழுதும் மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் என்று நாயனார் தொழுதார். தத்தன் ஓடிவந்து அடியாரைக் குத்தப் போகும்போது, மெய்ப்பொருளார் தடுத்து, ''அப்பா! இவர் நம்மவர்; இவரை அழைத்துச் சென்று ஊருக்கு வெளியில் விட்டுவிட்டு வா'' என்று சொல்லி விழ்ந்தார். தத்தன் அப்படியே விட்டுவிட்டு வந்து செய்தியைச் சொல்லக் கேட்டு மகிழ்ந்து இறைவன் திருவடியை அடைந்தார்.

## 3. குங்கிலியக் கலய நாயனார்

திருக்கடவூரில் வாழ்ந்த அந்தண அடியார் கலயர். அமிர்தகடேசர் சந்நிதியில் குங்கிலியத் தூபம் காட்டும் தொண்டை விடாமல் செய்து வந்தார். அவருக்கு வறுமை உண்டாயிற்று. குழந்தைகள் பட்டினி கிடந்தன. அவர் மனைவியார் தம் தாலியைக் கழற்றிக் கொடுத்து உணவுப்பண்டங்களை வாங்கி வரச் சொன்னார். குங்கிலியக் கலயர் அதை எடுத்துச் செல்கையில் ஒரு மாட்டின் மேல் குங்கிலியப் பொதியுடன் ஒருவன் வந்தான். அவர் தம் கையிலுள்ள தாலியைக் கொடுத்து அந்தப் பொதியை வாங்கிக்கொண்டு இறைவன் திருக்கோயில் சென்றார். அங்கே கருவூலத்தில் அந்தப் பொதியைக் கொடுத்துவிட்டுச் சோர்வினால் படுத்து உறங்கினார். இறைவன் கனவில் தோன்றி, இல்லம் சென்று உணவு கொள்ளும்படி பணித்தான். அவர் விழித்தெழுந்து இல்லம் சென்றார். என்ன ஆச்சரியம்! அவருடைய வீட்டில் எல்லாப் பொருள்களும் நிரம்பியிருந்தன. திருவருட் செயலை எண்ணி வியந்தார்.

திருப்பனந்தாளில் சிவலிங்கம் சாய்ந்துவிட்டது. அரசன் யானைகளைக் கொணர்ந்து சிவலிங்கத்தின்மேல் பட்டைச் சுற்றிச் சங்கிலியால் பிணைத்து யானைகளின் கையில் கொடுத்து இழுக்கச் செய்தான். நிமிரவில்லை. இதைக் குங்கிலியக் கலயர் அறிந்து திருப்பனந்தாள் வந்தார். ஒரு மணிக்கயிற்றை வாங்கிச் சிவலிங்கத்தைச் சுற்றிக் கட்டித் தம் கழுத்திலும் கட்டிக்கொண்டு இழுக்கலானார். சிவலிங்கம் நிமிராவிட்டால் அவர் கழுத்து நெரிந்து உயிர் போய்விடும். அடியாரின் அன்புக்கு இரங்கிய பெருமான் நிமிர்ந்து நின்றான்.

## 4. கோச் செங்கட் சோழ நாயனார்

திருவானைக்கா நாவல் மரத்தடியில் உள்ள சிவலிங்கப் பெருமானுக்குமேல் ஒரு சிலந்தி வலை பின்னி விதானம் அமைத்தது. நாள்தோறும் துதிக்கையில் தண்ணீர் கொணர்ந்து அபிஷேகம் செய்து வழிபடும் யானை ஒன்று அந்த வலையைக் கண்டு கலைத்தது. மீண்டும் சிலந்தி வலை பின்ன மறுபடியும் யானை கலைக்கவே, கோபம் கொண்ட சிலந்தி தும்பிக்கையில் புகுந்து கடித்தது. யானை தும்பிக்கையைக் கீழே அறைந்து மாண்டது. சிலந்தியும் இறந்தது.

இறைவன் திருவருளால் சிலந்தி சோழனாகப் பிறந்தது. தாய் வயிற்றில் கர்ப்பமாக இருந்தபோது, இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் குழந்தை உலகை ஆள்வான் என்று சோதிடர் கூறத் தாய் தன் காலை மேலே தூக்கிக் கட்டும்படி செய்தாள். உரியகாலத்தில் தாயின் கட்டை அவிழ்க்க அவள் குழந்தையைப் பெற்றாள். பிறந்த குழந்தையின் கண்கள் சிவந்திருந்தன. அதனால் கோச்செங்கட் சோழர் என்று பெயர்வந்தது. அவர் சிவபெருமானுக்குப் பல கோயில் கட்டினார். யானை ஏறமுடியாமல் படிக்கட்டில் ஏறிச் சென்று தரிசிக்க வேண்டிய மாடக் கோயில்கள் அவை.

[தாராசுரத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருவுருவம் சுவர்களில் செதுக்கப் பட்டுள்ளன. அவற்றில் மேலே காட்டிய நான்கு நாயன்மார்களின் திருவுருவ நிழற் படங்களும் அவர்களுடைய வரலாற்றைக் காட்டும் ஸ்ரீ ராஜத்தின் ஓவியங்களும் அடுத்த பக்கங்களில் இருக்கின்றன. போட்டோ: புஷ்பத்துறை சுப்பிரமணியன்.]






RAJAT



என்ன நடந்து விட்டது இங்கே? மழை பெய்து ஓய்ந்தாற்போல இதென்ன இப்படியொரு நிசப்தம்? தாத்தா நின்றூர்; கவனித்தார்.

நொடிக்கொருதரம் கடைக்கும், வர்சலுக்குமாக ஓடியாடிக் கொண்டிருந்த ராகவனு இவன்? என் அருமை மகனே! ஏன் 'ஙே' என்று விழித்துக் கொண்டிருக்கிருய்?

சமையலறையில் விசுக் விசுக்கென்று நடை போட்டுக் கொண்டிருந்தாளே, அந்த மங்களமா இது? அம்மா என் மருமகளே? என்னம்மா வந்தது உன் வாத்து நடைக்கு? ஏன் என்னவோபோல் போகிருய்?

''திரட்டுப் பாலுக்குக் குங்குமப்பூ போடாவிட்டால் ரசிக்காது. நான் போய் வாங்கி வரேன்'' என்று துள்ளி ஓடிய கோபியா இது? என் அருமைப் பேரனே! ஸ்கூட்டர் வெய்யிலிலிருப்பது கூடத் தெரியாத வகையில் அப்படி என்னப்பா யோசனை?

தனக்குள் கேள்விகளாகக் கேட்டவாறு வராண்டாவை எக்கிப் பார்த்தவருக்கு வியப்பு!

இரண்டு நாட்களாக (மாப்பிள்ளை வந்ததிலிருந்து) கண்ணிலே படாத மீனுவா இது? என் செல்லப் பேத்தியே! தலைத் தீபாவளி கல்யாணப் பெண்ணே! நாவல்தான் படிக்கிருயா அல்லது நடிக்கிருயா? உன் கவனம் நாவலிலில்லை என்பதுதான் புத்தகம் தலைகிழாயிருப்பதிலிருந்தே தெரிகிறதே!

''ஏண்டி கொழந்தே!'' மீனுவைக் கேட்டார், ''என்ன ரொம்ப 'கவனமா' படிக்கறயே! என்ன நாவல்?''

'கவனமா' என்ற வார்த்தைக்கு அவர் தந்த அழுத்தம் வீணுகவில்லை. நாவலைப் பார்த்த மீனு சட்டென்று திருப்பி சீராக்கிக் கொண்டாள். ''மாப்பிள்ளை வெளியே போயிருக்கானு?'' என்று கேட்கப்பட்டபோதும் தலையாட்டினுள்.

# கலாட்டா தீபாவளி



''அடேய் கோபி! ஸ்கூட்டரை நிழல்லே விடமாட்டியோ? வெய்யில்லே வத்தலா காயறது?'' என்று அவனைத் துரத்திவிட்டு, அவன் அமர்ந்திருந்த மோடாவில் தான் அமர்ந்தார். ''என்ன ராகவா?'' என்று ஆரம்பித்தவர் காப்பிக் கொண்டு வரும் மருமகளைப் பார்த்துக் கேட்டார். ''திரட்டுப் பாலும், பால் கொழுக்கட்டையும் பண்ணி யிருக்கிருயாமே! கொஞ்சம் கொடேன். டேஸ்ட் பார்த்துச் சொல்றேன்.''

''ஆஹா, தரேனே! மாப்பிள்ளைக்காக ஆசையா தயார் பண்ணேன். அவர்தான் சாப்பிடல்லை. நீங்க சாப்பிடறதைப் பார்த்தாவது சந்தோஷப்பட்டுக்கறேன்.

''மாப்பிள்ளை சாப்பிடல்லையா? ஏன்? உப்புக்குப் பதிலா சர்க்கரை போட்டுட்டாயா?''



''கோளாறு என் பட்சணத்திலே யில்லை. மாப்பிள்ளை மனசிலே யிருக்கு. அதென்னவோ திடீர்னு மௌன சாமியாரா ஆயிட்டார். யாரோடும் பேச மாட்டேங்கருர்.''

''எப்பத்திலிருந்து இப்படி?''

''தீபாவளிக்கு வாங்கின சீரைக் கொண்டு போய்க் காட்டச் சொன்னேன் அதிலிருந்து....''

''சொன்னபடி நகை போட்டாயா யில்லையா?'' என்று கேட்டவர் மகன் மீது எரிந்து விழுந்தார். ''பதில் சொல் வேண்டா. வாயிலே என்ன பால் கொழுக்கட்டையா?''

''நீங்க ஒண்ணுப்பா! இப்ப வாங்கினதுக்கே என் பெண்டாட்டி என்ன 'நகை காய்ச்சி மரமா? ஏன் பணத்தை வேஸ்ட் பண்ணறீங்கன்னு சத்தம் போட்டான்.''

''அப்ப கோளாறு துணியிலேதான் இருக்கும்.''

''சொல்ல மாட்டேளா பின்னே? கடை கடையாய் ஏறி யிறங்கி, அலசு அலசுன்னு அலசி எடுத்து, தேடு தேடுன்னு தேடி வாங்கினதாக்கும்.''

''மீனு! வா இங்கே'' என்றழைத்தவர் அவள் வந்ததும் கேட்டார். ''எந்தத் துணியைப் பார்த்ததும் அவன் முகம் வாடிப் போச்சு?''

''எனக்கு வாங்கின புடவையைப் பார்த்ததும்தான். அப்புறமும் கூட வாய்க்கு வாய் 'உன் அப்பாவுக்கு நீதான் செல்லம்'னு முணு முணுத்துக் கொண்டே யிருந்தார்.''

''அது போதும்'' என்று புடவையை ஆராய்ந்தார். பிறகு அவசர அவசரமாகப் புறப்பட்டுப் போனுர்.

கொஞ்சம் நேரம் கழித்து...

நிஜமாகவே புத்தகம் படிப்பதில் ஆழ்ந்துபோன மீனு, யாரோ வெடுக்கென்று கிள்ளுவதைக் கண்டு திரும்பினுள். அவளது பெரிய கண்கள் மேலும் பெரிதாயின.

'ஸ்போர்ட்ஸ் காலம்' படித்துக்கொண்டிருந்த கோபி நிமிர்ந்து பார்த்து வியந்தான். அரைத் தூக்கத்திலிருந்த ராகவனும், மங்களமும் ''பசிக்கிறது அத்தை பால் கொழுக்கட்டையும் காப்பியும் கொடுங்க திரட்டுப் பால்! ஐ லைக் இட்'' என்று கேட்கும் மாப்பிள்ளையைப் பார்த்து, ஆச்சரியப்பட்டார்கள்.

மாப்பிள்ளை முற்றிலும் மாறி யிருந்தார்.

''என்னப்பா பண்ணினேள்? மாப்பிள்ளை 'எண்டெய்ர்லி' மாறிட்டாரே!''

''கடைத் தெருவிலே பயலைப் பிடிச்சு 'உன் ஷர்ட் சைஸ் என்ன? பின்னி ஷோரூமுக்குப் போறேன். இரண்டு ஷர்ட்டும், மார்ல்பரோ ஸூட்டிங்கும் வாங்கிவரேன்னேன். அவ்வளவுதான். மாப்பிள்ளை மாறிட்டான்.''

''அவனுக்கு பின்னி துணிதான் பிடிக்கும்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?

''துப்பறிஞ்சு கண்டு பிடிச்சேன். பெண்ணுக்கு வாங்கின புடவை லேபிளைப் பார்த்தேன். பின்னியின் தூய பட்டுப் புடவைதானே அது?''

''அட ராமா!'' ராகவன் வியந்தார். ''ஏற்கனவே நிறையப் பின்னி துணிகள் வைச்சிருக்கானே, ஒரு மாறுதலாயிருக்கட்டும்னு நினைச்சுத்தான் வாங்காமயிருந்தேன்.''

''அட எது எப்படியானுலும் 'க்வாலிடி தி பெஸ்ட்' ஆச்சே! மாப்பிள்ளைக்குத் தெரிஞ்சது கூட இந்த மாமனுருக்கு தெரியல்லியே! சரியான மக்கு மாமனுர்டா நீ!''

''அதனுலென்ன?'' அசடு வழிந்தது ராகவன் முகத்தில். ''பொங்கல் வர்றதே அப்ப புத்திசாலி மாமனுரா யிருந்துட்டுப் போறேன்!''

பின்னி –
துணி உலகிலே புகழ்பெற்ற பெயர்

# தீபாவளி வாழ்த்துக்கள்!

வீல்ஸ் இந்தியா லிமிடெட்
பாடி, சென்னை-50



FDS-WIL-1022

# அஷ்ட காளி



ஸ்ரீபத்ரகாளி

வலக் கையில்: டமருகம், கதை, வஜ்ரம், கத்தி, சூலம்.

இடக் கையில்: பாசம், பத்மம், வேல், கேடயம், கபாலம்.

ஸ்ரீமகாகாளி

வலக் கையில்: சக்கரம், வஜ்ரம், கோடரி, கதை, அம்பு, சூலம்.

இடக் கையில்: தாமரை, வேல், பாசம், மணி, வில், கபாலம்.





**ஸ்ரீசரசண்டிகை**

**வலக் கையில்:** வஜ்ரம், ஈட்டி, சக்கரம், உடுக்கு, அம்பு, கண்டர கோடரி, சூலம்.
**இடக் கையில்:** வேல், வாங்கு, மணி, நாகபாசம், வில், பாசம், கபாலம்.
**பாதத்தில்:** அசுரன்.

**ஸ்ரீபைரவி**

**வலக் கையில்:** சக்கரம், அங்குசம், வளரி, கத்தி, வஜ்ரம், உலக்கை, கதை, சூலம்.
**இடக் கையில்:** வேதாளம், பாசம், கண்டர கோடரி, கேடயம், வேல், மணி, வில்லும் அம்பும், கபாலம்.





ஸ்ரீகாலராத்திரி

வலக் கையில்: தண்டு, கட்வாங்கம், கத்தி, சூலம்.
இடக் கையில்: வளரி, பாசம், கேடயம், கபாலம்.

ஸ்ரீகாளி

வலக் கையில்: டமருகம், கத்தி, சக்கரம், சூலம்.
இடக் கையில்: பாசம், கேடயம், மணி, கபாலம்.
பாதத்தில்: அசுரன்,





ஸ்ரீசாமுண்டி

வலக் கையில்: கத்தி, அங்குசம், வஜ்ரம், சூலம்.
இடக் கையில்: கேடயம், பாசம், மணி, கபாலம்.
பாதத்தில்: அசுரன்.

ஸ்ரீசர்வமய முண்டி

வலக் கையில்: சக்கரம், வஜ்ரம், அம்பு, சூலம்.
இடக் கையில்: சங்கு, வேல், வில், கபாலம்.





# தீபாவளி

நன்னாளில் சுவைமிகு
உணவு வகைகள்.
அவை

## சூரியன் மார்க்

மைதா, சூஜி, ஆட்டா
இவற்றால்
தயாரிக்கப்பட்டவை.

நாவின்பத்திற்கும், போஷாக்கிற்கும்
இணையற்றவை சூரியன் மார்க் மைதா,
சூஜி, மற்றும் ஆட்டா. அவை
தூய்மையானவை. இப்பொழுது
தாராளமாக எங்கும் கிடைக்கின்றன.

தயாரிப்பாளர்கள்:
**செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிட்.,**
330, தம்புசெட்டி தெரு, சென்னை-1.

EP-CFM-20


---





## மனமார்ந்த
## தீபாவளி
## வாழ்த்துக்கள்

# AMCO

**ஆம்கோ பாட்டரீஸ் லிட்.,**
**பெங்களூர்**

இந்தியாவில் பாட்டரி இண்டஸ்ட்ரியில்
முன்னேடிகள்
உலகிலேயே லெட் ஆஸிட் பாட்டரிகளை
பெருமளவில் தயாரிக்கும்,
கோல்டு நேஷனல் பாட்டரீஸின்
(GOULD NATIONAL BATTERIES INC. U.S.A.)
தொழில் நுணுக்க கூட்டுறவுடன்,
மோட்டார் வாகனங்கள்,
போர்க்லிப்ட் டிரக், டீஸல் லோகோ
ஸ்டார்ட்டர், ஸ்டேஷனரி, மேலும்
ரயில் விளக்கு செல்கள்,
முதலியவைகளுக்கு தேவையான
பாட்டரிகளை தயாரிக்கிறார்கள்.

# தீபாவளித் திருநாளில் எமது ஒரே விருந்தாளி !



அவர் இன்பத்திலே ஆழ்ந்து வருகிறார்; வளமை கண்டு வாழ்ந்து வருகிறார். அவரது தொழில் செழித்தோங்கி வருகிறது. அவரது பணம் எங்களிடம் பத்திரமாக இருக்கிறது; வாழையடி வாழையென வளர்ந்து வருகிறது. அது மட்டுமல்ல; அவரது விலையுயர்ந்த நகைகளும் மற்ற பொருள்களும் எம்மிடம் பத்திரமாக இருக்கின்றன. ஆம். நாம் அவரது நலனைக் கண்ணிமைபோல் காத்து வருகிறோம். அவரை எமது ஒரே வாடிக்கைக்காரர் என்றுதான் மதித்து வருகிறோம்.

ஆகையால்தான் அவருக்கு எங்களிடம் அபார திருப்தி; அளவு கடந்த நம்பிக்கை. அந்த பூரிப்பில் அவர் தீபாவளியைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். எனவே, அவருக்கும், அவரைப் போன்ற எங்களது லட்சக்கணக்கான மற்ற ''ஒரே'' வாடிக்கைக்காரர்களுக்கும் இனிமையான வளமை காணும் தீபாவளி வாழ்த்துக்களைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்!

வைர விழா 1908–1968

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ

**தி பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட்**

(நிறுவனம்: 1908) ரெஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாண்டவி, பரோடா.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் 300க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன.

Shilpi BOB 20A/68 Tam



# கால் நூற்றாண்டு

ராஜம் கிருஷ்ணன்

ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்துவிட்டு, பாராயண புத்தகத்தை எடுக்கும்போது வாசலில் அடிச் சத்தம் கேட்கிறது. நாராயணன் எப்போதுமே வாசற் கதவைத் தாழிடமாட்டார்.

''மாமா!''

வெண்கல நாதம் தேனில் தோய்ந்தாற்போல் இனிமை கசியும் குரல்.

''நீங்கள் நாராயண மாமாதானே? பம்பாயிலே தாதர் மான்ஷன் கட்டிடத்தில் இல்லே? எனக்கு நேற்று வந்து இறங்கியபோதே தெரிந்து விட்டது. என்னைத் தெரியலியா மாமா? புவனா, சக்ரவர்த்தியின் மகள் ....''

படியில் நிற்கும் நாராயணனுக்கு மனம் துளும்பும் பிரமிப்பில் விழிகள் அசைவற்று நிலைக்கின்றன. கள்ளமறியாத குருத்தாகக் கண்ட வடிவம். கனியீன்ற தாயின் கோலத்தில் காட்சி தரும் நிறைவில், பனிநீர்த் துளிகளை உதறிக் கொண்டாற் போல் சிலிர்த்துக்கொள்கிறார்.

அது நாற்பத்துமூன்று. இப்போது அறுபத்தெட்டு. கால் நூற்றாண்டு!

புவனேசுவரியா?

கருகருவென்று இழையும் ஈரக்கூந்தலில் முன்புறம் இரண்டோர் இழைகள் முதிர்ந்து அவளுடைய முழுமையைக் காட்டுகின்றன. நெற்றியிலும் முன்னுச்சியிலும் மங்களம் பொலியும் சிந்துரப் பொட்டு. வலது மூக்கில் சுடர் தெறிக்கும் வைர முத்துக்கள், செவிகளில் இசைந்த காதணிகள். அவள் புன்னகை முகமாக நிற்கையில் கன்னங்கள் குழிகின்றன.

''புவனேசுவரியா? நிற்கிறாயே! உட்காரம்மா'' என்று உள்ளே திரும்பிச் சாத்தியிருக்கும் பலகையைக் கொண்டுவந்து போடுகிறார்.

''இருக்கட்டும் மாமா, நாங்கள் இந்த எதிர்ப் பங்களாவுக்கு நேற்றுத்தான் வந்திருக்கிறோம். அவருக்கு இந்த ஊருக்கு மாற்றலாகி ஒரு மாசம் ஆகிறது. நான் காரிலிருந்து இறங்கியபோது நீங்கள் வாசலில் உட்கார்ந்திருந்தீர்கள். நீங்கள் அப்படியே, அன்று பார்த்தாற் போலவே இருக்கிறீர்களே, மாமா?''

அவள் தவக் குடிலைப் போலமைந்த அந்த எளிய கூரைவீட்டை உள்ளே வந்து பார்க்கிறாள். கொடியில் தோய்த்து உலர்த்திய வேட்டி; வாளியில் தண்ணீர்; கரியடுப்பில் பழைய குக்கர் பாத்திரம் ஏறியிருக்கிறது. இராமர் பட்டாபிஷேகப் படத்துக்கு முன் சிறு குத்துவிளக்கு முத்துச் சுடராய் எரிகிறது; ஊதுவத்திப் புகையின் அடக்கமான நறுமணம் அந்தக் குடிலில் நிறைகிறது.

''தாதர் மான்ஷன் ரூமை, அப்படியே எனக்கு நினைவுக்குக் கொண்டு வருகிறீர்களே! நான் நேற்றே அந்த வீட்டுத் தோட்டக்காரனை விசாரித்தேன். 'பெரியவருக்குப் பெண்சாதி பிள்ளைகுட்டி கிடையாது. கொஞ்சம் பின்சின் வராப் போல. பூமி முன்னமே வாங்கிக் கிடந்தது. கூரை போட்டுக்கிட்டு வந்திட்டாரு. ஒரு வம்பு தும்புக்கும் போக மாட்டார். எந்நேரமும் ஈசி சேரில் சாஞ்சிட்டு எதானும் புத்தகம் படிச்சிட்டிருப்பார்' என்று சொன்னான். எனக்கு நிச்சயமாகிவிட்டது, நீங்கள்தாம் என்று.''

''அப்பா அம்மா சுகமா? பம்பாயில்தான் இருக்கிறார்களா?''

''இல்லையே! அப்பா காலமாகிப் பத்து வருஷமாகிவிட்டது. என்னைக் கல்யாணம் செய்து கொடுத்த மறு வருஷமே பஸ் ஆக்ஸிடென்டில் போய்விட்டார். சின்னம்மா பையனைப் படிக்க வைத்துக்கொண்டு ரெண்டு வருஷம் அதே வீட்டில் இருந்தாள். இப்போது அவளும் போபாலுக்குப் போய்விட்டாள் தம்பியுடன்.''

''அடாடா!''

அவர் பழைய நினைவுகளில் கிளர்ந்தவராய் நிற்கிறார். அப்போது, நான் முந்தி நீ முந்தி என்று மூன்று குழந்தைகள் ஓடி வருகிறார்கள். மூத்த பெண்ணுக்கு எட்டு வயது இருக்கும். குட்டை முடியும் முழங்கால் ஃபிராக்குமாக வந்து தாயோடு ஒட்டி நிற்கிறாள். தாயின் சாயலே விளங்குகிறது. கள்ளமற்ற பேதைப் பருவம் கடந்து, துடிதுடிப்பும் துருதுருப்புமாக உலகை அளக்கப் புறப்பட்டுவிட்டாற்போன்ற வளர்ச்சியில் செழுமையும் வாளிப்பும் தெரிகின்றன. பையன் கறுவலாக இருக்கிறான். சுருண்ட முடி, தந்தையின் சாயல் போலிருக்கிறது. கையில் ஒரு நாடாவும், பித்தானிடாத குட்டைக் கவுனுமாக வரும் குட்டிப் பெண், அப்படியே அவர் அன்று கண்ட புவனாவின் அச்சாக இருக்கிறாள்.

''இதோ புவனா இருக்கிறாளே!'' என்று அந்தப் பரவசம் சொல்லாகத் தெறித்து வருகிறது. அவளைக் கை நீட்டி அழைக்கிறார். அகன்ற நெற்றி. பட்டுப் பூச்சி இதழ்களின் கீழே குறுகுறுவென்று ஒளிரும் சிறு விழிகள். செப்பு வாயில் அரிசி அரிசியாகப் பற்கள்.

இதே வடிவம் அன்று ஒற்றையறை இல்லத்தின் பொதுக் குளியலறையிலிருந்து, அவர் ஈரவேட்டியுடன் கால் வைக்கையில், திறந்த கதவுக்கு அப்பால் நுழைந்து, தன் விழிகளைக் கொட்டிக் கொண்டு எந்த அதிசயத்துக்கோ விடையறியத் துடித்து நின்றது.

''மாமா, உங்க வீட்டிலே மாமி இல்லே?'' நாராயணன் அந்த அறைக்கு வந்த இரண்டாம் நாள் அது.

''நீ யார் வீட்டுக் குழந்தை ம்மா?''

''நாங்க மூணும் மாடியிலே இருக்கிறோம். எங்கப்பா, சக்ரவர்த்தி. உங்க வீட்டிலே மாமி, அதான் அம்மா, இல்லே?'' என்று தலையை ஆட்டிக் கொண்டு கேட்டாள் குழந்தை.

''இல்லையேம்மா?''

நீலா பேறு பெறுமலே இறந்து வருஷமாகாத புதிது. குரல் நெகிழ்ந்தது அவருக்கு.

''மாமி எங்கே போயிட்டா மாமா? ருக்மிணி டீச்சர் மாதிரி ஸ்கூலுக்குப் போயிட்டாங்களா? தின்ஷா மாமி மாதிரி ஆபீசுக்குப் போயிட்டாங்களா?''

''இல்லை, குழந்தை, சாமிகிட்டப் போயிட்டா.''

குவியும் உதடுகளும் நிலைத்த விழிகளும் சில விநாடிகள் செயலற்று நின்றன.

''எங்கம்மாகூட சாமிகிட்டப் போயிட்டா. பாப்பா கொண்டு வருவதாகச் சொல்லி ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு அப்படியே சாமி கிட்டப் போயிட்டா. ஆனா எங்க வீட்டிலே சின்னம்மா இருக்காங்க. உங்க வீட்டிலே சின்னம்மா கூடக் கிடையாதா, மாமா?''

எல்லாரும் அப்போது அவரைத் துணைப்பிக்கொண்டிருந்த அதே கேள்வியை மலர்ச் சரத்தைப் போட்டு வளைப்பதுபோல் குழந்தை கேட்டபோதும் அவர் இராமர் பட்டாபிஷேகப் படத்தைத்தான் அப்போது பார்த்தார்; இப்போதும் பார்க்கிறார்.

''என்ன மாமா? திகைத்துப் போய்விட்டீர்களா? மைதிலி, தாத்தாவுக்கு நமஸ்தே சொல்லு. இவன் பையன், மகேஷ். இவளுக்குச் சுகன்யா என்று பெயர். எல்லாரும் தாத்தாவுக்கு நமஸ்தே சொல்லுங்க!'' என்று அவரை மீண்டும் பனிநீர்ப் புல்லரிப்புடன் நிகழ்காலத்துக்கு இழுக்கிறாள் புவனா.

''இவளுக்குச் சுகன்யா என்று பெயரா? நான் சின்னப் புவனா என்றுதான் கூப்பிடுவேன்!'' என்ற நாராயணன் அவளைச் சிரித்துக்கொண்டே தூக்கிக்கொள்கிறார்.

குழந்தை முதலில் கொஞ்சம் கூசித் திமிறுகிறாள். நாராயணன் அவளுடன் உள்ளே சென்று கொஞ்சம் வெல்லக் கட்டியை எடுத்து வந்து பிட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு துண்டு கொடுக்கிறார்.

''நான்கூடக் குழந்தையா மாமா?''

''எனக்கு.....நான் வேறு என்ன கொடுப்பேனம்மா?'' என்று குரல் தழுதழுக்க அவளையே பார்த்துக்கொண்டு நிற்கிறார்.

தனிக்கட்டையாக இருக்கப் பழகி அதுவே நிலைத்துவிட்ட வாழ்வு அவருடையது. அவருடைய மண வாழ்வு மிகக் குறுகிய காலத்துடன் முடிந்து போயிற்று.

''நீங்க ஏன் மாமா, சின்னம்மாவையே கூட்டி வரலே?''

''சின்னம்மா எதற்கும்மா? இங்கே உன்னைப் போலப் பாப்பாவே யாரும் இல்லையே!''

''பின்னே, உங்க வீட்டிலே நீயே சமைப்பாயா?''

''ஆமாம்.''

''நீங்க சாயங்காலம் ஆபீசிலிருந்து வந்தவுடனே உனக்கு யாரு காபி கொடுப்பா?''

''நானே வந்து டீ போட்டுக்கொள்வேம்மா!''

''ஏன்?''

குழந்தை எடுத்ததற்கெல்லாம் ஏன் ஏன் என்று கேட்பது இயல்புதான். அது வளரும் அறிவின் துடிப்பு. ஆனால் அறிவின் துடிப்பு மட்டுமா அவளுடைய கேள்வியிலும் நிழல் தேங்கும் கருவிழிகளிலும் பிரதிபலித்தன?

''நீங்க ஒண்டியா டீ போட்டுக்கறப்ப கையெல்லாம் வலிக்காது, மாமா? உங்களுக்கு எப்பவானும் காச்சலே வராதா மாமா?''

இந்தப் பரிவு அவருடைய நெஞ்சத்தை இதமாகத் தொடும்.

நீலுவுடன் குடும்பம் நடத்துவதற்கு முன் வெகு நாட்களாகப் பம்பாய் நகரில் அவர் ஒற்றையறைக் குடும்பம் நடத்தியிருக்கிறார். முப்பத்தைந்து வயசுக்குப் பின் மணந்துகொண்டு அதே அறையில்தான் அவளையும் அவர் அழைத்து வந்திருந்தார். ஓராண்டுக் காலத்தில் அவரை மீண்டும் தனியராக்கிவிட்டு அவள் மறைந்ததும் அந்த அறைவாசம் பிடிக்காமல் பொதுக் குளியலறையானாலும் குற்றமில்லை என்று இந்த அறைக்கு அவர் வந்திருந்தார்.

தாம் உண்டு, தம் வாழ்வுண்டு என்று அலுவலக எழுத்தராய் ஒற்றை அறையின் தனி வாழ்க்கைச் சகடத்தில் பம்பாய் நகர மூச்சு முட்டும் வாழ்வில் உருண்டு வந்த அவருக்கு, குழந்தை புவனாவின் கள்ளமற்ற அன்பு புதிய அநுபவமாக இருந்தது. அவர் அன்புக் கரங்களால் தடவிப் பரவசமடைகிறார்.



காலையில் அவர் எட்டரை மணிக்கெல்லாம் அலுவலகத்துக்குக் கிளம்ப வேண்டும். புவனு அதற்குள் குழந்தைப் பள்ளிக்குச் சென்றுவிடுவாள். அவருடைய அறையில் எட்டிப் பார்த்துச் சிருடையில் 'குட் மார்னிங்' சொல்லத்தான் பொழுது இருக்கும். மாலையில் அவள் காத்திருப்பாள். அவருடைய அறைக் கதவு திறந்ததும், அவள் ஒரு தோசையையோ, ஓர் உருண்டை உப்புமாவையோ, ஒரு கடலை உருண்டையையோ,ஒரு பர்பித்



துண்டையோ கொண்டு ஓடி வருவாள்.

முதல் நாள் ஒரு கிண்ணத்தில் இரண்டு பர்பித் துண்டுகளுடன் வந்தாள். ''மாமா, உங்க வீட்டிலே சின்னம்மாகூட இல்லை, பாவம்ன்னேன். சின்னம்மா உங்களுக்கும் ஒரு துண்டு கொடுத்தாள். நாம் ரெண்டு பேரும் சாப்பிடுவோமா?'' என்றாள்.

ஏதேனும் நாவுக்கினியது வேண்டும் போலிருந்தால் அவர் மிட்டாய்க் கடையில்தான் வாங்கிச் சுவைத்திருக்கிறார்.

அன்று அவர் இரண்டு கிண்ணங்களில் தேநீர் தயாரித்து வைத்தார்.

''புவனாவுக்கு ஒன்று; மாமாவுக்கு ஒன்று. டீ சாப்பிடலாமா?'' என்றார்.

''எனக்குச் சின்னம்மா ஓவல்டின்தான் கொடுப்பா. டீ சாப்பிடலாமா மாமா கொடுத்தால்னு கேட்டிட்டு வரேன்'' என்று சிட்டாய் ஓடிப் போனாள். ''மாமா கொடுத்தால் இன்னிக்குச் சாப்பிடு, பரவாயில்லைன்னு சின்னம்மா சொன்னாள்'' என்ற பதிலைக் கொண்டு ஓடி வந்தாள்.

அன்றிலிருந்து மாலைத் தேநீர் அவருக்கு அமுதமாக இனிக்கலாயிற்று. சக்ரவர்த்தி ஒரு சீட்டாட்டப் பித்து; குடும்பத்தில் அவ்வளவாக ஒட்டிக் குழந்தைகளைச் சீராடுபவனல்ல. எனினும் அந்தக் குடும்ப ஓடம் மகிழ்ச்சியின் சிறு துறைகளை எட்டும் செய்திகளெல்லாம் செப்புவாயின் சொற்களாக வந்து வடிந்து அவரை மகிழ்ச்சிக் கடலில் ஆட்டும்.

''நாங்களெல்லாம் நாளைக்கு மலபார் ஹில் போறோமாம். சின்னம்மா உருளைக்கிழங்கு வறுத்து, சர்க்கரைப் பொங்கலெல்லாம் செய்யப்போறாங்க. நீங்களும் வரியா மாமா? அப்பா போட்டோ மாமாட்டேந்து காமரா கூட வாங்கியிருக்கார். நான் அப்ப தீபாவளிக்கு வாங்கின நீல ஃபிராக்கைப் போட்டுப்பேன். சின்னம்மா, ராதாம்மாவோட பெரிய சரிகைப் புடவையில்லை? அதைக் கட்டிட்டாத்தான் போட்டோ நல்லா விழும்னு அப்பா சொன்னார். நீங்க எது போட்டுக்கறே மாமா?'' என்று குழந்தை கொடியையும் சுவரில் உள்ள முளைகளையும் ஆவலோடு ஆராய்ந்தாளே, அது நினைவுக்கு வருகிறது.

**சா**ப்பாட்டுக்கு அவர் தையல் இலையைப் பரப்பிக்கொண்டு, குக்கர் பாத்திரத்தைத் திறந்து வைக்கும் நேரத்தில் சின்னப் புவனா ஓசைப்படாமல் அங்கு வருகிறாள்.

''தாத்தா, நீங்க இப்பத்தான் சாப்பிடப் போறீங்களா?''

''ஆமாம். சின்னப் புவனாவும் இங்கே சாப்பிடுகிறாயா?''

''நாங்கள்ளாம் முதல்லே சாப்பிட்டாச்சு. நாயர் எங்களுக்குத்தான் முன்னே போடுவான். மேசை எல்லாம் இறைச்சா அப்பாக்குக் கோபம் வரும். அப்பாவும் அம்மாவும் மட்டும் அப்புறம் தனியாச் சாப்பிடுவாங்க.''

''ஓ!''

அவர் தமக்கு உப்பு பருப்பு அரிசி எல்லாவற்றையும் சேர்த்துப் பொங்கிக்கொள்வதுதான் வழக்கம். கொல்லையில் தனியாகப் போட்டிருக்கும் ஏதோ ஒரு காயைக் காரமோ மசாலை மணமோ இன்றி வேகவைத்திருப்பார். சிறு சட்டி ஒன்றில் உறைந்த தயிரை அவர் எடுத்து வைக்கும்போது, ''எனக்குத் தயிரில் சர்க்கரை போட்டால் நல்லாருக்கும். எனக்குப் பிடிக்கும். நாயர் உப்புதான் போடுவான்'' என்று குழந்தை வெளியிடுகிறாள். நாராயணன் ஒரு சிறு கிண்ணம் தேடி எடுத்து அதில் தயிரை விட்டு, வெல்லத் துண்டைப் பொடித்துப் போடுகிறார்.

குழந்தை சுவைத்து உண்ணுகிறாள்.

''உங்க வீட்டிலே சர்க்கரையே இல்லையா, தாத்தா?''

''இல்லையேம்மா?''

''தாத்தா, நீங்க ஏன் குடிசை வீட்டிலே இருக்கிறீங்க?''

''இதுதான் குளுகுளுவென்று இருக்கும். விசிறி போட வேண்டாம்.''

சுகன்யா இனிப்புத் தயிரை ஒரு ரேகை விடாமல் துடைத்துச் சுவைத்துக் கிண்ணத்தை வைத்துவிட்டு எழுந்து செல்கிறாள். வாளி நிறைந்த நீரில் அவள் கையை முக்கிக் கழுவிக் கொள்கிறாள்.

''உங்க வீட்டிலே குழாயே கிடையாதா? நீங்க ஏழையா தாத்தா?''

நாராயணன் எதிர்பாராத கேள்வி இது.

''மகேஷ், மைதிலி இரண்டு பேரும் என்ன செய்கிறார்களாம்?''

''அம்மா அவங்களுக்குப் 'பனிஷ்மென்ட்' கொடுத்திருக்கா. பொட்டி எல்லாம் போட்ட ரூம் இல்லே, அதிலே போட்டுக் கதவைச் சாத்திட்டா.''

''அடாடா! அவர்கள் விஷமம் பண்ணினார்களா?''

''ஆமாம். அப்பா பெட் ரூமிலே போய்ப் படுக்கை யெல்லாம் ஏறித் துகைச்சாங்க. அப்பா பார்த்தால் அடி அடின்னு அடிப்பார். அம்மா அடிக்க மாட்டா. லம்பர் ரூமிலே போட்டுச் சாத்திடுவா. மகேஷ் இருக்கிறானே, அவனுக்குக் கோபம் வந்தால் கண்ணாடி எல்லாம் உடைச்சிடுவான்'' என்று விவரிக்கிறாள் குழந்தை.

''நீயும் விஷமம் செய்வாயா?''

''நா மாட்டேம்பா. அப்பா அடிப்பார்!''

நாராயணன் உண்டபின் வாசலுக்கும் கொல்லைக்கும் நேராகச் சாய்வு நாற்காலியைப் போட்டுக்கொண்டு சற்றே சாய்ந்திருப்பார். அந்த நான்கு மனை இடத்தில் பின்புறம் நிழல் கவியும் வேப்பமரம் ஒன்றுண்டு. கிணற்றை ஒட்டிய சிறு முள்வேலிச் சதுரம். அங்கே தெரியும் வாழையும் கீரைப் பாத்திகளும் அவருடைய பயிர்கள். மற்ற இடங்களில் ஊரிலுள்ள ஆடு மாடுகள் மேய்ந்துகொண் டிருக்கும். சிறிது நேரம் அந்த மரத்தடியில் விளையாடிவிட்டுச் சுகன்யா வீட்டுக்கு ஓடிப் போகிறாள்.

நாலரை மணிக்கு மீண்டும் அவரைத் தேடி வருகிறாள்.

''தாத்தா, எங்க வீட்டிலே நான் இன்னிக்குப் பொங்கல் சாப்பிட்டேனே, முந்திரிப் பருப்புப் போட்டு!''

அருகில் வந்து அவர் மூக்கில் கை வைத்து மணம் காட்டுகிறாள்.

''நாயர் நிறைய நெய் வுட்டுத் தந்தான். ஜம்முனு மணக்கலே?'' சிறு கைகளில் ஓர் இலைத் தொன்னையோ, பீங்கான் கிண்ணமோ கொண்டு படியிறங்கி வருவாளே புவனா, அந்த நினைவு வருகிறது.

''குழந்தை, உன் அம்மா எங்கே?''

அம்மா ஒருகால் அந்தப் பண்டத்தைத் தொன்னையில் வைத்து எடுத்து வரலாம் அல்லவா?

சை! என்ன நாக்குச் சபலம்?

புவனா வருகிறாளே! அவளுடைய கையில் கிண்ணமுமில்லை; தொன்னையுமில்லை. சீப்பால் கூந்தலை வாரிக்கொண்டு வருகிறாள். சிரித்த முகத்துடன் வருகிறாள்.

''வாம்மா, புவனா! இப்போதுதான் கேட்டேன். வந்துவிட்டாய். நூறு வயசு!''

''சுகு இங்கு இருக்கிறாளா? உங்களுக்குத் தோழியாகிவிட்டாள் போலிருக்கிறதே! காலையில் இங்கே தயிரில் வெல்லம் போட்டுக் கொடுத்தீர்களாமே?''

''ஆமாம். சொன்னாளா?''

''சட்டையெல்லாம் கறையாக இருந்ததே'' என்று சிரிக்கிறாள் புவனா.

''மாமா, நாங்கள் சற்று வெளியே போக வேண்டியிருக்கிறது. இரவு வர ஒன்பது பத்து மணியாகும். மகேஷ், மைதிலி பற்றிக் கவலை இல்லை. சுகுவை மட்டும் ஒரு கண் பார்த்துக் கொள்கிறீர்களா?''

''ஓ, அதனாலென்னம்மா? நீ கவலையில்லாமல் போய் வா. இங்கேயே வேண்டுமானாலும் இரவு படுக்க வைத்துக் கொள்கிறேன்.''

''நான் மாட்டேன். உன்னோடு நானும் சினிமாக்கு வருவேன்!'' என்று சுகன்யா தாயின் சேலையைப் பற்றிக் கொண்டு சிணுங்குகிறாள்.

''நான் டாக்டர் வீட்டுக்காக்கும் போகிறேன். பிடிவாதம் பிடித்தால் அப்பா அடிப்பார். தாத்தாவிடம் இரு. உனக்குக் கதை சொல்லுவார். நாளையும் தயிரும் வெல்லமும் தருவார்'' என்று நயம் உரைக்கிறாள். குழந்தை மசியவில்லை. அவளுடனே ஒட்டிக்கொண்டு 'நானும் வருவேன்' என்று அழத் தொடங்குகிறாள். இதற்குள் நாயர் அவளைத் தொலைபேசியில் யாரோ அழைப்பதாக வந்து சொல்லி அழைத்துச் செல்கிறான்.

மாலை ஆறு மணியாகும் தறுவாயில் முகப்பில் காரைக் கொண்டு வந்து கணவன் நிறுத்துகிறான். அவன் இறங்கி உள்ளே சென்ற பத்து நிமிடங்களில் இருவரும் வேறு உடை அணிந்து வண்டியில் ஏறிக் கொள்கின்றனர். புவனாவை அப்போது நாராயணனால் கண்டுகொள்ள முடியவில்லை. உச்சிக் கொண்டையும், செஞ்சாய உதடுகளும், கையில்லா இரவிக்கையுமாகப் பகட்டும் கோலத்தில் வண்டியை ஓட்டும் இருக்கையில் அமர்ந்து வண்டியைக் கிளப்புகிறாள். நாயரின் கைகளுக்கு அடங்காமல் சுகன்யா அழுகிறாள். தந்தை கார்க் கதவைப் பலமாக அறைந்து சாத்துகிறான்.

''நாயர், அவளை எதிர்வீட்டுப் பெரியவரிடம் கொண்டுவிடு!'' என்ற சொற்கள், அந்தக் காரின் கிளம்பொலியோடு தேய்ந்து வருகின்றன.



## ஒரு சவால்

இந்தியாவின் சாகுபடிக்குரிய நிலங்களிலிருந்து, நாட்டில் பெருகிவரும் மக்கள் பசியடங்க, இன்னும் அதிக உணவு உற்பத்தி செய்யவேண்டும். இன்று நமது மிக அவசரமான, அவசியமான, தேசீயப் பிரச்சினை இது. நமது திறமைக்கும், குறிக்கோள்களுக்கும் ஒரு சவால் இது.

இந்தச் சவாலை நாம் ஏற்று சமாளிக்க வேண்டும். எப்படி? முயன்று, சோதித்து, வெற்றிகண்ட விஞ்ஞானப் பயிர் முறைகளைச் செயல்படுத்த வேண்டும். முன்னேற்றமடைந்த பயிர் முறைகளை உபயோகித்து, ஆச்சரியப்படத்தக்க அளவு விளைச்சலை அதிகப்படுத்தலாம். உயரிய விதைகள், போதுமான அளவு உரம், தக்க உழவு இயந்திரங்கள் ஆகியவைகளைக் கொண்டு இதைச் சாதிக்கலாம்.

டாஃபி (TAFE) நிறுவனம் இன்று இந்தியாவிலேயே புதுமுறையான டிராக்டர்களையும், உழவுக் கருவிகளையும் அதிக அளவில் உற்பத்தி செய்து, இன்றைய உணவுப் பெருக்கத்துக்கான சவாலை, நம்பிக்கையுடன் ஏற்கிறது. விவசாயிகளுக்கு, நன்கு சோதனை செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட, உயரிய நவீன உழவுக் கருவிகளையும் இயந்திரங்களையும் அளிக்கிறது. அதன் மூலம், இந்தியாவின் பெருகி வரும் கோடிக்கணக்கான மக்கட் தொகையின் பசி அடங்க, உணவு வழங்கும் நற்பணிக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது.

TAFE

டிராக்டர்ஸ் அண்டு பார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட், சென்னை.

இந்தியாவில் மாஸி-பர்கூஸன்
டிராக்டர்கள், விவசாயக் கருவிகள்
ஆகியவற்றை உற்பத்தியும்
விற்பனையும் செய்பவர்கள்

T26/T

# "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாயாக!"



"டயர்ஸோல்ஸ்" முறையில், தேய்ந்த டயர்களை புதுப்பிக்க 15 தொழிற்சாலைகள் தென்னகத்தில் இயங்குகின்றன: 16-வது நிறுவனம் துவங்க இருக்கும் நிலையில் பேரன்பு மிக்க வாடிக்கைக் காரர்களுக்கு எங்களது நன்றி கலந்த வணக்கங்கள்.

உங்களது பொன்னான ஆதரவே எங்கள் வளர்ச்சியின் அடிக்கல்

மீண்டும் புதிய மைலேஜ் ஓட்டங்கள், கூடுதலான பாதுகாப்பு, தரமான உழைப்பு ஆகிய எல்லாவற்றையும் புதிய டயர் விலையின் ஒரு பகுதியில் அளிக்கவல்லது

## டயர்ஸோல்ஸ்

## ஸ்டேன்ஸ்டயர்

**அண்டு ரப்பர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்**

திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

தொழிற்சாலைகள் கீழ்க்கண்ட இடங்களில்:-

தமிழ் நாடு:- கோவை, மதருஸ், வேலூர், திருச்சி, சேலம், தூத்துக்குடி, கூனூர்

கேரளம்:- கோட்டயம், கோழிக்கோடு, எர்ணாகுளம், திருச்சூர்.

மைசூர்:- பெங்களூர், மங்களூர்.

ஆந்திரா:- செகந்தராபாத், விஜயவாடா.

EP-STR-25 TAM

''சே, சே, அழக்கூடாது. சின்னப் புவனு அசடா? அம்மா டாக்டர் வீட்டுக்குப் போகிருள்....''

''இல்லே, அம்மா அப்பாவோடு சினிமாவுக்குப் போயிட்டா'' என்று முகமெல்லாம் இரத்தம் குழம்ப அவள் பின்னும் பெரிதாக அழுகிருள்.

குழந்தையின் கூற்றே உண்மையாக இருக்குமோ என்று ஒரு கணம் நாராயணன் தடுமாறுகிருர். அவர் அறிந்த புவனேசுவரி, பொய்யும் கபடும் அறியாத பத்தரை மாற்றுத் தங்கம். அவள் குழந்தையிடம் பொய்யுரைப்பாளோ?

அவர் அந்த அழுகையைச் சமாளிக்க அவளைக் கடைப்பக்கம் கூட்டிச் செல்கிருர். சோடாக் கடையில் நான்கு வாழைப் பழங்களை வாங்கி அதில் ஒன்றை அவளிடம் கொடுக்கிருர். அழுகை நிற்கிறது.

''அம்மா அசடு. நாம் எல்லாரும் நாளைக்குப் போகலாமா, காரில் ஏறிட்டு?'' என்று தனக்குத் தானே கேட்டுக் கேட்டு ஏமாற்றத்தைச் சமாளித்துக்கொள்கிருள் குழந்தை.

வீடு வருமுன் இரண்டாவது பழமும் காலியாகிறது.

வீட்டுக்குத் திரும்பியதும் கால் கழுவிக்கொண்டு, நாராயணன் இராமர் படத்துக்கு முன் விளக்கை ஏற்றுகிருர். பிறகு அடுப்பை மூட்டிக் கஞ்சிக்கு நீர் வைக்கிருர்.

''எனக்கு இன்னும் பழம் தாத்தா .....''

''அப்புறம்'' என்று அவருக்குச் சொல்லக்கூட நாணமாக இருக்கிறது. இன்னொரு பழத்தையும் கொடுக்க வேண்டியிருக்கிறது; அப்படி நச்சரித்துத் தீர்த்துவிடுகிருள்.

பால் சேர்த்த கோதுமைக் கஞ்சி அவருக்கு இரவு உணவு. அதையும் குழந்தை, ''பாயசம் நல்லாயிருக்கு. தாத்தா; இன்னும் கொஞ்சம்'' என்று கேட்டு வாங்கிப் பருகுகிருள். பிறகு உறங்கிப் போகிருள். இருபத்தைந்து வத்தி விளக்கொளியில் அந்தக் குடிலில் ஒரு பாயில் உறங்கும் குழந்தையை அவர் கிளர்ச்சியுடன் பார்க்கிருர். இப்படிப் புவனு எத்தனை நாட்களோ அவருடைய அறையில் படுத்து உறங்கியிருக்கிருள். குழந்தைகள் எல்லாருமே கயமையின் ரேகை படியா உயிர்ப் பூக்கள். அந்தப் பூக்கள் பொய்யாம் உலக நினைவின் புழுதிப் படலத்துக்கு அப்பால் உறங்குகையில் அந்தக் கவடற்ற தன்மையின் அழகை எப்படி விரித்துரைக்க இயலும்?

இரவில் பத்தரை மணி சுமாருக்கு எதிர் வாசல் முகப்பில் கார் வந்து நிற்கும்போது அவர் உறங்கிவிடவில்லை. ஆனல் குழந்தையை எடுத்துச் செல்லப் புவனு வரவில்லை. நாயர் தான் வருகிருன்.

**நா**ட்கள் செல்லுகின்றன. இந்தப் புதிய தலைமுறையின் அநுபவத்தில் அவர் கொஞ்சம் கொஞ்சமாக ஊறுகிருர். முந்திய அநுபவம் கற்கண்டின் இனிமை தோய்ந்தது. இதுவோ....

''இன்னிக்கு எங்கம்மா சாக்லேட் வாங்கித் தந்தா. உனக்குக் கிடையாதே!'' யாரையோ எதற்கோ பழி வாங்குவதைப் போல் சின்னப் புவனு குதிக்கிருள்.

அன்புக்குக் குழையும் மனசு, குழந்தையின் இந்த உணர்வுக்கும் எதிர்க்கொடி காட்டுவதுதான் இயல்பாக வருகிறது.

''இன்றைக்கு நானும் நிறையப் பால் விட்டுச் சர்க்கரை போட்டுப் பாயசம் செய்வேன். உனக்குக் கிடையாதே!''

''நிசமாகவா?''

''ஆமாம். சாயங்காலம்...''

குழந்தை அவரருகில் வந்து நைச்சியமாகக் கழுத்தைக் கட்டிக்கொள்கிருள்.

''எனக்கும் பிடிக்கும். நேத்துப் போல நாம் ரெண்டு பேருந்தானே குடிப்போம்?''

அந்தப் பொன் இளங்குருத்தை, சுருங்கிய விழிகள் ஆற்ருமையுடன் நோக்குகின்றன.

''நீ மட்டும் எனக்கு எதுவும் கிடையாது, தரமாட்டேன் என்று சொல்லலாமா?''

''எங்க வீட்டிலே எங்கம்மா சாக்லேட் வாங்கினு. எங்கம்மாதானே காரிலே போய் எல்லாம் வாங்கரு?''

''உங்கம்மா வாங்கினுல் தாத்தாவுக்குக் கொஞ்சம் கொடுக்கக் கூடாதா?''

''அப்புறம் எங்களுக்கு வேணுமே! மகேஷ், மைதிலி, அப்பா எல்லாருக்கும் வேணுமே!''

''எனக்கும் அதுபோல வேணுமே!''

''உங்களுக்குக் கொடுக்க முடியாது. அம்மா பீரோவில் வச்சுப் பூட்டிடுவா. அப்புறம் அப்பா அடிப்பா.''

அவருக்குக் கொடுக்க முடியாது என்பதற்காக, குழந்தை தன் அறிவுக்கு எட்டியவரையில் சப்பைக் கட்டுக் கட்டும் அதிசயத்தைக் கண்டு அவர் பேச்சற்றுப் போகிருர்.

காலை நேரங்களில் சில நாட்களில் ஏதேனும் பொருள் வாங்க நகருக்குச் செல்ல வேண்டுமானல் புவனு கணவன் அலுவலகம் போகும்போது தானே வண்டியை ஓட்டிக்கொண்டு செல்கிருள். அப்போது சுகன்யாவையும் வண்டியில் அவள் உடன் அழைத்துச் செல்கிருள்.

''நாங்கல்லாம் காரிலே போனேமே! உனக்கு இல்லையே!'' என்று சுகன்யா வண்டியை விட்டு இறங்கியதும் இறங்காததுமாக அவரிடம் வந்து களிக்கூத்தாடுகிருள்.

''என்னையும் ஒரு நாளைக்கு அம்மாவைக் காரில் அழைத்துப் போகச் சொல்லேன். நானும் வருகிறேனே!''

''ஐயோ, எங்க வீட்டுக் காரு. எங்கம்மா ஓட்டுவா.''

'எங்க' என்ற சொல்லில்தான் என்ன அழுத்தம்!

''உங்கம்மா எங்க புவனு. காரு எனக்குந்தான் சொந்தம்!''

''ஆசையைப் பாரு! எங்க வீட்டுக் கார், எங்கம்மா. உனக்கு ஒண்ணும் காரில்லை, வீடு இல்லை, குழாயில்லை, டிரான்சிஸ்டர் இல்லை. நீ ஏழை!'' அவரிடம் இனிமைகளைக் கேட்டு வாங்கிச் சுவைக்கும்போது, குழந்தையின் கவடற்ற தன்மையில் சூதான அறிவின் சாதுரியங்களெல்லாம் துணைக்கு வரும் விந்தை எப்படி நிகழ்கிறது? அந்தப் புவனு ஒரு நாளேனும், 'எங்களுடையது' என்று பிரித்திருக்கிருளோ? அவள் கண்களில் முதலில் அவருடைய ஏழைமைத்தன்மையா பட்டது? அங்கு வேற்றுமைக்கே இடம் இருந்ததில்லையே! அவருக்கு உடல் நலிவுற்றபோது, சின்னம்மாவிடம் சொல்லி, கஞ்சியும் கஷாயமும் வைத்து எடுத்து வரும்படி செய்துவிட்டாளே! சீட்டாட்டம் என்ற ஒரே குறியின்றி வேறு படி நாடாத சக்ரவர்த்தி, ''எப்படி இருக்கிறீர்கள், ஸார்? புவனு சொன்னுள். நம் வீட்டிலே சங்கோசம் வேண்டாம். மிளகு ரசம் வச்சு வரச் சொல்லட்டுமா ஸார்?'' என்று தேடி வந்தது நினைவில் இன்றும் நீருற்ருகக் கசிகிறது.

''நீ அப்படிச் சொல்லக் கூடாது, சின்னப் புவனு, தாத்தாவுக்கும் எல்லாம் தருகிறேன் என்று சொல்ல வேண்டும்'' என்று அவர் நினைவுலகுக்கு இறங்குகிருர்.

''உங்க வீட்டுது உங்களுக்கு. எங்க வீட்டுது எங்களுக்கு.''

''நீ மட்டும் இன்னொரு பழம் கொடு, இன்னும் சர்க்கரைப் பொங்கல் கொடு என்று கேட்டுச் சாப்பிடுகிருயே.''

இந்த விளையாட்டுச் சொல்லுக்கு, சுகன்யா பெரிதாக அடித்துவிட்டாற் போல் அழுகிருள். ''போ, உன் பேச்சுக் கா. நானென்ணும் வரலே!'' என்று உரக்க அழுதுகொண்டு அவள் வீட்டுக்குச் செல்கையில் செய்வதறியாமல் நாராயணன் வெலவெலத்து நிற்கிருர்.

''என்ன மாமா? ரொம்ப விஷமம் பண்ணிவிட்டாளா? அடித்தீர்களாமே?'' என்று கேட்டுக்கொண்டு புவனு படியேறி வருகிருள்.

அவருக்கு நா எழவில்லை. என்ன பச்சைப் பொய்!

''ரொம்பப் பொல்லாது. தாத்தா தாத்தான்னு வீட்டில் எது கொடுத்தாலும் இன்னொரு பங்கு வாங்கிக் கொண்டு இங்கே ஓடி வருகிறது. இப்பப் பெரிதாக அமர்க்களம் செய்கிறது. ஒரு தட்டுத் தட்டினுல் போதும். அப்பா செல்லம் வேறு. குட்டிச் சுவராகப் போகிறது.''

நாராயணன் செவிகளில் விழுவது கனவோ நினைவோ என்ற மலைப்பினின்றும் இன்னமும் மீளவில்லை. தாம் அடிக்கவில்லை என்று சொல்லி, குழந்தை பொய் புகலுகிருள் என்று விளக்க மனம் வரவில்லை. ஆனல் புவனு இன்னும் என்ன கூறுகிருள்? ''எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. காலையில் நாயர் சொன்னுன். மகேஷின் சாப்பாட்டு அடுக்கில் வைக்கும் சிறு கிண்ணம், தாத்தாவுக்குப் பச்சடி என்று வாங்கிப்போச்சு, காணவில்லை என்று. இங்கே இருக்கிறதா, மாமா?'' மயிர்க் காலெல்லாம் பொடிந்துவிடும் போல் இருக்கிறது. தாத்தாவுக்குப் பச்சடியா? இது குழந்தையா அல்லது சூதும் பொய்யும் உருவாகி வந்த பெண்ணு?

''இல்லையேம்மா? அவள் ஒன்றும் இங்கே கொண்டு வரவில்லையே!'' என்று தவிக்கிருர். கிழவனுக்கு நாக்குச் செத்துப் போயிருக்கும், குழந்தையிடம் கேட்டிருப்பான் என்று

எண்ணியிருப்பாளோ என்ற உணர்வு ஆயிரமாயிரம் முட்களாய்ப் பிடுங்குகிறது. அதைச் சிரிப்பால் சமாளிக்கும் மாயம் புரிவதற்கு மிகக் கடினமாக இருக்கிறது.

"கழுதை! வரவரப் பொய் சொல்கிறது. அன்னாசிப் பச்சடி. மூன்று நாளாக வயிறு சரியாக இல்லை. மருந்து கொடுக்கிறேன். தாத்தாவுக்கென்று தானே வாங்கிச் சாப்பிட்டிருக்கும். நானே அதைக் கேட்கத்தான் வந்தேன். தப்பாக நினைக்காதீர்கள் மாமா!"

"என்னம்மா, குழந்தை சொன்னால் அதைப் போய்ப் பெரிதாக்கிக் கொண்டு..." உணர்ச்சியில் சொல் தழுதழுக்கிறது.

புவனாவின் சிரிக்கும் இதழ்கள் சுருங்கி வருகின்றன. அவள் ஜன்னலின் வழியே வெளியே வறண்ட நிலத்தில் மேயும் மாட்டைப் பார்க்கிறாள். அந்தக் குடிலில் புவனா வந்தால் உட்காருவதில்லை. சாய்வு நாற்காலியும் ஒரு மணையுமே அவரிடம் இருக்கின்றன. மணையில் உட்கார அவளுக்குத் தரையில் அமரும் பழக்கமில்லை. சாய்வு நாற்காலியில் அவள் மரியாதை கருதி உட்கார மாட்டாள். காலை நேரத்தில் கணவன் அலுவலகம் சென்ற பிறகே அவள் சில நாட்களில் அங்கு வந்து பார்ப்பாள். மஞ்சளும் குங்குமமும் விளங்க, மூக்குத்திச் சுடர் பொலிய வந்து சிரித்த முகத்துடன் நிற்பாள்.

மாலை நேரங்களில் அவள் செயற்கையான சாய அலங்காரங்களுடன் காரில் அமர்ந்து கணவனுடன் செல்கையில் எட்ட இருந்துதான் கண்டிருக்கிறாரே ஒழிய, நேராகப் பார்த்ததில்லை; அவளும் பேசியதில்லை.

இப்போது பழமையும் புதுமையும் இல்லை. இதுதான் உண்மை என்று மொழிவதுபோல் வெறிச்சிட்ட கோலத்தில் அவள் நிற்கிறாள்.

காதிலும் மூக்கிலும் சுடர் பொரியும் வைரங்கள் இல்லை. பகலுறக்கம் கலைந்து முகம் கழுவியதனால் நெற்றிப் பொட்டின் தடம் மட்டுமே விளங்குகிறது. கழுத்திலுள்ள மங்கல அணி மட்டும் கழுத்தில் மினுமினுவென்று புலனாகிறது. கூந்தலில் எண்ணெய்ப் பசை இல்லாததனால், வெள்ளி இழைகள் நார் நாராக ஊடே தெரிகின்றன. சாயம் பூசிய வழக்கத்தினால் இயற்கைப் பொலிவு தேய்ந்து சோகை வெளுப்பேறிய இதழ்கள்.

"மாமா!"

"என்னம்மா, புவனா?"

"உங்களிடம் வயசுகாலத்தில் நான் அதிக உரிமை கொண்டாடுகிறேன். நீங்கள் தப்பாக...."

"சேசே, என்னம்மா இதெல்லாம்? நீ உரிமை கொள்வது எனக்கு அதிக மகிழ்ச்சி."

"ஒரு மூன்று நாள் நீங்கள் சுகுவைப் பார்த்துக்கொள்ள வேண்டும். மைதிலி மகேஷ்பற்றிக் கவலை இல்லை. நாயர் சமாளிப்பான். அவருக்குப் புதுச்சேரி காம்ப். டிரைவர் வைத்துக் கொண்டு கட்டுப்படியாகவில்லை. அவருக்கு இப்ப, முப்பத்து நாலு வயசிலேயே கண் படலம் என்று சொல்கிறார்கள். இப்போது ஆபரேஷன் செய்ய முடியாதாம். தனியாக வண்டியோட்ட விடுவதற்கில்லை. அதனாலேயே நானும் ஓட்டக் கற்று லைசென்ஸ் வாங்கினேன். அதனால்... போனால் மூன்று நாளாகும்." நாராயணன் அவளையே பார்க்கிறார். ஆனால் அவள் அவரைத் திரும்பிப் பாராமலே பேசுகிறாள்.

"குழந்தைகளை இப்படி அடிக்கடி தனியாக விட்டுப் போக வேண்டியிருக்கிறது. அவருக்கோ முணுக்கென்றால் கோபம் வந்துவிடும். எத்தனையோ தடவைகள் பெரியவர்கள் எவரேனும் வீட்டிலிருந்தால் வசதியாக இருக்குமென்று தோன்றுகிறது. ஆனால்.... இந்தக் காலத்தில் அவரவர் குடும்பமென்று தனித் தனியாகப் போய் விட்டதே தவிர, யார்தாம் பொறுப்பாக உதவுவார்கள்? சின்னம்மா எவ்வளவு அன்பானவள்! அவளைக்கூட என்னால் கொண்டு வைத்துக் கொள்ள முடியவில்லை. அதனால்... மாமா, நீங்க...."

"அதனால் என்னம்மா? நீ இவ்வளவு சொல்ல வேண்டுமா? குழந்தை இருக்கட்டுமே!"

குபீலென்று உயிர்க் கலை வெடித்து உணர்ச்சித் துகள்களாகவே சொற்கள் உருவானாற்போல் ஒலிக்கின்றன அவருக்கு.

அவள் வறட்டு நிலத்தில் மாடு மேய்வதையா பார்க்கிறாள்?

நாராயணன் ஜடமா? அவருக்குப் புரியவில்லையா?

'அப்பா அடிப்பா' என்று பிறருக்கு ஈயக்கூடாத தன்னலச் சிறுமையைக் காக்க ஒரு காரணம் கூறும் பேதைக் குழந்தையின் நிலையில், தான் காரோட்டிப் போக வேண்டும் என்ற காரணத்தைக் காட்டுகிறாள் என்பது அவருக்குப் புரியவில்லையா?

பெண் அன்புவடிவாக, தன்னலம் சிதைந்த தியாகக் கூடுகளாக இல்லங்களை ஆளுகை செய்த தலைமுறையின் குழந்தை அவள்.

அவள் குழந்தை?

அவள் என்ன செய்வாள்? தியாக உணர்வு சிதைந்து, போக உணர்வு ஒவ்வோர் இல்லத்திலும் கடை விரிக்கும் காலமாயிற்றே! தாயாகத் தன்னை நினைக்கும் உணர்வின் ஈரக் கசிவுகளை, ஆடம்பரத் தேவைகளின் இருப்பிடமான அதிகாரப் பதவியில் உள்ள ஒருவனின் மனையாள் என்ற செயற்கை வாழ்வு வறட்டி விடும் நிலையில் அவள் என்ன செய்வாள்?

**மா**லை ஐந்தரை மணி. வாசல் முகப்பில் கார் நிற்கிறது. கனத்த மூக்குக் கண்ணாடி அணிந்திருக்கும் கணவன், உயர்ரகத் துணியில் சட்டையும் சராயும் மடிப்பு அலுங்காத நேர்த்தியைக் காட்ட, ரோமமடர்ந்த கையில் விளங்கும் பெரிய கடிகாரத்துடன், விரல்களுக்கிடையில் புகையும் சிகரட்டுடன் நிற்கிறான். சிறிய கைப்பெட்டி ஒன்றை நாயர் வண்டியில் கொண்டு வைக்கிறான். சுகன்யாவின் அழுகுரல் கேட்கிறது. பளபளவென்ற சேலை அணிந்து, இசைந்த கைப்பை கைவளையத்தில் தொங்க, புவனாவும் வருகிறாள். சுகன்யாவை நாயர் தூக்கி இறுகப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறான்.

புவனாவோ இளம் புரட்சிக்காரனைப் போல் முரண்டு பிடிக்கும் பையனுக்கு ஆறுதல் கூறிக்கொண்டிருக்கிறாள். பையனின் முகத்தைப் பார்த்தால் வெறி திரண்டு, ஜன்னல் கண்ணாடியையோ, சுவரையோ, கதவையோ, அகப்பட்டவரையோ அடித்துத் தீர்த்துவிடுபவன்போல் தோன்றுகிறது.

நாயரிடம் கைப் பையைத் திறந்து ஏதோ ரூபாய் நோட்டுக்களைக் கொடுக்கிறாள்.

"என்ன நான்சென்ஸ், புவனா? உன்னிடம் கண்டிப்பே கிடையாது!" என்று கணவன் வண்டியில் அமர்ந்து உறுமுகிறான்.

அவள் நாயரிடம் எதற்கோ கைகாட்டிவிட்டு வண்டியிலேறி உட்கார்ந்து கொள்கிறாள். வண்டி உடனே கனவுலக ஊர்தி போல் தெருவில் ஓடி மறைகிறது.

நாராயணனின் சிந்தையைச் சுகன்யாவின் அழுகை ஒலிதான் பிடித்து இழுக்கிறது. "அம்மா விட்டுட்டுப் போயிட்டா. நானும், நானும்..." என்று சிறு நெஞ்சம் எழும்பித் தணியக் குழந்தை விசும்பி அழுகிறாள். அவர் அவளைத் தூக்கிக் கொண்டு முகத்தை மேல்துண்டினால் துடைக்கிறாள்.

"நாம் பார்க்குக்குப் போவோமா? பஸ்ஸிலே போகலாமா? இன்றைக்குச் சுகுவுக்குக் கிளி காட்டுவேனே, பச்சைக்கிளி! சிவப்பு மூக்கும் பச்சைச் சிறகுமாக, கீ கீ என்று கத்துமே!"

பலபல நய உரைகள் அந்தச் சிறு நெஞ்சுக்கு ஆறுதலாக வருகின்றன. நாராயணன் தம் முதிய உடலோடு அந்தக் குருத்தை இறுக அணைத்துக் கொள்கிறார்.

எனினும் ஒரு தாயின் வெம்மையோடு கூடிய இதத்தை அவரால் ஊட்ட இயலுமோ? குழந்தையின் பளிங்கு மனசில் பொய்யையும் கயமையையும் இயல்பே போல் படியவிடும் வாழ்வை மாற்றி வைக்க இயலுமோ? நாயர் கதவைப் பூட்டிக்கொண்டு வந்து அவரிடம் சாவியைக் கொடுக்கிறான். அறிவின் வரம்பை ஏன், எப்படி என்று விரிவாக்கிக்கொள்ளத் துடிக்கும் சிறுவர் இருவரையும் உள்ளூர்த் தியேட்டரில் ஓடும் ஏதோ ஒரு களியாட்டப் படக்காட்சிக்கு அழைத்துச் செல்கிறானாம். இல்லாவிட்டால் அன்று வீடு இரண்டாகி விடுமாம், பையனின் வெறிக் கோபத்தினால்.

சுகன்யா அழுது அழுது அப்படியே உறங்கிப் போகிறாள். அவளைப் பாயில் விட்டு, இராமர் படத்துக்கு முன் நாராயணன் விளக்கேற்றி வைக்கிறார். மாலைப் பிரார்த்தனையின் சொற்கள் நாவினின்று பிரிந்து வரவில்லை. உணர்ச்சி அழுந்தப் படிந்த பூவிதழ்களின் அடுக்கு மொட்டாகச் சொற்களைக் குவித்துவிடுகிறது.

"இறைவனே, மக்களின் துயரங்களைப் போக்குவாயாக!" என்ற ஒரு மித்த பிரார்த்தனையாக உள்ளம் குவிகிறது. ★


"எங்க மாப்பிள்ளை
ரொம்ப மாடர்ன்.
அவருக்கு ரொட்டி
மட்டும்தான் பிடிக்குமாம்"
"மாடர்ன்" ரொட்டி
உடல் வலிமைக்கும்
வளர்ச்சிக்கும் உகந்தது
EP-MB-M-9

## YOU AND THE RAINBOW

Man began to love the rainbow from the very first day he cast his eye on that splendour.

But then he knows two rainbows —the alluring Rainbow of the sky and the Rainbow of the enchanting world of the Graphic Arts.

For almost a quarter of a century now Rainbow is doing the best in the service of the Graphic Arts. Rainbow's quality inks have given a new meaning and colour to the artist's dreams. Above all, Rainbow inks have given the best in printing values.

**Rainbow Ink & Varnish Mfg. Co. Pvt. Ltd.**

**133-C, VAKOLA, SANTACRUZ (EAST), BOMBAY-55**

Grams : **'RAINBOINK'** Phone : **533234-533235**



# கோடுகளைத் தாண்டாத கோலங்கள்



## ஜெயகாந்தன்

அந்த ஊர் மிகவும் அழகான ஊர். அந்த ஊருக்கே அழகு தருவது, அந்த அக்கிரகாரந்தான். ஏகதேசம் ஐம்பது வீடுகள் இருக்கும். பெரிய பெரிய திண்ணைகளும் ரேழிகளும் உள்ள வீடுகள். அவற்றில் சில சிறியவையாக இருந்தாலும் திண்ணைகளெல்லாம் பெரியனவாகவே இருக்கும். தெருவும் அதிக அகலமாயிருக்கும். தார் ரோடு கிடையாது. பல காலம் நடந்து நடந்து மிருதுவாகிப்போன, நடப்பததற்குச் சுகமான மண்சாலை. திருவிழாக் காலங்களில் இந்தத் தெரு வழியாகத் தேர் வரும். வருஷத்துக்கு ஒரு முறைதான் தேர் வரும் என்றாலும் தெரு நிரந்தரமாகவே அகலமாக இருந்தது. இரண்டு பக்கமும் வீடுகளை ஒட்டி வேப்ப மரங்களும், பவளமல்லிகை மரங்களும், உயரம் குறைவான தென்ன மரங்களும் வரிசையாக நின்று நிழல் தந்துகொண்டிருக்கும்.

தெருக் கோடியில் ஒரு கோயில் உண்டு. அந்தக் கோயிலுக்கு மாலை நேரங்களில் பெண்கள் வருவார்கள். பகலில் மாட்டுக்காரச் சிறுவர்களும் நோயாளிப் பிச்சைக்காரர்களும் விளையாடிக்கொண்டோ தூங்கிக்கொண்டோ பொழுதைக் கழிப்பார்கள். கோயிலுக்குப் பின்னால் உள்ள, ஏகாந்தமான அந்தப் பெரிய குளத்தில், ஊரின் இதயத் துடிப்பு மாதிரி சதா துணி துவைக்கும் சப்தம் கேட்டுக்கொண்டிருக்கும். அந்த ஊருக்கு அந்தக் குளம் மிகவும் பெரிசு! அந்தக் குளத்தை நடுநாயகமாகக் கொண்டுதான் ஊர் அமைந்திருக்கிறது. குளத்தின் கிழண்டைப் புறந்தான் கோயிலும், அந்தக் கோயிலிலிருந்து தொடங்கும் அக்கிரகாரமும் அமைந்திருக்கின்றன.

குளத்தின் தென்பகுதியில் வேளாளர்களும், செட்டிமார்களும், அக்கிரகாரத்தில் இருப்பவர்களைக் காட்டிலும் சற்று வசதி படைத்த பிராமணர் அல்லாதாரும் வாழ்கின்றனர். வடவண்டைப் புறத்தில், ஒழுங்கும் சுத்தமும் இல்லாத முறையில் பல சிறு தெருக்களும் குடிசைகளும் நிறைந்த ஒரு பகுதியிலே எந்த நேரமும் செக்கு ஆடுகின்ற சப்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். அந்தப் பகுதியில்தான் மீன் மார்க்கெட்டும் துலுக்கர் தெருவும் இருக்கின்றன. அங்கேதான் ஜன நடமாட்டமும் இரைச்சலும் அதிகமாயிருக்கும். கடைத் தெரு, சினிமாக் கொட்டகை, கச்சேரி ஆபீஸ்கள், பஸ் ஸ்டாண்டு எல்லாம் அந்தப் பக்கந்தான். அந்தப் பகுதியில் இட நெருக்கடி அதிகம் ஏற்பட்டதன் விளைவாக ஊரின் கிழண்டை எல்லையில் வேளாளர் தெருவும் அக்கிரகாரமும் இணைகின்ற ஊர்க்கோடியில் உள்ள திடலில் எங்கிருந்தோ வந்து அந்த ஊரில் குடியேறிய சில முஸ்லிம்கள் சிறிய குடிசைகளையும் கூடாரங்களையும் கட்டிக்கொண்டனர். அவர்களில் மருந்து விற்பவர்களும் மாந்திரிகம் செய்பவர்களும் ஒரு கசாப்புக் கடைக்காரனும் உண்டு. அங்கு வாழ்ந்த மனிதர்களை விட, அவர்கள் வளர்த்த ஆடுகளின் தொகையே அதிகம்.

அக்கிரகாரத்தில் இருப்பவர்களுக்கு அவர்களைக் கண்டாலே பயம். அவர்கள் நாடோடிகளாதலால் திருடர்களாய்த்தான் இருக்க வேண்டும் என்று ஒரு மூட நம்பிக்கை;

அந்தப் பயம் கலந்த ஆர்வத்தோடு, பள்ளிக்கூடம் இல்லாத லீவு நாட்களில் அக்கிரகாரத்துச் சிறுவர்கள் அந்தத் திடலுக்கு வந்து அவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார்கள். திடலில் இருப்பவர்களும் வேடிக்கையாக அவர்களைப் பயமுறுத்துவார்கள். "ஆட்டுக் கறி வேண்டுமா, மாட்டுக்கறி வேண்டுமா?" என்று அந்தப் பிராமணப் பிள்ளைகளைக் கிண்டல் செய்து சிரிப்பார்கள். பகல் நேரத்தில் அங்கே ஆண்களே இருக்க மாட்டார்கள். குழந்தைகளை அழைத்துக் கூவியவாறும், தரையில் தேய்கிற மாதிரி மடி கனத்த ஆடுகளிடம் பால் கறந்தவாறும், மரத்தடியில் சமையல் செய்தவாறும் இருக்கின்ற பெண்களின் நடுவே கலகலப்பு மிகுந்திருக்கும். அவர்களின் கால்களில் நடக்கும்போதெல்லாம் அதிர்ந்து அதிர்ந்து ஒலி எழுப்புகிற விநோதமான பெரிய பளபளப்பான வெள்ளித் தண்டைகளும் அவர்களின் ஆடை அலங்காரங்களும் பார்க்க வேடிக்கையாகவும் இருக்கும்; அழகாகவும் இருக்கும். அந்த ஊருக்கே தனிக் கவர்ச்சி தருபவர்கள், இந்தத் திடலிலே இருக்கும் நாடோடிப் பெண்களும், அக்கிரகாரத்திலே இருக்கும் பிராமணப் பெண்களுமே.

இவ்வளவு கவர்ச்சி மிகுந்த அந்தத் திடல்வாசிகளைக் குறிப்பிட்டுத்தான், அக்கிரகாரத்தில் அழுகிற பிள்ளைகளைப் பயமுறுத்துவார்கள். சாப்பிடுவதற்கு அடம் பிடிக்கும் குழந்தையிடம் 'கடா மீசைக்காரன் வருகிறான்' என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்; ஒரு கிண்ணம் சாதத்தையும் முனகல் இல்லாமல் குழந்தை சாப்பிட்டு முடிக்கும்.

அந்தக் கடாமீசைக்காரன்தான் அந்தத் திடலிலே வசிக்கும் கசாப்புக்காரன்.

அக்கிரகாரத்துக் குழந்தைகளின் மத்தியில் அவனைப்பற்றிய பயம் கலந்த கற்பனைக் கதைகள் ஏராளம். அவர்களுக்கெல்லாம் அவனை அறிமுகம் செய்வித்தவர்கள் அந்தக் குழந்தைகளின் தாய்மார்களே ஆவர். அவனைப் பற்றி எதைச் சொன்னாலும் குழந்தைகள் நம்பும்படியாக அவனது தோற்றப் பொலிவு திகழ்ந்தது. அந்தக் குழந்தைகள் தினசரி பழகி வருகிற பெரியவர்கள் எல்லாரையும்விட அவன் உருவத்தில் பெரியவனாக இருந்தான். தெருக்கோடியில் தென்னங்கீற்றால் கூரை வேயப்பட்டு மண்ணில் அழுந்திக் கிடக்கின்ற - ஆண்டுக்கொரு முறை நூறு பேர் சேர்ந்து இழுக்கின்ற - அந்தத் தேரை அவன் ஒருவன் மட்டுமே இழுத்து விடுவான் என்று சொன்னால் அந்தக் குழந்தைகள் நம்புகின்ற அளவுக்கு அவன் பலாட்டியனாக இருந்தான்.

அவன் தினசரி காலையில் தனது துருப்பிடித்த பழைய சைக்கிளில் அந்த அக்கிரகாரத்தைக் கடந்து போவான். அக்கிரகாரத்துக் கோடியில் கீழ்த்திசையில் மூங்கில் புதர்களுக்குப் பின்னால், வானம் சிவந்து சூரியன் உதயமாகின்ற நேரத்தில் அவனது சைக்கிள் அந்தத் திடலிலிருந்து அக்கிரகாரத்துக்குள் பிரவேசிக்கும். அக்கிரகாரத்துக்குள் நுழைவதற்கு முன்னால், அந்த முனையில் சற்று நிற்கும். அவனுடைய உயரத்துக்கு அந்தச் சைக்கிள் மிகவும் சின்னது. அவன் எந்தப் பக்கமும் கொஞ்சங்கூடச் சாயாமல், இரண்டு கால்களையும் அகற்றித் தரையில் பதித்தவாறே சைக்கிளில் நிற்பான். கையிலிருக்கின்ற பீடியை அவசர அவசரமாக ஆழ்ந்து இரண்டு முறை புகையுறிஞ்சி, தூக்கி எறிந்துவிட்டு அதற்குப் பின்புதான் அக்கிரகாரத்துக்குள் நுழைவான்.

அவன் வருகிற நேரத்தில் அக்கிரகாரத்துப் பெண்கள், வாசலுக்கு நீர் தெளித்துக்கொண்டும் கோலமிட்டுக் கொண்டும் இருப்பார்கள். அவர்களில் பல பேர், தங்கள் வீட்டுக் குழந்தைகளைப் பயமுறுத்துவதற்காக, 'கடா மீசைக்காரன்' என்று அவன் பெயரைக் குறிப்பிடுவார்களேயொழிய அவனைப் பார்க்க வேண்டும் என்கிற அளவுக்குக்கூட அவனுக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை.

அவ்விதம் ஒரு நாள் காலை நேரத்தில் வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்த வாத்தியார் சங்கரையர் மகள் மீனு சைக்கிள் சத்தம் கேட்டு, குனிந்த தலை நிமிராமல் புருவத்தை மட்டும் உயர்த்தியபொழுது, அவனுடைய பாதங்களைப் பார்த்து அதன் பிறகு ஆளைப் பார்க்க வேண்டும் என்று நிமிர்ந்தே நின்றாள். சைக்கிளில் போகிறவன் யாரோ அக்கிரகாரத்தைச் சேர்ந்தவன் என்ற நினைப்பில் அவனைப் பார்க்கத் துணிந்த மீனுவுக்கு, மாற்று மதத்தினன் என்பதனால் முகத்திலே லேசாகச் சுருக்கம் கண்டது. ஆனாலும், அந்த விநோதமான அந்நியனின் காம்பீரியம், அவன் தெருவின் கடைசியில் திரும்புகிறவரை அவளைப் பார்க்க வைத்தது.

திடலிலே வந்து குடியேறியிருக்கிற நாடோடிக் கூட்டத்தைப்பற்றி அவளுக்குத் தெரியாது. அவள் இவ்வளவு காலம் புக்ககத்தின் கொடுமைச் சிறையில் கட்டுண்டு கிடந்து, முதல் நாள்தான் பிறந்தகத்துக்கு நிரந்தரமாக விரட்டப்பட்டு விட்டவள். அதிலே அவளுக்குக் கொஞ்சம் சந்தோஷமுங்கூட. அவளது பரிதாபகரமான அந்த ரங்க வாழ்க்கையின் அவலம் நிறைந்த ஏமாற்றம், அடிக்கடி புருஷர்களைப் பார்க்க வைத்தது; சில சமயங்களில் பார்த்துப் பார்த்துப் பெருமூச்செறிய வைத்தது.

பத்து வருஷம் வாழ்ந்து, எட்டு வயதுக்கு ஒரு பிள்ளைக்குத் தாயுமாகிவிட்ட அவளை, அவள் புருஷன் தள்ளி வைத்துவிட்டான். வாத்தியார் சங்கரையரின் மனைவியும் அண்மையில் காலமாகிவிட்டதனால், அவருக்குப் பொங்கிப் போடுவதற்கு ஒரு துணையும் வேண்டியிருந்ததனால், தந்தைக்கு மகளாகவும் பிள்ளைக்குத் தாயாகவும் வாழ்க்கையின் ஒரு தொழுவத்திலிருந்து இன்னொரு தொழுவத்துக்கு மாற்றப்பட்ட அந்தப் பிரஷ்டம் அவளுக்கு ஒரு நிம்மதியையே தந்திருந்தது. அதற்குக் காரணம் இந்தத் தொழுவம் பழகிய பழைய தொழுவம் என்பதே.

அதுவுமல்லாமல் மீனுவின் புக்ககம் தஞ்சாவூரில் இருந்தது. தஞ்சாவூர் சந்துகளுக்குப் பேர் போன ஊர். சின்னச் சந்தாக இருக்கும். அதற்குள் அரண்மனை மாதிரி வீடு இருக்கும். மீனுவோ கோலம் போடுவதை ஒரு வாழ்க்கையாகக் கொண்டவள். அவளது கோல நோட்டுகள் அந்த அக்கிரகாரம் முழுமையும் பிரசித்தம். சதா நேரமும் தன் மனத்தின் பூச் சிதறல்களை எல்லாம் புதுப் புதுக் கோலங்களாக நோட்டுப் புத்தகத்தில் வரைந்துகொண்டே இருப்பாள். வயது முதிர்ந்த கிழவிகளிலிருந்து சிறுமிகள் வரை மீனு வரையும் கோடுகளை வியந்து வியந்து பாராட்டுவார்கள்.

அந்த அக்கிரகாரத்தின் அகலமான தெருவிலேயே அவளுக்குக் கோலம் போடும் விஸ்தீரணம் போதாது. அடுத்த வீட்டுக்கும் தன் வீட்டுக்கும் நடு விதிக்கு எல்லை வகுப்பது மாதிரி கோலக் குழலால் முதலில் 'பார்டர்' கட்டிக் கொள்ளுவாள். இந்தப் பெரிய விஸ்தீரணத்தில் அவள் கோலமிட்டு முடித்துத் தலை நிமிரும்போது சில சமயங்கள் வெயில் குளக்கரையின் ஓரத்தில் உள்ள மூங்கில் புதரைத் தாண்டி மேலேறி வந்து விடும்.

அப்படிப்பட்ட சுகாநுபவத்துக்குத் தஞ்சாவூரின் சந்துகளில் வாய்ப்பில்லை.

பிறந்த வீட்டுக்கு வந்தவுடன் 'அப்பாடா! இனிமேல் கோலம் போடலாம்' என்று சந்தோஷப் பெருமூச்சு விட்டாள் மீனு.

சமைக்கின்ற நேரம் போக நாளெல்லாம் கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு கோலம் வரைவாள் மீனு. சில சமயங்களில் திண்ணையில் வந்து தூணைக் கட்டிக்கொண்டு, தான் காலையில் தெருவில் வரைந்த கோலம் பலரின் பாதத்தால் மிதிபட்டுப் போயிருக்கிற சோகத்தை உணர்வதுமாதிரி பார்த்துக்கொண்டிருப்பாள்.

கோலம் மட்டுமா மிதிபடுகிறது?

அக்கிரகாரத்தில், பாலியப் பருவத்தில் அவளோடு விளையாடிய, பழகிய, பரிகாசம் செய்த அந்தப் புருஷப் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் இன்றைக்கு ஒவ்வொருத்திக்கு எவ்வளவு நல்ல புருஷர்களாக மாறிவிட்டனர்! தன்னுடைய தலைவிதி தன்னை எப்படியெல்லாம் ஆக்கி மறுபடியும் இங்கேயே கொண்டு வந்து தள்ளிவிட்டது என்ற ஏக்கத்தோடு அவர்களை அவள் அடிக்கடி பார்த்துப் பெருமூச்செறிவாள். அந்தப் பெருமூச்சுத்தான் அந்தத் தனிமைத் தொழுவத்தில் அவளுக்கு நிம்மதி அளித்தது. அப்படி ஓர் உணர்வில்தான் அன்று தலைநிமிர்ந்து அந்த அந்நிய மதத்தானைப் பார்த்து, ஆனால் பெருமூச்சு ஏதும் இன்றி, ஒரு வேடிக்கையாகவே ரசித்து நின்றாள்.

முப்பது வயதிலேயே தாம்பத்திய வாழ்க்கை முடிந்துவிட்டது என்ற தீர்ப்பைச் சுமந்து பிறந்தகத்துக்கு வந்து விட்டவளுக்கு, பிறரைப் பார்க்கக்கூடவா உரிமை இல்லை? ஆனால், பிராமண குலத்தில் பிறந்த ஒருத்தி, மாற்று மதத்தினனைப் பார்த்துப் பெருமூச்சுவிடலாமா, என்ன? எனவே, அவளுக்கு அவனைப் பார்த்துப் பெருமூச்சுப் பிறந்ததே இல்லை. எனினும் அவனை அவள் பார்ப்பாள்.

அவள் குனிந்த தலை நிமிராமல் கோலமிட்டவாறே, சைக்கிள் பெடலை மிதிக்கின்ற, கனத்த பூட்ஸ் அணிந்த, முழங்காலுக்கு மேல் லுங்கியின் கரை ஏறிய, ரோமம் செறிந்த அவன் கால்களை மட்டும் பார்ப்பாள். சில சமயங்களில் அவன் தன்னைக் கடந்த பிறகு நிமிர்ந்து நின்று, அந்தச் சின்னச் சைக்கிளில் ஆஜானுபாகுவாகப் போகின்ற அவன் பின்புறத் தோற்றத்தைப் பார்ப்பாள். அவன் புகை நிறத்தில் ஒரு மஸ்லின் ஷர்ட் அணிந்திருப்பான். முதுகில், உள்ளே போட்டிருக்கும் வெள்ளைப் பனியன் அவனது புஜங்களின் அகலத்தை எடுத்துக் காட்டும். நாலு அங்குலத்துக்கு மேல் பட்டையான பெல்ட்டும் தெரியும். பெண்கள் கட்டுகிற புடைவை மாதிரி, ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வர்ணத்தில் அவன் லுங்கி கட்டுவான்.

சில சமயங்களில் குளத்தில் குளித்துவிட்டு வருகையில் எதிர்ப்படுகிறபோது அவன் தோற்றத்தை முழுமையாகவே அவள் பார்ப்பாள். ஏனெனில் அவன் அவளைப் பார்ப்பதில்லை; அதனால் அவள் அவனைப் பார்க்க முடிந்தது. அவன் மாற்று மதத்தினன் ஆனாலும், ஏதோ ஒரு கோயிலைக் கடந்து போவது போல, பவ்வியமாக அந்த அக்கிரகாரத்தைக் கடந்து போவான். சைக்கிளுக்கு 'ஹாண்ட் பார்' மாதிரி அவன் முகத்தில் அந்த மீசை காதுவரைக்கும் குறுக்கே நீண்டிருக்கும். அவன் வயசு முப்பதுக்கு மேலே நாற்பதுக்குள் என்கிற இரகசியம் பிறருக்குப் பிடிபடாமல் அந்த மீசையின் பின்னால் ஒளிந்து கிடந்தது. தலைநிறையச் சுருண்டு வளர்ந்த முடி பிடரியில் வழியும். அவனுக்கு மீசை மாதிரியே புருவமும் அடர்த்தி. அவன் கண் பெரிதாகவே இருக்கும் என்று உணர்த்துகின்ற முறையில் விழிகளின்மீது படிந்து படர்ந்த இமைகள். பருத்து, நரம்புகள் புடைத்த கழுத்தில், வெள்ளியில் பிறை மாதிரியும் சிறிய காசுகளும் தாயத்தும் கோத்துக் கட்டிய கறுப்புக் கயிறு. அவனது அகன்ற நெஞ்சில் பிலுபிலுவென்று முளைத்த ரோமம். அவன் சிவப்பு நிறமோ கறுப்பு நிறமோ அல்ல; மஞ்சள். அவன் சைக்கிளில் வரும்போது எதிரே இருந்து பார்க்க விநோதமாயிருக்கும். அவனது நீண்ட முழந்தாள்கள் 'ஹாண்ட் பாரி'ல் இடிக்கும். எனவே அவன் கால்களைச் சற்று அகற்றியே சைக்கிளை மிதிப்பான்.

அந்தச் சைக்கிளின் ஹாண்ட் பாரில் ரத்தக் கறை படிந்த-சமயங்களில் ஈ மொய்க்கின்ற-ஒரு சிறிய காக்கி நிறப் பை தொங்கும். அதன் உள்ளிருந்து, பையின் விளிம்புக்கு மேலே அவனது கசாப்புக் கத்தியின் மரத்தாலான கைப்பிடி தெரியும். அந்தக் கைப்பிடியைப் பார்க்கும் போதே, அந்தக் கத்தியின் பயங்கரம் பார்ப்பவர்களின் கற்பனையிலே வரும்.

கோலம் போட்டுக்கொண்டிருக்கிற, குளத்தில் குளித்துவிட்டு வருகிற, காலை நேரத்து அக்கிரகாரத்துப் பெண்களைக் கடந்து, தெருவின் மறுகோடிக்குப் போனதும், மீண்டும் அவன் எந்தப் பக்கமும் கொஞ்சங்கூடச் சாயாமல், இரண்டு கால்களையும் அகற்றித் தரையில் பதித்தவாறே சைக்கிளில் நிற்பான். நின்று, ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டபின் அக்கிரகாரத்தின் பார்வையிலிருந்து மறைவான்.

மாலையில் அவன் வீடு திரும்புகிற நேரத்தில் அக்கிரகாரத்துத் தெருவிலே சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருப்பார்கள். அங்கும் இங்கும் பெண்கள் தண்ணீர்க் குடத்துடன் தென்படுவார்கள். விளையாடிக்கொண்டிருக்கிற சிறுவர்கள், அவனைக் குறித்து இரகசியமான குரலில் அவனைப் பற்றிய தங்கள் கற்பனைகளைப் பரிமாறிக்கொள்வார்கள்.

அவன் ஆடுகளை எல்லாம் காதைப் பிடித்து ஒரு கையால் தூக்கிச் 'சரக்' கென்று கத்தியால் அறுத்துவிடுவானாம். அந்த ஆட்டின் உடல் அவன் காலடியில் விழுந்து துடிக்குமாம். அவன் வீசியெறிந்த ஆட்டுத் தலைகள் அம்பாரமாகக் குவிந்து போகுமாம். ஒரு நாளைக்கு ஆயிரம் ஆடுகளை வெட்டுகிறானாம். ஆடுகள் என்ன, அதே மாதிரி மாடுகளையும் வெட்டுவானாம். அவன் உடம்பு அந்த மாதிரி இருப்பதற்குக் காரணமே அவன் ஒரு நாளைக்கு மூன்று ஆடுகளைச் சாப்பிடுவதனால் தானாம். அவனை எதிர்த்து சண்டை போட்டு யாராலும் ஜயிக்க முடியாதாம்!

இப்படியெல்லாம் தங்கள் கற்பனைச் சரட்டை அவர்கள் முறுக்கிக்கொள்வார்கள். அந்த அக்கிரகாரத்தைக் கடந்து போவதற்குள்ளாக ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு வீட்டிலிருந்து, ''ஏ சாயபு, இவனைப் புடிச்சிண்டு போ!'' என்று குழந்தைகளை மிரட்டுகின்ற குரல் கேட்காமல் இருக்காது. சில சமயங்களில் ரேழித் தூணை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு வர மாட்டேன் என்று அலறி அழுகின்ற குழந்தையைப் பற்றி இழுத்து, ''இன்னைக்கு உன்னைச் சாயபுகிட்டே புடிச்சுக் குடுத்திடறேன். இந்தா சாயபு!'' என்று பயமுறுத்துகின்ற தாய்மார்களையும் அவன் பார்ப்பான். பார்த்து மனத்தில் சிரித்துக்கொண்டே போவான். அவன் முகத்தில் மட்டும் அந்தச் சிரிப்புத் தெரியாது.

மீனாவின் பையன் பாபுவுக்குக் கடா மீசைக்காரன் பேரைக் கேட்டாலே குலைநடுக்கம். அவன் வருகிறபோது தெருவில் விளையாடிக்கொண்டிருந்தால்கூட, ''அம்மா, கடா மீசைக்காரன் வரான்; கடா மீசைக்காரன் வரான்'' என்று கூவிக் கொண்டே வீட்டுக்குள் வந்துவிடுவான். அவனது பயத்தையும் அலறலையும் கண்டு சிரித்தவாறே, வெளியில் வந்து நின்று பார்ப்பாள் மீனா. அப்பொழுது அந்தக் கடா மீசைக்காரனும் அவளைப் பார்ப்பான். ஆனால், அவளது சிரிப்பை அவன் அடிக்கடி சந்திக்க நேர்ந்தபோதிலுங்கூடப் பதிலுக்கு அவன் சிரித்ததில்லை.

தங்கள் நாடோடிக் கும்பலில் தான் எப்பொழுதோ எங்கோ சந்தித்த ஒருத்தியின் முகச்சாயலை இவளில் அவன் அடையாளம் கண்டான். சம்பந்தமே இல்லாத அந்த ஒற்றுமையின் விசித்திரத்தை எண்ணி அவன் வியப்படைந்தான்.

தினசரி தங்கள் பிள்ளைகள் செய்யும் குறும்பையும் அடத்தையும் ஒரு வியாஜமாகக் கொண்டு, ''ஏ சாயபு! ஏ சாயபு!'' என்று அவனுக்குப் பல விடுகளிலிருந்து அழைப்புகள் வந்தபோதிலும், அப்பொழுதெல்லாம் திரும்பிக்கூடப் பார்க்காதவன், இப்போதெல்லாம், வாத்தியார் சங்கரையரின் வீட்டைக் கடக்கும் போது, எந்த வித அழைப்பும் இல்லாமலே லேசாகத் தலை திரும்பிப் பார்க்க ஆரம்பித்தான். அப்போதெல்லாம் அங்கே மீனா நின்றிருப்பாள்.

தங்கள் நாடோடிக் கும்பலில் தான் எப்பொழுதோ எங்கோ சந்தித்த ஒருத்தியின்.....

அது வாத்தியார் சங்கரையரின் வீடு என்றெல்லாம் அவனுக்குத் தெரியாது. அந்த வீட்டின் அடையாளமே அவனுக்கு அவள்தான். ஏதோ ஒரு நாள் அவன் அங்கே பார்க்கையில், என்ன காரணத்தினாலோ அவள் அங்கு இல்லாத போது, அது எந்த விடு என்றே தெரியாமல் அவன் குழம்பிப் போனான். பின்பு, அடுத்த முறை அந்த வீட்டில் அவளைப் பார்த்தபோது தான் தூணிலே கட்டியிருக்கிற சிவப்பு நிறத் தபால் பெட்டியை இன்னும் ஓர் அடையாளமாக அவன் தெரிந்து கொண்டான்.

சில சமயங்களில் மீனா நினைத்துக் கொள்வாள். 'இவனைக் கண்டு பாபுவும் அக்கிரகாரத்துக் குழந்தைகளும் ஏன்தான் பயப்படுகிறார்களோ?'

அவனது பெரிய கடா மீசை நினைவுக்கு வந்து அவளுக்கு ஏற்படும் இந்த வியப்பை மாற்றி, குழந்தைகளுக்கு ஏற்படும் பயத்துக்கு நியாயம் சொல்லும்.

தொடர்ந்து அவள் நினைப்பாள்: 'அவனுக்கு அந்த மீசை இல்லாவிட்டால்...? யாராவது அவனுக்கு அந்த மீசையை எடுத்துவிடச் சொல்லி யோசனை சொன்னால், அநியாயமாகப் பயந்து சாகிற குழந்தைகளுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும்! ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இதை அவனுக்குச் சொல்லிவிட வேண்டும்!' என்று பின்னிப் பின்னி வருகிற அவளது நினைவை, 'அட அசடே, எனக்கு இருக்கிற கவலையிலே இவன் மீசையைப் பற்றி என்ன இப்படி ஒரு யோசனை!' என்று தன்னையே நோக்கிச் சிரிப்பதன்மூலம் தவிர்த்துக் கொள்வாள்.

**அ**க்கிரகாரத்துச் சிறுவர்கள் சிலபேர் கூடி, திடலுக்கு வேடிக்கை பார்க்க வந்தார்கள். அந்தக் கும்பலில் ஒருவனாகப் பாபுவும் அங்கு இருந்தான். ரசமான விஷயங்களிலும், விரசமான விஷயங்களிலும் ஈடுபாடு காட்டுவது மனித இயல்பு. முதிர்ந்தவர்கள், விரசத்தில் வருகிற ஈடுபாட்டை மறைத்துக் கொள்வதில் சமர்த்தர்கள். குழந்தைகளுக்கு அந்தச் சாமர்த்தியம் கிடையாது. எனவேதான், திடலின் நடுவே, ஓர் ஓலைப் பாயில் மாமிசத்தை மலைபோல் குவித்து ஒரு கிழவன் அவற்றை வெட்டிக் கூறுபோட்டு அங்கிருந்த குடும்பங்களுக்கு விநியோகம் செய்துகொண்டிருந்த காட்சியை வேடிக்கையாக

அந்தப் பிராமணச் சிறுவர்கள் பார்த்தார்கள். அந்த அநுபவம் அவர்களுக்கு மிகவும் சுவாரசியமானதாகவும், உடம்பைக் கூசச் செய்யும் பரவசம் நிறைந்ததாகவும் இருந்தது.

அது ஆடா அல்லது மாடா என்கிற இரகசியமான சர்ச்சையும் அவர்களுக்குள் நடந்தது.

''இதை அப்படியே நெருப்பிலே போட்டுச் சுட்டுத் திம்பாளோ?''

''இல்லேடா. நம்ம ஆத்துல கறிகாயெல்லாம் சமைக்கிறுளே, அந்த மாதிரி சமைப்பா!''

''சீச்சி! நான் பாத்திருக்கேனே, வத்தல் போடுவா!''

''நாத்தம் நாறுதோ?''

''என்னத்துக்கு இப்பிடிப் பண்று?''

''இது பாவமில்லையோ?''

''ஒருவேளை தின்னு அவாளுக்கு நன்னுருக்கும்போல இருக்கு!''

''ஒனக்கு வேணும்னு, போய் வாங்கித் தின்னு. போ!''

''வ்வோ....ஓ!''

அப்போது பாபுவைத் தேடிக் கொண்டு மீனு அங்கே வந்தாள். இந்த அக்கிரகாரத்துச் சிறுவர்கள், அந்தக் கர்மகாண்டத்தை ரசித்து வேடிக்கை பார்ப்பதைக் கண்டதும் அவளுக்குக் கோபம் வந்தது.

''ஏ பீடைகளா! இங்கே வந்து நின்னுண்டு என்ன வேடிக்கை? ஓடுங்கோ ஆத்துக்கு! ஏன்டா மணி, அவாதான் கொழந்தை. உனக்கு வயசாகல்லே? இரு இரு. உங்க ஆத்துக்கு வந்து மாமிகிட்டே சொல்றேன்!'' என்று அங்கிருந்த குழந்தைகளை விரட்டிவிட்டுப் பாபுவின் காதைப் பிடித்துத் திருகினுள்.

''நல்ல வேளை! குளத்திலே கிளத்திலே போய் நிக்கறயோன்னு அங்கெல்லாம் போய்த் தேடிட்டு வரேன். மத்தியானம் ஆத்தை விட்டுப் போனவன், நன்னு ஊரைச் சுத்த ஆரம்பிச்சுட்டே! ஆத்துக்கு வா, சொல்றேன்!'' என்று அவன் காதைப் பிடித்துத் திருகியபொழுது, பாபு அழ ஆரம்பித்தான்.

அந்தச் சமயம், ஒரு கூடாரத்திலிருந்து அவள் வெளியே வந்தாள்.

''நீங்கள்ளாம் ஐயம்மாரு வூட்டுப் புள்ளை. இதெல்லாம் பாக்கப்படாதுன்னு நானும் எம்மா நாலியாச் சொல்லிக் கிட்டிருக்கேன்? கேக்க மாட்டேங்குதுங்க!'' என்று சொல்லிக் கூர்ந்து பார்த்துக்கொண்டே மீனுவின் அருகே வந்தாள் அவள்.

மீனுவும் அவளைப் பார்த்தாள்.

மீனுவின் கண்களுக்கு அந்த மாற்று மதத்தைச் சேர்ந்த பெண்ணும் ஒரு வேடிக்கையாகத்தான் இருந்தாள். அந்த ஜாதியில் ஆண்களும் பெண்களும் எவ்வளவு அழகாயிருக்கிறுர்கள் என்று மனத்துள் வியந்தாள்.

மீனு அவள்மீது வைத்த கண் வாங்காமல், பாதாதிகேசம் அளந்து பார்த்தாள்.

அவள் தலையில் இட்டிருந்த முக்காடு சிறிதே விலகியிருந்தது. அல்லி மலர்களின் இதழ்கள் போன்ற அவளது சிவந்த செவிமடல் முழுவதும் வரிசையாகச் சிறு சிறு பொன் வளையங்கள் அலங்கரித்தன. அவற்றில் சிலவற்றிலிருந்து பொன்மணிகள் தொங்கின. அவளது வட்ட வடிவமான அகன்ற முகத்தில் கீறிக் கிழித்தவைமாதிரி செவ்வரி படர்ந்த பெரிய விழிகள், கரிய புருவத்தினடியில் அவளைக் கனிவோடு சந்தித்தன. அந்தக் கடா மீசைக்காரன் மாதிரியே அவளும் பெரிய ஆகிருதியாயிருந்தாள். முழங்கை வரைக்கும் கண்ணுடி வளையல்களை அளவுக்கு மீறி அவள் அடுக்கியிருந்ததுகூட ஓர் அழகாய்த்தான் இருந்தது. மார்பை மட்டும் மறைக்கின்ற அளவுக்கு அவள் அணிந்திருந்த ரவிக்கையின் கைகள் மட்டும் முழங்கை வரை நீண்டிருந்தன. மஞ்சள் நிறமான பொன்னிற வயிற்றின் சரும மடிப்பும், நாபிக் குழியும் தெரிய, அவள் பாவாடை மட்டுமே அணிந்திருந்தாள். அவள் நடந்து வருகையில், அவளது இடையின் இரண்டு புறமும் ஏறி நெளிந்தபோது தேர் வருவதுமாதிரி இருந்தது. அவள் நடக்கும்போது அவள் பாதங்களில்



கிடந்து பூமியிலும் படுகின்ற மாதிரி பெரிதாக அணிந்த அந்த வெள்ளித் தண்டையின் சப்தம் இனிமையாக ஒலித்தது.

'இவள் அணிந்திருக்கின்ற இந்த நகைகளெல்லாம் உண்மையிலேயே தங்கந்தானு?' என்ற சந்தேகம் வந்தது மீனுவுக்கு. அதைக் கேட்டுவிடலாமா என்று துடித்த ஆசையை ஒரு விநாடித் தயக்கத்தில் அடக்கிக் கொண்டாள்.

மீனு எவ்விதம் அவளையே ரசித்தாளோ, அதே மாதிரி அவளும் மீனுவை ரசித்திருக்க வேண்டும். மீனுவின் எளிய தோற்றமும், காதிலே எண்ணெய் இறங்கிக் கிடக்கும் கம்மலும், மூக்குத்திகளும் அவளைக் கவர்ந்ததைவிட, அவளது நெற்றியில் இருந்த வட்டவடிவமான பெரிய குங்குமத் திலகம், அவளைப் பேரழியாக மயக்கிற்று. கொடிபோல் மெலிந்த உடலில் அவள் அணிந்திருந்த பிராமணக் கட்டுப் புடைவையை, அவள் எப்படி உடுத்துக்கொண் டிருக்கிருள் என்று



அறிய அவாவுற்ற இவளுடைய பெரிய விழிகள் அவள்மேல் மேய்ந்தன. அவர்கள் இருவரும், இரண்டு தொழுவத்துப் பசுக்கள் ஒன்றை ஒன்று நட்பின் துணை நாடித் தவிக்கிற மாதிரி பரஸ்பரம் நெருக்கமுற்று வந்தார்கள்.

அப்போது ஓர் ஆட்டுக்குட்டியைத் துரத்தியவாறு அவளுக்குப் பின் பாபுவின் வயதுடைய ஒரு சிறுவன் ஓடினான். அந்தச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய அவள், அவர்களது மொழியில் அவனைத் திட்டினாள். அவள் திரும்பிய போது, அவளது திறந்த முதுகைப் பார்த்த மீனுவுக்கு அவளது மேனியழகு முற்றாக மனத்துள் நிர்வாணமாகப் படிந்த குறுகுறுப்பு ஏற்பட்டது. மீனுவைத் திரும்பிப் பார்த்து அவள் சொன்னாள்: ''அம்மான்னா இந்தப் புள்ளைகளுக்குப் பயமே இல்லே! வாப்பான்னாதான் பயம்!''

அவள் பேசுகிற தமிழ் புரிந்தாலும் மீனுவுக்குச் சிரிப்பு வந்தது.

''ஆமாம்! இவன்கூட என் பேச்சைக் கேக்கறதேயில்லே'' என்று மீனா சொன்னபோது, அவள் குறுக்கிட்டுச் சொன்னாள்: ''நீங்க எதுக்கும்மா இவ்வளவு தூரம் வந்தீங்க? இவங்க வாப்பா கையிலே சொல்றது தானே? பொம்பிளைங்க கையிலே புள்ளைங்க அடங்காது!''

அவள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த மீனுவின் கண்களில் படர்ந்த சோகத்தை அவள் கண்டிருக்க வேண்டும்.

''அது உன் பையனா?'' என்று ஆட்டுக்குட்டியைத் துரத்திக்கொண்டு ஓடின பையனைப் பார்த்துக் கேட்டாள் மீனா.

''ஆமாம். அவுக வாப்பாவோடு எனக்குத் தலாக் ஆய்ப்போச்சு'' என்று சொல்லிக்கொண்டே திரும்பிய போது, வெளியே தன் மனைவி யாருடனோ பேசிக்கொண்டிருப்பதுகேட்டு, அந்தக் கடா மீசைக்காரன் கூடாரத்தை விட்டு வெளியே வந்தான்.

அவனைக் கண்டதும் முக்காட்டைச் சற்று இழுத்து விட்டுக் கொண்ட அவள், ''அதுக்கப்புறந்தான் நான் இவரை நிக்கா பண்ணிக்கிட்டேன்'' என்று பெருமையோடும் நாணத்தோடும் சொன்னாள்.

மீனுவுக்கு, இப்போது அவள் பேசிய பேச்சுப் புரிந்தாலும் சில வார்த்தைகளுக்குப் பொருள் புரியவில்லை.

'' 'தலாக்'குன்னா?'' என்று கேட்டுக் கொண்டே, கூடாரத்திலிருந்து குனிந்து வெளியே வந்து உயரமாக நிமிர்ந்து நின்ற அவன் விழிகளைப் பார்த்தாள் மீனா.

ஐயோடி! அவன் கண்கள் என்ன மாய்க் கூராக, ஆழமாக, பெரிசாக, இரைச்சலோடு பார்க்கின்றன!

அவன் லுங்கியும் பனியனும் மட்டுமே அணிந்திருந்தான். மீனுவைக் கண்டதும், வாயில் இருந்த பிடியை எடுத்துக் கீழே போட்டு மிதித்து அணைத்தான். ஏற்கனவே அறிமுகமானவன் போன்ற பாவத்தோடு அவளுக்குச் சலாம் செய்தவாறே அருகில் வந்தான்.

''அம்மா எங்கே இவ்ளோ தூரம் வந்துட்டீங்க?'' என்ற அவனது கேள்விக்குப் பதில் ஏதும் சொல்லாமல் புன்னகை செய்தாள் மீனா.

அப்போது அவன் மனைவி தலாக் என்றால் என்னவென்று விவரித்துக் கொண்டிருந்தாள். அதுவரையிலும், இந்த அக்கிரகாரத்துக்கு வெளியேதான் மனிதர்களும் வாழ்க்கையும் எவ்வளவு அற்புதமாய் அழகாய் மாறியிருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்த மீனுவுக்கு, எல்லா வாழ்க்கையுமே பெண்களுக்கு ஒரு தொழுவந்தான் என்று தோன்றிற்று.

கடா மீசைக்காரனைக் கண்டதும், மீனுவுக்குப் பின்னால் வந்து ஒளிந்து கொண்டிருந்த பாபு, அவன் இன்னும் கொஞ்சம் நெருங்கி வந்ததும், ''அம்மா, ஆத்துக்குப் போலாண்டி!'' என்று முன்றானையைப் பிடித்து இழுத்து முனக ஆரம்பித்தான்.

பின்புறமாகக் கைநீட்டி அவனது தலையைத் தடவியவாறே, ''இந்தச் சாயபுவைக் கண்டு உனக்கென்ன பயம்? இவாள்ளாம் நல்லவாளாத்தானே இருக்கா? ஒண்ணும் பண்ண மாட்டா!'' என்று அவனுக்குச் சமாதானம் சொன்ன மீனா, கடா மீசைக்காரனைப் பார்த்துச் சொன்னாள்: ''உன்னோட மீசையைக் கண்டுதான் கொழந்தைங்கள்ளாம் பயப்படறது. நீ அதை எடுத்துட்டேன்னா அக்கிரகாரத்திலே இருக்கற கொழந்தைகளெல்லாம் உன் பின்னாலேயே ஓடி வரும்'' என்று சொன்னபோது அவளுக்கு முகமே சிவந்து குழம்பிப் போயிற்று.

''ஏம்மா, இந்த மீசை எனக்கு நல்லாயில்லையா?'' என்று அவன் வெகுளித்தனமாய்க் கேட்டான்.

'ஐயோ, என்ன இவன் இப்படிக் கேட்கிறானே! இதற்கு என்ன பதில் சொல்வது?' என்று வெட்கத்தோடு மீனா தலைகுனிந்தாள். ''நல்லா இல்லாம என்ன? கொழந்தைங்க பயப்படறதேன்னு சொன்னேன்.''

''இவ இந்த மீசைக்குத்தானே என்னை நிக்கா பண்ணிக்கிட்டா?'' என்று மனைவியின் தோளைத் தட்டி, பெண்மையின் உயிரைக் கொள்ளை கொள்ளுவதுபோல் அவன் சிரித்தான். தன் தோளில் இருந்த அவன் கையைத் தள்ளி, தங்கள் மொழியில் என்னவோ சொல்லி அவனைக் கடிந்துகொண்டு, சற்று விலகி நின்றாள் அவள்.

'ஏ சாயபு, நீ ரொம்பப் பொல்லாதவன்!' என்று பார்வையிலே சொன்னாள் மீனா.

அந்தச் சந்திப்புக்குப் பிறகு அந்தச் சம்பாஷணையை, அந்த அநுபவத்தை நினைத்து நினைத்துப் பார்த்துச் சுகப்பட்டாள் மீனா. ஒரு நாள் அந்தக் கடா மீசைக்காரனை அவள் கனவில்கூடக் கண்டாள். கனவில், அவன் மனைவி மாதிரி ஆடை அலங்காரங்களோடு தான் நிற்க, அவன் இந்த அக்கிரகாரத்து மனிதன் மாதிரி பூணூல் போட்டுக்கொண்டு, சரிகை வேஷ்டி கட்டிக்கொண்டு எதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறான். ஆனால் அந்தக் கடா மீசை மட்டும் அப்படியே இருக்கிறது.

'அட கிரகசாரமே! போயும் போயும் ஒரு பிராமணன் இப்படி மீசை வச்சிண்டுடுவனோ?' என்று அவள் அதிசயித்த நேரம், அவன் வேஷம் கலைப்பது மாதிரி, முகத்திலிருந்து அந்த மீசையை எடுத்தெறிகிறான்.

அது மட்டுமல்ல; தன்னைத் தள்ளி வைத்துவிட்ட புருஷன் சந்தோஷமாக இருந்த நாட்களில் அழைத்ததுமாதிரி, 'மீனு, மீனு' என்று அழைத்தவாறே இந்த வீட்டுப் படியேறி உள்ளே வருகிறான். அவனிடமிருந்து அவள் விலகி விலகிப் போகிறாள்.

அவன் 'மீனு, மீனு' என்று அழைத்தவாறு நடுக் கூடம் வரைக்கும் வந்து ஊஞ்சலில் விரித்திருந்த அவளது படுக்கையின்மீது உட்கார்ந்து கொள்கிறான். மிகவும் சொந்தமாக ஊஞ்சலில் உட்கார்ந்து உந்தி உந்தி ஆடியவாறு அவன் சொல்கிறான்: 'எல்லாம் வேஷம்டி மீனு, வேஷம்! நான் ஒரு வேஷம் போட்டுண்டு, நீ ஒரு வேஷம் போட்டுண்டு, ஆளுக்கொரு நாடகம் ஆடறோம்!' என்று பெண்மையைக் கொள்ளை கொள்ளும் சிரிப்போடு அவன் சொல்லும்போது மீனுவுக்குக் கோபம் வருகிறது.

'நான் ஒண்ணும் வேஷம் போடல்லே! நீதான் வேஷம் போடறே! உன் வேஷத்தைப் போட்டுண்டு நீ தெருவிலே போயிண்டிரு. நான் வேடிக்கை பாத்துண்டிருக்கேன். உள்ளே வராதே!' என்று கடுமையாகச் சொன்னதும், அவன் ரோஷத்தோடு எழுந்து போகும்போது அவளுக்கு வேதனையாக இருந்தது.

தூக்கத்திலிருந்து விழித்த மீனா, எழுந்து தண்ணீர் அருந்தி, சுவாமி படத்தின் முன்னால் போய் நின்று, ''இந்த மாதிரி சொப்பனமெல்லாம் வராமல் காப்பாத்து, ஆண்டவனே!'' என்று வேண்டிக்கொண்டாள்.

மறுநாள் காலை, அவள் வாசலுக்குக் கோலம் போட்டுக் கொண்டிருந்தபோது, குனிந்த தலை நிமிராமல் புருவத்தை மட்டும் உயர்த்தி, சைக்கிள் பெடலை மிதிக்கின்ற கனத்த பூட்ஸ் அணிந்த, முழங்காலுக்கு மேல் லுங்கியின் கரை ஏறிய, ரோமம் செறிந்த அவன் கால்களை மட்டும் அவள் பார்த்தாள்.

பிறகு, அவன் தன்னைக் கடந்த பிறகு நிமிர்ந்து நின்று அந்தச் சின்னச் சைக்கிளில் ஆஜாநுபாகுவாகப் போகின்ற அவன் பின்புறத் தோற்றத்தைப் பார்த்தாள்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் குளத்தில் குளித்துவிட்டு எதிர்ப்படுகிறபோது, அவன் தோற்றத்தை முழுமையாகப் பார்க்க முடியாமல் அவள் தலை குனிந்து நடந்தாள். ★

# இப்பொழுது இங்கிலாந்துக்கு



## மேலும் அதிக அளவில்
## ட்ரான்கோ வால்வுகள் ஏற்றுமதியாகின்றன

உழைப்பிலும், தரத்திலும் உயர்ந்தவை 'ட்ரான்கோ வால்வுகள்.' அவைகளின் பிரசித்தி நமது தேசத்தோடு மட்டும் நிற்கவில்லை. கடல் கடந்தது. இப்பொழுது 'ட்ரான்கோ வால்வுகள்' அதிக அளவில் மாதாமாதம் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகின்றன.

ட்ரான்கோ வால்வுகளின் உள்நாட்டு விநியோகத்தில் சிறிது பற்றுக்குறை ஏற்படலாம். அதற்காக முன்கூட்டியே மன்னிப்புக் கோருகிறோம்.

# ட்ரான்கோ வால்வுகள்

ட்ரான்கோ வால்வுகள் எஞ்சின்களின் உயிர்நாடி

**எஞ்சின் வால்வ்ஸ் லிமிடெட்.** சென்னை-16

FDSEV1024TM



உங்களைப் போன்ற உற்சாகம் மிக்கவர்களின்
முதல் தேர்வாக பிஎஸ்ஏ இருப்பது இயல்புதான்.

பிஎஸ்ஏ எழில் மிக்க சைக்கிள். இலேசானது
ஆயினும் வலுவுள்ளது. எளிதாக
ஓட்டுவதற்கேற்ற லாகவமும்
அமைப்பும் கொண்டது.

பிஎஸ்ஏயில் பல இடங்களுக்கும்
குஷியாகச் செல்லுங்கள்.

உலகில் இப் பகுதியில் சிறந்த சைக்கிள்
தயாரிப்பாளர்களால் பிஎஸ்ஏ அதன்
புகழ் பெற்ற உயர் தரத்திற்கேற்ப
தயாரிக்கப்படுகிறது.

**BSA®**

பிஎஸ்ஏ மிகச் சிறந்த
சைக்கிள்

® பிஎஸ்ஏ சைக்கிள்ஸ் லிமிடெட் யு.கே. அவர்களின் பதிவு பெற்ற டிரேட் மார்க்
இந்தியாவில் தயாரிப்போர்: டிஐ சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ்-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்-1
பதிவு பெற்ற உபயோகிப்போர்

tlc-bsa-3896

# கடற் கரையில்



சல்லா ராதாகிருஷ்ண சர்மா

தெலுங்குச் சித்திரம்

சாயங்காலம் ஆயிற்று. வெயிலின் கடுமை குறைந்து வந்தது. கடற்காற்று மெல்ல மெல்ல வீசுகிறது. அந்த மெல்லிய காற்று எனக்கு வெகு இன்பத்தைக் கொடுத்தது. கடற்கரைக்குப் போக வேண்டுமென்று என் மனம் பரபரத்தது. சென்னையில் பார்க்க வேண்டிய அழகு மிக்க பிரதேசம் ஒன்று உண்டென்றால் அது பீச்சுத்தான் என்பது என் கருத்து.

நான் திருவல்லிக்கேணி பீச்சுப் பக்கமாகச் சென்றேன். சின்னவர்களும் பெரியவர்களும் ஆண்களும் பெண்களுமாக ஜனங்கள் திரள் திரளாகப் பீச்சுக்கு வந்துகொண் டிருந்தார்கள். நான் இருபுறமும் இருந்த மின்விளக்குக் கம்பங்களைப் பார்த்துக் கொண்டே போனேன்.

மழையில் நனையாத மனிதனும் வெயிலையே பார்க்காத கோஷாப் பெண்ணும் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் சுண்ணாம்புக் கறை படாத மின்விளக்குக் கம்பம் ஒன்றுகூடச் சென்னை நகரில் இருக்காதென்று தோன்றியது. கம்பத்தின் அருகே ஒரு மங்கை உட்கார்ந்திருந்தாள். ஆவலுடன் சரசர வென்று போய் அவளுக்குச் சிறிது தூரத்தில் நின்றேன். அவள் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டாள். வெற்றிலை எல்லாம் தீர்ந்தபின் அவள் தன் கையில் இருந்த சுண்ணாம்பு விழுதில் பாதியை வாயில் போட்டுக்கொண்டு, மீதி இருந்த பாதியை விளக்குக் கம்பத்தின்மேல் தீற்றிவிட்டுத் தன் வழியைப் பார்த்துக் கொண்டு போனாள். மின்விளக்குக் கம்பங்களின்மேல் சுண்ணாம்புக் கறைகள் இருப்பதன் காரணம் எனக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

மற்றொரு விஷயம்: நாட்டுப்புறத்துப் பாதைகளில் சாணிக் குப்பல்கள் எப்படிக் கண்ணில் படுகின்றனவோ, அதுபோல் சென்னை நகரின் பாதைகளில் வெற்றிலை மென்று துப்பிய தம்பலம் சிவப்பாகக் காணப்படும். எனக்கு முன்னே போய்க்கொண் டிருந்தவள் சதக்கென்று துப்பினாள். இப்படிக் கண்ட கண்ட இடங்களில் எச்சில்



தம்பலத்தைத் துப்புவதையும் ஒவ்வொரு மின்விளக்குக் கம்பத்தின் மேலும் சுண்ணாம்பு தீற்றுவதையும் கண்டபோது . எனக்குச் சற்று வெறுப்பாகத்தான் இருந்தது.

திருவல்லிக்சேணிக் கடற் கரை வந்துவிட்டது. மணலில் சிறிது தூரம் நடந்தது எனக்குக் களைப்பாக இருந்தது. அப்படியே சென்று ஓர் இடத்தில் சுகமாக உட்கார்ந்தேன். பாய் விரித்தாற்போன்ற அலைகள் அழ்கடலிலிருந்து திரண்டு வருவதைப் பார்த்துக்கொண்டே இன்னதென்று புரியாத, தெளிவற்ற, தெய்விகமான இன்பத்தில் அழ்ந்துவிட்டேன்.

நான் கவியல்லேன். கவியாக இருந்திருந்தால் நதிகளின் தலைவனான கடலரசனை இனிய சொற்களால் வரு



ணித்து, அதில் ஆசை கொண்ட வாசகர்களை மகிழ்வித்திருப்பேன். கடலின் ஆரவாரமும், சுருண்டு விழுந்து பாய்ந்தெழுந்து வரும் அலைக்கூட்டமும், வெள்ளை வெளேரென்ற நுரைக் குவியல்களும் என்னை முழுவதும் கவர்ந்தன. பீச்சுக்கு எதிரில் இருந்த பெரிய மாளிகைகளைப் பற்றிய நினைவு வந்தது. அவை ஆர்க்காட்டு நவாபுகள் தமக்கும் தம் ராணிகளுக்குமாகக் கட்டிய மாளிகைகளாம். பாவம்! எங்கே அந்த அரசர்கள்? அவர்களைக் காலம் விழுங்கிவிட்டாலும் அவர்களுடைய செல்வம் மட்டும் மாளிகைகளாக என்றும் நிலைத்துவிட்டன. அதனால்தான் போலும், 'அரசன் காசெல்லாம் கோட்டை' என்ற அழகிய பழமொழி தோன்றியிருக்கிறது.

உயர்ந்து பாய்ந்து வரும் அலைகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் கரையில் ஒதுங்கும் நுரைக் குவியல்களைப் பார்த்தபோது என் மனத்தில் இந்தப் பாட்டு உருவாகியது.

**நுரைகள், நுரைகள்—வெள்ளை**
**நுரைகள், நுரைகள்!**
**கடல் அலைகளினால் கசங்கி நசுங்கிக்**
**கடந்து செல்ல வழி தெரியாமல்**
**கரையில் ஒதுங்கும் நுரைகள்—வெள்ளை**
**நுரைகள், நுரைகள்!**
**வறுமையின் பிடியில் உழன்று உழன்று**
**வாழ்க்கை சுமையாய் அழுத்த, அழுதே**
**காலந்தள்ளும் பிறவி வறியர்போல்**
**கரைந்தும் உடைந்தும்**
**கரை சேரும் நுரைகள்—வெள்ளை**
**நுரைகள், நுரைகள்!**

பித்தனைப் போல் நான் நுரைக் குவியல்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிறுவன், 'தேங்கா மாங்கா பட்டாணி' என்ற வண்ணம் என் அருகே வந்தான். பராக்காக இருந்ததனால் நான் அவனுக்குப் பதில் ஏதும் சொல்லவில்லை. இரண்டு நிமிஷங்கள் பொறுத்து அவன், "சூடாயிருக்கு ஸார்" என்றான்.

அந்தச் சிறுவனைக் கண்டு எனக்கு இரக்கம் மேலிட்டது. அவன் கையில் பெரிய டப்பா ஒன்று இருந்தது. அவனுடைய பால் வடியும் முகமும் இனிய மொழிகளும் கள்ளங் கபடற்ற பார்வையும் என்னைக் கவர்ந்தன. அவனைப் பார்க்கப் பார்க்க என் வயிற்றில் ஏதோ சங்கடம் செய்தது. 'இந்தச் சின்னஞ்சிறு வயதில் இந்தச் சிறுவன் வாழ்க்கைப் பாரத்தைச் சுமக்கும்படி நேர்ந்திருக்கிறதே!' என்று வருந்தினேன். அவன் முகத்தைப் பார்த்தால் நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன் என்று எனக்குத் தோன்றியது. இந்த ஆராய்ச்சிகளை ஒதுக்கிவிட்டு, "ஒரு பொட்லம் கொடப்பா" என்றேன். பத்துக் காசைப் பெற்றுக்கொண்டு அவன் 'மாங்கா தேங்கா பட்டாணி'ப் பொட்டலம் ஒன்றை என் கையில் வைத்தான். மிகுந்த ஆவலுடன் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தேன். மாங்காய்த் துண்டங்களையும் தேங்காய்க் கீறல்களையும் வேக வைத்த பட்டாணிகளையும் ஒன்றாகக் கலந்து கடுகு தாளித்துக் கொட்டியிருந்த கதம்பம் அது. இதுதான் மாங்காய் தேங்காய் பட்டாணி என்ற நினைவுடன் பட்டாணிகளை ஆராய்ந்துகொண்டிருந்தேன். அப்பொழுது அந்தச் சிறுவன், "ஸார், ருசியாய் இருக்கும். இன்னும் ஒரு பொட்டலம் தரட்டுமா?" என்று கேட்டான். "சரி" என்று சொல்லி மற்றொரு பொட்டலத்தையும் வாங்கினேன். அவன் போய்விட்டான்.

பட்டாணி எவ்வளவு ருசியாய் இருந்ததென்று நினைக்கிறீர்கள்! மாங்காய்த் துண்டும் தேங்காய்த் துண்டும் பல்லில் பட்டால் போதும்; நாக்கின் அருசி பறந்தே போய்விடும். இரண்டு பொட்டலங்களும் இரண்டே நிமிஷத்தில் தீர்ந்து விட்டன. அந்தச் சிறுவன் யார், அவனுடைய நிலைமை என்ன என்பவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. அதனால் நான் அவன் போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தேன். நான் அவனைப் பார்ப்பதைக் கவனித்த அவன் சிரித்துக் கொண்டே என் அருகில் வந்தான். நானும் அவனைப் பார்த்து ஒரு புன்னகை செய்தேன்.

அவன் இன்னும் ஒரு பட்டாணிப் பொட்டலத்தை டப்பாவிலிருந்து எடுத்து, "கொடுக்கட்டுமா, ஸார்?" என்றான். "சரி" என்று சொல்லி அந்தப் பொட்டலத்தையும் வாங்கிக் கொண்டேன். அலைந்து அலைந்து கால் வலித்ததனாலோ என்னவோ, அவனும் என் பக்கத்தில் உட்கார்ந்து, டப்பாவிலிருந்து ஒரு முறுக்கை எடுத்துத் தின்றுகொண்டே பேசினான்.

"நீ என்ன படிக்கிறாய்?" என்று கேட்டேன்.

"நாலாம் வகுப்புப் படிக்கிறேன், ஸார்."

''உனக்கு அம்மா அப்பா இருக்கிருர்களா?''

''இருக்கிருர்கள் ஸார். தாத்தா கூட இருக்கிருர் ஸார்.''

''உங்கள் அப்பாவுக்கு என்ன வேலே?''

''தெரியாது. ஏதோ ஒரு வேலேயில் இருக்கிருர், ஸார்.''

''அப்படியா? நீ ஏன் பட்டாணி விற்கிருய்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது ஸார். பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் எங்கள் அம்மா எனக்குக் காபி கொடுப்பாள் ஸார். அப்புறம் நான் ஒரு டப்பாவை எடுத்துக்கொள்வேன். எங்கள் தாத்தா ஒரு டப்பாவை எடுத்துக்கொள்வார். இப்படியே பீச்சுக்கு வந்து விடுவோம்.''

''உனக்கு அக்கா தங்கைகள் இருக்கிருர்களா?''

''ஓர் அக்கா இருக்கிருள் ஸார். இரண்டு தங்கைகள்.''

பாவம்! போதும் போதாத சம்பளத்திஞல் எவ்வளவு பேர் இப்படிக் கஷ்டப்படுகிருர்களோ! தன் வயதுச் சிறுவர் குதித்துக் கொம்மாளம் அடித்து விளேயாடிக்கொண்டிருக்க, இந்த அதிர்ஷ்டக் கட்டையான சிறுவன் மட்டும் வாழ்வின் அந்தகாரப் பகுதியைக் கண்டுவிட்டான். தாய் தகப்பஞர்கள் மட்டும் என்ன செய்வார்கள்? குடும்பத்தை நடத்தியாக வேண்டுமே! அவர்களுடைய தவறும் அல்ல. அவர்கள் பணம் இல்லாமல் தவிக்கிருர்கள். அதஞல் அவர்களுடைய குழந்தைகளும் கஷ்டப்படுகிருர்கள். ஆனுல் பிறரிடம் சென்று 'அம்மா, தாயே' என்று கை நீட்டாமல் இப்படிக் கௌரவமாக உழைத்துக் காலந் தள்ளுகிருர்கள். இந்த விஷயம் எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.

''ஏண்டா ராமு!'' என்ற வண்ணம் அப்பொழுது அங்கே ஒரு கிழவர் வந்தார். அவர்தாம் அந்தச் சிறுவனுடைய பாட்டஞர். தாத்தாவும் பேரனுமாக விட்டை நோக்கி நடந்தனர். 'பொருளாதாரச் சமத்துவம்' என்று கடல் ஓலமிடுவதாகத் தோற்றியது.

கடற்கரை முழுவதும் ஆராய்ந்து பார்த்துவிட்டு நான் ஒரு திட்டம் வகுத்தேன். அந்தத் திட்டம் என்ன என்பதைச் சொல்லுகிறேன்: கடலே ஒட்டி அமைந்த பட்டணங்களில் - அதாவது விசாகப் பட்டினம் போன்றவற்றில் - அரசினர் பீச்சுகளே அமைக்க வேண்டும். அதைவிட முக்கியமான விஷயம், ஆண்களும் பெண்களும் பீச்சுக்குப் போக வேண்டும் என்று ஒரு சட்டம் கொண்டு வருவது: நான் இப்படிச் சொல்லுவது உங்களுக்கு வேடிக்கையாகப் படலாம். ஆந்திரத்தில் உள்ள சில நகரங்களில் ஆண்களும் பெண்களும் உல்லாசமாகப் பூங்காவுக்குச் சென்று அங்கே அமர்ந்து பேசுவதை நான் பார்த்ததில்லே. தவறிப்போய்ச் சிலர் தம்பதிகளாக வந்து துணிந்து உட்கார்ந்து விட்டாலோ, பூங்காவுக்கு வரும் பெரிய மனிதர்கள் எல்லாரும் பார்வையாலேயே அவர்களேச் சிறை செய்துவிடுவார்கள்.

சொல்ல வந்த முக்கியமான செய்தியை மறந்தே போய் விட்டேன். கல்வியறிவற்றவர்களின் வேலேயில்லாத் திண்டாட்டத்தைக் கடற்கரை ஓரளவுக்குக் குறைக்கிறது என்பது என் நம்பிக்கை. தேங்காய் மாங்காய் பட்டாணி, வடை முறுக்கு முதலிய தின்பண்டங்களே விற்கும் சிறியவர்கள் பெரியவர்கள், சோடா, ஐஸ் கிரீம் முதலிய பானங்களே விற்பவர்கள், சினிமாப் புத்தகங்கள், சோழி, சங்கு, கிளிஞ்சில் முதலியவற்றை விற்பவர்கள் இப்படிப் பல வியாபாரிகளேக் கடற்கரை காப்பாற்றுகிறது.

கடற்கரை இல்லாவிட்டால், காற்றும் வெளிச்சமும் நுழையாத இருட்டு வீடுகளில் வசிக்கும் பல நடுத்தரக் குடும்பத்தினருக்கு வாழ்க்கை நரகமாகவே தோன்றும். ★

தமிழ்: எஸ். கே. சீதாதேவி

**ஓதாது உணர்பவர்**





போட்டோ: ஆர். பி. எஸ். மணி



# நாய் வால்

கோரூரு ராமஸ்வாமி ஐயங்கார்



எங்கள் வேலைக்காரனுடைய நிஜமான பெயர் ரங்கன். ஆனால், ஹரிஜனனுக்கு அவ்வளவு நல்ல பெயர் எதற்காக என்று எண்ணி, அவனுக்கு அந்தப் பெயர் நிலைப்பதற்கு முன்பே ஜனங்கள் அவனைத் தூரன் என்று அழைக்கத் தொடங்கினார்கள். நாம் எல்லாரும் காந்தி யுகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? அவனுடைய உண்மைப் பெயர் என்ன] என்று கேட்டேன்.

''என் பெயர் ரங்கன். ஆனால் தூரன் என்றுதான் எல்லாரும் சொல்லுகிறார்கள். ரங்கன் என்றால் யாருக்குமே தெரியாது'' என்றான். நான் இரண்டு மூன்று நாட்கள் 'ரங்கா' என்று கூப்பிட்டேன். அவன் சில சமயம் பதில் கொடுப்பான்; சில சமயம் ஏனென்று கேட்க மாட்டான். கடைசியில் நானும் மற்றவர்கள் கூப்பிடுவது போலவே கூப்பிடத் தொடங்கினேன்.

பெயரில் என்ன இருக்கிறது? தூரன் அவ்வளவு திடமான ஆள் அல்ல. பத்து வயது வரையிலும் வளர்ந்தவன், அப்புறம் வளரவே இல்லை. அவனுடைய வளர்ச்சி அத்துடன் முடிந்து விட்டது. அவனுடைய உள்ளத்தின் வளர்ச்சிகூட, குழந்தையின் மென்மையை மீறிச் சிறுவர்களுடைய பிடிவாதமும் முரட்டுத்தனமும் பத்துப் பன்னிரண்டு வயதின் அளவுக்கு வளர்ந்து, அப்புறம் நின்றே போய்விட்டது. கை கால்களில் சக்தி இல்லை. அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டிருக்கும். அத்துடன் சோனி. அதனால்தான் அவனுக்குத் தூரன் (ஆடுபவன்) என்ற பெயர் வந்து விட்டது.

தூரன் ஒருத்தன் மட்டுமா? எங்கள் ஊர் ஹரிஜனங்கள் எல்லாருமே இப்படிப் பாதி வளர்ந்தவர்கள்தாம். தூரனுக்குத் தந்தை இல்லாததனால் அவன் சிற்றப்பனுடைய வீட்டில் வளருகிறான். சிற்றப்பனுக்கு நிலம் இல்லை. தொலை தூரத்தில் அரசாங்கத்தார் மலைப் பிரதேசத்தில் நிலம் தருகிறார்கள். அதைப் பெற்றுக்கொண்டு சாகுபடி செய்யும் தகுதி இவர்களுக்கு உண்டா? உழவுக்கு மாடு ஏது? அங்கே போய்ச் சொந்தத்தில் அவன் வீடு கட்டிக்கொள்ள முடியுமா? இந்தச் சேரியில் இருக்கும் குடிசையே ஒரு புறம் சரிந்து கிடக்கிறது. அதைப் புல் போட்டு மூடவும் அவனுக்குக் கதி இல்லை. அங்கே குடிக்கத் தண்ணீர் உண்டா? அதெல்லாம் போகட்டும். அருகில் கள்ளுக் கடையாவது உண்டா? மலைமேல் கிடைக்கும் நிலத்தை வாங்கிக்கொண்டால் கூலிவேலை செய்வதற்குத்தான் பக்கத்தில் அங்கே கிராமம் ஏது? ஆகையால் அரசாங்கத்தார், ஸ்பெஷல் ஆபீசர்கள் எத்தனை பேரை வைத்துப் பிரசாரம் செய்தபோதிலும் இவர்கள் அந்தக் காட்டை உழப் போவது கிடையாது.

தூரனுடைய சிற்றப்பன் பிறவிக் குடியன். கள்ளுக்காக எது கிடைத்தாலும் திருடுவான். வாங்குவதற்கு மட்டும் ஆள் கிடைத்தால் யாரை வேண்டுமானாலும் விற்பான். தூரனை அவனுடைய சிற்றப்பன் பத்து வயதுள்ளபோதே வேலைக்கு அமர்த்திவிட்டான். முதலில் மூன்று வருஷங்கள் ஒப்பந்தம். வருஷத்துக்குப் பத்து ரூபாய் சம்பளம். சாப்பாடு, துணி - அதாவது ஒரு துப்பட்டியும் ஒரு நிஜாரும். அந்தப் பத்து ரூபாயைத் தூரனுடைய சிற்றப்பன் நாலே நாளில் குடித்துத் தீர்த்துவிடுவான். வருஷம் முடியுமுன்பே அடுத்த இரண்டு வருஷங்களுக்கு இருபது ரூபாய் முன்பணமாக வாங்கிவிடுவான். இந்த விவகாரம் எதிலுமே சிற்றப்பன் தூரனிடம் கலந்து ஆலோசிக்கவே மாட்டான். தூரனுக்கு இருபது வயதாகும்வரையில் இப்படியே நடந்தது.

தூரன் வளரவே இல்லை. பத்தாவது வயதில் எப்படி இருந்தானோ, அப்படித்தான் இருபதாவது வயதிலும் இருந்தான். புத்தியும் வளரவில்லை. மாடுகளை மலையடிவாரத்துக்கு ஓட்டிக்கொண்டு போவதைத் தவிர, அவனால் வேறு எந்த வேலையும் செய்ய முடியாது. யாருக்கும் வேண்டாத அவனுக்குச் சம்பளம் கிடைக்காவிட்டால் போகட்டும்; வயிற்றுக் கஞ்சிக்கே திண்டாட்டமாகி விட்டது. சிற்றப்பன் தானே வீட்டில் புல்லைக் கொரித்துக்கொண்டிருந்தபோது தூரனுக்குச் சாப்பாடு போடுவது என்ற பேச்சுக்கு இடம் ஏது?

இந்த நிலையில் நான் யார் சொன்னதையும் காதில் போட்டுக்கொள்ளாமல் அவனை வேலைக்கு வைத்துக் கொண்டேன். வயிறு முதுகோடு முதுகாய் ஒட்டிக்கொண்டிருந்தது. எங்கள் கொட்டிலைச் சுத்தப்படுத்துவதும் மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிப் போவதுமே தூரனுடைய வேலை. இந்த வேலைக்கு வேளைக்கு அரைப்படி அரிசி கொதிக்க வைத்துப் போட வேண்டியிருக்கிறதே என்று என் மனைவி முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வாள்.

தூரன் யாரையாவது அண்டித்தானே வாழ வேண்டும்? ஓர் ஊன்றுகோல் கிடைத்தாலொழிய அவன் வாழ முடியாது. அவனுக்கு ஊன்றுகோலானவன் மற்றோர் ஊன்றுகோலை அவனுக்குக் காண்பிக்காவிட்டால் அவனைத் தன்னிடமிருந்து விடுவிக்க முடியாது. அவனை ஓரிடத்தில் அமர்த்தாவிட்டால் அவனுடைய சிற்றப்பன் குடிக்க முடியாது. இப்படியாக நான் ஒவ்வொரு வருஷமும்





தூரனை வேலைக்கு அமர்த்திக் கொண்டே இருந்தேன்.

சிற்றப்பன் என்னிடமிருந்து எப்பொழுதும் ஒரு வருஷத்துப் பணத்தை முன்னதாகவே வாங்கிக்கொண்டிருந்ததனல், தூரனை விடுவித்துக் கொள்ளும் பேச்சுக்கு இடமே இல்லை.

தூரன் என்னிடம் வந்து சேர்ந்தபோது எப்படி இருந்தானே அப்படியே இப்பொழுதும் இருக்கிறுன். நீங்கள் வைதாலும் அவனுக்குக் கோபம் வராது. புகழ்ந்தாலும் சந்தோஷம் இராது. அவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நாய் குரைத்தால் அதை யானை லட்சியம் செய்கிறதா? அப்படித்தான் அவன் இருப்பான்.

ஆகையால், 'தூரன் மனிதனே அல்ல, மரக் கட்டை' என்பதுதான் எங்கள் எல்லாருடைய அபிப்பிராயம். சுமார் பத்து வருஷ காலமாக எங்கள் ஊர் மாடுகள் எல்லாவற்றையும் மேய்ப்பவன் தூரன்தான். அவன் சாதாரணமாக இருநூறு மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டு போவான்.

என் வீட்டு மாடுகள் இரண்டு மூன்றைக் கவனித்துக்கொண்ட தூரனுக்கு இந்த இருநூறு மாடுகளைக் கவனிக்கும் தொல்லை எப்படி வந்தது என்று நீங்கள் கேட்பீர்கள். எனக்கும் அது புரியவில்லை. மாடுகளை அவனிடம் விடுபவர்களுக்கும் அது தெரியவில்லை. எப்படியோ இது பழக்கத்துக்கு வந்துவிட்டது. முதல் முதலில் எல்லார் வீடுகளிலும் மாட்டைக் கவனிக்க ஆட்கள் இருந்தார்கள். நாளடைவில் கட்டுமஸ்தான ஆட்கள் எல்லாரும் சம்பளத்துக்கு வேலை செய்வதை விட்டுச் சொந்த விவசாயத்தையும் வியாபாரத்தையும் கவனிக்கத் தொடங்கினுர்கள். ஆகையால் எங்கள் ஊரில் மாட்டைக் கவனிக்க ஆளே கிடைக்கவில்லை. மெல்ல மெல்லத் தூரன் போகும்போது அவன் பின்னுல் தம் மாடுகளையும் அவிழ்த்து விடத் தொடங்கினுர்கள். மாடுகளும் பழக்கம் காரணமாகத் தூரனுடனேயே மேய்ச்சலுக்குப் போய் வரலாயின.

பத்து வருஷங்களாக இப்படியே ஊர் மாடுகளை எல்லாம் தூரனே மேய்த்து வருகிறுன். பல மாடுகள் யாருடையவை என்பது கூட அவனுக்குத் தெரியாது. ஆனுல் அவன் என் மாடுகளை ஓட்டிப் போகும்போது ஊர் மாடுகளும் தயாராக வந்து நிற்கும். மாடுகளின் சொந்தக்காரர்களும், "பிரமாதமாக இவன் என்ன செய்துவிடப் போகிறுன்? ஒரு கன்றுக் குட்டியைத் தடுக்கக்கூட இவனுல் முடியாது. கையாலாகாத கபோதி. மாடுகள் தம்பாட்டுக்குப் போகின்றன, வருகின்றன" என்று சொல்லிவிடுவார்கள்.



என் மனைவி மட்டும், "இவனுக்கு நம் வீட்டில் சுடச் சுடச் சாப்பாடு, கட்டத் துணி, இவனுடைய சிற்றப்பனுக்குப் பணம். பெயரளவில் நம் வீட்டுச் சம்பள ஆள் இவன்; செய்யும் வேலையோ ஊர்மாடுகளை எல்லாம் மேய்ப்பது" என்று தினந்தோறும் புலம்புவாள். தூரனும் பேசாமல் இருப்பான்; நானும் பேசாமல் இருப்பேன்.

இப்படித் தன்பாட்டுக்கு மாடு மேய்த்துக் கொண்டு வந்த தூரனுக்கு கூலி கிடைக்காவிட்டாலும், தாராளமாகத் திட்டுக்கள் கிடைத்தன. தூரன் மாடுகளை ஓட்டிக் கொண்டு ஊர் எல்லைக்கு வரும் வேளைக்குச் சரியாக ஆற்றுக்கு நீராடப் போன சாமாச்சார் எதிரே வருவார். மழையானுலும் குளிரானுலும் ஆற்றில் முழுகுவதை விடுவதில்லை என்று அவர் விரதம் பூண்டிருக்கிறுர். அவருடைய பத்து மாடுகளும் தூரனுடன் போகின்றன. சாமாச்சார் அப்படியும் இப்படியும் புகுந்து மாடுகளின் நடுவே வழியை உண்டாக்கிக் கொண்டு போவார்.

சாமாச்சாரின் பின்னுலேயே காவேரியம்மாள் வருவாள். காவேரியம்மாளின் நாலு பசுக்களையும் தூரன்தான் மேய்க்கிறுன். மடியைப் பற்றியும் திட்டைப் பற்றியும் விளக்குவதற்கு எங்கள் ஊரில் காவேரியம்மாள்தான் மனுஸ்ம்ருதியும் தர்ம சாஸ்திரமும். வைத்தியரிடம் நோயாளிகள் வருவது போல் ஆசாரங்களைப் பற்றிய சந்தேகங்கள் தோன்றியவர்கள் எல்லாரும் இந்த அம்மாளிடந்தான் வருவார்கள். இந்த அம்மாளுக்கு நாள் முழுதும் எப்போதும் வேலை இருந்து கொண்டே இருக்கும். அவள் உடம்பிலிருந்து தண்ணீர் சொட்டச் சொட்ட ஈரப் புடைவையுடன் வருவாள். அவளும் தூரனைத் திட்டுவாள்.

தூரனைப் போன்ற சோனி, இவ்வளவு மாடுகளையும் அடக்கி ஆளமுடியும் என்பது எனக்குக் கனவிலும் தோன்றவில்லை. அந்தச் சக்தி அவனுக்கு இல்லை என்று நான் தீர்மானித்து விட்டதனுல் அவன் இந்தப் பத்து வருஷ காலமாக என் கண் முன்னேயே அந்த வேலையைச் செய்துகொண்டிருந்தாலும் நான் அவனுக்கு ஆற்றல் உண்டென்று ஒப்புக்கொள்ளவில்லை. ஊரில் உள்ள மற்றவர்களுக்கும் இதே அபிப்பிராயந்தான்.

பதினைந்து நாட்களுக்கு முன் ஒரு நாள் பொழுது விடிந்த பின்னும் தூரன் வரவில்லை. எங்கள் வீட்டு மாட்டுக் கொட்டில் வெறிச்சோடிக் கிடந்தது. கொட்டிலில் கிடந்த சாணத்தை எடுப்பார் இல்லை.

பன்னிரண்டு மணி இருக்கும். தூரனுக்கு ஜுரத்தோடு 'பிளேக்'





கட்டியும் இருக்கிறது என்னும் செய்தி வந்தது. மருந்து கொடுத்தனுப்பினேன்.

அப்புறம் பார்க்க வேண்டுமே, எங்கள் வீட்டில் ஜனங்கள் நுழைந்ததை! ஊர்க்காரர் அத்தனை பேரும் எங்கள் வீட்டு மாட்டுக் கொட்டகையை முற்றுகை போட்டார்கள். ''தூரன் எங்கே? தூரன் எங்கே? மாடுகளை ஓட்டிப் போக நேரம் ஆகவில்லையா? நாசமாய்ப் போனவன்! மட்டம் போட வேளை போது கிடையாது.'' இப்படி ஒவ்வொருவரும் வாயில் வந்தபடி திட்டினார்கள். 'தூரன் வரவில்லை; அவனுக்குப் பிளேக் வந்திருக்கிறது' என்று சொன்னபோது யாரும் நம்பவே இல்லை. அவனும் மனிதன் தானே?

முதல் நாள் எப்படியோ சமாளித்துவிட்டோம். அன்றிரவு புரோகிதர் வீட்டு மாடுகள் பால் கறக்கவில்லை. சாமாச்சார் வீட்டு எருமை சுரப்பு விடவில்லை. காவேரி அம்மாள் வீட்டுப் பசு உதைத்தேவிட்டது. கொக்கையாவின் வீட்டுக் கன்றுகள் எல்லாம் என்ன மாயம் செய்தனவோ பசுக்களின் பாலை ஊட்டி விட்டன. மூர்த்தியின் வீட்டு மாடுகள் கட்டுத்தறியிலிருந்து அறுத்துக் கொண்டு போய், மாய்கனுடைய வயலில் மேய்ந்துவிட்டன. மாய்கன் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்து மூர்த்தியின் வீட்டின்முன் பெரிய பஞ்சாயத்தைக் கூட்டிவிட்டான். நரசிம்ம மூர்த்தியின் இருபது பசுக்களை லச்சிமன் பட்டியில் அடைத்துவிட்டான். எங்கும் எல்லா வீடுகளிலும் வாசலிலும் நாலு பேர் கூடிக் கூடித் தூரனைத் திட்டிக்கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலை விழித்தவுடன் சாமாச்சார் வீட்டில் குளித்தார். அவர் ஆற்றில் நீராடுவதை விட்டது அன்று ஒரு நாள்தான். நீராடியவுடன் பாகவத பாராயணம் செய்வது அவர் வழக்கம். அன்று அதுவும் நடக்கவில்லை. அவர் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு, மாடுகளைத் தாமே மேய்ச்சலுக்கு ஓட்டிக் கொண்டு போனார். மாடுகள் திசைக்கு ஒன்றாக ஓடத் தொடங்கின. தூரன், 'ஹோ, ஹோ, சீ, சீ!' என்றால் மலையடிவாரத்துக்கு நேராகப் போகும் மாடுகள், அன்று மனம் போனபடி ஓடி அவரைத் திணற வைத்தன.

இந்த அவஸ்தைகளை எல்லாம் பார்த்த புரோகிதர், மூக்கணாங்கயிறு போட்ட எருமைக்குத் தாம்புக் கயிற்றை எடுத்துக்கட்டி மற்றொரு நுனியைப் பிடித்துக்கொண்டு புறப்பட்டார். ஊர் எல்லையை அடைவதற்கு முன்பே எருமை நாலுகால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தது. புரோகிதர். 'அப்பாடா!' என்று உட்கார்ந்து விட்டார்.

தூரன் மட்டம் போட்டதனால் சீட்டுக் கச்சேரி நின்றுவிட்டது. சீட்டாடிக்கொண்டிருந்தவர்கள் மாடுகளோடு காடு மேடெல்லாம் அலைந்தார்கள். தூரன் ஒன்றும் பேசாமல் தன் பாட்டில் மாடுகளுடன் போனாலே அமைதியாக மேய்ச்சலுக்குப் போய் வந்துகொண்டிருந்தன. இப்போதோ புரோகிதர், சாமாச்சார், கொக்கையா, நரசிம்ம மூர்த்தி இவர்களை எல்லாம் கண்டால் புலிகளைக் கண்டவைபோல் அவை சிதறி ஓடிவிடுகின்றன. தூரன் இல்லாததனால் கிராம வாழ்வே தலைகீழாகிவிட்டது.

பின்னும் பதினைந்து நாளாகியும் தூரனைக் காணவில்லை. அன்று மத்தியான்னம் விசாரித்ததில் தூரனுக்கு உடல் தேறிவிட்டதென்றும் அன்று என் வீட்டு வேலைக்குப் போயிருக்கிறான் என்றும் தெரிந்தது. 'இவனுக்கு நோய் வந்தது நல்லதாயிற்று. இனிமேலாவது இவன் மதிப்பு எல்லாருக்கும் தெரியும்' என்று நினைத்தேன். வரும் வழியில் சாமாச்சார் வீட்டில் பாராயணக் குரல் மற்ற நாட்களைவிட உரக்க ஒலித்தது. புரோகிதர் தம் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து சாவதானமாய்ச் சந்தி பண்ணிக்கொண்டிருந்தார்.

நான் வீட்டுக்குப் போன சமயத்துக்குச் சரியாகத் தூரன் மாடுகளை ஓட்டிக்கொண்டு புரோகிதர் வீட்டுக்கு நேராக வந்துகொண்டிருந்தான். வழக்கம்போல் புரோகிதர் அவனைத் திட்டினார்.

தூரன் இல்லாமல் சிரமப்பட்டவர்கள் இப்போது மீண்டும் அவனைத் திட்டலானார்கள். 'இது அவர்கள் சுபாவம்; நாய் வாலை நிமிர்த்த முடியுமா?' என்று யோசித்துக் கொண்டே நான் வீட்டை நோக்கி நடந்தேன். ★

தமிழ்: மஹிளா



TOM & BAY 6855 G

## தீபாவளி வாழ்த்துக்கள்

நம்முடைய வாடிக்கைக்காரர்
களுக்கும் நண்பர்களுக்கும்
ஆந்தமான தீபாவளி
வாழ்த்து! வளம்பெருகும்
புத்தாண்டு வாழ்த்து!

Kirloskar

**கிர்லோஸ்கர் ஆயில் எஞ்சின்ஸ் லிமிடெட்**
பதிவு செய்த ஆபீஸ்—எல்பின்ஸ்டன் ரோடு
கிர்க்கி, பூனா-3 (இந்தியா)

---

ESTD. 1930 PHONE: 24404

# THE ROYAL FURNISHING COMPANY

36, DICKENSON ROAD : BANGALORE-I (CANTT.)

**Cabinet Makers, Designers**
**Interior Decorators, Agents**



*Manufactured by*
Highly Skilled Workers with the best material; designed to suit the taste of different people; having a large range of varieties with best quality and long lasting capacity.

*Agents for*
'Dunlopillo' Mattresses, Pillows, Cushions and its produc s in all sizes and varieties.

*Also availabl:*
Cotton Mattresses in all sizes and in all varieties.

*Dealers for*
Handloom Tapestry : Salva springs. Decolam Sheets etc.

*Stockists for*
Kurl-on (Rubberised Coir Mattresses).

# நான் — 'மஹி'

இரவின் இருள்வழியில்
எங்கிருந்தோ வருகின்றேன்;
அருகில் கதவிருக்க
அக்கதவைத் தட்டுகிறேன்;
உருவில் குரலொன்றங்
குள்கேட்கும்: "யாரப்பா?"
உரிமையுடன் சொல்கின்றேன்:
"உம், நான்தான்!" என்கின்றேன்.

"நானென்றால் யாரப்பா?
நன்றாகத் தெரியவில்லை;
நானென்று நான்சொல்வேன்,
நானென்று நீசொல்வாய்.
நானென்றே அனைவர்களும்
நவில்வதனால் நான்யாரோ?
நானென்றே ஒருபொருளும்
நானிலத்தில் கிடையாதே?"

எண்ணத்துள் ஒருசுழற்சி;
ஒரு கேள்வி; நான் யார்தான்?
விண்ணுலகம் சொல்கிறது,
விடையாக: "நான்தானே"
மண்ணுலகம் சொல்கிறது:
"மனிதா! நீ, நான்அன்றோ?"
தண்ணீரும் தழல்காற்றும்
தாம்தாமே நான்என்னும்.

நான்என்றால் என்னவென்றே
நான்தேடித் திரிகின்றேன்.
நானென்றால் உடற்சுமையா?
நானென்றால் உயிர்ச்சுவையா?
நானென்றால் கைகாலா?
நானென்றால் தலைமுகமா?
நான்என்ப துடல்என்றால்
நலியுடலம் கிடப்பானேன்?

## வேறு

உடலை விட்டே வெளிவருவேன்
உடலும் நீண்டு நிமிர்ந்துவிடும்.
உடலும் நானே இல்லையடா;
உயிரும் சேர்ந்த பின்னாலே
நடனம் ஆடி நடிக்குதடா.
நானென் றெண்ணித் திரியுதடா!
திடமா யிதனை யுணர்ந்தவுடன்
திசைகள் மீறிப் பரவுகிறேன்.

திசைகள் எங்கும் நானானேன்;
திரியும் பறவை நானானேன்;
அசையுங் காற்றும் நானானேன்;
அலையுங் கடலும் நானானேன்;
நிசியும் பகலும் நானானேன்;
நிலவும் ரவியும் நானானேன்;
கசியும் அன்புப் பேரொளியில்
ககனம் முற்றும் நிறைந்திருந்தேன்!



# நீர்த் தெய்வம் — வி. துரைசாமி

கன்னங் கருங்கடல் நீர்த்துளியாய்ப்— பல
காலம் உருண்டுருண் டோடிவந்தேன்
என்னைக் கதிரவன் ஈர்த்துவிட்டான்— வானில்
எங்கும் எழிலியாய் வார்த்துவிட்டான்.

நெல்லுக்குள் முத்தாய் நிமிர்ந்திடுவேன்— தென்னை
நெற்றில் அமுதாய் வளர்ந்திடுவேன்
புல்லுக்கும் நல்வண்ணப் பூத்தருவேன்— இந்தப்
பூமியில் யாரும் சமம்எனக்கே.

பொட்டல் வெளியில் பனமரத்தில்— நுங்குப்
பூங்குலை யாகவே தூங்கிடுவேன்
வெட்டி யகழ்ந்திடும் பூமிக்குள்ளும்— யான்
விந்தைக் கிழங்கென மேவிடுவேன்.

வேங்கையின் தாகத்தைப் போக்குதல்போல்— அதி
வேகமான் தாகமும் நீக்கிடுவேன்
மாங்கனிக் குள்சார மாகிடுவேன்— எட்டி
மாமரக் காயுள்ளும் மேவிடுவேன்.

பாவத்தை என்னில் கழுவிடுவார்— ஆயின்
பாவன மாகி விளங்கிடுவேன்
தேவன் முடியில் திகழ்ந்திடுவேன்— என்னைத்
தெய்வமாய் மாந்தர்கள் கைதொழுவார்!



# ஒரு குரல் — சாலை இளந்திரையன்

இங்கி ருந்து கூப்பிடும்,
அங்கி ருந்து கூப்பிடும்,—
இங்கும் அங்கும்எங்கும் எங்கும்
சென்று சென்று கூப்பிடும்.
பொங்கு சோலை உள்ளிலே
பூம ரத்தின் மீதிலே
போயி ருந்து வாய்தி றந்து
கூப்பி டுங்க ருங்குயில்!

என்ன சொல்லிக் கூவுதோ?
யாரைத் தேடிக் கூவுதோ?—
இங்கி ருக்கும் கோடிப் பேரில்
யாவர் பேரைச் சொல்லுதோ?
முன்னும் யாரும் கேட்க'லை
இன்னும் யாரும் கேட்க'லை—
முற்றும் காதில் வீழ்கி லாத
பாட்டும் இங்கி ருக்குமோ?

மாக னிந்து கேட்டதோ?
பைந்த ளிர்சி வக்குதே!—
வாகை அந்தப் பாட்டுக்கேட்டு
வண்ணம் ஏந்தி நிற்குதே!
தோகை மீது கண்களைத்
தூக்கி வைத்த மாமயில்
தூய நாத கீதந் தன்னில்
சொக்கு மிஞ்சிப் போகுதே!





## நன்மை பெருகிவிடும்
### நெல்லை ஆ. கணபதி

வீட்டின் அருகிலுள்ள—தென்னை
வீசும்; இளநீர்தரும்.

போட்ட மலர்ச்செடிகள்—நன்ருய்ப்
பூக்கும்; மணங்கொடுக்கும்.

தோட்டம் முழுவதிலும்—காய்கள்
தோன்றச் செடிவளரும்.

ஊட்டம் கொடுத்ததற்கோ—பசுத்தான்
உலகினிற் பால்கொடுக்கும்.

நாட்டில் இவையனைத்தும்—என்றும்
நல்ல பலன்கொடுக்க.

கேட்டில் திளைத்துமனம்—பொல்லாக்
கேடு செயத்துணியும்.

ஏட்டில் படித்ததெல்லாம்—வீணய்
எங்கோ மறைத்துவிடும்.

சீட்டுக் கிழியும்வரை—உள்ளச்
செருக்கே மிகுந்திருக்கும்.

ஆட்டிப் படைத்துவரும்—தெய்வம்
அறிந்தும் பொறுத்திருக்கும்.

கூட்டில் இருந்தஉயிர்—சென்ருல்
கொடுக்கும்; அனுபவிப்போம்.

நாட்டோர் இதைஉணர்ந்தால்—வாழ்வில்
நன்மை பெருகிவிடும்.

வீட்டில் அறம்வளரும்;—வாழ்வு
வெற்றி நமக்களிக்கும்.



## ஒன்றே ஒன்று!
### தமிழழகன்

நினைவோன் றிழைத்துவிடு;—அதில்
நிலையோன் றிழைத்துவிடு!—அது
வினைவென்ற வாறு வெளிப்படும் போதுயிர்க்
வ்வென்ற வாறொரு காவியச் சொல்லுற
நினைவோன் றிழைத்துவிடு;—அதில்
நிலையோன் றிழைத்துவிடு!

சொல்லொன் றிழைத்துவிடு;—அதிற்
சுவையோன் றிழைத்துவிடு!—அது
சில்லென்ற தென்றற் சிறுபொழு தானதும்
நில்லென்று சொல்லினும் நில்லாப் புயல்பெறச்
சொல்லொன் றிழைத்துவிடு;—அதிற்
சுவையோன் றிழைத்துவிடு!

செயலொன் றிழைத்துவிடு;—அதிற்
சிறப்போன் றிழைத்துவிடு!—அது
இடியென மின்னி இமைப்போ தகன்றதும்
புயலென மின்னிப் புதுயுகம் நாட்டிடச்
செயலொன் றிழைத்துவிடு;—அதிற்
சிறப்போன் றிழைத்துவிடு!

பலனென் றிழைத்துவிடு;—அது
பலர்க்கென் றிழைத்துவிடு!—அது
நலனென் றிழைந்து நலியுகம் தேய்ந்தும்
நிலன்நன் றுயர்ந்து நிறைதவம் விம்மிடப்
பலனென் றிழைத்துவிடு;—அது
பலர்க்கென் றிழைத்துவிடு!

தவமொன் றிழைத்துவிடு;—அதில்
தரமொன் றிழைத்துவிடு!—அது
நவமென் றெழுந்தொரு நாடக வாழ்க்கையில்
சிவமென் றுயர்ந்தொரு செம்பொரு ளாகிடத்
தவமொன் றிழைத்து விடு;—அதில்
தரமொன் றிழைத்து விடு!



## சொப்பன மாயக்காரி
### தம்பி சீனிவாசன்

நித்திரை ராணி பெற்ற குமாரி
சொப்பன சோபன சுந்தரியே
அற்புத மந்திர தந்திரியே!

சொப்பன குமரி, அற்புத நங்கைஉன்
சுழலில் வீழ்வதோர் ஆனந்தம்
எழில்நி றைந்தபே ரானந்தம்!

காயும் பசியும் பிணியும் இல்லை;
கவலைகள் இல்லாக் கனவுலகம்
நினைவுகள் அறியாத் தனிஉலகம்!

சொப்பனப் பெண்உன் அற்புத உலகில்
சோர்வும் மறையும்; பயம்அழியும்;
ஆர்வம் நிறையும் ஒளிஎழுமே!

மண்ணும் விண்ணும் மருவும் உலகம்
எண்ணம், உணர்வுகள் பல நூறு.
வண்ணம் ஏழோ? எழுநூறு!

சுந்தரி உனது மந்திரக் கோல்எனைத்
தொடுமோ? கனவுகள் பிடிபடுமோ?
முடியாக் கனவின் நிழல்படுமோ?

# தீப்தி

## இல்லந்தோறும் பிரபலமாகிவிட்ட பெயர்

வியாபாரச் சின்னமாகிய "தீப்தி" என்பது உயர்தரத்தின் சின்னமாக விளங்குகிறது. தீப்தி லாந்தர்கள் இந்தியா முழுவதிலும் இல்லங்களுக்கு இன்றியமையாத சாதனங்கள் என்று பிரக்யாதி பெற்றுவிட்டன. காஸ் ஜனதா கிரஸின் குக்கர்களும் இதேபோல அத்தியாவசியமான பொருளென்று பெயர் பெற்றுவிட்டன. இயக்க எளிதாயும், உறுதியான அமைப்புடையதாயும் சிறப்பாகச் சேவை புரிவதுமான இந்தக் கிரஸின் திரிவகை குக்கர் அடுப்புகள் நேரத்தையும் எரிபொருள் செலவையும் மிச்சமாக்கும்.

தீப்தி எனமல் சாமான்கள் : மற்ற தீப்தி தயாரிப்புகளுக்கு இணையான மதிப்பும் பெருமையும் உடையவை.

**தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்,**
67, பிபின் பிஹாரி கங்குலி தெரு,
கல்கத்தா - 12.



தீப்தி லாந்தர்கள்



காஸ் ஜனதா



எனமல் சாமான்கள்

Kalpana - om 27A.TAM



WITH BEST COMPLIMENTS FROM

**PRASAD PROCESS PRIVATE LTD.**

ARCOT ROAD, VADAPALANI, MADRAS-26


R. Natarajan

இன்று சனிக்கிழமை. நாளை மாலையில் இலக்கியக் கருத்தரங்கம். ஆனால் என்ன முயன்றும் என்ன எழுதுவதென்று ஒன்றும் தோன்றவில்லை. எழுதுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால் போதும்; எந்தச் சமயத்திலும் எதைப் பற்றியும் எழுத வல்ல எழுத்தாளர்கள் சிலர் உண்டு. நான் அவர்களைப் போன்றவன் அல்ல. அருகில் கிடந்த செய்திப் பத்திரிகையை எடுத்துச் சினிமா விளம்பரங்களைப் பார்க்கலானேன். இந்தியப் படத் தொழிலில் ஜேம்ஸ் பாண்டின் முத்திரை எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கிறது என்பதை இந்த விளம்பரங்களைப் பார்த்தே ஊகிக்க முடிகிறது. இதே மாதிரி ஒரு கதையைக் கருத்தரங்கில் ஏன் படிக்கக்கூடாது? கேட்பவர்களும் 'பேஷ்! பேஷ்!' என்பார்களே.



டோக்ரி மொழிச் சித்திரம்

# தொல்லை பிடித்த வேலை

## நீலாம்பர் தேவ் சர்மா

ஆனால் கதையை எப்படித் தொடங்குவது? நான் சிந்திக்கலானேன். 'ஓர் இளைஞன் தன் அம்பாஸடர் வண்டியில் உட்கார்ந்திருக்கிறான். குறுகலான தெருவில் வண்டி போகிறது. அங்கே நெரிசலும் அதிகம். தெருத் திருப்பத்தில் சைக்கிளில் போகும் பெண் ஒருத்திமீது உராய்ந்தபடி வண்டி நிற்கிறது. ஆனால் அவள் சைக்கிளிலிருந்து விழுந்துவிடுகிறாள். இளைஞன் வண்டியிலிருந்து அவளை நோக்கி வருகிறான். அவள் ஆடைகளை உதறியபடி எழுந்து நின்று சினம் பொங்க, ''சுத்த அநாகரிகம்!'' என்கிறாள். அவன், ''ஸாரி, வெரி ஸாரி; ஆனால் இது என் தவறல்ல; நீங்களே 'ராங் ஸைடி'ல் வந்தீர்கள்'' என்கிறான். பிறகு புன்முறுவலுடன், ''புறப்படுங்கள், உங்களை வீட்டில்கொண்டுவிடுகிறேன்'' என்கிறான். அவள் அலட்சியக் கோபத்துடன், ''வேண்டாம், நன்றி!'' என்கிறாள். அவன் உடனே, ''பரவாயில்லை; மீண்டும் தேவைப்பட்டால் உதவிக்குக் காத்திருக்கிறேன்'' என்று சொல்லி, இராணுவக் காப்டன் ஒரு பிரிகேடியருக்குச் செய்வது போல ஒரு 'சல்யூட்' அடிக்கிறான். அவள் போனதும் சிரித்துக்கொண்டே வண்டியில் உட்கார்கிறான். அக்கம் பக்கத்தவர்களைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. ஏன் கவலை இருக்க வேண்டும்? அவன் கதாநாயகன் ஆயிற்றே! பிறகு சீழ்க்கை அடித்துக்கொண்டே போய் விடுகிறான்.'



ஆரம்பம் அப்படி ஒன்றும் மோசம் அல்ல; இன்னும் இரண்டொரு சம்பவங்களைச் சேர்த்தால் கதை முடிந்து விடும். நான் அலமாரியைத் திறந்து காகிதத்தை எடுத்தேன். பேனாவைத் தேடத் தொடங்கினேன். அதை ஆபீஸில் மறந்து வைத்துவிட்டது திடீரென்று நினைவுக்கு வந்தது. இப்போது என்ன செய்வது? இங்கும் அங்கும் பார்த்தேன். பழைய பேனாவும் மசிக்கூடும் கிடைத்தன. இவை போதுமே என்று எண்ணி, இரண்டு வரிகளே எழுதினேன். பேனாவிலிருந்து மை கொட்டவே, அதை



உதறினேன். விவாக ரத்துச் செய்தவள் கணவனை விட்டு ஒதுங்குவது போல, 'நிப்' உடனே பேனாவை விட்டு விலகியது. ஆறுபோலப் பெருகிய மை கொட்டாதபடி பேனாவில் 'நிப்'பைப் பொருத்த எல்லா முயற்சிகளும் செய்தேன்; ஏதும் பயன் இல்லை. எனக்கு இடுப்பு ஒடிந்தாற்போல ஆயிற்று. நான் பெருமூச்சு விட்டேன்.

பக்கத்து அறையில் காய்கறி நறுக்கிக்கொண்டிருந்த என் மனைவி பயந்து, ''ஏன், என்ன ஆகிவிட்டது?'' என்று கேட்டாள்.

''உனக்கு என்ன தெரியும், என் தொல்லைகளைப்பற்றி?'' என்று அசட்டையாகச் சொன்னேன். பிறகு அறைக்குள்ளேயே வட்டமிட்டேன்.

அவளுக்கு என்ன தோன்றியதோ? ''இப்படியே வட்டமிட்டுக்கொண்டு இருக்கப் போகிறீர்களா, அல்லது வீட்டு வேலையைக் கவனிக்கப் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''ஏன், என்ன?''

''நாளைக்கு என்ன கிழமை?''

''ஞாயிற்றுக் கிழமை. அதனால் தான் தொல்லை.''

''உங்களை யார் அவர்களை விருந்துக்கு அழைக்கச் சொன்னது?''

நாளை வரப் போகும் விருந்தாளிகளைப்பற்றி அவளுக்குக் கவலை; எனக்கோ நாளைக்குக் கதை எழுதிப் படிக்க வேண்டிய தொல்லை.

''போய்க் கறிகாய் வாங்கி வாருங்கள்.''

''உத்தரவு!'' என்று பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன்.

**மா**ர்க்கெட்டில் என்ன என்ன வாங்கினேனோ எனக்கே தெரியாது. வழி முழுவதும் கதையைப் பற்றியே யோசித்தேன்: இளைஞன் ஒரு நாள் ஏதோ வாங்கும் சாக்கில் ஒரு ஸ்டோருக்குள் நுழைகிறான். ஆனால் அங்கே அந்தப் பெண்ணையே கண்டு திடுக்கிடுகிறான். பெண்ணும் அவனைக் கண்டு திகைக்கிறாள்.

''நீயா இங்கே? இந்த ஸ்டோர் சொந்தக்காரனின் நடத்தை சரியல்ல என்பது உனக்குத் தெரியாதா? அவன் மீது தேசத் துரோகக் குற்றங்கள்கூட உண்டே!'' என்கிறான் அவன்.

''தெரியும். ஆனால் என்ன செய்வது? குடும்பத் தொல்லைகளைச் சமாளித்துத்தானே ஆக வேண்டும்? அது சரி, உங்களுக்கு இவனைப்பற்றி எப்படித் தெரியும்?''

சட்டையின் உட்பையிலிருந்து இளைஞன் தன் அடையாளச் சீட்டை மெதுவாக அவளுக்குக் காண்பிக்கிறான்: ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர், சுரேஷ் கோயல், கோடு நம்பர் ஸி. ஐ. டி. 303.

சுண்டுவிரலை மோவாயில் வைத்த வண்ணம் அவள் தவிதவிப்புடன், ''என்னைக் காப்பாற்றுங்கள், சுரேஷ்; எப்படியாவது தப்ப வைத்து விடுங்கள்!'' என்கிறாள்.

சுரேஷ் பூனையைக் கொஞ்சுவது போல், ''ஆகா! கட்டாயம், குழந்தாய்!'' என்கிறான்.

**கா**துச் சவ்வு பிய்ந்து போகும்படி கடுமையான அந்தக் குரல் காதில் விழாமலிருந்தால் நான் இன்னும் என்னவெல்லாம் சிந்தித்திருப்பேனோ, தெரியாது. என் எதிரில் கதாநாயகியைப் போலவே அதே வயதும் அழகும் உள்ள பெண் ஒருத்தியுடன் வந்துகொண்டிருந்தாள், நடுத்தர வயதுள்ள ஓர் அம்மாள். ''பார்த்துப் போகக் கூடாது? அப்பன் வீட்டுத் தெருப்போல் அல்லவா வருகிறார்கள்?'' என்ற அந்தக் குரல் அவளுடையதுதான்.

''ஸாரி, மன்னித்து விடுங்கள், அம்மணி!'' என்று என் பிசகை உணர்ந்து சொன்னேன்.

''விடு, அம்மா! இவர்தாம் 'ஸாரி' என்று சொல்லி விட்டாரே! ஆனால் முதலில், கோல் இல்லாமல் சூர்தாஸ் தாம் வருகிறாரோ என்று நினைத்தேன்!'' என்றாள் அந்தப் பெண். (சூர்தாஸ் பார்வை இல்லாதவர்; கிருஷ்ண பக்தர்.)

கோபம் ஒரு புறமும் வெட்கம் மறு புறமுமாக முகம் சிவந்துவிட்டது எனக்கு. பேசாமலே அங்கிருந்து புறப்பட்டேன். எனக்குப் பின்புறத்திலிருந்து சிரிப்பொலி கேட்டது. அந்தப் பெண்ணின் சிரிப்புத்தான் அது.

**நா**ன் சிந்திக்கத் தொடங்கினேன்: நான் கற்பனையில் எண்ணிய கதை உண்மைச் சம்பவமாக இப்போது தோற்றியது. அந்தப் பெண் என் கதையில் வருகிறவள் போலவே இருந்தாள். அவள் என்னைக் குருடன் என்று சொல்லாமல் சூர்தாஸ் என்று சொன்னதே எனக்குப் பெருமைதான்.

அப்போது 'சடக்'கென்று திடுக்கிட்டேன். ஜட்காக்காரன் ஒருத்தன் கோபத்துடன், ''குருடனா ஐயா, நீ? நடுத் தெருவில் நடக்கிறாயே! ஏதாவது விபத்து நடந்தால் எங்கள் பாடு தான் ஐயா, ஆபத்து!'' என்றான்.

நான் பதிலே சொல்லவில்லை. சொல்ல என்ன இருக்கிறது? ஜட்காக்காரன் சொன்னது உண்மைதானே? கதை எழுதும் தொல்லைதானே என்னைச் சூர்தாஸாகவும் குருடனாகவும் ஆக்கியிருக்கிறது? இன்னும் என்ன என்ன ஆகவேண்டுமோ!

இப்படி நினைத்தபோதே பின்னாலிருந்து யாரோ என் தோள்பட்டையை ஓங்கித் தட்டினார். வலி தாங்காமல் நான் முனகினேன். திரும்பிப் பார்த்தால் இலக்கிய மன்றத்தின் செயலாளர்தாம் சிரித்தபடியே அங்கே நிற்கிறார். ''என்ன, எழுத்தாளர் ஸார், நாளைக்குப் படிக்க வேண்டிய கதையை எழுதிவிட்டீர்களா?''

கதை என்று சொன்னதுமே என் கோபம் முழுவதும் செயலாளர் மீது பாய்ந்தது. கடுகடுப்புடனும் எரிச்சலுடனும், ''நீங்களும் ஆச்சு, உங்கள் கதையும் ஆச்சு! எழுதும் தொல்லை இல்லையென்றால் இத்தனை ஏச்சுக்கும் பேச்சுக்கும் நான் ஆளாகியிருக்க மாட்டேனே!'' என்றேன்.

அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை; கேள்விக்குறியுடன் என்னைப் பார்த்தார். நானும் மறு பேச்சு இன்றி நடந்தேன். பின்னாலிருந்து செயலாளர், ''சுத்த முட்டாள், பைத்தியம்!'' என்று முணுமுணுப்பது கேட்டது.

நான் திரும்பிப் பார்க்கவே இல்லை; ஏதும் பேசவும் இல்லை. முன்பு கிடைத்த இரண்டுடன் இந்த இரண்டு பட்டப் பெயர்களையும் இணைத்து ஆறுதல் பெற்றேன். ★

தமிழ்: ஆர். நடராஜன்

# THE POWERFUL ENGINE TODAY

## PERKINS P6-354



**Vehicle Diesel Engine Rated to develop 120 BHP at 2800 RPM**

**Industrial Diesel Engine Rated to develop 90 BHP at 2250 RPM**

***Salient Features:***

1. Direct injection combustion system and distributor type fuel injection pump with automatic advance and retard. Also hydraulic governing which ensures proper measuring of the fuel in direct proportion to the load. Exceptionally low fuel consumption under all operating conditions.
2. New standard for diesel power weight ratio and compactness which means extra pay load.
3. Timing drive through helical gears.
4. Designed to reduce maintenance to a minimum—all components requiring routine servicing easily accessible. No external oil pipes.
5. 12 volt electrical equipment ensures positive starting under all normal conditions.

Simpson & Co Ltd

Head Office & Works:
202, Mount Road, Madras-2.

Branches: Bangalore - Ootacamund
Tiruchirapalli - Secunderabad



S-358


தீபாவளி முதல்
சென்னை :
பிளாசா
அகஸ்தியா
70 MM
மேகலா
ராம்
மற்றும் தென்னாடெங்கும்
அமர்ஜோதி மூவீஸ்
உயிரா
மானமா
கதை - வசனம் - டைரக்ஷன்
K.S. கோபாலகிருஷ்ணன்
ஸ்டுடியோ :
கற்பகம்
தயாரிப்பு : K.S. சபரிநாதன்
ELEGANT
G.H. RAO

"பிப்பீ - டாம்டாம் சிப்பாயே,
பிரியமாய் என்னை மணப்பாயே!"

"பாப்பா, உன்னை மணப்பவர்க்கே
பட்டுக் குல்லாய் தருவாயோ?"

பாப்பா எங்கோ போய்வந்து,
பட்டுக் குல்லாய் தான்கொண்டு
பூப்போல் தந்தாள் - சிப்பாயும்
போட்டுக் கொண்டான் பரிவோடு.

"பிப்பீ - டாம்டாம் சிப்பாயே,
பிரியமாய் என்னை மணப்பாயே!"

"பாப்பா, உன்னை மணப்பவர்க்கே
பட்டுச் சட்டை தருவாயோ?"

பாப்பா எங்கோ போய்வந்து,
பட்டுச் சட்டை தான்கொண்டு
பூபபோல தந்தாள் - சிப்பாயும்
போட்டுக கொண்டான் பரிவோடு.






# பிப்பீ-டாம்டாம்

"பிப்பீ - டாம்டாம் சிப்பாயே,
பிரியமாய் என்னை மணப்பாயே!"

"பாப்பா, உன்னை மணப்பவர்க்கே
பாதரட்சை தருவாயோ?"

பாப்பா எங்கோ போய்வந்து,
பாதரட்சை தான்கொண்டு
பூப்போல் தந்தாள் - சிப்பாயும்
போட்டுக கொண்டான் பரிவோடு.

"பிப்பீ - டாம்டாம் சிப்பாயே,
பிரியமாய் என்னை மணப்பாயே!"

"பாப்பா, முன்பே திருமணம்நான்
பண்ணிக் கொண்டேன்
தெரியாதோ?"



"அக்கா, அக்கா! தலை தீபாவளிக்கு அத்தான் மாத்திரம் தனியா வந்தா, தலைக்கு 108 யானை வெடி வைக்கிறதாப் பிள்ளை யாருக்கு வேண்டிக்கிட்டிருக்கோம். உம். ரூபாயை எடு!"

*தயாரிப்பு: 'லெமன்'*



# காகசுந்தரி

காட்டிலே வெயில் கனஜோராய்க் காய்ந்து கொண்டிருந்தது. கூடவே மழையும் பெய்துகொண்டிருந்தது. விசேஷமாக, இளவரசி காகசுந்தரிக்கும் இளிச்சவாய் நரிக்கும் அன்று திருக்கல்யாணம் ஏற்பாடாகியிருந்தது.

காகசுந்தரிக்கு நரி மாப்பிள்ளையைக் கண்ணால் காணச் சகிக்கவில்லை. இளிச்சவாய் நரி, இளவரசியின் சித்தி காகலங்கிணியை எப்படியோ நைச்சியம் செய்து கல்யாணத்துக்கு நாள் குறித்துக் கொண்டு விட்டது.

பாவம் காகசுந்தரி, தகப்பனார் காகராஜன் காலமான பிறகு சித்திலங்கிணியின் கட்டுப்பாட்டிலே இருந்தாள். அவளுக்கோ தன் அத்தான் காகசிம்மனைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று சின்ன வயதிலிருந்தே ஆசை. ஆனால் அவள் ஆசையெல்லாம் வெறும் தோசையாகிற நேரம் நெருங்கிவிட்டது.

'ஜானவாசம்' போன இளிச்சவாய் நரி, சாரட்டு வண்டியிலே ஜாம் ஜாமென்று திரும்பிக்கொண்டிருந்தது. கூடவே காட்டு வழியெல்லாம் ஒரே குள்ளநரிக் கும்பல். கூச்சலும் ஊளையும் தாளவில்லை!



# கல்யாணம்



அதோ மாப்பிள்ளை இளிச்சவாய் நரி மாளிகை வாசலில் வெகு டிப்டாப்பாக வந்து இறங்கியது. இரு பக்கத்திலிருந்தும் வயதான சுமங்கலிகள் மாப்பிள்ளை நரிக்குத் திருஷ்டி சுற்றிப்போட்டு, ஆரத்தி எடுத்தார்கள்.

"அடி காகசுந்தரி, என் தங்கமே! உன் தலைவிதி இப்படியா ஆக வேண்டும்?" என்று பாட்டி நாகமணி பரிதாபப்பட்டாள். "முகூர்த்த வேளை நெருங்கி விட்டது. கல்யாணப் பெண்ணை அழைத்து வாருங்கள்!" என்று புரோகித நரி மிகவும் அவசரப்பட்டது. மாப்பிள்ளை இளிச்சவாய் நரிக்கு அதற்குமேலே ஆத்திரம்!

அந்த வேளையிலே, பெண் வீட்டுப் புரோகிதரான காகேசுவர சர்மா மூன்று பெரிய வடைமாலைகளை ஒரு தாம்பாளத்தில் ஏந்திக்கொண்டு மாப்பிள்ளை நரியை எதிர்கொண்டார்.

"முன்னாடி இந்த வடைமாலையைச் சாத்திக்குங்கோ மாப்பிள்ளைவாள்! பின்னாடி நம்ம காகசுந்தரி உங்களுக்குக் கல்யாண ஹாரம் போடுவா!", என்றார் அவர் கறாராக.

"அதுவும் சரிதான் ஓய்! இப்படிக்





கொண்டுவாரும் வடைமாலையை!'' என்று புரோகித நரி அதை வாங்கி அடுத்தாற்போல் பட்டும் பவிஷுமாய் நின்றுகொண் டிருந்த இளிச்சவாய் நரியின் கழுத்திலே போட்டது.

உடனே பெண் வீட்டைச் சேர்ந்த காகேசுவர சர்மா ஏதோ ஜாடையாகக் கைதட்டினர். அவ்வளவுதான்; கல்யாணப் பந்தலில் ஆங்காங்கே உட்கார்ந்திருந்த காக்கைகளெல்லாம், ''காகா! காகா!'' என்று கத்திக்கொண்டே மாப்பிள்ளையின் கழுத்தில் விழுந்த வடை மாலையை நோக்கிப் பாய்ந்தன. மாலையில் மொத்தம் நூற்றெட்டு வடைகள் இருந்தன. அந்த நூற்றெட்டு வடைகளைத் தலைக்கு ஒன்ருகக் கொத்திக்கொண்டு அவை பறந்துவிட வேண்டும் என்று ரகசிய ஏற்பாடு.

இந்த ஏற்பாடு ஒன்றும் மாப்பிள்ளை நரிக்குத் தெரியவே தெரியாது. இது ஏதோ காகராஜ குடும்பத்துக் கல்யாண வழக்கமாக இருக்கும் என்று நினைத்தது. ஆனுல் என்ன களேபரம்! உடம்புச் சதையையும் உருட்டு விழியையும் கொத்திப் பிடுங்குவது போல் காக்கைகள் பத்தும் நூறுமாய் அதன் மேல் பாயவே, இளிச்சவாய் நரி பயந்து நடுங்கி விட்டது.

பார்த்துக் கொண்டேயிருந்த காகேசுவர சர்மா பல்லை இளித்தார். ''அதுக்குள்ளே பயந்துட்டேளே மாப்பிள்ளைவாள்! இன்னும் இது மாதிரி உங்களுக்கு இரண்டு வடைமாலை சாத்தவேண்டியிருக்கே! எல்லாம் எங்க பரம்பரை வழக்கம். கல்யாணப்பிள்ளையின் கழுத்து வடைமாலைக்குக் கல்யாணமாகாத காக்கைகள் போட்டிபோடறதிலே ஒரு விசேஷமிருக்கு. ஒண்ணுமில்லே. உங்க கழுத்து மாலையிலிருந்து ஒரு வடையைக் கொத்தி எடுத்தா, பிரம்மசாரிக் காக்கைக்கெல்லாம் உடனேயே கல்யாணம் நிச்சயமாயிடும்! ஆமா! இப்போ ரெண்டாவது வடைமாலையை உங்க மச்சினன் காகசுந்தரன் போடுவான். அடுத்தாப்போல மூணுவது வடைமாலையைக் கல்யாணப் பொண்ணு போடுவா! எங்கே, கழுத்தை நீட்டுங்கோ!'' என்ருர்.

''சரிதான்!'' என்று மாப்பிள்ளை நரியும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு கழுத்தை நீட்டியது. கெட்டி மேளம் முழங்க இரண்டாவது வடைமாலையை மைத்துனன் காகசுந்தரன் நரி அத்தான் கழுத்தில் போட்டான். காகேசுவர சர்மாவும் கைதட்டினுர்.

அவ்வளவுதான், மறுபடியும் நூறும் இருநூறுமாய்க் காக்கைகள் மாப்பிள்ளை நரிமேல் பாய்ந்தன. சதையைப் பிடுங்காத குறையாக வடைகளைக் கொத்திக்குதறின இளிச்சவாய்நரிக்கு மயக்கம் போடும்போல் ஆகிவிட்டது.

அடுத்தாற்போல் கெட்டிமேளம் முழங்கியது. மூன்ருவது மிகப் பெரிய வடை மாலையைத் தாம்பாளத்திலிருந்து எடுத்துக் கொண்டார் காகேசுவர சர்மா. கல்யாணப் பெண் காகசுந்தரி கையிலே கொடுத்து ஏதோ ஜாடை காட்டினுர். கரகோஷமும் செய்தார். அவ்வளவுதான்—

அங்கே கூடியிருந்த ஆயரம் காக்கைகளும் ஒரே படையாகப் பாய்ந்து மாப்பிள்ளையை மொய்த்துக் கொண்டன. கழுத்திலே வடைமாலை இருக்கிறதா இல்லையா என்றுகூடப் பார்க்காமல், இளிச்சவாய் நரி, புரோகித நரி, மற்றும் உறவுக்கார நரிகள் மேலெல்லாம் பாய்ந்து கொத்திப் பிடுங்கின.

அந்த அமளி துமளியில் இளவரசி காகசுந்தரி வடைமாலையுடன் பந்தல் முகப்புக்கு வந்தாள். அங்கே அலங்காரமாகக் காக்கை வாகனத்தில் பூஜை செய்து வைத்திருந்த சனீசுவர பகவான் கழுத்திலே வடை மாலையைப் போட்டாள்.

அந்தச் சமயம், சனிபகவானின் வாகனமாயிருந்த காக்கைப் பொம்மை உயிர் பெற்றது. ''காகாகா!'' என்று கத்தியது. அந்தக் கத்தலில் தன் அத்தான் காகசிம்மனை அடையாளம் கண்டுகொண்டு காகசுந்தரி ஆச்சரியம் அடைந்தாள். தானும், ''காகாகா!'' என்று ஆனந்தமாய்க் கத்தினுள். தன் கழுத்தில் பூட்டியிருந்த காக்காய்ப் பொன் மாலையைக் கழற்றிக் கல்யாண மாலையாகக் காகசிம்மனின் கழுத்திலே போட்டு விட்டாள்.

கெட்டிமேளம் முழங்கியது. பூவும் அட்சதையுமாய்க் கைநிறைய வாரி இறைத்த காகேசுவர சர்மா காக்கைத் தம்பதிகளை ஆசீர்வதித்தார்.

அப்போதுதான் அந்தப் பக்கமாக, மூக்கிலே வியர்த்தாற்போல், பறந்து வந்தாள் சித்தி காகலங்கிணி.

வந்து எல்லார் காதிலும் விழுகிற மாதிரி, ''அந்த நாசகார நரிக்கும்பலுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்கணும்னுதான் நான் அதுகள் சொல்படியெல்லாம் ஆடினேன். எப்படி நம்ம நாடகம்? எல்லாக் காக்கைகளுக்கும் கல்யாண வடை கிடைச்சுதோ, இல்லையோ?'' என்று காகேசுவர சர்மாவிடம் குசலம் விசாரித்தாள். ★

## சொல்லுங்கள் பார்க்கலாம்!



காந்திஜியின் கருத்தைக் கவர்ந்த மூன்று குரங்குகள் இவை. கிட்டத்தட்ட இவைகள் போதிக்கும் கருத்துக்களை நம் தமிழ்ப் பாட்டி ஒளவையும் ஒரு பாட்டில் அருளிச் செய்கிருர். அது என்ன?

◦ விகட கவி ◦

? மோரு போருமோ?

! தேரு வருதே!

– திருப்பிப் பார் –

இதெல்லாம் வழக்கமாகப் பலரும் திருப்பித் திருப்பிச் சொல்லக் கேட்டிருக்கிறீர்கள். இதே மாதிரி நீங்களாகவே சில வார்த்தைகளை யோசித்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்.



விடை கடை. சி:பில்




பூவா தலையா போட்டுப் பார்த்து அதன்படி வெள்ளைக்கொடிக்காரரோ, வர்ணக் கொடிக்காரரோ முதலில் புறப்பட வேண்டும். அதாவது படத்திலுள்ள ஒன்பது ஸ்தானங்களில் விருப்பம் போல் ஏதாவது ஒன்றில் தம் கொடியை முதல்வர் இறக்க வேண்டும்.

(இரு நபர்கள் - மும்மூன்று கொடிகள்.)





அதன் பிறகு அடுத்து அடுத்து மாற்றி மாற்றி, இரு கட்சிக்காரரும் அவரவர்க்குப் பிடித்த ஸ்தானங்களில் (புள்ளிகளில்) தங்கள் தங்கள் கொடிகளை நிறுத்தி விடவேண்டும்.

அதற்கும் பிறகு அவரவர் கொடிகளை அக்கம் பக்கத்தில் இருக்கும் ஸ்தானங்களுக்குப் போடப்பட்டிருக்கும் பாதை வழியாக நகர்த்தி விளையாட வேண்டும். வெள்ளைக் கொடிகளோ, வர்ணக் கொடிகளோ ஒரே நேர்கோட்டில் நிற்கும்படி விளையாட்டுப் போக்கில் யார் சாமர்த்தியமாக நகர்த்தி நிறுத்துகிறாரோ அந்த முறை அவரே ஜயித்தவர். தோற்றவர் தம் கொடிகளை எதிராளியுடன் மாற்றிக்கொண்டு ஆடி ஜயிக்கலாம்.



# நல்ல தீபாவளி




தீபாவளி - நல்ல தீபாவளி!
சிரிக்காத பெண்பிள்ளைக்கும்
சிடுமூஞ்சி மாப்பிள்ளைக்கும்
தீபாவளி - நல்ல தீபாவளி!

அத்தை போட்ட
பின்னல் பெண்ணால்
அவிழ்க்க முடியல்லே;
சொத்தைப் பல்வலி
மாப்பிள்ளைக்குச்
சொல்ல வழியில்லே!

கட்டுற வேட்டி,
சட்டை, துண்டு
காணச் சகிக்கல்லே;
வெட்டின கிராப்பு
வெட்கக் கேடு,
வெளியே நிற்கல்லே!

மச்சினன்மார்
பட்டாஸ் கணக்கு
மண்டையில் ஏறல்லே;
அச்சுப் பிச்சு
மாப்பிள்ளையாம்,
ஆத்திரம் தீரல்லே!

சப்பைக் கட்டு
வேண்டாம் சம்பாச்
சாதம் வடிக்கல்லே;
குப்பை மேனிக்
கீரைக் கூட்டும்
குழம்பும் பிடிக்கல்லே!

மென்று விழுங்குறா்
மாப்பிள்ளைசார்
வேலை ஓடல்லே;
அன்றைக் கென்று
வாழ்த்துத் தபால்
ஆரும் போடல்லே!

தீபாவளி -
நல்ல தீபாவளி!
சிரிக்காத
பெண்பிள்ளைக்கும்
சிடுமூஞ்சி
மாப்பிள்ளைக்கும்
தீபாவளி -
நல்ல தீபாவளி!



**சொல்லுங்கள்
பார்க்கலாம் - விடை**

தீயாரைக் காண்பதுவும்
தீதே......
தீயார்சொற் கேட்பதுவும்
தீதே......
தீயார் குணங்கள்
உரைப்பதுவும் தீதே....

**திருப்பிப் பார்..**

? தோடு ஆடுதோ?
? மாடு ஓடுமா?
! மேரு பாருமே!
! நீர்வார் நீ!
! போர் பார் போ!







# DYES
# CHEMICALS
# PHARMACEUTICALS

REGISTERED TRADE MARK

**THE ATUL PRODUCTS LIMITED** ATUL, VIA. BULSAR, WESTERN RAILWAY

மதராஸ், ஆந்திரா, கேரளா பிரதேச ஏஜெண்டுகள்: படேல் அண்ட் சன்ஸ், 5, கிடங்குத் தெரு, சென்னை-1.
மதராஸ் மற்றும் கேரள ஏஜெண்டுகள்: டி. டி. கிருஷ்ணமாச்சாரி அண்ட் கோ., 331-333, தம்புச் செட்டி தெரு, சென்னை-1.
மைசூர் பிரதேச ஏஜெண்டுகள்: யு. என். சர்மா, 300, சிக்பெட், பங்களூர்.


உங்கள்
வயலில்
தடையின்றி
தண்ணீர்
தண்ணீர் கிடைப்பதற்கு,
உங்கள்
பம்ப் செட்டுக்கு
தகுந்த
பாதுகாப்பு
அளிப்பது
அவசியம்
ஒரு சிறந்த ஸ்டார்ட்டரின் பாதுகாப்புள்ள
பம்ப் செட்டினால் மட்டுமே தங்கு தடையின்றி
தண்ணீர் அளிக்க முடியும். சிறந்த விளைச்சலுக்கு
நிறைந்த தண்ணீர் தேவை; அல்லவா? ஆகவே, நல்ல
ஸ்டார்ட்டரையே வாங்குங்கள். அதாவது, ஒரு எல்டி-எல்கே
(LT-LK) ஸ்டார்ட்டர் வாங்குங்கள். உங்கள்
தேவைக்கேற்றபடி நேரடியாக லைனில் இயங்கும்
எம்கே1 ஸ்டார்ட்டர், ஸ்டார்-டெல்டா
ஸ்டார்ட்டர் மற்றும் எம்வி1 ஸ்டார்-டெல்டா
ஸ்டார்ட்டர்கள் உள்ளன. ஓவர்லோடிங் ஏற்பட்டாலோ
கரெண்டின் வோல்டேஜ் குறைந்தாலோ, இந்த ஸ்டார்ட்டர்கள்
உடனடியாக 'ட்ரிப்' செய்து மின்சாரத்தை நிறுத்தி, உங்கள்
மோட்டார் எரிந்து விடாமல் பாதுகாக்கும் என்று நீங்கள் நிச்சயமாக
நம்பலாம். ஆகவே சீக்கிரமே ஒரு எல்டி-எல்கே ஸ்டார்ட்டர்
வாங்கி உங்கள் பம்ப் செட்டின் மோட்டாருக்கு பூர்ண பாதுகாப்பு
அளியுங்கள். பின் வரும் ரகங்கள் உள்ளன: நேரடியாக லைனில்
இயங்கும் எம்கே 1 ஸ்டார்ட்டர்—7.5. எச்.பி. வரை உள்ள
மோட்டார்களுக்கு; எம்கே 1 ஸ்டார்-டெல்டா ஸ்டார்ட்டர்—
15 எச்.பி. வரை உள்ள மோட்டார்களுக்கு; எம்வி1 ஸ்டார்-
டெல்டா ஸ்டார்ட்டர்—7.5. எச்.பி. வரை
உள்ள மோட்டார்களுக்கு.
ஸ்விட்ச்கியர் டிவிஷன்
லார்சன் அண்டு டூப்ரோ லிமிடெட்
தபால் பெட்டி 278, பம்பாய்-1
தபால் பெட்டி 619, கல்கத்தா-16
தபால் பை 5247, சென்னை-2
தபால் பெட்டி 323, புது டெல்லி-1
SWT 840



## நல்ல வெட்பமான நாட்களிலும் குளுமையோடு இருப்பதற்கு

டாடா டைக்ஸ்டைல்ஸ் அளிக்கும் நெடுநாள் உழைப்பவை, நீடித்திருப்பவை. அன்றாடம் அணிவதற்கேற்ற நெசவு நயமும் தரமும் படைத்தவை, நாளெல்லாம் குளுமை தவழும் புதுமையோடு வைத்திருப்பதற்கான பிரிண்டுகள், வண்ணங்கள். கடின உழைப்புக்கென்றே உருப்பெற்றவை. நன்றாக துவைத்து, அணிந்து, ஆனந்தம் அடையுங்கள்.

**உங்களுக்கு மிகச் சிறந்த பேரம்: டாடா டெக்ஸ்டைல்ஸ் தரும் வாயில்கள்.**

**TATA** Textiles

ULKA-TT-105 TAM

# TOP SPEED and a HEAVY LOAD



## ...The most Proven Test of CLEVITE ENGINE BEARINGS

CLEVITE - closely associated with automobile manufacturers since 1919 - have all along been an integral part of progressive improvements that engineers developed to increase speed and load carrying capacity.

Continually conducting assiduous metallurgical research into better materials and technical solutions to automobile manufacturers' problems, CLEVITE bearings today embody all the results of 50 years experience.





**BIMETAL BEARINGS LTD.**

In technical collaboration with Clevite Corporation, Cleveland, Ohio, U.S.A.

**Sembiam, Madras-11**

BB-142




**TANGABASPAM TOBACCO**

**KARAIKUDI**

# HAND PUMPS OR POWER PUMPS

*whatever you may require*

Various types and sizes of pumps are available from the MYERS and WASP pump lines.

It may be a Hand pump or a Power pump. It may be for a small capacity or a large capacity. It may be only a lift pump or a pump for pumping water from a river, tank, shallow well, deep well or tubewell. **We HAVE IT.**

Write to us giving full particulars of your requirements and we shall send you a catalogue and prices.

**Myers** or **Wasp**

**Water Supply Specialists Pvt. Ltd**

330, Thambuchetty Street,
MADRAS 1.





WS-76





திரு A. முருகேச முதலியார்,

ஸ்தாபகர், நியூடன் அண்டு கம்பெனி,
பிளாக் மேகர்ஸ் & நியூடன் டைப் பவுண்டரி

வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் உளம் கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்

●

ஆப்டோன், லைன், மூவர்ணப்
பிளாக்குகளுக்குச் சென்னையில்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

●

குறித்த நேரத்தில் திருப்திகரமான முறையில்
பிளாக்குகள் தயாரித்துத் தரப்படுகின்றன.

●

விவரங்களுக்கு:

நியூடன் அண்டு கம்பெனி

80, வாலாஜா ரோடு, மதராஸ்-2.
டெலிபோன்: 86729


Diwali Greetings
Corona
மாடாடோர்
ரூ. 30-95
கரோனா
அளிக்கும் விழாக்கால வெகுமதி
ஸோபியா
ரூ. 8-25
Sophie
எவர் கூல்
ரூ. 11-95
ஏய்ர் கூல்
ரூ. 10-95
(வரிகள் தனி)
கரோனா ஸாஹு கோ. லிட். 221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு, பம்பாய்-1.
CS 124 TM

## எங்கள் வாடிக்கையாளர்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்கள்



### கிஷன் க்ரைண்ட்மாஸ்டர் இப்போது உங்களுடைய பெரிய அளவு அரவைகளுக்கு ஏற்றபடி ஃபீடர் புனல் அமைப்புடன் கிடைக்கிறது.

உங்களுடைய அன்றாட உலர்ந்த அல்லது ஊற வைத்த அரவை வேலைகளுக்கு வசதியான பயனுள்ள பணி புரியும் கிஷன் க்ரைண்ட்மாஸ்டர் இப்போது தாராள இடவசதியுள்ள ஃபீடர் புனல் அமைப்பு கொண்டதாக, பெரிய அளவு அரவை வேலைகளுக்கு ஏற்றதாக வருகிறது.

கிஷன் கிரைண்ட்மாஸ்டர் மணிக்கு 8 கிலோ கிராம் விகிதத்தில் வேலை செய்கிறது. உங்கள் தேவைக்கேற்ற விதமாக கோதுமையை ரவையாகச் செய்து தருகிறது கிஷன் க்ரைண்ட்மாஸடர். ஊறவைத்த அரிசி, பருப்பு வகைகளை, பஜ்ஜி, வடை போன்ற பொரியல் தின்பண்டங்களுக்கு ஏற்ற விதத்தில் கூழான மாவாக அரைத்துத் தருகிறது



கிஷன் மசாலா கிரைண்டர்

நினைவில் கொள்ளுங்கள்:
எந்தவகை மசாலாவானாலும் தேங்காய் சேர்த்திருந்தால் கூட, 5 நிமிடத்திலிருந்து 15 நிமிடத்திற்குள் பொடி அல்லது மாவாக அரைத்து தருகிறது கிஷன் க்ரைண்ட்மாஸ்டர். ஃபீடர் புனல் அமைந்த கிஷன் க்ரைண்ட்மாஸ்டரில் மசாலாக்களை அரைப்பதற்கு தேவையான மசாலா கிரைண்டரும் இருக்கிறது.

கிஷன் கிரைண்ட்மாஸடர் மைனர் : 100 கிராம் முதல் ½ கிலோ கிராம் வரை.

கிஷன் கிரைண்ட்மாஸடர் மேஜர் : ¾ கிலோ கிராமிலிருந்து 4 கிலோ கிராம் வரை.

கிஷன் மினி 50 கிராம் முதல் 250 கிராம் வரை.



இப்போது ஃபீடர் புனல் அமைந்த கிஷன் க்ரைண்ட்மாஸடர் அதிக வசதியாயும், அதிக சுலபமாயும் இருக்கிறது. இன்றே ஒரு கிஷன் க்ரைண்ட்மாஸடர் வாங்குங்கள்.

துண்டுப் பிரசுரத்துக்கு எழுதுங்கள்:

**கிஷன் மானுபாக்சரிங் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.**

186, ஜகாரியா பந்தர் ரோடு, சிவரி, பம்பாய்-15.
போன்: 379461 & 374186

KMI.7

சென்னை, ஆந்திரா, கேரளா, மைசூர் ராஜ்யங்களுக்கு ஸோல் ஏஜெண்டுகள்:—

மெஸர்ஸ் பொன்னப்பா அண்டு கோ.,
மெர்க்குரி ஹவுஸ், 1/21, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8.

உங்கள் தொழிற்சாலையில்

# சரிபாதி செலவில் இப்பொழுதைவிட இருமடங்கு அதிக வெளிச்சத்தைப் பெற பிலிப்ஸ்

## TL ப்ளூரஸன்ட் லாம்ப்கள்

பொருத்துங்கள்

40 வாட்ஸ் பவருள்ள ஒரு பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்ப், 100 வாட்ஸ் பவருள்ள ஒரு சாதாரண பல்பைவிட இருமடங்குக்கு மேல் பிரகாசமான ஒளியைத் தருகிறது என்று சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. பராமரிப்புச் செலவுகூட சுமார் பாதி தான் ஆகிறது.

அது மட்டுமல்ல. பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்ப்,சாதாரண பல்பைவிட 5 மடங்குக்கு மேல அதிக காலம் நீடிக்கிறது. ஆகவே, உங்கள் தொழிற்சாலையில் பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்ப்கள் பொருத்துவதனுல், மின்சாரக்கட்டணமும், புதுலாம்ப்கள் வாங்கும் செலவும் கணிசமாகக் குறைந்து, நாளடைவில் மிகவும் சிக்கனமாயிருக்கும்.

பிலிப்ஸ் TL ப்ளூரஸன்ட் லாம்ப் கண்ணுக்கு இதமான பிரகாசமான ஒளியைத் தருவதுடன், அதன் ஒளியும் எங்கும் ஒரே சீராகப் பரவுகிறது. ஆகவே கண்களுக்குச் சோர்வோ சிரமமோ இருப்பதில்லை. உங்களுடைய ஊழியர்களும் உற்சாகத்துடன் சுறுசுறுப்பாக வேலை செய்வார்கள். பிலிப்ஸ் ப்ளூரஸன்ட் லாம்ப்கள் 'ஒயிட்' மற்றும் 'கூல் டேலைட்' என்ற இரண்டு வகைகளில் கிடைக்கின்றன.

ப்ளூரஸன்ட் லாம்ப்கள் மட்டுமல்லாமல், வெள்ளைப் பூச்சு பூசப்பட்ட ஆர்ஜண்டா மற்றும் பூச்சு இல்லாத லாம்ப்கள், மெர்குரி வேபர் லாம்ப்கள் மற்றும் பல்வேறு உபயோகத்துக்கான நானுவித லாம்ப்களை பிலிப்ஸ் தயாரிக்கிருர்கள்.








பழைய ஸ்டார்ட்டரினுல் உங்களுடைய புதிய லாம்ப் கெட்டுப்போக இடம் அளிக்காதீர்கள்-அதற்காக, புதிய லாம்ப் வாங்கும் பொழுது தவருமல் ஒரு புதிய ஸ்டார்ட்டரையும் வாங்குங்கள்.



ப்ளூரஸன்ட் லாம்ப்களிலிருந்து அதிகரித்த ஒளியையும், நீடித்த உழைப்பையும் பெற, அவற்றிற்கு உகந்த பிலிப்ஸ் பாலியெஸ்டர் பாலஸ்டையே உபயோகியுங்கள்.

# பிலிப்ஸ்

PHILIPS

இதமான ஒளி தருவதில் இணையற்றது

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL. 7322 R

MAFATLAL GROUP

# விழாக்கால வைபோகம்!



விழாக் காலங்களுக்குப் பொருத்தமான துணிகள். வசீகரம் மிக்க வாயில்கள்—உங்களைப் போலவே களி துள்ளும் உயிர்த் துடிப்பு. வண்ணமிகு ப்ரிண்டெட் பாப்ளின்கள். மடிப்புக் கலையாப் பண்பு மிக்க எடுப்பான சூட்டிங். சொல்லவா வேண்டும், மபத்லால் க்ரூப் துணிகள் தான்!

**மபத்லால் க்ரூப்**

2×2 வாயில்கள் & லெனோக்கள்
பிரிண்டெட் பாப்ளின்கள்

2×2 காட்டன் மற்றும் 'டெரீன்'/காட்டன் ஷர்ட்டிங்குகளும் சூட்டிங்குகளும் ஃபர்னிஷிங் துணிகள்.

நியூ ஷொராக் (ஷொராக்), அகமதாபாத் - நியூ ஷொராக் நாடியாத் - ஸ்டாண்டர்டு, பம்பாய் - ஸ்டாண்டர்ட், (நியூ சைனா), பம்பாய். ஸ்டாண்டர்ட், தேவாஸ். ஸாஸூன், பம்பாய். ஸாஸூன் (நியூ யூனியன்), பம்பாய் - ஸூரத் காட்டன், ஸூரத் - மபத்லால் ஃபைன், நவ்ஸாரி - மிஹிர் டெக்ஸ்டைல்ஸ். அகமதாபாத்

M 416 TM




ஒளித் திருநாள்...எங்கும் மகிழ்ச்சி ததும்பும் நன்னாள்

# பிரிட்டானியா பிக்ஸ்

விருந்துகளின் போது அளிக்கச் சிறந்த பிஸ்கட்டுகள்

பிரிட்டானியா

பிரிட்டானியா என்றால் உயர்தரத்திற்கு உறுதியான பெயர்

# Are You Burning Money?



## A BURNT MOTOR IS MONEY BURNT

A failure in any one phase of your three phase electric supply system can burn out your expensive motor resulting in loss of valuable production time and costly replacements.

Astroyd phase failure protector is an electronic control device that will automatically shut off your motor, should any failure occur in any phase of your electric supply system, thereby saving your motor from burning out and you from burning money. This equipment is capable of controlling any type of electrical motor to any capacity.



Astroyd also manufacture a wide range of electronic process control equipment covering temperature, moisture, light, liquid or solid flow and level controls for industrial and domestic applications.

*for further details contact Sole Selling Agents*
***M/s Libra (Agencies) Pvt. Ltd.,***
***36-B Mount Road, Madras-2***

PRESTY.




# பார்கோ

காஸ் மான்டில்கள்



உன்னத ஒளி கூட்டி
நீடித் உழைப்பவை.

தயாரிப்பாளர்கள்:
ஃபார்கோ மான்டில் ப்ராடக்ட்ஸ்
சர்வோதயா பவன், 39/40 ஆதர்ஸ் காலனி
லிபர்டி கார்டன் சமீபம், மலாட் (மேற்கு)
பம்பாய்-64 (என் பி)

RPC

# முன்னேற்றம் ஒரு முக்கியத் தேவை







கம்பீரமாகக் காட்சியளிக்கும் BEL தொழிற் சாலையில் சேவையையே குறிக்கோளாகக் கொண்டுள்ள இன்ஜினீயர்களும், டெக்னீஷியன் களும், அக்கௌண்டெண்டுகளும் ஆராய்ச்சியாளர் களும், நிர்வாகிகளும் நாட்டின் பலபாகங்களிலிருந்து வந்து பணிபுரிகிறார்கள். நாம் இந்தியர்கள் என்று பெருமை கொள்பவர்கள். அவர்கள் நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டங் கொண்டவர்கள். எலெக்ட்ரானிக்ஸில் நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்யும் ஆக்கப் பணியிலே ஈடுபட்டவர்கள். அதில் பெருமை கொள்பவர்கள்.

BEL

பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: ஜலஹள்ளி
பெங்களூர்-13

# பண்டிகை இன்பங்கள்

பன்மடங்காகவே



## நேஷனல் எக்கோ

டிரான்ஸிஸ்டர்
இப்போது விசேஷ

## விழாக்கால விலைகளில்



ரூ.95

மாடல்பிடி-1501
எடுத்துச் செல்ல எளிதான, டிரான்ஸிஸ்டர். 7 டிரான்ஸிஸ்டர்களும், டயோடுகளும் மற்றும் ஆம்பாண்டு இரு வர்ண பிளாஸ்டிக் காபினெட். ஆறு 1-5 வோல்ட் செல்களில் இயங்க வல்லது எக்சைஸ் இல்லை.

எக்சைஸ இல்லை.

ஸிலிகோன் 321
போர்ட்டபிள் டிரான்ஸிஸ்டர் 8 டிரான்ஸிஸ்டர்களும் டயோடுகளும் 2 பாண்டு. இரு வர்ண வார்ப்புடக் காபினெட் ஸ்லைடிங் பாண்டு ஸ்விட்ச் உட்பொருத்தப் பட்ட ஏரியல் வெளிப்புற ஏரியல் ஸாக்கெட்



ரூ.235



ரூ.328

மாடல் பிடி-1503x
போர்ட்டபிள் டிரான்ஸிஸ்டர் 9 டிரான்ஸிஸ்டர்களும் டயோடுகளும் 3 பாண்டுகள் 2 இரு வர்ண பாக காபினெட், 9-வோல்ட் ட்ரை பாட்டரி இயக்கம்

மாடல் எம்பிடி-1504
டிரான்ஸிஸ்டர் கம் மெயின்ஸ் செட் 13 டிரான்ஸிஸ்டர்களும் டயோடுகளும், 4 பாண்டுகள் ஒலிக் கட்டுப்பாடு, 6 டார்ச் செல்கள் பாட்டரி மூலம் அல்லது 230 வோல்ட் ஏ.ஸி. மெயின்ஸில் இயங்குகிறது



விலைகள் எக்சைஸ் தீர்வை உள்ளிட்டவை வரிகள் யாவும் தனி.

GRA

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ்
தி நேஷனல்-எக்கோ ரேடியோ & என்ஜினியரிங் கோ, லிமிடெட்டின் ஒரு பிரிவு.
பம்பாய் . கல்கத்தா , சென்னை . டெல்லி . பெங்களூர் . செகந்தராபாத் ,
பாட்னா . எரணாகுளம்.

NE-55 TM

*WHEREVER YOU ARE, WE ARE THERE!*

**In the busy city, In the sleepy village, on road, at sea—**
**wherever you are, we are there!**

**NEW INDIA**

INDIA'S LARGEST GENERAL INSURANCE COMPANY

*Offers you unexcelled service in*

**FIRE ★ MARINE ★ ACCIDENT**

**and various other types of General Insurance**
**OUR POLICY IS PROTECTION**

# The New India Assurance Company Limited

**New India Assurance Building, MAHATMA GANDHI ROAD, FORT, BOMBAY-1**




**festival**
SANDALIN TOILET POWDER

தூய சந்தனத்தின் நறுமணததுடன் மென் மையானது. நீராடி பெஸ்டிவல் சாண்டில் டாய்லெட் பவுடர் தூவிக் கொள்வதால் உடல் அரிப்பையும் துர் நாற்றத்தையும் போக்கி, மிருது தன்மையும் குளிர்ந்த சந்தனத்தின் நறுமணமும் நாள் பூராகவும் தேகத்தில் பரவச் செய்யும். இன்றே வாங்கி தினமும் உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர் :- **முரளி டிரேடர்ஸ், சென்னை-21**

Agent/M2510




ஆப்கன் ஸ்நோ-
அழகுச் சாதனங்கள்
எந்த வயசானாலும்
சருமத்துக்குச் சிறந்தவை

ஆப்கன் ஸ்நோ வளமான பொருள்களைக் கொண்டு பிரத்தியேகமாகச் செய்யப் படுகிறது. சருமத்தில் தானே ஈரம் உண்டாக உதவுகிறது. சுரசுரப்பையும் சிறிய கோடுகளையும் இயல்பாகவே போக்கி வழுவழுப்பாக்குகிறது. உங்கள் சருமம் மென்மையும் அழகும் பெற்று மேனிக்கு நீண்ட நாள் நிற்கும் அழகைக் கொடுத்து ஆரோக்கியமான சருமத்துக்குரிய இயல் பான ஒளியைத் தருகிறது.
ஆப்கன் முகப் பவுடர், க்ரீம் கேக், உதட்டுச் சாயம் இவை பொருத்தமான வர்ணங்களில் கிடைக்கும். ஆப்கன் நகச்சாயம் உங்கள் கரங்களுக்கு அழகான தோற்றத்தை அளிக்கும்.

**AFGHAN SNOW** BEAUTY AIDS

E. S. PATANWALA, BOMBAY-77 (INDIA)

# light the lamp of prosperity

Join
SUDARSAN Chit Funds.

SUDARSAN TRADING
COMPANY LIMITED
Regd. Office: Calicut-2

Largest Chit Fund Promoters

Central Office:
**SUDARSAN BUILDINGS,**
**WHITES ROAD,**
**MADRAS-14**



55 Branches all over at your Service




| 40 |
|---|
| SMD |

இந்தப் போட்டியில் கலந்துகொள்வதன் மூலம் நான் இந்தப் போட்டி ஆசிரியரின் முடிவே சரியானது, சட்டப்படி கட்டுப்படுத்தும் என்றும், மேலும் விட்க்விஸ் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என்றும் உறுதி கூறுகிறேன். ஒவ்வொரு தனிக் கூப்பனுக்கும் நுழைவுக் கட்டணம் ரூ.1. இந்த முழு பாரத்தின் (4 கூப்பன்கள்) நுழைவுக் கட்டணமான ரூ. 4. இத்துடன் மணியார்டர் ரசீது. இந்தியன் போஸ்டல் ஆர்டர் விட்க்விஸ் ரசீது பிரைஸ் கார்டு இத்துடன் இணைத்துள்ளேன்.

ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களில்

நெம்பர்..................................................
NAME ..................................................
ADDRESS..................................................
..................................................

———இங்கே கத்தரித்து முழுப் பாரத்தை அனுப்பவும்———

1. மனிதன் தன்னுள்ளேயே தானே நிஜமென்று எண்ண (முடியாத—தெரிந்துகொள்ளாத) மாபெரும் சக்திகளையும், உள்பொதிந்த திறன்களையும் வைத்திருக்கிறான்.

2. மக்களிடையே (ஒருமை - தொடர்பு) எப்பொழுதுமே நாகரிகத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு அவசியமான முன்னோடியாக இருந்துகொண்டிருக்கிறது.

3. சந்தேகமில்லாமல் ஆங்கில மொழிக் கல்வி நம்மிடையே பல (பிளவுகள்-கெடுதல்களுக்குக்) காரணமாய் இருக்கிறது.

4. (திருப்தி—பகுத்துணர்வு) இல்லாமல் அனுபவிக்கும் மனிதனுக்கு, வாழ்க்கை ஒரு பெரு நோய்.

5. ஒரு மக்கள் உயர்வான நாகரிகம் உடையவர்களாய் இருக்கலாம். ஆனால் (அவர்கள்) அதே அளவு (பண்பு—வளர்ச்சி)யற்றவர்களாய் இருக்கலாம்.

6. பகுத்துணர்பவனுக்கு வாழ்க்கை ஒளி, (மகிழ்ச்சி—அறிவு) முயற்சி, சாதனை, இன்பம், யாத்திரையும்கூட.

7. நிஜமான (ஜனநாயகம்—சரித்திரம்) உண்மைகளை நசுக்கக்கூடாது. எவ்வளவுதான் கசப்பாக இருந்தாலும்.

8. இதயத்தின் ஆட்சி முழுமையானது; புத்தி, அது (திறமை—சிறப்பு) மிக்கதானாலும் கீழ் இடத்தில்தான் இருக்க வேண்டும்.

9. எங்கும் பொருந்தும் (சமத்வம் - அறநெறியை) மீறி, ஒரு உலக ஒழுங்கு இருக்கமுடியாது.

10. புத்தியுள்ள எந்த மனிதனும் மனிதனின் (விடுதலை—ஞான) சோதனையில் பகுத்தறிவின் முக்கியமான பங்கை ஒப்புக்கொள்ளத் தயங்கமாட்டான்.

11. வாழ்க்கையின் துன்பங்கள், கசப்பான வேதனைகளின் இடையேகூட (மகிழ்வு - ஒளி) வீசும் கணங்கள் இருக்கின்றன.

12. ஒவ்வொரு மனிதனிலும் கடவுள் இருப்பாரேயானால், அப்பொழுது ஒவ்வொருவனும் நடைமுறையில் (தயாளனாக - முக்தி பெறக் கூடியவனாகத்)தான் இருக்க வேண்டும்.

13. நீதியின்பால் அன்பு ஒவ்வொரு மனிதனின் (சுதந்திரம்—வாழ்வின்) உரிமையை நீ அறிந்துகொள்ள வழிகாட்டும்.

14. உடைமைகள், (இன்பம் - அதிகாரத்தின்) மேல் நம்முடைய ஆசைக்கு முடிவில்லை. அது பெறப் பெற வளர்கிறது.

15. (கௌரவம்—தனிச் சலுகை) இல்லாத மனிதன், அதை உடையவனை வெறுக்கக்கூடும்.

16. விவேகமில்லாத அன்பு பக்தி குருட்டுத்தனமானது. (தியாகம்—சேவை) இல்லாமல் அது பயனற்றதும் ஆகும்.

17. எங்கேயும் ஓய்வு. (மனத்தெளிவு—பாதுகாப்பு) இல்லை.

18. தற்கால மனிதன் முன் எப்பொழுதும் இருந்ததைவிட மிக அதிக (புத்திசாலித்தனமும் - உணரும் திறனும்) படைத்தவனாக, பொறுமைசாலியாக இருக்கிறான்.

குறிப்பு: மேற்கண்டவைகள் இந்திய எழுத்தாளர்கள் மேற்கோள்களிலிருந்து எடுக்கப்பட்டவைகள். அவை முழுமையான வாக்கியங்கள். மற்றும் தனித்தன்மை பெற்றவை. இந்த ஆசிரியர்கள், எழுத்தாளர்களின் பெயர்களும் இந்தப் போட்டியின் விடையுடன் விட்குவிஸ் வீக்லியில் பிரசுரம் செய்யப்படும்.

**120** ஏஜண்டுகள்

**230** சஞ்சிகைகளில் விளம்பரம்

**15** மொழிகள்

முடிவு தேதி

23-10-68

சுதேசமித்திரனில் விடை

27-10-68

லிட்விக்ஸ் உங்கள் வீண நேரத்தைப் பயனுள்ளதாக ஆக்குகிறது.




- ரூ. 2 அனுப்பி லிட்க்விஸ் வார இதழ் 8 பிரதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அதிகார பூர்வமான விடைகளைப் பெற உங்கள் முகவரி எழுதப்பட்ட 10 காசு தபால் அட்டையை அனுப்பிவையுங்கள்.

## சென்னை ஏஜண்டுகள்

1. ஸ்டார் நியூஸ் ஏஜன்சி, 186, பிராட்வே கார்னர்.
2. ஆர். எஸ். கூப்பர் அன்ட் கம்பெனி, 182, மௌண்ட் சாலை.
3. சிட்டி புக் ஸ்டால், தாசப்பிரகாஷ் பில்டிங், பூந்தமல்லி நெடுஞ்சாலை.

## வெளியூர்

4. தீபக் ஏஜன்ஸி, 883, ரங்கை கௌடர் தெரு, கோவை.
5. ரோஸ் புக் ஸ்டால், 4, தெற்கு ரத வீதி, விருதுநகர்.
6. சங்கர் ஏஜென்ஸி, நியூஸ் ஏஜெண்ட், தூத்துக்குடி-2.

நுழைவுப் படிவங்கள் [பாரம்] பண ரசீதுகள், லிட்க்விஸ் வாரப் பதிப்புகள் ஆகியவை மேற்கண்ட ஏஜெண்டுகளிடம் கிடைக்கும். உங்களது நிரப்பப்பட்ட படிவங்களை அவர்களிடமுள்ள பெட்டியில் சேர்த்துவிடுங்கள்.

### அதிகாரபூர்வமான நுழைவு பாரம் லிட்குவிஸ் 40

Final Closing Date: Wednesday 23-10-68

Address LITQUIZ, NO 40, LAVRAM St., BOMBAY-7

குறிப்பு: (1) நீங்கள் தள்ளுபடி செய்துவிட்ட வார்த்தைகளை மையால் அடித்துவிடவும். (2) எல்லாக் கூப்பன்களையும் அனுப்பாவிட்டால், தேவையில்லாதவற்றைக் கேன்சல் செய்துவிடவும். (3) நீங்கள் கட்டணத்தை மணி ஆர்டரில் அனுப்பினால், நுழைவு பாரத்துடன் M.O. ரசீதையும் அனுப்பவேண்டும். இல்லையெனில் உங்கள் கூப்பன் தள்ளுபடி செய்யப்படும். (4) இந்தியன் போஸ்டல் ஆர்டரை லிட்க்விஸ் நெ. 40, பம்பாய்-7 என்ற விலாசத்திற்கு வாங்கவும். கிராஸ் செய்யவேண்டாம்.

| Re. 1 | | 1 | Re. 1 | | 2 | Re. | | 3 | Re | | 4 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | CONCEPTION | INTIMATION | 1 | CONCEPTION | INTIMATION | 1 | CONCEPTION | INTIMATION | 1 | CONCEPTION | INTIMATION |
| 2 | CONCORD | CONTACT | 2 | CONCORD | CONTACT | 2 | CONCORD | CONTACT | 2 | CONCORD | CONTACT |
| 3 | CONFLICTS | EVILS | 3 | CONFLICTS | EVILS | 3 | CONFLICTS | EVILS | 3 | CONFLICTS | EVILS |
| 4 | CONTENTMENT | DISCERNMENT | 4 | CONTENTMENT | DISCERNMENT | 4 | CONTENTMENT | DISCERNMENT | 4 | CONTENTMENT | DISCERNMENT |
| 5 | CULTURED | DEVELOPED | 5 | CULTURED | DEVELOPED | 5 | CULTURED | DEVELOPED | 5 | CULTURED | DEVELOPED |
| 6 | DELIGHT | LEARNING | 6 | DELIGHT | LEARNING | 6 | DELIGHT | LEARNING | 6 | DELIGHT | LEARNING |
| 7 | DEMOCRACY | HISTORY | 7 | DEMOCRACY | HISTORY | 7 | DEMOCRACY | HISTORY | 7 | DEMOCRACY | HISTORY |
| 8 | EFFICIENT | EXCELLENT | 8 | EFFICIENT | EXCELLENT | 8 | EFFICIENT | EXCELLENT | 8 | EFFICIENT | EXCELLENT |
| 9 | EQUALITY | MORALITY | 9 | EQUALITY | MORALITY | 9 | EQUALITY | MORALITY | 9 | EQUALITY | MORALITY |
| 10 | FREEDOM | WISDOM | 10 | FREEDOM | WISDOM | 10 | FREEDOM | WISDOM | 10 | FREEDOM | WISDOM |
| 11 | LAUGHTER | LIGHT | 11 | LAUGHTER | LIGHT | 11 | LAUGHTER | LIGHT | 11 | LAUGHTER | LIGHT |
| 12 | LIBERAL | LIBERATED | 12 | LIBERAL | LIBERATED | 12 | LIBERAL | LIBERATED | 12 | LIBERAL | LIBERATED |
| 13 | LIBERTY | LIFE | 13 | LIBERTY | LIFE | 13 | LIBERTY | LIFE | 13 | LIBERTY | LIFE |
| 14 | PLEASURE | POWER | 14 | PLEASURE | POWER | 14 | PLEASURE | POWER | 14 | PLEASURE | POWER |
| 15 | PRESTIGE | PRIVILEGE | 15 | PRESTIGE | PRIVILEGE | 15 | PRESTIGE | PRIVILEGE | 15 | PRESTIGE | PRIVILEGE |
| 16 | SACRIFICE | SERVICE | 16 | SACRIFICE | SERVICE | 16 | SACRIFICE | SERVICE | 16 | SACRIFICE | SERVICE |
| 17 | SANITY | SECURITY | 17 | SANITY | SECURITY | 17 | SANITY | SECURITY | 17 | SANITY | SECURITY |
| 18 | SENSIBLE | SENSITIVE | 18 | SENSIBLE | SENSITIVE | 18 | SENSIBLE | SENSITIVE | 18 | SENSIBLE | SENSITIVE |

SEND FIRST TWO COUPONS & ENTER MINIQuiZ (A) FREE **NO. 40** SEND FOUR COUPONS & ENTER BOTH MINIQuiZ (A & B) FREE

**MiniQuiZ (A)** — 6 CLUES FREE COUPON

| | |
|---|---|
| CONCEPTION | INTIMATION |
| CONCORD | CONTACT |
| CONFLICTS | EVILS |
| CONTENTMENT | DISCERNMENT |
| CULTURED | DEVELOPED |
| DELIGHT | LEARNING |

**MiniQuiZ (B)** — 12 CLUES FREE COUPON

| | | | |
|---|---|---|---|
| DEMOCRACY | HISTORY | LIBERTY | LIFE |
| EFFICIENT | EXCELLENT | PLEASURE | POWER |
| EQUALITY | MORALITY | PRESTIGE | PRIVILEGE |
| FREEDOM | WISDOM | SACRIFICE | SERVICE |
| LAUGHTER | LIGHT | SANITY | SECURITY |
| LIBERAL | LIBERATED | SENSIBLE | SENSITIVE |

முன்பக்கம் கீழ்ப் பாதியைப் பார்க்க.

Published by N. Ramaratnam, M.A., B.L., and Printed at the M.L.J. Press Private Ltd., 55|56, Mundakakkanni Amman Koil Street, Mylapore, Madras-4.
Editor: N. Ramaratnam, M.A., B.L., Managing Editor: K. V. Jagannathan.


SANKAR
I C
BRAND
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்
சங்கர்
பிராண்ட்
சிமெண்ட்
இப்போழுது பர்மிட் இல்லாமல் சுலபமாக
கிடைக்கிறது. இந்நன்னாளிலே உங்கள்
இல்லமதை கட்டத் துவக்குங்கள்.
தயாரிப்பாளர் : இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், மதராஸ்-2
தொழிற்சாலைகள் : சங்கர்நகர் & சங்கரி
FDSIC 1021TM

Regd. as a Newspaper in Ceylon
Supplement to Kalaimagal dated 1-10-68

REGD. NO. M. 2748




மலரும் ரோஜா
மனம் கவர் வர்ணம்

கடாவ்
வாயில்கள்

தி கடாவ் மாகன்ஜீ ஸ்பின்னிங் அண்ட் வீவிங் கோ லிட்., தலைமை அலுவலகம்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1. மில்கள்: ஹெயின்ஸ் ரோடு, பைகுல்லா, பம்பாய்-27. மொத்த விற்பனைத் துணிக்கடை: கோவிந்த் சௌக், முல்ஜீ ஜேதா மார்க்கெட், பம்பாய்-2. சில்லறை விற்பனைக் கடைகள்: கணேஷ் வாடி, ஷேக் மேமன் ஸ்ட்ரீட், பம்பாய்-2 ஹாஷிம் பில்டிங், வீர் நரிமன் ரோடு, பம்பாய்-1. மில்கள், ஹெயின்ஸ் ரோடு, பைகுல்லா, பம்பாய்-27.
216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை - 1; 2/133, மவுண்டு ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை - 6.

SISTAS 414 TAM